பதிப்பாசிரியர்
தமிழண்ணல்
க. ப. அறவாணன்
சிலம்பு நா. செல்வராசு

1997

ஆய்வுக் கோவை

1997

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்

இருபத்தெட்டாம் கருத்தரங்கு

* * *

பிசப் ஈபர் கல்லூரி

திருச்சிராப்பள்ளி

* * *

திருவள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 10, 11

1997 மே, 24, 25

ஆய்வுக்கோவை

தொகுதி இரண்டு

1997

பதிப்பாசிரியர்

முனைவர் தமிழண்ணல்
முனைவர் க. ப. அறவாணன்
முனைவர் சிலம்பு. நா. செல்வராசு

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
தமிழியல்துறை
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி - 605 014

1997 — 25/=

* ஆய்வுக்கோவை
தொகுதி இரண்டு

* இ. ப. த. மன்றம்
மே/பா தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி 605 014

* முதற்பதிப்பு : 1997 மேத்திங்கள்

* விலை உருபாய் 250/=

* அச்சாக்கம் :
சபாநாயகம் அச்சகம்
கீழைத் தேர் வீதி
சிதம்பரம் - 608 001

உள்ளிருப்புகள்

சு. சக்திவேல்
மீனவரது நம்பிக்கைகள் 491

வே. சசிகலா
நாட்டுப்புறக் கதைகள் – பெண்ணியப் பார்வை 496

சிவ. சசிரேகா
தகவல் தொடர்புச்சாதன நிறுவனங்களில் குறியீடுகளின் பயன்பாடு 501

சு. சண்முக சுந்தரம்
நாட்டுப்புறப் பாடல்களில் 'பள்ளர்' வாழ்நிலை 506

ஆ. சண்முகம்
திருப்பழனக்கோயில் கட்டடக்கலையும் கல்வெட்டுகளும் 511

ந. சண்முகம்
நாட்டுப்புறப் பாடல்களின் யாப்பு 516

பெ. சண்முகம்
தென் மகதைத் திருநாடன் அந்தாலந் தீர்த்தான் செழியன் 521

மு. சண்முகம்
படைப்பிலக்கியம் – ஒரு பார்வை 526

முல்லை. வீ. சண்முகம்
பரமசிவம் சிறுகதைகளில் மக்கள் திரள் – ஒரு கருத்து நிலை ஆய்வு 531

தி. சி. சத்தியம்
பெண் என்னும் தெய்வம் 536

மு. சதாசிவம்
திருக்குறளும் பகவத் கீதையும் 540

சு. சந்திரா
அடிக்கருத்தும் தொன்மமும் 545

கி. சந்திராகிருஷ்ணன்
நூலகவியலும் சங்க இலக்கியமும் 550

ஏ. சம்புலிங்கம்
பெரும்பாணாற்றுப்படை வணிகம் – ஒரு சமூக நோக்கு 555

ச. சம்பத்து
அறிவியல் தமிழ் வினாத்தாள் தயாரித்தல் –
ஒரு கண்ணோட்டம் 560

சரளா ராசகோபாலன்
கம்பன் – துளசி இராமாயணத்தில்
இராமராச்சியம் – ஒப்பீடு 564

ம. சரோஜா
விளம்பரங்களில் பண்பாட்டு மீறல்கள் 569

மா. சற்குணம்
பிங்கலநிகண்டு – பதிப்பு வரலாறு 573

மு. சற்குணவதி
தமிழர் பண்பாட்டில் பெண்ணியமும் எதிர்விளைவுகளும் 577

எம். எஸ். சாந்தா
ஈ. த. இராசேசுவரி அம்மையாரின் அறிவியல் நூற்பணி 582

அ. சாந்தி
வில்லுப்பாட்டின் வழித் தகவல் தொடர்பு 587

உ. சாமுவேல் ஸ்டீபன்
இந்திய மெய்யியலில் நியாய தரிசனம்
கூறும் இறைக்கொள்கை 592

இரா. சாவித்திரி
இன்றைய கல்வி முறையும் பாடத்திட்டமும் –
சில சிந்தனைகள் 597

57-3

இர. சித்திரலேகா
உருத்தெரியா மனிதன் - மண்குடிசை ஒப்பாய்வு 602

கோ. சித்ரலேகா
"லைட் ஆப் ஆசியா"வின் தமிழ் மலையாள மொழிபெயர்ப்புகள் 607

சி. சித்திரா
பதிற்றுப்பத்தில் ஆற்றுப்படை 612

ச. சிவகாமி
குறள் காட்டும் பெண்மை 617

ஆர். சிவசங்கரி
பெண்ணிய நோக்கில் கைம்பெண்டிர் 622

அ. சிவசுப்பிரமணியன்
சிவகாமியின் சபதத்தில் நாகநந்தி அடிகள் 627

பெ. சிவசுப்பிரமணியன்
அறிவியல் தமிழும் கல்லூரி மாணவர்களும் 632

மு. சிவசுப்பிரமணியன்
கம்பன் காவியத்தில் நாட்டுப்படலம் ஒரு கண்ணோட்டம் 636

ஆ. சிவலிங்கனார்
உலக வழக்கில் ஏகார இடைச்சொல் 641

அ. சீநிவாசன்
நமக்கு, நம்மது 645

இரா. சீனிவாசன்
சங்க இலக்கியத்தில் திருக்குறள் கருத்துகள் 649

கெ. சுகதா
வள்ளுவரின் ஒழுக்கம் பற்றிய சிந்தனை 654

ப. சுசீலா
அறத்தின் ஆக்கம் 659

பி. சுத்திகரமேரி
எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் போற்றித் திருஅகவல் 664

இரா. சுதமதி
நாட்டுப்புறத் தெய்வ வழிபாடும் அதில் முத்தாரம்மன் வழிபாடு பெற்றுள்ள இடமும் 669

மு. சுதர்சன்
'எழுத்தோரன்ன' கோட்பாடும் குற்றியலிகரமும் 674

சி. சுந்தரேசன்
ஆண்டி கண்டியத்தேவர் வழிபாடு 679

மு. சுப்பம்மாள்
தகவல் தொடர்பியலின் அவசியம் 684

ச. வே. சுப்பிரமணியன்
தொல்காப்பியப் பாடவேறுபாடுகள் 'ப' 'வ' 689

சி. சுப்பிரமணிய பிள்ளை
மகாகவி பாரதியின் மொழித்திறன் 694

சுப்புலெட்சுமி இரவீந்திரன்
ஆதி நாடகத்தில் திருமணம் – சமூகவியல் பார்வை 699

பெ. சுபாசுசந்திரபோசு
புதுக்கவிதைகளில் பெண்ணுரிமை 704

சீ. சுலோர்மணி
விடுகதைகளில் நம்பிக்கை 709

சு. சுஜாதா
கற்பும் கரணமும் 714

சே. செந்தமிழ்ப்பாவை
உழையர் கூற்று 719

மெ. செந்தாமரை
திருமண மதிப்புகள் 724

அர. செயச்சந்திரன்
வள்ளலாரும் கல்வி இயலும் 729

ச. செயசீலன்
பாரதிதாசன் எதிர்நோக்கிய தமிழ்நாடு 734

சு. செல்லையாபிள்ளை
கைக்கிளை 739

சண்முக. செல்வகணபதி
நாட்டியத் தமிழ் 744

ஐ. செல்வராஜ்
உருவகத்தின் பிறப்பிடம் – விபரீத உவமை 749

க. செல்வராசு
கலைச்சொற்கள் – தரப்படுத்துதல் 754

சிலம்பு நா. செல்வராசு
பல்லவர் கால இலக்கியச் சமூகவியல் 758

தூ. சேதுபாண்டியன்
வள்ளுவரின் சொல்தேர்வு 763

இ. சேனாவரையன்
தொலைக்காட்சித் தமிழில் தொடரியல் அமைப்பும்,
கருத்துப்புலப்பாட்டுத்திறன் வழிமுறையும் 768

தே. சொக்கலிங்கம்
நகரத்தார்களின் வாகனத் தருமம் 773

நெல்லை ந. சொக்கலிங்கம்
வளாக இதழ்கள் 778

இரா. சோதிவாணன்
முதல் பெண்வழக்குரைஞர் 783

ச. சோமசுந்தரம்
பாரதியின் வசன கவிதையில் சுற்றுச் சூழலியல் 788

இராம. சௌந்திரவல்லி
ஹைக்கூ கவிதைகளில் சித்தர் சிந்தனைகள் 793

தே. ஞானசேகரன்
தேவேந்திர குல வேளாளர் பெயர்க்காரணம் 798

வி. மி. ஞானப்பிரகாசம்
கீழிருந்தும் கீழல்லவர் 803

ப. ஞானம்
முருகவேள் கருணை 808

பா. ஞானம் மாரியப்பன்
மீட்டாத வீணையில் 'ஹேமா' 813

பீ. டாக்டர் நசீம்தீன்
நாட்டுப்புறக் கதைப் பாடல்களும்
வடிவ மாற்ற முயற்சிகளும் 818

ஜே. ஜி. என். டாசன்
தாக்கத்தால் விளைந்த விளைவுகள் 823

ஒய். டென்னிசன்
தொல்காப்பியரின் வேற்றுமைக் கோட்பாடு 826

சு. தங்கத்துரை
ஞானவாசிட்டத்தில் சிவன் பற்றிய சிந்தனைகள் 831

பி. தட்சணாமூர்த்தி
புதுமைப்பித்தனின் துரோகம் - ஒரு மதிப்பீடு 836

சு. தமிழ்வேலு
பிரஞ்சியர் காலத்துத் தமிழ் இதழ்கள் 840

தமிழண்ணல்
சமற்கிருதமயமாக்கம் 845

சு. தமிழரசி
மூவருலாவில் விக்கிரம சோழனுலா 850

இரா. தனசேகரன்
சிலம்பில் வரைவு 855

தாயம்மாள் அறவாணன்
ஔவை படைப்பின் கிறித்தவப் பதிப்பு 860

சு. திருநாவுக்கரசு
திருப்புகழில் 'ஞானநிலைச்' செய்திகள் 865

ம. திருமலை
சிவசங்கரியின் "கடைசியில்" நாவலில் குறுநாவல்
பண்புகள் 870

சாமி. திருமாவளவன்

'மான விஜயம்' கவிதை நாடகமா? 875

க. திலகவதி

சங்க இலக்கியத்தில் மக்கட்பேறு 880

ஜெ. துரைராஜ்

இந்தியத் திருச்சபை வரலாறு கி. பி. 52 – 1997 884

டி. தேவசம்பத்

என். எ. வேலாயுதம் சிறுகதைகளில் மொழிநடை 889

டி. தேவதாஸ்

தமிழ் எழுத்துக்களின் நிலை 894

ஹ. மு. நத்தர்சா

இருபதாம் நூற்றாண்டும் காரைக்கால் முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பும் 898

பே. நடராசன்

அனுராதா ரமணன் நாவல்களின் வழியாகப் பெறப்படும் கருத்துகள் 903

அ. நலங்கிள்ளி

சிந்தாமணிக் காப்பியத்தின் கட்டமைப்பு 908

மு. நளினி

புதிய கல்வெட்டுகளும் புதிய தரவுகளும் 913

ஆ. நாகராசன்

இஸ்லாமியரின் பழக்க வழக்கங்கள் 918

ப. நாகலிங்கம் பிள்ளை

முதல்மொழி – உடல்மொழி 923

நிர்மலா மோகன்

வைரமுத்து கவிதைகளில் சமூக விழிப்புணர்வுச் சிந்தனைகள் 928

தா. நீலகண்ட பிள்ளை

பத்திரிகையாளர் பாரதி 933

ந. நீலமோகன்

திருக்குறள் உரையாசிரியர்களில் பரிதியார் 938

முரசு. நெடுமாறன்
மலேசியாவில் சிறுவர் பாட்டு இலக்கியம் – ஓர் அறிமுகம் 943

மி. நோயல்
பொதுமக்கள் அறிவியல் ஏன்? எப்படி? 948

பஞ்சாமிர்தம் & சொ. முத்தையா
தமிழ், வங்காள, ஆங்கில மொழிகளில் பழமொழி ஒப்புமை 953

ப. பத்மநாபன் தம்பி
உருவில் இரண்டாகி 958

த. கோ. பரமசிவம்
மின்னிடை எது? 962

இரா. பரமேஸ்வரி
தொழிலடிப்படையில் பண்டிகைகள் ஓர் அறிமுகம் 967

மு. பழனியப்பன்
ஆங்கிலேய – அமெரிக்கப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு - ஓர் அறிமுகம் 971

மீனவரது நம்பிக்கைகள்

சு. சக்திவேல்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

புதுக்கோட்டை மாவட்டத்தில் மீனவர்கள் அறந்தாங்கி ஆவுடையார் கோவில் கடலோரப் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மீன்பிடித் தொழில் புரிந்து வரும் இவர்கள் தொன்மையான வரலாற்றுச் சிறப்புடையவர்கள். மீனவரது வாழ்வு கடலோடு பின்னிப்பிணைந்துள்ளது. கரையில் பிறந்த இவர்கள் கண்ணீரில் வாழ வேண்டி உள்ளது. கடலே வாழ்வாக வாழ்ந்து விட்டதால் மற்றவர்களினின்றும் தனித்து வாழும் வாழ்க்கையினால் மற்றவர்களினின்றும் தனித்து வாழ்கின்றனர்.

நாட்டுப்புறவியல் என்பது நம்பிக்கைகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். நாட்டுப்புற நம்பிக்கை நாட்டுப்புறவியலின் அடிப்படைப் பொதுக்கூறு எனப்படும். வாழ்க்கை முறைகளின் கூட்டுச் சேர்க்கையே பண்பாடு என்கிறார் மாலினோவ்ஸ்கி அவர்கள். நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் சமுதாயத்தின் தேவைகளின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அம்மக்கட் சமுதாயத்தால் பாது காக்கப்படுகின்றன. மனிதன் பிறப்பு முதல் இறப்புவரை பலவித நம்பிக்கைகளைக் கொண்டிருக்கக் காண்கிறோம். மனிதனின் நடைமுறை வாழ்வில் நம்பிக்கைகள் தொடர்ந்து வருவதை நோக்கின் இதனைச் சமுதாயப் பண்பாட்டின் உணர்ச்சிக் கூறுகளின் தொகுதி எனக் கூறலாம். சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை என்றும் சான்றுகளின் வாயிலாகவோ காரணக்காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை என்றும் வகைப் படுத்துவர். பழக்கம் என்பது தனி மனிதனைச் சார்ந்த

தொடர்நிலை என்றும் கூறலாம். பழக்க வழக்கங்களைத் தனிமனிதனும் சமுதாயமும் இணைந்து உருவாக்குகின்றன. பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, சடங்கு முதலியவற்றைக் கொண்டு மீனவரது வாழ்வியலை அறிந்து கொள்ளலாம்.

குழந்தை பற்றிய நம்பிக்கைகள்

1. கண்ணேறு கழித்தல்: கண்ணேறு கழிப்பதற்குச் சூடான செங்கல்லோடு நொச்சி இலை, ஆடாதொடை இலை, மிளகாய் ஆகியவற்றை ஒன்றாகச் சேர்த்து ஒரு துணியில் கட்டி குழந்தையின் முகத்திற்கு நேராக மூன்று முறை சுற்றுவர். ஒவ்வொரு சுற்று சுற்றும் போதும் குழந்தையை அதன் மீது துப்பச் செய்வர். அதனை நடைபாதையில் போட்டு விட்டால் கண்ணேறு கழிந்து விடும் என நம்புகின்றனர்.

2. அமாவாசையன்று பிறத்தல்: அமாவாசையன்று பிறந்தால் திருடனாக இருப்பர் என நம்பப்படுகின்றது.

3. சனியன்று பிறத்தல்: சனியன்று குழந்தை பிறந்தால் ஆயுள் அதிகமென்று நம்புகின்றனர். திங்கள், புதன் கிழமைகளில் பெண் குழந்தை பிறந்தால் குடும்பத்திற்கு நல்லது என நம்புகின்றனர்.

4. குழந்தை பிறக்கும் மாதம்: பெண் குழந்தை முதலாவதாகவும் மூன்றாவதாகவும் ஐந்தாவதாகவும் பிறந்தால் நல்லது என நம்புகின்றனர்.

5. காது குத்தல்: காது குத்தப்படா விட்டால் திருமணம் செய்யக்கூடாது என்ற நம்பிக்கை இவர்களிடையே நிலவுகிறது.

பருவமடைதல் பற்றிய நம்பிக்கைகள்: பருவமடைந்த பெண்ணுக்குக் கீரை விதையைப் பசும் பாலில் கலந்து கொடுத்தால் நலமுடன் வாழ்வாள் என நம்புகின்றனர். சித்திரை மாதம் பருவமடைந்தால் கணவனுக்கு ஆகாது என்றும் வைகாசி மாதம் என்றால் பெருஞ் செல்வம் சேரும் என்றும் ஐப்பசி மாதம் என்றால் மக்கட் செல்வம் பெருகுமென்றும் புரட்டாசி மாதம் என்றால் புண்ணியவதியாக இருப்பாள் என்றும் நம்புகின்றனர். செவ்வாய்கிழமை பருவமடைந்தால் நல்ல கணவன் கிடைக்க மாட்டான் என்றும் சனிக்கிழமை பருவமடைந்தால் வேசியாக இருப்பாள் என்றும் நம்புகின்றனர்.

திருமணம் பற்றிய நம்பிக்கைகள்: வைகாசி, ஆனி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி மாதங்கள் திருமணத்திற்கு உகந்த மாதங்கள்

56-3

என்றும் சித்திரை, ஆடி, கார்த்திகை, மார்கழி திருமணத்திற்கு உகந்த மாதங்கள் அல்ல என்றும் நம்பப் பெறுகின்றது.

கர்ப்பிணிப் பெண்கள் பற்றிய நம்பிக்கைகள்: கர்ப்பிணிப் பெண்கள் வலது கையை ஊன்றினால் ஆண் குழந்தையும் இடது கையை ஊன்றினால் பெண் குழந்தையும் பிறக்கும் என நம்புகின்றனர். கர்ப்பிணிப் பெண்கள் தலைவாசலில் தலை வைத்து படுத்தால், குழந்தை உடல் குறையாகப் பிறக்கும் என நம்புகின்றனர்.

விலங்கு-பறவை பற்றிய நம்பிக்கைகள்: நச்சுக் கொடியை நாய் தின்றால் மாட்டில் பால் வற்றிவிடும் என நம்புகின்றனர்.

நாய் ஊளையிட்டால் மரணம் ஏற்படும் என நம்புகின்றனர். பல்லி தலையில் விழுந்தால் கலகம் என்று நம்புகின்றனர்.

நட்சத்திரம் பற்றிய நம்பிக்கைகள்: பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான். மகம் நட்சத்திரத்தில் பிறந்தால் புகழோடு வாழ்வர் என நம்புகின்றனர். அவிட்ட நட்சத்திரத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையெல்லாம் பொன் என நம்புகின்றனர்.

அங்க பலன் பற்றிய நம்பிக்கைகள்: மாறுகண் அதிர்ஷ்டம் என நம்புகின்றனர். முன்பல் நீண்டிருந்தால் செல்வம் பெருகும் என நம்புகின்றனர். இடக் கண்ணும் இடத்தோளும் துடிப்பது பெண்களுக்கு நல்லது. நெற்றியில் இடப்பக்கம் துடித்தால் வரவுக்கு அறிகுறி என்பர்.

மாதம், கிழமை பற்றிய நம்பிக்கைகள்: ஆனி, பங்குனி மாதங்களில் புதுவீட்டில் குடி போகக் கூடாது. தை மாதத்தில் புதுவீட்டில் குடி போகலாம். செவ்வாய்க்கிழமை சுபகாரியம் நடத்துவதில்லை. புதனை நல் நாளாகக் கருதுகின்றனர். வியாழன், வெள்ளி இரு நாட்களில் வலை விற்கவோ, வாங்கவோ மாட்டார்கள்.

வெள்ளி ஆண் குழந்தை பிறந்தால் ஆகாது என நம்புகின்றனர்.

கடவுள் பற்றிய நம்பிக்கைகள்: காக்கும் தெய்வமாக மாரியம்மனைக் கருதி வழிபடுகின்றனர். பழனிமலை முருகனை வழிபட்டால் துன்பங்கள் தீரும் என நம்புகின்றனர். கெங்கா தேவிக்கு மதுக்குடம் எடுத்தால் மீனவரது வாழ்வு வளம்பெறும் என நம்புகின்றனர்.

பேய் பற்றிய நம்பிக்கைகள்: வீட்டில் கூரைகளில் வேப்பந் தழையைச் சொருகினால் பேய் வராது என நம்புகின்றனர். கர்ப்பிணிப் பெண்களையும் மாத விலக்குப் பெண்களையும் பேய், பிசாசு பிடிக்கும் என நம்புகின்றனர்.

வீடு பற்றிய நம்பிக்கைகள்: வீட்டிற்கு முன் புளிய மரம் இருத்தல் கூடாது என நம்புகின்றனர். இரவு நேரத்தில் வீட்டி லுள்ள பொருட்களை மற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

உணவு பற்றிய நம்பிக்கைகள்: கன்னிப் பெண்கள் உணவு உண்ணும்போது கல் கடிபட்டால் விரைவில் திருமணம் என நம்புகின்றனர். வாயிலிட்ட உணவை மீண்டும் தட்டில் இடக் கூடாது. முதன் "முதலில் வந்த விருந்தினருக்கு சேவல், கோழி கறி உணவு அளித்தால் உறவு முறிந்துவிடும் என நம்புகின்றனர்.

பயணம் பற்றிய நம்பிக்கைகள்: பயணம் புறப்படும்போது வீட்டு வாசற்படி காலில் தட்டினால் போகும் காரியம் நிறை வேறாது என நம்புகின்றனர். வெறுங் குடத்துடன் பெண் களைக் காணல், விறகு கட்டைகளைக் காணல் ஆகியவற்றால் பயணம் சிறப்புறாது என நம்புகின்றனர். கருடனைக் காண நேர்ந்தால் போகும் காரியம் வெற்றி பெறுவதுடன் கடலில் விழுந்த பொருளும் திரும்பக் கிடைக்கும் என நம்புகின்றனர்.

கனவு பற்றிய நம்பிக்கைகள்: கனவில் நெருப்பைக் கண்டால் பெண் பருவமடைவாள் என நம்புகின்றனர். மரக்கிளை ஒடிந்து விழுவதாகக் கனவு கண்டால், சாவு நிகழும் என நம்புகின்றனர். பாம்பு கடிப்பதாகக் கனவு கண்டால் கிரகம் விலகி விடுமென்று நம்புகின்றனர். கனவில் உப்பைக் கண்டால் செல்வம் பெருகும் என நம்புகின்றனர்.

எண் பற்றிய நம்பிக்கைகள்: ஒற்றை எண்கள் நன்மை பயக்குமென நம்புகின்றனர். ஆறாவது ஆண் மகன் ஆனை கட்டி வாழ்வான், ஐந்தாவது பெண் பிறந்தால் அடுக்களையெல்லாம் பொன், நான்காவது பெண் பிறந்தால், நடைக்கல்லைப் பெயர்க்கும், எட்டாவது பெண் பிறந்தால், எட்டிப் பார்த்த இடமெல்லாம் கஷ்டம்.

சகுனங்கள் பற்றிய நம்பிக்கைகள்

நல்ல சகுனங்கள்: காக்கை வலம் வரல் நரியைக் காணல் அழுக்குத் துணியோடு வண்ணான் வரல் கன்னிப் பெண்கள்

நிறைகுடத்துடன் எதிரே வரல் சுமங்கலிகள் எதிரே வரல். கருடன் இடப்பக்கம் செல்லல் காகம் வலப்பக்கம் செல்லல் கடலில் வெளிச்சம் காணல் கடலில் பூங்கோரைக் காணல்.

தீய சகுனங்கள்: விதவைப் பெண் எதிரே வரல் கன்னிப் பெண்கள் வெறுங் குடத்துடன் வரல் வண்ணான் வெளுத்த துணியுடன் வரல் விறகு கட்டு எதிரே வரல் பூனை குறுக்கே வரல் கருடன் வலமாகச் செல்லல் காகம் இடமாகச் செல்லல் ஆந்தை அலறல் கேட்டல் பாம்பு குறுக்கே செல்லல் குருவி வீட்டிற்குள் பறத்தல் தும்மல் ஒலியைக் கேட்டல் பரியாரியைப் பார்த்தல் வியாபாரியைக் காணல் வலை சரிந்து போதல் பாய்மரம் கீழே விழுதல்.

மரணம் பற்றிய நம்பிக்கைகள்: சனிப்பிணம் தனியே போகாது என நம்புகின்றனர். சனிப் பிணத்துடன் கோழியையும் சேர்த்து புதைப்பர். கோயிலில் இறப்பவரின் ஆன்மா கடவுளிடம் செல்வதாக நம்புகின்றனர். மழைக் காலத்தில் ஒருவர் இறந்தால் பல கர்மங்களைச் செய்தவர் என நம்புகின்றனர். மாரடித்து அழுதால் மறு உலகம் கிட்டும் என நம்புகின்றனர். தென்னை மட்டை தலையில் விழுந்தால் ஆறு மாதங்களுக்குள் மரணம் என்று நம்புகின்றனர்.

சுமங்கலிகள் வெள்ளிக்கிழமை இறந்தால், குடும்பம் சீரழியும் என நம்புகின்றனர்.

இறந்தவர்களுக்கு ஈமக்கிரியை செய்தால் இறந்த உயிர் வீடுபேறு அடையும் என நம்புகின்றனர்.

தாய்க்குத் தலைப் பிள்ளையும் தந்தைக்குக் கடைப் பிள்ளையும் கொள்ளி வைக்க வேண்டும் என நம்புகின்றனர்.

காடு புகையும்போது வீடு புகையக்கூடாது என நம்பிக்கை நிலவுகிறது.

கடலையே வாழ்வின் உயிர் நாடியாகக் கருதி வரும் மீனவர்கள் தங்களுக்குரிய நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், வழிபாடுகள் முதலியவற்றை உடையவர்களாக இருக்கின்றனர். மற்றவர்களினின்றும் தனித்து வாழும் வாழ்க்கையால் மரபுகளை இன்றும் காத்து வருகின்றனர்.

நாட்டுப்புறக் கதைகள் - பெண்ணியப் பார்வை

வே. சசிகலா
ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

முன்னுரை

தமிழில் வழங்கும் பல நாட்டுப்புறக் கதைகளில் பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். அவை வாழ்வியலில் பெண்களின் இடத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இங்கு ஆய்விற்காக, 'கமுக்கம்', 'பழிக்குப்பழி', 'எடாத எடுப்பு', 'வில்லிக்கு ஒரு வில்லன்' ஆகிய நான்கு கதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நாட்டுப்புறக் கதைகளைப் பெண்ணிய நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கதைவிளக்கம்

ஒரு நல்ல உழைப்பாளிக் குடும்பம். கம்பம்புல் நன்கு விளைந்திருக்க எல்லா வேலைகளையும் உடனிருந்து செய்து முடித்தபின் பொலியை வீடு கொணர்ந்து சேர்க்கும் பொறுப்பைத் தகப்பன், மகனிடம் ஒப்படைத்து விட்டுத் தாயும் மகளும் சோறாக்குவதற்காக வீட்டுக்கு வருகின்றனர். தகப்பனுக்கும், மகனுக்கும் ஒருவர் அறியாமல் மற்றவருக்கு ஒரே பெண்ணுடன் இரகசிய உறவு உண்டு. ஒரு மரக்காலுக்கு ஒரு நாள் என்ற கணக்கில் எவர் கம்பம்புல் தருகிறாரோ அவர் தன்னுடன் இருக்கலாம் என்று கூறிய அவளிடம் விளைச்சலில் பெரும் பகுதியை இருவரும் கொண்டு சேர்க்க வீட்டிற்கு எஞ்சியது அதிகமில்லை. அதிர்ந்து போன தாய் தந்திரம் செய்து, அந்தப் பெண்ணிடம் சென்று, தனக்கு வந்தது 'சாவு வெள்ளாமை' என்றும், தகப்பனும், மகனும் அதை எங்கோ கொட்டிவிட்டனர் என்றும் கூறுகிறாள். வழக்கம் போல் தகப்பனும், மகனும்

ஆளுக்கொரு வாசல் வழி நட்புக்காரப் பெண்ணின் வீட்டில் நுழைய, அவள் இருவரையும், வைது அடித்துக் கம்பை மீள எடுத்துப் போகச் சொல்கிறாள். கம்பம்புல் முழுவதும் வீடு வந்து சேர்கிறது. இது முதல் கதை. 'கமுக்கம்' என்பது அதன் பெயர்.

'பழிக்குப்பழி' என்னும் கதையில் மனைவி இருக்க இன்னொரு பெண் காக்கையுடன் நட்புக் கொள்கிறது ஓர் ஆண் காக்கை. இதை அறிந்து வருந்திப் பெண் காக்கை அழ, அதைப் பொருட் படுத்தாதது மட்டுமின்றி, குஞ்சுக் காக்கைக்கு மொட்டையடிக்கக் கோயிலுக்குப் போவதற்குத் தன் நட்புக் காக்கையையும் அழைத்துவருமாறு ஏவுகிறது. கோயிலுக்குப் போகுமுன் எல்லா ரோமத்தையும் எடுப்பதென்பது வழக்கமென்று கூறி அதன் சிறகுகளையும் அறுக்க வைத்து, வழியிடையில் அதைத் தந்திர மாகக் கொல்கிறது பெண் காக்கை.

நாட்டுப்புறக் கதைகளில் மனிதர்களின் எண்ணங்கள் பறவை களின் மேல் ஏற்றிச் சொல்லப்படுவதுண்டு [1] எனவே இக்கதையை அவ்வகையுள் அடக்கலாம்.

'எடாத எடுப்பு' என்னும் மூன்றாம் கதையில் மாற்றானுடன் மனைவி கொண்ட உறவை அறிய நேர்ந்த கணவன் அதை ஊர்ப் பஞ்சாயத்து வரை கொண்டு சென்று அவளை அவனுடன் விரட்டுகிறான். அவனோ தனக்குக் குடும்பம் உண்டென்று கூறி அவளை ஏற்க மறுக்கிறான்.

'வில்லிக்கு ஒரு வில்லன்' என்ற நான்காம் கதையில் பொருத்தமற்ற மண உறவில் பிணைக்கப்பட்டிருந்த ஒருபெண் மாற்றானுடன் நட்புக்கொள்ள, உடல்வலிமையற்ற அவள் கணவன் ஒரு திருடனின் உதவியால் தன் மனைவியைத் தண்டிக் கிறான்.

'கமுக்கம்', 'பழிக்குப்பழி' ஆகிய முதலிரண்டு கதைகளிலும் கணவனின் ஒழுக்கக்குறைவும்' 'எடாத எடுப்பு', 'வில்லிக்கு ஒரு வில்லன்' ஆகிய பின்னிரண்டு கதைகளிலும் மனைவியின் நடத்தைக் குறைபாடும் சுட்டப்படுகின்றன.

பெண்ணின் போக்கு

'கமுக்கம்' கதையில் காட்டு வேலை முடித்து வீட்டு வேலை பார்க்கச் செல்கிறாள் மனைவி. அந்த நேரத்தில் அவள் உழைப் பில் விளைந்த பயிர் பறி போகிறது. பின் தன் அறிவுத் திறத்

தால் அதை மீட்கத் தன் மதி கொண்டு போராடுகிறாள். கணவன், மகன் ஆகிய ஆடவர்களின் நடத்தை பற்றிப் பேசவோ வாயாடவோ இல்லை. இங்கு, பெண் போராட முனையவில்லை.

'பழிக்குப்பழி' கதை பெண்ணைப்பற்றிய செய்தியை விரிவாக உணர்த்துகிறது. "ஒரு குஞ்சு உண்டானதும் ஆண் காக்கா யிக்கும் மனசு மாறிட்டது"[2]. அதனால் மற்றொரு பெண் காக்கையுடன் நட்புக் கொண்டது. மேலும் "எப்பப் பாத்தாலும் புள்ளையக் கொஞ்சுறதும் அதைத் தொடச்சி சுத்தம் பண்றதும் இரை தேடிக் கொண்டாந்து ஊட்றதும் அதைப் பறக் காட்டுறதுமா இப்படியே பொழுது அதுக்கு சரிய்யா இருந்தது".[3] என்ற பகுதி பெண்ணுக்குப் பிள்ளைப்பேறும் பிள்ளைக் கவனிப் பும் அகவாழ்க்கைக்கு ஆபத்துக் காரணிகளாகின்றன என்பதை உணர்த்துகின்றன.

ஆண் காக்கையின் புதிய நட்பை அறிந்த பெண் காக்கை அழுது புலம்பும் போது அது, "போக்கழிஞ்சி போறதா இருந்தா நா ஏம் உன்னையும் புள்ளெயவும் பாக்க இங்கவாரெம்"[4] என்று கேட்கிறது. தான் வீட்டுக்கு வந்து போவதே பெரிய விசயம் என்பது போலவும் அந்த அளவிலேயே மனைவி / பெண் சமாதானமடைந்து விட வேண்டும் என்றும் கணவன் / ஆண் எதிர்பார்ப்பதும் தெளிவாகிறது. கோயிலுக்குப் போவதற்கு நட்புக் காக்கையை அழைக்குமாறு மனைவியையே ஏவுகிறது ஆண் காக்கை. "சொத்துல பங்கு போடுறவளா இருந்தாலும் கூப்புடலாம். ஏஞ் சொகத்துல பங்கு போடுறவள போயி நா எப்படிக் கூப்பிடுவேம்"[5] என்பது பெண் காக்கையின் பதில். இது இன்றையக் குடும்ப அமைப்பில் கேட்கும் பெண்ணின் பலவீனக் குரலே தவிர வேறில்லை.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நா எங்கே போனாலும் அவ எங்கூட இருக்கணும். நீ இப்பப் போயி அவளைக் கூப்பிட முடியுமா? முடியாதா? அவவர்லேன்னா அம்புட்டுத் தேம். எனக்கும் ஒனக்கும் ஒண்ணுமே கிடையாது இனி"[6] என்பது ஆணாதிக்கக் கணவனின் ஓங்கிய குரல்.

'எடாத எடுப்பு' கதையில் பிற ஆடவனுடன் உறவு கொள்ளும் பெண்ணைக் கணவனும் ஏற்க மறுக்கிறான். பழகியவனும் புறக்கணிக்கிறான். எனவே குடும்ப அமைப்பில் இங்கும் பெண்ணே பாதிப்புக்கு ஆளாகிறாள்.

'வில்லிக்கு ஒரு வில்லன்' என்னும் கதையில் இரு பெண் களைக் காண முடிகிறது. ஒருத்தி தவறு செய்யும் பெண். மற்றொருத்தி தவறு செய்பவனின் மனைவி. தவறும் பெண்ணுக்குத் தண்டனை கிடைக்கிறது. தவற்றுக்குக் காரண மானவனின் மனைவிக்கு நகை பறி போகிறது. 'பன்னிரெண்டு பவுனு பெரிசில்ல. எம் புருசம் என்னோடன்னு''[7] மகிழ்கிறாள். இங்கும் தவறு செய்யும் கணவனை எதிர்த்துப் பெண் போர்க் குரல் கொடுக்க முனைவதில்லை. ஆயின் தவறு செய்யும் பெண்ணைக் கணவன் எதிர்க்கிறான்.

பெண்ணிய நோக்கு

நாட்டுப்புறக் கதைகளை ஆராய்ந்த டாக்டர். கோ கேசவன் அவை முதலாளித்துவ சமூக அமைப்புக்கு முந்தைய நிலப் பிரபுத்துவ மதிப்பீடுகளையே பெரும்பாலும் கொண்டிருப்ப தாகக் குறிப்பிடுகின்றார். அவற்றை ஆறு வகைகளாகப் பிரித்துக் காட்டுகிறார். அவற்றுள், ''பெண்ணடிமைத்தனம், ஆண் ஆதிக்கம் ... ... இன்னபிற நிலஅடைமை மதிப்பீடுகளைத் தூக்கி நிறுத்தல்.''[8] என்பதும் ஒன்று.

ஒரு காலகட்டத்தில் குடும்பத்தில் தாயின் ஆதிக்கம் ஒடுக்கப் பட்டுத் தந்தையின் ஆதிக்கம் தோன்றியது. உழைப்புப் பிரிவினையில் தனிச் சொத்துரிமை தோன்றி, வாரிசு பேணல் முக்கியத்துவம் பெற்ற காலத்தில் நேர்ந்த தந்தை ஆதிக்கப் போக்கு மனிதகுல வரலாற்றில் குறிப்பிடத் தக்க மாற்றமாகக் கருதப்படுகின்றது. பெண்ணினத்தைப் பொறுத்த வரை இது ஒரு வீழ்ச்சி என்பதே உண்மை. இந்தக் காலகட்டத்தில் குடும்பம் என்ற அமைப்பு உருவாகி, அதன் நாயகனாக ஆண் விளங்கத் தலைப்பட்டான். அதைத் தொடர்ந்து ஒரு தார மனமுறை உருவானது. ஒரு தார மணமுறை ஆணாதிக்க அதிகாரப் போக்கின் வெளிப்பாடானது. இம்மணமுறையில் குடும்ப வாரிசு களான குழந்தைகளை உருவாக்குதலே குடும்ப அமைப்பில் பெண்ணுக்கு அளிக்கப்பட்ட ஒரேவேலை. குடும்பம் என்னும் அமைப்பும் அதில் வலியுறுத்தப்பட்ட ஒரு தார மணமும் பெண்ணை மட்டுமே கட்டுப்படுத்தும். அணுக்கு அந்தக் கட்டுப் பாடுகள் இல்லை. ஆண் தன் விருப்பப்படி வாழலாம். கட்டுப்பாடு களை மீறும் பெண் தண்டனைக் குள்ளாவாள். கணவனாலோ, சமுதாயத்தாலோ தண்டிக்கப்படுவாள். இதையே ''ஒருதார

மணமுறை என்பது ஆண் பெண்களிடை ஏற்படும் சமரசமல்ல. ஆண்பாலார் பெண் பாலாரை அடக்கி ஒடுக்குவதற்கான பிரகடனம். . பால்வேறுபாடான இம் முரண்பாடு ஏடறியா வரலாற்றுக் காலத்திலிருந்து என்றும் எவராலும் அறியப் படாதது''[9] என்றும் ஏங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். மேலும் அவர் முதல் வர்க்க ஒடுக்கு முறை என்பது பெண்பாலை ஆண்பால் ஒடுக்கும் ஒடுக்குமுறையுடன் ஒன்றுபடுகிறது என்றும் குறிப்பிடு கிறார்.[10]

முடிவுரை

கட்டற்ற ஆணின் போக்கினைப் பெண் சகித்துக் கொள்ள வேண்டும். அல்லது தந்திரமாகத் தவிர்க்க வேண்டும். சமுக எதிர்ப்பினை ஆண் எதிர்கொள்ள வேண்டிய அவசியமில்லை. செவ்வியல் இலக்கியங்களும் இதற்கு அங்கிகாரம் தந்திருக்கின்றன. இன்றளவும் சமுதாயத்தில் நிலவும் பாரபட்சமான இந்தப் போக்கையே நாடோடிக் கதைகளும் பிரதிபலிக்கின்றன.

குறிப்புகள்

1. சு. சண்முகசுந்தரம், நாட்டுப்புற இயல், ப. 214
2. கி. ராஜநாராயணன், பாரததேவி, பெண் மணம், ப. 35
3. மேலது.
4. மேலது, ப. 36
5. மேலது, ப. 37
6. மேலது.
7. மேலது, ப. 52
8. டாக்டர், கோ. கேசவன், நாட்டுப்புறவியல் ஒரு விளக்கம், ப. 414
9. செ. கணேசலிங்கன், பெண்ணடிமை தீர, ப. 145
10. அ. மார்க்ஸ், இ. ரவிக்குமார், பெ. வேலுசாமி, அரசு குடும்பம் பெண்ணியம், ப. 35.

தகவல் தொடர்புச்சாதன நிறுவனங்களில் குறியீடுகளின் பயன்பாடு

சிவ. சசிரேகா
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

அன்பிற்கு இதயம், வீரத்திற்குச் சிங்கம், வெற்றிக்கு 'V' என்றிவ்வாறாக ஒவ்வொரு பண்பாட்டிலும் எண்ணிலடங்காத குறியீடுகள் உள்ளன. இவை உலகளாவிய நிலையில் மனிதர்களின் உளப்பாங்கினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. தொன்மைப் பண்பாடுகள் முதற்கொண்டே இவற்றின் அமைப்பு, அந்தந்தப் பண்பாட்டோடு வளர்ச்சி பெற்று வந்துள்ளது. ஒரு குறியீட்டிற்கு ஒரு வகையான பொருளை அச்சமுதாயம் அமைத்துக் கொள்ளும் முறை நெடுங்காலமாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. அது அச்சமுதாயத்தின் அமைப்பைப் பெரிதும் ஒத்துள்ளது. சமுதாயத்தில் ஒவ்வொருவரின் செயல்களும் அவர்களின் செயல் தகுதிகளைப் பொறுத்து அமைவதால் ஒருவரின் செயல் தகுதிக்கேற்ப மற்றவர்கள் அவருடன் தொடர்பு கொள்ளும் முறையும் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளது. வெண்ணிற ஆடை உடுத்தி, வெண்ணிறத் தலைத் தொப்பி அணிவோரே செவிலித் தாய் என்றும், காக்கிச் சட்டையுடன் தலைத் தொப்பியும் அடையாளக் குறிகளும் (Badges) அணிந்து கொண்டவர்கள் காவல் துறையினர் என்றும் கருதி ஒருவர் தம் செயல்களை நெறிபடுத்திக் கொள்ள முடிகின்றது. இவ்வாறான பல குறியீடுகள் ஒவ்வொரு சமுதாயத்திலும் பல செயல்முறைகளைக் கொண்டுள்ளன. மக்களுக்குப் பல்வேறு தகவல்களைத் திரட்டிப் பல்வேறு வடிவங்களில் தருகின்ற பத்திரிகை நிறுவனத்திலும், வானொலி நிலையத்திலும் இக்குறியீடுகளின் பயன்பாடு பற்றி அறியச் செய்ய இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

குறியீடு (Symbol): "Symbol" என்பது இவற்றின் வார்த்தையான 'Symbolum' என்ற சொல்லிலிருந்து வந்தது. அச் சொல்லின் பொருள் - ஒன்றை அப்படியே உருப்படுத்திக் காட்டுவதல்ல. ஆனால் சுட்டுவதாக உள்ள குறி; விளக்கமானதல்ல, ஆனால் இணைத்துப் பார்த்தல் மூலம் பொருள் கொள்ளத் தக்கது, என்று உலகப் பல்கலைக்கழகக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகின்றது. பு. என். அஹுஜாவும், எஸ். எஸ். சாப்ராவும் "கண்ணுக்குத் தெரியாத ஒன்றின் கண்ணுக்குத் தெரிந்த அடையாளமே குறியீடு" என்கின்றனர். அந்தக் குறியீடானது ஓர் அபிநயம் அல்லது சைகை, ஒலி அல்லது பொருள் எதுவாக இருந்தபோதிலும், எந்தப் பொருளோடு அக்குறியீட்டினைத் தருநர் அனுப்பினாரோ அதே பொருளையே அத்தகவலைப் பெறுகின்ற பெறுநருக்கும் தந்தால் அக் குறியீடு சிறப்புடைத்தாயிருக்கும். சான்றாக, முதுகில் லேசாகத் தட்டிக் கொடுக்கும் சைகையானது நமது சமுதாயத்தில் நன்கறியப்பட்ட குறியீடாகும். அதாவது அனுமதியின் அடையாளம் அல்லது நட்பிற்கான அடையாளமாகும். அநேகக் குறியீடுகள் அவற்றின் தோற்றம் ஒன்றாகவும், பொருள் வேறாகவும் இருக்கும். மண்டையோடும், குறுக்காக அமைந்த எலும்புத் துண்டுகளும் மனிதக் கூறுகளே. ஆயினும் இவை, பெரும்பாலும் அபாயம் மற்றும் இறப்பின் குறியீடுகளாகிவிட்டன.

குறிப்பாக ஒரு கருத்து, பண்பு அல்லது நிலைக்காக அமைந்த அல்லது எதையேனும் சுட்டிக் காட்டுவதாக உள்ள ஒன்றுதான் குறியீடு. இங்ஙனம் ஏதேனும் ஒன்றின் அடையாளமாக, அதனைச் சுட்டிக் காட்டுவதாகப் பத்திரிகை நிறுவனத்திலும், வானொலி நிலையத்திலும் வழக்கில் உள்ள குறியீடுகள் வரி வடிவம், படம், சொற்கள், ஒலி, ஒளி எனும் இவற்றைச் சார்ந்தனவாகக் கையாளப் படுவதைக் காண முடிகின்றது.

வரிவடிவம் படம் சொற்கள்: தினமணி மதுரைப் பதிப்பினை எடுத்துக்கொண்டால், அப்பத்திரிகை செல்லக்கூடிய பகுதிகளுக் (areas) கேற்பப் பல்வேறு பதிப்புகளைக் கொண்டிருக்கிறது. அப்பதிப்புகளைக் குறிப்பிடும்போது செய்தி ஆசிரியர் MR, TTP, NKC என்றுதான் குறிப்பிடுகின்றார். அவையாவன:

MR-மதுரை, இராமநாதபுர மாவட்டங்கள்

TTP-திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள்

NKC–நெல்லை, கன்னியாகுமரி, சிதம்பரனார் மாவட்டங்கள் வெவ்வேறு பகுதிகளுக்குரிய பதிப்புகள் என்பதை அறிந்து கொள்ளப் படக் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

* - உள்ளூர்ப் பதிப்பு

** – MR

*** - NCK

**** – TTP

இங்ஙனம் உள்ள நட்சத்திரக் குறியீடுகளைப் பத்திரிகை நிறுவனத்தின் செய்திப் பிரிவு இயந்திரப் பரிவு, விளம்பரம், விற்பனை, கட்டுதல் மற்றும் கணக்குப் பிரிவு என அனைத்துப் பகுதிகளிலும் பணிபுரிவோர் பயன்படுத்துகின்றனர்/புரிந்துகொள் கின்றனர். குறிப்பாக, இன்னின்ன பகுதிகளுக்கென பத்திரிகை களைக் கட்டும் பிரிவில் பணியாற்றுவோருக்குப் பத்திரிக்கையின் முதல் பக்கத்தின் வலப்புறம் மேல் பாகத்தில் இருக்கும் இக்குறியீடு கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஊர்களுக்கு அனுப்ப வேண்டியனவா, திருச்சி மாவட்டத்தில் உள்ள ஊர்களுக்கு அனுப்ப வேண்டியனவா என்பதை அறிந்து கொள்ளச் செய்கின்றது. உள்ளூர்ப் பதிப்பிற்கும், பிற பதிப்பு களுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், அவற்றில் அவ்வப் பகுதிகளுக்குரிய செய்திகளுக்கென ஒரு முழுமையான பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும். வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டிய பதிப்புகளை இயந்திரப் பிரிவிலுள்ளோர் முதலில் அச்சிடுதல் வேண்டும். இவர்கள் அவற்றை இனங்கண்டு கொள்வதற்காக இந் நட்சத்திரக் குறியீடுகளைச் செய்திப் பிரிவினர் பயன்படுத்து கின்றனர்.

செய்திப் பிரிவிற்கு வந்து சேரும் செய்திகளைப் பத்திரி கையில் வெளியிடத் தெரிவு செய்யும் ஆசிரியர் C, G எனும் குறியீடுகளைப் பயன்படுத்துகின்றார். இவை, பக்க அமைப்புச் செய்யும் துணையாசிரியர்களுக்குக் குறிப்பிட்ட செய்தியினை இன்ன பக்கத்தில் வருமாறு அமைத்தல் வேண்டும் எனும் தகவலைத் தெரிவிக்கின்றன.

C — Common (பக். 1 & 4 / 6 / 8).

G – General (பக். 3 / 4 / 6 / 8 ஆகியவை தவிர்ந்த பிற

பக்கங்கள்) செய்தி ஆசிரியர் துணை ஆசிரியரிடம் "பக்கத்தை open பண்ணுங்கள்" என்று கூறினால், பக்கத்தைத் 'திறவுங்கள்' என்று அர்த்தமல்ல. பக்க அமைப்பின்போது, ஒரு பக்கத்தில் உள்ளதில் ஏதாவது மாற்றம் செய்வதையே அந்த 'Open' என்ற சொல் குறிக்கின்றது. அதேபோல இரவில் கடைசி நேரத்தில் செய்தியைப் போட முடியாது எனும்போது, "பக்கத்தை Wash பண்ணிவிடுங்கள்" என்றும் செய்தி ஆசிரியர் 'குறிப்பிடுகிறார். இங்கு 'Wash' என்ற குறியீட்டினைக் 'குறிப்பிட்ட பக்கம் வேண்டாம்; எடுத்துவிடுங்கள்" என்று துணையாசிரியரிடம் கூறுவதற்காகப் பயன்படுத்துகின்றார்.

இயந்திரப் பகுதியில் பத்திரிகை அச்சாகிக் கொண்டிருக்கும் போது 'தலை' நன்றாக வந்திருக்கின்றதா? 'வால்' / Tail சரியாக இருக்கிறதா? என்று கேட்டுக் கொள்வர். இந்தத் 'தலை'யும், 'வாலு'ம் வேறொன்றுமில்லை. பத்திரிகையின் முதல் பக்கத்தின் மேற்பகுதியில் உள்ள 'Mast Head' என்று சொல்லப்படுகின்ற பகுதியைத்தான் 'தலை' என்கின்றனர். அதாவது பத்திரிக்கையின் பெயர் அடையாளச் சின்னம், தேதி, பதிப்பு, பக்கம், விலை எனும் விபரங்கள் அடங்கிய மேல் பகுதி நன்றாகத் தெளிவாக அச்சாகி உள்ளதா? என்று கேட்கின்றனர். அதுபோல 'வால்' என்பது முதல் பக்கத்தின் கீழ்ப் பகுதியைச் சுட்டி நிற்கின்றது. செய்திப் பிரிவினர் இதனை 'Bottom' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். துணையாசிரியர்கள் பக்க அமைப்புச் செய்யும்போது, அதில் சேர்க்கப் புகைப்படம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள, 'பொம்மை' இருக் கிறதா என்று கேட்டுகின்றனர். 'பொம்மை' என்பது இங்கு, புகைப்படத்திற்குக் குறியீடாக உள்ளது.

வானொலியில் கலைஞர்களைத் தெரிவுசெய்யும் முன் அவர் களுடைய செயல்திறன் மதிப்பீடு செய்யப்படுகின்றது. (Audition Test). மாணவர்களது கல்வித்திறனை மதிப்பீடு செய்யும்போது D, A+, A, C... என்று grades கொடுக்கப்பட்டன. அதுபோல் வானொலியில் கலைஞர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்யும் போது கடமை அலுவலர் (Duty Officer) பின்வருமாறு சில குறியீடுகளைப் பயன்படுத்துகின்றார்.

குறியீடு உணர்த்தும் பொருள்

C — மிக மோசம்-நன்றாகவே இல்லை (காரணம்-உச்சரிப்பு சரியில்லை வழங்கும் முறை சரியில்லை)

B — சுமார்-பரவாயில்லை.

B+ — நன்றாக இருக்கிறது.

A — மிக மிக நன்றாக இருக்கின்றது; அபாரம். (ரொம்ப டாப்: மார்வலெஸ்)

இந்த மதிப்பீடுகளுக்கு (Ranks) ஏற்றாற்போல்தான் நிகழ்ச்சியில் பங்குபெற வாய்ப்புகள் தருவார்கள். கலைஞர்களுக்குச் சன்மானம் (Remuneration) இவ்வளவு எனத் தெரிவிப்பதற்கும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

சான்று: மதுரை வானொலி நிலையக் கலைஞர் ஒருவர் சென்னை வானொலியில் பாடியிருக்கிறார். அவருக்குச் சன்மானம் வழங்க வேண்டும்; எவ்வளவு என நிர்ணயித்திராத பட்சத்தில் சென்னை நிலையத்தார், மதுரை நிலையத்தாரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கேட்டார்களெனில், மதுரை நிலையத்தார் மறை கருதி 'RHG' என்றவாறு குறியீட்டு எழுத்துக்களையே கூறுவர். இக்குறியீடுகளுக்கிணையாக எண்களைச் சென்னை நிலையத்தார் புரிந்துகொண்டு, ரூ. 350/– சன்மானமாக வழங்குவர். அவர்கள் பயன்படுத்தும் குறியீடு PURCHASING 1234567890 பல்பொருள் அங்காடிகளில் பொருள்களின் விலையினை இவ்வகையிலான குறியீடுகள் மூலம் குறித்திருப்பதை எங்கும் காணலாம்.

முடிவுகள்

அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் விரைந்து கொடுக்கும் பொறுப்புடைய பத்திரிகை நிறுவனம் மற்றும் வானொலி நிலையத்தில் பணியாற்றுவோரிடையே விரைவான தொடர்பிற்கும், செயற்பாட்டிற்கும், குறியீடுகள் பெருந்துணையாக இருக்கின்றன.

இரு சாராரும் அதாவது தருநரும் பெறுநரும் இவற்றை அறிந்திருக்கும் பட்சத்தில் தொடர்பு எளிதாகின்றது. வானொலி நிலையத்தாரிடையே மறை நோக்கிலும் குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்களில் 'பள்ளர்' வாழ்நிலை

சு. சண்முக சுந்தரம்
செயின்ட் ஜோசப் கல்லூரி
பெங்களூர்

நாட்டுப்புறப் பாடல்கள் எளிய சாதாரண மக்களுக்கு உரிமையுடையதாகவும் மக்களோடு உறவுடையதாகவும் விளங்குகின்றன. இவற்றில் நாட்டுப்புற இலக்கியங்கள் அம்மக்களின் வாழ்வைப் பற்றியும் அவ்வாழ்வின் ஊடே இடம்பெறும் இன்ப துன்பங்களைப் பற்றியும் உள்ளது உள்ளபடி உரைக்க வல்லன. இவற்றை இவ்வெளியமக்கள் போற்றி பாதுகாத்து வருகின்றனர். தங்கள் உதடுகளால் உச்சரித்து உள்ளத்தால் பிரதிபலித்து மகிழ்ந்து வருகின்றனர். 'உயர்தனிப் புலமை இலக்கியத்தின் மாற்று வடிவமாகவே (Anti – thesis) இது காணப்படுகிறது. மேல் கலைக்கவிஞர்களால் புறக்கணிக்கப்படுகிறது. மனிதர்களும் நிகழ்வுகளும் இதில் இடம்பெறுவதைக் காணலாம். அங்கீகரிக்கப் பட்ட இலக்கியம் புறம்தள்ளுகிற அல்லது சரியாகக் கவனம் செலுத்தாத அல்லது திரித்துச் சொல்லும் ஏராளமான விஷியங்களை நாட்டுப்புற இலக்கியங்களில் அவற்றின் உயிரோடும் உணர்வோடும் உண்மையான உருவத்தோடும் காணமுடியும். சமூகத்தால் புறம்பே தள்ளப்படும் பல நிகழ்வுகளை நாட்டுப்புற இலக்கியங்கள் தம் கதை நிகழ்வுகளாக ஏற்றுக் கொண்டுள்ளன.

நம் சமூக அமைப்பில் நிலவுடைமையாளர்கள், அதிகாரிகள், அரச குடும்பத்தினர், இராணுவத்தலைமையினர், பிராமணர்கள் ஆகிய சமூகப் பிரிவினரெல்லாம் சமூக உற்பத்தியில் ஈடுபடவில்லை. காரணமானவர்களோ நிலங்களுக்கு உரிமை உடையவர்களாக இல்லை.

கைவினைஞர்கள் பண்ணை அடிமைகள் போன்றோரெல்லாம் சமூக உற்பத்தியில் ஈடுபட்டனர். உழைப்பின் பயனை நுகர்

பவர்கள் உற்பத்தியில் மிகுதியான பங்கைப் பறித்துக் கொண்டவர் என்பது வெளிப்படை. இது நிலவுடைமை அமைப்பின் பிரதான சுரண்டல் வடிவம் இதன் நேரடிப் பாதிப்புப் பிரிவினர்களாகவே நிலத்தில் உழுதவர்களைக் காண்கிறோம். இவர்களில் பெரும் பிரிவினர்களாகப் பள்ளர் இனத்தைக் காண்கிறோம்.

நாட்டுப்புறப் பாடல்கள் பெரும்பாலும் உழைக்கும் வர்க்கத்தினருக்கே உரியவை. உழவுத்தொழிலோடு இயைந்த பாடல்கள் தமிழில் மிகுந்துள்ளன. இப்பாடல்களைப் பாடுபவர்களாகவும் பாடலில் பங்கு கொள்பவர்களாகவும் பள்ளர்கள் விளங்குகிறார்கள்.

மழைபெய்தவுடன் உழவுக்குப் பள்ளர்களை அழைப்பதாக ஒரு பாடல் உள்ளது. இதில் பள்ளரைத் 'தேவேந்திரா' என்று விளக்குகிறது இப்பாடல்.

''பொன்னாலே கலப்பைகளை
எடுத்துவா தேவேந்திரா''

என்று தொடங்குகிறது பாடல். அத்துடன் பொன்னால் நுகத்தடி கருவத்தடி, பிரிக்கயிறு, கூடை, மாடு ஆகியவற்றோடு அன்னச் சம்பா, அழகுச் சம்பா, சின்னச்சம்பா, சீரகச் சம்பா, முத்துச் சம்பா, மிளகுச் சம்பா ஆகியவற்றையும் எடுத்துவா என்று கூறுகிறது. இறுதியில் ஆனையைக் கொண்டும் குதிரையைக் கொண்டும் சேறு கலக்கி வெள்ளங்கிரி சோங்கிலே விதவிதமா நெல்விளைவிப்போம். என்று முடிகிறது. வெள்ளங்கிரி என்பது கோயம்புத்தூருக்குச் சற்றுத் தொலைவில் உள்ள மலை.

இதில் பள்ளர் என்றும் தேவேந்திரா என்றும் நயமாக அழைத்து வேலை வாங்கும் 'எஜமானகுரல்' எதிரொலிக்கிறது. தேவேந்திரா என்பது ஒரு போலி கௌரவத்தைக் கொடுக்கும் பொய் பட்டமாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இதனைப் பெண்களும் நம்பி அவற்றைச் சூடி மகிழ்வதைக் காணமுடிகிறது. நெல்விளைந்த மகிழ்ச்சியில் ஆரவாரித்து மங்கல ஒலி எழுப்புமாறு வேண்டுகின்றனர். இதற்குக் குலவை என்று பெயர்.

''போடுங்கடி பெண்டுகளே பொன்னாலே ஒரு குலவை
எடுங்கடி பெண்டுகளே எல்லாரும் ஒரு குலவை
தேவேந்திரப் பெண்டுகளே சேர்ந்து குலவை எடுங்களே''

என்று பாடுகின்றனர். இதில் 'தேவேந்திரப் பெண்டுகள்' என்பது பள்ளியரையே குறிக்கும். அவர்களது மகிழ்ச்சி கரை புரளுகிறது. ஆனால் பயன் பண்ணாடிகளுக்குத்தான். இது தெரிந்தும்கூட பண்ணாடிகளை வாயாரவாழ்த்தி மனமார மகிழ்கின்றனர்.

"வாராங்கோ வாராங்கோ பண்ணாடி வாராங்கோ
பச்சைக் குடை பிடித்து பயிர்பார்க்க வாராங்கோ
நீலக்குடை பிடித்து நிறம் பார்க்க வாராங்கோ
ஆமணக்குத் தண்டு வெட்டி பூமணக்க வாராங்கோ"

என்று பாடுவதோடு பண்ணாடிகள் வெள்ளிமோதிரம், வெளுத்த துகில், பொன்னான மிதியடி, பூ மந்திரவாள் ஆகியவற்றை அணிந்திருப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

இங்கு நேர்மாறாகப் பள்ளு இலக்கியங்களில் பண்ணையார்கள் அவலட்சணக்காரர்களாகக் கேலி செய்யப்படுவதைக் கவனிக்க வேண்டும். நாடகத்தில் கேலி செய்யப்படுகிற இவர்கள் எதார்த்தத்தில் அல்லது கண்முன்னே போற்றிப் புகழ்கின்றனர் என்றே பொருள் கொள்ளத் தோன்றுகின்றது.

பள்ளர் இனத்தில் ஆண் பெண் இரு பாலாருமே மிகக் கடுமையாக உழைப்பில் ஈடுபடுத்தப் படுகின்றனர். நடுகை வேலையைப் பள்ளர் மற்றும் பறையர் இனப் பெண்களே பெரும் பாலும் செய்கின்றனர் உழவுவேலையில் நாற்றுப்புடுங்கி நடுவது தான் மிகவும் நுட்பமான வேலை. முதுகு குனிந்து நெடுநேரம் சரியான இடைவெளி விட்டு நாற்றை நட்டுச் செல்வதற்குப் பயிற்சியும் அனுபவமும் வேண்டும். இது இவர்களிடமே உள்ளது என்பார் பேரா. நா. வானமாமலை. பெண்கள் நடுவதற்கு ஏற்றவகையில் உழுது சேறு கலக்கி பக்குவப்படுத்துவது ஆண் களின் வேலை. இதனை,

"ஊஞ்ச கலப்பை வெட்டி பள்ளன் உழுவான்
ஊரு வெளி நாத்தெடுத்து பள்ளி நடுவாள்"

என்று ஒரு பாடல் குறிப்பிடுகிறது.

உழவுத்தொழிலோடு அதனோடு தொடர்புடைய எருமை மாட்டைக் கவனிப்பதும் பள்ளரது வேலையாக இருந்திருக்கிறது. ஒரு விளையாட்டுப்பாடல் "கரிக்குருவி கரிக் குருவி எங்கெங்கு போனாய்" என்று தொடங்கி,

"வறட்டெருமைக்குப் பில்லுபோட
பள்ளப்பையன் வேணும்
பள்ளப் பையனுக்கு படியளக்க
ராஜ வள்ளம் வேணும்"

என்று குறிப்பிடுகிறது. எருமையை மேய்ப்பதற்குக் கூலியாக ராஜ வள்ளத்தில் படியளப்பதாகக் கூறுவது எந்த அளவிற்கு உண்மையானது என்று தெரியவில்லை. ஒருவேளை விளை யாட்டுப் பாடலாக அதுவும் கரிக்குருவி கூற்றாக இருப்பதால் வேடிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டியதிருக்கிறது. அல்லது கூலி சரியாகக் கொடுப்பதைக் கேலி செய்வதாகவும் இப்பாடலை எடுத்துக் கொள்ளலாம்.

பண்ணாடிகளின் கலியாண நிகழ்ச்சிகளிலும் பள்ளர்கள் பங்களிப்பினைச் செய்கின்றனர். கலியாண வீட்டில் மாப்பிள்ளை குதிரைமேல் பவனி வருகிறார். பள்ளிகள் குதிரை முன்னால் நின்று கொண்டு குலவைப் பாட்டு பாடுகிறார்கள். இது மாப்பிள்ளையை வாழ்த்துகிற பாடலாக உள்ளது. "என் தோழி பெண்டுகளே, எடுங்கடி குலவைகளே" என்று பாடத் தொடங்கி பள்ளியர் தம் பெருமையை

"ஆனை என்றால் ஆனை அறுபதடி ஆனை
ஆல மரத்தில் கட்டினால் நிற்காதாம் ஆனை
அரச மரத்தில் கட்டினால் நிற்காதாம் ஆனை
புங்க மரத்தில் கட்டினால் நிற்காதாம் ஆனை
புளிய மரத்தில் கட்டினால் நிற்காதாம் ஆனை
பள்ளி விரலைக் கட்டினால் நிற்குமாம் ஆனை"

என்று பாடி மகிழுகின்றனர்.

பள்ளியின் பெருமையைப் போலவே பள்ளரின் பெருமையை இன்னொரு பாடல் கூறுகிறது.

"பன்னின்னா பன்னி பாறைமலை பன்னி
நேரங்கெட்ட நேரத்திலே நெல்லு திங்கபோறேனுச்சாம்
குத்துள அம்புல கொடலே சரியல
அய்யய்யோ எங்கையிலே கடையாணி
மோதிரம் கழண்டு உழுவவே
ஆலிவே கட்டுனா நிக்கலேங்குது
அரசிலே கட்டுனா நிக்கலேங்குது
புங்கையிலே கட்டுனா நிக்கலேங்குது
தேவேந்திரப் பள்ளன் கண்டு
விரல்ல கட்டுனா நிக்கறேங்குது"

என்று பள்ளன் சுண்டு விரலிலேயே பன்றியைக் கட்ட முடியும் என்று அவனது ஆற்றலைப் புகழ்கிறது.

பள்ளியர் நடவுப் பாட்டு, களை எடுப்புப் பாட்டு, அறுவடைப் பாட்டு எனப் பலவிதமான தொழில் பாடல்களைப் பாடுகின்றனர். அவர்களது குரலின் இனிமைப் பற்றி குறிப்பிடும் போது,

"நாட்டியங்கள் ஆடிவர நாகசுரம் ஊதிவர

தேவேந்திர பள்ளிகளும் தேன்போல பாடிவர

எனக் குலவைப் பாட்டு கூறுகிறது.

திருமண வீடுகளில் பண்ணாடிகளுக்காகப் பள்ளர்கள் "முத்துச் சம்பா, மிளகுச் சம்பா. அன்ன சம்பா, அழகு சம்பா, ஆயிரம் தானியங்கள் கொண்டு வந்தான் பள்ளனவள்" என்ற பாடலால் சீதனம் கொண்டு வருகிறவர்களாகவும் பணியாற்றியுள்ளனர். இத்துடன் வெள்ளைக் குதிரை, விருது, வெண் சாமரை, தென்னந்தோப்பு, மாந்தோப்பு, கொய்யா, தார்வாழை, மணவறை ஆகியவற்றையும் தேவேந்திரப்பள்ளன் கொண்டு வந்தான் என்று பாடல் முடிகிறது.

இதனால் பள்ளர் உழவுத் தொழிலும் அதனோடு தொடர்புடைய ஏனைய தொழில்களையும் செய்வதாகவும் பண்ணாடிகளுக்கு ஏற்ற பணியாளர்களாக விளங்கியதாகவும் அறிய முடிகிறது. வேறு சில பாடல்களோ இவற்றிற்கு முரணாக - முற்றிலும் மாறுபட்ட குரலில் பேசுகின்றன.

வரப்பு வெட்டும் பள்ளனுக்கு

கோமணந்தான் ஒய்யாரமா"

என்று ஒரு பள்ளர் பாடல் கேலியாக மட்டுமல்லாமல் அவர்களது உண்மையான நிலைமையை உடைத்துச் சொல்வதாகவும் அமைந்துள்ளது. இது போலவே,

"நட்ட நட்ட பள்ளிகளெல்லாம்

பட்டினியா வாராங்க"

என்ற பாடல் அவர்களின் வறிய நிலையைச் சுட்டுகின்றது. உழைத்தும் உண்ண முடியாத நிலை கொடியது.

இவ்வாறு நாட்டுப்புறப் பாடல்கள் பள்ளர் மக்களின் பரிதாப நிலைகளோடு அவர்களது உழைப்பின் சிறப்பு, பாட்டின் இனிமை, கொஞ்சம் கொஞ்சமாகப் பெற்று வரும் அறிவு, சுரண்டலுக்கு எதிரான குரல், சுயமரியாதை போன்றவற்றைக் காட்டுவதைக் காணலாம். இனி இவை போராட்ட ஆயுதங்களாகவும் மாறுவது காலத்தின் கட்டாயமே.

திருப்பழனக்கோயில் கட்டடக்கலையும் கல்வெட்டுகளும்

ஆ. சண்முகம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

திருப்பழனம் எனும் ஊர் திருவையாற்றிலிருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ளது.

''கதலி'' என்ற சொல்லுக்கு வாழை என்றும் பொருளுண்டு. வாழைகள் நிறைந்த பகுதியாதலால் இவ்வூருக்குக் ''கதலிவனம்'' என்ற பெயருமுண்டு.

திரு-அழகு, பழனம்-வயல், அழகிய வயலும் வயல் சார்ந்த இடமும் சூழ்ந்த மருதநிலம் என்று பொருள் இவ்வூர்ப் பெயரிலேயே காணப்படுகிறது ''வயல்களால் சூழப்பெற்ற தலமாதலின் இத்தலம் திருப்பழனம் எனப்பெற்றது''.[1]

திருப்பழனக்கோயில் கட்டடக்கலையையும் கல்வெட்டு களையும் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

கட்டடக்கலை: கிழக்குத்திசை நோக்கியமைந்த திருப்பழனக் கோயில் இறைவன் பெயர் பழனத்தப்பர். இறைவி பெயர் பெரியநாயகி.

திருக்கோயில்களில் கற்றளி அமைக்கும் முறை கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்மவர் மனான இராசசிம்மன் காலத்தில் ஏற்பட்டது. கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பெறும் கோயில் கட்டடங்களுக்குக் கற்றளி என்பது பெயர்[2].

மூலவர் கருவறை விமானம்: இது அடிமுதல் முடிவரை கருங்கல்லால் ஆன கற்றளியாகக் காட்சியளிக்கிறது. பெரும்

பான்மையான கோயில்களில் கருவறை விமானக் கலசம் உலோகங்களினால் வடிவமைக்கப்பெற்றிருக்கும். ஆயின் திருப் பழனக் கோயில் கருவறை விமானக்கலசம் கருங்கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலுக்கமைந்த சிறப்புக் கூறுகளுள் இதுவுமொன்று.

கருவறைச் சுவர்ப்பகுதியில் வேதிகை, காலுடன் அரைத் தூண்களும் கோட்டப் பஞ்சரங்களும் காணப்படுகின்றன. சுவர்ப் பகுதியில் கல்வெட்டுகள் சில பொறிக்கப்பட்டுள்ளன. அப்பகுதி யின் மூன்று பக்கங்களிலும் சிற்பங்கள் சிலவும் காணப்படு கின்றன.

பிரஸ்தரப்பகுதியில் உத்தரம் காணப்படுகிறது எராதகத்தில் சிங்கம் பூதகணங்களின் வடிவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கபோதத்தில் கர்ணகூடுகளும் அதன் நடுப்பகுதியில் சிற்பங்களும் யாளப்பகுதியில் சிங்கத்தலை வடிவங்களும் காணப்படுகின்றன.

கர்ணகூட்டின் முதல் கர்ணகூட்டுப்பகுதியின் நான்கு மூலை களில் கூடங்களும் நடுவே நீண்ட சாலை அமைப்பும் எழிலூட்டு கின்றன. கூடத்தின் நடுவிலும் சாலையின் நடுவிலும் சிற்பவடி வங்கள் உள்ளன. முதல் கர்ணக் கூட்டின் மேல் உள்நாட்டுக் கழுத்துப்பகுதியும் அதன் மேல் பிரஸ்தரமும் விளங்குகின்றன. கர்ணகூட்டுப் பிரஸ்தரப்பகுதியின் மேல் திசைக்கு இரண்டாக எட்டு நந்தி வடிவங்கள் அமர்ந்தநிலையில் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளன. கிரீவப்பகுதியின் மேற்குப்பக்கம் மையக் கோட்டத்தில் அர்த்தநாரீசுவரர் காணப்படுகிறார். சிகரம் நான்கு பக்கம் உடைய நாகர விமானச் சிகரம் அதன் நான்கு பக்கங்களில் மகாநாசிக்கூடுகளும் அதன் நடுவே தேவகோட்ட வடிவமும் அதிக சிற்பங்களும் தோற்றமளிக்கின்றன. கலசம் கருங்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது.

அம்மன் கோயில் விமானம்: அதிட்டானப்பகுதி உபானம், குமுதம், காந்தம், அகரப்பட்டியல் ஆகிய பகுதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

சுவர்ப்பகுதியில் வேதிகை, கால், அரைத்தூண்கள், தேவ கோட்டங்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

பிரஸ்தரப்பகுதியில் உத்தரம், எராதகம், கபோதப் பகுதிகள் தோற்றமளிக்கின்றன. கபோதத்தில் கர்ணகூடுகளும் யாளத்தில் சிங்கத்தலை வடிவங்களும் செதுக்கப்பட்டுள்ளன.

கர்ணகூட்டின் முதல் கர்ணகூட்டுப் பகுதியில் நான்கு மூலைகளிலும் கூட அமைப்பும் நடுவே நான்கு பக்கம் சாலை அமைப்பும் கூடத்திலும் சாலை நடுவிலும் சிற்ப வடிவங்களும் காட்சியளிக்கின்றன. கர்ணகூட்டிற்கு மேலாக உள்நாட்டுக் கழுத்துப் பகுதியும் அதன்மேல் பிரஸ்தரப்பகுதியும் காணப்படுகின்றன. கிரீவப்பகுதியில் இறைவடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. சிகரம் வட்ட வடிவ வேசர விமானச் சிகரமாகவுள்ளது அதில் நான்கு திசை நோக்கி மகாநாசிக் கூடுகளும் அதனிடையே சிறிய கர்ணகூடுகளும் காட்சியளிக்கின்றன. விமானத்தின் உச்சியில் கலசம் காணப்படுகிறது.

திருப்பழனக்கோயில் அர்த்தமண்டபம், முகப்பு மண்டபம், நடன மண்டபத்துடன் இரண்டு கோபுரங்களும் இரு திருச்சுற்றுக்களில் திருச்சுற்று மதில்களும் கட்டப்பெற்றுள்ளன.

கல்வெட்டுகள்: இக்கோயிலில் முதல் பராந்தகன், இராசராசசோழன், இராசகேசரிவர்மன், பரகேசரிவர்மன் போன்ற மன்னர்களின் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

முதல் பராந்தகன் (கி:பி. 907-955) இம்மன்னனின் பதினொன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று இறைவனுக்கு விளக்கு எரிப்பதற்கு வில்லவன் பொரையன் என்பவன் 25 கழஞ்சு பொன் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது.[3]

மதுரை கொண்ட பரகேசரிவர்மனாகிய முதல் பராந்தகனின் பதினான்காவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு கடைகசண்ட வாரணபெர் அரையன் என்பவன் இக்கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்காக நிலம் கொடுத்த செய்தியைச் சுட்டுகிறது[4].

இவனது முப்பத்தியொன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பராந்தக தேவருடைய தாதி பாண்டன் காளி என்பவள் இரண்டரை நிலத்தைப் பிராமணர்களுக்கும் சோறு சமைப்பவர்களுக்கும் விறகிடுவாருக்கும் நெய்க்கும் ஒருபலம் மிளகுக்கும் உப்புக்கும் வெற்றிலைக்கும் குயவர்களுக்கும் அரிசி அரித்து எச்சில் எடுப்பானுக்கும் சிறு கூலி அடங்க ஒருவனுக்குத் தினசரி பதினான்கு நாழி நெல்லாக வைத்த நிலத்தை விளங்குகிறது.[5]

இராசராசசோழன் (கி.பி. 985-1014) இராசராச இராசகேசரிவர்மனாகிய இராசராசசோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டு நூற்றிநாற்பத்தெட்டாவது நாளில் இறைவனுக்

காக 42 கழஞ்சு பொன் நகைகளுக்காகக் கொடுத்தான் என்ற செய்தியும் கல்வெட்டொன்றில் காணப்படுகிறது.[6]

பரகேசரிவர்மன்: பரகேசரிவர்மனின் மூன்றாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு, சோழப் பெருமானாடிகள் பரகேசரிவர்மன் தேவியார் சோழமாதேவியார் தாயார் முள்ளூர் நங்கையார் என்பவள் தினசரி இரண்டு நந்தா விளக்கு எரிப்பதற்கு 30 கழஞ்சு பொன் கொடுத்த செய்தியைக் குறிக்கிறது.[7]

பரகேசரியின் ஆறாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு, கறுகொட்டி நிறையன் அண்ணாவன் என்பவன் தினசரி உழக்கு நெய்யால் நந்தா விளக்கு எரிப்பதற்குக் கொடுத்த ஆடுகள் 95 என்பதனைத் தெரிவிக்கிறது.[8]

இராசகேசரிவர்மன்: இம்மன்னனது இரண்டாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டென்று, சோழப் பெருமானடிகள் பெருநற்கிள்ளிச்சோழர் என்பவர் இறைவனுக்கு விளக்கு எரிப்ப தற்காக 30 கழஞ்சு பொன் கொடுத்ததை விளக்குகிறது.[9]

பன்னிரண்டாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பாரதாயன் சங்கரன் ஸ்ரீகண்டன் என்பவன் இறைவனுக்கு விளக்கு எரிக்கக் கொடுத்த 25 கழஞ்சு பொன்னையும் தினசரி உழக்கு நெய்யால் எரித்தல் வேண்டும் என்பதனையும் குறிக்கிறது.[10]

இராசகேசரியின் பதின்மூன்றாவது ஆட்சியாண்டில் தஞ்சாவூர் நந்திபாங்கி என்பவள் தினசரி உழக்கு நெய்யால் விளக்கு எரிக்கக் கொடுத்த ஆடுகள் 90, நெய்யாட வைத்த ஆடுகள் 10 ஆக 100 ஆடுகளைக் கொடுத்த செய்தியினைத் தெரிவிக்கின்றது.[11]

பதினேழாவது ஆட்சியாண்டில் சோழப்பெருமானடிகள் தேவியார் தென்னவன் மகாதேவியார் இறைவனுக்காக உழக்கு எண்ணெயால் நந்தா விளக்கு எரிப்பதற்கு 20 கழஞ்சு பொன் கொடுத்துள்ளார்.[12]

இருபதாவது ஆட்சியாண்டில் முஞ்ஞாவல் உடையான் நக்கன் ஆதித்தன் என்பவன் தினசரி உழக்கு நெய் விளக்கு எரிக்கக் கொடுத்த ஆடுகள் 90. ஆவணி அவிட்டத்தன்று ஆடி அருள்வதற்குப் பதினாழி நெய் கொடுப்பதாக வைத்த ஆடுகள் 10 ஆக 100 ஆடுகள் கொடுத்துள்ளான்.[13]

இராசகேசரியின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மறவன் நக்கன் என்பவன் தினசரி இரவும் பகலும் உழக்கு எண்ணெயில் விளக்கு எரிப்பதற்காகக் கொடுத்த 30 கழஞ்சு பொன்னைக் குறிப்பிடுகிறது.[14]

இராசகேசரியின் இருபத்தாறாவது ஆட்சியாண்டில் மகா தேவர்க்கு அணிவிக்க மார்த்தாண்டராகிய செம்பியன் பிரீதிவி விகங்கரையன் 26 கழஞ்சரை நகை, வைரம் 54ம் மாணிக்கம் 2ம் மரகதம் 2ம் கொடுத்தான். இவற்றுடன் கூடி நளபாளம் என்னும் நகையும் கொடுத்துள்ளான். இச்செய்தியினைக் குறிப்பிடும் கல்வெட்டும் திருப்பழனக்கோயிலில் பொறிக்கப் பட்டுள்ளது.[15]

ஆதித்தசோழன் (கி.பி. 871-907) காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படும் திருப்பழனக்கோயில் கற்றளி வடிவாக்கம்[16] அம்மன் கோயில் விமான அமைப்புமுறையின் வழி தமிழர்களின் கட்டடக் கலை அறிவையும், இக்கோயில் கல்வெட்டுச் செய்திகளின்வழி தமிழர்களின் இறை ஈடுபாட்டுணர்வையும் அறிந்துணர முடிகிறது.

குறிப்புகள்

1. **திருவடகுரங்காடுதுரை திருப்பழனத் திருப்பதிகங்கள்,** ப. 15
2. மயிலை சீனி. வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 13.
3. தெ.இ.க. தொகுதி 5. 691
4. ,, ,, 688
5. ,, ,, 693
6. ,, ,, 692
7. ,, ,, 689
8. ,, ,, 690
9. ,, தொகுதி 13. 21
10. ,, ,, 230
11. ,, ,, 237
12. ,, தொகுதி 5. 684
13. ,, ,, 686
14. ,, ,, 13. 315
15. ,, ,, 319
16. **M.A. Dhaky, Encyclopaedia of Indian Temple Architecture, P. 158.**

நாட்டுப்புறப் பாடல்களின் யாப்பு

ந. சண்முகம்
ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன்
வித்யாலயக் கலை அறிவியல் கல்லூரி
கோவை - 20

செய்யுளின் கருத்து, கற்பவரை எட்டச் செய்யும் காரணி களுள் ஒன்று யாப்பு. ஒரு கருத்தினைத் தெரிவிக்க குறிப்பிட்ட வடிவத்தில் சொற்களை அமைக்கும் பொழுது அது கற்பவரின் மனதை விட்டு நீங்காத இடம் பெறுகின்றது. தமிழ்யாப்பில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, என்ற பாவகைகள் உண்டு. இவை ஒவ்வொன்றும் குறித்த ஒரு பொருளைப் பாடுவதற்காகப்பயன்பட்டன. ஆசிரியமும் வஞ்சியும் கதைப் பொருளுக்கும் வெண்பா அறக்கருத்துக்கும் கலிப்பா காதலுக்கும் மருட்பா வாழ்த்துரைக்கும் பயன்பட்டன. காலப் போக்கில் எந்தப்பாவிலும் எந்தப் பொருளையும் பாடலாம் என்றாகிவிட்டது. பிற்காலத்தில் பாவினங்களாகிய தாழிசை துறை, விருத்தம் என்ற யாப்பு வகைகள் வளர்ந்தன. அதற்கும் யாப்பியலார்கள் இலக்கணம் வகுத்தனர். 19, 20ஆம் நூற்றாண்டு களில் சிந்து, கீர்த்தனை இலக்கியங்கள் மலர்ந்தன. அதற்கும் இலக்கண வரையறைகள் உருவாக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட யாப்பியல் வரையறைகளை வைத்துக் கொண்டு சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம் போன்ற இலக்கியங்களுக்கு யாப்பியல் ஆய்வுகள் நடந்துள்ளன. இதனால் சங்கப்புலவர்கள் வள்ளுவன், இளங்கோ, கம்பன் ஆகியோர் கையாண்ட யாப்பு வகைகள் என்னென்ன என்பது வெளிப்பட்டன.

நாட்டுப்புற இலக்கியமும் யாப்பும்:

ஏட்டில் எழுதப்படாமல் எத்தனையோ கவிதைகள், கதைகள் காவியங்கள் வாய்மொழியாக ஏதோ ஒரு இசையுடன் பாடப்

பட்டு வருகின்றன. கிராமப்புற மக்கள் தம் உள்ளத்து எழுந்த உணர்வுகளைத் தமக்குத் தெரிந்த கிராமிய இசையுடன் பொருள் செறிவுடன் வெளிப்படுத்துகின்றனர். இதனைப் பொருள் அடிப் படையில் தொகுத்து அதில் வெளிப்படும் பண்பாடு, சமூகம், வரலாறு போன்ற கூறுகளை நாட்டுப்புறவியல் துறையினர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

எத்தனையோ ஆய்வுகள் நாட்டுப்புற இலக்கியங்களில் நடந்தாலும் அவ்விலக்கியங்களில் யாப்பு அமைப்பு இதுவரை ஆராயப்படவில்லை. நாட்டுப் புறப்பாடல்களுக்கும் யாப்பிலக் கணத்திற்கும் தொடர்பு உண்டா? யாப்பிலக்கணத்தில் இருந்து எத்தகைய மாற்றத்தை இப்பாடல்கள் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட பொருள் எந்த யாப்பில் பாடப்பட்டுள்ளது, புதிய யாப்பு வடிவங்கள் காணப்படுகின்றனவா? என்பன குறித்து ஆய்வுகள் நடைபெறுதல் வேண்டும். இதனால் தமிழ் இலக்கிய வளர்ச்சியும் யாப்பியல் வளர்ச்சியும் வெளிப்படும்.

இவ்வாய்வுக்காக நாட்டுப்புறப்பாடல்களை மாவட்ட அளவில் தொகுத்து பின், பொருள், இசை, பாடுவோர் எண்ணிக்கை, பாடப்படுகின்ற இடம், பாடுவோர் மனநிலை, போன்ற வகையில் பகுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்தால் பல உண்மைகள் வெளிப்படும். சான்றாகத் தாலாட்டுப் பாடலை மேற்கண்ட அடிப்படையில் பிரிப்போமானால் ஒரு மாவட்டத்திற்கும் பிறிதோர் மாவட்டத்திற்கும் தாலாட்டுப் பாடலில் உள்ள வடிவ வேறுபாடு வெளிப்படும். பாடுகிற இடம் தோட்டமாக இருந் தால் பாடல் ஒரு வடிவத்தையும், வீடாக இருந்தால் வேறு வடிவத்தையும் பெறலாம். தொட்டிலின் வடிவ மாறுபாட்டால் பாடல் அமைப்பில் மாறுபாடு உள்ளதா எனத் தெரிந்து கொள்ளலாம்.

தாலாட்டுப் பாடலும் - யாப்பும்

பாடல்களில் இனிமையானது தாலட்டு. குழந்தைகளைக் கண்துயில வைப்பதற்குப் பாடப்படும் பாடலாகும். அடிவரை யறையில் சிறிது பாடல்களும் உண்டு. குழந்தை கண்துயிலும் வரை பாடவேண்டி இருப்பதால் மிக நீண்ட பாடல்களைத் தேவைக்கு ஏற்ப ஓசை மாற்றிப் பாடுகின்றனர். ஓசை மாறுபடு வதால் வடிவமும் மாறுகின்றன.

'அண்ணன்மார் சிறப்பு' பற்றி பாடுகின்ற தாலாட்டுப்பாடல் 20 அடிகளைக் கொண்டது. இப்பாடல் ஒரே ஓசையில் பாடப் படுவதால் பாடல் முழுமையும் இருசீர் கொண்டதாகக் காணப் படுகிறது.

'பட்டு' ஜவுளிகளும்
பலஅணியும் கொண்டுவந்தார்
கட்டி அலங்கரிப்பார்
கற்பகமே கண்வளராய்

என்ற பாடல் அடிகள் இருசீரில் அமைந்திருப்பதைக் காணலாம்.

'மாமன் சிறப்பு' பற்றிய தாலாட்டுப் பாடல் 206 அடிகள் உடையது. (தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாமலை). இப்பாடலில் குறளடி' சிந்தடி, அளவடி விரவி வந்துள்ளன. பாவகையில் இப்பாடலைப் பிரித்து நோக்கினால் வஞ்சி விருத்தம், சிந்து, ஆசிரியப்பா என்பன விரவி வந்துள்ளன. எனவே அடிவரையறையில் நீண்ட தாலாட்டுப்பாடல்கள் பலவகையான யாப்பு வடிவங்களைக் கொண்டுள்ளன என்பது தெரிகின்றது. அடிவரையறையில் நீண்ட பரிபாடல் கூடப் பல வகையான யாப்பின் கூட்டுவடிவம் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

பொதுவாகத் தாலாட்டுப்பாடல்கள் குறளடி, சிந்தடிகளினால் அமைந்துள்ளன. இப்பாடல்களில் நாலசைச் சீர் மிகுதியாக வருவதால் விரைவுத் தன்மை குறைந்து தூங்கல் ஓசை உருவா கிறது. எனவே குழந்தையின் மனதைத் துயிலவைக்கும் தன்மை யினை இப்பாடல்கள் பெறுகின்றன போலும்.

சிறுவர் விளையாட்டுப் பாடலும் - யாப்பும்

சிறுவர் விளையாட்டுப் பாடல்களிலும் ஒரு ஒழுங்குபட்ட அமைப்பினைக் காண முடிகிறது.

'திரித்திரி பொம்மலே
தில்லாங்கடி பொம்மலே
காசுகண்டேன் பொம்மலே
மூசிக்கோ பொத்திக்கோ'

என்ற பாடல் சிறுவர்கள் அமர்ந்து விளையாடும் பொழுது பாடப்படும் பாடல் ஆகும்.

'சோளச் சோளக் காட்டிலே
சோளம் அடிக்கிற வீட்டிலே
பந்தடி யடி மீனாளே
பதக்கு சோளம் நான்தாரேன்'

என்ற பாடல் சிறுவர்கள் குதித்துக் குதித்து விளையாடும் பொழுது பாடக்கூடிய பாடல்.

இப்பாடல்களை நோக்கும் பொழுது அமர்ந்து விளையாடும் பொழுது குறளடியிலும் அசைந்து விளையாடுகின்ற பொழுது சிந்தடியிலும் பாடல்கள் அமைந்துள்ளமையைக் காணலாம். இப்பாடல்களில் ஓரசை, ஈரசை, மூவசைச் சீர்கள் விரவி வருவ தால் விரைந்த ஓசையைப் பெறுகிறது. விளையாட்டும் விரை வாக நடைபெறுகின்றது.

விடுகதையும் - யாப்பும்

'தமிழிற் விடுகதை' என்ற நூலில் (ச. வே. சுப்பிரமணியன்) 2504 விடுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஆசிரியப் பாவும் பஃறொடை வெண்பாவும் காணப்படுகின்றன. அதோடு ஆசிரிய அடி, வஞ்சி அடிகளாலான விடுகதைகளும் உள்ளன. இந்த விடுகதைகளை நோக்கும் பொழுது பழைய யாப்பிலக்கணம் மாற்றம் பெறுகிறது.

'எவ்விடத்தில் சுகத்தை எப்போதும் காணலாம்' என்பது ஆசிரிய அடியால் ஆன விடுகதை. ஆசிரியத்திற்கு மூன்றடி சிறுமை என்பது யாப்பிலக்கணம். ஆனால் விடுகதைகளில் ஆசிரியத்திற்கு ஓரடி சிறுமை என்ற இலக்கணத்தை வகுத்துக் கொள்ளலாம்.

மேற்கண்ட எடுத்துக் காட்டுகளால் நாட்டுப்புறப் பாடல் களின் யாப்பு அமைப்பு, பழைய யாப்பியல் கொள்கைகளோடு பல புதிய யாப்பியல் கொள்கைகளையும் கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

இந்நாட்டுப்புறப் பாடல்களில் யாப்பியல் ஆய்வினை மேற் கொள்வதால் தமிழில் இதுவரை வெளிவராத யாப்பு

வடிவங்களை வெளிக்கொணரலாம். நாட்டுப்புறப் பாடல்களுக்கு ஒருவரையறுத்த யாப்பு வடிவங்களை உருவாக்குவோமானால் அது பல புதிய இலக்கிய உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதில் ஐயம் இல்லை. நாட்டுப்புற இலக்கியங்கள் நடை பெறும் பல ஆய்வுகளுக்கு இவ்வாய்வு அடிப்படையாக அமைந்து பல புதிய கண்ணோட்டங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

தென் மகதைத் திருநாடன் அந்தாலந் தீர்த்தான் செழியன்

பெ. சண்முகம்
ஸ்ரீ அம்மன் கலை அறிவியல் கல்லூரி
ஈரோடு - 638 102

தமிழ்நாட்டில் முத்தரையர், முனைய தரையர், வாண தரையர், காடவராயர், காலிங்கர், வாணவராயர், செழிய தரையர், என்ற ஆற்றல் மிக்க குழுவினர் வாழ்ந்தனர். இவர்கள் தனித்தும் மூவேந்தர்களைச் சார்ந்தும் ஆட்சியாளராக விளங்கினர். இவர்களில் வாணர் மரபினர் மாவலிவாணர், வாணவரையர், வாணகோவரையர், வாணாதிராயர், செழிய தரையர் என்ற தொடர்களைக் குலப் பெயராகக் கொண்டு வீரம் விளைத்துப் பல்லவர் காலம் முதல் நாயக்கர் காலம் முடிய, புகழ் பெற்று நின்றனர்.

இவ்வாணாதிராயர்கள் பிற்காலம் சோழர்கள் ஆட்சியில் சேலம் மாவட்டத்தின் கீழ்ப்பகுதியையும் தென்னார்க்காடு மாவட்டத்தின் மேற்பகுதியையும் தன்பால் கொண்ட நிலப் பரப்பினை மகதை மண்டலம் என்ற பெயரில் தோற்றுவித்தனர். ஆறகழூர் இதன் தலைநகரம். வட இந்தியாவின் ஒரு மகதநாடு உள்ளதால் இது தென்மகதை என்றும் வழங்கி வந்தது. தென் மகதைத் திருநாட்டினர் சோழ பாண்டிய நாயக்க மன்னர் களுக்குக் கீழ்ச் சிற்றரசர்களாக விளங்கினர். ஒருசாரர் அரசியல் அதிகாரிகளாகச் செயலாற்றினர். சிலர் சாமந்தர்களாகச் செயல்புரிந்தனர். இவர்களின் போர்கள், வெற்றி, பண்பு மேம்பாடு முதலிய வரலாற்றுச் செய்திகளைப் பெருந்தொகை, குடுமியான் மலைப் பாடல்கள், புதுக்கோட்டைப் பகுதிக் கல்வெட்டுப் பாடல்கள் திருவண்ணாமலைக் கோயில் சாசனம் என்பனவும் பிறவும் புகழ்ந்து கூறுகின்றன.

"வாணன் புகழெழுதா மார்புண்டோ! மாகதர் கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ! – வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ வுண்டோ
அடிதாங்கி நில்லா அரசு!"

(பெருந்தொகை பாடல் 1181)

என்ற பாடல் ஓர் எடுத்துக்காட்டாகும்.

மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில், இராசராச வாணகோவரையன் பொன் பரப்பினான் மகதைப் பெருமாள் தானைத் தலைவர் பணிபுரிந்து தேடித்தந்த வெற்றிகளை வரலாற்று நூல்கள் விளக்கிச் சொல்கின்றன. இவர் சோழர் சார்பில் பாண்டியநாட்டை வெற்றிகண்ட பின்பு. "பாணனைப் பாண்டியன் என்று பருமணிப் பட்டஞ் சூட்டினான்" (பக்கம் 15) என்று பெருந்தொகை கூறுகின்றது· அப்பொழுது இவ்வாண கோவரையர் செழியதரையர் என்ற பட்டம் பெற்றிருக்க வேண்டும். இவர் இப்பட்டத்தினைக் கி.பி.1200-இல் பெற்றிருக்க வேண்டும். (பாண்டிய நாட்டில் வாணாதிராயர், வெ. வேதாசலம், பக்கம் 18)

இப்பாணர் மரபினர் இங்கிருந்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் ஆட்சிப் பணி முதலிய வெவ்வேறு பணிகள் நிமித்தம் பரவலாகச் சென்று வேரூன்றிவிட்டனர். பின்பு, கி.பி.1251–1271இல் ஆட்சி புரிந்த சடாவர்மன் சுந்தரபாண்டியன் வாணர்களின் நாடகிய மகதேசத்தை வென்று அடிப்படுத்தினான் என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது. (பாண்டிய நாட்டில் வாணாதிராயர்கள் பக்கம் 30) இதனால், மகதை மண்டலம் முதல் வீழ்ச்சியுற்ற செய்தி தெரிகின்றது. 14ஆம் நூற்றாண்டில் இஸ்லாமியர் படையெடுப்பினாலும் மகதை மண்டலம் சிதைவுற்றது. பல்வேறு போர்களுக்கும் அழிவுக்கும் பிறகு, விசயநகர் குமாரகம்பண்ணன் வருகைக்குப்பிறகு மகதை மண்டலம் புத்துயிர் பெற்றிருக்க வேண்டும். மகதை வாணர்கள் தம் நாட்டின் அழிவுநிலையான அந்தகக் காலமான அழிவு காலத்தைத் தவிர்த்து, 'அந்தகாலந்தீர்த்தான்' என்ற சிறப்புப் பெயருடன் திகழ்ந்திருக்க வேண்டும். இக்காலம் 14–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இந்த அந்தகாலந்தீர்த்தான் செழியன் 'உலகங் காத்தான்' என்ற பட்டத்தினைப் பெற்றிருந்தார். இம் மரபு

வழியினால் கி.பி. 1650-1680 இல் வாழ்ந்த அந்தகாலந்தீர்த் தானே இங்குக் குறிப்பிடப்படும் தென்மகதைத் திருநாடன் அந்தகாலந்தீர்த்தான் செழியன் ஆவார். இவர் காலம் திருமலை நாயக்கரின் பின் ஆட்சிக்காலமும் சொக்கநாத நாயக்கர் ஆட்சியின் காலமும் ஆகும்.

நாய்க்கர் ஆட்சிக்காலத்தில் வாழ்ந்த வாணர் மரபினர் தம் மகதை மண்டலத்தின் பழைய தலைநகர் ஆறகழூர் வீழ்ச்சி யுற்றுச் சீரழிந்த நிலையில், வேறு தலைநகரினை ஏற்படுத்தின. அதுவே உலகியல் நல்லூர் ஆகும். உலகியல் நல்லூர், உலகாபுரி, உலகை என வழங்கப்பெற்றது. இவ்வூர் விழுப்புரம் அருகே உள்ளது. மகதை மண்டலம் கல்லைக்குறிச்சி நாடு எனவும் வழங்கியது. மேலும் சின்னசேலம், பாலையூர் என்றும் ஊர்களும் சிறப்புப் பெற்றன. 'தென்பாலை சேலம் செயித்த தாகந்தீர்த்த செழியன், என்று அந்தகக்கவி வீரராகவர் குறிப்பிடுகின்றார். (தமிழ்ப் புலவர்கள் வரலாறு 17 ஆம் நூற்றாண்டு ச. சோமசுந்தர தேசிகர் பக்கம் 87)

கி.பி. 1550 முதல் 1730 வரை வாழ்ந்து வந்த வாணர்குலக் குறுநிலத் தலைவர்கள் மேல் இலக்கியங்கள் இயற்றப்பெற்றன. குறிப்பிடப்படும் அந்தாலந்தீர்த்தான் செழியன் மேல் அந்தாலந் தீர்த்தான் செழியதரையன் மஞ்சரி என்ற வரலாற்று இலக்கியம் (கி.பி.1650 – 1680) இயற்றப்பெற்றது. இதனை "நேர்மையான மஞ்சரி உலகுபுகழ் சேலத்துத் துரந்தரன் அந்தாலந்தீர்த்தான் பேரில் செய்தது" என்று ஓலைச் சுவடி குறிப்பிடுகிறது. ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. அந்தாலந் தீர்த்தான் செழிய தரையன் மஞ்சரி என்ற இலக்கியம் உலா, காதல், தூது என்ற சிற்றிலக்கியங்களின் கூட்டிணைப்புப் புது இலக்கியமாகும். இதே போல் அமுதரச மஞ்சரி என்ற சிற்றிலக்கியம் தளவாய் திருமலையப்பர் பேரில் விசயரங்க சொக்கநாதர் ஆட்சியில் அழகிய சிற்றம்பலக் கவிஞரால் இயற்றப்பெற்றது (கி.பி.1706 – கி.பி.1732).

அந்தாலந்தீர்த்தான் செழியனின் இம்மரபினர் கி.பி.1550இல் தொடக்கம் பெறுகின்றனர்; கி.பி. 1730 வரை குறிப்பிடப் பெறு கின்றனர். இம்மஞ்சரியில் மூதாதையினரின் பெருமை, பாட்டன் மார் பெருமை, தந்தையின் அருமை பெருமைகள், மாமன்

தம்பியர், மக்கள், மைத்துனர் என்போரின் வீரம், கொடை பற்றிய விளக்கங்கள் தெளிவாகத் தரப்படுகின்றன. இவர் குல மரபு 158-179 கண்ணிகளில் குறிப்பிடப்படுகின்றது. இம்மரபினர் தமிழ்மாலைச் செழியன் முதலாகத் தொடங்கப் பெறுகின்றனர். தியாகப் பிரமன் செழியன் மழையும் கற்பக மரமும் கண்டு அஞ்சும் வண்ணம் பொன்மாரி பொழிந்து புலவர்களையும் பொதுமக்களையும் வாழ வைத்தவராம். செல்வன் சிற்றாஞ் செழியன் என்பவர் கடையேழு வள்ளல்களுக்குப் பின்பு அவர் களுடன் இணைந்து இருபத்திரண்டாம் வள்ளலாக விளங்கிய வராம். மற்றொருவர் வள்ளல் திருவேங்கடவன். பின்பு பிரபு ராயன் என்பவர் குறிப்பிடப்படுகிறார். இவர்களுக்குப் பிறகு இருள்நீக்குஞ்செழியன் என்பவர் குறிப்பிடப்படுகிறார். இவர் அந்தாலந்தீர்த்தானின் தந்தையாவார். இவர் முத்தமிழையும், பாவலர்களையும் பலகலைகளையும் காத்துவந்த மூவேந்தர்களும் இருபத்தொரு வள்ளல்களும் காலங்கடந்த பின்பு இச்செயல் களுக்கு பெருவாழ்வு தந்தவர். ஆலமரம் போல் தம் பெரிய மரபின் கிளைகளைத்தாங்கி வந்தவர். இவர். 'குலம் விளங்கத் தோன்றும் குமாரன் தான் அந்தாலன். அந்தாலன் பூலோகநாதன் என்பவரின் மருமகன்! சிறந்த மன்னன்.

பின்பு, அந்தாலனின் தம்பியர்கள் பாராட்டப் பெறுகின்றனர். முதல் தம்பி மெய்க்கும் பெருமாள் என்பவர், இவர் தம் மரபினரின் புகழை மேலும் பெருகச் செய்தார். தாம் சென்ற நாயக்கர்களின் போர்க்களங்களில் வேற்போர் புரிந்து பகை வர்களை அழித்தார். தமிழ்ப் பயிரை வளர்ப்பதில் கார்மேகத் திற்கு இணையாக விளங்கினார். இரண்டாம் தம்பி சூரப்பவாணன் என்பவர். இவர் வீரம் மிக்கவர். பகைவர் மேல் கொண்ட வெஞ்சினங் காரணமாகச் செங்கண்ணனாக விளங்கினார்'' 'என் துயரம் தீர்த்தான்' என்றும் புலவர்கள் இவரைப் பாராட்டினார்கள். மூன்றாம் தம்பி தாகந்தீர்த்தான் என்பவர். இவர் வறுமையில் வாடும் ஏழை எளிய மக்களின் தேவையறிந்து பொருள்தந்து 'நிலவுலகத் தேவேந்திரன்' என்று பாராட்ட விளங்கினார். இவ்வுத்தமத் தம்பியரின் 'அரும் பெரும் கீர்த்தித் தமையர் என உதித்த தக்கோன், (க.173) என்று அந்தாலன் புகழப் பெறுகின்றார்.

அந்தாலனின் முதல் மகன் தீராவினை தீர்த்த செல்வன். இவர், 'அமலன் நடம் தயவுள்ளம் நயந்து தொழும் அன்பன்! மடந்தையர்; இன்ப மதனன்; மதுர அமுதவசணன், அநபாயன், முது தமிழை ஆராயும் அகத்தியன் என்னும் செழியன், இரண்டாம் மகன் தாகந்தீர்த்த செழியன். இவர் தம் நாட்டின் ஆட்சியினை மேற் கொண்டவர். நீலமலர்; பூந்தாமன் கோவை, பிள்ளைத் தமிழ் இலக்கியம் பாடப் பெற்றவர். மூன்றாம் மகன் திருவேங்கடவன். இவர் தம் நாட்டினைப் பூத்த கருணை பொழியும் விழிகொண்டு காத்து வந்தார். நான்காம் மகன் இருள்நீக்கின பெருமாள். இவர் செழியர் மரபில் ஒப்பற்ற திலகமனையவர். இவ்விளவரசர் நால்வரும் தாம் செல்லும் போர்க்களங்களில் அர்ச்சுணனுக்கு ஒப்பாக வீரம் விளைத்தனர். இவர் மைத்துனர் உலகுடையான் ஆவார். இவர்கள் சொக்கநாத நாயக்கர் ஆட்சியில் நடைபெற்ற போர்களில் கலந்து கொண்டவர்கள் ஆவார்கள். இவ்வாறு குடும்ப நலம் விளங்கக் கோமான் அமுதகுணன் ஆட்சி விளங்கி வந்தது.

இம்மஞ்சரி இலக்கியம் தலைமகனின் தசாங்கச் செய்திகளை விளக்குகின்றது. அந்தாலன் தசாங்கம் இவர் ஆட்சியின் சிறப்பியல்புகளை உண்மையில்புகளுடன் விளக்குகின்றது. இவர் நாட்டின் நான்கு திசைகளையும் முறையே கொல்விமலை, பாரிமலை, சேர்வராயன்மலை, பச்சைமலை என்பன அமைந்துள்ளன. 'காடுதொறும் வாணரம்பாய் பச்சைமலையினான்;' இம்மகதைநாட்டினை நிவா ஆறும், மணிமுத்தாறும் வளம் செய்கின்றன. செந்நெல் வயல்கள் செழிப்புடன் திகழ்கின்றன. மேகம் திகழும் சித்திர மாடங்கள் நிறைந்த கல்லைக் குறிச்சி (கள்ளக்குறிச்சி) இந்நாட்டின் தலைமையிடமாகத் திகழ்ந்தது. அதனால் மகதை மண்டலம் கல்லைக்குறிச்சி நாடு எனவும் வழங்கிவந்ததாம்.

அந்தாலனுக்குப் பின்பு தாகந்தீர்த்த செழியனும் பின்பு கங்காதரச் செழியனும் பிறரும் இலக்கியம் பெற்று, நாயக்க மன்னர்களுக்கு உறுதுணையாக ஆட்சி புரிந்து வாழ்ந்து வந்தார்கள்.

படைப்பிலக்கியம் - ஒரு பார்வை

மு. சண்முகம்
மாநிலக் கல்லூரி
சென்னை - 600 005

முன்னுரை: காலந்தோறும் இலக்கியங்கள் சமூகத்தின் பிரதிபலிப்பாக வளர்ந்தும் தேய்ந்தும் வந்திருப்பதை நீண்ட தமிழிலக்கிய வரலாற்றின் வழி நெடுகிலும் காண முடிகிறது. 'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்ற மொழியில் எழுத்து என்பது இலக்கியத்தைக் குறித்ததாகக் கொள்ள முடிகிறது. எழுதப்படுகிற எல்லாமே இலக்கியம் என்கிற கருத்துப் பிழை அன்றும் இருந்தது; இன்றும் இருக்கிறது. முதலாளித்துவ சமூக அமைப்பு ஆதிக்கம் செலுத்திய கால கட்டங்களிலெல்லாம் இலக்கியமும் வாணிகப் பொருளாக்கப் பட்டிருக்கிறது; மலிவாக்கப்பட்டிருக்கிறது; தனி உடைமை யாக்கப்பட்டிருக்கிறது என்பதும் வரலாற்று உண்மையே. எனவேதான் 'மனித விழுமியங்களைக் காப்பாற்றக் குரல் கொடுக்கும் மனித உன்னதங்களைக் காப்பாற்ற குரல் கொடுக்கும் படைப்புக்களையே இலக்கியங்கள்' என்கிற வரையறையை நாம் வகுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இதைத்தான் படைப்பு இலக்கிய வழி காட்டியாகிய புதுமைப் பித்தன் 'எழுத்தாளன் என்பவன் இரண்டாவது பிரம்மா' என்று வேறு விதமாகச் சொல்லியிருக்கிறார். "மனிதனின் பிரச்சனை களை மிக அக்கறையோடும் பரிவோடும் - அணுகும் கலை நிறைந்த படைப்புகள் எல்லாமே இலக்கியங்கள்" என்கிறார் தளையசிங்கம். இதைத்தான் நாமும் 'ஆக்க இலக்கியம்' அல்லது 'படைப்பு இலக்கியம்' என்று குறிப்பிடுகிறோம்.

இலக்கிய வகைகள்: ஒவ்வொரு கால கட்டத்திலும் இலக்கியப் படைப்பு படைப்பாளன் மூலம் தன்காலச் சமூகத் தேவைக்கு ஏற்பப் புதிய வார்ப்புகளில் தன்னைப் படைத்துக்

கொள்கிறது. அதன் விளைவாகத்தான் பல்வேறு இலக்கிய வடிவங்கள் தோன்றி வளர்ந்திருக்கின்றன.

ஆக்க இலக்கியம் – சிறுகதை, நாவல், கவிதை போன்ற பல்வேறு துறைகளின் மூலம் மக்களிடம் உறவு கொண்டுள்ளது. இவற்றை மக்களிடம் கொண்டு செல்லும் சாதனங்களாகப் பத்திரிகைகள் உள்ளன. நாடகம் – மேடை நாடகம், வீதி நாடகம் என்ற இரு அமைப்புக்களில் அரங்கேற்றப்படுகின்றன. திரை இசைப் பாடல்களும் இலக்கியத் தரத்தை எட்டிப் பிடிக்க வல்லனவாக உள்ளன. துணுக்குகளும் இலக்கிய வரிசையில் இடம் பெற்று வருகின்றன.

இன்றைக்கு உள்ள படைப்பிலக்கியங்களின் இடத்தைத் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டால்தான் அவற்றின் வளர்ச்சிக்கான வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றைச் செழுமையாக்கவும் மேலும் வளர்க்கவும் இயலும்.

படைப்பிலக்கியங்களின் இன்றைய நிலை: சிறுகதை இலக்கியம் இன்றைய சமூக வாழ்க்கையின் வேகம், சிக்கல் ஆகியவற்றுக்கு ஈடு கொடுக்கும் வகையில் ஒரு சில எழுத்தாளர்களால் வளர்க்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. பழைய சமூக மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்து பழையனவற்றைக் கழித்தும், இன்றைய சமூகப் பயன்பாடு கருதிப் புதியன புகுத்தியும் படைத்தவர்களில் புதுமைப்பித்தன் ஜெயகாந்தன் போன்றவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். என்றாலும் பெரும்பாலான எழுத்தாளர்கள் பொழுது போக்கும் இலக்கியமாக மட்டுமே அதை ஆக்கியிருக்கிறார்களே தவிரப் போராட்டக் கருவியாகக் கொள்ளவில்லை என்கிற குறையையும் இத்துறை கொண்டிருக்கிறது.

நாவல் இலக்கியம் – சரித்திரம் - சமூகம் என்று இரு கிளைகளாகப் பிரிந்து பெருகி வருகிறது. விடுதலைப் போராட்டம், சமூகத்திலுள்ள வர்க்கப் போராட்டம் போன்ற பெரும் சமூகப் பிரச்சனைகளை அணுகும் நாவல்கள் தமிழில் மிக மிகக்குறைவே. தனி மனித ஒழுக்கத்தை மட்டுமே வற்புறுத்துவதும், திருக்குறளுக்கு மொழிப் பெயர்ப்புக் கதைகள் எழுதுவதும், துப்பறியும் கதைகளையும் பாலுணர்வுக் கதைகளையும் படைப்பதும் நாவல் இலக்கியத் துறையில் பல்கியுள்ளன. பெரும்பாலான சரித்திரக் கதைகள் 'கல்கி' கதைகளின் நகல்களாகவே உள்ளன. மிக

அண்மைக் காலக் கதைகளில் 'சுஜாதா', 'பாலகுமாரன்' ஆகியோரின் தாக்கத்திற்குப் பலர் ஆளாகியுள்ளனர்.

நாவலின் அளவு குறைந்து குறுநாவல் என்ற தன்மையில் கொலை, கற்பழிப்பு இவற்றை மட்டுமே கருவாகக் கொண்டு நூல்கள் வளர்ந்து வருகின்றன.

கவிதை நாடகம் என்று பார்த்தால் பேராசிரியர் சுந்தரம் பிள்ளைப் போலவே பலர் எழுதுகின்றனர். பழைய கதைகளையே நாடகமாக்கும் போக்கும் இத்துறையில் தொடர்கிறது.

மேடை நாடகம் என்றாலே சென்னையிலுள்ள சபாக்கள் நடத்தும் நாடகங்கள்தான் என்று சொல்லி விடலாம். துணுக்குத் தோரணங்களையே நாடகம் என்ற பெயரில் மேடையில் கட்டி வைக்கின்றனர். சிரிப்புக்காக மட்டுமேயன்றிச் சிந்தனைக்கு அங்கே இடமிருப்பதில்லை.

கவிதைத் துறையிலும் பாரதி பாரதிதாசனுக்குப் பிறகு ஒரு தேக்கம் உருவாகியுள்ளது. பாரதிதாசனைப் போலவே உருவ உள்ளடக்கங்களுடன் எழுதும் ஒரு பாட்டுப் பரம்பரை உருவாகியுள்ளது. புதுக்கவிதை வளர்ச்சியிலும் இத்தகைய தேக்கநிலை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சொல் வித்தைகளே புதுக்கவிதை என்பதும், புரட்சிப்பற்றிப் பாடுவதும் விதியாக உள்ளது. உள்ளடக்கம் மட்டுமே போதும் என்ற போக்கு ஒரு சிலரிடமும் உருவம் மட்டுமே போதும் என்ற போக்கு ஒரு சிலரிடமும் காணப்படுகின்றன. இரண்டையும் இணைத்துப் பார்த்து எழுதும் கூட்டம் குறைவு. மக்களிடம் பெரும்பாலும் வரவேற்புப் பெற்றாலும் தமிழ்ப் பண்டிதர்களிடம் புதுக்கவிதை வாழ்த்துப் பெறவில்லை. அதற்குக் காரணம் அவர்களால் புதுக்கவிதை எழுத முடியாது என்பதே.

இலக்கியத் தகுதி பெற்ற சில பாடல்கள் தவிரப் பெரும் பாலான இன்றைய திரை இசைப் பாடல்கள் இசைக்கே முதலிடம் கொடுக்கின்றன. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் காலப் பாடல்கள் நூற்றுக்கு நூறு கருத்துப் பாடல்களாக இருந்தன. கண்ணதாசன் காலத்தில் கருத்து 50 விழுக்காடும் இசை 50 விழுக்காடும் பாடல்களில் இருந்தன. இன்று இசையே முதலிடம் வகிக்கிறது.

திரை இசைப் பாடல்கள் பெரும்பாலான மக்களை இசைத் துணையோடு விரைவில் போய்ச் சேர்வதால் அப்பாடல்களை

இலக்கியச் செழுமையோடு இயற்றினால் பெரிதும் பயன் விளையும். திரைப் பாடல்கள் எழுதுவதற்கு இன்றைய கவிஞர்களிடையே ஒரு போட்டி உணர்வு உருவாவதற்கும் இது காரணமாக இருக்கலாம். படைப்பிலக்கியம் என்ற வகையில் திரை இசைப் பாடல்களைத் தயக்கமின்றிச்சேர்த்துக் கொள்ளலாம்.

மேற்சொன்ன படைப்பிலக்கியங்களைச் சமூக வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் உருவாக்கும் படைப்பாளர்களே இன்றைய சமூகத் தேவையை நிறைவு செய்பவர்கள் ஆகிறார்கள்; உண்மையான எழுத்தாளர்கள் என்றும், தங்கள் படைப்பிற்கு நியாயம் தேடுபவர்கள் என்னும் தகுதியையும் பெறுகிறார்கள்.

பெரும்பாலான எழுத்தாளர்கள் இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவு முறைகளைத் தெரிந்து கொள்ளாமலேயே தங்களைப் படைப்பாளர்களாக எண்ணிக் கொண்டு எழுதி வருகிறார்கள். சமூக உணர்வற்ற இவர்களை எழுத்தாளர்களாக எண்ணாமல் விலக்கி விடலாம். ஆயின் அவர்களது எழுத்தாற்றல் நம்மை அப்படிச் செய்ய முடியாமல் தடுக்கிறது. அவர்களுக்குச் சமூக உணர்வு இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டுவது நமக்கு இன்றைய கடமையாகிறது.

படைப்பிலக்கிய வளர்ச்சிக்கான வழிகள்: படைப்பிலக்கிய வளர்ச்சியை இரு வேறு செயல் திட்டங்களின் மூலம் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய தேவை நமக்குள்ளது. படைப்பிலக்கிய வளர்ச்சிக்கான பணிகளையும் பரிந்துரைகளையும் முன் வைத்தல் என்பது ஒன்று; சமுகத்திற்குத் தீமை பயக்கும் இலக்கியங்களை எதிர்த்தல் என்பது மற்றொன்று.

இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடுடைய தனி மனிதன் மட்டுமே செய்யக்கூடிய பணிகள் அல்ல இவை.

அரசு, பல்கலைக் கழகங்கள், தமிழோடு தொடர்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றின் கூட்டு முயற்சியும், மக்கள் பங்கேற்பும் படைப்பிலக்கிய வளர்ச்சிக்கு வழிகோலும் என்பதை உணர்ந்தாக வேண்டும்.

எழுத்தாளர் கடமை: சமூகத் தேவைக்கும் பயன்பாட்டிற்கும் ஏற்ற வகையில் எழுத வேண்டுவது படைப்பாளர்களின் கடமை. மக்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக – நல்ல விலை போகிறது என்பதற்காகத் தரமற்றவைகளைத் தருதல் கூடாது.

பிற மொழி இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்து அறிமுகப்படுத்தும் பணியை மேற்கொள்ளுதல் அவசியம். உலக இலக்கியப்போக்கை அறிந்து கொள்ள இதன் மூலம் வாய்ப்பு ஏற்படும். மலையாள மொழியில் இம் முயற்சி மேற்கொள்ளப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழில் நாடக நூல் வளர்ச்சி மிக மிகக் குறைவு. படிக்கக் கூடிய நாடகம் என்பதே இல்லை. வங்காளம் மராத்தி மொழி களில் படிக்கும் நாடக நூல் வளர்ச்சி காணப்படுகிறது. தமிழில் இத்துறை முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இக்காலத்திற்கான இலக்கிய வரலாறு என்பது மிக மிக இன்றியமையாதது. அதிலும் 'கருத்து வழி இலக்கிய வரலாறு' உடனடித் தேவையாக உள்ளது.

அரசு செய்ய வேண்டுவன: நல்ல ஆக்க இலக்கியங்களைத் தேடிப் பிடித்து வெளியிட அரசாங்கமே முன் வருதல் வேண்டும். பொருளாதார நெருக்கடியால் சில நல்ல நூல்களை எழுத்தாளர்கள், தம்மால் வெளியிட முடியாமல் இடர்ப்படு கிறார்கள். வெறும் கையெழுத்துப் பிரதிகளாகவே அவை இருந்து கண் விழிக்காமல் போகின்றன.

ஆக்க இலக்கியங்களுக்குப் பரிசு வழங்கிப் பாராட்டுவதை அந்தந்தத் துறையில் தேர்ந்த நிபுணர் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். அரசியல் தலையீடு என்பது இதில் அறவே கூடாது.

முடிவுரை: இதுவரை எண்ணிப் பார்த்த வகையில் ஆக்க இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாத் தேவையானவை எனச் சிலவற்றைத் தொகுத்துச் சொல்லலாம்.

1. கருத்து வழி இலக்கிய வரலாறு காணல்.
2. தேவையான பாடுபொருள் பற்றி வரையறை செய்தல்.
3. இலக்கியப் பயிலரங்கங்கள் ஏற்படுத்திப் பயிற்சி தருதல்.
4. இலக்கியங்களைப் பாதுகாக்கும் அருங்காட்சியகம் அமைத்தல்.
5. தமிழிலிருந்து பிற மொழிக்கும் பிறமொழியிலிருந்து தமிழுக்கும் இலக்கியங்களை மொழி பெயர்ப்புச் செய்தல்.
6. நேர்மையான திறனாய்வுக்கு வழி காட்டல்.
7. தரக் குறைவான இலக்கியங்களை எதிர்த்தல்.

பரமசிவம் சிறுகதைகளில் மக்கள் திரள் - ஒரு கருத்து நிலை ஆய்வு

முல்லை. வீ. சண்முகம்
அறிஞர் அண்ணா அரசு ஆடவர் கலைக்கல்லூரி
நாமக்கல் – 637 002

முன்னுரை

'தமிழில் ஒரு பக்கக் கதைகள்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து, சென்னைப்பல்கலைக் கழகத்தில் 1990-ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றவர், பேராசிரியர். முனைவர். ப. பரமசிவம் அவர்கள். இவர் 1970 முதல், தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியப் பணியில் இருந்து வருகிறார். குமுதம், குங்குமம், ராணி முதலிய வார இதழ்களில் "பசி" என்னும் புனைபெயரில் 22 ஆண்டுகளுக்கும் மேலாக இவர் சிறுகதைகள் எழுதி வருகின்றார். 'பசியோ பசி' என்ற இவரின் சிறுகதைத் தொகுப்பு நூல் 1982-இல் வெளிவந்துள்ளது. ராணி வார இதழில் மட்டும் இதுவரை இவர் எழுதிய 24 சிறுகதைகள் வெளி வந்துள்ளன. ரூபாய் 5000/- ரொக்கப் பரிசு பெற்றதும், தனி நிலைப் பரிசு பெற்றதுமான சிறுகதைகளும் இவற்றுள் அடங்கும். 'மக்கள் திரள்' பெரிதும் இடம் பெற்றுள்ள கீழ்க்காணும் நான்கு கதைகள் மட்டுமே இவ்ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன.

1. *அவன் அழுது கொண்டிருந்தான்* (15—10—95) - *ராணி*
2. *அத்திப்பூ* (3—1—94) - *ராணி*
3. *உள்ளூர் மாடுகள்* (25—9—94) - *ராணி*
4. வேறு *வழி*? (6—10—96) - *ராணி*

மக்கள் திரள் - ஒரு வரையறை: 'மக்கள் திரள்' என்ற சொல்லுக்கு, ஒரு வரையறை அமைத்துக்கொள்வது அவசியம். 'Pubiic' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொதுமக்கள் என்று பொருள் காணப்பட்டுள்ளது. பொதுமக்கள், பாமரமக்கள்,

பொது ஜனம், வெகுசனம், வெகுமக்கள், குடிமக்கள், மக்கள், ஊரவர், மக்கள் திரள் என்பன, ஒரு பொருள் குறித்த பல சொற்கள் ஆகும். இம்மக்கள் திரள், இரண்டு வகைப்படும்.

1. அமைப்பு ரீதியற்ற மக்கள் திரள்.

2. அமைப்பு ரீதி பெற்ற மக்கள் திரள்.

அமைப்பு ரீதியற்ற மக்கள் திரள், எந்த அமைப்பிலோ அல்லது நிறுவனத்திலோ பங்குபற்றாமல் - அடையாளம் அற்றவர்களாய் இருப்பது. அமைப்பு ரீதி பெற்ற மக்கள் திரள், எந்தவொரு அமைப்பிலோ அல்லது நிறுவனத்திலோ பங்கு பெற்று, அடையாளம் பெற்று இருப்பது. இவ்விருவகை மக்கள் திரளையும் பரமசிவத்தின் சிறுகதைகளில் காண முடிகின்றது.

மக்கள் திரளும் பாரதியாரும்: தமது சமகாலத்திய அமைப்பு ரீதியற்ற மக்கள் திரள்மீது, பாரதியார் கடுங்கோபமும் அதிருப்தியும் கொண்டிருந்தார் என்று தெரிகிறது.

''பாண்டவர்தம் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர
நீண்ட கருங்குழலை நீசன் கரம்பற்றி
முன்னிழுத்துச் சென்றான் வழிநெடுக மொய்த்தவராய்
என்ன கொடுமையிது என்று பார்த்திருந்தார்
ஊரவர்தம் கீழ்மை உரைக்கும் திறமாமோ?
வீரமிலா நாய்கள் விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்திற் போக்கியே
பொன்னையவள் அந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?
(பாரதியார் - பாஞ்சாலி சபதம்)

இந்திய நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர்களை - ஆங்கிலேயச் சிப்பாய்கள் - வீதிமுனைகளில் நிர்வாணமாய் நிறுத்தி வைத்துச் சவுக்கால் அடித்த போதும்; பூட்சுக் கால்களால் முகத்தில் எட்டி உதைத்துச் சித்திரவதைகள் செய்த போதும் - அக்கொடுமைகளுக்கு எதிராக - ஒரு வார்த்தையும் பேசாமல், ஆனால் - சுற்றி நின்று வேடிக்கை மட்டும் பார்த்திருந்த - அம்மக்கள் திரள்மீது பாரதியார் மிகவும் வெறுப்புக் கொண்டிருந்தார். நடக்கக் கூடாத ஒரு சமூக அநீதி தங்களின் கண்முன்பாகவே நடந்தும் கூட அதைத்தட்டிக் கேட்கத் தெம்பும், திராணியும் அற்றுப் போய் - நிற்போரைக் கண்டே, ''வீரமிலா

நாய்கள்'' என்று நெருப்பை உமிழ்கிறார்! பாரதியாருக்கு ஏற் பட்ட அந்த ஆவேசக் கோபம்... அப்படியே சிந்தாமல் - சிதை யாமல் - கீழ்க்காணும் சிறுகதைகளில் வெளிப்பட்டுள்ளதை தரிசிக்க முடிகிறது.

''அவன் அழுதுகொண்டிருந்தான்'': இரவு நேரத்தில் தன் தங்கை மல்லியோடு பாலத்தில் நடந்து போய்க் கொண்டிருந்த வேலுசாமியை அடித்துத் தள்ளிவிட்டு, நாலைந்து ரௌடிகள் மல்லியைக் கடத்திக்கொண்டு ஆற்று மணலில் ஓடிமறைந்தார்கள். அங்கு வருவோர், போவோர், கடைக்காரர்கள், காரில் செல்வோர் என எல்லோரிடமும் உதவி கேட்டு மன்றாடுகிறான் வேலுசாமி.

''ஐயா, என் மல்லியைக் காலிப் பசங்க, கடத்திட்டுப் போறாங்க. உதவிக்கு வாங்கய்யா. தப்புத்தண்டா நடக்கறதுக் குள்ளே அவளைக் காப்பாத்திக் கொடுங்கசாமி... ஐயா .. மகராசரே! ..''

''ஆபத்துக்கு நாலு பேர் எப்படியும் உதவுவார்கள் என்ற நினைப்பில் கூப்பாடு போட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதான் வேலுசாமி. வாகனங்களில் செல்வோரைக் கும்பிட்டு வழி மறித்தான். பாத சாரிகளின் பாதம் தொட்டுக் கெஞ்சினான்.''

''அழுதான், தொழுதான், ஒரு பிச்சைக்காரன் போல மன்றாடினான்.''

''உதவுகிறேன் என்று ஒருவர் கூட முன்வரவில்லை.'' ஒற்றை ஆளாகவே, வேலுசாமி ஆற்று மணலில் ஓடி - ஓடி - மல்லியைப் பல திசைகளிலும் அழைத்துக் கூவிக் கல்தடுக்கி மணலில் குப்புற வீழ்ந்து விடுகிறான். மறுநாள் காலையில் - ஆற்றுப்பாலத்துக்கு அடியில் - மணலில் - காலிகளின் பாலியல் வன்முறைக்குப் பலி யாகி - மல்லி - பிணமாய்க் கிடந்தாள். இன்னொரு புறத்தில் வேலுசாமி கிடந்தான். இதோடு கதை முடியாமல் - தொடர் கிறது .. பிணமானோரை வேடிக்கை பார்க்கக் கூடிய அம்மக்கள் திரள் ஆளாளுக்கு 'நீதி'யைப் பேசுகிறார்கள்.

''காலிகளின் அட்டகாசம் அதிகமாயிடுச்சி.''

''போலீசும் இவனுகளுக்கு உடந்தையா இருக்கு.''

''போலீசு நிலையத்திலேயே கற்பழிக்கிறாங்க.''

''அரசியல் வாதிகளும் இதற்கு உடந்தை''

"அரசாங்கத்தின் மெத்தனப் போக்கு முக்கியமான காரணம்".

"இந்த நிலை மாறணும்."

"ரஜினி வந்தால்தான் மாறும்."

"செந்தில் வந்தால் மாறாதா?"

"தமிழன் சரியான சினிமாப் பைத்தியம் பிடித்து அலைகிறான்."

போலீசு வந்தது. துரத்தியது. கூட்டம் சிதறியது - போக்குக் காட்டி வேடிக்கை பார்த்தது.

— என்று, கதை முடிகிறது.

இம்மக்கள் திரள், உதவிக்கரம் நீட்டாமலே இருப்பதால் தான், மேற்காணும் தீமைகள் எல்லாம் வளர்ந்து கொண்டிருப்ப தாய்க் கதை முடிவு உணர்த்துகிறது.

ஏறத்தாழ இதே கருவையும், கதைப்பின்னலையும் கொண்டே "அத்திப் பூ" படைக்கப்பட்டுள்ளது.

அமைப்பு ரீதியற்ற மக்கள் திரளின் மனோநிலை

1. எது நடந்தாலும், வெறுமனே வேடிக்கை மட்டுமே-இம் மக்கள் திரள் - பார்க்கும்.
2. எல்லாக் காலத்திலும் - மனித நேயத்தை மறுதலித்தே இம்மக்கள் திரள் செயல்படும்.
3. உள்ளொடுங்கிப் போன ஒரு மனோ நிலையே, இம் மக்கள் திரளை வழி நடத்திக் கொண்டிருக்கிறது.
4. பொது எதிரியை அடையாளம் காண்பதிலும், அவர் களை எதிர்த்துப் போராடுவதிலும்— சக மக்களோடு ஒன்றுபடுவதிலும், இம்மக்கள் திரளுக்கு உடன்பாடு இல்லை.

— இக்கருத்து நிலைகளை இச்சிறுகதைகள் ((1) அவன் அழுது கொண்டிருந்தான் (2) அத்திப் பூ) - மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. இனி, அமைப்பு ரீதியான மக்களின் செயல்பாட்டை நோக்கலாம்.

"வேறுவழி?" லாரி டிரைவர் தர்மராசு, மும்பையிலிருந்து அப்போதுதான் சிவபுரிக்கு வந்திருந்தான். ஆறு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள அத்திப்பட்டுக் கிராமத்தில் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும், தன் தாயைக் காணப்போக முடியாமல் திகைத்து நின்று விட்டான். ஏன்? நாற்சந்தியில் அர்த்தால்.

"இரண்டு பெரிய கூட்டமாகப் பிரிந்து நாற்சந்தியை அடைத்துக் கொண்டிருந்தார்கள், சிவபுரிவாசிகள். என்ன கோரிக்கை? .. நாட்டில் பிரச்சினைகளுக்கா பஞ்சம்?...

நாற்சந்திப்பில் யார் சிலை வைப்பது என்பதில் ஊரே இரண்டாகப் பிளவுபட்டு நின்றது!

கம்பு, அரிவாள், கட்டை, கல்... எல்லாம் தயார். எந்த நேரத்திலும் மோதல் வெடிக்கலாம்."

லாரியை விட்டு இறங்கிய தர்மராசு, எவ்வளவோ கெஞ்சிப் பார்க்கிறான் தன் தம்பி வேலுவிடம் சொல்கிறான்.

"எவ்வளவோ கெஞ்சியும் வழிவிட மறுக்கிறாங்களே. மீறிப் போனால் அடிச்சிக் கொன்னுடுவோன்னு மிரட்டறாங்களே. அயோக்கியர்கள்... காட்டுமிரண்டிகள்."

"பெரிய போலீசுப்படை வந்து தடியாலே அடிச்சி, துப்பாக்கியால சுடணும். இல்லேண்ணா இவனுக்குள்ள அடிச்சிகிட்டுப் பத்துப் பிணமாவது விழணும். அதுவரைக்கும் கலைஞ்சி போகமாட்டானுக."

இது 'வேறுவழி' எனும் சிறுகதையில் காணும் அமைப்பு ரீதியான மக்கள் திரளின் மனோபாவம் ஆகும்.

முடிவுரை

ஒரு புறத்தில் சமூக உணர்வின் விழிப்புக்காக இயக்கங்களும் கலை இலக்கியங்களும் முனைப்போடு நிற்கின்றன. மறுபுத்தில், சமூகப் பாதுகாப்புக்கும், மனித நேயத்துக்கும் சவால் விடும் எதார்த்த நிலையும் காணப்படுகிறது. மக்கள் திரளின் இரு வகைப் போக்குகளையும், கருத்து நிலைகளையும் பரமசிவத்தின் சிறுகதைகள் வெகு சிறப்பாகவே வெளிப்படுத்தியுள்ளன.

இன்றைய மக்கள் திரளை விளங்கிக் கொள்வதற்கான - பரமசிவத்தின் சிறுகதைகள் கவனமாகப் பரிசீலிக்கத் தகுந்தவை!

பெண் என்னும் தெய்வம்

தி. சி. சத்தியம்
சி. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர்

நேபாளத்தின் நேற்றைய 'குமாரிகள்' வரிசையில் ஒருத்தி, நேபாள அரண்மனைக் கலாச்சாரமான குமாரி கலாச்சாரத்தால், தெய்வமாக வணங்கப்படுகிறாள். இன்றும் நடைமுறையில் உள்ள இந்த கலாச்சாரத்தில், அழகிய மானுடப் பெண், அஞ்சும் மானிடர்க்கு அபயம் தரும் ஆன்மீக அமைதி தரும் அவதார மாக்கப்படுகின்றாள். அவளின் கிறீச்சொலி நெருங்கும் பேரழிவை உணர்த்துவதாகவும், அவ்ளின் கிண்கிணிச் சிரிப்பொலி அமைதி யையும், வளத்தையும் எதிரொலிப்பதாகவும் அவளை வணங்கும் பக்தர்கள் நம்புகின்றார்கள்.

இந்த தெய்வீகப் பதவி நிரந்தரமானது அல்ல. அவள் சிறுமிப் பருவத்தைக் கடந்து கன்னிப் பருவத்திற்குள் காலடி எடுத்து வைக்கையில், தேவதை தலேஜுவின் ஆவி அவளை விட்டு நீங்கு வதாக நம்பப்படுவதால், பிறகு மனித நிலைக்கு இறக்கப்பட்டு விடுகின்றாள். மூன்று வயதிலிருந்து ஏறக்குறைய எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகள் தெய்வீக மாயை உலகில் மிதந்த அவள், பிறகு சராசரி மனிதர்களோடு சமூக நீரோட்டத்தோடு இணைய முடியாமல் திணறுகிறாள்; பின் தங்கி விடுகிறாள். 'பதினாறு வயதாகிறது. ஆனால் எட்டாங் கிளாஸ்தான் படிக்கிறேன். எல்லோரும் கேலி செய்கிறார்கள்! என்று வேதனைப்படும்' நேபாள நேற்றைய குமாரி ராஸ்மிலா, தன் தாயிடம், என்னை ஏன் குமாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள்?, என்று புலம்புகின்றாள்.

குமாரிகளின் வாழ்க்கைப் பாதை 'முட்கள் நிறைந்தது என்கின்றார்மருந்துக்கடை நடத்தும் நானிமய்யா. இப்போதாவது குமாரிகளுக்கு அடிப்படைக்கல்வி அளிக்கப்படுகின்றது. முன்பு

அதுவும் இல்லை, 'தெய்வத்துக்குப் பாடம் சொன்னால் கண் குருடாகி விடும்' என்ற மூட நம்பிக்கையால், குமாரிகள் கலாச் சாரத்தில் திருமணம் பற்றிய மூட நம்பிக்கையோ மிகவும் கொடியது. 'இவர்களைத் திருமணம் செய்து கொள்பவர்கள் செத்துப்போய்விடுவார்கள்' என்ற நம்பிக்கை நிலவுவதால் இக்குமாரிகள் ஒன்று விபசாரிகளாக மாறுகிறார்கள்; அல்லது கன்னியாகவே காலம் கழித்து விடுகிறார்கள். திருமணமாகாத முன்னாள் குமாரிகளுக்கு அரசு இப்போது நேபாள ரூபாய் 1000 (இந்திய மதிப்பு ரூ. 640). மாதந்தோறும் வழங்குகிறதாம்.

குமாரிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு வரையறையும், தகுதிகளும் உள்ளன. புத்த மதத்தின் சாகியா பிரிவினரான பொற்கொல்லர்கள் குடும்பத்திலிருந்தே குமாரிகள் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர். அழகிப்போட்டித் தேர்வுத் தகுதிகள் போல்... சங்குக் கழுத்து, சலசலக்கும் நீரோடை போன்ற குரல், சிங்கத்தின் கன்னம், பொன் வண்ண மேனி, வாத்தைப் போன்ற மென்மையான உடல் என ஏறக்குறைய 32 தகுதிகளின் அடிப் படையில் குமாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுமி, தெய்வீகக் குமாரியா என்பதைப் பரிசோதிக்க, பயங்கரமான சடங்கு ஒன்றிற்கு உட்படுத்தப் படுகின்றாள். பலியிடப்பட்ட 108 எருமைகள் மற்றும் ஆடுகளுடன் இருண்ட அறையில் அவள் அமர்த்தப்படுவாள். தரையெங்கும் சிதறிக்கிடக்கும் ரத்தத் துளிகள்; பலியிடப்பட்ட விலங்குகளின் தலைதோறும் தீப ஒளி: இவற்றுக்கெல்லாம் அஞ்சாமல் அந்த அறையை விட்டு ஓடாமல் இருப்பவளே உண்மையான குமாரி என்று உறுதி செய்யப்படுகிறது. இந்தச் சடங்கில் பலியிடப் பட்டவை ஆடு, மாடுகள் மட்டுந்தானா? சின்னஞ்சிறுமியின் மென்மையான குழந்தை உள்ளமும் அல்லவா?

இந்த விஷத் தேர்வில் தேர்ச்சி பெற்று விட்டால் அரண்மனையின் சொர்க்கலோகத்தில் இவள் தெய்வம்தான், பக்தர்களின் பூஜையும், பரிசு மழைகளும், விரும்பியதெல்லாம் கிடைக்கும் மகிழ்ச்சியும்.. ஆகா! இந்த தெய்வீகப் பொலிவும் பொங்கும் மகிழ்ச்சியும் சில ஆண்டுகளுக்குத்தான். பிறகோ... சரிவு.... பயங்கரச்சரிவு.

மன்னர் கலாச்சாரம் பெண்களை எப்படியெல்லாம் சீரழித் திருக்கிறது என்பதற்கு இந்தக் குமாரி கலாச்சாரம், ஒரு

நிகழ்காலச் சான்று. இதன் வேர் மிகப் பழமையானது. புராதன சமூகத்தின் உளவியல் பாதிப்புகளால் உருவான சமயச் சடங்கு இது. இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவின் வடக்கெல்லை நாட்டில் நிலவும் இத்தகைய தெய்வீகச் சடங்கு, இந்தியாவின் தெற்கெல்லையிலுள்ள தமிழகத்திலும் நிலவியிருந்திருக்கிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்குரியதெனக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில், இதனையொத்த ஒரு சமயச் சடங்கு விவரிக்கப்படுகின்றது. வேட்டுவ வரியில் இச்சமயச் சடங்கு இடம் பெற்றுள்ளது.

வேடுவர்கள் தம் வறண்ட வாழ்விலிருந்து மீண்டு வளம் காண, கொற்றவையை வழிபடும் சமயச் சடங்கினை இளங்கோ அடிகள் விரிவாக உரைக்கிறார். 'வேடுவர்கள் தம் பழங்குடிக் குமரி ஒருத்தியை அழைத்து, அவளுக்கு கொற்றவை வேடம் புனைகின்றனர். அவள் கூந்தலைப் பாம்புக் குட்டிகள் போன்ற பொன் கயிற்றால் கட்டுகின்றனர்; காட்டுப் பன்றியின் வெண்மையான கொம்பினைப் பிறைநிலா போல் அவள் உச்சியில் சாத்துகின்றனர்; மறப்புலியின் வெண்பற்களைக் கோத்து, புலிப்பல் தாலியாக அவள் கழுத்தில் சூட்டுகின்றனர்; வயிர வில்லினை அவள் கையிலே கொடுத்து, கலைமானின் முதுகிலே அவளை அமரச் செய்து, பாவை, கிளி, கானங்கோழி, நீலநிற மயில், பந்து, கழங்கு ஆகியவற்றைத் தந்து அவளைக் கொற்றவையாகவே புனைகின்றனர். பலவகைப் பறைகளும், உளது சின்னமும், கொம்பும் ஒலிக்க, பலிபொருட்களுடன் அவளை அழைத்து வந்து, கொற்றவை பலிபீடத்தின் முன் நிறுத்தி, கொற்றவைத் தெய்வமாகவே அவளைப் போற்றி வழிபடுகின்றனர்; (வேட்டுவ வரி: 20 - 44),

> "கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றவிப்
> பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ"
> (வேட்டுவ வரி - வள்ளிக்கூத்து - 5)

என்று வியந்து போற்றுகின்றனர்.

நேபாள குமாரிக்கலாச்சாரத்தில் சிறுமிக்குப் புனையப்படும் கோலமும் கொற்றவையின் கோலத்தை ஒத்திருக்கிறது. தவிர. வேடுவர்கள் குலத்தில் கொற்றவை வேடம் புனையப்படுவதற் குரிய சிறுமியை, 'தொல்குடிக் குமரி' என்று இளங்கோவடிகள்

சுட்டுவதும் நேபாள 'குமரியோடு ஒப்பிடத் தூண்டுகின்றது. கொற்றவை வேடம் பூண்ட சிறுமியின் நிலை, சமயச் சடங்கிற்குப் பின் எப்படிப்பட்டது என்பதற்கான குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் இல்லை. ஆனால், தமிழகத்தின் தெற்கு எல்லையில் கன்னியாக நின்று அருள் வழங்கும் 'கன்னியாகுமரி' இத்தகையதொரு கலாச்சார வடிவோ என்று எண்ணத் தோன்றுகிறது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற தமிழ்ப் பழமொழியும், இத்தகைய புராதன வழிபாட்டு உளவியல்வழி எழுந்ததாக இருக்கலாம்.

பெண்களைத் தெய்வமாகப் போற்றும், தங்கள் கனவுகளுக்காக அவர்களைத் தெய்வங்களாக மாற்றும் கலாச்சாரம் உண்மையில் அவர்களை வீழ்த்துகிறது; தம்மைப் போல் உயிரும் உணர்வும் உள்ள ஒரு பிறவி என்பதை மறுத்து, உயர்த்துவது போல் பாவனை செய்து, இயல்பாக வாழும் உரிமையையும் பறித்துக் கொள்கிறது.

திருக்குறளும் பகவத் கீதையும்

மு. சதாசிவம்
வாசவிக் கல்லூரி
ஈரோடு

வடமொழியில் வியாசர் இயற்றிய மாபாரதத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பகவத் கீதை என்ற அரிய ஆன்மீக நூலைத் திருமாலின் தோற்றரவுகளுள் ஒருவரான கண்ணபிரான் மாபாரதப்போரில் அருச்சுணனுக்குக் கூறியருளினார் என்பர். போர்க்களத்தில் இத்துணை ஆழ்ந்த ஆன்மீகக் கருத்துகள் வெளிப்பட்டமை ஒரு வியப்பே. தமிழிலக்கியத்தில் திருக்குறள் தனியிடம் பெற்றிருப்பது போலவே இந்திய ஆன்மீக உலகில் பகவத் கீதை தனிப்பெருஞ் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

திருவள்ளுவர் வடமொழி நூல்களையும் கற்றறிந்திருப்பார் என்பது அவர் சங்க இலக்கியங்களில் காணப்படாத பல புதிய அறிவுத் துறைகளில் பல அரிய கருத்துகளை வழங்கியிருப்பதி லிருந்து அறிந்து கொள்ளலாம். 'நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந் தலை' (322) என்று கூறுவதால் அவர் தமிழ் நூல் களையேயன்றி அவர் காலத்தில் அவருக்குக் கிடைத்திருக்கக் கூடிய, வடமொழி. பாலி முதலிய மொழிகளிலிருந்த நூல்களை யும் படித்திருப்பார் என்று கருதுவதில் தவறில்லை.

திருவள்ளுவர் பகவத்கீதையைப் படித்திருப்பார் என்பதற்கு அவர் பகவத்கீதையில் உள்ள சில கருத்துகளை ஏற்றுக் கொள்வது போலவும்; சில கருத்துகளை மறுப்பது போலவும் கூறியிருப்பவை சான்று பகரும்.

ஒப்புமைக் கருத்துகள்

1. பகவத்கீதை இரண்டாம் அத்தியாயம் 58-ஆம் சுலோகத்தின் கருத்து இது: ''அர்ச்சுனா! எப்படி ஆமை தமது நான்கு கால்களையும் கழுத்தையும், வாலையும் முதுகு ஓட்டுக்குள்

ஒடுங்குமாறு உள்ளடக்கிக் கொண்டு கிடக்கிறதோ: அதே போலக் கர்மயோகியான 'ஸ்திதப்பிரக்ஞர்' தம் ஐம்புலன்களையும் மனத்தையும் பௌதீக விஷயங்களிலிருந்து விலக்கி, தம் உள்ளுணர்வில் அடக்கிக் கொள்ளுகிறார். அந்நிலையில் அவருடைய அறிவு சமநிலையில் திடமாக இருக்கிறது'' (கீதா மாதுர்யம். பக். 39).

இக்கருத்தையே திருவள்ளுவர் அடக்கமுடைமையில்

''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து'' (126)

என்கிறார். பகவத் கீதையிலுள்ள அரிய உவமையை வள்ளுவர் எடுத்தாண்டிருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது.

2. கீதையின் அதே அத்தியாயத்தில் உள்ள கடைசி இரண்டு சுலோகங்கள் வள்ளுவரின் கருத்தை ஈர்த்திருக்கலாம்.

''சுகபோகங்களில் ஏற்படும் ஆசாபாசங்களை முற்றிலும் துறந்து விட்டால் அமைதி பெறலாம். எந்த மனிதன் எல்லா ஆசைகளையும் பாசங்களையும் விடுவதோடு தான் - தனது எனும் செருக்கையும் துறந்து வாழ்கிறானோ, அவனுக்குச் சாந்தி கிட்டுகிறது.

''செருக்கொழிந்த சாதகரின் நிலைப்பாடு பிரம்மத்தில் ஈடு பட்டிருக்கும். பார்த்தா இதைத்தான் பிரம்மநிலை என்பர். இந்நிலையை எட்டியதும் அந்தச் சாதக மனிதர் எக்காலத்திலும் மோகபாசத்தில் சிக்கமாட்டார். தம் இறுதிக் காலத்திலும் பிரம்ம நிலையில் இருப்பவர் 'நிருவாண பிரம்ம்' எனும் பரம சாந்தி நிலையில் முக்தி பெறுகிறார்'' (கீதா மாதுர்யம். பக். 44).

இக்கருத்துகளைத் திருவள்ளுவர் துறவு என்ற அதிகாரத்தில்,

''யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்'' (346)

என்ற குறளில் பொதிந்து வைத்துள்ளார்.

3. ''வேண்டுதல் வேண்டாமையிலான்'' என்ற கருத்து, பகவத் கீதையில் பலவிடங்களில் வருகிறது. எடுத்துக்காட்டுகள்: ''அர்ச்சுனா! நான் எல்லா உயிர்களிடமும் சமமாக இருக்கிறேன். எனக்கு எவரும், எதுவும் விரோதியில்லை; விருப்பமுள்ளது மில்லை'' (கீதா மாதுர்யம், ப. 126).

"துன்பங்கள் நேர்கையில் எவனுடைய மனது கலங்குவது இல்லையோ; சுகங்களை அடையும்போது அவற்றில் சிறிதுகூட ஆசை கொள்வதில்லையோ, எவனுக்கு விருப்பு, பயம், கோபம் இவை முற்றும் அற்றுப் போனவோ அந்த முனிவன் ஸ்திதப் பிரக்ஞன்" என்று கூறப்படுகிறான்" (2 - 56)

"எவன் ஒருவன் அனைத்திலும் பாசம் வைக்காமல்; அந்தந்த நல்லதோ கெட்டதோ ஆன பொருளை அடைந்து மகிழ்வது மில்லையோ, வெறுப்பதுமில்லையோ அவனுடைய புத்தி ஸ்திரமானது" (2 - 57)

4. பகவத் கீதை கர்மயோகத்தைச் சிறப்பித்துக் கூறுகிறது. திருவள்ளுவர் வினைசெயல் வகை, வினைத் தூய்மை முதலிய அதிகாரங்களில் 'வினை' என்ற சொல்லைப் பயன்படுத்தினாலும் 'கருமம்' என்ற சொல்லையும் பலவிடங்களில் பயன்படுத்தி யுள்ளார்.

"கருமத்தால் நாணுதல் நாணு". (1011)

"கருமம் செய ஒருவன் கைதூ வேன்' (1021)

"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு (578)

"தத்தம் கருமமே கட்டளைக்கல்" (505)

5. 'தானம் தவமிரண்டும் தங்கா' (9) என்ற குறளில் 'தானம் தவம்' இணைச்சொல்லாக வருவதைப் போலவே பகவத் கீதையிலும் தானமும் தவமும் இணைச்சொற்களாகப் பல விடங்களில் வந்துள்ளன (கீதை 17 – 23; 24; 28),

ஏற்காத கருத்துகள்

கண்ணன் இறைவனின் அவதாரம் என்பதால் அவர் கூறிய எல்லாக் கருத்துகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பர் திருமாலடியவர்கள். திருவள்ளுவரோ "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற கொள்கையினர்:

1. வேள்வியினால் மழை உண்டாகும் (கீதை 3–14) என்ற கருத்தை வள்ளுவர் ஏற்கவில்லை.
2. "நால் வருணங்களைக் கொண்ட சமுதாயம் குணங் களையும் கர்மங்களையும் ஒட்டிய பிரிவுகளாக என்னால்

படைக்கப்பட்டது'' என்று கண்ணன் கூறுகிறார் (கீதை 4-13). திருவள்ளுவர் பிறப்பினால் நால்வருணங்கள் அல்லது பிற சாதிகள் ஏற்படுவதை ஏற்றுக் கொள்ள வில்லை. ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' (குறள். 972) என்றார்.

3. ''மதிப்பிற்குரிய பெரியவர்களைக் கொல்வதைவிட இந்தப் பூமியில் பிச்சை எடுத்து வயிறு வளர்ப்பதை மேலானதாகக் கருதுகிறேன்'' என்று அர்ச்சுணன் போர்க் களத்தில் கூறுகிறான் (கீதை.2 5). இதுவே வடமொழியா ளரின் கருத்துமாகும். திருவள்ளுவரோ, பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பதை மிகக் கடுமையாகச் சாடுகிறார். ஒருவன் பிச்சையெடுத்தே வாழ வேண்டும் என்று படைத்தவன் விதித்திருந்தால் அவனும் பரந்து திரிந்து கெடுக என்கிறார்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்'' (1062)

பிச்சையெடுப்பதால் முக்தியடையலாம் என்று கூறினாலும். பிச்சை எடுக்கக் கூடாது என்கிறார். ''நல்லாறு எனினும் கொளல் தீது'' (222).

4. மாந்தர் செய்ய வேண்டிய கடமைகள் நால்வகை வருணா சிரமத்திற்கு ஏற்றவாறே அமையும் என்று கீதை (6 1) கூறுகிறது. திருவள்ளுவரோ வருணாசிரமத் தையும் ஏற்கவில்லை; ''வருணாசிரமத்திற்கு ஏற்றவாறே ஒவ்வொருவர் செய்யும் கடமைகளும் வேறுபடும்'' என்ற கீதையின் கருத்தையும் ஏற்கவில்லை. நல்ல செயல்கள் எல்லாம் ஒருவன் செய்ய வேண்டிய கடமைகளே என்று பொதுவாக அறிவுறுத்துகிறார்.

''கடன் என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு'' (281)

5. ''ஸர்வகர்ம பலத்யாகம் குரு - நீ செய்கின்ற எல்லாச் செயல்களின் பயன்களையும் துறந்துவிடு'' என்று கீதை (12-11) கூறுகிறது. வள்ளுவர் இவ்வாறு கூறவில்லை. ''எண்ணித் துணிக கருமம்'' (467) என்கிறார். கருமங்

களின்பயனைத் துறந்துவிடு என்று எங்கும் வள்ளுவர் கூற வில்லை. நல்ல செயல்களைச் செய்து நற்புகழ் பெற வேண்டுமென்றே வற்புறுத்துகிறார். நல்ல செயல்களின் பயனாகிய புகழே என்றும் அழியாமலிருப்பது என்கிறார்.

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்னில்லால்
பொன்றாது நிற்பதொன் றில்" (233)

இங்ஙனம் திருவள்ளுவர் "குணம் நாடிக் குற்றமும் நாடிப்" ... பகவத் கீதையில் நல்லனவற்றை ஏற்றுக் கொண்டு அல்லன வற்றைப் புறக்கணிக்கும் படி கூறியுள்ள பான்மை போற்றுதற் குரியது.

பகவத் கீதையையும் பிற வடமொழி நூல்களையும் திருவள்ளுவர் படித்தறிந்து நல்லனவற்றை ஏற்று அல்லனவற்றைப் புறந்தள்ளியுள்ளார் என்பது இக்கட்டுரையின் சாரமாகும்.

அடிக்கருத்தும் தொன்மமும்

சு. சந்திரா
மதுரை காமராசர் பல்கலைக்கழகக்கல்லூரி
மதுரை-625 002

தற்போது தமிழ்த்திறனாய்வுலகில் ''ஒப்பிலக்கியம்'' எனும் முறை வளர்ந்து வருகின்ற துறையாக உள்ளது. ஒப்பிடுவது எனும் புள்ளியை மையமிட்டு, பிறதுறைக் கொள்கைகள், கோட்பாடுகள், வகைமைக் கல்வி, தொன்மவியல், அடிக்கருத்தியல் எனப் பல்வேறு தளங்களில் ஒப்பிலக்கியம் விரிகின்றது. அவற்றுள் இன்றியமையாததாக அமைவது அடிக்கருத்தியல் ஆய்வாகும்.

அடிக்கருத்து - விளக்கம்

ஒரு இலக்கியப் படைப்பின் ''தலைமைப்பண்பு'' அல்லது கவிதை சொல்லவரும் முதன்மைப் பொருளே அடிக்கருத்து எனலாம். (ஒப்பிலக்கியக் கொள்கைகள், ப.96) இந்த அடிக்கருத்தானது காலம், இடம், வரலாறு, தொன்மம், கட்டுக்கதை போன்றவற்றால் சூழப்பட்டிருக்கலாம். இதனால் தான் அடிக்கருத்தியலாய்வு மிகப் பரந்ததாக உள்ளது.

அடிக்கருத்துகள் உருவாகும் பரப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆய்வு செய்வதும் அடிக்கருத்தியல் ஆய்வு வகையைச் சார்ந்ததாகும். (ஆய்வுக்கோவை-1, 1993, ப.75).

ப்ரமீதியஸ் - அடிக்கருத்து

அறிஞர் ரேமந்த் த்ருசோன் அடிக்கருத்து என்பது குறிப்பிட்ட கதாநாயகனைக் கொண்டு உய்த்து உணரக்கூடியது. இன்றேல், கதாநாயகனுக்கு ஈடான தகைமை அவ்வடிக்கருத்துக்கு உண்டு என்பார். அதற்கொரு சான்றாகப் பிரமீதியஸைக் குறிப்பிடுவார்.

''ப்ரமீதியஸ்'' அடிக்கருத்தைக் கிரேக்க நாடக ஆசிரியரான எஸ்கைலஸ் முதல் இருபதாம் நூற்றாண்டின் பிரெஞ்சு நாவலாசிரியரான ஆந்த்ரேழீட் வரை எவ்வாறு கையாண்டுள்ளனர் என த்ருசோன் ஆய்வு செய்கிறார். மேலை நாட்டு இலக்கிய நூலாசிரியர்களால், பிரமீதியஸ் கொடுங்கோன்மையையும் ஆட்சியாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடும் புரட்சியாளர்களின் மூலப்படிவமாகப் போற்றப்படுகின்றான். (Grounds for Comparison, 1972, P.100)

இவ்வாறு த்ருசோன் ஓர் அடிக்கருத்தை இலக்கியத்தில் உள்ள எல்லாக் கிளைகளிலும் அலசி ஆராய்ந்தபோதும் அதனை ஒரு தனிக்கதை மாந்தரோடு இணைக்கின்றார்.

த்ருசோனின் வகைப்பாடு

த்ருசோன் அடிக்கருத்துகளை,

அ) சூழல் குறித்த அடிக்கருத்துகள் (Situational Themes)

ஆ) வீரம் குறித்த அடிக்கருத்துகள் (Heroic Themes)

என்று வகைப்பாடு செய்கின்றார். சூழல் குறித்த அடிக்கருத்துகள், கவிதை மாந்தர்களின் இடையீட்டால் ஏற்படும் விளைவினை மையமிட்டவை எனவும், வீரம் குறித்த அடிக்கருத்துகள் அவ்வடிக்கருத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதாநாயகனின் பண்பு நலனைக் குறித்த கல்வி எனவும் கூறுவார் (மேலது. பக்.98-99)

அந்நெறிவழி சங்க இலக்கியங்களில் இடம் பெறும் 'சேயோன்'' தொன்மத்தினை அணுகுவோம்.

சேயோன் தொன்மம்

பழந்தமிழில், தனித்த – முழுமையான – எடுத்துரையோடு கூடிய கதை வடிவிலான தொன்மங்கள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்காங்கு வருணனை, உவமை, உள்ளுறை என்று சிதறிக்கிடக்கின்ற குறிப்புக்களாகத் தொன்மங்கள் உள்ளன.

அவ்வகையின் ''சேயோன் மேய மைவரை உலகமும்'' எனச் சுட்டப்படும் முருகன் தொன்மம் எவ்வகை அடிக்கருத்து என்பது நோக்கப்படுகின்றது.

''சேஎய்'' – மூலப்படிவம்

சங்க இலக்கியங்களில் முருகன், ''பிறங்குமலை மீமிசைக் கடவுள்'', ''வான்கோட்டுக் கடவுள்''. ''மலையுறை கடவுள்,'' குன்றக் குரவன் ''எனச் சுட்டப்படுகின்றான். மேலும் செம்மையின் தன்மையை இணைத்து ''சேஎய் குன்றம்'', ''செவ்வேள்'' என்றும் குறிப்பிடப்படுகின்றான்.

முருகியல் இன்பூட்டும் இளமை நலமும், அழகும் சேயோன் வயப்பட்டதாகப் பழந்தமிழர் எண்ணினர். மேலும் ''வேங்கைப் படு கினைப் புதுப்பூ'', ''கார் நறுங்கடம்பூ'', ''மன்ற வேங்கை மலர்'' என மலைநில மலரையும், ''பல்பொறி மஞ்ஞை வெல்கொடி'', ''மணிமயில் உயரிய மாறா'' என மலைநில மயிலையும் சேயோனுடன் இணைக்கும் பான்மை குறிக்கத் தக்கதாகும்.

இவ்வாறு முதற்பொருளான நிலம், கருப்பொருளான மலர், பறவை முதலியவற்றோடு இணைக்கப்படுகின்ற சேயோன் மூலப்படிவம் சூழல் குறித்த அடிக்கருத்தாகின்றது.

செவ்வேள்: வீரன்

வாழ்க்கையின் பின்னணியாக அமைந்த இயற்கைச் செவ்வொளி, வாழ்வியற் கூறுகளை வழிநடத்த வல்லது என்ற எண்ணங்கள் உறுதியாக்கப்பட்டன. சினம், வலிமை முதலிய பண்புகளை, ''கடுஞ்சின விறல்வேள்'', ''முருகெழு சீற்றத்து உருகெழு குரிசில்'', ''செருமிகு சேஎய்'', ''விறல்வெஞ்சேய்'', ''செருவஞ்சேய்'' என்று அகப்பாடல் தலைவன் மேல் சார்த்து கின்ற முறைமை காணப்படுகின்றது.

மேலும் குறிஞ்சி நில மக்களது தொழிலான வேட்டையாடும் கருவியான வேலுடன் இணைத்து ''ஆண்டகை விறல் வேள்'', ''வென்றி நெடுவேள்'', ''கடுஞ்சின நெடுவேள்'' எனப் பேசப் படுகின்றன. இவை சேயோன்/வேலன் என்ற வீரம் குறித்த அடிக்கருத்து பழந்தமிழ்ச் சமுதாயத்துள் பெற்றிருந்த செல்வாக் கினைப் புலப்புடுத்துகின்றன.

அடிக்கருத்து இணைவு

மேற்கூறிய சூழல் குறித்த அடிக்கருத்து, வீரம் குறித்த அடிக்கருத்து ஆகிய இரண்டும் இணைந்தமையினையும் சங்கப்

பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. அதாவது, மென்மை, நறுமணம், அழகு, நன்மை என்ற மூலப்படிவ எண்ணங்களின் உருவான சேயோன், தெய்வம், தெய்வமேறி ஆடும் வேலன் குறிஞ்சி, மற்றும் பிற நிலக் கடவுள் எனத் தொன்மமாய் மாறிய முறையும், வேலைப் பிரயோகித்தத் தெரிந்த வீரன், வேலன் என்ற தொன்ம வளர்ச்சியும் அடைகின்றான்.

இவ்வாறு வளர்ச்சியுற்ற "சேயோன்-தொன்மம்" வேற்று மொழி மற்றும் பண்பாடுகளின் கலப்பால் புது வடிவம் பெறுகின்றது. இயற்கையின் வடிவான அக்கடவுள், அலைவாய்ச் சேரலும், ஏகத்து உறைதலும் ஆகிய இடத்தினைப் பெறுகின்றது. மழை நலம் வேண்டிப் பழங்குடியினர் போற்றிய சேயோனை, புன்மிசைக் கொடியோனும், புங்கவம் ஊர்வோனும், மலர்மிசை முதல்வனும், உலகிருள் அகற்றிய பதின்மரும், மருந்துரை இருவரும், திருந்துநூல் எண்மரும் தொழுதேத்தும் பான்மையைப் பரிபாடல் (8:1–11) காட்டுகின்றது.

இவ்வாறு முருகன் பற்றிய அடிக்கருத்தலகுகள் பழந்தமிழில் சிதறிக் கிடக்கின்ற பான்மையை நுணுகி ஆராய்ந்தால், "சேயோன்–தொன்மம்" அடிக்கருத்தானதை உணரமுடிகின்றது.

முடிவுரை

ஒப்பிலக்கியப் பரப்பில், இன்றியமையா இடம் பெறும் அடிக்கருத்தியலாய்வில் தொன்மம் பெறுமிடத்தைக் கணிப்பதே இக்கட்டுரை முயற்சி. ரேமந்த் த்ரூசோனின் 1) சூழல் குறித்த அடிக்கருத்துகள். 2) வீரம் குறித்த அடிக்கருத்துகள் என்ற வகைப்பாட்டின் அடிப்படையில் பழந்தமிழின் சேயோன் தொன்மம் நோக்கப்பட்டது. அதன் வழி,

1. குறிஞ்சி நில மலை, பூ, மரம், விலங்கு, பறவைகள் முதலிய சூழல் சார்ந்த அடிக்கருத்தலகுகள் வழி சேயோன் மூலப்படிவம் உருவானதை அறிய முடிகின்றது.

2. சூழல் சார்ந்த இவ்வடிக்கருத்து வளர்ச்சியுற்று வீரம் சார்ந்த அடிக்கருத்தாகின்றது. அகமரபில் காதற் தலைவனையும், புற மரபில் வெட்சிப்போர் வீரனையும்

குறித்து, தெய்வீகத் தன்மையுற்று குறிஞ்சிக் கடவுளாக உயருகின்றது.

3. இவ்வாறான அடிக்கருத்தலகுகளின் இணைவில் உருவான தமிழர் சேயோன், வடவாரியர்தம் கடவுளான ஸ்கந்தனோடு இணைந்து ''முருகன்'' என்ற பெருந் தெய்வமாய், தொன்மம் சார் அடிக்கருத்தாகின்றது.

என்ற முடிவுகள் பெறப்பட்டன.

த்ருசோனின் அடிக்கருத்தியல் வகைப்பாட்டு அடிப்படையிலான ஆய்வு, தமிழ் இலக்கியத்தில் விரிவாக மேற்கொள்ளப் படவேண்டிய ஒன்றாகும்.

நூலகவியலும் சங்க இலக்கியமும்

கி. சந்திராகிருஷ்ணன்
வி.எல்.பி. சானகி அம்மாள்
மகளிர் கலை, அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் 641 042

மனிதன் மேம்பாடடைய இன்றியமையாததாகத் திகழ்வது கல்வி. கல்வியைக் கற்றுத்தர பல்கலைக்கழகங்கள் எவ்வளவு தேவையோ அதைவிட அதிகமான அளவில் நூலகங்கள் தேவைப் படுகின்றன. எனவேதான் இன்றைய சூழலில் 'நூலகம்' எனும் துறை பரந்துபட்ட பரப்பினதாக - பல கிளைகளை உடைய தனிப்பட்ட பெரும் துறையினதாகத் திகழ்கின்றது.

'நூலகவியலின் தந்தை' எனப் போற்றப்படும் பெருமைக் குரியவர் முனைவர் எஸ்.ஆர். ரங்கநாதன் ஆவார். இவர், உலக வாழ்வை – பொருளை – நடைமுறையை – சிந்தனையை – கருத்தை – எண்ணத்தை ஐந்து அடிப்படை நிலைகளில் (Five fundamental categories) அடக்கிக் கூறுகின்றார். இவை நூலகவியலில் உலகம் முழுவதும் பெரிதும் போற்றப்படுபவை ஆகும். அவை, 1. காலம் (time) 2. இடம் (space) 3. சக்தி (energy) 4. பொருண்மை (matter) 5. ஆளுமை (personality) என்பவை ஆகும். பி.சி. விக்ரி (B.C. Vikery) முதலான நூலகவாளர்கள் ஐந்திற்கும் மேற்பட்ட நிலைகள் தேவை எனக் குறிப்பிடுவர். ரங்கநாதன் கூறிய ஐந்து நிலைகளுடன் பொருள் தன்மை (matter property) பொருள் விபர (matter material) அடக்கம் எனும் இரண்டையும் இணைத்து பி.சி விக்ரி குறிப்பிடுவர். கிருஷ்ணன் குமாரும் இக்கருத்துடை யவர். எனினும் நூலகவியலாளர் ரங்கநாதரின் ஐவகைப் பகுப்புக்களே பெரிதும் போற்றப்பட்டு பின்பற்றப்பட்டு வரு கின்றன. பிற எல்லாப் பகுப்புக்களையும் ரங்கநாதரின் ஐந்து நிலைகளில் அடக்கிவிடலாம் என்பது மறுக்கவியலாத உண்மை ஆகும்.

ரங்கநாதரின் கருத்துகளைச் சங்க இலக்கியவாணர்களும் கொண்டவராகத் திகழ்வது ஒப்பிட்டுப் பார்க்கும்போது வியப் பிற்குரியதாகத் திகழ்கின்றது. ரங்கநாதரின் நூலகப் பகுப்பு முறை கோலான் (colon classification) எனப் பெரிதும் போற்றப் படுவது ஆகும். சங்க இலக்கியம் நூற்களைப் பாகுபாடு செய்த போது பொருள் நோக்கிப் பாகுபாடு செய்து கூறுகின்றது வாழ்க்கை முறையை மிக நுட்பமாக ஆராய்ந்து இலக்கியத்தைப் பாகுபாடு செய்துள்ள சங்க இலக்கியவாளர் களின் கூரியமதி வியப்பிற்குரியதாகத் திகழ்கின்றது. இன்றைய நூலகவியலாளரின் சிந்தனைகள் சங்க இலக்கியப் பாகுபாட்டில் காணும் திறம் பற்றி இவண் காண்போம்.

முதற்பொருள்

நிலம், பொழுது எனும் இரண்டும் முதற்பொருளாகக் குறிப்பிடப் பெறும் என்று தோன்றியது எனும் எல்லையில்லாத நிலத்தையும் - காலத்தையும் முதற்பொருள் என அழைத்தனர் நம் முன்னோர். ரங்கநாதன் கூறும் நிலம் (space) காலம் (time) எனும் இரண்டும் முதற்பொருளில் அடங்குவதாக அமைகின்றது. நிலத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐவகைப் பிரிவாகப் பாகுபாடு செய்து கூறுவதையும் பொழுதைப் பெரும்பொழுது (season) சிறுபொழுது (part of the day) எனப் பாகுபாடு செய்து கூறுவதையும் காணலாம்.

கருப்பொருள்

மக்கள் வாழ்க்கைக்குக் கருவாகத் திகழும் தெய்வம், மரம், பூ, விலங்கு முதலான பொருட்களைக் கருப்பொருள் என அழைப்பர். இவை அனைத்தும் ரங்கநாதன் கூறும் பொருண்மை (matter) என்பதில் அடங்கும் எனலாம்.

உரிப்பொருள்

குறிஞ்சி முதலான ஐந்து நிலங்களிலும் செயல்படும் ஒழுக்கத்தைக் கூறுவதாக அமைவது உரிப்பொருள் ஆகும். எனவே இதனை அவ்வவ் திணைக்குரிய 'செயல்பாடு' நிகழ் வதைக் கூறுவது எனலாம். உரிப்பொருள் செயல்பாட்டைக் கூறுதலின் இவற்றை ரங்கநாதரின் சக்தியில் (energy) இணைத்துக் காணலாம்.

திணை

முதல், கரு, உரிப்பொருளைத் தன்னுள் அடக்கியதாக - ஆளுமைத் தன்மை உடையதாகத் திகழ்வது திணைப்பாகுபாடு ஆகும். திணையை அகத்திணை, புறத்திணை என வகைப் படுத்துவர். இது ரங்கநாதரின் ஆளுமைஎன்பதில் அடங்குவ தாக உள்ளது.

நிலம் (space) 1. முதற்பொருள் பொழுது (time)

2. கருப்பொருள் — Matter 3

3. உரிப்பொருள் — Energy 4

4. ஐந்திணைப்பாகுபாடு — Personality 5

என சங்க இலக்கியப் பாகுபாடு ரங்கநாதரின் ஐவகை அடிப் படைப் பாகுபாட்டுடன் ஒத்துக் காணப்படுகிறது.

நினைவுக்குறி

நூலகவியலில் நினைவை ஊட்ட குறியீடு ( ) பெரிதும் போற்றப்பட்டு வருகின்றது.

எழுத்து நினைவுக்குறி — Verbal mnemonics

எண் நினைவுக்குறி — Scheduled mnemonics

கருத்து நினைவுக்குறி — Seminal mnemonics

எனும் மூவகை நினைவுக் குறிகளை ரங்கநாதன் குறிப்பிடுவர்.

எழுத்து நினைவுக்குறி

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என வரும் யாப்பின் கூறுபாடுகளை எழுத்து நினைவுக் குறியைச் சார்ந்த தாகக் கூறலாம்.

எண் நினைவுக்குறி

"ஒன்று மூன்று ஐந்து ஏழு ஒன்பான் பாலை; ஓதாது
நின்றவற்றில் நான்கு நெறி முல்லை - அன்றியே
ஆறாம் மருதம்; அணி நெய்தல் ஐயிரண்டு
கூறாதவை குறிஞ்சிக் கூற்று"

முதலான பாடல்கள் எண் நினைவுக் குறியை எளியமுறையில் நினைவு கூர்வனவாகத் திகழ்கின்றன.

கருத்து நினைவுக்குறி

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் பாகு பாடு கருத்து நினைவுக்குறி எனலாம்.

பட்டி

நூலகவியலில் இன்றியமையாத இடம் வகிப்பது பட்டி (catelogue) ஆகும். நூலகத்தில் இருக்கும் நூற்களை, ஆக்கி யோன் - தலைப்பு - பொருள் - செய்தி - கருத்து முதலான பல பாகுபாடுகளில் அறிய உதவுவது பட்டி ஆகும். இப்பட்டி பொருள்பட்டி, அகர வரிசைப்பட்டி என இருவகையாக நூலக வியலில் சுட்டப் பெறுகின்றது. சங்க இலக்கியத்தில் தலைப்புப் பட்டி, ஆக்கியோன் பட்டி, பாடுபொருள் பட்டி, பொருள்பட்டி எனப் பல பாகுபாடுகளில் பட்டி இருந்ததை அறியலாம்.

தலைப்புப்பட்டி

எட்டுத்தொகையினை விளக்கும்; ''நற்றிணை நல்ல குறுந் தொகை'' எனும் பாடல் தலைப்புப் பட்டியைக் குறிப்பதாக அமைகின்றது.

ஆக்கியோன் பட்டி

''மருதம் ஓரம்போகி, நெய்தல் அம்மூவன்' எனும் பாடல் ஆக்கியோன் பட்டியை நினைவு கூர்வதாக உள்ளது.

பாடுபொருள் பட்டி

''திருமாலுக்கு இரு நான்கு செவ்வேட்கு முப்பத்தொரு பாட்டு'' எனவரும் பரிபாடல் திறம் கூறும்பாடல் பாடுபொருள் பட்டியாகத் திகழ்கின்றது.

பொருள் பட்டி

'போக்கெல்லாம் பாலை. புணர்தல் நறுங்குறிஞ்சி என்பது கலிப்பாடலின் பொருள் கூறும் பொருள்பட்டியாகத் திகழ்கின்றது

நூலகம் எனும்போது நூல்கள் தர நிர்ணயம் செய்யப்பட்டு (specification of standard) பகுப்பு செய்யப்பட்டு (classification) பட்டியல் இடப்பட்டு (cataloguing) காணப்பெறுதல் வேண்டும்.

''புத்தகமே சாலத் தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும் - மற்றவற்றை

போற்றும் புலவரும் வேறே - பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு''

எனும் நாலடியார் பாடல் புத்தகம் தொகுத்து வைக்கப்பட்டதையும் புலவர் போற்றியமையையும் சுட்டுகின்றது.

தற்காலத்தில் 'நூலகத்தின் தந்தை' எனப் போற்றிப் புகழப் பெறும் ரங்கநாதரின் நூலகவியல் சிந்தனைகள் சங்க காலத்திலும் காணப்பட்டது. அவை சங்க காலத்தில் தனியொரு இயலாக - துறையாக - பிரிவாகப் போற்றப்பெற்றதற்கான சான்றாதாரங்கள் கிடைக்கவில்லையே தவிர அறிவியல் முறைப்படி பாகுபாடு செய்து எளிமைப்படுத்தியிருந்த திறம் வியப்பிற்குரியதாகத் திகழுகின்றது. தமிழ் இலக்கியமும் நூலகவியலும் தனியாக ஆய்வதற்குரிய மிகப்பெரும் பரந்த கருத்துகளைத் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்கின்றது.

துணை நூல்கள்

1. தொல்காப்பியம்.
2. சங்க இலக்கியம்.
3. நாலடியார்.
4. Laws of Library Science, Prologomen to Library Classification - S.R. Ranganathan.
5. Theory of Classification. Krishnan Kumar.
6. B.C. Vickery. Faceted Classification.
7. M.A. Gopinath and S. Seetharama, Interdisciplinary subjects and their classification.

பெரும்பாணாற்றுப்படை வணிகம் - ஒரு சமூக நோக்கு

ஏ. சம்புலிங்கம்
அரசினர் கலைக் கல்லூரி
விருத்தாசலம்

சமூகம்

மனிதன் கூடிவாழும் இயல்புடையவன். அதனால் அவனை சமூகப் பிராணி என்பார் அரிஸ்டாடில். மனிதன் தன் தேவை, பாதுகாப்பு, நலம், வாழ்க்கை வாய்ப்பு, வசதி போன்ற இன்ன பிற சேவைகளுக்காக மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு கூடி வாழ்கிறான். இப்படிக் கூடிவாழும்போது பல வகையான நிலைகளில் பலவகையான அளவுகளில் பலவகையான உறவுகள் ஏற்படுகின்றன. பின்னர் இந்த உறவுகள் நிலை நிறுத்தப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு ஒரு நிலையான அமைப்பு (Organization) ஏற்பட்டு விடுகிறது. இதுவே சமூகம் என்றழைக்கப்படுகிறது. மொத்தத்தில் மக்கள் கூடிவாழும் அமைப்பிற்குச் சமூகம் என்று பெயர். மொழிகாரணமாகச் சமூகம் அமையும். காட்டு - தமிழ்ச் சமூகம். அரசியல் காரணமாகச் சமூகம் அமையும் காட்டு இந்தியச் சமூகம் இனம் காரணமாகச் சமூகம் அமையும். காட்டு இந்தோ ஐரோப்பியர் – ஆப்ரிக்கர் – மங்கோலியர் – திராவிடர் என மதம் காரணமாகவும் சமூகம் அமையும். காட்டு வளைகுடா நாடுகள் – இஸ்ரேல்.

சமூகவியலாளர்கள்

மாரிஸ் கின்ஸ் பெர்க் என்பார் சமூகத்தைப் பற்றி ஆராய் கின்ற இயல் சமூகவியல் என்பார் **1. ஆகஸ்ட் கோம்ட், 2. ஹெர்பர்ட் ஸ்பென்சர், 3. ஏமில்டர்க்ஹீம், 4. காரல் மார்க்ஸ், 5. மாக்ஸ் வேபர்,** என்போர் தலைசிறந்த சமூகவியல் சிந்தனை

யாளர்கள். ஒரு சமூகம் தன்னுள் பல கூறுகளை உள்ளடக்கியது. அவை ஒவ்வொன்றும் ஒரு நிறுவனமாகக் கருதத்தக்கன. வரலாறு, குடும்பம், சமயம், கல்வி, அரசியல், பொருளாதாரம், சட்டம், பண்பாடு போன்றவை சில சமூக நிறுவனங்களாகும்.

பெரும்பாணாற்றுப்படை

சங்க இலக்கியம் என்று கருதத்தக்கது, காலத்தால் பழமை வாய்ந்தது; பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆம். பத்துப் பாட்டு பத்து நீண்ட நெடும் பாட்டுக்களைக் கொண்டது. எட்டுத்தொகை, எட்டுத்தொகை நூல்களின் தொகை இந்நூல் களின் காலம் கி. மு. 300-க்கும் கி. பி. 200-க்கும் இடைப்பட்ட காலமாகும். பெரும்பாணாற்றுப்படை நான்காவதாக அமைந்தது. ஆற்றுப்படை பாடல்கள் ஐந்தனுள் ஒன்று.

வணிகம்

சமூகவியலில் வணிகம் ஒரு நிறுவனம், ஓரிடத்தில் உற்பத்தி யாகும் பொருளை அப்பொருள் கிடைக்காத வேறிடத்திற்கு வாங்கிச் சென்று விற்பது வணிகம் ஆகும். பொருளின் உற்பத்தி விலை, பிறிதிடம் செல்ல ஆகும் செலவு இவற்றைச் சேர்த்து விற்பனை விலை நிர்ணயம் செய்யப்படும். இவ்வணிகத்தினால் கொஞ்சம் பொருள் விற்போனுக்குக் கிடைக்கும் - இதற்கு லாபம் என்று பெயர். பொருள் மனிதனுக்குத் தேவைகளை நிறைவு செய்கிறது. வாழ்வில் மகிழ்ச்சியைக் கூட்டுகிறது. பொருளை மையமாக வைத்தே சமூகத்தை ஆராய்ந்தார் காரல் மார்க்ஸ்.

வணிகத்தின் மூலம் சிறுகச்சிறுக ஈட்டும் பொருள் செல்வம் எனப்படும். சொத்து என்றும் பெயர். சொத்து அல்லது செல்வம் மனிதனுக்குச் சமூகத்தில் அந்தஸ்தைத் தேடித் தருகிறது.

'பெரும்பாணாற்றுப் படையுள் உள் நாட்டு வணிகம்'

திரண்ட தோள்களும் முழுவலியும் உடைய உமணர் எனப் படும் உப்பு வணிகர், பனை ஓலைப்பாயால் வேய்ந்த கூடுடைய, பாதையை அறுத்துச் செல்லும் சக்கரத்துடன் கூடிய வண்டியை குழந்தை தாங்கிய பெண்டிர் எருதுகளை அசைந்து ஓட்ட, மருங்கே செல்கின்றனர். வண்டியின் முன்புறம் கயிற்றால் பிணித்த மத்தளம் போன்ற ஊறுகாய்ச் சாடியும், மேலே

கோழிக்கூடும், அதன் வாயிலில் உரலும் கட்டப்பட்டுள்ளன. 'உரல் - உப்புக்கு பண்டமாற்றாய் பெற்ற நெல்லைக் குத்துதற்கு'.

மாமைக் கவினும் மகரக்குழையும் உடைய இடைக்குல மடந்தை, புள் எழும் முன்னே எழுந்து மத்தால் புலிபோல் உறுமும் ஒலி எழும்ப தயிர் கடைந்து நாள் மோராக்கி, தலையில் கொண்டுசென்று விற்று இல்லத்தார்க்கு உணவுப் பொருளை வாங்கினாள். ஆவின் நெய் விற்ற விலையில் கட்டிப் பொன் வாங்காது ஆன், எருது, கன்று முதலியவற்றை வாங்கினாள்.

ஆதலால் இவையிரண்டும் உள்நாட்டு வாணிகம். பண்ட மாற்றுந்தன்மைத்து செல்வம் உயர்ந்தோங்கும் வழி இவ்வணி கத்தின் மூலம் கட்டியதாகத் தெரியவில்லை.

வெளிநாட்டு வாணிகம்

வளைந்த பலாவின் அடியில் விளைந்து தூங்கும் பலாக்கனி யொப்ப கழுதையின் முதுகில் மிளகுப் பொதி ஏற்றிய வணிகர் பேசப்படுகின்றனர். பாதம் மறைக்கும் தோற் செருப்பும், உடல் மறைக்கும் மெய்ப்பையும், கச்சும், குறுவாளும் அணிந்து இவ்வணிகர் தோற்றம் விவரிக்கப்படுகிறது. இவர்களின் வணிகப் பொருட்கள் மலையில் விளைந்த பொன், மிளகு, ஏலம் முதலியனவும் கடலுள் கிடைத்த முத்தும் பவளமும் மணியும் முதலியனவும் ஆகும் இவர்கள் சுங்கம் செலுத்தச் செல்லும் வழி காவலையுடையது என்பதால் இவர்கள் செல்வம் சேர்க்கும் பெருவணிகர் என்பது புலனாம்.

> "மலையவும் கடலவும் மாணிபயம் தருஉம்
> அரும் பொருள் அருத்தும் திருந்துதொடை நோன்றாள்
> அடிபுதை அரணமெய்திப் படம்புக்கு
> விரவுவரிக்கச்சின் வெண்கை ஒவ்வாள்". (அடி. 66 - 70)

இவை இவ்வணிகரின் தோற்றம் கூறும் பகுதி,

கடல்வாணிகம்

பட்டினப் பாக்கத்தையும் அதனையொட்டிய பகுதிகளையும் விவரிக்கும்போது.

> 'வாள் உளைப் புரவியொடு வடவளம் தருஉம்
> நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை'.

என்பதால் கடல் வாணிகம் நிகழ்ந்ததை அறியமுடிகிறது. நாவாய்கள் வடதேயத்துப் பொருள்களோடு உயர்ந்த வெள்ளை நிற தலையாட்டத்துடன் கூடிய குதிரைகளையும் கொண்டு வந்து சேர்க்கும் துறைகள்.

பட்டினப் பாக்கத்து அருகிலே நீருண்ணும் துறைகளில் ஆயத்துடன் நீராடும் மகளிர் பொன்குழையைத் தவறவிட அதனை ஒளிரும் மீன் எனக்கருதி, இரைதேடிய சிச்சிலிப் பறவை கொத்திச் சென்றதாம். ஏனைய பறவையினம் கவரும் என்று கருதி பனைமடலில் தங்காமல் அந்தணர் யாகத் தூணில் தங்க, அது யவனர் தந்த கலங்கரை விளக்கென ஒளிநிற்றாம் நிலையைப் புலப்படுத்துவது இது.

அன்றியும் பாக்கமருங்கில் வான் தோய் மாடத்தில் மகளிர், புன்னைமேல் படர்ந்த பனி மாசன்ன வெண்துகில் உடுத்து, இன்னியம் முழங்க, காலில் பொன்கலம் சிலம்ப வரிப்பந்து ஆடும் செய்தியும் கூறப்பட்டுள்ளது. இதுவும் வணிகத்தின் பொருட்டு வந்த செல்வமிகுதியைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

"வண்டல் ஆயமொடு உண்துறைத் தலைஇ
புனல்ஆடு மகளிர் இட்ட பொலங்குழை
இரைதேர் மணிச்சிரல் இரைச் செத்து எறித்தென
கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த
வேள்வித் தாணத்து அசைஇ – யவனர்
ஓதிப விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைருறுமீனின் பைபயத் தோன்றும்" (வரிகள் 312 - 315)

செல்வம் வந்த வழி

மான் தோல் பாயலில் மகவீன்ற கானவர் மகள் படுத் திருக்கும் குறவர் குடிலோ, அணிலும் எலியும் ஏறி ஆடாத கூர் முனையுடைய பனை ஓலையால் வேயப்பட்டிருக்கும். இடையர் குடிலோ குறுங்கால்களின் மேல் வரகுக்கற்றையால் பிணிக்கப் பட்டிருக்கும். மூங்கிலை நிரலே வைத்து ஞாழல் கொம்புகளை இணைத்து தாழை நாரால் கட்டி தருப்பைப்புல் வேய்ந்திருக்கும் வலைஞர் குடிசை. அந்தணர் இல்லமோ ஆவின் கன்று பிணித்து பசுஞ்சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும். உழவர் தனி மனையோ தென்னையின் கீற்றால் வேயப்பட்டிருக்கும்.

இப்படிப்பட்ட குடியிருப்புச் சூழல்கள் அமைந்த அச்சமூகத்திலே பட்டினப்பாக்கம் மருங்கில் பரதவர் இல்லம்

மட்டும் தேவர் உலகத்திற்கு முட்டுக் கொடுத்தாற் போன்ற வான்தோய் மாடம்பெற்றது எப்படி? மகரக்குழை ஒன்றையே அணிந்தவன் இடைக்குல மடந்தை. நகையணிந்த மகளிர் வேறெங்கும் கூறப்படவில்லை. ஆனால் பாக்க மருங்கில் நீராடும் மகளிர் தவறவிட்ட காதணியைச் சிச்சிலிப் பறவை மீனிரையெனக் கொத்திச் சென்றதாம். கள் விலைக் கடனுக்கு ஆநிரையைக் கவர்ந்து அடைத்து அவற்றுள் ஒன்றை உருவாக்கித் தின்று, தண்ணுமைக்கு ஏற்ப மன்றிலே ஆடுவது மறவர் ஆட்டம். ஆயின், இரவுச்சுடர் ஒளியுமிழ, இன்னியம் முழங்க, பொற் சிலம்பு ஒலிப்ப மாளிகைக்குள் பரதவர் மகளிர் வரிப்பந்து ஆடுகின்றனர். இத்தகு செல்வம் வந்தது எப்படி? நிலத்தை உழுது பயிரிடும் உழவுத் தொழிலா? அல்லது விலங்குகளைத் துரத்தும் வேட்டைத் தொழில் மூலமா? அல்ல, வால் உளைப் புரவியொடு வடவளம் தரும் நாவாய் மூலம் நிகழ்த்திய கடல் வாணிபத்திலேதான். இதனால் அரசனும் வானத்துமீன் அனைய வெள்ளிக் கலத்தினில் விருந்தூட்டும் சிறப்புப் பெற்றான் பாணர்க்குப் பொற்றாமரையும் விறலியர்க்கு மின்னொத்த பொன்னாரமும் நல்கினான்.

முடிவுகள்

மேலே கூறியவற்றால் கீழ்க்காணும் முடிவுகள் பெறப்படுகின்றன. பெரும்பாணாற்றுப்படை எழுந்த காலத்தே இருந்த தமிழ்ச் சமூகத்தில்

1. வாணிகம் சிறந்திருந்தது.
2. உள்நாட்டு வணிகம், உப்பு விற்றல், மோர், நெய் விற்றல் என்ற அளவில் பண்டமாற்றாகவே இருந்தது.
3. மலை, கடல் இவற்றின் பயன் கொண்டு குதிரைகளையும் கொண்டு வரும் அயல் நாட்டு கடல் வாணிகம் சிறந்திருந்தது.
4. கடல் வாணிபத்தில் ஈடுபட்டோர் மட்டுமின்றி அரசனும் செல்வத்தில் சிறந்திருந்தான்.

துணை நூல்கள்

1. பத்துப்பாட்டு, உ. வே. சா. பதிப்பு.
2. தமிழர் நாகரீகமும் பண்பாடும், டாக்டர். கே.கே. பிள்ளை.
3. பத்துப்பாட்டு, 'முதல் பாகம்' கழகப்பதிப்பு.

அறிவியல் தமிழ் வினாத்தாள் தயாரித்தல் - ஒரு கண்ணோட்டம்

ச. சம்பத்து
ஜெ.ஜெ.கலை, அறிவியல் கல்லூரி
புதுக்கோட்டை - 622 404

ஒரு மொழிக்குரிய சமூகம் வளரும்பொழுது ஊடே மொழிக் கலப்பு நிகழ்வதும் உலக இயற்கை. மொழிக்கலப்பைக் குறிப்பிட்ட வரையறைகளுடன் தமிழ்ச்சமூகம் பண்டு தொட்டு ஏற்றுக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் அறிவியலைத் தமிழில் பயிற்றுவிப்பதற்கும் வரையறைகள் பல உருவாக்கப் பெற்று உள்ளன. எனினும் அறிவியல் தமிழ் வினாத்தாள் தயாரிப்பில் அடிப்படைப் பிழைகள் மிகுதியாக இருப்பது கவனத்திற்குரியதா கிறது.

பாரதிதாசன் பல்கலைக்கழகம் இளநிலை பட்டத்திற்குரிய அறிவியல் வினாத்தாள்களை மாணவர்களின்பயன் நோக்கி தமிழி லும்ஆங்கிலத்திலும் தயாரிக்கின்றது. ஆனால் அப்பயன்மாணவர் களை முழுமையாகச் சென்றடைவதில் தடையாக மொழியாக்கச் சிக்கல்கள் அமைந்துள்ளன. வணிகவியல், இயற்பியல், கணிப் பொறியியல், உயிர்வேதியியல், நுண்ணுயிரியல் முதலான துறை களுக்குரிய வினாத்தாள்கள் அனைத்திலும் பொதுவான மொழி யாக்கச் சிக்கல்கள் காணப்பெறுகின்றன. சுருக்கம் கருதி நவம்பர் 1996, கணிப்பொறியியல் மாணவர்களுக்குரிய 'Pasal and data Structures' எனும் வினாத்தாள் இங்கு ஆய்வுக்குட்படுத்தப் பெறுகின்றது. அவ்வினாத்தாளில் காணப்பெறும் மொழியாக்கச் சிக்கல்களை மூவகைப்படுத்தலாம்.

1. துறைச்சொற்களை மொழியாக்கம் செய்தல்
2. ஆங்கிலச்சொற்களை மொழியாக்கம் செய்தல்
3. ஆங்கிலம் தமிழ் வரிவடிவங்களைக் கலந்து எழுதுதல்.

துறைச்சொற்களை மொழியாக்கம் செய்தல்

இயற்பியல், கணிப்பொறியியல் முதலான ஒவ்வொரு துறைக்கும் உரிய சொற்கள் துறைச்சொற்கள் எனப்பெறும். அச்சொற்களில் மொழியாக்கம் செய்யவேண்டியவை, ஒலியாக்கம் செய்யவேண்டியவை எனும் வரையறைகள் பல பத்தாண்டுகளுக்கு முன்பே முடிவடைந்து விட்டன. அந்த வரையறைகள் தொகுத்து ஒரு நோக்கீட்டு நூல்வடிவில் வெளியிடப்பெறாததால் மொழியாக்கம் செய்யப்பெற்ற கலைச்சொற்கள் அரசு கலைச்சொல் அகராதிகளாக வெளியிடப்பெறாததால் பல்கலைக்கழக அளவில் தவறான மொழியாக்கம் நிகழ்ந்து உள்ளது. 'Representations' என்பதற்குப் புனையுறு, கருத்துறு என்று மொழியாக்கம் செய்யப் பெறவேண்டும். ஆனால் 'முறையீடு' என்று வினாத் தாளில் தவறாக மொழியாக்கம் செய்யப்பெற்றுள்ளது.

"Explain any two representations for graphs"

"வரைபடங்களின் ஏதேனும் இரு முறையீட்டைப் பற்றி விளக்குக" (33 11) என்று தரப்பெற்றுள்ளது.

'வரைபடங்களில் எவையேனும் இரு கருத்துருக்களை விளக்குக', என்றமைவதே சரியான மொழியாக்கமாக அமையும்.

ஆங்கிலச்சொற்களை மொழியாக்கம் செய்தல்

மொழியாக்கத்திற்குத் துறை அறிவோடு இருமொழி புலமை என்பது அடிப்படைத் தேவை. மொழிப்புலமை குறைந்தோர் மொழியாக்கத்தில் ஈடுபடுவதால் சொற்செட்டின்றித் தேவை அற்ற விரிவான மொழியாக்கம் நிகழ்ந்துவிடுகின்றது. இத்தகு விரிவான மொழியாக்கத்தை மாணவர் காண்கையில் 'அறிவியலைத் தமிழில்' சுருக்கமாக விளக்குவது கடினம். என்று சிந்திக்கத் தொடங்கிவிடுகின்றனர். அல்லது வினாத்தாள் சிந்திக்க வைக்கின்றது. சான்று வருமாறு;

"மாணவர் கோப்பு ஒன்றில், ஒவ்வொரு பதிவுக் குறிப்பிலும் மாணவரின் பெயர் மற்றும், நான்கு தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் அடங்கியுள்ளன. இந்த கோப்பைப் பயன்படுத்தி, ஒரு நல்ல படிவத்தில் வெளியீடு இருக்குமாறு பாஸ்கல்

கட்டளைத் தொடரை எழுதுக. மாணவரின் பெயர், பெற்ற மதிப்பெண்கள், மொத்த மதிப்பெண்கள் ஆகியவைகளை வெளியீடு கொண்டிருக்க வேண்டும்''.

"Each record of a Student fiie contains the name and marks scored by him four tests. Write a PASCAL program which uses this file and outputs the name, Marks scored and the total marks in a neat formay".

இங்கு, ஆங்கில வினாவில் 40 சொற்கள் நான்கு வரிகளில் அளிக்கப்பெற்றுள்ளன. தமிழாக்கமோ எட்டு வரிகளில் 37 சொற்களை உடையதாகத் திகழ்கின்றது. ஒரு கருத்தை விளக்க, ஆங்கில எழுத்துகள் 8 புள்ளி உடையனவாகவும் தமிழ் எழுத்துகள் 10 புள்ளி உடையனவாகவும் அமைவதாலும் நீண்ட அசைகளை உடைய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியதாலும் வரிவடிவில் மொழியாக்கங்களுக்கிடையே வேறுபாடு நிலவு கின்றது. இந்த வேறுபாடு வடிவ நிலையிலேயே மாணவரை, அச்சுறுத்தும் வகையில் அமைவது சிந்திக்கத்தக்கது. எனவே

"மாணவர் கோப்பு ஒன்றில் ஒவ்வொரு பதிவிலும் மாணவரின் பெயரும் அவர் நான்கு தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களும் உள்ளன. இதைப் பயன்படுத்தி மாணவரின் பெயர், பெற்ற மதிப்பெண்கள், மொத்த மதிப்பெண்கள் ஆகியவற்றை ஒரு நல்ல படிவத்தில் தருவதற்கான பாஸ்கல் கட்டளைத் தொடரை எழுதுக."

என்று 30 சொற்களில் மொழியாக்கம் அமைவதே சிறப்பு. இம் மொழியாக்கத்தில் முன்பு பயன்படுத்தப்பெற்றிருந்த" குறிப்பிலும், மற்றும், வெளியீடு இருக்குமாறு, வெளியீடு கொண்டிருக்க வேண்டும்" ஆகிய சொற்கள் நீக்கப் பெற்றுள்ளன. 'அடங்கி யுள்ளன' என்பது 'உள்ளன' என்றும் 'இந்தக் கோப்பைப் பயன்படுத்தி' என்பது 'இதைப் பயன்படுத்தி' என்றும் சுருங்கி உள்ளன.

ஆங்கில வினாவில் அளிக்கப் பெற்றுள்ள கருத்தில் இருந்து வேறுபட்ட கருத்துடையதாகவும் தவறான பொருள் உணர்த்தும் வகையிலும் தமிழாக்க வினா அமைந்துள்ளது.

"பாஸ்கல் மொழியில் உள்ள ஏனைய விவர வகைகளை விளக்குக.

Explain the various data types in PASCAL" (26 a)

இங்கு, ஆங்கில வினாவில் Pascal என்று குறிப்பிட்டு, தமிழில் பாஸ்கலில் என்று குறிப்பிடாமல் பாஸ்கல் மொழியில் என்று விரிவாக்கம் செய்யப்பெற்றுள்ளது. பாஸ்கல் ஒரு மொழி என்பது கணிப்பொறி மாணவர்க்குத் தெரிந்ததுதானே. ஆங்கிலவினா பாஸ்கலில் உள்ள பல்வேறு தரவு (அ) விவரக்குறிப்புகளை விளக்கச் சொல்கிறது. தமிழ்வினாவோ "ஏனைய விவர வகைகளை விளக்குக" என்று குறிக்கின்றது. 'ஏனைய' என்றால் வினாவில் ஒரு சில பாஸ்கல் விவரக்குறிப்புகள் முன்னரே அளிக்கப்பெற்றிருக்க வேண்டும் என்பது கவனத்திற்குரியது. எனவே பின்வருமாறு தமிழாக்க வினா அமைதல் நன்று:

'பாஸ்கலில் உள்ள விவர வகைகளை விளக்குக'.

ஆங்கிலம் தமிழ் வரிவடிவங்களைக் கலந்து எழுதுதல்

Read, Readin, write, writein எனும் ஆங்கிலச்சொற்களுக்குரிய தமிழாக்கம் படி, வரிபடித்தல், எழுது, வரியெழுதுதல் என்பனவாகும். ஆனால்,

"read, readin, write மற்றும் writein

கூற்றுகளைத் தகுந்த எடுத்துக்காட்டுடன் விளக்குக" (27.அ)

என்று தமிழாக்க வினா அமைவது வருத்தத்திற்குரியதே.

இதுவரை விளக்கப்பெற்ற குறைபாடுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம், ஆங்கிலத்தில் வினாக்களைத் தயாரித்துக் கொண்டு மொழிப்புலமை குறையுடையோர் மொழியாக்கம் செய்ய விழைந்ததே ஆகும். வினாக்களை மொழியாக்கம் செய்யாமல் தமிழில் தயாரித்தல் அல்லது மொழிப்புலமை உள்ளவரைத் துணையாகக் கொள்ளுதல் மேற்சுட்டப்பெற்ற குறைபாடுகளை நீக்க உதவும். இதனால் மாணவரிடம் தவறான எண்ணப்போக்கு வளர்வதைத் தடுக்கலாம்.

கம்பன் - துளசி இராமாயணத்தில் இராமராச்சியம் - ஒப்பீடு

சரளா ராசகோபாலன்
இராணி மேரி கல்லூரி
சென்னை 600 004

இலக்கியம் என்பது ஓர் இனத்தினுடைய சிந்தனையின் சிகரம். பொதுவாக நூலாசிரியர் மறைந்தவுடன் பல இலக்கியங் கள் சிறந்து விடும். ஒரு சில இலக்கியங்கள் மட்டுமே மறையாமல் காலத்தை வென்று புகழுடன் நின்று நிலவும். அத்தகைய சிறப்புக்குரிய இலக்கியங்களுள் ஒன்று காப்பியமாகும்.

பண்பாடும் பழைமையும் கொண்ட மாந்தரிடையில் காப்பியம் தோன்றுதல் இயற்கை. கிரேக்க ஓமருடைய இலியது (Iliad) ஒடெசி (Oddessy) இத்தாலிய விர்ஜிலினுடைய புயூனிக்போர் (Punic War) ஜெர்மானியக் கவிஞர் ஒருவரின் பியோவுல்ஃப் (Beowulf) ஸ்பானியகவிஞன் அலன்சோ (Alonso) வின் அரன்கானா, (Arancana) ஆங்கிலக் கவிஞன் மில்டனுடைய சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்பவை உலகம் போற்றும் உன்னதக் காப்பியங்களாகும்.

கம்பர் - துளசி இராமாயணங்கள் ஒற்றுமைக் கூறுகள்: இந்த இருபெருங் கவிஞர்களின் பாடல்களிலும் சில ஒற்றுமைக் கூறுகள் உள்ளன.

1. வால்மீகி இராமனை, இட்சுவாகு அரசப்பரம்பரையைச் சேர்ந்த ஒரு மாவீரனாக மட்டுமே படம் பிடித்துக் காட்டினார். கம்பரும் துளசிதாசரும் இராமனை விஷ்ணுவின் அவதாரமாகக் காட்டினர்.

வால்மீகியின் காப்பியத்தில் இராமன் திருமணத்திற்கு முன்பு சிதையைச் சந்தித்ததாகச் செய்தி இல்லை. கம்பருடைய

இராமவதாரத்திலும் துளசிதாசரின் ராம்சரித் மானசிலும் திருமணத்திற்கு முன்பே சீதையும் இராமனும் ஒருவரை ஒருவர் நோக்குகின்றனர். இதயம்மாறிப் புகுகின்றனர். இக்காட்சி, தமிழரின் அன்பின் ஐந்திணைக்கு உரிய களவின் வழிவந்த கற்பாக அமைந்துள்ளது.

இராமாயணத்தை எழுதுவதற்கு முன்பு, துளசிதாசர் தென்னிந்தியாவுக்கு வந்தார் என்றும் அவர் கம்பருடைய நூலைப் பற்றி அறிந்தார் என்றும் அதனால் தமிழ் மரபை ஒட்டிய காட்சியைத் தன் நூலில் அமைத்தார் என்றும் கூறப் படுகிறது. இந்தக்காட்சி இந்தியாவின் வேறு எந்த இராமாயண மொழிபெயர்ப்பிலும் இல்லை.

3. இந்த இருபெருங் கவிஞர்களும் வால்மீகி இராமா யணத்தைத் தம்மொழியில் மொழி பெயர்க்கவில்லை. மூல நூலைத் தழுவி, பல மாற்றங்களைச் செய்து, புதிய படைப்பு என்று சொல்லும்படி நூலை உருவாக்கினார்கள்.

இராமராச்சியம்: 'தாமஸ் மூர்' ஒரு நல்ல நாடு எப்படி அமைய வேண்டும் என்று கனவு கண்டார்.[8] அதற்கு 'யுடோப்பியா' என்று பெயர் தரப்பட்டது. கம்பரும் துளசிதாசரும் நல்ல நாடு எப்படி அமைய வேண்டும் என்று கனவு கண்டார்கள். அது இராமராச்சியம் ஆகும். காந்தி அடிகளும் இராமராச்சியம் என்பதைப் பற்றிப் பலமுறை எடுத்துரைத்திருக்கிறார்.

கம்பர் தன் காவியத்தில் இராமன் நாடாண்டதாகக் கூற வில்லை. இராமன் முடிசூடுவதற்கு முன்பே காட்டிற்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது. பின்னர் இராமன் முடி சூடித் தன் நண்பர்களுக்கு விடை கொடுப்பதுடன் இராமகாதை நிறைவு பெறுகிறது. இராமராச்சியத்தை மிகச் சுருக்கமாகக் கூறுகிறார். இராமன் பிறந்த-தசரதன் ஆண்ட-அயோத்தியையே கம்பர் இராமராச்சியமாகக் காட்டுகிறார். முடிசூடிய சுக்ரீவனுக்கு நாட்டை ஆளவேண்டிய முறைபற்றி இராமன் கூறியதாக 12 பாடல்கள் அமைந்துள்ளன, (4224 - 4235) ஆனால் துளசிதாசர் பட்டம் சூடிய இராமன் நாடாள்வதை இலக்கிய ஓவியமாகக் காட்டியிருக்கிறார். இந்த நிலையில் கம்பன் பாடிய, இராமன் பிறந்த நாட்டையும், துளசிதாசர் காட்டும் இராமன் ஆண்ட நாட்டையும் ஒப்பிட்டுக் காணும் நிலைதான் அமைந்திருக்கிறது.

வளநாடு: 'கோசல நாட்டின் இயற்கை வளத்தைக் கம்பர் அழகிய சொல்லோவியமாகக் காட்டுகிறார். ஒரு நாட்டிய

மேடை. அங்கு நீர் அலைகளே திரைச்சீலைகளாய் இருக்கின்றன. மேகங்கள் மத்தளம் வாசிக்கின்றன, யாழிசைபோல் வண்டுகள் பாடுகின்றன. தாமரை மலர்கள் விளக்குகளைப் போல் காட்சி அளிக்கின்றன. மயில் நடனம் ஆடுகிறது. குவளை மலர்கள் கண்ணிமைக்காமல் கண்டு மகிழ்கின்றன. இதை,

> ''தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்கக்
> கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண்விழித்து
> நோக்கத்
> தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
> வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ''
> (கம்ப: நாட்டுப்படலம் 4)

இராமன் அவதாரம் செய்ய இருந்த நிலையில், அந்நாட்டின் வளத்தைக் கோசுவாமி துளசிதாசர் காட்டுகின்றார். ''அந்த நாட்டில் மிகுந்த வெப்பமும் இல்லை; குளிர்ச்சியும் இல்லை; அந்தப் பகற்பொழுது இதமான காலமாக இருந்தது. உலகம் முழுவதும் அமைதியாக இருந்தது. வானத்திலிருந்து புத்துணர்ச்சி தரும் தென்றல் வீசியது. எல்லாத் தேவர்களும் களிப்பில் திளைத்தார்கள். புனித நெஞ்சங்கள் மேன்மை கொண்டன. காடு முழுவதும் மலர்கள் பூத்தன மலைகள் மணிகளால் மின்னின. உயிர்ப்பூட்டும் ஓடைகளால் ஆறுகள் நிறைந்தன என்று அவர் வருணிக்கிறார். (முதல் புத்தகம், சௌபாய்)

இராமன் சீதையை மீட்டு நாட்டுக்கு வந்து அரசுக்கட்டில் ஏறிய பிறகு அவன் நாட்டின் வளத்தைப் பின்வருமாறு காட்டு கிறார் துளசிதாசர். ''மரங்களிலும் தோப்புகளிலும் பூக்களும் பழங்களும் எப்பொழுதும் இருந்தன. யானைகளும் சிங்கங்களும் ஒன்றாக வாழ்ந்தன. பறவைகளும் விலங்குகளும் இயற்கையான வெறுப்பை மறந்துவிட்டன. எல்லா உயிரினங்களிடத்திலும் பரஸ்பர அன்பு அதிகரித்தது. பறவைகளும் மிருகங்களும் ஆடிப் பாடின. அச்சம் நீங்கி அவை உணவுண்டன. தென்றல் மென்மை யாக, குளிர்ச்சியாக நறுமணத்துடன் வீசியது. தேனீக்கள் மலர் களிலிருந்து நிறைய தேன் சேகரித்தன. திராட்சை முதலிய பழங்கள் நிறைய திரட்டப்பட்டன. மனம் மகிழ்ந்த பசுக்கள் வேண்டிய அளவுக்குப் பால் கொடுத்தன. வயல்களில் தானியங்கள் அதிகமாக விளைந்தன. வயல்களில் மாணிக்கங்கள் நிரம்பிய சுரங்கங்கள் மலைகளில் தெரிந்தன. ஆறுகளின் கரைகளைத் தொட்டுக்கொண்டு வெள்ளம் பாய்ந்தது. அது தூய்மையாக,

குளிர்ச்சியாக, சுவையாக, தெம்பூட்டுவதாக இருந்தது. கடல் தன்கரைகளுக்குக் கட்டுப்பட்டிருந்தது. அவை கரையில்எறிந்தமணி களை மக்கள் பார்த்தார்கள். எல்லாக் குளங்களிலும் தாமரைகள் மொய்த்துக்கிடந்தன. இப்படி முழு உலகமும் மகிழ்ச்சியாக இருந்தது. அங்குத் துன்பமே இல்லை என்று யாபெரும் இந்திக் கவிஞர் நாப்பழுக்கப் பாடியுள்ளார். (இறுதிப் புத்தகம், சௌபாய் 21 chaupayi 21)

பண்பாடு: நல்லரசாட்சி நடைபெறும் நாட்டில் மக்கள் பண்பட்டவராக இருப்பார்கள். எனவே கம்பர் காட்டும் இராமராச்சியத்தில் கள்வரே இல்லை. அதனால் பொருள் களுக்குக் காவலும் இல்லை. அங்கு ஏற்பவர் இல்லை. அதனால் கொடுப்பவரும் இல்லை.

''கள்வர் இலாமைப் பொருள்காவலும் இல்லை யாதும்
கொள்வார் இலாமைக் கொடுப்பார்களும் இல்லை மாதோ''
(கம்ப. நகரப்படலம் 73)

என்று கம்பர் கூறுகிறார்.

அந்த நாட்டில் யாரும் குற்றம் செய்வதில்லை. அதனால் அகால மரணம் இல்லை. மக்கள் பண்பாடு கொண்டவராய் இருப்பதால் அங்கே யாருக்கும் கோபமே வராது.

''கூற்றம் இல்லை ஓர் குற்றம் இலாமையால்
சீற்றம் இல்லைதம் சிந்தனையின் செம்மையால்''
கம்ப. நாட்டுப்படலம் :37

அந்த நாட்டில் எல்லாருக்கும் எல்லாவிதச் செல்வமும் உண்டு. அதனால் அங்கு ஏழையும் இல்லை. செல்வரும் இல்லை, என்று பொதுவுடைமைக் கருத்தைக் கம்பர் மறைமுகமாகக் கூறுகிறார்

''எல்லாரும் எல்லாப்பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ''
(கம்ப. நகரப்படலம் 74)

''வண்மை இன்மை ஒரு வறுமை இன்மையால்
திண்மை இல்லைநேர் செறுநர் இன்மை
உண்மை இல்லை பொய்யுரை இலாமையால்
வெண்மை இல்லைபல் கேள்வி மேவலால்''
(கம்ப: நாட்டு:53)

என்றும் உரைக்கிறார்.

இராமன் அரியணை ஏறியபிறகு, அங்கிருந்த மக்கள் பெற்றிருந்த பண்பாட்டைத் துளசிதாசர் விவரித்துள்ளார்.

"ஒருவர்மீது மற்றவர் வெறுப்பு கொள்ளவில்லை யாரும் சண்டை போட்டுக்கொள்ளவில்லை. அரசனின் ஆற்றலால் துன்பத்தின் எந்தச் சின்னமும் அவர்கள் வாழ்வில் குறுக்கிடவில்லை'' (இறுதிப்புத்தகம், சௌபாய் 18)

எங்கும் நோயோ துயரமோ பயமோ இல்லை. அனைவரின் வாழ்விலும் உண்மையான இன்பமும் அழகுமே இருந்தன. வருணாசிரம கடமைகளையும் சமய நூல்களைக் கற்றலையும் மக்கள் மகிழ்வுடன் பின்பற்றினார்கள்'' (டோகா 21 Doha 21)

இராமனுடைய நாடு முழுவதிலும், தீமையால் யாரும் கஷ்டப்படவில்லை. தெய்வங்களாலோ தீய தேவதைகளாலோ யாருக்கும் உடல்நோய் வரவில்லை. எல்லா மாந்தரும் பரஸ்பர அன்புடன் இருந்தார்கள். சாஸ்திரங்களைப் போற்றினார்கள். அங்குத் தவற்றின் அறிகுறியே இல்லை. தூய்மை, அன்பு, உண்மை, ஈகை என்ற நான்கு நல்ல தூண்களின்மேல், சமயம் என்ற மண்டபம் உறுதியாக நின்றது.

இராமாயணம் இன்று எண்ணற்ற மொழிகளில் மொழி பெயர்ப்பு நூலாகவும், தழுவல் நூலாகவும் விளங்குகிறது. இராமாயண நூலாசிரியர்கள் மூவர் ஆய்த எழுத்துபோல் உள்ளனர். மேலே உள்ள புள்ளி வால்மீகி; கீழே உள்ள இரு புள்ளிகள் கம்பரும் துளசிதாசரும் ஆவர், எனலாம்.

ஆய்வு முடிவுரை

1. கம்பரும் துளசிதாசரும் வால்மீகியினுடைய இராமாயணத்தை மொழி பெயர்க்கவில்லை. அதை மூல நூல்களாகக் கொண்டு தம் விருப்பத்திற்கு ஏற்றவாறு தம் படைப்பில் மாற்றங்கள் செய்துள்ளனர்.

2 கம்பர், தன்காப்பியத்தில் நாட்டை ஆண்டதாகக் கூறவில்லை. இராமன் பட்டம் சூடிக்கொண்ட பிறகு ஆட்சி செய்த நாட்டைக் துளசிதாசர் காட்டியுள்ளார்.

3. கம்பனுக்குப் பிறகு வாழ்ந்த துளசிதாசர், கம்ப இராமாயணத்தை அறிந்திருக்கலாம், என்ற உண்மையை, இருவரின் படைப்புகளில் உள்ள ஒற்றுமைக் கூறுகள் அறிவிக்கின்றன.

விளம்பரங்களில் பண்பாட்டு மீறல்கள்

ம. சரோஜா
ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி
தூத்துக்குடி

முன்னுரை

செய்திகளை, தகவல்களை மக்களிடம் எடுத்துச்செல்லப் பயன்படும் கருவிகள் மக்கள் தொடர்புச் சாதனங்கள் எனப் பட்டன. தொடக்க காலத்தில் இச்சாதனங்கள் மக்களைத் தேடிச்சென்று தகவல்களைத் தந்தன. ஆனால் இன்றோ நிலைமை மாறிவிட்டது. மக்கள் தகவல் தொடர்புச் சாதனங் களைத் தேடிச்செல்கின்றனர். இவ்வகையில் கேட்பு காட்சிச் சாதனமான தொலைக்காட்சி மக்கள் வாழ்வில் பின்னி பிணைந்து விட்டது எனலாம்.

தொலைக்காட்சியைப் பொதுமக்கள் பெரிதும் விரும்பு கின்றனர். தொலைக் காட்சியின் வாழ்வு அதன் விளம்பரங் களில் அடங்கியுள்ளது. நிகழ்ச்சிகளின் இடையே விளம்பரங்கள் என்ற நிலை மாறி இன்று விளம்பரங்களுக்கு இடையே நிகழ்ச்சி கள் ஒளிபரப்பபடுகின்றன. எனவே தொலைக்காட்சி நிகழ்ச்சி களுக்கு இருக்கும் அதே இடம் விளம்பரங்களுக்கும் இருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

மக்கள் தொடர்புச் சாதனங்கள் சமூகப் பொறுப்பு வாய்ந்தவை. அவைகள் அறிவித்தல், அறிவுறுத்தல் போன்ற வற்றைத் தங்கள் பணியாகக் கொண்டு செயல்பட வேண்டியவை. அந்தந்த நாட்டு பண்பாட்டு மரபுகளைக் காக்கவேண்டியது அவைகளின் தலையாய கடமையாகும். இதற்குத் தொலைக் காட்சியும் விதிவிலக்கில்லை.

“மக்களது அறிவுநலம், கருத்துநலம், குணநலம், கொள்கை நலம், ஒழுக்கநலம் வாழ்க்கை நலம் முதலியன மேலும் மேலும் வளர்ந்து திரிந்து வரும் முறையைப் பண்பாடு குறிக்கும்.

பண்பாடு ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டிற்குமிடையே வேறுபடுகிறது. தொலைக்காட்சி விளம்பரங்களில் காணக் கிடக்கும் பண்பாட்டு மீறல்களை மூன்று நிலைகளில் விளக்கலாம்.

1. உரையாடல் அமைவு
2. காட்சி அமைவு
3. கருத்தமைவு

உரையாடல் அமைவு

விளம்பரங்கள் உரையாடல் வடிவில் அமைவது மிகுந்த பயனை விளைவிக்கும். கணவன் - மனைவி, மாமியார் - மருமகள், அக்கா - தங்கை, தந்தை - மகள், தாய் - மகன் எனப்பல நிலைகளில் உரையாடல்கள் அமையலாம்.

‘குழந்தை ஏன் அழுகிறது? என்ற உட்வாட்ஸ் கிரைப் வாட்டர் விளம்பரம் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெற்று விட்டது. ஏரியல் சலவைத்தூள் விளம்பரத்தில் இடம்பெறும் மாமியார் - மருமகள் உரையாடலும் இதற்குச் சான்றாக அமைந்தது.

மீரா சீயக்காய் விளம்பரம் ஒரு தாயும், மகளும் பேசுவது போன்று அமைகிறது. கூந்தல் அழகை எடுத்துச் சொல்லும் முறையில் அமைந்தது இந்த விளம்பரம் ஆகும். இறுதியில் தாய் - மகளிடம் சினிமாவுக்கா? யாருடன்? என்கிறாள் எந்த ஒரு தாயும் தன்மகளிடம் எந்த ஆண்மகனுடன் வெளியே செல் கிறாய்? என்று கேட்கும் அவலநிலை இன்னும் தமிழகத்தில் உருவாகவில்லை.

“பண்பாடு மாந்தனின் வளர்ந்த நிலையை மட்டுமன்றி படிந்த நிலையையும் எடுத்துக் காட்டுகின்றது. வளர்ந்தநிலை என்பது பின்னர் வந்த சொத்து படிந்தநிலை என்பது பரம் பரைச் சொத்து” என்ற க.ப. அறவாணனின் கூற்று இங்கு

நினைவு கூரத்தக்கது. நம் பரம்பரைச் சொத்தான பண்பாடு இவ்விளம்பரத்தில் சிதைவுறுகிறது.

காட்சியமைவு

காட்சி அமைவுகளில் இடம் பெறும் பண்பாட்டு மீறல்கள் மக்களின் மனத்தில் எளிதில் இடம்பிடித்து விடுகின்றன.

மபத்லால் நிறுவன ஆடை விளம்பரத்தில் ஒரு பெண் தன் காதலுடன் செல்லும் போது வழியில் தந்தையைப் பார்த்து விடுகிறாள். தந்தைக்குத் தெரியாமல் இருவரும் ஓடி ஒளி கின்றனர். இறுதியில் தந்தை இருவரையும் கண்டு மகிழ்ச்சி அடைகின்றார். இது ஒரு தவறான காட்சி அமைப்பாகும். ஆடை விளம்பரத்திற்கும் இதற்கும் தொடர்பே இல்லை எனலாம்.

நியூட்ரின் நிறுவனம் 'ஆசை' என்ற புதிய வகை சுவை இனிப்பை அறிமுகப்படுத்தியது. இவ்விளம்பரத்தில் தாயிடம் மகன் ஆசையுடன் ஒரு பரிசை நீட்டுகிறான். தாய் பெட்டியைத் திறக்கிறாள். பெட்டியிலிருந்து வெளிவரும் கை தாயின் முகத்தில் குத்துகிறது. இக்காட்சியின் பயன் என்ன? இனிப்புச் சுவை வெளிப்பாடா? நகைச்சுவையா? எதுவாக இருந்தாலும் இக்காட்சி அமைப்பு பொருத்த மற்றதாகத் தெரிகிறது. தாய்–மகன் உறவு என்பது போற்றத்தக்கது. புனிதமானது. அதைப் பாதிப்பதாகவே இக்காட்சி அமைகிறது.

கருத்தமைவு

கருத்தமைவு என்பது குறிப்பிட்ட சிலபொருட்களின் விளம்பரங்களுக்குப் பொருந்தி வருகின்றது. தொலைக்காட்சி என்பது நம் வீட்டு முன்னிலையில் இடம்பிடித்து விட்ட ஓர் அறிவியல் புதுமையாகும். ஒரே அறையில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைமுறையினர் ஒன்றாக அமர்ந்து நிகழ்ச்சியைப் பார்ப்பது தவிர்க்க முடியாத அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. ஆனால் பெண்கள் பயன்படுத்தும் அந்தரங்க சாதனங்கள், இல்லறவாழ் வின் இனிமைகள். இவைகள் வெளி அறைகளில் அரங்கேற்றம் பெறுகின்றன. ஆடவர்களுக்கு முன்னால் பெண்கள், பெற்றோர் களுக்கு முன் குழந்தைகள், குழந்தைகளுக்கு முன் பெற்றோர் எனப்பல நிலைகளில் தலைகுனிவு ஏற்படுகின்றது. நாகரிகம் என்ற

சொல் உயர்ந்த பண்புநிலை என்ற பொருளிலேயே முன்பு வழங்கி வந்தது. ஆனால் அந்த நாகரிகமே இன்று தவறான கருத்தமைவைத் தோற்றுவித்து விட்டது. விஸ்பர், கேர். பிரி, கோஹினூர் போன்ற விளம்பரங்களைத் தவிர்ப்பது ஒரு நல்ல கருத்தமைவிற்கு வழிகோலும் எனலாம்

முடிவுரை

இதுபோன்ற விளம்பரங்கள் இளைய தலைமுறையினரைத் தவறான வழியில் அழைத்துச் செல்கின்றன. தவறுகள் நியாயப் படுத்தப் படுவதால் தாங்களும் தவறுகளைச் செய்யத் துணி கின்றனர். மக்கள் தொடர்புச் சாதனங்களின் சமூகப் பொறுப்பை நினைவூட்டுவது அரசின் கடமையாகும். தொடர்புச் சாதனங்களும் வணிகநிலையை மீறியுள்ள தங்களின் மேலான நிலையை உணர்ந்து செயல்படுவது அவசியமாகிறது.

பிங்கலநிகண்டு — பதிப்பு வரலாறு

மா. சற்குணம்
ஸ்ரீ.சி.பா.சு. தமிழ்க்கல்லூரி
மயிலம் — 604 304

தமிழ் நிகண்டுகளில் சேந்தன் திவாகரத்தையடுத்துத் தோன்றியது பிங்கல நிகண்டு. நிகண்டு வரலாற்றில் தொடக்க காலத்தைச் சார்ந்த பிங்கலந்தை பெருஞ் சிறப்புடையது. ஏறத் தாழ கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் தோன்றிய இதன்கண் திவாகரம், சூடாமணி, உரிச்சொல் நிகண்டு, கயாதரம், ஆசிரிய நிகண்டு, பாரதிதீபம் முதலிய பல நிகண்டுகளிலும் இல்லாத மிகப்பல சொற்கள் இடம் பெற்றுள்ளன. இதன் பதிப்பு வரலாற்றை அறிதல் இதனைப் பயன் கொள்வார்க்கு நலம் பயக்கும்.

பிங்கல நிகண்டு முதலில் தி. க. சுப்பராயச் செட்டியார் என்பவரால் பரிசோதிக்கப் பெற்று சிவன் பிள்ளை என்பவரால் கி.பி. 1890ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. இதன் முகவுரையில்

> '' இதுகாறும் ஏட்டுப் பிரதிரூபமாயக்
> கற்றோர்பால் அருகி வழங்கி வந்தமையால்
> இது உபயோகமாய்ப் பலர்க்கும் பயன்படப்
> பல பிரதிகளைப் பல நாளும் வருந்தித்தேடிப்
> பல இடங்களினின்றும் பெற்று ஆதிதிவாகரம்,
> கயாகரம் முதலிய நிகண்டுகளையும் ஓர்
> பற்றுக் கோடாகக் கொண்டு வழுவறப்
> பரிசோதித்து அச்சிட்டிருக்கின்றேன்''

எனக் காணப்படும் பகுதியிலிருந்து பதிப்பாசிரியரின் அரிய முயற்சி புலனாகும். இந்நூற்பதிப்பில் நூற்பாக்கள் ஒரு பக்கத்திலும்

அவற்றுக்கான உரைவிளக்கம் எதிர்ப் பக்கத்திலுமாக அமைந்துள்ளன.

முகவுரையையடுந்து பதிப்பகச் செய்திகளும், பின்னர் மூன்று பக்கங்களில் சிறப்புப் பாயிரம் உரையுடனும் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அடுத்து நூற்பகுதி அச்சாகியுள்ளது. நூற்பாவின் தொடக்கத்தில் நூல் முழுமைக்குமான தொடர் எண்களும், நூற்பா இறுதியில் வலதுபுறம் அவ்வவ்வியலுக்குரிய தொடர் எண்களும் தமிழ் எண் குறியீடுகளால் தரப் பெற்றுள்ளன. பத்துத் தொகுதிகளிலும் 4121 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன.

ஒரு சொல் பல்பொருள் விளக்கும் பத்தாம் தொகுதியில் உள்ள நூற்பாக்களைப் பிங்கலர் அமைத்த முறையிலன்றி அகராதி முறையில் அமைத்து இதன் பதிப்பாசிரியர் வெளியிட்டுள்ளார். எனினும், தமக்குக் கிடைத்த சுவடிகள் ஒன்றிலேனும் அகராதிமுறையில் சொற்கள் காணப்பெறவில்லை என்பதால் சூத்திரங்களின் வைப்பு முறையை மாற்ற, பதிப்பாசிரியர்க்கு எவ்வகை ஆதாரம் கிடைத்ததோ அறியக் கூடவில்லை என்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

அகரநிரலில் நூற்பாக்களை அமைத்தால் தான் தேவையான சொல்லுக்குரிய பொருள்களை எளிதில் கண்டறியலாம் எனக் கருதிப் பதிப்பாசிரியர் தாமாகவே ஏட்டுப்பிரதிகளில் இருந்த சூத்திர முறையை மாற்றி அமைத்திருக்கக் கூடும். அகராதி நிகண்டு முதலியவற்றைப் பார்த்ததனால் அவருக்கு இவ்வெண்ணம் தோன்றியிருக்கலாம். எப்படியாயினும், இவ்வாறு நூலாசிரியர் அமைத்த முறையை அவர் மாற்றிப் பதிப்பித்தது ஒரு குறையேயாகும். இப்படிச் செய்ததால் நூலாசிரியர் பின்பற்றிய முறையை அறிய இயலாமற் போய் விடுகிறது நூலின் இறுதியில் 'பிங்கல நிகண்டு அகராதி, 27 பக்கங்களிலும், 'வகையறிதல்' எனும் தலைப்பில் அட்டவணை ஒன்றும், 'சோதனபத்திரம்' என்ற பெயரில் பிழைதிருத்தம் இரு பக்கங்களிலும் தரப் பெற்றுள்ளன.

பிங்கல நிகண்டிற்கு 1917ஆம் ஆண்டில் மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலையிலிருந்து ஒரு பதிப்பு வெளிவந்தது. அதில் முதற் பதிப்பைச் செப்பம் செய்யும் முயற்சி ஏதும் மேற்கொள்ளப் பெறவில்லை. முன் பதிப்பினையொட்டியே இதுவும் அமைந்தது.

588 பக்கங்களில் 4121 நூற்பாக்கள் அச்சிடப் பெற்றுள்ளன. இறுதி 36 பக்கங்களில் பெயரகராதி ஒன்று முளது. இது குறிப்பு நோக்கீட்டிற்கு மிகவும் பயன்படக் கூடியது.

அடுத்து, பல ஆண்டுகளுக்குப் பிறகு திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் 1968-இல் இந்நிகண்டுப் பதிப்பு ஒன்றை வெளிக் கொணர்ந்தது. இதுவும் முற்பதிப்பின் மறு வெளியீடாகவே அமைந்துள்ளது. 1978 இல் இதனை மீண்டும் கழகம் இரண்டாம் பதிப்பாக வெளி யிட்டுள்ளது. இப்பதிப்புகளில் சூத்திரங்கள் யாவும் உரையுடன் அமைந்துள்ளன. சூத்திரங்களுக்கு நூல் முழுமையாகத் தொடர் எண்கள் தரப்பெற்றுள்ளன. கழகப்பதிப்பு 544 பக்கங்களுடையது. அதன் பிற்பகுதியில் 47 பக்கங்களில் பெயர் முதற்குறிப்பு அகர வரிசை ஒன்று தரப்பெற்றுள்ளது.

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பிங்கல நிகண்டினைச் செப்பமாகப் பதிப்பிக்க விரும்பினார். அவர் பதிப்பிக்கத் தொடங்கிய அப்பணி முதலிற் சிறிதளவே அச்சாகிப் பின் ஏனோ முழுமையடையாமற் போனது என்னும் செய்தியை நிகண்டு சொற்பொருட் கோவை எனும் நூலில் மு. சண்முகம் பிள்ளை குறித்துள்ளார். அச்சாகிய இந்நிகண்டினை இப்போது கிடைக்கும் அதன் சுவடிகளுடன் ஒப்பிட்டுச் செப்பம் செய்து வெளியிடுவது இன்றியமையாததாகும்.

ஆசிரிய நிகண்டு, சூடாமணி நிகண்டு போன்றவற்றுக்குப் பிங்கல நிகண்டு முதல் நூலாகக் கொள்ளப்பெற்றது என்பர். உரியியல் இறுதியிலே பவணந்தியாரும் 'பிங்கல முதலா நல்லோர் உரிச் சொலின் நயந்தனர் கொளலே' என்றார். எண்ணற்ற வடசொற்கள் பிங்கல நிகண்டில் இடம் பெற்றுள்ளன. இதன் கண் உள்ள சொற்களுள் பலவற்றைத் திவாகரத்திலோ அல்லது பின்வந்த பல நிகண்டுகளிலோ காண இயலாது. இருப்பினும் பதிப்பிக்கப்பெற்ற பிங்கல நிகண்டு, பற்பல சொற்களின் உண்மை வடிவம் திரிந்த நிலையில் பிழைகளுடன் காணப்பெறு கிறது என்பதை அறியலாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டு குறிப்பிடுதல் பிங்கல நிகண்டுப் பதிப்பில் திருத்தம் செய்ய வேண்டுவதன் இன்றியமையாமையைப் புலப்படுத்தும்.

தொகுதி (நூலின் உட் பிரிவு)	சரியான சொல் வடிவம்	தவறான வடிவம் (நூலில் உள்ளவை)	பொருள்
1. வான்வகை	பாதம்	பதம்	நீர்
,,	சீகரம்	சிகரம்	துளி
2. வானவர்வகை	பிருகற்பதி	பிரகற்பதி	வியாழன்
,,	இரித்தை	இருத்தை	நாழிகை
3. ஐயர்வகை	பாடண்டத் துறை	பாடாண்டத் துறை	புறச்சமய நெறி
,,	அதிராத்திரம்	அத்திராத் திரம்	யாகங்களுள் ஒன்று
4. அவனிவகை	கோவிந்தர்	விந்தர்	இடையர்
,,	குரும்பி	குறும்பி	புற்றாஞ்சோறு
5. ஆடவர்வகை	பொல்லர்	பொல்லார்	தையற்காரர்
,,	அண்ணன்	அண்ணல்	மூத்தோன்
6. அனுபோக வகை	கைரிகம்	காரிகம்	காவிக்கல்
,,	சரக்கு	சாக்கு	பொன்
7. பண்பு, செயல் வகை	மேம்பாடு	மெய்ப்பாடு	புகழ்
,,	துயல்வரல்	துயில்வரல்	அசைதல்
8. மாப்பெயர் வகை	குடஞ்சுட்டு	குடம், சுட்டு	பசு
,,	ஓது	ஓதி	பூனை
9. மரப்பெயர் வகை	ஆரக்குவதம்	ஆர்க்குவதம்	கொன்றை
,,	நீவாரம்	நீர்வாரம்	குளநெல்லு

சான்றுக்கு சிலவே ஈண்டு சுட்டப்பெற்றன. மேலும் பல சொற்கள் இவ்வாறு உள்ளன. எனவே, அகராதிப் பணிக்கு நிகண்டுகளைப் பயன்படுத்துவோர் சரியான பதிப்புகள் வெளி வரின் மட்டுமே அவற்றை ஏற்று முழுமையாகப் பயன்கொள்ள முடியும். பிங்கல நிகண்டு, பிற நிகண்டுகளில் இல்லாத பல சொற்களைப் பெற்றிருப்பதால் இதனை ஒப்பு நோக்கி சரி செய்வது இன்றியமையாத ஒரு பணியாகும்.

தமிழர் பண்பாட்டில் பெண்ணியமும் எதிர்விளைவுகளும்

மு. சற்குணவதி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

முன்னுரை

மண்ணோடு தொடர்புடைய மானிட வாழ்க்கையில் மாற்றங்கள் என்பது கால வளர்ச்சியால் கால் ஊன்றி வளர்ந்து வருகிறது. இதன் அடிப்படையில் சில புதிய இயக்கங்கள் தோன்றி மனித எண்ணங்களைத் திசைத்திருப்பி பருவக்காற்று போல் வீசி வருகின்றன. அவற்றுள் உலகளாவிய நிலையில் இன்று பேசப்படுவது 'பெண்ணியம்'. இப்பெண்ணியம் தமிழர் பண்பாட்டில் ஏற்படுத்தியுள்ள எதிர்விளைவுகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பெண்ணியம் சொற்பொருள் விளக்கம்; பெண்ணியம் என்ற சொல் 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லை அடிப்படையாகக் கொண்டது, இச்சொல் 'Femina' என்ற இலத்தின் சொல்லி லிருந்து மருவி வந்தது. Femina என்ற சொல்லுக்கு 'பெண்ணின் குணாதியங்களைக் கொண்டுள்ள' என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் 'பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே பெண்களின் உரிமை களைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்: இந்த இயக்கத்தின் வித்து கி.பி. 1400 இல் ஐரோப்பாவில் இடப்பட்டது. 1830 இல் அமெரிக்காவில் தோன்றியது. வட இந்தியாவில் 1980ல்' ஷபிர், மேளர் என்று அழைக்கப்படும் பெயர்களில் பெண்களுக்கான முகாம்களை பல இடங்களில் நடத்தினர். இங்கு பாலியல் பலாத்காரம், புராணக்கதைகள், காவியக்கதைகள், நாட்டுப்புறக் கதைகள் போன்றவற்றை விவாதித்தனர். இதன் பிறகு

இந்தியாவில் பெண்ணிய அரங்குகள் மாநில வாரியாகத் தோற்றம் பெற்றன. தமிழ் நாட்டில் வாய்ஸிங் சைலன்ஸ், மௌனக் குரல், பூமிகா, சுவாதி விடுதலை அரங்கம், சென்னைக் கலைக் குழு, போன்றவை.

1993 இல் சென்னையில் தமிழகப் பெண்கள் எழுச்சி மையம் 2 நாள் விழா நடத்தியது. 1996 இல் மௌனக்குரல் அரங்கம் திருமதி அ. மங்கை, திருமதி மீனா சுவாமிநாதன், வி ஆர். தேவிகா அவர்களால் அகில இந்திய பெண்ணிய கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

தமிழ் நாட்டில் பெண்ணியம் வலியுறுத்திய கருத்துகள்; பெண்களின் இரட்டைச் சுமைகள், பாலியல் பலாத்காரம், குடிகாரக் கணவனின் சித்தரவதை, பெண்களின் சார்புநிலை, வரதட்சணைக் கொடுமை, பெண்சிசுக் கொலை, பெண்கள் முன்னேற்றம், இறந்த தகப்பனுக்கு சிதைக்குத் தீ மூட்டும் உரிமை போன்ற மரபு ரீதியான பழக்கத்தை எதிர்த்தல், கருக் கொலை போன்ற மையக் கருத்துகள் பேசப்பட்டன.

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் பெண்ணிய வாதிகள் நாடகத்தின் மூலமாகவும் கருத்தரங்குகள் மூலமாகவும் பெண்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று கூறி வருகின்றனர். பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக பெண்களே திரண்டு போராட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர். மேலும் 'பெண்ணியம்' என்பது மேலை நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்குள் நுழைந்து வளர்ச்சி அடைந்த ஒரு இயக்கம் என்றும் இந்நாட்டு மக்களுக்கு அதனை உணர்த்துவது அவசியம் என்றும் கூறி வருகின்றனர்.

பெண்ணியமும் நாட்டுப்புறப்பாடல்களும்: வாழ்க்கையில் நடக்கின்ற நிகழ்ச்சிகளின் தாக்கத்தால் எழுகின்ற உணர்ச்சியும் சிந்தனையும் தான் நாட்டுப்புற பாடல்களாகப்பாடப்படுகின்றன இப்பாடல்கள் 'பெண்ணியம்' என்பது புதிய ஒன்றல்ல. பெண்களால் காலங்காலமாக உணரப்பட்டு வந்திருக்கிறது என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

ஒரு தாய் தனது மகள் கல்வி கற்க விரும்புவதை,

''பத்துபவுன் மெத்தையிலே படிக்கிறே இன்னிருந்தேன்
படிப்பை மறந்தியே ஆத்தா
பச்சை மண்ணைத் தோண்டி
படுக்கவரம் கேட்டியே ஆத்தா''

என்னும் பாடலும், பெண்கள் ஆண்களுக்கு எதிர்ப்புக் குரல் கொடுப்பதை,

ஆண் ; அஞ்சு ரூபா தாரேன்
அரக்கு போட்ட சேலை தாரேன் – உன்
ஆத்தாள் அறியாம நீ
வாக்கப்பட்டு வந்திரடி

பெண் : அஞ்சு ரூபா வேண்டாம்
அரக்கு பட்டு சேலை வேண்டாம்
தட்டான் அறியாம – நீ
தாலிபண்ணி வந்திரடா!''

என்னும் பாடலும் வெளிப்படுத்துவதை அறியலாம்.

''குத்தின அரிசி ஒரலிலே
கொளிக்க அரிசி மொறத்திலே
ஆக்கின சோத்துக்கு உண்ணானம் பேசின
இந்தாடா மாமா உன் தாலி''

என்னும் பாடல் பெண் உரிமையைப் பேசுவதாகவும் அமைந்து உள்ளது. எனவே பெண் உரிமை என்பது புதிதாகப் பெண்களால் உணரப்பட வேண்டிய ஒன்று என்பதும் புதிதாக உணர்த்தப்பட வேண்டிய ஒன்று என்பதும் பொருளற்றது என்பதை மேற்கண்ட நாட்டுப்புறப் பாடல்கள் வழி அறியலாம்.

பெண்ணியம் ஏற்படுத்தும் எதிர் விளைவுகள்

1. சமுதாய அமைப்பு, வாழ்க்கைச் சூழல், வரலாற்று நிலை ஆகியவற்றை வெளிப்படுத்துவதாகவே இலக்கியங்கள் அமைந்துள்ளன. அவையாவும் பெண் அடிமையைச் சுட்டுவ தாகப் பெண்ணியல் வாதிகளால் பேசப்படுகின்றது.

உதாரணமாக,

''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்''

என்ற குறள் பெண் அடிமையை உணர்த்துவதாகக் கூறப்படு கின்றது. பாரதிதாசனின் குடும்ப விளக்கும் பெண்ணடிமையைச் சுட்டுவதாக விமர்சிக்கப் படுகிறது.

2. வரதட்சணைக் கொடுமையைப் பெண்கள் மட்டும் எதிர்த் தால் போதும் என்கிறநிலையில் திசை திருப்பப்படுவதால் அவை நிலையான மாற்றத்தைத் தருவதற்கு மாறாக மறைச்சங்கிலியாகவே நடைமுறையில் உள்ளது.

3. 'சட்டத்தில் சீர்திருத்தமே' குறிக்கோள் என்பது போல் பெண்கள் முன்னேற்றம் என்கிற நிலையில் மகள் இறந்த பிறகு அவளது சொத்துகள் கணவன், பிள்ளைகளுக்குச் சேருதல் கூடாது, அவளை ஈன்ற பெற்றோருக்கே சேர வேண்டும் என்கிற கருத்துகள் குடும்பத்தில் சீர் குலைவை ஏற்படுத்துகின்றன.

4. குழந்தையை உருவாக்கும் செல்கள் அடங்கிய அந்த உதிரம் எப்படி தூய்மை யற்றதாகும். நம்மை நாமே இழிவாகக் கருதி ஒடுங்கி நிற்க வேண்டியதில்லை என்ற கருத்து புகட்டப்படுகிறது. ஆனால் அவ்வாறு பெண்கள் யாரும் நினைப்பது இல்லை. கிராமப்புறப்பெண்கள் அதற்கு முதன்மைகூட தருவது இல்லை என்பதை இவர்கள் மறந்து, தேவையில்லாததைப் பிரகடனப்படுத்துகின்றனர். அதனால் மக்களிடையே அருவறுப்பே ஏற்படுகின்றது.

5. இயல்புக்கு மாறாகப் பெண்களும் பலசாலிகள் ஆண்களுக்கு நிகரானவர்கள் என்று வலியுறுத்தப்படுவதினால் எல்லாத் துறைகளிலும் பெண்கள் நுழைய முனைவதால் தேவையற்ற போட்டிகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றன.

6. திருமணம் என்பது பெண்களின் மேல் சுமத்தப்படும் சிலுவைப் போன்றது ஆண் துணையின்றியே வாழலாம் என்கிற கருத்துகள் புகட்டப்படுவதால் திருமண பந்தங்கள் களைந் தெரியப்படுகின்றன.

7. பெண்களும் கல்வி கற்க வேண்டும் என்று கூறும் ஆண்கள் பேச்சுகள் எல்லாம் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கவே என்னும் கருத்துகள் பெண்களுக்கு ஆண்கள் மீது அதிக வெறுப்பினை ஏற்படுத்துகின்றன.

8. குடும்ப அமைப்பு கிடைக்காதா! என்று ஏங்கும் நிலைக்கு மேலை நாட்டில் பெண்ணியத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஏங்கும் இந்தக்காலக் கட்டத்தில் நம் நாட்டு பெண்ணியல் வாதிகள் குடும்ப அமைப்புகளில் இருந்தும் விலகிச் செல்லலாம் தேவைப்பட்டால் விருப்பம் போல் யாருடனும் உறவு வைத்துக் கொள்ளலாம் என்கிற இழிநிலையை உருவாக்கி வருகின்றனர். அதனால் குடும்ப அமைப்பு பாதிக்கப் படுவதோடு குழந்தைகளின் எதிர்காலமும் வீண் அடிக்கப்படுகின்றது.

9. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதெல்லாம் பெண்களை அடிமைப்படுத்துவதற்காகத் தோன்றியதே என்று சொல்வதினால் ஆண்கள் ஒருத்தியோடு வாழ வழிவகைச் செய்வதற்கு மாறாகப் பெண்கள் ஒருவனோடு வாழ்வதில் இருந்து விலகி எப்படியும் வாழலாம் என்கிற ஒழுக்கக் கோடான நிலை உருவாகியுள்ளது.

10. விதவை மறுமணமும், அறுத்துக்கட்டும் பழக்கமும் நம் நாட்டில் புதியதல்ல. இதனைப் புதியது போல் விளம்பரப் படுத்துவதால் மறுமணத்தில் விருப்பமில்லாத பெண்களும் கட்டாய படுத்தப்படுகின்றனர். சிறு சிக்கல்களைக் கூடச் சகிக்கும் மனமின்றி அவசர முடிவெடுத்து விவாகரத்தாகி குடும்பம் நிலை குலைகின்றது.

முடிவுரை

1. பெண்களின் பிரச்சனை என்பது அவர்களின் தனிப் பட்டப் பிரச்சனை அன்று அது மனிதப்பிரச்சனை. ஒரு குடும்பத்தின் ஒரு நாட்டின் பிரச்சனை. ஒரு சமுதாயப் பிரச்சனை, என்பதைப் பெண்ணியல் வாதிகள் உணர வேண்டும்.

2. இதனைப் போக்கிக் கொள்ள பெண்களால் மட்டுமே இயலாது. இதனை வேரறுக்க வேண்டிய பொறுப்பு ஆண்களிடமே அதிகம் உள்ளது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

3. பெண்களுக்கு மட்டும் பிரச்சனைகள் என்று பிரித்து அணுகாமல், சமுதாய நிலையில் வைத்து, ஆண் பெண்ணுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக நின்றாலும் பெண் ஆணுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக நின்றாலும் தெளிவாகக் கவனித்து அணுகுவதே நிலையான சமூக முன்னேற்றத்திற்கு வழியாக அமைய முடியும்.

4. எந்த நிலையிலும் ஆண் இடத்தைப் பெண்ணோ, பெண் இடத்தை ஆணோ பெறுதல் என்பது இயற்கைக்கு முரணான தாக அமைவதோடு, முடியாததாகவும் அமையும்.

5. அவரவர்கள் அவரவர்களாகவே வாழ்வதுதான் இயல்பு இருபாலினரிடமும் ஒத்துபோதலும் சம முன்னேற்றமும் ஏற்பட தடையாக இருப்பவற்றை மட்டுமே நுணுகிப் பார்த்தல் சிறப்புடையதாகும்.

ஈ. த. இராசேசுவரி அம்மையாரின் அறிவியல் நூற்பணி

எம்.எஸ். சாந்தா
இராணி மேரி கல்லூரி
சென்னை - 600 004

தமிழ் மொழி பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ள இக்காலத்திலும், தமிழில் அறிவியல் நூல்களை எழுத இயலுமா என்று ஐயவினா எழுப்புவோர், கற்ற அறிஞர்களிடையேயும் உளர். "அறிவியல் கலைச் சொற்கள் தமிழில் போதா, ஆங்கிலத்தில் புதிய புதிய அறிவியல் நூல்கள் நாடோறும் எழுதப்பட்டு வருகின்றன; அவ்வேகத்திற்கேற்ப அந்நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கப் புதுப்பது கலைச் சொற்களை உருவாக்குவதும் கடினமே" என்றும் இத்தகையோர் கூறி வருகின்றனர். ஆங்கிலக் கலைச் சொற்களை மொழி பெயர்க்காமலோ, புதிய கலைச் சொற்களை உருவாக்காமலோ, உள்ளவாறே பயன்படுத்தி மணிப்பிரவாள நடையில் எழுதலாமே என்றுரைப்பாரும் உளர். ஆனால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பது - ஐம்பதுகளிலேயே அறிவியல் நூல்களைத் தமிழில் எழுத இயலும் என்று உலகுக்கு எடுத்துக்காட்டிய சாதனையாளர் ஈ.த. இராசேசுவரி அம்மையார்.

புது தில்லியில் உள்ள இந்திய பௌதீக ஆய்வகத்தின் தலைவராக 1953-ஆம் ஆண்டில் பணியாற்றிய டாக்டர். கே.எஸ். கிருஷ்ணன், அம்மையாரின் "பரமாணுப் புராணம்" என்ற நூலுக்குத் தந்துள்ள முன்னுரை மேற்கூறப்பட்ட கருத்தினை அணி செய்வதாக அமையும். "சுதந்திரப் போராட்ட வீரரும்" அரசியல்வாதியும், பேரறி ஒருவமாகிய இராஜாஜி "தமிழில் முடியுமா" என்ற ஒரு நூலை எழுதினார். மேனாட்டு மொழிகளைப் போலத் தமிழிலும் அறிவியல் நூல்களை எழுத முடியும் என்பது தான் இந்நூலின் உட்கருத்து' என்று கூறும் கிருஷ்ணன்,

இராசேசுவரி அம்மையாரின் நூற்பணியைப் பின்வருமாறு பாராட்டுகின்றார்.

"இப்பெரியார்கள் நட்ட பயிர் தழைத்தோங்கிக் கதிரிட்டு வருகிறது. நம் பாரதியார் கனவும் நிறைவேறி வருகின்றது. இதற்கு ஸ்ரீ இராசேசுவரி அம்மையார் இயற்றி பௌதீக நூல்களே சான்றாகும். தமிழில் முடியுமென்று காட்டுவதோடு கூட பௌதிகத்தில் அநேக துறைகளில் புதிதாக இறங்க நினைப்பவர்கள் இது கொண்டே இறங்கி நீந்துவதற்கும் சாதனமாக அமைந்தவை இவ்வம்மையாருடைய நூல்கள்". இத்தகைய சிறப்பு வாய்ந்த இராசேசுவரி அம்மையாரின் அறிவியல் நூற்பணியைத் தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்தும் முயற்சியின் விளைவே இக்கட்டுரை.

1. வாழ்வும் படைப்புகளும்

பிறப்பும், கல்வியும்: இராசேசுவரி அம்மையார் 18—10—1906 அன்று தமிழ்த்தாய் செய்த தவப்பேறாக இவ்வுலகிற் தோன்றினார். இவருடைய தந்தையார் ஈ. த. தணிகாசலம் என்னும் சான்றோராவர். பெண் கல்வியின் பெருமையை உணர்ந்த இப்பெரியார் தமக்குப் பிறந்த நான்கு பெண் குழந்தைகளுள் சொக்கம்மாள், இராசேசுவரி, பத்மாவதி, ஆகிய மூன்று பெண்மக்களையும், பெண் கல்வி பெரிதும் போற்றப்படாத ஒரு கால கட்டத்தில் பட்டதாரிகளாக்கியது வியப்பிற்குரியது; போற்றற்குரியது. இராசேசுவரி அம்மையார் தமிழ்க் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் நன்கு பயின்றார். ஆங்கிலத்தில் எம். ஏ. பட்டமும், பின்னர் ஆசிரியர். பயிற்சிக் கல்லூரியில் பி.டி. பட்டமும் பெற்றார்.

பணி: 1932 ஆம் ஆண்டு சென்னை இராணிமேரி கல்லூரியில் விஞ்ஞானத் துணைச் சொற்பொழிவாளராகப் பணியற் சேர்ந்தார். இராசேசுவரி அம்மையார் 1946-இல் வெலிங்டன் பெருமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானச் சொற்பொழிவாளராகப் பணியாற்றினார். 1953-ஆம் ஆண்டு இராணிமேரி கல்லூரியில் பௌதீகத் துறைத் தலைவரானார்.

நூல்கள்: ஆசிரியர் பணி மூலம் மாணவர்கட்கு அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிய இராசேசுவரி அறிவியல் நூல்கள் எழுதித் தமிழுக்கு வளம் சேர்த்துள்ளார். இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் வருமாறு:

வ. எண்.	நூற் பெயர்	பதிப்பு விவரம்	பிற செய்திகள்
1.	வானக் கப்பல்	சென்னைத் தமிழ்ச் சங்க வெளியீடு–7, சென்னைத் தமிழ்ச் சங்கம் சிந்தாதிரிப் பேட்டை சென்னை – 1945, (1942-இல் சொற் பொழிவு – பிறகு நூல் வடிவம்)	இரண்டு பாகங்களாக அமைந்தது, விண்ணிற்பறக்கும் விமானங்கள், இராக் கெட்டுகள் ஆகியவற்றின் தோற்றம் வளர்ச்சி பற்றிக் கூறுவது.
2.	சூரியன்	1946 ... (அம்மையார் எழுதிய முதல் நூல்)	தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் பாராட்டினைப் பெற்றது. பி.ஏ. வகுப்பு மாணவர்கட்குப் பாடமாகப் பல முறை தென்னாட்டுப் பல் கலைக்கழகங்களில் வைக்கப் பட்டது. வானம், கோள்மீன், நாள்மீன், சூரியன் பற்றி உரைப்பது.
3.	வானக் குமிழி	1949 ... (1942-இல் சொற்பொழி வாற்றப்பட்டுப் பின்னர் நூல் வடிவம் பெற்றது)	இந்நூல் விண்ணிற்பறப்பதற்காக உருவாக்கப்பட்ட இராட்சத பலூன்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்குவது இந்நூலும் பி.ஏ. வகுப்பிற்குப் பாடமாக வைக்கப்பட்டது. இந்நூலின் 3–ஆம் பாகம் ஒரு திருமண விருந்தில் வந்தவிருந்தினர் கட்கும் மண விருந்து நூலாகத் தரப்பட்டுள்ளது.
4.	குழவி உள்ளம்	சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளிப் பதிப்பு சென்னை தமிழ்ச்சங்க வெளியிடு – 1950.	தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்றது. குழவி உள்ளம் பற்றிய கலைக் களஞ்சியம் என்று போற்றப் படும் மிக விரிவான உள வியல் நூல்.

வ.எ.	நூற் பெயர்	பதிப்பு விவரம்	பிற செய்திகள்
5.	பரமாணுப் புராணம்	தருமபுர ஆதீன வெளியீடு - 1953.	அணுபற்றிய கொள்கைகளின் விளக்கம், அணுவின் அளப்பரிய ஆற்றல், அணுகுண்டு ஆகியவை பற்றி எடுத்துரைப்பது. இந்நூலை வெளியீட்ட தருமபுர ஆதீனம் அம்மையாருக்கு "விஞ்ஞானச்செல்வி" என்னும் பட்டத்தை வழங்கியது.
6.	ஐன்ஸ்டைன் கண்ட காட்சி	விவரங்கள் சரிவரக் கிடைக்கவில்லை.	ஐன்ஸ்டைன் பற்றியது.

மேற்கண்ட நூல்களைத்தவிர வேறு சில நூல்களையும் பல கட்டுரைகளையும், அம்மையார் எழுதியதாகக் கூறப்படுகின்றது. ஆனால் இவை வெளிவந்த விவரங்கள் கிடைத்தில.

பிறதொண்டுகள்: ஆசிரியப்பணியிலும் அறிவியல் நூற் படைப்புப் பணியிலும் தம் வாழ்நாள்களைச் செலவிட்ட இராசேசுவரி சிறந்த சொற்பொழிவாளராகவும். திகழ்ந்தார். அறிவியல் சொற்பொழிவுகள் மட்டுமின்றிச் சமய, தத்துவச் சொற்பொழிவுகளும் ஆற்றியுள்ளார். தமிழ் இலக்கியத்தையும், சைவ சித்தாந்தத்தையும், அறிவியலையும், தொடர்புபடுத்திப் பேசுவதில் இவ்வம்மையார் வல்லவர். சிந்தாதிரிப்பேட்டை நடுத்தரப்பள்ளி ஆணைத்தலைவராக விளங்கினார். அப்பள்ளியின் உயர்நிலைப் பிரிவு திறம்பட இயங்கத் துணைபுரிந்துள்ளார்.

மறைவு: விஞ்ஞானச் செல்வியாகவும், மெய்ஞ்ஞானச் செல்வியாகவும் விளங்கிய இராசேசுவரி அம்மையார்1-3-1955 ஆம் ஆண்டு தமது 49-ஆம் வயதில் மறைந்தார். தமிழகம் இன்னும் பல அறிவியல் நூல்களைப் பெறும் வாய்ப்பை இழந்தது.

2. அறிவியல் நூல் படைப்பாக்கக் கோட்பாடுகள்

இந்தியா அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த காலத்தும், விடுதலை பெற்றுப் பீடுநடை போடத் தொடங்கிய காலத்தும் (ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பது ஐம்பது கால கட்டம்) தமிழ்மொழி மேலும் புதுப் பொலிவும், புது வளர்ச்சியும், பெற வேண்டுமென்னும் தமிழ் ஆர்வத்தின் காரணமாக மேலே கூறப் பெற்ற அறிவியல் நூல்களை எழுதியிருக்கின்றார் இராசேசுவரி. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வம் யாவும் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்" என்று பாரதி விடுத்த அறைகூவலை ஏற்று நடந்த புரட்சிப் பெண்மணி இவ்வம்மையார். ஆங்கில மொழி நூல்களில் இருந்த அறிவியல் செல்வத்தைப் படித்து, நுகர்ந்து உணர்ந்து, தமிழ்நூல்களாகத் தந்துள்ளார். மொழிபெயர்ப்பு நூல்களைப் படைக்காமல், தனித்தன்மை (original) வாய்ந்த மூலநூல்களாகவே தமிழில் இந்நூல்களை இவர் படைத்திருப்பது இவரது தனிச்சிறப்பாகும். இந்நூல்களின் மூலம் இவரது அறிவியல் நூல் படைப்பாக்கக் கோட்பாடுகள் புலனாகின்றன. இக்கோட்பாடுகள் இன்று தமிழில் அறிவியல் நூல் எழுதுவார்க்கும் வழி காட்டவல்லன. எனவே இக்கோட்பாடு களிற் சில இவண் சுருக்கமாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

1. தெளிவு: தாம் கூறும் அறிவியற் கருத்துகளைத் தெளிவாக விளக்குவது இராசேசுவரி அம்மையாரின் ஒரு கோட்பாடு. இவரது நூல்களில் இயற்பாகுபாடுகள் உட்பிரிவுகள் ஆகியவை நயமான தலைப்புகளுடன் அமைந்திருக்கும். இன்றி யமையாத கருத்துகள் வரைபடங்களுடன் விளக்கப்பட்டிருக்கும், வரலாற்று நோக்கில் செய்திகள் கூறப்படும்.

2. மொழிபெயர்ப்பு, கலைச்சொல்லாக்க நெறிமுறைகள்

அம்மையார் தாம் பெரும்பாலும் சென்னைப் பல்கலைக்கழக ஆதரவில் வெளியான கலைச்சொற்களையே பயன்படுத்து கின்றார். உலகப் பொதுப் பெயர்களையும், குறியீடுகளையும் மொழிபெயர்க்க முனையாமல் உள்ளவாறே வழங்குகின்றார்.

இக்காலத்தில் தமிழில் அறிவியல்நூல் படைக்க விழைவார்க்கு இராசேசுவரி அம்மையாரின் நூல்கள் கலங்கரை விளக்கமாக விளங்கத்தக்கன.

வில்லுப்பாட்டின் வழித் தகவல் தொடர்பு

அ. சாந்தி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

கிராமங்களில் பாமர மக்களிடையே இறையாண்மையும், மானிட மாண்புகளும், தனிமனித ஒழுக்கத் தத்துவங்களும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருவதற்குப் பெரிதும் துணை புரிந்து வருபவை, நாட்டுப்புறக்கலைகளே என்பதை யாராலும் மறுக்க முடியாது. மக்களின் கண்ணையும், கருத்தையும் கவர்ந்து இன்று வரை நின்று நிலவும் தமிழ்க் கலைகளில் ஒன்றே வில்லுப் பாட்டு.

வில்லுப்பாட்டு: வில்லுப்பாட்டு ஒரு பழந்தமிழ் இனிய இசைக்கலை என்று பெருமையாகக் கூறலாம். தமிழில் ஒரு தனி இலக்கியமாகக் கருதி வியக்கத்தக்க நிலையில் வில்லுப்பாட்டு அமைத்தளிக்கப்பட்டு வருகிறது.

வில்லுப்பாட்டிற்கு குறைந்தது ஐந்து பேர் தேவை. வில்லின் கூந்தலானது பனங்கம்பு (அ) மூங்கிலால் சீவிச் செய்யப்பட்டு இருக்கும். பல வண்ணத்தாள்களை ஒட்டி அழகுபடுத்தியிருப்பர். அதன் இரு முனைகளையும் தோல் (அ) நரம்பினால் ஆன நாண்கயிற்றால் வளைத்துக் கட்டியிருப்பர். அதில் அடித்ததும் இனிய நாணொலி பிறக்கிறது. "வில்லில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட இனிய ஒலிமிகுந்த மணிகளை இடைவெளி விட்டுக் கம்பியில் கட்டி இணைத்திருப்பர். குட்டை, குட்டையான வீசுக் கோல்களைக் கொண்டு வில்லின் நாணில் அடித்ததும் மணிகள் குலுங்கி அசைந்து ஒலிக்கும், வீசுக் கோலிலும், வீசு மணிகளைக் கைப்பிடிக்கு மேல் பொருத்தியிருப்பர். வில்லிசைக்குத் துணை யாக உடுக்கு, குடம், தாளம், கட்டை ஆகிய கருவிகள் பயன் படுத்தப்படும்." (தி.சி. கோமதிநாயகம், தமிழ் வில்லுப்பாட்டுகள்

ப.4). காப்பு, வாழ்த்து, வணக்கம் ஆகியவற்றோடு தொடங்கி இராமாயணம் முதலாக இக்கால தேசிய உணர்ச்சிப்பாடல்கள், சமூகச் சீர்திருத்தப் பாடல்கள் வரை பாடப்படுகின்றன.

"வில்லுப்பாட்டைப் படித்துக் கொடுக்கும் ஆசிரியரை, 'அண்ணாவியார்' என்று அழைப்பதுண்டு. வில்லுப்பாட்டினை வில்பாட்டு, வில், வில்லு, வில்லடி, வில்லடிப்பாட்டு, வில்லடிச் சான்பாட்டு என்றெல்லாம் பலவாறாக அழைப்பதுண்டு." (டாக்டர் ஏ.என். பெருமாள், தமிழக நாட்டுப்புறக் கலைகள், ப.136). அந்தந்தக் காலத்திற்கு ஏற்பச் சம்பவங்களை அடிப்படை யாக வைத்துப் பாடி வருகின்றனர். வில்லுப்பாட்டில் தகவல் பரிமாற்றம் கதையோடு சேர்ந்த பாடல்கள் வழியே நிகழ்கிறது.

நிகழ்ச்சிக்கு வந்தோரை வணங்கி வரவேற்றுக் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக்கப்படும் வில்லுப்பாட்டு, படித்தவர் முதல் பாமர மக்கள் வரை எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் அமைத்தளிக்கப்படுகிறது.

'இங்கு வருகை தந்துள்ள அனைவர்க்கும்
எங்களது பணிவான வணக்கம்
ஆமா... எங்களுடைய பணிவான வணக்கங்கள்
ஆமா...
தந்தனத்தோம் என்று சொல்லியே பாட வந்தருள்வாய்
கணபதியே
ஆமா... வந்தருள்வாய் கணபதியே.'

என்று தெய்வத்தை வணங்கி, பாடலைத் தொடங்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருவது நமது தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பு அம்சமாகும். குரு சிஷ்யன் என இருவரின் உரையாடல் ஒருவர் கூறுவதை மற்றொருவர் ஆமோதித்துக் கூறும் முறையில் அமைவது மேலும் சிறப்பிற்குரியதாகும்.

"வில்லடிப்போம் ஆமா, குடமடிப்போம் ஆமா
வில்லடிப்போம் குடமடிப்போம் வீரமணி ஓசையிட
ஊட்டச்சத்தின் திட்டம் ரெண்டை எடுத்துக் கூற
வந்தோங்க
ஆமா... எடுத்துக் கூற வந்தோங்க.

சிஷ்யன்; குருவே திட்டம் ரெண்டா, அப்படீன்னா என்னா? திட்டம் ஒன்னுன்னு இருந்துச்சே? திட்டம் இரண்டு எப்ப வந்தது. அந்த விவரத்தைச் சொல்லுங்க குருவே!

குரு: அதைப்பற்றி விவரமாகச் சொல்லத்தான் இப்ப இங்க வந்திருக்கோம். திட்டம் இரண்டின் நோக்கம் சிசுமரணம், பேறுகால மரணத்தைக் குறைப்பதுதான் முக்கியப்பணி.

சிஷ்யன்: அப்படியா குருவே!''

என்றிவ்வாறாகத் தாம் கூறவந்த தகவலைப் பிரதானமாக வைத்துக் கேள்விகளும், அதற்கான பதில்களும் அமைகின்றன. மேலும் இடையிடையே வரும் பாடல் அனைவரையும் கவர்ந்த திரை இசை மெட்டில் பாடப்படுவது நல்ல வரவேற்பைப் பெறுகிறது.

சான்று: ''கல்யாண மாலை கொண்டாடும் பெண்ணே
என் வார்த்தை கேளு உண்மைகள் சொன்னேன்
இளம்வயது திருமணத்தை நிறுத்தணும் கண்ணே
இருப்பத்தோர் வயதிலே முடித்திடணும் பெண்ணே''.

முன்பு தெய்வக்கதைகளைப் பாடுவதற்காகவே பயன்பட்ட 'வில்லிசை' இன்று கல்வி வளர்ச்சிக்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும், குடும்ப நலன் மற்றும் சமுதாயச் சீர் திருத்தத்திற்காகவும், அரசியல் விழிப்புணர்விற்காகவும் பல்வேறு தகவல்களைத் தெரிவிக்கப் பாடப்பட்டு வருகிறது. போதிய கல்வியறிவின்மை காரணமாகக் கிராம மக்களிடம் மதம், இனம், மொழி போன்றவற்றில் கருத்து வேறுபாடுகள் தோன்றிப் பொருளாதாரச் சீர்கேட்டை விளைவிக்கின்றன. இதனை அடி யோடு அகற்றும் விதத்தில் பாமர மக்களின் எளிய, இனிய மொழியிலே, அம்மக்கள் நன்கறிந்த எளிய வில்லசையின் மூல மாகக் கல்வி, அரசியல், சுகாதாரம் ஆகியவை சார்ந்த தகவல்கள் பரிமாறப்பட்டு வருகின்றன. கட்டுரைச் சுருக்கத்தின் காரணமாக, கர்ப்பகாலப் பராமரிப்பு மற்றும் குழந்தை வளர்ப்பு ஆகியவற்றின் அவசியத்தைப் பற்றிய தகவல்களை வில்லுப்பாட்டின் வாயிலாக மக்களுக்குச் சென்றடைவதைப் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

கர்ப்பகாலப் பராமரிப்பு: ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டிய அவசியமும், அதனால் நாட்டுக்கும், வீட்டிற்கும் நன்மை பயக்கும் வாய்ப்புகளும் இவ்வில்லுப்பாட்டின் வழி அறிவுறுத்தப்படுகின்றன. பெண் உரிமையின் பிரதான கண்ணோட்டத்தில் நாம் காண வேண்டியது, பெண்கள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்; முக்கியமாக அவர்கள் கர்ப்பக்

காலத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் என்பது யதார்த்தமாகவும், ஆணித்தரமாகவும் இங்கே சுட்டிக் காட்டப் படுகிறது.

குரு : அட சிஷ்யனே! கர்ப்பிணியை 3-ஆம் மாதம் பதிஞ்சுக் கிட்டு இரத்தம், சிறுநீர் சோதனை செஞ்சுக்கிட்டு, மாதா மாதம் எடை எடுத்து, 6-ஆம் மாதம் சத்துமாவு தந்து குழந்தையின் வளர்ச்சியினைக் கூட்டணும், கூட்டணும்.

சத்துமாவு என்பது கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சிக்காக, கர்ப்பிணிப் பெண்களுக்குத் தரப்படுகின்றது என்பதை ஆய்விற்குட்பட்ட சாத்தங்குடி கிராமத்துப் பெண்கள் அறிந்திருக்கவில்லை. இந்த வில்லுப்பாட்டின் மூலம் இத்த கவலைத் தெரிந்துகொண்டு பயனடைந்துள்ளனர் என்பதைக் கள ஆய்வின்போது அறிய நேர்ந்தது. மேலும்

குரு, சிஷ்யன் எனும் இருவருக்கிடையே நிகழும் உரையாடலில்,

சிஷ்யன் ; சரி குருவே! இதுவரை கர்ப்பகாலப் பராமரிப்பு பத்திச் சொன்னீங்க,

இது மட்டும்தானா குருவே?

என்று கேட்பது, இன்னும் அதிகத் தகவல்கள் இப்பாடலின் வாயிலாகக் கூறக்கூடும், என்று கேட்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாக அமைகிறது. கர்ப்பகாலத்தில் இரண ஜன்னி வராமல் இருக்கத் தடுப்பூசியும், இரத்தம் ஊற இரும்புச்சத்து நிறைந்த உணவுகளையும் சேர்த்து கொடுக்கவேண்டும். அதோடு கீரை வகைகள் பச்சைக் காய்கறிகள் எனும் இவற்றை உணவில் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் இன்னும் கூடுலதான தகவல்கள் கர்ப்பிணிப் பெண்களுக்கென அறிவுறுத்தப் படுகிறன.

இந்நிகழ்ச்சியின் தாக்கம் மாயாண்டி சேர்வை என்பவர் எடுத்துக்கொண்டே உறுதியில் தெரிந்தது. அவருடைய மனைவி அச்சமயத்தில் ஆறுமாதக் கர்ப்பிணிப் பெண்ணாக இருந்ததையும், இதுவரையில் அவரது கர்ப்பமுற்ற மனைவிக்கு எந்தவித கவனமும் செலுத்தவில்லை என்பதையும் எடுத்துக்கூறி, பின்னர் இந்தப் பாடலின் வாயிலாகத் தனக்கு ஏற்பட்ட விழிப்புணர்வால் வருங்காலத்தில் நல்லபடியாகத் தனது மனைவியைப் பராமரித்து,

நல்ல ஆரோக்கியமான குழந்தையைப் பெற்று மகிழ்ச்சியாக வாழ உறுதி பூண்டதையும் களஆய்வின் போது அவர் தெரிவித்தார். (மாயாண்டி, வயது 42, சாத்தங்குடி, 20. 11. -1996)

குழந்தை வளர்ப்பு: பெற்றெடுத்த குழந்தையை வளர்க்கும் முறைகளையும் குழந்தைப் பருவத்தில் அவர்களுக்குக் கொடுக்கப் படுகின்ற மருத்துவ சிகிச்சை முறைகளையும் (போலியோ சொட்டு மருந்து, தடுப்பூசி), அக்கால கட்டங்களில் காணப்படு கின்ற நோய்களைப் பற்றியும் அதற்கான தீர்வுகளையும் புரியும் விதத்தில் பாட்டோடு கலந்த உரையாடலுடன் தொகுத்தளித் திருப்பது எல்லோரையும் சிந்தித்துச் செயல்பட வைக்கிறது.

முடிவுரை

வில்லுப்பாட்டானது இன்பக்கலையாகவும், இலக்கியச் செல்வமாகவும் விளங்குகிறது, புதிய உத்திகளுடன், புதிய கருத்துகளைப் பாடவும், காலத்துக்கேற்ற கருத்துகளைப் பரப்பவும், 'வில்லுப்பாட்டு' இன்றைய நிலையில் இனிமையும், எளிமையும் வாய்ந்ததொரு சாதனமாகப் பயன்படுகிறது. கோயில் விழாக்களில் மட்டுமே முழங்கி வந்த இக்கலை, இன்று அரசியலுக்கும், சமுதாய விழிப்புணர்விற்கும் பெரிதும் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

வில்லுப்பாட்டில் தெய்வத்தை வணங்கிப் பாடலைத் தொடங்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. உரையாடலும், பாடலும் இணைந்த வடிவில் கர்ப்பகாலப் பராமரிப்புப் பற்றியும், பெற்ற குழந்தையைப் பேணி வளர்க்க வேண்டிய முறைகளும் வில்லுப்பாட்டின் வாயிலாக அறிவுறுத்தப் பட்டுள்ளன.

நமது அரசு, நாட்டின் நலன்கருதி நல்ல பல திட்டங்களை உருவாக்கிக் காலங் காலமாக அதைச் செயல்படுத்துவதுடன் வெற்றியும் பெற்று வருகிறது. அரசு நேரடியாகக் கிராம மக்களிடம் தங்களது சேவையைத் தொடர்ந்து செய்ய இது போன்ற வில்லுப்பாட்டுக் கலைக்குழுக்கள் அமைப்பதன் மூலம் மரபு வழியிலான நாட்டுப்புறக் கலைகளின் வாயிலாகக் கிராம மக்களுக்கு வளர்ச்சித் தகவல்களைத் தெரிவித்து வருகிறது.

இந்திய மெய்யியலில் நியாய தரிசனம் கூறும் இறைக்கொள்கை

உ. சாமுவேல் ஸ்டீபன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.

இந்திய ஆஸ்தீக தரிசனங்களில் நியாயமும் ஒன்று. வைதீக தத்துவம் ஆறிலும் நியாயம் முதலாவதாக நிற்கிறது. நியாயம் என்ற சொல்லுக்கு தர்க்கத்தின் அடிப்படையில் ஆய்வு செய்தல் எனப் பொருள். நியாய தரிசனம் தர்க்கத்தின் அடிப்படையில் சான்றுகளை உறுதிப்படுத்தும் ஒரு தத்துவ கோட்பாடாகவும், அறிவால் இனம் கண்டு கொள்ளப்படும் பொருட்களைப் பற்றி ஆராயும் கோட்பாடாகவும் உள்ளதால் இதற்கு தர்க்க வித்யா அல்லது வாத அறிவியல் என்ற பெயரும் உண்டு. மேலும் தர்க்கத்தின் மூலமாகச் சான்றுகளை உறுதிப்படுத்தி உண்மை அறிவுக்கு நேராகக் கொண்டு சொல்லும் தத்துவக் கோட்பாடாகவும் நியாய தரிசனம் விளங்குகிறது.

நியாய தரிசனம் கி. பி. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த கௌதமர் என்பவரால் நிறுவப்பட்டது. இவர் தனது கால்களைப் பார்த்தபடியே நடந்து சிந்தனை செய்தபடியால் அக்சபாதர் எனவும், இளமைக்காலங்களில் கடுமையான தவம் புரிந்தமையால் தீர்க்க தபஸ் எனவும் அழைக்கப்பட்டார். இவர் பிறந்த இடமான கௌதமஸ்தானா என்ற இடத்தில் ஆண்டு தோறும் மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் இவரின் ஜென்ம தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவர் தனது மனைவி அஹல்யாவுடன் ஊஹிசிரோதாதி நதிக்கரையிலுள்ள ஒரு ஆசிரமத்தில் தன் காலத்தைக் கழித்தார் என்று சொல்லப்படுகிறது. மேலும் கௌதமர் காட்னா என்ற சிற்றூரிலும் மேற்குக் கடற்கரையிலுள்ள கத்திவார் மாவட்டத்தில் பிரபாஸா என்ற இடத்திலும்தனது இறுதிக்காலத்தைக் கழித்ததாகச் சொல்லப்படுகிறது.

இவருக்கு சதானந்தா என்றதொரு புத்திரன் இருந்ததாகவும் அவன் ஜனக மகாராஜாவின் வீட்டில் புரோகிதராக இருந்த தாகவும் கூறப்படுகிறது.

கௌதமர் எழுதிய நியாய சூத்திரம் என்ற நூல் நியாய தரிசனத்துக்கு ஒரு மூல நூலாக உள்ளது. இந்நூலுக்கு விளக்க உரையாக வாத்சாயனா என்பவர் எழுதிய வாத்சாயனா பாஷ்யம் உள்ளது. மேலும் உதயனர் எழுதிய குசுமாஞ்சலி, ஆன்ம தத்துவ விவேகம் போன்ற நூல்களும் ஸ்ரீதரர் எழுதிய நியாய கந்தளி என்ற நூலும் ஜெயந்த பட்டர் எழுதிய நியாய மஞ்சரி என்ற நூலும் கங்கேசா எழுதிய தத்துவ சிந்தாமணி என்ற நூலும் நியாய தரிசனம் பற்றி விளக்கி கூறும் நூல்களில் சிறப்பானவைகள் ஆகும்.

நியாய தரிசனம் கூறும் இறைக் கொள்கையில் இறைவன் தன்னிலையில் எங்கும் நிறைந்திருக்கும் அனைத்துவிதமான அறிவும் செயல்பாடும் வல்லமையும், கொண்ட நிலையில் இந்த பிரபஞ்சத்தை ஒரு கட்டுப்பாட்டுடன் கொண்டு செல்லும் நிலையில் காணப்படுகிறார் என்று கூறப்பட்டுள்ளது. இத்தகைய இறைவன் தன் நிலையில் எந்தவொரு குறைபாடுகளும் இல்லாத நிலையில், ஆனந்தம்,அறிவாற்றல் அமைதி போன்ற தன்மைகள் பொருந்திய நிலையில் இந்த பிரபஞ்சம் முழுவதையும் ஆளக் கூடிய நீதிமானாகக் காணப்படுகிறார். மேலும் இறைவன் தம்மால் படைக்கப்பட்ட உயிர்களைச் செயல்படுத்தும் நிலையில் அதாவது ஒரு தகப்பன் தன் பிள்ளைகளின் நல்வாழ்க்கைக்காகச் செயல்படுவது போன்று இறைவனும் தம்மால் படைக்கப்பட்ட உயிர்களின் நலனுக்காகச் செயல்படுகிறார் என நியாய தரிசனம் கூறுகிறது.

நியாய தரிசனத்தில் இறைவன் உண்டு என்ற கருத்தினை ஏற்கும் வகையில் உதயனர் எழுதிய குசுமாஞ்சலி என்ற நூலில் சில சான்றுகள் உள்ளன. இந்நூலின் முதல் அத்தியாயத்தில் நமது சுக துக்கங்களைத் தீர்மானிக்கும் வகையில் நாம் காண இயலாத ஒரு சக்தி இருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் நாம் காணும் இந்த உலகம் ஒரு விளைவே ஆகும். ஏனெனில் இந்த உலகம் பல பாகங்களை கொண்டதொரு சேர்க்கை ஆகும். எனவே பல பாகங்களை உடைய இந்த உலகினை ஒருங் கிணைத்து உருவாக்க ஒரு ஆற்றல் மிகுந்த செயலாற்றும்

தன்மை பொருந்திய பயன்களை உருவாக்கக் கூடியதொரு காரணம் இருந்தே ஆக வேண்டும். மேலும் இந்த உலகினை ஒரு வரிசையின் அடிப்படையில், ஒழுங்கின் அடிப்படையில் கொண்டு செல்லக்கூடிய நிலையில் ஒருவன் இருந்தே ஆக வேண்டும் எனக்கூறி அவன் தான் இறைவன் என நியாய தரிசனம் கூறுகிறது. எத்தகைய விளைவான பொருளுக்கும் ஒரு அறிவாற்றல் கொண்ட செயலி அதன் பயன் விளைவிக்கும் காரணமாக இருந்தே ஆக வேண்டும் ஏனெனில் காரணமின்றி எத்தகைய விளைவும் இந்த பிரபஞ்சம் முழுவதுமாக இருக்க இயலாது. பானை போன்ற பொருட்களுக்கே அறிவாற்றல் மிக்கதொரு செயலி இருக்கும் நிலையில் இந்த பூமிக்கு, மலை களுக்கு, நதிகளுக்கு அப்பாற்பட்ட ஒருவன் இல்லையெனக் கூற இயலாது. ஒரு செயலி ஒரு விளைவை ஏற்படுத்த வேண்டு மெனில் அதற்குத் தேவையான அறிவு, விருப்பம் போன்ற பண்புகளை அவன் பெற்றிருக்க வேண்டும். மண்பானை போன்றதே நாம் காணும் இந்த உலகம் ஆகும். இந்த உலகம் அணுக்களால் ஆனது. பானை போன்ற பொருட்கள் உருவாக குயவன் காரணமாக இருப்பது போல அணுக்களில் ஒரு வகை யான அமைப்புகளை ஏற்படுத்தி உலகமாக உருவாக்க ஒரு சிருஷ்டிப்பவன் தேவை எனக் கூறி அவனே அனைத்து விதமான சக்திகளும் பொருந்திய இறைவன் என நியாயம் கூறுகிறது.

மேலும் எடையுள்ள பொருட்கள் அனைத்தும் கீழே விழும் தன்மை பெற்ற நிலையில், நாம் இருக்கும் இந்த பிரபஞ்சத்தில் பல பிரகாசமுள்ள பொருட்கள், பூமியைப் போன்ற கிரகங்கள் குறிப்பிட்டதொரு பாதையில் சுற்றி வரக்கூடிய நிலையில் காணப்படுகின்றன. இவைகள் தன் நிலையில் கீழே விழாது. தன் பாதையில் ஒழுங்காகச் சுற்றிவர அதனைச் செயல்படுத்தும் ஒருவன் இருந்தே ஆக வேண்டும் எனக் கூறி அவனே இறைவன் என நியாய தரிசனம் கூறுகிறது. மேலும் அணுக்களின் ஒருங்கிணைப்பால் தான் உலகமும், பொருட்களும் தோன்று கின்றன. ஆனால் இத்தகைய உலகம் தன் நிலையில், உணர்வற்றுக் காணப்படுவதால் அதனால் தானாகப் பொருட் களை உருவாக்க இயலாது. எனவே அணுக்களை ஒருங்கிணைத்து அதன் மூலமாக இந்த உலகினையும், இவ்வுலகில் காணப்படும் பொருட்களையும் படைக்க அறிவாற்றலும், செயல்படும்

தன்மையும் பொருந்திய ஒருவன் இருந்தே ஆகவேண்டும் என கூறி அவனே அணுக்களில் முதல் அசைவினை ஏற்படுத்தி இவ்வுலகப் பொருட்கள்யாவும் தோன்ற காரணமாக இருக்கும் இறைவன் என நியாய தரிசனம் கூறுகிறது.

இந்த உலக அமைப்பில் ஒரு திட்டமிட்ட ஒழுங்குமுறை உள்ளது. மேலும் இறைவனின் விருப்பம் தான் இந்த உலகினைக் காக்கிறது. வாழ்வில் நாம் செய்யக் கூடிய செயல்கள் சரியான வையா, அல்லது செய்யத் தகாதவைகளா என்பதனை உணர்த்திக் காட்டும் நிலையில் வேதங்கள் உள்ளன. இத்தகைய வேதங்கள் இறைவனின் இருப்பினையும் நீதிச் சட்டத்தைப் போதிக்கும் ஒன்றாகவும் உள்ளன. இத்தகைய வேதங்களை அதிகாரப் பூர்வமான நிலையில் உருவாக்கி சரியான அறிவினை உணர்த்தும் நிலையில் இறைவன் காணப்படுகிறான் என நியாய தரிசனம் கூறுகிறது.

நியாயக் கருத்துப்படி நாம் செய்யும் செயல்களின் பலன்களை அனுபவித்தே தீர வேண்டும். ஏனெனில் நாம் செய்யும் செயல் களைப் பொறுத்தே நமது தகுதி குறைபாடுகள் தீர்மானிக்கப்படு கின்றன. எனவே வாழ்வில் நாம் செய்யக்கூடிய தகுதி குறை பாடுகளுக்குரிய தக்க பலனை அளிக்கும் நிலையில் நமக்கும் மேலானதொரு அறிவாற்றல் கொண்ட ஒருவன் இருக்கிறான் எனக் கூறி அவனே இறைவன் என நியாய தரிசனம் கூறுகிறது. மேலும் இந்த உலகினை இறைவன் தனது இச்சையை முழுமை யாக்கப் படைத்தானா அல்லது மற்றவர்களின் ஆசைகளுக்காகப் படைத்தானா, இத்தகைய உலகம் துன்பங்கள் நிறைந்து காணப் படுவதால் இறைவன் உயிர்களை நேசிக்கிறான் என எப்படி கூற இயலும் என்பதற்கு இறைவன் உலகினைத் தனது கருணையின் காரணமாகவே படைத்தான். ஆனால் இத்தகைய உலகப் படைப்பு சந்தோசம் நிறைந்ததாகத் தான் இருக்க வேண்டும் என கூறஇயலாது. ஏனெனில் இந்த உலகில் வாழும் உயிர்கள் புரியும் கர்ம வினைகளைப் பொறுத்தே அதன் விளைவான இன்பமும், துன்பமும் அமைகின்றன. இருப்பினும் இறைவன் உயிரின் வாழ்வில் அதன் இன்பத்தைக் கண்ணோக்காது. அதன் ஆன்மீக முன்னேற்றத்தைக் காணும் நிலையில் காணப்படுகிறான், என நியாய தரிசனம் இறைவனைப் பற்றியும் அவனின் தன்மைகளைப் பற்றியும் விளக்கிக் கூறுகிறது.

துணைநூல்கள்

1. Indian Philosophy, by S. Radhakrishnan
2. Invitation to Indian Philosophy, by T. M. P. Mahadevan
3. Indian Philosophy, by R. N. Sharma
4. Outlines of Indian Philosophy, by M. Hiriyanna
5. Introduction to Indian Philosophy, by Ruthreyna

இன்றைய கல்வி முறையும் பாடத்திட்டமும்-சில சிந்தனைகள்

இரா. சாவித்திரி
குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி
தஞ்சாவூர்

மனிதவள மேம்பாட்டிற்கு வழி வகுப்பது கல்வி ஒன்றே. இந்த அடிப்படையில்தான் கல்வித்துறை மனிதவள மேம்பாட்டுத் துறை ஆயிற்று. வளமான மக்கட் சமுதாயம் உருவாவதற்கு தனி மனிதப்பண்பு சிறப்பதே அடிப்படை என்று தான் அறத்துப் பாலை முதற்கண் வைத்தார் வள்ளுவர்.

மனிதவள மேம்பாட்டுத்துறையின் விரைந்த வளர்ச்சியால் அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், தன்னாட்சிக் கல்லூரிகள், அஞ்சல் வழிக்கல்வி முறைகள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்குகின்றன. வளர்ச்சியின் மறுபுறம் எண்ணற்ற இளைஞர்கள் வேலையின்மை பிரச்சினையை எதிர் கொள்கின்றனர். இலக்கற்ற எதிர்காலம், வேலையின்மையால் பெற்றோர், உற்றோரின் புறக்கணிப்பு, கவலை வெறுமை உணர்வுகளில் மூழ்குதல் ஆகிய காரணங்களினால் நம்பிக்கையற்ற நிலை உருவாகின்றது. மன உறுதியற்ற இளைஞர்கள் வணிக மயமாக்கப்பட்ட பொழுது போக்குச் சாதனங்களில் அளவுக்கு மீறி ஈடுபடுவதால் வன்முறைக்குத் துணியவும் போதை மருந்து களுக்கு அடிமையாகவும் தயாராகி விடுகின்றனர்.

சமுதாயத்தையே மாற்றும் ஆற்றல் பெற்றவர்கள் இளைஞர்கள். அதுபோல் சமுதாயப் பிரச்சினைகளால் அதிகப் பாதிப்புக்கு ஆளாகக் கூடியவர்களும் இளைஞர்களே. வேலை யின்மையின் விளைவுகள் மிகக்கொடியன. வேலையற்ற மனிதன் தன்னம்பிக்கை, துணிவு ஆகியவற்றை இழக்கிறான். வேலை யின்மை ஒருவன் உடல் மற்றும் உள்ள நலத்தை அழிக்கிறது.

சோம்பலையும் சுயநலத்தையும் வளர்க்கின்றது. சுயமரியாதை யையும் பொறுப்புணர்ச்சியையும் அழிக்கின்றது. தோல்வி களுக்குப் பிறரைக் குறை கூறும் இயல்பை உண்டாக்குகிறது என்பர் அறிஞர்.

வேலையற்றவர்களின் ஆக்கசக்தி பயனுறச் செலவிடப் படாததால் நாடு மிகப்பெரிய பொருளாதார இழப்பை எதிர் கொள்கிறது.

கல்வி நிறுவனங்களும், சமய நிறுவனங்களும் சமுதாய முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிக்கின்றன. நாடு சுதந்திரம் பெற்றபின் கல்வித் திட்டத்தைச் சீராக்கவும் விரிவுபடுத்தவும் பல குழுக்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் பல்கலைக்கழகக் கல்விக்குழு (1948), இடைநிலைக்கல்விக் குழு (1953), கல்விக்குழு 1962-64 போன்றன குறிப்பிடத்தக்கன. இக்குழுக்களின் அறிக்கையின்படிக் கல்வித்திட்டத்தில் உள்ள குறைகள் ஆராயப் பட்டன.

1. கிராமங்களில் நிறைந்திருக்கின்ற கல்வி அறிவின்மை
2. குறைபாடுள்ள பயிற்றுவிப்பு
3. தொழில் நுட்பம் மற்றும் விவசாயக்கல்வி கற்கப் போதிய வசதியின்மை
4. உயர் கல்விக்காகும் அதிகச்செலவு
5. நடைமுறை வாழ்க்கைக்குப் பொருந்தாத கல்வித்திட்டம்
6. நீதி நல்லொழுக்கக்கல்வி வெவ்வேறு அளவில் குறை வாகக் கற்பிப்பது
7. மாணவர்களிடையே அமைதியின்மை

போன்றன இவ்வறிக்கைகள் குறிப்பிடும் பொதுவான குறை பாடுகளாம்.

மூவகைக் குழுக்களின் அறிக்கைகளும் கருத்துரைகளும் செயல்படுத்தப்பட்டன. அரசின் பல்வேறு திட்டங்கள் – பள்ளி, கல்லூரிகள் அதிக அளவில் தொடங்குதல், முதியோர் கல்வி – பெண்கல்வி – அறிவொளி இயக்கம் ஆகியன செயல்படுத்தப் பட்டன. 1966-இல் வெளியிடப்பட்ட கல்விக்குழுவின் அறிக்கை "உறுதியில்லா எதிர்காலம், நோக்கிக் காத்திருக்கும் இளைஞர் களின் பொறுப்பற்ற தன்மை, திருப்தியளிக்காத இயந்திரத்தன மான கல்வித்திட்டம், கல்விக் கூடங்களின் போதிய வசதியின்மை,

ஆசிரியர் மாணவர் தொடர்பில் வலுவின்மை, ஆசிரியர்களின் தகுதியின்மை, திறமையற்ற நிர்வாகம், ஆசிரியர்களுக்குள் கருத்து வேறுபாடு, மாணவர் அவையில் அரசியலாரின் தலையீடு, பொதுநீதி ஒழுங்கில் காணப்படும் குறைபாடுகள் ஆகியன மாணவர்களைப் பாதிக்கின்றன'' என்று குறிப்பிடுகிறது.

இன்றைய படித்த இளைஞர் சமுதாயத்தை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. பொறியியல், மருத்துவம், சட்டத்துறை, தொழில் நுட்பத்துறை எனத் தொழில்முறைக் கல்வி கற்றவர்கள்.
2. கலை, அறிவியலில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட பட்டம் பெற்றவர்கள்.
3. பள்ளியிறுதித் தேர்வு பெற்றவர்கள், தட்டச்சு, கணிப்பொறி பயிற்சி பெற்றவர்கள்.
4. பள்ளியிறுதித் தேர்வு பெறாதவர்கள் அதற்கும் குறைவாகப் படித்தவர்கள்.

தொழில்கல்வி கற்றோர், பள்ளிக் கல்லூரிகளில் ஆசிரியர் பணிப் பயிற்சி பெற்றோர், அதற்கு முயற்சி செய்வோர் தவிர ஏனையோர் நிர்வாகத்துறை அலுவல்களான எழுத்தர், அலுவலர் போன்ற அலுவல்களையே அதிகம் விரும்புகின்றனர் உழவுத் தொழில் மற்றும் தொழில் துறைகளில் உழைக்க முன் வருவதில்லை.

நகரங்களில் கிடைக்கும் வேலை வாய்ப்புக்கருதி எப்படியும் வேலை தேடிக்கொள்ளத்துடிக்கும் மனோபாவம் கிராமப்புற இளைஞர்களையும் நகரத்துக்கு அழைக்கிறது. கூலிக்கு உழைப்பவர்கள், மிகச்சிறிய அளவு நிலம் பெற்றிருப்பவர்கள் என்று இரு சாரார் நிலையும் ஒன்றாகவே உள்ளது. உழுதவன் கணக்குப்பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற பழமொழி நடப்பை ஒட்டியே எழுந்தது. ஓர் அலுவலகக் கடைநிலை ஊழியனின் ஊதியம் கூட இந்த உழவர்களுக்குக் கிடைக்கவில்லை. சமுதாயம் உயிர்வாழத் தேவையான உயிர்த்தொழில் செய்யும் மக்களுக்கு அதற்குரிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

வேளாண் குடும்பங்களில் உயர்கல்வி கற்றவர்கள் தங்கள் வேலை வாய்ப்புக் காரணமாக பெரும்பாலும் வேளாண்மை செய்வதை விட்டுவிடுகின்றனர். வேறு வழியின்றி வேளாண்மை செய்யும் இளைஞர்கள் அதில் ஈடுபாடின்றிச்செய்ய வேண்டி

யுள்ளது. இயற்கை ஒத்துழைக்காவிடில் உற்பத்தி நிச்சயமற்ற நிலை, நவீன வாழ்க்கையின் தேவைகளை நிறைவு செய்ய இயலாத வருமானம் ஆகியன அத்தொழிலின் மேல் உள்ள ஈடுபாட்டைக் குறைக்கின்றன.

இன்றையச் சமுதாயச் சூழல் பணத்தின் ஆதிக்கம் நிறைந்ததாய் உள்ளது. மண்ணிடமிருந்து மரணம் ஒன்றுதான் அவர்களைப் பிரிக்கவேண்டும் என்ற அளவுக்கு மண்ணின் மீது பற்றுக் கொண்டவர்கள் முந்தைய தலைமுறையினர். அறிவியலும் தொழில் நுட்பமும் இந்த எண்ணங்களை மாற்றிவிட்டன. வேளாண்மையும் இன்று ஒரு தொழிலாகிவிட்டது. தொழிலாளர் போராட்டம் போல் வேளாண் மக்களின் போராட்டமும் நடக்கிறது. கொடிய வறட்சி கடுமையான வெள்ளம் ஆகிய இயற்கையின் சீற்றங்களை எதிர்கொள்ளும்போது ஏற்படும் இழப்பு வேளாண் மக்களுக்கு மட்டும் ஏற்படும் இழப்பாகவும், அரசு அதற்காக வரி விலக்கு அளிப்பதும் உழவர்களுக்கென்று மானியம் வழங்குவதும் இன்றைய நடைமுறையாய் உள்ளது.

உழவுத்தொழில் நம் நாட்டின் உயிர்த்தொழில். அத்தொழிலுக்குத் தேவைப்படும் மழையும் மற்ற தட்பவெப்ப நிலைகளும் எப்பொழுது வேண்டும், வேண்டாம் என்பதை அனைவரும் அறிந்திருக்க வேண்டும். ஆனால் நகரத்தில் உள்ளோரும், மற்றையோரும் பருவத்தில் பெய்யும் மழையைக் கூட ஐயோ இந்த ஊரில் இப்படி மழை பெய்கிறதே என்று சலித்துக்கொள்பவரும், அரிசி செடியில் காய்க்குமா, மரத்தில் காய்க்குமா என்று கேட்கும் சிறுவர்களும் மிகுந்து வரும் சூழல் நம் நாட்டின் உயிர்த் தொழிலாம் வேளாண் தொழில் அதற்குரிய பெருமையைப் பெறாமல் தனித்தீவாக நிற்பதைத் தான் காட்டுகிறது.

நாட்டு முன்னேற்றத்திற்கும் அதன் அடிப்படையான மனிதவள மேம்பாட்டிற்கும் உறுதுணையாகும் வகையில் கல்வி முறையில் மாற்றம் செய்யப்படல் வேண்டும்.

1. நல்லொழுக்க நீதி போதனைக் கல்விக்கு முதன்மை இடம் கொடுக்கப்படல் வேண்டும். சமூகப் பொறுப்புணர்வு, உண்மை, நீதி, நேர்மை, சுற்றுப்புறத் தூய்மை போன்ற நற்குணங்கள் பள்ளிகளில் முதன்மை நிலையில் கற்பிக்கப் படல் வேண்டும். தனி மனிதப் பண்பு சிறத்தலே கல்வியின் முதன்மை நோக்கமாக இருத்தல் வேண்டும்.

2. ‘உழைப்பே உயர்ந்தது’ உழைப்பைப் போற்றும் உணர்வே சிறந்தது உலக அரங்கினில் இந்தியாவை உயர்த்த வல்லது உழைப்பொன்றே என்பன இளமை முதலே உணர்த்தப்படல் வேண்டும்.

3. உழவுத்தொழில் உயிர்த்தொழில்; அத்தொழிலின் ஏற்றமும் வீழ்ச்சியும் நாட்டுப் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடியது என்பதை ஒவ்வொருவரும் உணரும் வண்ணம் அடிப்படை வேளாண்கல்வி பள்ளிகளிலேயே பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

4. எழுத்தர், அலுவலர் போன்ற பணிகளுக்கே போட்டியிடும் நிலை மாறவும், உழவுத்தொழில் மற்றும் தொழில் துறைகளில் பெரும்பாலோர் ஈடுபடவும் வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துமுகமாக அடிப்படைச் சமூகவியல் கல்வி பயிற்றுவிக்கப்பட வேண்டும். குடும்பத்தில் பெண் கல்வி அறிவும் சமூகப் பொறுப்புணர்வும் மிக்கவளாயிருப்பின் அறியாமை, மக்கள் தொகைப்பெருக்கம், குழந்தை வளர்ப்பில் குறைபாடு ஆகிய பிரச்சினைகளுக்கு இடமில்லாமல் போகும். பெண் கல்வியின் இன்றியமையாமையை உணர்த்தவும் மேலே குறிப்பிட்ட சமூகவியல் கல்வி துணை செய்யும். தன்னம்பிக்கை, நேர்மை தெளிவான சிந்தனை ஆகியனவற்றைப் பயிற்றுவிக்கும் கல்விக்கூடங்களாகக் குடும்பங்கள் திகழ பெண் கல்வியே துணை செய்யும்.

5. சுயமாகத் தொழில் செய்யும் ஆர்வமும் துணிவும் கொண்ட மனநிலையை ஏற்படுத்தும் வண்ணம் பள்ளிகளிலே அடிப்படைத் தொழிற்கல்வி பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

6. தகவல் தொடர்பு சாதனங்களின் பலமும் அதேசமயம் அவற்றின் பயன்பாட்டு அளவையும் எல்லையும் உணர்த்தப்படல் வேண்டும் (துளிர் சிறுவர் அறிவியல் இதழ் இது குறித்து சிறந்த கட்டுரை வழங்கியுள்ளது, ஆகஸ்ட்–96)

7. இயற்கையை விட்டு விலகி வாழ்வதால் ஏற்படும் இடர்ப்பாடுகள் இளமை முதலே உணர்த்தப்படல் வேண்டும்.

8. எந்த ஒரு இயக்கமும் பண்பாட்டுக் குறையுடையவர்களைக் கொண்டு இயங்குமாயின் அதன் விளைவுகள் பல சீர்கேடுகளுக்குக் காரணமாகின்றன. எனவே தனி மனிதப்பண்பு சீர்மையுறல் போற்றப்படுவது கல்வியின் முதல் நோக்கமும் இறுதி நோக்கமுமாக இருத்தல் வேண்டும்.

உருத் தெரியா மனிதன் - மண்குடிசை ஒப்பாய்வு

இர. சித்திரலேகா
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

ஒப்பிலக்கியம் இன்று வளர்ந்து வரும் துறை. இலக்கியத்தை இலக்கியத்துடன் ஒப்பிடுவதும், இலக்கியத்தைப் பிற துறை களுடன் ஒப்பிடுவதும் ஒப்பிலக்கியமாகும். "ஒப்பிலக்கியம் என்பது ஒரு குறிப்பிட்ட நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் விளங்குகிற பிறிதொரு நாட்டின் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வது" என்று ரிமார்க் ஒப்பிலக்கியத்திற்கு வரைவிலக்கணம் வகுக்கிறார் (வை. சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம். 1985, ப. 11). ஒப்பிலக்கிய ஆய்வு இணைநிலை ஆய்வு, தாக்க ஆய்வு என இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் தாக்க ஆய்வே இங்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

ஒன்றுக்கொன்று தொடர்புடைய இருநூல்களில் ஒரு நூலின் தாக்கம் மற்றொன்றின் மீது காணப்படுவது இலக்கிய ஆய்வின் மையப்பகுதி என்பார் சச்சிதானந்தன் (மேலது. ப. 39). பிறி தொரு மொழியைச் சார்ந்த இலக்கியப் படைப்பின் தலைப்பு, அதில் வரும் சிறப்பான பகுதிகள், அல்லது ஏதேனும் ஓர் உத்தி, அல்லது கதைமாந்தர் ஆகியவை தாக்கத்திற்கு ஆட்படுகின்ற மொழியின் இலக்கியப் படைப்புக்களில் ஏற்படலாம். இதனை 'ஏற்புக் கொள்கை' (Reception Theory) என்பர்.

ஏற்புக்கொள்கை அடிப்படையில் ஆங்கிலத்தில் எச்.ஜி வெல்ஸ் எழுதிய 'உருத் தெரியா மனிதன்' (Invisible man) தமிழில் மு.வ. எழுதிய 'மண்குடிசை' ஆகிய இரண்டு புதினங் களிலும் காணப்படும் 'உருமறைதல்' என்ற உத்தியை ஒப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்: எச்.ஜி. வெல்ஸின்

கதையைப் படித்த பின்னரே அந்த உத்தியைத் தனது புதினத்தில் தான் கையாண்டிருப்பதாக மு.வ. 'மண்குடிசை' புதினத்தில் 'குறிப்பு' எனும் பகுதியில் குறிப்பிடுகிறார். எனவே எச்.ஜி. வெல்ஸின் தாக்கம் மு.வ விடம் காணப்படுகிறது என்பது புலனாகிறது.

'உருத் தெரியா மனிதன்' புதினத்தின் கதைத் தலைவன் கிரிஃபின் 'மண் குடிசை' புதினத்தின் கதைத் தலைவன் மெய்யப்பன் இவ்விருவரிடத்திலும் 'உருமறைதல்' எனும் கண்டு பிடிப்பு செலுத்தப்படுகிறது. இவ்விருவரும் 'உருமறைதலை' ஏற்பதற்கான காரணம் உருமறைந்த பின்னர் செய்யும் செயல் கள், இறுதி நிலை ஆகியவை இங்கு ஒப்பீட்டுக்குள்ளாகின்றன.

உருமறைதலை ஏற்பதற்கான காரணம்: கிரிஃபின், மெய்யப்பன் ஆகிய இருவரும் 'உருமறைதலை' விரும்புவதற்கு அவர்களது துன்பம் நிறைந்த வாழ்க்கையே காரணமாகின்றது.

கிரிஃபின் 'அல்பினோ' என்னும் நோயால் தாக்கப்பட்டு அழகற்ற வடிவம் கொண்டவனாயிருக்கின்றான். வறுமைச் சூழலில் வாழ்கின்றான். தாழ்வு மனப்பான்மை கொண்டு விளங்குகிறான். கல்வியில் சிறந்து விளங்கி, ஆராய்ச்சியில் முழு கவனத்தையும் செலுத்துகிறான். அதன் விளைவாக உலகில் உள்ள எந்தப் பொருளையும் கண்ணுக்குப் புலனாகாது மறைத்து விடமுடியும் என்பதைக் கண்டுபிடிக்கின்றான். இக்கண்டு பிடிப்பு கிரிஃபின்னுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. கடன் காரர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள இவ் ஆராய்ச்சியை அவன் பயன்படுத்திக் கொள்கிறான்.

'மண் குடிசை' மெய்யப்பன் திருமணமாகி மனைவி, குழந்தை களுடன் வாழ்பவன். செய்யாத கொலைக் குற்றத்திற்காக பழி ஏற்று 10 ஆண்டுகள் சிறை தண்டனை பெறுகிறான். சிறையிலிருந்து வெளி வந்த பின்னர் மனைவியால் வெறுக்கப் படுகிறான்; குழந்தைகளால் ஒதுக்கப்படுகிறான். மனம் வெறுத்த மெய்யப்பன் நண்பனுடன் காசிக்குச் சென்று, பின்னர் டில்லியில் பணிபுரிந்து, இறுதியில் காஷ்மீரில் ஒரு பேராசிரி யரையும், பேசா விரதம் பூண்டிருக்கும் ஒரு தமிழ்த்துறவியை யும் சந்தித்து, அவர்களுடன் தங்குகிறான். பேராசிரியரும், துறவியும் இணைந்து கண்டுபிடித்த 'உருமறைதல்' ஆராய்ச்சிக்குத் தன்னையே பரிசோதனைப் பொருளாக்கிக் கொள்கிறான்.

'உருமறைதல்' மெய்யப்பனுக்கு யார் கண்ணிற்கும் புலனாகாது, ஊருக்குச் சென்று, தன் மனைவியின் மனநிலையை அறிந்து கொள்ள உதவுகிறது.

உரு மறைந்த பின்னர் செய்யும் செயல்கள்: கிரிஃபின் தன் ஆராய்ச்சியைத் தொடர்வதற்காகத் தன் தந்தையிடமிருந்தே பொருளைத்திருடி, அவர் இறப்பிற்குக் காரணமாகின்றான். வேண்டும் பொழுதெல்லாம் பிறரிடமிருந்து பொருளைத் திருடுவதற்கும், தடுப்பவர்களைக் கொல்வதற்கும், அடிப்பதற்கும் 'உருவமற்ற நிலை' கிரிஃபின்னுக்கு உதவுகிறது. கண்களுக்குப் புலப்படாது உலவும் தன் உருவத்தால் மக்களிடையே பீதியைத் தோற்றுவிப்பதில் கிரிஃபின் பெருமகிழ்ச்சி அடைகிறான். அச்சுறுத்தியே ஒரு ஊரைத் தன் ஆளுகைக்குக் கொண்டு வர வேண்டும்; அவ்வூரில் தன் கட்டளைக்குப் பணியாதவர்களையும், அவர்களுக்காகப் பரிந்துரைப்பவர்களையும் கொன்று விட வேண்டும் என்றெல்லாம் கிரிஃபின் ஆசைப்பட்டு திட்டமிடுகிறான். கிரிஃபின் உரு மறைதலைத் தன்னலத்திற்குப் பயன்படுத்துகிறான். சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறான். திருடுவது, ஏமாற்றுவது, அடிப்பது, கொல்வது என்பன அவன் உரு மறைதலினால் செய்கின்ற செயல்களாகும்.

மெய்யப்பன் தன்னை வெறுத்த மனைவியின் மனநிலையைத் தெரிந்து கொள்வதற்கே 'உரு மறைதலைப்' பயன்படுத்த விரும்புகிறான். உரு மறைந்து தன் ஊருக்குச் செல்கிறான்; மனைவி, குழந்தைகளைக் கண்டு மகிழ்கிறான். உருமறைதலின் துணையால், கணவனைப் பிரிந்து வாழும் நண்பனின் மனைவியை நண்பனுடன் இணைத்து வைக்கின்றான். ஆளரவற்ற இடத்தில் ஒரு பெண்ணிடம் வம்பு செய்யும் ஆடவனைத் துரத்துகின்றான். ஒரு வீட்டிற்குள் புகுந்த திருடனைத் தடியால் அடித்துவிரட்டுகிறான். தன்னைச் சிறைக்கு அனுப்பிய கேசவராயனின் தீய பண்புகளை மக்களுக்கு உணர்த்துவதற்காக அவனது பிறந்த நாளன்று கோவிலில் அர்ச்சனைத் தட்டை கவிழ்க்கின்றான். பிறந்த நாள் விழாவினும் குழப்பத்தை விளைவிக்கின்றான். மக்கள் மனதில் 'தீயவர்களைத் தெய்வம் கண்ணுக்குப் புலனாகாமல் தண்டிக்கிறது' எனும் எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறான் மெய்யப்பன் தன்னலமற்று, 'உரு மறைதலைப்' பிறருக்காகப் பயன்படுத்தி மகிழ்ச்சி அடைகிறான்.

இறுதி நிலை: கிரிஃபின் தன் உரு மறைதலினால் பிறரைத் துன்புறுத்தி, தானும் துன்பமுற்று, இறுதியில் இறக்கிறான். அவனுக்கு அடைக்கலம் கொடுத்த நண்பனை கெம்ப் அவனது தீயசெயல்களை அறிந்து, அவனைக் காவல் துறையினரிடம் பிடித்துக் கொடுக்க முயன்ற பொழுது, கிரிஃபின் அவனையே கொல்லத் துணிகிறான். இறுதியில் காவல் துறையினராலும், ஊர் மக்களாலும் துரத்தப்பட்டு, பிடிபட்டு இறக்கிறான்.

மெய்யப்பன், தன் மனைவியின் மனமாற்றம் தீயவனான கேசவராயனை ஊரார் வெறுத்தல், நண்பர்களின் அன்பு, குழந்தைகளின் ஏக்கம் ஆகியவற்றைப் புரிந்துகொண்ட பின், மீண்டும் காஷ்மீருக்கு வந்து தன்னுரு அடைகிறான். பின்னர் நண்பர்களிடம் விடைபெற்று, தன் ஊருக்கு வந்து மகிழ்ச்சியாக வாழ்கிறான்.

வேற்றுமைகள்: 'உரு மறைதல்' எனும் உத்தி இரு புதினங் களிலும் பயன்படுத்தப் பட்டிருப்பினும், இரு படைப்பாசிரியர் களும் அவ்வுத்தியைக் கையாண்டுள்ள முறையில் சில வேறு பாடுகள் காணப்படுகின்றன.

எச். ஜி. வெல்ஸின் கதைத்தலைவன் உருமறைதலுக்குரிய மருந்தைக் கண்டுபிடித்து அதை முதலில் ஒரு கம்பளித் துணியில் பயன்படுத்திப் பார்க்கிறான். அது மறைதலைக் கண்ட பின்னரே அம்மருந்தை அவன் உட்கொள்கிறான். பிறகு அம்மருந்தை ஒரு பூனையிடம் செலுத்திப் பார்க்கிறான்.

மு. வ. வின் கதைத் தலைவன் பிறரது கண்டு பிடிப்பின்னர் தன் உடம்பில் செலுத்திக் கொள்ள முன் வருகிறான். அம்மருந்து முதலில் ஒரு நாயிடம் செலுத்திப் பார்த்த பின்னரே, மெய்யப்பன் உடலில் செலுத்தப்படுகிறது. செலுத்துவதற்கு முன்னர் செலுத்தப்படுபவருக்கு நல்ல சத்துணவு கொடுக்கப்படுகிறது இரண்டு வாரங்களுக்கு மேல் அந்த மருந்து உடலில் தங்கி இருக்க வேண்டாம் என்று வலியுறுத்தப்படுகிறது.

கிரிஃபினுக்கு உரு மறைந்திருக்கும் நிலையிலும் உணவு, உடை ஆகியவை தேவையாக இருக்கின்றன. குளிர் அவனை வாட்டு கிறது; பசி எடுக்கிறது. தங்குமிடத்திற்காகவும், உணவிற்காகவும் அலைகின்றான். கிரிஃபினின் உடல் பிறர் கண்ணுக்குப் புலப்படா விடினும், அடிபடும் பொழுது குருதி சிந்துதல், நகரம், தலைமுடி

ஆகியவை மறையாதிருத்தல் ஆகியவை பிறருக்குப் புலப்படுகின்றன. கிரிஃபின் பிறர் கண்களுக்குத்தான் உருவமாகப் புலப்படுவதற்கு உடைகள் அணிகின்றான். பொய்முடி, பொய் மூக்கு, தொப்பி, காலணி ஆகியவற்றை அணிந்து நடமாடுகின்றான்.

மெய்யப்பனுக்கு உரு மறைந்த பின்னர் குளிரோ வெய்யிலோ தெரியவில்லை. அவனால் வானத்தில் 500, 600 அடி வரை பறக்க முடிகின்றது. அவனது கண், காதுகளின் கூர்மை குறையவில்லை. பசி, உறக்கம் இரண்டும் தோன்றவில்லை. மெய்யப்பனுக்கு "எந்தக் காரணத்தாலும் குரலைப் பயன்படுத்தக் கூடாது; ஒலி செய்தலும் கூடாது; உணர்ச்சிக்கு இடம் தரக் கூடாது; உண்பதற்கு ஆசை கூடாது'' என்றெல்லாம் பல கட்டளைகள் பேராசிரியரால் இடப்படுகின்றன. (மேலது, ப. 226)

கிரிஃபின் மீண்டும் உடலைப் பெறவேண்டும் என்று முயற்சி செய்யவில்லை.

மெய்யப்பன் மீண்டும் உடல் பெறுகிறான. அதற்குரிய வழிமுறைகள் படைப்பாசிரியரால் கூறப்படுகின்றன.

முடிவுரை

எச். ஜி. வெல்ஸ் அறிவியல் கண்டுபிடிப்பு மனிதனை எவ்வாறு பாதிக்கும் என்ற எண்ணத்தைக் கிரிஃபின் என்ற பாத்திரப் படைப்பின் வழிச் சித்திரிக்கின்றார். வெல்ஸின் கதையைப் படித்ததன் வழி அந்த உத்தியை எடுத்தாண்டுள்ள மு.வ. "உயர்ந்த கருவி நல்லவர்களின் கையில் இருக்கும் என்பது உறுதியா? கெட்டவர்களின் கையில் அகப்பட்டால் தீமைகள் பல மடங்கு பெருகிவிடுமே'' (மேலது ப.411) என்பதை உணர்ந்து 'உரு மாறுதலை' ஒரு நல்லவனிடத்தில் செலுத்தி அதன் வழி பல நன்மைகள் நிகழ்வதாகச் சித்திரிக்கின்றார். எச். ஜி. வெல்ஸின் நினைவின் வளர்ச்சியை, மு. வ. விடம் காணமுடிகின்றது. அறக்கருத்துகளையே தன் புதினங்களில் வலியுறுத்தும் மு. வ, ஆங்கில நாவலின் உத்தியை, அறக்கருத்துக்களை வலியுறுத்துவதற்காக எடுத்தாண்டுள்ளார்.

"லைட் ஆப் ஆசியா"வின் தமிழ் மலையாள மொழிபெயர்ப்புகள்

கோ. சித்ரலேகா
அரசினர் விக்டோரியா கல்லூரி
பாலக்காடு

முன்னுரை

கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவில் பரவி யிருந்த புத்தமதம் தன் முழு செல்வாக்கையும் கி. பி. பனிரெண்டாம் நூற்றாண்டோடு இழக்கத்துடங்கியது. இருப்பினும் இருபதாம் நூற்றாண்டில் இந்திய இலக்கியங்களில் குறிப்பாகத் திராவிடமொழி இலக்கியங்களில் புத்தரின்வரலாறும், கொள்கைகளும் புதிய செல்வாக்கைப் பெறத் தொடங்கியது.

புத்தனின் சரித்திரம் மூல நூலாகவோ, அல்லது மொழி பெயர்ப்பாகவோ மிகுதியாகப் பாடப்பட்டன. புதுவையைச் சேர்ந்த சண்முக சுந்தரனார் ''கௌதமப் புத்தர் காப்பியம்'' என்ற செய்யுள் நூலைப் பாடியுள்ளார். தெலுங்கில் திருப்பதி வேங்கடக் கவிஞர்கள் (திவார்கர் திருப்பதி சாஸ்திரி – செல்ல பில்ல வேங்கட சாஸ்திரி) (1871-1919) ''புத்த சரித்திரம்'' என்ற மொழிபெயர்ப்பைச் செய்துள்ளனர். கன்னட இலக்கியத்தின் மூலகர்த்தாக்களில் ஒருவரான 'கோவிந்தபை' புத்தனின் சரித்திரத்தை ''வைகாசி அல்லது புத்தனின் கடைசி நாள்'' என்ற காவியமாகப் படைத்துள்ளார்.

மலையாளத்தில் இருவர் புத்தனின் சரித்திரத்தைப் பாடி உள்ளனர். நலப்பாட்டு நாராயண மேனோன் (1873-1954) **''ப்ரௌரஸ்யதீபம்''** என்ற பெயரிலும், குமாரனாசான் (1873-1924) **''ஶ்ரீபுத்த சரிதம்''** என்ற பெயரிலும் புத்தனின் சரித்திரத்தை மொழி பெயர்த்துள்ளனர். தமிழில் கவிமணி 'தேசிய விநாயகம் பிள்ளை (1876-1954) ''ஆசிய ஜோதி'' என்ற நூலைப்

படைத்துள்ளார். இம் மொழிபெயர்ப்புகள் எல்லாவற்றிற்கும் அடிப்படை நூலாக அமைந்தது 'சர் எட்வின் ஆர்னால்ட்' (1837-1904) என்ற ஆங்கிலக்கவிஞர் எழுதிய ''லைட் ஆப் ஆசியா'' என்ற நூலாகும்.

மொழிபெயர்ப்பின் தேவை: ஒரு ஆங்கிலக் கவிஞரின் நூல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டிய தேவையும், நோக்கமும் ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும். ஏசு, புத்தர், வள்ளுவர் போன்ற மகான் களின் கருத்துகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கும், குறிப்பிட்ட சமுதாயத்திற்கும் மட்டும் பொருந்துவன அல்ல. சமுதாயச் சீர்குலைவு ஏற்படும் போதும் நீதி நெறிகள் தவறும் போதும் இலக்கிய நெறியாளர்கள் இச் சான்றோர்களின் கருத்துகளைப் பயன்படுத்தி நாட்டு மக்களை நல்வழிப்படுத்த முயல்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டில் இந்திய நாடு அடிமைப்பட்டு சுதந்திரத்திற்காகப் போராடிக் கொண்டிருந்தது. நாட்டில் குறிப்பாகத் தென்னகத்தில் அறியாமை, சாதி வேற்றுமை, மூடநம்பிக்கைகள், சமயப்பூசல்கள் போன்றவை தலைவிரித் தாடின. கேரளத்தில் ஈழவர்களும், தமிழ்நாட்டில் தாழ்த்தப் பட்டவர்களும் உயர்சாதியரின் கொடுமைகளுக்கு உள்ளாயினர். வரிக் கொடுமைகளாலும், அடிமைச் சந்தைகளாலும் அவர்கள் அவதிப்பட்டனர். சாதிப் போரட்டத்தில் சிக்கித் தத்தளிக்கும் சமுதாயத்தை முன்னேற்ற புத்தரின் அறிவுரைகளைத் தங்கள் இலக்கியங்களின் வழி போதிக்க திராவிடக் கவிஞர்கள் முயன்றனர். அவ்வமயம் வெளிவந்த எட்வின் ஆர்னால்டின் எளிமையும் இனிமையும் வாய்ந்த 'லைட் ஆப் ஆசியா' அவர் களைப் கவர்ந்ததில் வியப்பில்லை.

லைட் ஆப் ஆசியா: எட்டு பாகங்களும், ஐயாயிரம் வரிகளும் கொண்ட 'லைட் ஆப் ஆசியா' புத்தரின் பிறப்பு, இளம் பருவம் திருமணம், உலகைத் துறத்தல், தவம் செய்தல், போதி மரத்தடியில் ஞானமடைதல்; நாடெங்கும் ஞான மார்க்கத்தை உபதேசித்தல். தந்தை, தாய்; மனைவி; மற்றும் சுற்றத்தார்க்கு துன்பம் நீக்கும் வழி காட்டல்; தந்தையும், மாற்றந்தாயும் மனைவியும் புத்த சங்கத்தில் சேர்தல் போன்ற பகுதிகளை விவரிக்கின்றது.

கவிமணியின் ஆசிய ஜோதி: கவிமணி ஆசிய ஜோதியில் எட்டுக் காண்டங்களையும் அப்படியே மொழிபெயர்க்கவில்லை.

சிற்சில கதைப் பகுதிகளை மட்டுமே மொழிபெயர்த்துள்ளார். ஆசிய ஜோதியில் புத்தரின் அவதாரம், அருள் உரிமை இரண்டும் லைட் ஆப் ஆசியாவின் முதற்காண்டத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளாகும். காதல் பிறந்த கதை இரண்டாம் காண்டத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும். சித்தார்த்தன் கேட்ட தேவகீதம் மூன்றாம் காண்டத்திலிருந்தும், சித்தார்த்தன் துறவு நான்காம் காண்டத்திலிருந்தும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கருணைக் கடல், புத்தரும் மகனிழந்த தாயும் பகுதிகள் லைட் ஆப் ஆசியாவின் ஐந்தாம் காண்டத்தில் உள்ளன. புத்தனும் ஏழைச் சிறுவனும் என்ற பகுதியும், புத்தரும் சுஜாதையும் என்ற பகுதியும் ஆறாம் காண்டத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

குமாரனாசானின் ஸ்ரீ புத்த சரிதம்: கவிமணியின் சமகாலப் புலவராகிய குமாரனாசான் மலையாள இலக்கியத்தின் கற்பனையில் கவிதை இயக்கத்தின் முன்னோடி.

குமாரனாசான் 'லைட் ஆப் ஆசியாவின்' எட்டு காண்டங்களில் முதல் ஐந்து காண்டங்களை முழுமையாக மொழி பெயர்த்துள்ளார். சம்பவங்களை முன்பின் மாற்றாமலும் கதையை மாற்றாமலும், ஏறக்குறைய வரிகள் மாறாமலும் மொழிபெயர்த்துள்ளார். முதல் மூன்று காண்டங்கள் அப்படியே மொழிபெயர்க்கப்பட, நான்காம் ஐந்தாம் காண்டங்களில் குமரனாசானின் தனித் தன்மைகள் வெளிப்படுகின்றன.

மொழிபெயர்ப்பின் தன்மைகள்: மொழிபெயர்ப்பில் விரிவான மொழிபெயர்ப்பு, சரியான மொழிபெயர்ப்பு, தழுவல், மொழியாக்கம் என பல வகைகள் உண்டு. கவிமணியின் ஆசியஜோதியும், குமாரனாசானின் ஸ்ரீ புத்த சரிதமும் மொழியாக்கம் (Trans creation) வகையைச் சார்ந்தவை. இதனை மொழி மறு படைப்பு என்றும் கூறுவர். மூலநூலைப் படிக்காமல் மொழிபெயர்ப்பை மட்டும் படித்தால் அது மூலநூலைப் படித்த உணர்வைத் தரும் பிறிதொரு மொழியில் இருந்து மொழிபெயர்த் திருந்தாலும் கூட குறிக்கோள் மொழியின் மரபிற்கேற்ப அமைந்திருக்கும்.

கவிமணியின் மொழிபெயர்ப்பு: கவிமணி ஆசிய ஜோதியை மொழிபெயர்க்க தீண்டாமை போன்ற சமூக காரணங்கள் மட்டு மின்றி அவர் உயிர்களிடத்தே கொண்டிருந்த ஜீவகாருண்யமும்

முக்கிய காரணமாகிறது. 'புத்தரும் ஏழைச் சிறுவனும்' பகுதியைப் படிப்பவர்கள் இதனை நன்கு உணரலாம். மூல நூலையும் மிஞ்சும் வண்ணம் இப்பகுதி உயிர்க் கொலையை எதிர்க்கிறது.

''ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கி நீர்
ஆக்கிய யாகத்து அவியுணவை
ஈட்டும் கருணை இறைவர் கைகளில்
ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா''
''ஆயிரம் பாவங்கள் செய்வதெல்லாம்
ஆட்டின் தலையோடு அகன்றிடுமோ''

கருணைக் கடல் பகுதியில் 49,52,53,58,59,61 எண்ணுள்ள பாடல்களில் கவிமணி உயிர்க்கொலை செய்வோரை மூடர் என்றும் சண்டாளர் என்றும் பேய் என்றும் ஏசுகிறார். மூல நூலில் வரும் புத்தரின் அறவுரையை விட இச்சொற்கள் உறுதியுடனும் ஆவேசத்துடனும் உள்ளன. இப்பகுதி தழுவலாகவும், சில பாடல்கள் கவிமணி தாமே இயற்றிச் சேர்த்ததாகவும் அமைகின்றன.

கவிமணியின் தீண்டாமை எதிர்ப்பும் சமயசார்பின்மையும்

புத்தனும் ஏழைச் சிறுவனும் பகுதியில் வரும்

''ஓடும் உதிரத்திலும் – வடிந்து
ஒழுகும் கண்ணீரிலும்
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவதுண்டோ அப்பா''

போன்ற வரிகள் சாதி வேற்றுமைக் கூடாது என்பதை வலியுறுத்துகிறன.

சமயச்சார்பற்ற கவிமணி தம் நூலில் இந்திரன், பார்வதி, சிவன், துளசி போன்ற இந்துமதக் கடவுளரின் பெயர்கள் வரும் இடங்களையும் தவிர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மூல நூலில் யசோதரையைப் பார்வதி போன்றவள் என்று எட்வின் ஆர்னால்டு வர்ணிக்கிறார்.

"... ... A form
of heavenly mould, a gift like parvatis
Eyes like a hinds in love"

இவ்வரிகளை

"அங்கயற்கண்ணி, அழகின் செல்வி
திங்களைப் பழிக்கும் திருமுக விலாசனி
பங்கய மீதெழாப் பாக்கியலட்சுமி"

என மொழி பெயர்த்துள்ளார். கருணை வள்ளலான புத்தரைப் தெருவில் கண்ட மக்கள் தங்கள் செயல்களை மறந்து நிற்கின்றனர் அந்நிலையை

"... ... form the unwatched rice
Shivas white bull fed free"

கவிமணி குறிப்பாக 'சிவா' என்ற சொல்லை நீக்கி

"மாடும் அரிசியைத் தின்றதம்மா அதை
மாற்றியடிப்பாரும் இல்லையம்மா"

என்று பாடுகிறார். இது போல 'துளசி' 'இந்திரன்' போன்ற சொற்களும் விடுபட்டுள்ளமை அவருடைய சமயச் சார்பின் மையைச் சுட்டுகிறது.

ஸ்ரீ புத்த சரிதத்தில் காவிய மரபு: குமாரனாசான் ஸ்ரீ புத்த சரிதத்தைத் தொடங்கும் விதமே ஒரு காப்பியத்தின் ஆரம்ப நிலையைக் காட்டுகிறது.

குமரனாசானின் தொடக்கம் லைட் ஆப் ஆசியாவை விட சற்று விரிவானப் பகுதியாக உள்ளது. சொற்கள் பக்தி பெருக் கோடும், இறைவனின் பேரருள் வெளிப்படும் வண்ணமும் உள்ளன.

முடிவுரை:

ஆசிய ஜோதியும், ஸ்ரீ புத்த சரிதமும் மொழிபெயர்ப்புகள் என்ற நிலையில் இருந்தாலும் தத்தம் மொழிகளின் மரபுக் கேற்ப மூலநூலில் உள்ள சுவையும், உணர்வும் குன்றாத வண்ணம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பில் வழக்குத் தொடர்கள், பழமொழிகள், உவமைகள் முதலியன மிகநுட்பமாகக் கையாளப்பட்டுள்ளன. கவிமணி ஆசியஜோதியை எழுத ஜீவகாருண்யமும் தீண்டாமையும் முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. குமாரனாசான் சமூக சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதத்தொடங் கினாலும் பிற்காலத்தில் தம் குருவாகிய எழுத்தச்சனைப் பின் பற்றி இராம காவியம் போல் ஓர் அற்புதக் காவியம் படைக்க வேண்டும் என்று எண்ணியது தெரிகிறது.

பதிற்றுப்பத்தில் ஆற்றுப்படை

சி. சித்திரா
ஜெ.ஜெ. கலை, அறிவியல் கல்லூரி
புதுக்கோட்டை

பரிசில்பெற்ற இரவலனொருவன் பரிசில் பெற விழையும் இரவலனைப் புரவலனொருவனிடம் ஆற்றுப்படுத்துதலே ஆற்றுப் படையின் இலக்கணம். பாடாண் திணைக்குரிய துறைகளில் ஒன்றான 'ஆற்றுப்படை' சங்க எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில்பாங்குற அமைந்து, அதன் பின்னெழுந்த பத்துப்பாட்டு, சிற்றிலக்கிய, சமய நூல்களுக்கெல்லாம் அடிப் படையாய் அமைந்ததை இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

ஆற்றுப்படை

''கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறார்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்''

(தொல். புறத்திணை. நூ. 30) என்ற தொல்காப்பிய நூற்பா ஆற்றுப்படையின் இலக்கணத்தை வரையறுக்கின்றது. அதாவது கூத்தராயினும், பாணராயினும் பொருநராயினும் விறலியா யினும் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தை எதிர்வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி ஆற்றின் அருமையும் ஊர்ப்பண்பை யும் விளக்கி தாம் பெற்ற பெருவளத்தை அவ்வறியோரும் பெற வேண்டுமாறு கூறப்பெறுவதாகும். ஆற்றுப்படை பாணன், கூத்தன், பொருநன், விறலி, புலவன் முதலியோரை ஆற்றுப் படுத்துவதாக அமைதல் மரபு.

எட்டுத்தொகை நூல்களில் புறநானூறு, பதிற்றுப்பத்தில் ஆற்றுப்படைத்துறைப் பாடல்கள் அமைந்துள்ளன. பதிற்றுப் பத்தில் அமைந்துள்ள ஆற்றுப்படைத்துறைப் பாடல்களின்

எண்ணிக்கை 'எட்டு இவற்றுள்' 66 ஆம் பாடல் 'செந்துறைப் பாடாண்' என்ற துறைக் குறிப்புடன் காணப்பெறினும் இதில் ஆற்றுப்படைக் கூறுகள் அமைந்துள்ளதால் இதைப் 'பாணாற்றுப் படை' எனல் பொருந்தும் [பதிற். 40, 49, 57, 60, 66, 67, 78, 87]. இவற்றுள் '2' பாடல்கள் பாணாற்றுப்படையிலும் '6' பாடல்கள் விறலியாற்றுப்படையிலும் அமைந்துள்ளன.

கீழ்க்காணும் அட்டவணை இப்பாடல்களைப் பாடியோர் பாடப்பட்டோர் பற்றிய குறிப்புகளைச் சுட்டும்.

	பாடியோர்	பாடப்பட்டோர்	துறை	பாடல்
1.	காப்பியாற்றுக் காப்பியனார்	களங்காய்கண்ணி நார் முடிச்சேரல்	விறலியாற்றுப் படை	40
2.	பரணர்	கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்	,,	49
3.	காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்	ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்	,,	57
4.	,,	,,	,,	60
5.	கபிலர்	செல்வக் கடுங்கோ வாழியாதன்	பாணாற்றுப் படை	66
6.	,,	,,	,,	67
7.	அரிசில்கிழார்	தகடுரெறிந்த பெருஞ் சேரலிரும் பொறை	விறலியாற்றுப் படை	78
8.	பெருங் குன்றூர்க் கிழார்	குடக்கோ இளஞ் சேரலிரும்பொறை	,,	87

நுவல்பொருள்

இப்பாடல்களனைத்திலும் பரவலாக, தலைவனின் போர்ச் சிறப்பு, கொடைச்சிறப்பு, நாட்டுச்சிறப்பு, ஊர்ச்சிறப்பு, இரவலனின் வறியநிலை, இரவலரை விளித்தல், இசைக்கருவி களின் சிறப்பு, பரிசில் சிறப்பு என்ற செய்திகள் விளக்கப் பெற்றுள்ளன.

சேரலிரும்பொறை தகடூரையும், குட்டுவன் மோகூரையும், சேரன் நன்னனையும் வென்ற வெற்றிகளையும், பகைவருடைய ஊர் முறையாகக் கொள்ளையடிக்கப்பட்டதையும் பதிற் 40, 49, 78 ஆம் பாடல்களினால் அறியமுடிகின்றது. கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் மோகூர் பழையனின் படைகளைக் கலைந்து சிதையுமாறு தாக்கியழித்தவன் என்று பரணர் பாடியுள்ளார். 'கொல்படை தெரிய வெல்கொடி நுடங்க' என்று செல்வக் கடுங்கோவின் வெற்றியைச் சொல்லும் கொடியசைவது குறிப்பிடப்பெற்றுள்ளது. பெரிய பனந்தோடாகிய மாலையோடு சிறந்த வீரக்கழல் சிவக்கும்படி இரத்தத்தைத் தூவுகின்ற புலால் நாற்றமுடைய களத்தையடுத்த பாசறையில் உள்ளவன் போர் வினையை விரும்பி அதில் பெற்ற பொருள்களை மற்றோருக்குக் கொடுத்தான், (பதிற். 57, 60) என்றும் கூறப்பெற்றுள்ளது.

'குருதி பனிற்றும் புலவுக் களத்தோன்'
'துணங்கை யாடிய வலம்படு கோமான்'
'வான்பளிங்கு விரைஇய செம்பரான் முரம்பின்
இலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகண்கண் வைப்பின் நாடு கிழவோன், (66)
'யாடுபரந் தன்ன மாவின்
ஆபரந் தன்ன யானையோன் குன்றே' (87)

என்று சேரமன்னர்களின் படைமாட்சியும்,

'ஒண்ணுதல் மகளிர் துளித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்' (57)
'கருப்பம் தெப்பம் போன்றுதவும் அருளுடையவன்' (87)
செல்வக் கோமான்' (67)

என்று கொடைமாட்சியும் கூறப்பெற்றுள்ளன.

பரிசில் பெறச்செல்லும் தலைவன் சிறப்பையறிவதால் இரவலனுக்குப் புதிய நம்பிக்கை தோன்றும்; தொடர்ந்து அவன் ஊருக்குச் செல்லும் வழியையறிவதால் ஆர்வத்தோடு செல்வான். எனவே ஆற்றுப்படுத்துவோர் கூறும் செய்தியில் புரவலனின் புகழ் கொடைச் சிறப்புப் பற்றிக் கூறல் இன்றியமையாததா கின்றது.

'செல்லாயோதில் சில்வளை விறலி', 'துயலும் கோதைத் துளங்கியல் விறலி', 'கடன்றி மரபின் கைவல் பாண'

என்று இரவலரை விளித்துக் கருத்துகளைச் சொல்லும் போக்கைக் காணமுடிகின்றது.

சென்று பரிசில் பெறக்கூறலன்றித் தன்னுடன் வரும்படி அழைக்கும் நிலையை 3 பாடல்களில் (49, 57, 60)) காணமுடிகின்றது.

'உறந்தையோனே', 'கானலம் தொண்டி', 'நேரியோனே என்று தலைவனின் ஊர் (பதிற் 90) சுட்டப்பெற்றுள்ளது.

இன்னாரிடம் செல்லின் இன்ன பரிசில் பெறுகுவை எனப் பரிசின் தன்மை கூறும் நிலையும் உண்டு.

"... ... ... மைந்திற்
தொழில்புகல் யானை நல்குவன் பலவே" (பதிற். 40)

"... ... ... களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை விரிந்துறை போகிய
ஆர்பத நல்கும்" (பதிற். 66)

"தெண்கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை"
(பதிற். 67)

"சென்மோ பாடினி நன்கலம் பெறுகுவை" (பதிற். 87)

என்ற பாடலடிகள் பரிசில் பெறுதல் உறுதி என்ற கருத்தை நிலைநிறுத்துகின்றன.

போரில்லா காலங்களில் மன்னன் தன் விருந்தினர் உறவினருடன் உண்டும் ஆடியும் மகிழ்ந்திருந்தான். 'ஏழுமுடி ஆரம்' என்ற ஒருவகைச் சிறப்பு அணியைச் சேர மன்னர்கள் அணிந்தனர். சேரமன்னர்களாட்சியில் மக்கள் செல்வச்செழிப்பில் அமைதியான வாழ்க்கை வாழ்ந்தனர். மருதநிலத்தில் பசிய அணிகலன்களை அணிந்த மகளிர் நாள்முழுவதும் செல்வக் களிப்பால் விளையாட்டை விரும்பிக் குரவைக் கூத்தாடினர். மக்கள் பலவகைத் தொழில்களைச் செய்து அன்புநெறியில் வாழ்ந்து வாழ்ந்தனர்.

பாலை நிலத்துக்குரிய பண்ணை நண்பகலில் பாணனின் கையிலுள்ள பேரியாழைக் கொண்டு மிடற்றுக்குரலோடு ஒன்றுபட்ட இனிய இசையில் 'தழிஞ்சி' என்றும் துறைப்பொருள் அமைந்த பாடல்களைப் பாடினர்.

அளவோடு கள் அருந்துதல் வெற்றி பெற்ற அரசன் தானைத் தலைவருடன் தேர்த்தட்டிலே நின்று குரவைக்கூத்தயர்தல்' உன்ன மரத்தை நிமித்தம் பார்க்கப் பயன்படுத்தல் ஆகிய வழக்கங்கள் இருந்தன. ஈதல் வாழ்வும் காதல் வாழ்வும் நிறுக்கப்பட்ட சீர்கோலில் சேரலாதனுக்கு ஈதல் வாழ்வே எடைமிகுத்துக் காட்டியது.

எல்லாரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற குறிக்கோளோடு இல்லாரை உள்ளாரிடம் ஆற்றுப்படுத்தும் மாந்தநெறி பதிற்றுப் பத்தில் முதன்மை பெற்றுள்ளது. குறும்பாக்களான இவையே பத்துப்பாட்டில் பழகுநிலைப் புணர்ச்சிப்பாடு கொண்டு நிலந் தழுவி, இயற்கைதழுவி, சமூகப்பழக்க வழக்கங்கள் தழுவி, கலை நுகர்ச்சி தழுவி நெடிதாயின.

அகத்துறை கூறுகளே காலப்போக்கில் காப்பியங்களிலும் சமயத்துறைப் படைப்புகளிலும் பல்வேறு மாற்றங்களை எய்தினாற்போன்று ஆற்றுப்படை பாடுகூறுகளும் காலப்போக்கில் பத்துப்பாட்டு படைப்புகளிலும் சிற்றிலக்கியங்களிலும் பல்வேறு மாற்றங்களைத் தோற்றுவித்தன. அக்காலச் சமுதாயப் பொருளாதார நிலையோடு இன்றைய நிலையை ஒப்பிட்டுப் பார்த்து உயர்வுறவும் இவை வழிவகுக்கின்றன.

குறள் காட்டும் பெண்மை

ச. சிவகாமி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

பெண்ணியச் சிந்தனையில் இலக்கியங்களைக் காலவரிசையில் அணுகும்பொழுது சங்க காலத்திற்கும் சிலப்பதிகாரத்திற்கும் இடையே மிகப்பெரியளவில் பெண்கள் நிலையில் வேறுபாடு காணப்படுகிறது. இரண்டிற்கும் இடைப்பட்டதாகக் கருதப் படும். திருக்குறளிடையே அவ்வேறுபாட்டிற்கான திருப்புமுனை தெளிவாகத் தெரிகிறது. அத்திருப்புமுனையை உணர்த்தும் எண்ணங்கள் இங்கே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையையும் (67), தொடர்ந்து மகன் தந்தைக்கு ஆற்றவேண்டிய பொறுப்பையும் (70) வலியுறுத்தும் வள்ளுவம் தந்தை அல்லது தாய் மகளுக்குச் செய்ய வேண்டிய கடமை பற்றியோ, மகள் தன் பெற்றோருக்குத் திருப்பிச் செலுத்தவேண்டிய நன்றி பற்றியோ கூறவில்லை. ஆணும் பெண்ணும் இணைந்த இல்லறத்தை எடுத்துரைக்கும் 'இல்வாழ்க்கை' முற்றிலுமாக ஆணை மையமிட்டு அமைந் திருத்தல் சுட்டத்தக்கது. தொடர்ந்து வரும் 'வாழ்க்கைத்துணை நலம்' தரும் கருத்துகளும் ஓர் ஆடவனுக்குப் பெண் இணையாக வன்றிச் சார்பாக நிற்றலையே அழுத்தமாக உணர்த்துகின்றன. மற்றும் ஒரு பெண்ணுக்குரிய வாழ்க்கைத்துணை பற்றிய எண்ணம் சற்றும் இல்லை. பொதுநிலையில் வாழ்க்கைக்கு வழிகாட்ட எழுந்த நூல் பொதுஅறம் பேசுதலில் கூட ஆணை முன்னிறுத்தியே (39) மொழிந்திருப்பதும், ஆண் மகனுக்குத்தனிச் சிறப்பளித்திருப்பதும் (புதல்வரைப் பெறுதல்) பெண், ஆணை விடக் குறைவாக மதிக்கப்பட்டதையறிவிக்கின்றன.

தொல்காப்பியம் முதன்மைப்படுத்திய பெண்மைப் பண்பு களான கற்பு, நாண் என்பனவற்றுள் கற்பு மற்றதை விடக்

கூடுதல் அழுத்தத்தையும் முதன்மையையும் பெறக் காண்கிறோம் (55) பெண்ணுக்கு உயிரைவிட மேலானதான கற்பினைப் (54) போற்றிப் பாதுகாத்தற் பொருட்டே இற்சிறையமைந்ததும் (57) அதற்குக் களங்கம் வராதவாறு காத்துக் கொள்ளுதல் அவளது தலையாய கடமையாதலும் (56) குறிக்கப்பட்டுள்ளன.

இல்லத்திற்குப் புறத்தே சென்று பொருள் ஈட்டுதலிலும், தேவையான பொருட்களைப் பெறுதலிலும் பெண்கள் ஈடுபட்டிருந்த நிலை மாற்றங்கண்டு முழுமையாக வீட்டிற்குள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தாள் என எண்ணுதற்கும் இடனுண்டு, கணவன் தேடித்தரும் செல்வத்துள் இல்லறப் பணிகளை நிறைவு செய்யும் மனைத்தக்க மாண்புடையவளே சிறந்த மனைவியாகக் (51) கருதப்படுவதும், பெண் வழிச் சேறல் அதிகாரக் கருத்துகளும் (901 - 910) இதனை வலியுறுத்துகின்றன.

தற்காத்து, தற்கொண்டான் பேணி, தகைசான்ற சொற்காத்து (56) இவற்றால் சோர்வடையா பெண்ணே மறுமையில் வானவர் உலகில் பெருஞ் சிறப்படைகிறாள் (58) இந்நம்பிக்கை, ஆடவன் பெண்ணைத் தன் ஆதிக்கத்திற்கு உட்படுத்த கையாண்டதொரு சூழ்ச்சி எனலாம். கற்புச்சிறை குறள் காலத்தில் ஆழமாகவும், அகலமாகவும் வலுப்பட்டதை இவை போல்வன காட்டுகின்றன.

பெண்ணுக்கு உரித்தாகத் தொல்காப்பியம் வலியுறுத்திய நாண், சங்க காலத்தில் ஆடவருக்கும் உரித்தாக்கப்பட்டது (குறுந் 262:2-7) இருபாலார் கொள்ளும் நாண் இரு வேறு வழிப்பட்டதைக் குறள் தெளிவாக்குகிறது (1011). ஆணின் நாணம் செயல் அடிப்படையில் அவ்வப்போது தோன்றக்கூடியது, பெண்ணின் நாணம் உடன் தோன்றிய பண்பாகி எப்பொழுதும் நிலைபெற்றது என வேறுபாடமைகிறது.

பெண்ணின் சீரிய செயல் தரும் பாராட்டு அவளுக்கு இல்லை. அது அவளது கணவனுக்குரித்தாகும். மாற்றத்தை இங்குப் பார்க்கிறோம். விருந்தோம்பல் அதிகாரம், குறிப்பாக, 'செல் விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத் தவர்க்கு' (86) என்பது நுணுகி நோக்கத்தக்கது. பெண்ணின் இல்லப் பொறுப்புகளிலும் ஆணின் தலையீடு இருந்ததை இது காட்டுகிறது. விருந்தோம்பல் பெண்ணின் முதன்மைப் பொறுப்பு

களுள் ஒன்றாகத் தொல்காப்பியம் முதல் வலியுறுத்தப்படுவது இங்கு எண்ணற்பாலது. 'விருந்தோம்பல்' தன் சிறப்பையிழக்க வில்லை; ஆனால் அதனை நிறைவேற்றும் பெண் புறக்கணிக்கப் படுகிறாள். பொருளுடைமை ஆணைச் சார்ந்திருந்ததும், ஆணின் உடைமையாகப் பெண் கொள்ளப்பட்டதும் இதற்குக் காரணங்கள்.

பெண்ணுக்கு ஓரளவு பொருளாதார உரிமையிருந்த சங்கச் சமூகத்தை நோக்க, இங்கு அதுவும் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு ஆணுக்கே உரியதாக மாற்றம் கண்டதை, 'பேணாது பெண் விழைவாள் ஆக்கம் பெரியது ஓர் நாணாக நாணுத்தரும் (902) என்பது போன்ற குறட்பாக்களில் (906) காணலாம். பெண்ணின் மதிப்பு ஆணைச் சுற்றி நின்றதைச் சங்கம் உணர்த்த, ஆணின் பெருமை அவனது மனைவியைச் சுற்றி அமைந்த மாற்றத்தைக் குறள் 'பெண் வழிச் சேறல்' வழி இயம்புகின்றது. 'இல்லதென் இல்லவள், மாண்பானால் உள்ளதென் இல்லவள் மாணாக்கடை (53) எனும் வாழ்க்கைத் துணை நலமும் இக்கருத்தை அரண் செய்யும். ஓரளவிற்கு உரிமையும் பெருமையும் கொண்டிருந்த சங்கநிலை மாறிப் பெண் வெறும் கவர்ச்சிப் பொருளாகவும், போகப் பொருளாகவும் மாற்றப்பட்டதை, 'கல்லாதான் சொற் காமுறுதல் முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று' (402) எனும் குறள் புலப்படுத்துகிறது.

கல்வி கற்றல் பெண்ணுக்குத் தடைசெய்யப்பட்டிருக்கலாம் எனும் ஐயம், 1) ஆணினைத்தை முன்னிறுத்தியே (பொது) அறங் கூறல்; 2) பெண்ணை மிக இழிவாக மதிப்பீடு செய்து, அவளை அறிவற்ற அஃறிணையாகக் காட்டும் 'பெண்வழிச் சேறல்' அதிகாரக் கருத்துகள்; 3) 'யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என்னொருவன் சாந்துணையும் கல்லாதவாறு' (397) என ஆண் பாற் சுட்டல்; 4) மகனை அவையத்து முந்தியிருக்கச் செய்தல் தந்தையின் கடமையென்றல் (67); 5) கல்வியை வலியுறுத்த எழுந்த கல்லாமை, கேள்வி முதலிய அதிகாரங்களிலும் ஆண் சார்பமைதல்; (6) 'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழினலம் மண்மாண் புனை பாவையற்று' (407) என ஆணைப் பெண் ணாக்கி அறிவு ஆணுக்கு, அழகு பெண்ணுக்கு என்றுணர்த்தல் முதலான அகச்சான்றுகளால் உறுதிப்படுகின்றது.

வலிந்து சில கூறுகளைப் பெண்ணின் பொதுப் பண்பாக்கிப் பழித்துரைக்கும் போக்கினைக் குறள்வழி வள்ளுவர் தொடங்கியிருப்பதும் உணர்த்தத்தக்கது. கூடா நட்பினை விளக்கும்போது அதற்கு உவமையாக 'மகளிர் மனம் போல மாறுபடும்' (822) என்று பெண் நிலையான கருத்தற்றவள் என இகழப்படுகிறாள். 'புலவி நுணுக்கம்' பெண்ணை 'ஐயப்பிறவியாகக் காட்சிப்படுத்துகிறது. நற்செயல்களுக்கான தடைக்கல்லாகவும் (905, 908, 909) பெண் மீது களங்கம் கற்பிக்கப்பட்டுள்ளது. 'மலரன்ன கண்ணாள் முகம் ஒத்தியாயின் பலர் காணத் தோன்றல் மதி' (1119) எனும் கூற்றினை ஆழ்ந்து நோக்கின் பெண் எப்பருவத்தும், இற்சிறையில் பிற ஆடவர் பார்க்காதவாறு ஒடுக்கப்பட்டதை உய்த்துணரலாம்.

ஆணாதிக்கத்தை நிலைநிறுத்த பெண்ணுக்குக் கட்டுப்பாடுகள் பலவற்றை விதித்த சமூகம் அவற்றினின்று பெண்கள் மீறாதிருக்க வேண்டுமானால், கனிந்த மனங்கொண்ட ஆடவர், பெண்ணுக்கு விடுதலையும் உரிமையும் அளித்து அதனைத் தகர்த்து விடுவரானால் என் செய்வது என எண்ணியதின் விளைவாக அவனுக்குள் சில மூட நம்பிக்கைகளை விதைத்தது. பெண்ணினத்தை அடிமையாக்க முழு நிலையில் ஆடவனின் ஒத்துழைப்புத் தேவை; அதில் அவனை உறுதியாய் நிற்கச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்ட சூழ்ச்சியின் விளைவே, 'அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும் பெண்ஏவல் செய்வார் கண் இல்' (909) போன்ற குறட்பாக்களின் தோற்றக்களனாகும் பெண்ணுக்கு உரிய மதிப்பளிப்பவன் அல்லது அளிக்க விரும்புவனின் சிந்தனை இவற்றால் முடமாக்கப்படுவது வெளிப்படை மற்றும் இத்தகையோருக்கு 'மறுமையும் இல்லை' என்ற அச்சுறுத்தலும் கருதற்பாலது.

பெண்ணியப் பார்வையில் வள்ளுவர் அவரது இரு எண்ணங்களுக்காகப் பாராட்டப்பட வேண்டியவராகிறார்.

1. பெண்ணுக்கு வலியுறுத்தப்பட்ட கற்பெனும் நிறை ஆணுக்கும் தேவை என்ற முதல் குரல் (917) குறளில் ஒலிக்கக் கேட்கிறோம். ஆனால், பெண்ணுக்குப் போன்று உயிரினும் மேலானதாக வற்புறுத்தப்படவில்லை யெனினும் தேவை என்ற எண்ணமாவது முகிழ்த்துள்ளதே என்றளவில் வரவேற்கப்படுகிறது.

2. பரத்தமைக்கு எதிராக இலக்கிய வழி முதற்குரல் கொடுத்துள்ளமையும் (வரைவின் மகளிர்), பலரை விரும்பும் ஆடவனையும் பரத்த (1311) என்று இழித்துரைத்துள்ளமையும் அடுத்துச் சுட்டப்பட வேண்டியவனவாகும். இதிலும் பரத்தமை யொழுக்கிற்கு இருபாலாருமே பொறுப்பாவர் என்றுணரா மறுத்துப் பெண்ணினத்தை மட்டுமே 'இருமனப் பெண்டிர்' (920) மாயமகளிர் (918) எனத் தூற்றியிருப்பது ஒருபாற் கோடலாகும். இது குற்றமேயாயினும் சமுதாயத்தில் புரையோடிப் போயிருந்த புண்ணுக்கு மருந்து தேடும் ஓர் முயற்சி என்றளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆணாதிக்க உணர்வுடன் வள்ளுவர் பரத்தமைக்கு எதிர்ப்புத்தேட இளங்கோ அடிகள் அதனை மனிதநேயத்துடன் அணுகி வெற்றி கண்டுள்ளார்.

முடிபாகக் கூறுமிடத்து, பெண்ணியப் பார்வையில் வள்ளுவத்தில் பெற்ற சிந்தனைகளை மறுத்து, வலித்து அவற்றிற்கு அமைதி காட்டும் முயற்சிகள் இருப்பினும் (காண்க: பார்வை நூல்கள்) அவை முற்றிலும் பொருத்தமற்றவை எனத் துணிந்துரைக்கலாம்.

துணை நூல்கள்

குறள் மனம்; மு. கோவிந்தசாமி; பாரி நிலையம்; சென்னை; மு.ப. சன, 1958

திருக்குறள் - ஒரு சமுதாயப் பார்வை: எஸ். இராமகிருஷ்ணன்; என்சி பிஎச்; சென்னை; டிச. 1980

திருவள்ளுவர்; ச. சோமசுந்தர பாரதியார்; நாவலர் புத்தக நிலையம்; மதுரை; தி.ப. நவ 1971

வள்ளுவரும் மகளிரும்: தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்; சர்வோதய இலக்கியப் பண்ணை; மதுரை இ.ப. 1978.

பெண்ணிய நோக்கில் கைம்பெண்டிர்

ஆர். சிவசங்கரி
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மேலைநாடுகளில் ஆண், பெண் சமத்துவம் கேட்டு எழுப்பிய பெண்ணியக்குரல் இந்தியாவில் பத்தொன்பது இருபதுகளின் தான் ஒலித்தது. இஃது இந்தியாவில் மண் விடுதலையோடு இணைத்து வலியுறுத் தப்பட்டது. இதனால் மக்கள் மனதில் தோன்றிய புதிய சிந்தனைகள் இலக்கியம், சமயம், அரசியல் ஆகியவற்றில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியன. இம்மறுமலர்ச்சி பெண்ணியச் சிந்தனைக்கு வழிவகுத்தது.

ஆண் பெண் இருபாலரும் பேதங்கள் பாராட்டாது சூழலுக்கு ஏற்பச் சுதந்திரத்துடனும், சமத்துவத்துடனும், சகோதரத்துவத் துடனும் வாழ்வதே பெண்ணியம் ஆகும். இதனையே மேரி ஒல்ஸ்ட்டோன் கிராப்ட், "பகுத்தறிவு மானுடத்தின் பண்பு என்றால், ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு ஏதுமில்லை. ஆணைப்போலவே பெண்ணும் பகுத்தறிவு பெற்றவள்தான். அறியாமை அவள் குற்றமன்று. அத்தகைய சூழலுக்கு அவர் களை ஆளாக்கியது ஆண்களின் குற்றமே, அதற்கு காரணம் கல்வியின்மையே" என்று கூறுகின்றார்.

மேரியின் இக்கூற்றுப்படி பெண்கள் பல சமூகக் கொடுமை களினால் வதைக்கப்பட்டதற்குக் காரணம் கல்வி இன்மையே ஆகும். கல்வி அவர்களுக்கு மறுக்கப்பட்ட காரணத்தினால் சுதந்திரம், சமத்துவம் அற்ற பிரஜைகளாகத் திகழ்ந்தார்கள். 'சர்வமும் கணவனே' என்ற நிலை அவர்களுக்குப் போதிக்கப் பட்டிருந்தது. ஆகையால் கணவன் இறந்த பின்பு, பெண்கள் உடன்கட்டை ஏறுதல் கைம்மை நோன்பு மேற்கொண்டு வாழுதல்

போன்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். சுயசிந்தனை என்பது அவர்களுக்கு கற்பு, தலைக்கற்பு, இடைக்கற்பு, கடைக் கற்பு போன்ற கோட்பாடுகளால் மழுங்கடிக்கப்பட்டிருந்தது. இத்தகைய கோட்பாடுகள் அனைத்தும் பெண் கல்வி அறிவு பெற்ற பின்பு தகர்த்தெறியப்பட்டன. பெண்கள் சுயசிந்தனை, மரியாதை உடையவர்களாகத் திகழ்ந்தார்கள். சமூகத்தில் தான் சந்திக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார்கள். சுதந்திரமும், சமத்துவமும் அவர்களுடைய் அடிமைத்தனத்திற்கு இறுதி மணி அடித்தன.

கல்வியினால் பெண்களின் வாழ்க்கை நிலையில் மாற்றம் ஏற்பட்டதை பிரபஞ்சனின் 'நாளை ஒரு பூ மலரும்' அனுராதா ரமணின்' நேற்று வரை நந்தவனம்' ஆகிய இரு நாவல்களின்வழி காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

'நாளை ஒரு பூ மலரும்' கதையின் கதைத் தலைவி காயத்திரி, 'நேற்று வரை நந்தவனம்' கதைத் தலைவி மீரா ஆகிய இருவரும் கைம்பெண்டிர். இருவரும் திருமணம் ஆன ஓராண்டிற்குள் கணவனை இழந்தவர்கள். 'கைம்பெண்' என்ற போர்வைக்குள் முடங்கிக் கிடக்காமல் சமுதாயத்தில் நிமிர்ந்து நின்றவர்கள்.

காயத்திரி கணவனை இழந்த ஓராண்டிற்குள் ஆசிரியர் பணிக்குச் செல்கின்றாள். காலையில் எழுவது, தந்தைக்கு காப்பி கலந்து கொடுப்பது, வேலைக்குச் செல்வது என்று இல்லப் பணிகளிலும், ஆசிரியப் பணிகளிலும் தன் இழப்பை மறந்து வாழ்கிறாள். இதற்கிடையில் குடும்ப நண்பனான சிவசிதம் பரத்தின் நட்பு அவளுள்ளத்தில் காதலாக மலருகின்றது. காயத்திரி தன் காதலை எந்தவிதத் தயக்கம், குழப்பம், மயக்கம் இன்றித் தனது மாமன் மகன் இடம் கூறுகின்றாள். அவன் மூலம் காயத்திரி தன் காதலைச் சிவசிதம்பரத்திடம் தெரிவித்து மறுமணம் புரிந்து கொள்ளுகின்றாள்.

அனுராதா ரமணனின் மீராவின் கணவன் பேருந்தில் குண்டு வெடித்ததில் இறந்து ஒருவருடம் கழிவதற்குள்ளேயே விபத்திற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சி எடுக்கிறாள். அந்நிலையில் மீரா குமரனைச் சந்திக்கின்றாள். விபத்திற்குக் காரணமானவர்கள் என்று ஊகிக்கப்படுகின்றவர்களின் பெயர் பட்டியலைப் பெற்றுக் கொண்டு அக்குறிப்பிட்ட நபர்களைச் சந்திக்கின்றாள். குமரன் வீட்டிலேயே தங்கி இருக்கும் மீராவிற்கு

குமரனின் மகன் மீது பாசம் ஏற்படுகிறது. தாயை இழந்த அச் சிறுவன் மீராவிடம் ஒட்டிக் கொள்கிறான். குழந்தையிடம் ஏற்பட்ட அன்பு நாளடைவில் அதன் தந்தையான குமரனிடம் காதலாக மலர்கின்றது. ஆனால் மீரா தன் காதலை மனதிற்குள் வைத்துக் கொள்கிறாள். மீராவைக் காதலிக்கும் குமரன் தன் மனதைத் திறந்துகாட்ட மீராவும் அவன் காதலை ஏற்கிறாள்.

காயத்திரி, மீரா ஆகிய இரு கைம்பெண்டிரும் மறுமணம் செய்துகொள்ளத் துணிகின்றனர். காயத்திரியின் மறுமணத்தை அவள் தந்தை ஆதரிக்கின்றார். மிக எளிதாகத் திருமணம் முடிவெடுக்கப்படுகிறது. ஆனால் மீராவோ மறுமண எண்ணம் தவறோ எனக் குழம்புகிறாள். மறுமணத்தினால் இறந்த கணவனுக்குத் துரோகம் செய்கின்றோமோ என்ற எண்ணம் அவள் மனத்தைத் துன்புறுத்துகிறது. அதனால் கணவனின் பெற்றோரைச் சந்தித்து அவர்களின் விருப்பத்தை அறிந்து வரக் கிளம்புகின்றாள். அவர்களின் சம்மதத்தோடு திருமணம் செய்து கொள்ளுகின்றாள். காயத்திரியின் புகுந்த வீட்டார் பற்றிய எந்தக்குறிப்பும் நாவலில் சித்தரிக்கப்படவில்லை.

சமுதாயமும் கைம்பெண்டிரும்

சமுதாயத்தில் கைம்பெண்கள் கணவன் இறந்து ஓர் ஆண்டு கழிவதற்குள் வெளியிடங்களுக்குச் செல்லுதல் கூடாது. பிறர் கண்களில் படுதல் கூடாது. வெள்ளை ஆடைத் தரித்து, அணி கலன்களைக் களைந்து, விரிப்புக்கள் இன்றி உறங்கி, உப்புக் கலவாது உண்ணவேண்டும். போன்ற கடுமையான விதிமுறைகள் பின்பற்றவேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால் கல்வி பெண்களின் நிலையை மாற்றியுள்ளது என்பதை இவ்விரு பெண்களின் வாழ்க்கை முறையில் இருந்து அறிய முடிகின்றது.

மீரா கணவனை இழந்த சில நாட்களுக்குள் தன் மாமி யாரைக் காண விரும்புகின்ற பொழுது கணவனின் மாமனாகிய நாகு மாமா "மீரா... உனக்கு உடம்பு குணமாற வரைக்கும் போய் கவனிச்சுக்க சொன்னதே உங்க மாமியார்தான். தினமும் நீ எப்படி இருக்கே, கொஞ்சமாவது தேறி இருக்கான்னு கேட்டுண்டே இருப்பா? ஆனா இப்போதைக்கு நீ அந்த வீட்டுக்கு வர்றதை அவமட்டுமல்ல... அந்த வீட்டுல யாருமே விரும்ப மாட்டாங்க, பழைய சம்பிரதாயத்தில் ஊறினக்

குடும்பம் பாரு. புருஷன் போனா அந்தப்பத்து நாளுக்குள்ள வீட்டுக்கு வந்தாத்தான் அப்புறம் போக்குவரத்து வச்சுக்கலாம். இல்லைன்னா .. ஒரு வருஷத்துக்கு வரப்புடாது, கரிக்கால், அது, இதுன்னு பழங்கால மனுஷி ஆயிரம் பேசுவா" என்று தடுக்கிறார். அதனால் அவள் நாகு மாமா வீட்டிற்குச் செல்லும் பொழுது, அவர் வீட்டிற்குள் செல்லாமல் வாசற் திண்ணையிலேயே நின்று பேசிவிட்டு வருகிறாள். அவரும் அவளை உள்ளே அழைக்கவில்லை.

படித்தவர்களின் எண்ணிக்கை மிகுந்துவரும் இக்காலத்திலும் கைம்பெண்களை இத்தகைய கண்ணோட்டத்துடன் காண்பது வழக்கமாகக் காணப்படுகிறது.

காயத்திரி கைம்மைக் கோலம் பூணவில்லை. இயல்பாக ஏனைய பெண்களைப் போலவே காணப்படுகிறாள் என்பதை "காயத்திரிக்கு விழிப்புத் தட்டியது. சுவர்க்கடிகாரம் மணி நான்குபத்து எனக் காட்டியது. அப்பாவுக்கு காப்பிப்போட வேண்டும் அவர் காத்திருப்பார். முகத்தைக் கழுவி, லேசாகத் தலைசீவி, முகத்துக்கு பவுடர் போட்டு பொட்டு வைத்துக் கொண்டு வெளியே வந்தாள்" என்ற வரிகள் புலப்படுத்துகின்றன.

'நேற்றுவரை நந்தவனம்' நாவலில் வரும் தாய் இராஜேசுவரி பழமையில் ஈடுபாடு உடையவள். கணவனைத் தெய்வமா வணங்குபவள். எனினும் தன்னால் வணங்கப்படும் தன் கணவன் பல பெண்களின் கற்பினைச் சூறையாடுபவன் என்று தெரிந்து அவனைத் திருத்தமுடியாது போக அவனைக் கொலை செய்யவும் துணிகின்றாள் இதற்குக் காரணமாக மீரா! அவங்க இதை வேணும்னு செய்யலே. நிர்மலாவை மட்டுமில்லே... இன்னும் நிறைய பொண்ணுங்களை எங்கப்பாகிட்டயிருந்து காப்பாத்த அம்மா இந்த முடிவுக்கு வந்திருக்காங்க, பொறுத்து, பொறுத்து பார்த்து வேறே வழி தெரியாம . என்று குமரன் தன்தாய் சொன்னதை மீராவிடம் விவரித்து கூறுகின்றான்"169

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று வாழும் முந்தைய தலைமுறையைச் சார்ந்த பெண்ணும் விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டனர் என்ற கருத்தினை இராஜேசுவரி உணர்த்துகின்றாள். தன் செயலுக்குத் தனக்கு கிடைக்கப்

போகும் தண்டனையை உணர்ந்தும் துணிச்சலாக இருப்பது அவள் மனத்திண்மையையும் ஆணின் தவறுகளைப் பெண்கள் துணிந்து நின்று தடுக்க வேண்டும் என்ற உண்மையையும் எடுத்துரைக்கின்றன.

சமூகத்தில் முக்கிய அங்கமான குடும்பங்கள் கைம்மை நோன்புகளை ஆதரித்துப் போற்றி கைம்மை மறுமணத்திற்கு தடைகற்களாக இருந்து வந்தன. ஆனால் இன்று அக்குடும்பங்களே கைம்மை மறுமணத்திற்கு ஆதரவளிக்கின்றன என்பதனை மீரா, காயத்திரியின் குடும்ப உறுப்பினர்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

காயத்திரியின் மறுமணத்திற்கு மாமன் மகனே தூதாகச் செல்வதும், அவளின் தந்தை மறுமணத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதும், மீராவின் மறுமணத்தினை அவர் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி மகனை இழந்த பெற்றோரும் முன்னின்று நடத்தி வைப்பதன்வழி குடும்பங்கள் கைம்மை மறுமணத்திற்கு ஆதரவளிப்பதனை அறிய முடிகின்றது.

மகளிர்க்கு சம உரிமைகள் வழங்கப்படவேண்டும். சமூகப் புரட்சி, சட்டப்புரட்சி இவற்றின் மூலம் பெண்களுக்கு சமத்துவம், சமநீதி கிடைக்கவேண்டும் என்ற மிதவாதப் பெண்ணியத்தின் நோக்கத்திற்கு ஏற்ப காயத்திரி, மீரா, இராஜேசுவரி ஆகிய மூன்று பெண்களும் பெண்ணியவாதியின் தாயான மேரி ஒல்ஸ்ட்டன் கிராப்ட் மகளிர் வாழ்வில் எல்லா சந்தர்ப்பங்களிலும், உரிமை பெற்று சமமாக வாழவதே பெண்ணியம் என்று கூறுவது போல தனது வாழ்க்கையில் சமத்துவ உரிமை பெற்று வாழ்கின்றார்கள்.

கல்வியறிவும் அதனால் பெற்ற விழிப்புணர்வும் பெண்களின் வாழ்வில் மலர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன என்ற உண்மையை நாளை ஒரு பூ மலரும்' 'நேற்று வரை நந்தவனம்' ஆகிய இரு, நாவல்களும் உணர்த்துகின்றன.

சிவகாமியின் சபதத்தில் நாகநந்தி அடிகள்

அ. சிவசுப்பிரமணியன்
அரசு கல்லூரி
சித்தூர்

கல்கியின் பாத்திரங்களில் மிகச்சிறந்த படைப்பு நாகநந்தி. நாவல் இலக்கிய உலகில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டார் இவர். சிவகாமியின் சபதம் நாவலின் எதிரன் இவரே. இப் பாத்திரத்தின் படைப்பில் கல்கியின் பாத்திரங்களைப் படைக்கும் திறன் வெளிப்படுகிறது. கற்பனைக் கதை மாந்தரானாலும் நாகநந்தி கல்கியால் புதுமுறையில் படைக்கப்பட்டுள்ளார். இவரும் புலிகேசியும் ஒத்த உருவமுடையவர்கள். பல அற்புதச் செயல்களை இவரைக் கொண்டு செய்விக்கிறார் கல்கி. மூலிகை களின் துணையால் உடலை நஞ்சாக்கி, கலைகளை ரசிப்பதில் சிறந்த கலைஞராகி; துறவி உடை அணிந்து திரியும் இந்த புத்தபிட்சு பல இடங்களில் நம்மை பிரமிக்க வைத்திருக்கிறார்.

தம்பியிடம் கொண்ட அன்பு: புலிகேசியின் அண்ணன் நாகநந்தி, அவரது இயற்பெயர் நீலகேசி. இருவரையும் இரட்டைக்குழந்தைகளாகப் படைத்துள்ளார் கல்கி. நாகநந்தி தன் தம்பியிடம் அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்தார். தங்களது நாட்டை சிற்றப்பன் மங்களேசனிடமிருந்து மீட்டு அரசைத் தன் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டுப் புத்தபிட்சு வானார். பல்லவ நாட்டைத் தன் தம்பிக்கு அடிபணிய வைக்க துறவறம் பூண்டு நாகநந்தி என்ற புனைப்பெயருடன் ஒற்றனாகக் காஞ்சிக்கு வந்தார். வரும் வழியில் பரஞ்சோதியைப் பாம்பிட மிருந்து காப்பாற்றினான். இன்னொரு தருவாயில் அவனையே பல்லவர் சிறையிலிருந்து காப்பாற்றினார். அவர் தன் தம்பி மீது கொண்ட பாசமும் அவரின் மனித நேயமுமே அவரின் இச்செயல்களுக்குக் காரணம். இம்மனிதநேயச் செயல்கள் வாசகர் களிடம் அவரைக் குறித்து நல்ல எண்ணத்தையும் மதிப்பையும் தேடித்தந்து விடுகிறது.

உடலிலும் நஞ்சு செயலிலும் நஞ்சு: நாவலின் கதை வளர வளரத்தான் நாகநந்தி எப்படிப்பட்டவர் என்பது விளக்கம் பெறுகிறது. ''ஒட்டி உலர்ந்த தோற்றம், கொடிய விஷப் பாம்புகளும் அஞ்சி ஓடும் நஞ்சு உடல், பாம்பின் சீற்றம் என மூச்சு விடும் இயல்பு, அன்பையோ பக்தியையோ உண்டாக்காத படமெடுத்தாடும் பாம்பினைப் போன்ற முகம்'' என்று நாகநந்தியின் தோற்றத்தை வர்ணிக்கிறார் கல்கி.

ஆயனர் படைத்த சிற்பங்களைக் கண்டு நாகநந்தி அவரிடம் நட்புக் கொண்டார். ஆயனரின் மனதில் அஜந்தாவின் வர்ண ஆசையை ஊட்டி அவரைத் தன்வயப்படுத்த முயலுகிறார். புலிகேசியின் வெற்றிக்கு முதல் தடையாக இருப்பது மகேந்திரரே என்பதை உணர்ந்த நாகநந்தி பல்லவ நாட்டை வெல்லப் பல சூழ்ச்சி வலைகளைப் பின்னுகிறார். ஆனால் அவரின் சூழ்ச்சி மகேந்திரரிடம் பலிக்கவில்லை நாகநந்தி செய்கின்ற சூழ்ச்சிகளுக் கெல்லாம் எதிர் சூழ்ச்சி செய்து அவனது முயற்சியை முறியடிக் கிறார் மகேந்திரவர்மர். அவர் மட்டும், நாகநந்தி புலிகேசிக்குக் கொடுத்தனுப்பிய ஓலையை மாற்றியிராவிட்டால் பல்லவ நாடே சாளுக்கியர்களுக்கு அடிபணிந்திருக்கும். ''ஆகா! நான் நினைத்ததைக் காட்டிலும் மகேந்திரவர்மர் கெட்டிக்காரன். நெடுகிலும் நம்மை ஏமாற்றி வந்திருக்கிறான்'' என்று கூறுகிறார். ஆனால் இவ்ஏமாற்றங்களால் நாகநந்தி சிறிதும் அசையவில்லை. பல்லவ நாட்டைச் சாளுக்கியரின் ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவர அரும்பாடுபட்டார். ஆனால் இவரின் ஒவ்வொரு முயற்சியும் தோல்வியுறும் வண்ணம் மகேந்திரர் மலைபோல் இருந்தார். அவர் செய்த ஒவ்வொரு சூழ்ச்சியும் பல்லவ மன்னனின் முன் ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேறாமல் போயின.

நாகநந்தி பேராற்றல் படைத்தவர். ''புகை புகா வாயிலும் புகும் பேராற்றல் அவருக்கு இருக்கிறது'' மகேந்திரவர்மரின் அரசியல் தந்திரங்களுக்குமுன் அவரின் திட்டங்களெல்லாம் தவிடு பொடியாயின. அதையுணர்ந்தும் நாகநந்தி மகேந்திரவர்மரை ஏமாற்ற முனைகிறார். சிவகாமியிடம் மகேந்திரவர்மர் கொடுத்த சிங்க இலச்சினையை அபகரித்துக் கொண்டு காஞ்சி சென்று பல்லவ அரசவைக்குள்ளே நுழைந்துத் தன்னைத் தூதுவனாக அறிமுகப்படுத்தி, புலிகேசி மகேந்திரவர்மரைக் கைது செய்து விட்டார், மாமல்லர் உடனே படையெடுத்து வந்து தன்னை

விடுதலை செய்ய வேண்டும் என்று மகேந்திரர் கூறியதாகச் சொல்லுகிறார். அவரின் சூழ்ச்சியும் துணிவும் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. மாமல்லர் படையெடுத்துச் சென்றால் வாதாபியின் பெரும்படையிடம் தோற்றுவிடுவார் என்பதை நன்கறிந்தவர் நாகநந்தி! அவர் திட்டப்படியே மாமல்லரும் போருக்கு எழுகிறார் ஆனால் மகேந்திரவர்மரின் தந்திரத்தை அறியாதவன் நாகநந்தி சிவகாமியிடம் அவர் எதற்காகச் சிங்க இலட்சினையைக் கொடுத்தார் என்பதைப் புரியாதவன். அவனைப்பின் தொடர்ந்து வந்த மகேந்திரவர்மர் அவனைக் கைது செய்கிறார். வாதாபியின் திறமைசாலி ஒற்றன் கைது செய்யப்பட்டபோது மகேந்திரரே ''சேனாபதி! வாதாபியின் மிகவும் கெட்டிக்காரனான ஒற்றனைச் சிறைப்படுத்தியாகிவிட்டது. பாதி யுத்தத்தை நாம் ஜெயித்தது போலத்தான்'' என்று கூறுகிறபோது நாகநந்தியின் திறமை வெளிப்படுகிறது.

கலையும் காதலும்: அஜந்தா விகாரங்களில் வளர்ந்த தனது இருபது வயது வரையும் பெண்களைக் காணாத நாகநந்தி அடிகள் அஜந்தா ஓவியங்களில் இருந்த மாதர்களைக் கண்டு மௌன மொழிப் பேசி அவைகளோடு ஒன்றி மகிழ்கிறார். அவ் ஓவியங்களில் நாட்டியமாடும் ஒரு பெண்ணின் ஓவியத்தைக் கண்டுத் தம்மை இழக்கிறார். அவரின் உள்ளம் அந்த ஓவியக் கன்னியைத் தேடியது. ஆயனச் சிற்பியின் சித்திரக்கூடத்தில் அந்தச் சித்திரப் பாவையைக் கண்டுத் தம்மை இழக்கிறார் அவனைக் கவர்ந்த அஜந்தா ஓவியம் உயிர் பெற்று வந்ததைப் போன்று திகழும் சிவகாமியைக் காண்கிறார்; காதல் கொள் கிறார். புலிகேசிக்கு எழுதிய ஓலையில் காஞ்சி சுந்தரியை நீ எடுத்துக் கொள்; சிவகாமி சுந்தரியை எனக்குக் கொடுத்துவிடு என்று எழுதுகிறார்.

சிவகாமியிடம் அவர் கொண்ட காதல் அவளின் உடலழகைக் கண்டல்ல. அவளின் கலையழகைக் கண்டுதான். ''காதல், பிரேமை, மோகம் என்னும் வார்த்தைகளை இந்த உலகம் தோன்றிய நாள் முதல், கோடானு கோடி மக்கள் எத்தனையோ கோடி தடவை உபயோகித்திருக்கிறார்கள். ஆனால் அந்த வார்த்தைகளின் மூலம் நான் குறிப்பிடும் உணர்ச்சியை அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். என்னுடைய காதலில் தேகதத்துவம் என்பது சிறிதும் கிடையாது'' என்று அவரே புலிகேசியிடம் கூறுகிறார். சிவகாமியிடம் காதல் கொண்ட பின் அவரின்

ஒவ்வொரு செயலும் நடனமங்கையை அடையும் நோக்கத்தையே நடுநிலையாகக் கொண்டு இயங்குகிறது.

சிவகாமியை வாதாபிக்குக் கொண்டு செல்வதற்காகவே ஒருபோரினை உண்டாக்குகிறார் புத்தபிட்சு. ஆனால் சிவகாமித் தற்செயலாக சிறைப்பட அவளை வாதாபிக்குக் கொண்டு செல்கிறார். புலிகேசி சிவகாமியை நாற்சந்தியில் நடனமாட வைக்கிறான். அதைக்கண்ட புத்தபிட்சுவின் கண்கள் கோபக் கனலில் திளைக்கின்றன. ''கலையுணர்ச்சியில்லாத நீர் மூடப் புலிகேசி'' என்று தன் தம்பியை சாடுகிறார். சிவகாமியிடம் நடந்த தவறுக்கு மன்னிப்புக் கோருகிறார்.

மாமல்லரிடமிருந்து காப்பதற்காகவே சிவகாமியை வாதாபிக்குக் கொண்டு வந்ததாகக் கூறும் நாகநந்தி, அவளை ஆயனச் சிற்பியிடம் அப்போதே சேர்த்துவிடுவதாகக் கூறுகிறார். புலிகேசி இறந்து, வாதாபி அழியும் வரை இங்கிருந்து போக மாட்டேன் என்று சபதம் செய்கிறாள். புலிகேசி இந்த பயங்கர மான சபதத்தைக் கேட்ட நாகநந்தியின் முகத்திலே புன்னகை தோன்றியது. ''தம்முடைய சூழ்ச்சி மீண்டும் பலித்துவிட்டது என்று எண்ணி அந்தப் பொல்லாத பிஷு உள்ளுக்குள் உவகை யடைந்தார் போலும்'' என்றார் கல்கி. சிவகாமி இப்படி ஒரு சபதம் செய்ய வேண்டும் என்று நினைத்தே மாமல்லரை அவர் இழிவாகப் பேசினார் என்ற கல்கியின் கூற்று உணர்த்துகிறது.

சிவகாமி புலிகேசியின் காலில் விழுந்து மன்னிப்புக் கோருவ தாக அஜந்தா குகைச்சுவரில் தீட்டச் செய்த ஓவியம் நாகநந்தி யின் கோபத்தை அதிகரிக்கச் செய்தது. அவர் சிவகாமியின் கலையின் மீதுகொண்ட அளவற்ற மோகம் சாபமாக உருவெடுக் கிறது. ''அவளை அவமானப்படுத்திய நீயும் உன் சக்திகளும் சர்வ நாசமடையப் போகிறீர்கள்'' என்று எந்த தம்பியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டாரோ அந்தத் தம்பியைத் தூற்று கிறார். அந்த ஓவியம் தீட்டியவரையும் கொன்று பழிதீர்க் கிறார். கலைக்காதலில் மூழ்கியதால் பல்லவ மன்னன் படை யெடுத்து வருவதைக்கூட புலிகேசியிடம் சொல்லவில்லை. ''நன்றியில்லாத பாதகனாகிய உனக்குத் தண்டனை கிடைக்கும் பொருட்டே உன்னிடம் சொல்லவில்லை'' என்று புலிகேசியிடம் கூறும் நாகநந்தியைப் பார்க்கிறோம். நாகநந்தி சிவகாமிக்காகச் சாளுக்கிய நாட்டின் அழிவுக்கே வழி செய்கிறார். புத்த சங்கத்

திலிருந்து விலக்கப்படுகிறார். வாதாபி தீக்கிரையாகவும் புலிகேசி இறக்கவும் அவரே காரணம். தன் காதலியின் சபதம், 'சிவகாமி யின் சபதம்' நிறைவேற வேண்டும் என்பதே அவரின் நோக்கம். அனைத்தையும் அதற்காகவே செய்கிறார்.

இந்நாவலின் இயக்குநர் நாகநந்தியே. அவரே இந்நாவலின் கதையைத் தாங்கி நிறுத்தும் ஆற்றல் மிக்க தூணாக விளங்கு கிறார். ''இந்நூலின் ஆரம்பம் தொடங்கி இறுதிமட்டும் இரு பெண்களையும் (ஒருத்தி அவர் காதல் கொண்ட நாகநந்தி மற்றொருத்தி அவர்மீது காதல் கொண்ட ரஞ்சினி) இரு நகர் களையும் (வாதாபி, காஞ்சி) இரு பேரரசுகளையும் (சாளுக்கிய பேரரசு, பல்லவப் பேரரசு) அஜந்தா மாமல்லபுரம் ஆகிய இரு கட்டங்களையும் அவற்றின் கலைகளையும் இணைத்துக் கதையை இயக்கும் கருவி நாகநந்திதான்'' என்கிறார் தனிநாயக அடிகள்.

நாவலின் இறுதியில் சிவகாமியோடு தப்பி ஓட முயன்ற நாகநந்தி அடிகள் பல்லவச் சேனாதிபதி பரஞ்சோதியின் பிடியில் சிக்குகிறார். அவ்வேளையில் அவர் விஷக்கத்தியை எறிந்து சிவகாமியைக் கொல்லத் துணிகிறார். பரஞ்சோதியின் வாள் அவரின் கையை வெட்டி எறிந்தது. நஞ்சுக் கத்தியை எறிந்து சிவகாமியைக் கொல்லத் துணிந்தது அவள் பேரில் அவர் கொண்ட காதலின் கடைசிப் பரிசு என்கிறார் நாகநந்தி அடிகள்.

கொடிய அரக்கர்: நாகநந்தி திருப்பாற்கடல் ஏரியை உடைத்து பெருவெள்ளம் உண்டாக்கும் கொடுமைக்காரர். காஞ்சி மாநகரின் குடிதண்ணீரில் நஞ்சைக்கலந்து அந்நகர மக்களைக் கொல்லத் திட்டமிட்டக் கொடிய அரக்கர். ''நாகநந்தி மனிதனேயல்ல மனித உருவத்திலுள்ள அரக்கன், விஷம் ஏற்றிய கத்தியை உபயோகிக்கும் பாதகன்'' என்று மகேந்திரவர்மரே குறிப்பிடுகிறார்.

ஒற்றைக் கையோடு தப்பிய நாகநந்தி அடிகளைப் 'பார்த்திபன் கனவில்' நீலகேசியாகச் சந்திக்கிறோம்.

அறிவியல் தமிழும் கல்லூரி மாணவர்களும்

பெ. சிவசுப்ரமணியன்
தேசியக்கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 1

முன்னுரை

இன்றைய இளைஞர்கள் நாளைய ஆட்சியாளர்கள் என்பது பொதுக்கருத்து. நாளைய ஆட்சியாளர்களின் அறிவு வளர இன்றைய அல்லது புதிய செய்திகள் தேவை புதிய செய்திகள் அறிவியல் தொழில் நுட்பத்திற்கேற்ப மாறிக்கொண்டே வரும். செய்திகள் மாறமாற சொற்களுக்கேற்ப சொற்றொடர்கள் மாறி மொழிநடை வேறுபடும். அவ்வாறு வேறுபடுவது அவரவர்களின் மனதில் உள்வாங்கும் திறன் வேறுபடுவதால் ஏற்படும் விளைவாகும். எனவே, மாணவர்களின் புரிதிறன் வேறுபாட்டால் மொழி நடையும் வேறுபடுகின்றது. மாணவர்கள் பலரும் பலவிதமாக அவரவர் அறிவுத்திறனுக்கேற்றவாறு மொழி நடையைப் பயன்படுத்துகின்றனர்.

அறிவியல் தமிழின் இயல்பு

இயல், இசை, நாடகம் முதலான முத்தமிழையும் விடுத்து நான்காவது தமிழாக அறிவியல் தமிழ் எனக் கருத்துரைக்கின்றனர். சிலர் இயல்தமிழ் பிரிவுக்குள்ளேயே அறிவியல் தமிழை உள்ளடக்கி ஒப்பு நோக்கலாம் எனக் கருதுகின்றனர் இக்கருத்து ஏற்புடையதாக இருந்தபோதிலும், இலக்கியத்திற்கும் அறிவியலுக்கும் உள்ள வேறுபாட்டை நுணுகி ஆராய்தல் அவசியமாகின்றது. இலக்கியம் மனிதனுடைய வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி. அறிவியல் எந்த கதையையும் படம் பிடித்துக் காட்டும் பிரதிபலிப்பானாக அமையவில்லை. உண்மையின் தன்மையை, ஆழத்தை சான்றாதாரங்களுடன் நிரூபிக்கக் கூடிய ஒரு வகையான அணுகு

முறையாகும். எனவே, அறிவியல் தமிழின் மொழிநடை இலக்கிய வகையிலிருந்து முற்றிலும் வேறுபாடான ஒன்றாகும். கற்பனைத் திறனுக்கும், கதையம்சத்திற்கும் விலகி நிற்கும் கூறாகக் கருதப்படும் காலத்துக்கேற்றவாறு வேறுபட்ட சொல்லாட்சிகளைக்கொண்டிருக்கக் கூடியது. இலக்கணக் கட்டுப் பாட்டுக்குள் உள்ளடக்க முடியாதனவாகும்.

மாணவர்களின் மனோ நிலை

கல்லூரி மாணவர்கள் அனைவரும் தமிழின் மீது ஆர்வம் கொள்வதில்லை. இன்றைய காலக்கட்டத்தில் வளரும் மாணவர்கள் ஆங்கில மோகம் அதிகம் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர் அதற்குக் காரணம் மாணவர்களிடையே பரவியுள்ள சூழல் அமைவே காரணமாகின்றது.

தொடர்பு சாதனங்களின் தாக்கம்

கல்லூரியில் பயிலுகின்ற மாணவர்கள் கலை மற்றும் அறிவியல் துறைச்சார்ந்தவர்களாக இருக்கின்றனர். மாணவர்கள் தமிழ் வழியாகப் பயின்று தேர்வு எழுத வேண்டும் என்றார்வம் இல்லை. பயில்வது ஆங்கில வழியாக இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். ஆனால் தேர்வை ஆங்கில வழியில் எழுத முன்வருவதில்லை. தமிழ் வழியில் முனைகின்றனர். எடுத்துக் காட்டாக வணிகத் துறையில் (Auditing) என்ற தேர்வுத்தாள் உள்ளது. இத்தாள் இளங்கலை வணிகம் பயிலும் (B.Com) மாணவர்களுக்கு உண்டு. ஓர் அரங்கில் நூற்றைம்பது மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர். அந்த மாணவர்களுள் பதினான்கு பேர் மட்டுமே ஆங்கில வழியில் எழுதுகின்றனர். அதே போல் இளங்கலை விலங்கியல் பயிலும் மாணவர்கள் சிலர் மட்டுமே ஆங்கில மொழியைப் பயன்படுத்துகின்றனர்.

பயில்வது ஆங்கில மொழி. தேர்வு விண்ணப்பத்தில் விண்ணப்பிப்பது ஆங்கில வழி. ஆனால் தேர்வு எழுதுவது மட்டும் தமிழ் வழி. இதற்குக் காரணம் உழைக்கத் தயாராக இல்லை. ஆங்கில வழியில் சிரமப்பட்டு படித்தல் வேண்டும். குறிப்புகள் தயாரித்தல் வேண்டும். எனவே, குறுக்கு வழியில் மதிப்பெண் பெறுவது எப்படி என்ற நிலையை எண்ணிப் பார்க்கின்றனர்.

மாணவர்கள் ஆங்கில வழியில் பயின்று ஆங்கில மொழியைப் பயன்படுத்தினால் அறிவு வளரும் என்ற எண்ணம் இல்லை. தொடர்பு மொழி பயன்பாட்டின் (usage Communication language) நிலை வளர்ச்சி அடையும் என்ற கருத்தமைவில் ஆழ்ந்த பற்றுதல் இல்லை.

அறிவியல் தமிழின் நிலை:

அறிவியல் படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் மட்டுமே அறிவியல் தமிழைப் பயன்படுத்துகின்றனர். அறிவியல் தமிழ் மீது மாணவர்களுக்கு ஆழ்ந்த பற்றுதல் இல்லை. தமிழ்மொழியை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் ஓரளவே இருப்பதை அறியலாம். ஆங்கில மொழியறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் குறைவு. எனவே, அறிவியல் தமிழின் நிலை தேர்வு என்ற கட்டுப்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது. அறிவியல் தமிழைப் பயன்படுத்தும் மாணவர்கள் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்துவிடுகின்றனர். அவர்கள் அதிக மதிப்பெண் பெற்றார்களேயானால் முதுகலை அறிவியலில் பாடத்தைப் புரிந்துகொள்ள மிகவும் இன்னலுக்குள்ளாகின்றனர்.

முதுகலை அறிவியலைத் தமிழில் எழுத முனையும்போது முதுகலையில் தமிழ்வழித்தாளை மதிப்பிட சட்டமில்லை. எனவே ஆங்கில மொழியைப் பயன்படுத்தும்போது தேர்வில் மதிப்பெண் குறைவாகப் பெற்று தவறியவர்களாகின்றனர்.

இருந்தபோதிலும், முதுகலை வரலாறு, தத்துவம், போன்ற கலைத் துறைகளில் தேர்வில் தமிழ் மொழியைப் பயன்படுத்தப் படுவது உண்மை.

எனவே எந்த ஒரு நிலையிலும் மொழி மனிதனுடைய பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்பட்ட போதிலும், அதன் தரம், நிலைத்தன்மை போன்ற முக்கிய நிலைகள் கருத்திற்கொள்ளப் படுவதில்லை. எனவே, பயன்பாட்டு நிலையில் அறிவியல் தமிழின் பரப்பு விரிந்து பரந்து வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதில் ஐயமில்லை. முதுகலையில் தமிழைப் பயன்படுத்தும் வாய்ப்பை அரசு ஏற்படுத்தல் வேண்டும் அந்நிலையோடு நிறுத்தாமல்,

வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளித்தால் மாணவர்கள் தமது தாய்மொழியிலேயே அறிவை, வளர்த்துக்கொள்வர் அதனால் நாட்டினுடைய பொருளாதாரம் முன்னேற்றமடையும். தொழில் வளர்ச்சியில் மேம்பாடு ஏற்பட்டு அந்நிய செலாவணிப்பெருகும். தமிழின் தரமும் உயரும் என எதிர்பார்க்கலாம்.

கம்பன் காவியத்தில் நாட்டுப்படலம் ஒரு கண்ணோட்டம்

மு. சிவசுப்பிரமணியன்
ஸ்ரீ நேரு மகா வித்யாலயா கலை & அறிவியல் கல்லூரி
கோவை – 21

முன்னுரை

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும். கம்பனின் கவிகளில் சொல்நயம், பொருள் நயம், ஓசை நயம் மட்டுமல்லாமல் கோசல நாட்டு நலமும், வளமும் அழகுறச் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளது. பொதுவாக நாடு என்றால் எல்லா வளமும் ஒருங்காக பெற்றுத் திகழ வேண்டும். இயற்கை எழில் சூழப்பெற்ற மலைகள், அருவிகள், மரங்கள், பல்வகை மலர்கள் அனைத்து வளங்களுக்கும் காரணமாயமையும் ஆறுகள், நானிலங்கள் இவையெல்லாம் இணைந்ததாக அமைந்திருக்க வேண்டும். இவற்றையெல்லாம் இயற்கை நோக்கோடும்,கவிதைநோக்கோடும் கம்பன் எப்படி நோக்கினான் என்பதைச் சுட்டவே இவண் இக்கட்டுரை அமைகிறது.

இலக்கியக் கனவு: மக்களின் உள்ளம் அமைதியை நாடும் போது மகிழ்ச்சியுறுகிறது. இவ்வுள்ளம் இலக்கியல் வாழ்வை, சமுதாயத்தை, நாட்டை, உலகை நாடும்போது அமைதியையும் தெளிவையும் எட்டுகிறது. பலநாடுகளில் அறிஞர்களும் கவிஞர்களும் இலக்கிய நாடு குறித்துக் கனவு கண்டுள்ளனர்.

கிரேக்க அறிஞர் பிளேட்டோ தான் எழுதிய 'அரசு' என்ற நூலில் தன்னாட்சியுரிமையுடைய ஒரு சிறந்த நகர் எவ்வாறு அமையவேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

16, 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இத்தாலி நாட்டைச் சேர்ந்த 'காம்பனெல்லா' 'கதிர் நகர்' என்ற நூலில் இலக்கியல் நகரைப் புனைந்துரைத்துள்ளார்.

16-ஆம் நூற்றாண்டில், 'தாமஸ்மூர்' என்ற அறிஞர் 'உட்டோபியா' என்ற நூலில் இலக்கியல் நாட்டைப் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைத்துள்ளார்.

'நாடென்ப நாடா வளத்தன'

என்று வள்ளுவரும் நாட்டைப் பற்றிய மதிப்பீட்டைத் தருகிறார். இவ்வரிசையில் கம்பன் காட்டிய கோசலம் எத்தகையது என்பதை நாட்டுப் படலத்தின் துணை கொண்டு ஆராய்வோம்.

நாட்டுப் படலச் செய்திகள்: நாட்டுப் படலத்தில் முதலில் அமைந்த 28 செய்யுட்களில் 13 செய்யுட்கள் கோசல நாட்டின் வளத்தையும், 5 பாடல்கள் அந்நாட்டு மக்களின் பொழுது போக்குகள் பற்றியும், 3 பாடல்கள் அந்நாட்டு உழவர்களின் வாழ்க்கை முறை பற்றியும், 7 பாடல்கள் கோசல நாட்டின் செல்வப் பொலிவு பற்றியும் கூறுகின்றது.

அணிநலம்: நாட்டுச் சிறப்பைச் சொல்வதோடு அணிநலம் பெற்ற பல பாடல்களும் அமைந்துள்ளன.

தாமரைப் படுவ வண்டும், நீரிடை உறங்கும் சங்கும், தினைச் சிலம்புவ, கலம் சுரக்கும் நிதியம் ஆகிய செய்யுட்கள் சொற் பொருள் பின்வருநிலையணியையும், 'ஆறுபாய் அரசவம்' என்ற செய்யுள் பொருள் பின்வருநிலையணியையும், 'படை உழு எழுந்த பொன்னும்' என்ற செய்யுள் ஒப்புமை கூட்டணியையும், 'பண்கள் வாய்மிழற்றும்' என்ற செய்யுள் வேற்றுப்பொருள் வைப்பணி யையும், 'புதுப்புனல் குடையும்' எனத் தொடங்கும் அனுமான அணியையும், 'முறையறிந்து அவாவை நீக்கி எனத் தொடங்கும் பாடல் உவமை அணியையும், 'பருவ மங்கையர் பங்கய வாள் முகத்து, 'சூட்டுடைத் துணைத்தூ வாரணம் என்ற செய்யுட்கள் மயக்க அணியையும், 'தோயும் வெண் தயிர் மத்துஒலி துள்ளவும் என்ற செய்யுள் தன்மை நவிற்சி அணியையும், இயல்புடை பெயர்வன, இடைஇற மகளிர்கள், விதியினை நகுவன எனத் தொடங்கும் செய்யுட்கள் எதிர்நிலை அணியையும் இடம் கொள் சாயல் கண்டு என்ற செய்யுள் மயக்க அணியையும் சார்ந்தன வாகும்.

நாட்டின் வளம்: பொருளின் நிலையாமையை உணர்ந்து பொதுநலம் கருதி சந்தை சரி செய்யுமென்றோ அரசு அக்கறை

காட்டுமென்றோ காத்திராமல், 'சமத்துவ சமுதாயத்தைக் காணும் பொருட்டு மக்கள் தம்மாலானதை எல்லாம் செய்து தாமே ஒப்புரவுடன் வாழ வேண்டும்.

'வண்மையில்லையோர் வறுமையில்லை'

என்ற வரி இதற்கு எடுத்துக்காட்டாகும். கோசல நாட்டில் வறுமையில்லை; பகைமையில்லை; பொய்யில்லை; இவ்வாறு பல்வேறு நிலைகளில் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறான் கம்பன்.

மாந்தர்கள் தான் செய்கின்ற நல்வினை, தீவினைகளுக்கேற்ப பிறப்பெடுக்கின்றனரென்பதை.

'உயிர்கள் செய்வினைப்

பெயரும் பல்கதிப் பிறக்குமாறு போல்'

என்று குறிப்பிட்டு, அதை கண்ட சர்க்கரை, தேன், இனிய வெல்லப்பாகு, தயிர், கல் ஆகியன எவ்வாறு இடம் மாறிச் செல்லுமோ அதுபோல பிறப்பும் அமையுமென ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

நாடு எப்படியிருக்க வேண்டும் என்பதற்குத்

"தள்ளா வினையுளும் தக்காரும் தாழ்விலாச்

செல்வரும் சேர்வது நாடு"

என்று வள்ளுவர் விளக்கம் கூறுகிறார். கோசல நாட்டில் நிறைந்து விளைந்த எள், செந்தினை, சோளம், சாமை, கொள் ஆகியவற்றை மிகுதியாக ஏற்றிவரும் வண்டிகளும், அமுது போன்ற உப்பை ஏற்றிவரும் வண்டிகளும் நிறைந்து காணப் பட்டதே அந்நாட்டில் தள்ளா விளையுளைப் பறைசாற்றி நிற்கின்றன.

நாட்டின் எல்லை: சோலைகளால் சூழப்பட்ட பெருமை மிகுந்த அக்கோசல நாட்டைத் தேடிப்பார்த்தாலும் அதன் எல்லைகளைக் கண்டுபிடித்துத் திருப்பிச் செல்லக் கூடியவர் ஒருவருமில்லையாம்.

மிகுந்த நீர்பெருக்கையுடைய சரயுநதி கூட பல வாய்க்கால் களாக ஓடிச்சென்றும் அந்நாட்டின் எல்லைகளைக் கண்டதில்லை.

'சோலை மாநிலம் துருவியாவரே

வேலை கண்டு தாம் மீள வல்லவர்'

என்ற கேள்வி உங்களால் எவ்வாறு முடியும்? என்று வினவுவது போல் அமைந்துள்ளது.

ஈகையும் விருந்தோம்பலும்: தன்னிடத்திலிருக்கின்ற எதையும் பிறருக்குக் கொடுத்து வாழவேண்டும். அப்படிக் கொடுக்கா வரின் இயல்பு பற்றிப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

''திரவியம் காக்குமொரு பூதங்கள் போல் பணந்
தேடிப் புதைந்து வைப்பார்
சீலை நலமாகவும் கட்டார்கள் நல்அமுது
செய்துணார் அறமும் செய்யார்''

ஆனால் கம்பன் படைத்த நாட்டில் கிடைத்ததைப் பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்தனர். தம்மை நாடி வந்தவர் களுக்கு உணவளித்து உபசரித்தனர். நாள்தோறும் இதையே ஒரு வேலையெனச் செய்தார்களாம்.

''பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே''

என்ற பாடலும்

'செந்தயிர்க் கண்டம் இடை இடை செறிந்த சோற்றின்
தம்தம் இல் இருந்து தாமும் விருந்தொடும் தமரினொடும்'

என்ற பாடலும் ஈகைச் சிறப்பை வலியுறுத்துகின்றன. விருந் தினர் உண்பதற்கு, 'செந்தயிர் பரிமாறப்பட்டது. உண்ணும் தயிரில் இருவகையுண்டு. ஒன்று 'வெண்தயிர்' மற்றொன்று 'செந்தயிர்' வெண்தயிர் கடைதலுக்கும் செந்தயிர் உண்டலுக்கும் உரியன. நன்கு காய்ச்சிய சிவப்பேறிய பாலில் பிரையிட்டது செந்தயிர் ஆகும். இத்தயிரைப் பரிமாறியதிலிருந்து கோசல மக்களது விருந்தோம்பற் பண்பு எத்தகையது எனத் தெரிய வருகிறது.

பொழுதுபோக்கு; இன்று தொலைக்காட்சி பார்த்தல், திரைப்படம், நாடகம், சுற்றுலா செல்லல், படித்தல், (விரும்பி) விளையாடல் போன்ற ஏதாவது ஒன்றில் நேரத்தைச் செலவழிக் கின்றனர். கோசல நாட்டில் இயல், இசையை அனுபவிப்பதிலும், கேள்விச் செல்வம் கேட்பதிலும், சேவல் சண்டை செய்வதையும், கடாக்கள் போரிடுவதையும், பொழுதுபோக்குகளாக மக்கள் கொண்டிருந்தனர் என்பதை உணர முடிகிறது.

கலை: அற்ப அறிவுடையவர்கள் காம வயப்பட்டால் பிழைக்க மாட்டார்கள் என்று கம்பன் கூறுகிறான். ஆனால் நல்லறிவு பெற்ற கோவலனே பிழைக்கவில்லை என்பதை

சிலப்பதிகாரம் வாயிலாக அறிந்திருக்கிறோம். கோவலனுக்குக் கலையில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு கிடையாது. இக் கருத்துகளை உள்ளடக்கி இளங்கோவடிகள்.

''குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மரபில் கோவலன் போல''

என்று நயம்பட உரைக்கிறார்.

'காமம் என்ற கலையைச் சிறியோர்கள் தங்களது உள்ளத்தி லிருந்து எடுக்காவிட்டால் பிழைக்கமாட்டார்கள். வயலிலுள்ள களையை நீக்குவதுபோல மனித உள்ளத்திலிருந்து காமம் களையப்பட வேண்டுமென்பதே மையக்கருத்து இதனை.

'பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால் என்ற வரிகளின் வாயிலாக விளக்குகிறார் கம்பர். இக்கருத்திலிருந்து சிற்றின்பத்தினை (Sexual pleasure) அனுபவிப் பதிலும் ஓர் ஒழுங்கு, எல்லையிருக்க வேண்டுமென்றும், புலன் களின் மூலமாகப் பேரின்பத்தினைப் (High type of pleasure) பெற்றுய்ய வேண்டுமென்றும் அறிவுறுத்துதல் தெரிகிறது.

பல்வேறு ஒலிகள்

மருத நிலத்தில் ஆறு பாய்வதால் ஏற்பட்ட ஒலி, உழவர்கள் கரும்பாலையில் வேலை செய்வதால் ஏற்பட்ட ஒலி, கரும்புச் சாறு பாய்ந்த ஒலி, சங்குகள் எழுப்பிய ஒலி, எருதுகள் மோதியதால் ஏற்பட்ட ஒலி பாணர்கள் கள்ளைக் குடித்துவிட்டு பாடிய பாடல் ஒலி ஆயர்குலப் பெண்கள் தயிர் கடையும்போது எழுந்த ஒலி, வண்டுகளின் ஒலி, பறவைகள் எழுப்பிய ஒலி, இவ்வாறு பல்வேறு ஒலிகள் எழுப்பப்பட்ட செய்தியைக் காண முடிகிறது.

முடிவுரை

கம்பன் காவியத்தில் நாட்டுப்படலத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகள் சிலவற்றைக் கண்டோம். சரயு நதி ஓடியும் கோசல நாட்டின் எல்லையைக் காணமுடியாதது போல கம்பன் படைத்த கோசல நாட்டின் சிறப்பினை இக்கருத்துகளை மட்டும் வைத்துக் காண்டல் அரிதே. அவனது கவிகள் கொம்புத்தேன். அவற்றில் சில துளிகளை எடுத்து நாவில் நனைப்பதற்குத் தரப்பட்டுள்ளது. சுவைத்து மகிழ, கம்பனின் சொற்களில் சுகித்து மகிழ இக் கருத்துகளும் வாயிலாக அமையும் என்பது திண்ணமான நம்பிக்கையாகும்.

உலக வழக்கில் ஏகார இடைச்சொல்

ஆ. சிவலிங்கனார்
மயிலம்

ஏகார இடைச்சொல்லானது, தோற்றம், வினா, பிரிநிலை, எண், ஈற்றசை, இசைநிறை, எதிர்மறை எனும் ஏழு பொருளில் வரும் எனத் தொல்காப்பியர் கூறினார் (தொல். இடையியல் 9, 25, உயிர்மயங்கியல் 73)

உதாரணம்

அவனே கொண்டான் அவன்தான் கொண்டான்-தேற்றம்
,, அவனாகொண்டான் - வினா
,, பிறர்இல்லை; அவன்தான் கொண்டான் - பிரிநிலை

வானே நிலனே பிறவே அறிவரியான் - எண்
கடல்போல் தோன்றல காடிறந்தோரே - ஈற்றசை
ஏஎ யிவள் ஒருத்தி - இசைநிறை
நானே கொண்டேன்? - இல்லையென்னும் பொருளது - எதிர்மறை

எதிர்மறைப்பொருளில் ஏகாரம் வருவது புதியன புகுதல் என்றார் சிவஞானமுனிவர். (நன். 422 உரை) தொல்காப்பியர் உயிர்மயங்கியல் (73) ஏகார இறுதி மாறுகொள் எச்சப் பொருளில் (எதிர்மறைப் பொருளில்) வரும் என்று கூறியிருக்கவும், புதியன புகுதல் என்று கூறக்காரணம் புரியவில்லை. எண்ணுப்பொருளும் ஈற்றசைப் பொருளும் இசைநிறைப் பொருளும் செய்யுட்கே பெரும்பாலும் உரியன. உலகவழக்கில் ஈற்றசையும் எண்ணும் வருவதில்லை. எனினும், இன்று புதுவைக் கதிர்காமத்தையடுத்தவூர்களில் 'யான் இன்று தான் வந்தேனே' என்று கூறும் வழக்கு உண்டு. வந்தேனே என்பதின் ஈற்று ஏகாரம் அசை நிலைதான். 'எனக்கு வயிறே சரியில்லை; உணவு

வேண்டாம்' எனத்தொடரின் இடைவரும் சொல்லிறுதியிலும் அசைநிலை வரும். உலக வழக்கில் எண்ணுப் பொருளில் ஏகாரம் கூறப்படுதல் இல்லை.

இனி, மேலே கூறப்பட்ட பொருள்களில் தவிர வேறுபல பொருள்களிலும் ஏகார இடைச்சொல் உலக வழக்கில் வருவதைக் காணலாம். முதலில் எட்டு வேற்றுமைகளைச்சார்ந்து வருதல் வருமாறு:—

முருகனே வந்தான் - எழுவாய் வேற்றுமையைச் சார்ந்தது.
முருகனையே விரும்பினாள் – 2 ஆம் வேற்றுமை சார்ந்தது.
முருகனால் கட்டப்பட்டது - 3 ஆம் வேற்றுமை சார்ந்தது.
முருகனுக்கே கொடு – 4 ஆம் வேற்றுமை சார்ந்தது.
முருகன் சின்ன வயசிலே முரடன் – 5 ஆம் வேற்றுமை சார்ந்தது.
முருகன் கண்ணே உள்ள பொருள் – 7 ஆம் வேற்றுமை சார்ந்தது.
'நடுவே போ' என்பதில் 7 ஆம் வேற்றுமைப் பொருளிலே வந்தது.
முருகனே வா – 8 ஆம் வேற்றுமைப் பொருளிலே வந்தது.
முருகன் என்ற அண்மை விளியைச் சேய்மை விளியாக்கியது ஏகாரம்.

முருகனதே பொருள் என ஆறாம் வேற்றுமையில் வாராது. வரின் முருகனது என்பது வினைமுற்றாகிவிடும்.

ஆய்விகுதிப் பொருள்

பயமுறுத்தினாய் - பயமுறுத்தினே -- இறந்த காலம்
பயமுறுத்துகிறாய் – பயமுறுத்துகிறே – நிகழ்காலம்
பயமுறுத்துவாய் – பயமுறுத்துவே – எதிர்காலம்

அப்படியே

'இந்த நூறு ரூபாயை அப்படியே கொண்டு போய் அவனிடம் கொடு'

இதில் 'அப்படியே' என்பது முழுமையும் என்னும் பொருளது,

'உனக்கு இந்த உடை நன்றாக இருக்கிறது;
அப்படியே நில்; ஒரு படம் எடுக்கிறேன்' இதில்

அப்படியே என்பது அசையாமல் என்னும்
பொருளது; அல்லது மாற்றாமல் என்பதும் ஆம்

'நீ செய்த தவறுக்கு உன்னை அப்படியே அறைய வேண்டும் போல் இருக்கிறது' அப்படியே என்பது வெகுளிப் பொருளில் வந்தது.

'குழந்தையை அப்படியே அணைக்க நினைத்தேன்' –
இதில் விருப்ப மிகுதிப் பொருளில் வந்தது.
இவ்விடங்களில் ஏகாரத்தை நீக்கி அப்படி என்றால்

குறித்த பொருள் இல்லாமை யறிக. பிறவும் இவ்வாறு வருவன காண்க.

இடைவிடாமை

காலை முதல் மாலை வரை திருமண விருந்து நடந்து கொண்டே இருந்தது. இடைவிடாமைப் பொருளில் வந்தது, நடந்து கொண்டே என்பதின் ஏகாரம்.

அடிக்கடி

'இவன் இப்படியேதான் பேசுகிறான்' — 'இப்படியே' அடிக்கடி என்னும் பொருளது.

வியப்பு

''ஆகா, நீ சொன்னபடியே வந்து விட்டாயே' – ஏகாரம் வியப்புப் பொருளது.

எள்ளல்

'ஏஎ இவன் செயலைப்பார்' என எள்ளற் பொருளில் வந்தது.

எச்சப்பொருள்

ஏகாரம் மாறு கொள் எச்சப்பொருளில் மட்டுமின்றி பிறவகை எச்சப் பொருளிலும் வரும். 'நான் ஆற்றிய சொற் பொழிவைக் கேட்டாயா?' என்றவரிடம் மற்றவன், 'கேட்டேன், முன் வரிசையில் உட்கார்ந்திருந்தேனே' என்றால் அதை நீ பார்க்கவில்லையா என்பது எச்சம்.

ஐ – ஏ

இல் என்பது ஐகார இடைச்சொற்பெற்று இல்லை என வரும். அதுவே ஏகார இடைச்சொல் பெற்று இல்லே என உலக வழக்கில் வருகிறது.

இரட்டிப்பு

"அவனுடனேயே போனான்" என்பதில் ஏகாரம் இரட்டித்து வந்துள்ளது. அசைநிலைதான்.

'இப்பரிசு உன்னாலேயே எனக்குக் கிடைத்தது' — இதில் உன்னாலே என்பதில் ஏகாரம் அசை நிலையாகவும், உன்னாலேயே எனஅதையடுத்து வந்த ஏகாரம் உன்னால்தான் என உறுதிப் பொருளதாகவும் வந்தன. எனவே ஏகார இரட்டிப்பில் ஒன்று அசை நிலையாக மற்றது பொருளுடையதாக வந்ததைக் காண்க.

தொடர் இணைப்பு

இரண்டு தொடர்களை இணைக்க ஏகாரம் இடை வருவதுண்டு. "அவனுக்குப் படிப்பு இல்லை; அனுபவம் உண்டு" — இது, "அவனுக்குப் படிப்பு இல்லேயே தவிர அனுபவம் உண்டு" என வரும். இதில் ஏகாரம் தொடர் இணைப்பாகப் பயன் பட்டுத் தவிர என்னும் இடைச்சொல் பெற்று வந்தது.

இரண்டிடைச் சொற்களுக்கிடை நிற்றல்

'எல்லாத் துன்பங்களிலும் உனக்குத் துணை நிற்பேன்' என்பது, 'எல்லாத் துன்பங்களிலேயும் உனக்குத் துணை நிற்பேன்' என வழங்கும். துன்பங்களிலும் என்பதில் 'இல்' என்னும் ஏழாம் உருபு இடைச்சொற்கும் 'உம்' என்னும் முற்றும்மையிடைச் சொற்கும் இடையில் ஏகாரம் வந்ததுளது. இந்த ஏகாரம் வெற்று ஏகாரமே.

எனவே, ஏகார இடைச்சொல், தொல்காப்பியர் கூறிய தேற்றம், வினா முதலிய ஏழு பொருள்களில் மட்டுமின்றி, உலக வழக்கில் மேலும் 'ஆய்' விகுதிப் பொருளிலும், 'அப்படியே' என்பதில் முழுமை முதலிய பொருள்களிலும், இடைவிடாமை, அடிக்கடி, வியப்பு, எள்ளல், எச்சம் ஆகிய பொருள்களிலும், ஐகார இடைச்சொல்லுக்குப் பதிலாகவும், இரட்டித்த நிலையிலும், தொடர் இணைப்புக்காகவும், இரண்டிடைச் சொற்களுக்கு இடையே அசை நிலைப் பொருளிலும் வரும் என்பது பெற்றாம். பிறவாறு வருவனவுளவேல் இடம் கண்டு பொருள் கொள்க.

நமக்கு, நம்மது

அ. சீநிவாசன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

பெயர்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் பெயர்களைப் பதிலிகள் (Pronouns) என்று கூறலாம். இப்பதிலிகள் மூன்று வகைப்படும்' 1. பெயர்ப்பதிலிகள் (Personal Pronouns) 2. சுட்டுப் பெயர்கள் (Deurostrative Pronouns) 3. வினாப் பெயர்கள் (Interrogative Pronouns)

பெயர்ப்பதிலிகள் வேற்றுமை உருபு ஏற்கின்ற பொழுது ஏற்படும் மாற்றம் இவண் விளக்கப்படுகிறது.

தாம், நாம், யாம் (தொல். எழுத்து. 189) நூம் என்னும் பெயர்ப் பதிலிகள் வேற்றுமை உருபு ஏற்கின்றபொழுது தம், நம், எம், நும் என்று உருத் திரியும்.

பெயர்ப் பதிலிகளோடு இரண்டாம் வேற்றுமை உருபும், மூன்றாம் வேற்றுமை உருபும் புணரும்பொழுது நிலை மொழியில் உள்ள குறிலை அடுத்த மகர ஒற்று இரட்டிக்கும் என்பது விதி (161, 162)

தாம் > தம் + ஐ > தம்ம் + ஐ > தம்மை
நாம் > நம் + ஐ > நம்ம் + ஐ > நம்மை
யாம் > எம் + ஐ > எம்ம் + ஐ > எம்மை
நூம் > நும் + ஐ > நும்ம் + ஐ > நும்மை

இதைப் போன்றே மூன்றாம் வேற்றுமை உருபுகளான ஆல், ஒடு பெயர்ப்பதிலிகளோடு புணரும் பொழுது முறையே தம்மால், நம்மால், எம்மால், நும்மால் (உம்மால்) என்றும்; தம்மொடு, நம்மொடு, எம்மொடு, நும்மொடு (உம்மொடு) என்றும் திரியக் காணலாம்.

இரண்டாம் வேற்றுமை உருபும், மூன்றாம் வேற்றுமை உருபும் புணரும்பொழுது நிலைமொழி ஈற்றில் உள்ள ஒற்று இரட்டிக்கும் என்ற விதியை நான்கு, ஆறாம் வேற்றுமைகளுக்கும் பொதுமைப்படுத்தலாம்.

நான்காம் வேற்றுமை உருபான 'கு' உம், ஆறாம் வேற்றுமை உருபான 'அது' உம் புணரும்பொழுது பெயர்ப்பதிலிகளில் ஏற்படும் மாற்றம் பற்றி இனிக் காணலாம்.

"ஆறன் உருபினும் நான்கன் உருபினும்
கூறிய குற்றொற் றிரட்டல் இல்லை
ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான" (162)

தாம், நாம், யாம், நூம் என்ற பெயர்ப்பதிலிகள் வேற்றுமை உருபு ஏற்கின்றபொழுது நெடுமுதல் குறுகும்; ஒற்று இரட்டல் இல்லை; நிலைமொழி ஈற்றில் உள்ள புள்ளி முன்னர் 'அ'கரச் சாரியை இடம் பெறும் என்பது தொல்காப்பியர் தரும் விளக்கம்.

இந்நூற்பாவில் இரு செய்திகள் புதியவை. ஒன்று, குற்று ஒற்று இரட்டல் இல்லை. இரண்டு, ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும். தொல்காப்பியர் 'அ'கரச் சாரியை வலியுறுத்தியது ஏன்? நான்காம் வேற்றுமை உருபு பெயர்ப்பதிலிகளோடு புணரும் பொழுது ஏற்படும் படிநிலை வளர்ச்சியினைக் காண்போம்.

தாம் > தம் + கு > தம்கு
நாம் > நம் + கு > நம்கு
யான் > எம் + கு > எம்கு
நூம் > நும் + கு > நும்கு
உம் + கு > உம்கு

என்று முதல் நிலையிலும், பெயர்ப் பதிலிகள் நான்காம் வேற்றுமை உருபு ஏற்குங்கால் ஒற்றுமிகும் என்ற விதியின்படி

"வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு
ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்" (115)

தாம் > தம் + க்கு > தம்க்கு
நாம் > நம் + க்கு > நம்க்கு
யாம் > எம் + க்கு > எம்க்கு
நூம் > நும் + க்கு > நும்க்கு
உம் + க்கு > உம்க்கு

என்று புணர்ச்சியில் இரண்டாம் நிலை மாற்றம் அடையும். மூன்றாம் நிலையில் ஈற்று மகர மெய் இரட்டிக்க 'அ'கரச் சாரியை பெற்றாக வேண்டும்.

தாம் > தம்ம் (அ) + க்கு > தம்ம்(அ)க்கு
நாம் > நம்ம் (அ) + க்கு > நம்ம்(அ)க்கு
யாம் > எம்ம் (அ) + க்கு > எம்ம்(அ)க்கு
நூம் > நும்ம் (அ) + க்கு > நும்ம்(அ)க்கு
உம்ம் (அ) + க்கு > உம்ம்(அ)க்கு

நிலை மொழியில் மகர ஒற்று நிற்க வருமொழியில் அகரம் வருமானால் 'ம'கர ஒற்றுக்கெடும் என்பது விதி. 'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' (186). 'அந்தே வற்றே ஆயிரு மொழிமேல் ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே' (134). 'அத்தின் அகரம் அகரமுனை இல்லை' (126) என்ற நூற்பாக்களின் விதிகளை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிலம் + அத்து > நிலத்து (குறள். 28)
மனம் + அத்து + கண் > மனத்துக்கண் (குறள். 34
வையம் + அத்து + உள் > வையத்துள் (குறள். 50)
காலம் + அத்து + இன் + ஆல் > காலத்தினால் (குறள். 102)

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் நிலை மொழி ஈற்று மகரமெய் வருமொழி முதலில் 'அ'கரம் வரின் கெடும் என்பதற்குப் போதிய சான்றுகள் ஆகும். இவ்வடிப்படையிலேயே தொல்காப்பியர் அ'கரச் சாரியை வரும்பொழுது பெயர்ப்பதிலிகளில் உள்ள, குற்று ஒற்று இரட்டித்தல் இல்லை என்ற விதியை வகுத்திருத்தல் வேண்டும். இவ்விதியின்படி நிலை மொழி ஈற்றில் உள்ள 'ம'கர மெய் கெடும்.

தாம் > தம்(அ) + க்கு > தமக்கு
நாம் > நம்(அ) + க்கு > நமக்கு
யாம் > எம்(அ) + க்கு > எமக்கு
நூம் > நும்(அ) + க்கு > நுமக்கு
உம்(அ) + க்கு > உமக்கு

நான்காம் வேற்றுமைக்கு வகுக்கப்பட்ட 'அ'கரச் சாரியை விதியை ஆறாம் வேற்றுமைக்கும் அமைத்துக் கொள்ளலாம்.

தாம் > தம் + அது > தம்ம்(அ) + அது
நாம் > நம் + அது > நம்ம்(அ) + அது
யாம் > எம் + அது > எம்ம்(அ) + அது
நூம் > நும் + அது > நும்ம்(அ) + அது
உம் + அது > உம்ம்(அ) + அது

வருமொழியில் அகரம் வர நிலைமொழி ஈற்று மகர மெய் கெடும் என்ற விதியின்படி

தாம் > தம் + அது > தம்(அ) + அது
நாம் > நம் + அது > நம்(அ) + அது
யாம் > எம் + அது > எம்(அ) + அது
நூம் > நும் + அது > நும்(அ) + அது
உம் + அது > உம்(அ) + அது

இப்பொழுது மேலும் ஒரு விதி வகுக்கிறார் தொல்காப்பியர் அவ்விதி வருமாறு

"ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறாரு அகரமுனைக் கெடுதல் வேண்டும்" (116)

இவ்விதியின்படி

தாம் + அது > தம் + அது > தம்(அ) + து > தமது
நாம் + அது > நம் + அது > நம்(அ) + து > நமது
யாம் + அது > எம் + அது > எம்(அ) + து > எமது
நூம் + அது > நும் + அது > நும்(அ) + து > நுமது
உம் + அது > உம்(அ) + து > உமது

என்று பெயர்ப்பதிலிகள் ஆறாம் வேற்றுமை உருபு ஒற்று வரும் பொழுது 'உருபு' திரிபடையக் காணலாம்.

பேச்சு வழக்கில் நம்மது, உம்மது என்ற சொற்கள் இருப்பினும், இலக்கண வழக்கில் தமது, நமது, எமது, நுமது, உமது என்பவைதாம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவங்களாகும். இம்மாற்றத்திற்கான காரணங்கள் மேலே விளக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியத்தில் திருக்குறள் கருத்துகள்

இரா. சீனிவாசன்
அரசினர் இராம்நாராயணன் செல்லாராம்
வணிகவியல் கல்லூரி
பெங்களூர் - 560 001

சங்கப் புலவர்களில் பெரும்பாலோர் தம் பெயர், வரலாறு ஆகிய செய்திகளைத் தெரிவிக்காதது போலவே திருவள்ளுவரும் தெரிவிக்காததால் இவர் சங்க காலத்தைச் சார்ந்தவர் என்ற கருத்து உள்ளது. மேலும் குறளின் சொல்லாட்சி, பொருளாட்சி, ஊடுருவிப் பாய்கின்ற பொருள் நுணுக்கம் போன்றவை சங்க இலக்கியத்தில் காணப்படுவதால், திருவள்ளுவர் அதே காலத்தவர் என்றும் கூறப்படுகின்றது. (திருவள்ளுவர் கழகம் - தென்காசி, திருவள்ளுவர் வாக்கு, வெள்ளி விழா மலர் - மறை மலையடிகள் 1957) இவர். கி.மு. - 31-இல் திருவள்ளுவர் வாழ்ந்திருக்கலாம் என ஆராய்ந்துள்ளார். திருவள்ளுவரின் காலம் கி.பி. 125 என சீனிவாச அய்யங்காரும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என மா. இராசமாணிக்கனாரும் கி.பி. 4–ஆம் நூற்றாண்டு என மு. இராகவையங்காரும் கி.பி. 5–ஆம் நூற்றாண்டு என க. சுப்பிரமணியபிள்ளையும் கி.பி. 3–ஆம் நூற்றாண்டு என வையாபுரி பிள்ளையும் கூறியுள்ளமை எண்ணத்தக்கது.

நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள சங்கப்பாடல்களான 2381 பாடல்களில் ஏறக்குறைய 1850 பாடல்கள் அகப்பொருள் பற்றியும் பிற பாடல்கள் புறப்பொருள் பற்றியும் அமைந் துள்ளன. இருவகைப் பாடற் பொருண்மையைத் தன்னகத்தே பெற்றிருக்கும் சங்க இலக்கியத்தில் அகமும் புறமும் 80% மற்றும் 20% என்ற அளவில் அமைந்துள்ளதை உணர முடிகின்றது. கட்டுரையின் விரிவஞ்சி, அகப்பொருள் நூலாகிய நற்றிணையும் புறப்பொருன் நூலாகிய புறநானூறும் எடுத்துக்

கொள்ளப்பட்டு, ஒவ்வொன்றிருந்தும் ஐந்து மேற்கோள்கள் மட்டும் சுட்டப்பட்டுள்ளன.

விருந்தோம்பல்: பரத்தையிற் பிரிந்தவன் தலைவியின் ஊடலைத் தணிக்கப் பெறாதவனாய் விருந்தொடு புகக்கண்டு, தலைவி தன் ஊடலை அடக்கிக்கொண்டு, வரும் விருந்தினரை முகமலர்ச்சியுடன் போற்றி வரவேற்கின்ற தன்மையை நற்றிணை - 120 ஆம் பாடல் உணர்த்துகின்றது.

'அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்' (விருந்தோம்பல்: 84)

என்ற திருக்குறளின் கருத்து அந்நற்றிணைப் பாடலில் தென்படு கின்றது.

வான் சிறப்பு

'நீர்இன்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு' (வான்சிறப்பு: 20)

என்ற திருக்குறள் 'எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது; மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும்' என்ற கருத்தினைத் தருகின்றது.

'நின்ற சொல்லர்' எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலில், 'நீர் இன்று அமையாத உலகம் போலத் தம்மை இன்றியமை யாத நம்பால் தலைவன் முன்பு விருப்பம் மிக வைத்தருளினான் எனத் தலைவி தோழியிடம் கூறுகின்ற கூற்றில் மேற்கூறப் பட்டுள்ள திருக்குறளின் கருத்து செறிந்துள்ளது.

நட்பாராய்தல்

'நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு' (குறள்: 791)

என்ற திருக்குறள். 'நட்புச் செய்த பிறகு, நட்பை உடையவர்க்கு அதிலிருந்து விடுதலை இல்லை. ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வதைப்போல் கெடுதியானது வேறு இல்லை' என்ற கருத் தினைத்தருகின்றது.

தோழி, தலைவிக்குக் குறை நயப்புக்கூறிய நிலையில் (நற்றிணை: 32), 'தலைவன் எத்தகையவன் என்பதனைப் பற்றி நீயும் ஆராய்ந்து உணர்ந்து உன்னிடத்து அன்புடைய தோழிய

ரோடும் கலந்து ஆராய்ந்து அவன் நட்புக்குரியவனா என்பதை அறிந்து அவனுடன் அளவளாவுதல் வேண்டும் எனக் கூறு கின்றாள். தொடர்ந்து, அறிவுடைய சான்றோர் நட்பு கொள்ள விரும்புபவரின் குணம், செயல், தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து நட்பு கொள்வர். அவ்வாறு அல்லாமல் நட்பு செய்த பிறகு அதிலிருந்து விடுதலை இல்லாமல் அதனை ஆராய மாட்டார்' என்றும் கூறினாள்.

'நாடி நட்பின் அல்லது
நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே'

என்று அமையும் நற்றிணைப் பாடலடிகளில் 791-ஆம் குறளின் கருத்து செறிந்து இலங்குகிறது.

கண்ணோட்டம்

'பெயக் கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் (குயள்: 580)

என்ற திருக்குறள் 'யாவராலும் விரும்பத்தக்க நாகரிகமான கண்ணோட்டத்தை விரும்புகின்றவர், பழகியவர் தமக்கு நஞ்சு இடக்கண்டும் அதை உண்டு அமைவர்' என்ற கருத்தினைத் தருகின்றது. நற்றிணை 355 ஆம் பாடலில் தோழி தலைவனின் அருகில் நெருங்கிப் பேசும்பொழுது, 'மலை நாடனே! நட்புடையாளர் கண்ணோட்டமுடையார்க்கு எதிரே சென்றிருந்து 'இதனை நீயிர் உண்பீராக! என்று நஞ்சைக் கலந்து கொடுத் தாலும் நட்பின் மிக்க அக்கண்ணோட்டம் உடையார் அது நஞ்செனக் கண்டு வைத்தும் கண் மறுக்க மாட்டாமையின் அதனை உண்டு பின்னும் அவரோடு ஒட்டி அமைவார்; நீ அத்தகைய நட்பு உடையவன்' எனக் கூறுகின்றாள். இதில் மேற்கூறப்பட்ட குறளின் கருத்து பொதிந்துள்ளது.

புலவி நுணுக்கம்: தொலைவில் உள்ள அன்புடையார் ஒருவர் நினைக்கும்பொழுது அன்பு செய்யப்பட்டார்க்குத் தும்மல் தோன்றும் என்ற நம்பிக்கையை மதுரைப் பெருமருதனாரின் நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றது. தலைவி, 'பொருளை ஈட்டுவதற்காக எம்மைப் பிரிந்து சென்ற காதலர், இப்பொழுது நான் படும் துயரைக் கருதினாரேல் தும்மலினால் அறிந்து இனி அவர் வருவார் என ஆற்றியிருப்பேனல்லவா!' எனக் கூறுகிறாள்

'வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று' (குறள் : 1317)

என்ற திருக்குறளின் கருத்து மேற்கூறப்பட்ட பாடலில் தென் படுகின்றது.

செய்ந்நன்றியறிதல்: பிறர் தமக்குச் செய்யும் நன்றிகளுள் ஒன்றையும் மறக்கக் கூடாது. நன்றி மறத்தல் பாவங்களில் எல்லாம் பெரும் பாவம் என்கிறார் திருவள்ளுவர். பிற நன்றி கொன்றவர்களுக்கு உய்வே இல்லையாம் என்ற திருக்குறளின் கருத்தினைச் சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனுக்கு,

'ஆன்முலை அறுத்த அறனில்லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம் புடைபெயர்வதாயினும் ஒருவன்
செய்ந்நன்றி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம் பாடிற்றே ஆயிழை கணவ'.

என்றவாறாக ஆலத்தூர் கிழார் புறநானூற்றுப் பாடலின் வாயிலாக அறிவுறுத்திச் செய்ந்நன்றியறிதலின் சிறப்பினைப் போற்றியமை அறியத்தக்கது.

இரவு: வறுமை, பிச்சையெடுத்தல் என்ற இரண்டும் சமுதாயத்தில் தீர்வு பெறாத சிக்கல்களாகும். வள்ளுவர் இவற்றை ஆராய்ந்து இரவு, இரவச்சம் என்ற அதிகாரங்களில் ஒரு நல்ல முடிவினை நமக்குக் காட்சிப்படுத்துகின்றார். உண்மையிலேயே வேறு வேலை செய்து பிழைக்க முடியாது. பிச்சை எடுப்பதைத் தவிர வேறு பிழைக்கும் வழியில்லை என்ற பிச்சைக்குரிய இரப்போர், நல்லவர்களை நாடி இரப்பதும் தகுந்தது என்றும், பாத்திரம் அறிந்து பிச்சை இடுவது நல்லவர் கடமை என்றும் இரவு என்ற அதிகாரத்தில் வழிகாட்டுகின்றார். அவ்வாறு கூறிய அவர், 'இரந்து உயிர் வாழ்வது மானமற்ற செயல் என்றும் எவர் உதவியையும் பெறாமலும் தன் கையே தனக்கு உதவி என்ற கொள்கையும் வாழ்வதே சிறந்த வாழ்வு' என இரவச்சத்தில் கூறுகின்றார்.

வள்ளுவர் கூறிய இக்கருத்து,

'ஈயென இரத்தல் இழிந்தன்று; அதனெதிர்
ஈயேனென்றால் அதனெதிர் இழிந்தன்று
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று;அதனெதிர்
கொள்ளேனென்றல் அதனினும் உயர்ந்தன்று''

என்ற புறநானூற்றுப் பாடலடிகளில் பொதிந்துள்ளமை உணரத் தக்கது.

வரைவின் மகளிர்:

'அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்' (குறள் : 911)

என்ற திருக்குறள், 'அன்பினால் விரும்பாமல் பொருள் காரண மாக விரும்புகின்ற பொது மகளிர் பேசுகின்ற இனிய சொல், ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்' என்ற கருத்தினைத் தருகின்றது.

சோழன் நலங்கிள்ளி, வஞ்சினம் உரைக்கும் பொழுது, (புறநானூறு: 73) 'தீது இல்லாத நெஞ்சத்தால் காதல் கொள்ளாத பல வகைப்பட்ட கடுமையான கூந்தலை உடைய பொது மகளிரது பொருந்தாத புணர்ச்சியால் என் மாலை துவளட்டும் எனக் குமுறுகின்றான். மேற்கூறப்பட்ட குறளின் கருத்து இப்பாட்டின் அடிகளின் கருத்தோடு ஒன்றுபட்டு அமையும் திறனை உணர முடிகின்றது.

உழவு

'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்' (குறள்: 1037)

என்ற திருக்குறள், 'ஒரு பலம் புழுதி, கால் பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒரு பிடி எருவும் இட வேண்டாமல் அந்நிலத்தில் பயிர் செழித்து விளையும்' என்ற கருத்தினைத் தருகின்றது.

சிவந்த மேட்டு நிலத்தில் கார் காலத்து மழையான மிகுந்த செவ்வியை உடைய ஈரத்தில் புழுதி கலக்க, பல சால்பட உழுது எரு வேண்டாதே விதை இட வேண்டிய சிறப்புடைய நாடு' என்ற கருத்து புறநானூற்றில் பாரியின் பறம்பு நாட்டின் வளத்தைச் சிறப்பிக்கும் பொழுது குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் மேற்கூறப்பட்ட திருக்குறளின் கருத்து மிளர்கின்றமையை உணரமுடிகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள மேற்கோள்களின் வாயிலாகச் சங்க இலக்கியத்தில் திருக்குறள் கருத்துக்கள் ஊடுருவி உள்ளமையை நன்கு அறிய முடிகின்றது.

வள்ளுவரின் ஒழுக்கம் பற்றிய சிந்தனை

கெ. சுகதா
கேரளப் பல்கலைக் கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

திருக்குறள் உலகம் போற்றும் ஒப்பற்ற நூல் எந்நாட்டவருக்கும், எம்மொழியினர்க்கும், எச்சமயத்தினர்க்கும் ஏற்புடைத்தாய்த் திகழும் கருத்துக் கருவூலம். அத்தகைய சீரிய சிறந்தநூல் தமிழ் மொழியில் இருப்பது தமிழுக்குக் கிடைத்த தனிப்பேறாகும். இத்தகைய உலகப் பொதுமறையாம் திருக் குறளை வடித்துத் தந்தவர் வள்ளுவர். வள்ளுவரின் எண்ணங்கள் உயர்ந்தவை; எளியவை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் இனிய நடையில் குறள்களாக அமைந்தவை இக்குறள்கள் யாவும் தனிமனித வாழ்விற்கும் சமுதாய வாழ்விற்கும் வழிகாட்டும் வாழ்வியல் உண்மைகளை உட்கொண்டவை சமூக, பொருளாதார அரசியல், பண்பாட்டுச் சிந்தனைகளை உணர்த்துபவை மனித இனம் மாண்புற்றுச் சிறக்க உதவும் அருமருந்துக் கருவூலமாய்த் திகழ்பவை அதனாலேயே மகாகவி பாரதியாரும்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"!

என்று போற்றுகின்றார்.

ஒழுக்கம்

ஒழுக்கம் என்பது நன்னடத்தையாகும் "தன்னுடைய அல்லது தான் சார்ந்து வாழும் குழுவினருடைய பொது நலன் ஒற்றுமை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு தனிமனிதன் கடைபிடிக்கும் நெறி எனத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது" அதாவது தன்னுடையவும் பிறருடையவும் நலன் கருதி நீதி நெறியுடன் வாழ்தல் எனப் பொருள் கொள்ளலாம்

எவ்விதக் கட்டுப்பாடுமின்றித் தனிமனிதனாய் வாழ்ந்த காலத்தில் மனிதனுக்கு வாழவேண்டிய நெறிமுறைகளை

யாரும் வகுத்துரைக்கவில்லை. ஆனால் தனிமனிதன் குடும்பமாய்க் குடும்பங்கள் சேர்ந்த சமூகமாய்க் கூடி வாழ்ந்தபோது சமுதாயத் தேவைக்கேற்ப அவரவர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளும் சான்றோரால் வகுக்கப்பட்டன. இவ்வாறு வகுக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி ஒழுகுவது ஒழுக்க மாகும் மக்கள் சமுதாயம் பண்பட்டதாக நாகரிகமுடையதாகச் சிறந்து விளங்கிட மனிதன் தத்தமக்குரிய நெறிமுறைகளைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும்.

வள்ளுவர் கூறும் ஒழுக்கம்

வள்ளுவரின் ஒழுக்கச் சிந்தனை உலகளாவிய ஒழுக்கச் சிந்தனையாகும் திருக்குறள் முழுவதிலும் பெரிதும் வலியுறுத்திக் கூறப்படும் நெறி ஒழுக்க நெறியாகும் அதன் காரணமாகவே திருக்குறளுக்கு ஒழுக்க நூல் என்கிற சிறப்புப் பெயரும் அமைக்கப்பட்டுள்ளது கரவாது கரைந்துண்ணும் காகமும் துன்பம் செய்தவிடத்தும் வாலாட்டும் நன்றியுள்ள நாயும் அதனதன் ஒழுக்கத்தைக் கடைபிடித்தொழுகுகின்றன இத்தகைய ஒழுக்கமானது உயரிய பண்பாகும். மனிதன் பெறத்தக்க உடைமைகளில் மிகவும் சிறந்தது ஒழுக்கம் எனலாம். உலகத் தோடு சான்றோரோடு பொருந்த ஒழுகும் பண்பினை அறியதார் நூல்கள் பல கற்றும் கல்லாதவராக அறிவில் லாதவராகக் கருதப்படுவர் ஆகவே உயர்ந்தோர் பலரும் ஒழுகியவாற்றான் ஒழுகுதல் மேன்மை தருவதாகும்.

மனிதனை நெறிப்படுத்துவதற்கு ஒழுக்கம் மிக இன்றியமை யாததாக உள்ளது. ஒழுக்க நெறிக் கல்வியுடன் கடவுள் நெறிக் கல்வியும் இணையும்போது ஒழுக்கம் மேலும் சிறந்த பொருளா கிறது பரிந்தோம்பிக் காத்தலால் ஒழுக்கம் வாழ்க்கைக்குத் துணையாய் இன்பம் சேர்ப்பது. பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்கவும், இறைவனடி சேரவும் இவ்வொழுக்கம் வழித்துணை யாவது. உலகில் சிறப்பைத்தரும் ஒழுக்கம் உயிருக்கு உயிராக உயிரைவிட மேலானதாகக் கருதப்படும் சிறப்புடையது.

அன்புடைமை, அருளுடைமை, வெஃகாமை, இன்சொல், நடுவுநிலைமை, பொறுமை, இன்னா செய்யாமை பிறனில் விழையாமை, கல்வி, கேள்வி, வாய்மை, பொய்கூறாமை, பண்புடைமை, புறங்கூறாமை, பயனிலசொல்லாமை, நாணுடைமை, செய்நன்றியறிதல், கொல்லாமை, கூடா ஒழுக்கம்,

இறைமாட்சி, ஆசையின்மை, அறிவுடைமை, இனியவை கூறல், ஈகை முதலிய பலகூறுகளுடன் வள்ளுவர் கூறும் நல்லொழுக்கம் திகழ்கின்றது. இந்நல்லொழுக்கம் என்றும், எங்கும் எப்போதும் வலியுறுத்தப்படுவதாகும்.

ஒழுக்கப் பொருள்

ஒழுக்கம் என்பது சிறக்க ஒழுகுதல் எனப் பொருள் தருவதுடன் நீதியுடனும் சிறந்த நெறியுடனும் ஒழுகுதல் எனக் கூறுகிறது. ஒழுக்கப் பொருள் மாந்தரைச் செம்மை உலகில் வாழ வைப்பது. உலகின் சிறந்த உயர்ந்த பொருள்களுள் ஒழுக்கப் பொருளும் அடக்கம் பெறுவது. இவ்வொழுக்கப் பொருள் மனிதனை மனிதனாக, மனிதருள் மாண்புடையவனாக, மாமனிதனாக வாழ வைப்பது.

கல்விக்குப்பயன் அறிவும் அறிவுக்குப் பயன் ஒழுக்கவுமாகலின் அவ்வொழுக்கப் பொருளைக் கடைபிடித்தல் அவசியமாகிறது ஒழுகுதலைக் கற்றலும் அதன்படி ஒழுகுதலும் சிறப்பைத் தரும். சொல்லானும் செயலானும் ஒழுக்கப் பொருள் அமைதல் வேண்டும். கற்றல் பொருளை மறந்தாலும் மீண்டும் அதனைக் கற்றுக் கொள்ளலாம் ஆனால் ஒழுக்கம் குன்றிவிட்டால் குடிப் பிறப்பே குன்றிவிடும் என்பதாம். அறிவினும் சிறந்தது ஒழுக்கம் என்று அறிஞர் எமர்சனும் கூறுகிறார்.

"ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை"

என்னும் சான்றோர் கூற்று இவண் நினைவு கூரத்தக்கது. அதாவது உலக மக்களுக்கெல்லாம் கல்வியை விடச் சிறந்தது ஒழுக்கமாகும், வள்ளுவர் கல்வியைக் கண்ணாகக் கூறினார். ஆனால் ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டது என்றார் ஒழுக்கமுள்ள விடத்து கல்வியும் நின்று நிலைபெறும் என்னும் கருத்து இங்கு சிந்தனைக்கு விருந்தாகிறது. ஒழுக்கம் இழந்தால் திரும்பப் பெறுதல் இயலாததாகும்.

ஒழுக்கம் மனிதனை இடம் விட்டு இடம் வாழ வைக்கும் ஒழுக்கம் உடையானுக்கு யாதும் ஊரே யாவருங் கேளிர் என்ற நிலையும் சிறப்புற அமையும். அத்தகைய உயர்நிலைக்கு அழைத்துச் செல்ல வல்ல ஒழுக்கத்தை ஆன்று பெறுதலும், முயன்று ஈட்டுதலும், அதன்படி ஒழுகுதலும், பிறரை ஒழுகச் செய்தலும் தேவையாகும்.

நல்லொழுக்கமும் தீயொழுக்கமும்

''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்''

என்பது குறள். மாந்தர்தம் நல்வாழ்வுக்கு அடிப்படையாய் அமைவது நல்லொழுக்கம். தீயொழுக்கம் என்றும் துன்பம் தருவது. செய்க என விதிக்கப்பட்ட நல்லவற்றைச் செய்தல் நல்லொழுக்கம். செய்யற்க என விதிக்கப்பட்டவற்றைச் செய்தல் தீயொழுக்கமாகும்.

நல்லொழுக்கம் இன்பவாழ்க்கைக்குக் காரணமாகும். உன்னத நிலைக்கு அழைத்துச் செல்லக் கூடியது. எந்தவோர் உயிருக்கும் எத்தகைய நிலையிலும் தீமை செய்யாமல் புகழ்பட சிறக்க ஒழுகுதல் நல்லொழுக்கத்தின் பாற்படும் அதாவது ஒருவனது ஒழுக்கம் நன்மை பயக்கக் கூடியதாக. விழுமியதாக உயர்வடையச் செய்வதாக இருத்தல் வேண்டும். அது வல்லாமல் தீமைக்கு வழி வகுக்குமாயின் அதனைத் தீயொழுக்கம் என்பர்.

தீயொழுக்கம் எவராலும் விரும்பப்படாதது. வாழ்க்கைக்கு ஒவ்வாதது என்றும் தீங்கு விளைவிப்பது இத்தீயொழுக்கம் முற்றிலும் வெறுக்கத்தக்கது. ஒதுக்கத்தக்கது; புறக்கணிக்கப்பட வேண்டியது,

ஒழுக்கத்தின் உயர்நிலை

ஒழுக்கம் விழுப்பம் தருதலான் அது உயிரினும் போற்றத்தகும் சிறப்புடையதாகும். இவ்வொழுக்கம் உயர் பொருளாகக் கருதத்தக்கது. ஒழுக்கம் நற்குடிப் பிறப்பையும், சிறப்பையும் தரும், புகழ் சேர்க்கும், இம்மை மறுமை இன்பங் களுக்குத் துணையாகும். நல்வினைக்குக் காரணமாக அமையும். நீண்ட வாழ்க்கையும். செல்வமும், பெருகும், மகிழ்ச்சியும் சேர்க்கும்.

ஒழுக்கத்தால் போற்றப்பட்டோர் பலராவர். இம்மண்ணில் நல்லவண்ணம் வாழ நெறிகளை அமைத்து வாழ்ந்து காட்டிய வள்ளுவரை நாம் மனக்கண் நிறுத்துகின்றோம். பிறன் மனை நயவாத்தன்மையால் பேறுபெற்ற இராமனும், கற்பு நெறி போற்றித் தெய்வமாய் விளங்கிய கண்ணகியும் போற்றப்படு

கின்றனர் நல்லொழுக்கமுடன் வாழ்ந்து வழிகாட்டியாய்த் திகழ்ந்த பாரதி வாய்மையும் தூய்மையும் போற்றிய அண்ணல் காந்தியடிகள் தருமத்தின் விளக்கமாய்த் திகழ்ந்த தருமன் அன்பை உலகிற்கு உணர்த்திய புத்தனும் இயேசுவும், நபிகள் நாயகமும் ஒழுக்கத்தால் பேரும் பெருமையும் பெற்றவராவர்.

'ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை' எனும் குறள்வரி ஒழுக்கத்தின் மேன்மையை எடுத்துரைக்கின்றது. நாம் வாழும், குடும்பம், சமுதாயம், கல்விக் கூடங்கள், தொழிற்சாலைகள், பிற அலுவலகங்கள் முதலிய எல்லாவிடத்தும் எப்போதும் ஒழுக்கத்தைக் கடைபிடித்தல் வேண்டும். பெரியோர்கள் ஒழுக்கத்தைக் கற்பிப்பதுடன், தாமும் அவ்வண்ணம் ஒழுகி, பிறரையும் ஒழுகச் செய்தல் வேண்டும். ஒழுக்கத்தால் உயர்ந்த மாமேதைகள் எந்நாட்டவராயினும் போற்றத்தகும் பெருமைக் குரியவராவர்- இத்தகைய ஒழுக்கமும்' அதன் சிறப்பும் நாடும் மலையும் கடலும் கடந்து செல்லும் தன்மையுடையதாகும்.

ஒழுக்கமின்மையின் இழிநிலை

ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையதாகும். ஒழுக்கமின்மை உயர் குடிப்பிறப்பை அழித்துவிடும். பொறாமை உடையவரிடத்தில் வாழ்க்கை நிலைபெறுவதில்லை. அதுபோல் ஒழுக்கம் இல்லாதவர் வாழ்க்கையில் உயர்வும் இல்லை என்பதாம். ஒளிமயமான உன்னத வாழ்வுக்கு அழைத்துச் செல்கிற ஒழுக்கம் இல்லையாயின் அடையத் தகாத பெரும் பழியும் வந்து சேரும். இதனையே வள்ளுவரும் 'இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி' என்கிறார்.

முடிவுரை: பொய் கூறாமை, களவு செய்யாமை கொலை செய்யாமை, எவ்வுயிருக்கும் துன்பம் விளைவிக்காமை சூதாடாமை, மது அருந்தாமை, புறங்கூறாமை, பொறாமை கொள்ளாமை கோபம் கொள்ளாமை பிறர் பொருளை விரும்பாமை ஆகிய நற்பண்புகளும் நல்லொழுக்கத்தின் பாற்படும் வள்ளுவரின் ஒழுக்கச் சிந்தனை உலகளாவியது. உலகம் போற்றுவது இவ்வொழுக்கச் சிந்தனைகள் கற்றோரையும் கல்லாதோரையும் சென்றடையச் செய்தல் வேண்டும். அப்போது தனிமனித ஒழுக்கமும் சமுதாய சமூக வாழ்க்கை நெறிகளும் சிறந்து விளங்கும். 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது பழமொழி ஆகவே நல்லொழுக்கத்தைச் சிறு வயதிலிருந்தே கடைபிடித்து ஒழுகுதலும், ஒழுகுதலும் பிறரை ஒழுகச் செய்தலும் வேண்டும்.

அறத்தின் ஆக்கம்

ப. சுசீலா
சீதாலட்சுமி இராமசாமி மகளிர் கல்லூரி
திருச்சி - 2

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மண்"[1]

இக்குறட் கருத்திற்கிணங்க காலந்தோறும் பண்புடையோர் சிலரிருந்து ஆண்டாண்டு அவ்வப்போது பண்புடைமை கெடாதவாறு காத்து அறமுரைத்து வருகின்றனர். இத்தகையோர் தம் அறம் உரைக்கும் செயலால்தான் இவ்வுலகம் இன்றுவரை நிலைபெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது. இக்கருத்தினை,

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"[2]

என்னும் புறநானூற்றுப் பாடலும் வலியுறுத்திக் கூறியுள்ளமையை அறியலாம்.

இவ்வுலகில் இன்று எங்கு நோக்கினும் கொலை, கொள்ளை, வழக்கு, வம்பு, இழிமொழி, தீய பழக்கங்கள் என்று பல்வேறு கொடுமைகள் நிகழ்வதைக் காண்கிறோம். இத்தகைய இழிசெயல்களைச் செய்வோரைச் சட்டத்தால் அரசாங்கம் தண்டித்தும் அதே செயலைப் பலமுறை செய்து சிறைபுகுவதும் வெளிப்போவதும் இன்று நாம் காணும் நடைமுறை உலகின் செய்தி

யாகும். சுருங்கச் சொல்லின் 'ஆத்திகப் பார்வை–ஒழுக்கக்கேடு, அரிச்சந்திர வழிபாடு – கள்ள வாணிகம், திருக்குறள் பெருமை – விலங்குணர்ச்சி இப்படிப் போலி வாழ்க்கை பெருகிவிட்டது. சுற்றிலும் பாலைவனக் காட்சி, இடையிடையே சிற்சில நீரூற்று– இதுதான் இன்றைய உலகம்.'[3]

இத்தகைய உலக நிலைமை மாறி மனிதத் தன்மை நிறைந்த புண்ணிய பூமி உருவாக வேண்டுமெனில், மக்களின் மனத்தில் அறவுணர்வு விதைக்கப் பெறுதல் வேண்டும். அதுவும் இளமை முதலே வலியுறுத்திக் கற்பித்தல் சமுதாயத்திற்கு நலம் பயக்கும்.

இவ்வுலகில் பிறந்த எவர்க்கும் இறப்பு என்பது மாற்றற்கரிய இயற்கையான நிகழ்ச்சியாகும். எனவே யாரும் கூற்றுவனிட மிருந்து தப்ப முடியாது. இதை உணர்ந்து ஒவ்வொருவரும் இளமை முதலே உயிர்க்கு உறுதுணையாகும் நல்லறங்களைச் செய்தல் வேண்டும். இதனை விடுத்துக் கயல் முள்ளன்ன நரைமுதிர் திரைகவுள் எய்திய முதுமைக் காலத்தில் அறம் செய்ய நினைத்தாலும் செய்ய இயலாது. ஏனெனில் கூற்றுவன் வந்து எடுத்துச் செல்வதொன்றனையே எதிர்நோக்கிக் காத்திருக்கும் அவலநிலை அம்முதுமைக்குரிய பண்பாதலால்.

எனவே ஒருவன் தன் வாழ்க்கையில் சிறப்புற வேண்டின்,

''அன்றறிவாம் என்னாது அறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை''[4]

எனும்படி அறம் செய்தல் வேண்டும். இவ்வறமே வாழ்க்கையில் என்றும் இன்பம் பயப்பது, 'அறத்தான் வருவதே இன்பம்'[5] என வள்ளுவரும் கூறியிருத்தல் கொண்டு தெளியலாம். இத்தகு அறவாழ்க்கையே இம்மைக்கும் மறுமைக்கும் வித்தாக அமைவது. ஆதலால்தான்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''[6]

என்றும் வள்ளுவர் கூறியுள்ளார்.

இன்று உலகிடை வாழும் மக்களில் பலர் அறவினைகளைச் செய்வதா? மறவினைகளைச் செய்வதா? அன்றி அவற்றை நீக்கி வாழ்வதா? என்ற வினாயிடைப்பட்டு ஐயத்தோடு வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு, மிக எளிய முறையில்,

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமாரதுவே"[7]

எனப் புறநானூறு எடுத்துரைக்கின்றது. வள்ளுவரும் 'அறன் வலியுறுத்தல்' எனத் தனி அதிகாரமே வகுத்து அறத்தினை வலியுறுத்தி மக்களைச்செய்ய சொல்கின்றார். மற்றும் பல்வேறு அறநூல்கள் நம் நற்றமிழ் மொழிக்கண் அறத்தினை வலியுறுத்திக் கூறியிருத்தலைக் காண்கிறோம். அறம் செய்யாதான் வாழ்க்கை உப்பில்லாத உணவு போன்று பயனற்றது என்கின்றது அற நெறிச்சாரம். இதனை,

"உப்புக் குவட்டின் மிசையிருந்து உண்ணினும்
இட்டுணாக் காலத்துக் கூராதாம் – தொக்க
உடம்பும் பொருளும் உடையானோர் நன்மை
தொடங்காக்கால் என்ன பயன்"[8]

என்னும் பாடலால் அறியலாம்.

'அறம் செய்து வாழ்வதே வாழ்க்கை' என்னும் பேரு உண்மையை அறிந்த ஔவை என்னும் புலமைசால் மூதாட்டியும் குழந்தைகளுக்கு மிக எளிய முறையில் மனத்தில் நிறுத்திப் பயன் பெறுமாறு தமிழ் எழுத்துக்களைக் கற்பிக்கத் தொடங்கும் போதே 'அ' என்னும் எழுத்தினை விளக்க 'அறம் செய விரும்பு' என்று கூறியுள்ளார். இப்படிப் பள்ளியில் பயிலும் போதே சிறு வயதிலேயே பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்னும் நல்ல எண்ணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

உலகில் வாழும் மக்களுள் பலர் அறம் என்னும் நன்மையைச் செய்ய விரும்பார். சிலரே அந்நல்வினைக்கண் நாட்டமுடைய வராக விளங்குவர். இதனை அறிந்தே ஔவையார் 'அறம் செய விரும்பு' என்றார். இவ்விருப்பம் இருப்பின் உலகில் ஒருவர் மற்றவர்க்கு நன்மை செய்து வாழத் தலைப்படுவர். அவ்வாறு வாழத் தலைப்பட்டால் உலகில் எங்கும் யாரிடத்தும் பகை யுணர்ச்சியோ, அழுக்காறோ, பூசலோ முகிழ்க்காது. 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்பது போல் கேடு பிறவாது, இவ்வாறு வாழ்வோரையே தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர் என்பர். எல்லோரும் பிறர்க்கென்று வாழ்ந்தால் உலகு எத்தகைய தீமையும் அறியாது வாழும்.

இத்தகைய அறக்கருத்துகளையே எம்மதமும் மக்களுக்கு அறிவுறுத்தி நிற்கின்றன. கிறித்துவ மதத்தில் இயேசுபெருமான் ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பகுத்துக் கொடுத்துப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' அறவாழ்வினை மக்களுக்கு உணர்த்திச் சென்றுள்ளார் இக்கருத்தினை ஔவையார் அதியமானின் ஈகை அறத்தினைப் பற்றி,

"உண்டாயின் பதங்கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்"[9]

என்று கூறியிருத்தலோடு ஒப்பிட்டு அறியலாம்.

இஸ்லாமும் அறத்தினையே பெரிதும் வற்புறுத்தி நிற்கின்றமையை அவர்தம் அறப்பாகுபாடு கொண்டு அறியலாம். அவையாவன ஜகாத், சதக்கா, ஃபித்ரா என்பனவாகும். இவை யாவும் சமுதாயத்தில் நலிவுற்றிருக்கும் ஏழைகளுக்கு உதவும் பொருள்கள் என்னும் உன்னத நோக்கமுடையனவாகும். இது மட்டுமன்றி எம்மதமும் வலியுறுத்தும் 'மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டாகும்' என்னும் அடிப்படை அறத்தைத் தலையாய குறிக்கோளைக் கொண்டு விளங்குவதுமாகும்.

இவ்வாறு பல்வேறு மதங்களும் அறிவுறுத்தும் அறத்தின் வழி மக்களை நடக்கச் செய்தால் உலகில் அன்பு, சமநீதி, சகோதரத்துவம், சாந்தி சமாதானம் என்னும் உயர்ந்த பண்புகள் வளரும். பிறகு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றஉ ன்னத நிலை உருவாகும். மற்றும் ஒருவர்மற்றவர்க்காக வாழ்வது என்று ஆகிவிட்டால் நிறவேறுபாடு, சமய வேறுபாடு, சாதி வேறுபாடு, தேய வேறுபாடு உற்றார் உறவினர் என்ற வேறுபாடு என்னும் இவையனைத்தும் அற்றுப்போகும், இவ்வாறு வாழும் மக்கள் நம் நாட்டிற்கு மட்டும் சொந்தமானவர்கள் அல்லர், அவர்கள் உலகிற்கே சொந்தமானவர்கள் ஆவர். (Citizen of the World)

மேற்கூறிய நலமனைத்தும் அறத்தின் வழி எய்தலால்தான் வள்ளுவரும்,

"அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு"[10]

என்றார். எனவே அறவழி நடந்து, நலம் பல எய்தி, அமைதி காத்து, உலகில் புகழ் பெறுதலே மக்களின் தலையாய கடமையாகும்.

குறிப்புகள்

1. திருக்குறள் 996
2. புறம். 182
3. மு. வரதராசன் 'அறமும் அரசியலும்' பக். 54-55
4. திருக்குறள்–36
5. திருக்குறள்–39
6. திருக்குறள்–50
7. புறம் 195 6–9,
8. அறநெறிச்சாரம்- 169,
9. புறம்–95: 6–8.
10. திருக்குறள்–32.

எ. ஆ. கிருஷ்ணபிள்ளையின் போற்றித் திருஅகவல்

பி. சுத்திகரமேரி
கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர்

முன்னுரை: தமிழ்க் கிறித்தவப் புலவர்களுள் எ.ஆ. கிருஷ்ண பிள்ளை (1827 - 1900) சிறப்புடையவராய் விளங்குகிறார். இவர் தம்முடைய சமயக் கருத்துகளைத் தெளிவாக்கும் பொருட்டு தமிழ் பக்தி இலக்கிய மரபுவழி பல பக்திப் பனுவல்களை இயற்றியுள்ளார். அப்பனுவல்களில் ஒன்றான **இரட்சணிய மனோகரம்** கிறித்தவ பக்தி இலக்கியத்துக்கே ஒரு தனிக் கருவூலமாய்த் திகழ்கிறது. இதனின் இறையியல் கருத்துகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

போற்றித் திருஅகவல் - பெயர் விளக்கம்: போற்றுதல் என்பது துதித்தல், வணங்குதல் எனப் பொருள்படும். திரு என்பது மேன்மை, அழகு எனப் பொருள்படும். அகவல் என்பது அழைக்கை, கூத்தாடல், வசப்படுத்துதல், அகவற்பாவுக்குரிய ஓசை எனப் பொருள்படும். ஆகையால் போற்றித் திருஅகவல் என்பதற்கு மேன்மை பொருந்திய இறைவனைப் போற்றுதல், மேன்மை பொருந்திய இறைவனை அகவற்பாவால் துதித்தல் என்பது கருத்து, பொருட் போக்கில் போற்றிப் பண்புடைய தாதலின் இதற்குப் போற்றித் திருஅகவல் என்று பெயர் சூட்டி யுள்ளமை பொருத்தம் உடையதே.

போற்றித் திருஅகவல்- சொல் ஆட்சி: தேவாரம், திருவாசகம் முதலிய பக்தி நெறிக் காப்பியங்களில் வணக்கம் அல்லது காக்க என்னும் பொருளில் போற்றி என்பது வழங்கப்படுதலை அறிய முடிகிறது. இறைவனை வணங்கிப்பாடும் மரபு சங்ககாலந் தொட்டே இருந்திருக்கின்றது. எனினும் பக்தி இயக்கக் காலத்தில்

தான் இது மிகுதியாக நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றது. இறைவனை வழிபடுகின்ற முறையில் இதுவும் ஒன்று. அதாவது போற்றி போற்றி என மந்திரம் ஓதிப் பூசை செய்கின்ற திருமுறை வழிபாடாகும். முதன் முதலில் மாணிக்கவாசகரே போற்றித் திருஅகவலை மரபு முறையில் பாடியிருக்கிறார்.

போற்றித் திருஅகவல் எழக் காரணமும் அதன் அமைப்பும்: ஒரு படைப்பாளியின் படைப்புகளுக்குப் பின்புலமாய் இருந்து படைப்புத் தொழிலில் அவனை முன்னேறச் செய்ய அவன் வாழ்ந்த, வாழும் சமுதாயமே பெரும் பங்கு வகிக்கின்றது. கிருஷ்ணபிள்ளைக்குச் சம காலத்தவரான இராமலிங்க வள்ளலார் (1823 - 1874) போற்றித் திருவிருத்தம் பாடியுள்ளார். கிருஷ்ண பிள்ளையின் போற்றித் திருஅகவல் 106 அடிகளைக் கொண்டது. இந்த 106 அடிகளும் 53 கண்ணிகளாக அமைந்துள்ளன. இப் போற்றித் திருஅகவல் பாடப்பட்டதற்கான காரணங்களை நோக்குங்கால் பக்தி நெறி தழைக்க வேண்டுமென்ற அவர்தம் ஆர்வமும் கற்போர்க்குக் கிறித்துவின் மேல் நம்பிக்கையை ஊட்ட வேண்டும் என்னும் அவர்தம் குறிக்கோளும் நமக்கு நன்கு புலப்படுகின்றன. மேலும் கிறித்தவ வழிபாடும் தமிழ் மரபை ஒட்டிய வழிபாடாக வேண்டுமென்ற நோக்கத்தோடு பக்தி உணர்வு நிறைந்த இப்போற்றித் திருஅகவலைப் பாடி இருக்க வேண்டும்.

போற்றித் திருஅகவல் உணர்த்துவன: மாணிக்கவாசகரது போற்றித் திருஅகவல் இறைவனது புகழினையும், புராணச் செய்திகளையும், பக்தி சிறப்பினையும் விளக்குகின்றது. அது போலவே கிருஷ்ணபிள்ளையின் போற்றித் திருஅகவலும் இறைவனின் புகழினையும், சமயக்கோட்பாட்டினையும், இறை வாழ்க்கையினையும் விளக்குகின்றது. கடவுளைத் 'திரியேகர்' என்று குறிப்பிடும் அவர் அடுத்தாக அவரது அருட்குணத்தை எண்ணி உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் விண்ணுலக தேவர்களும் வணங்குவதைக் கூறுகின்றார்.

இறைவனைப் பற்றிய பொதுவான கருத்துகள்: இறை உணர்வை பக்தியின் ஆரம்ப நிலையில் இருக்கும் பக்தர்களுக்கு உணர்த்தும் வகையில் எழுந்தவைகளே உருவ அமைப்புகள். கிருஷ்ணபிள்ளையும் பரம்பொருளைக் காண ஏங்குகின்ற உள்ளங்களுக்கு இறைவன் இத்தகைய தோற்றம் உடையவன்

என்பதை முதலில் அறிமுகப்படுத்துகிறார். இதில் பழமறையாம் வேதாகமத்தின் சாரத்தைக் காணமுடிகிறது.

உலகம் தோன்றுவதற்குக் காரணர்; ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்; பிதா, சுதன், பரிசுத்த ஆவி என்னும் திரியேகர்; பிறப்பு இறப்பு இல்லாதவர்; முக்காலத்தையும் உணர்ந்தவர்; அனைத்தையும் அறியக் கூடிய வல்லமை படைத்தவர்; எதையும் நினைத்த உடனே செய்து முடிக்கும் பேராற்றல் மிக்கவர்; ஒரு கோடிக் கதிரவனுடைய ஒளிக் கற்றைகள் விரிந்தது போன்று ஒளிமயமாய் விளங்குகின்றவர்; ஊழிக்காலந்தொட்டும் ஆழ, நீள, அகல உயரங்களை அளந்தறிவதற்கு இயலாதவர்; எங்கும் கருணையின் வடிவாகவே நிறைந்திருப்பவர் என்று இறைவனை நமக்கு முதலில் அறிமுகப் படுத்துகிறார்.

குமரக் கடவுள்: இறைவனின் திருக்குமரனாம் ஏசு பூமியில் வந்து தோன்றியதற்கான காரணத்தைக் கூறுகிறார்.

“சற்பனையாலே விற்பன மிழந்து
கற்பனை கடந்த துற்பவந் தொலைய”

என ஏதேன் தோட்டத்தை நினைவு கூர வைக்கிறார். பாவம் உலகில் எவ்வாறு தோன்றியது என்பதற்கு அழகாக விளக்கம் தருகிறார். சாத்தானின் வஞ்சனைச் சூழ்ச்சியால் மாந்தர்கள் நல்லறிவினை இழந்து கடவுள் அருளிய வார்த்தையினை மீறிய தால் பாவம் உலகத்தில் வந்து தோன்றியது என்கிறார். அந்த இருளாகிய பாவத்தை நீக்கி அறிவைத் தெளிவுபடுத்தி மக்களுக்கு மீட்புத் திருநெறியினை ஏற்படுத்தியருளப் புண்ணிய உருவின ரான குமரக் கடவுள் (ஏசு) உலகில் தோன்றினார் என்கிறார்.

பரிசுத்த ஆவியின் மகிமை: கிறித்து இவ்வுலகில் ஆற்ற வந்த மீட்புப்பணி உலக முடிவுவரை நடைபெறவேண்டும் என விரும்பி தமக்குபின் இப்பணியைத் தொடர்ந்து ஆற்ற பரிசுத்த ஆவியை அனுப்புவதாகத் தம் அப்போத்தவர்களுக்கு வாக்களித் திருக்கிறார். உடலுக்குள் உயிர் இருப்பதுபோல் பரிசுத்த ஆவி திருச்சபையில் இருந்து கொண்டு அதனை வழிநடத்துகிறார். கெட்ட நடத்தையால் பலவாறு ஒழுகும் இழிந்த மக்களின் இருதயத்தில் சூரியனைப் போல் ஒளிவீசக்கூடிய வேதத்தில் ஒளி யாகிய இறைவனைப் பதியவைத்து, அவர்கள் அனைவரையும் திருநெறிக்கு உட்பட்டமக்களாக ஒருமுகப்படுத்துகிறார். மக்களைத் தீமை வந்து சாராமல் அவர்களை எக்காலத்திலும் பாதுகாத்துக் கடவுளிடம் சேர்ப்பிக்கும் (ஆற்றுப்படுத்தும்)

ஆத்துமமாய் விளங்குகின்றார் என்று பரிசுத்த ஆவியைப் பற்றி கிருஷ்ணபிள்ளை குறிப்பிடுகிறார்.

மண்ணுலகம் கடவுளைத் துதித்தல்: இறைவன் அச்சத்தை நீக்கி நமக்கு நன்மையே செய்யக்கூடிய தோற்றம் உடையவர் என்று கிருஷ்ணபிள்ளை இறைவனின் தன்மையைக் கூறுகிறார். இறைவன் பால் இவ்வாறு கவிஞரும் நம்மை ஆற்றுப்படுத்த விழைகிறார். உலகத்தில் உள்ள அனைத்து அஃறிணைப் பொருள்களும் கடவுளின் மேன்மையான செயல்களையும், அருங் குணங்களையும் விளக்கிக் கூறி முறைப்படி அவரை வணங்கு வதாகக் கூறுகிறார். உலகத்தின் தோற்றம் முடிவு இவை இரண்டும் நிலைபேறுடையன உருவம் முதலியன ஆதியில் அவை அமைக்கப்பட்ட நிலையிலிருந்து ஓர் அணுவும் குன்றாமல் இன்று வரை நிலையாய்த் தம்மைக் காத்துவருதலால் அவரை வணங்கு கின்றன என்று வணங்குவதற்கான காரணத்தைக் கூறுகிறார் கவிஞர்.

திருச்சபை கடவுளைப் போற்றுதல்: திருச்சபை (உயர்திணை யாகிய மக்கள்) கடவுளைப் போற்றுவதை ஆசிரியர்

"கடைக்கணித் தருளிய கருணையை உன்னி
மடக்கொடி சீயோன் மகளுளங் கசிந்து" என்கிறார்.

சீயோனாகிய கடவுளை மணவாட்டியாகிய திருச்சபை போற்றும் பாங்கு நாயக நாயகி பாவத்தினை நமக்கு தெள்ளத் தெளி வாக்குகிறது. இயேசுவை மணவாளனாகவும் திருச்சபையை மணவாட்டியாகவும் கொள்ளும் மரபு திருமறையில் இருப்பதை அப்படியே இங்கு எடுத்து ஓதியிருப்பதை உணரமுடிகிறது. பக்தி நிலையில் கடவுளுடன் ஒன்றுகின்ற இத்தகைய ஒரு மரபு மிகச் சிறப்பான ஒன்று. இதனைக் கவிஞர் மறக்காமல் தமது அகவலில் போற்றியுள்ளோர்.

விண்ணுலகம் கடவுளைத் துதித்தல்: விண்ணகத்தில் வீற்றி ருக்கும் இறைவனை, விண்ணகத்து முனிவர் [பரிசுத்தவான்கள்] தூதர் முதலானோர் போற்றுவதை ஆசிரியர் கூறுகிறார். தவநிலையில் முதிர்ந்த இவர்கள் இரவும் பகலும் எல்லா நேரமும், மகிமையும், புகழும், துதியும் எல்லாம் வல்ல எங்கள் தந்தையே உமக்கு உண்டாகுக! என்று போற்றுவதாகக் கூறுகிறார். கிறித்துவர்கள் கோயில் வழிபாட்டில் பல விதப் பிராத்தனை களை ஒருங்கிருந்து ஓதுவதுண்டு. அவர்கள் கூறுகின்ற பிரார்த் தனைகளில் ஒரு சில வற்றின் தாக்குறவைப் பின் வரும் கண்ணி களில் காணலாம்.

எல்லாம் வல்ல எந்தா யுனக்கென்
றல்லாய்ப் பகலாய அனவரத மும்தொழ(ப்) — பா. 30

பானுமின் மினியெனப் பரந்தொளி கிளர்ந்த
வானக வாணரும் மாபெருந் தூதரும் — பா. 31

அதிபாரி சுத்தர்! அதிபாரி சுத்தர்!
அதிபாரி சுத்தர் என் றகமகிழ்ந் தேத்த — பா. 33

கடவுளின் தெய்வீக நலன்களைக் கூறிக் கவிஞர் போற்றுதல்: இறுதியாக வருகின்ற 15 கண்ணிகளில் இறைவனது தெய்வீக நலன்கள் போற்றப்படுகின்றன. இதிலிருந்து தான் போற்றி மாலையே தொடங்குகிறது. விண்ணகத்தில் வீற்றிருக்கும் இறைவனை அவரது தெய்வீக நலன்களைக் கூறிக் கவிஞர் போற்றுகிறார். உயிர்கள் சென்றடையக் கூடிய இலக்காக விளங்குபவர்; நல்லதையே நாளும் தமது தொழிலாகக் கொள்ளக் கூடியவர்; கடவுள் ஒருவரேயாயினும் தந்தை, மகன், பரிசுத்த ஆவி என மூவராய் இருக்கின்றவர்; அனைத்து உயிர்கள் மீதும் கருணை பாராட்டுபவர்; மண்ணுலக மக்களுக்காக மனமிரங்கி அருள்புரியக் கூடியவர்; தேவாதி தேவனிலும் சிறந்தவர்: வேதத்தின் வாயிலாக விளங்குபவர்; மக்களின் மொழியாகவும் விளக்கின் ஒலியாகவும் திகழ்பவர்; சிறப்புக்குரிய ஆசனத்தில் வீற்றிருப்பவர்; இம்மண்ணுலக மக்களைக் காக்கும் பொருட்டு தம் ஒப்பற்ற திருப்புதல்வராகிய இயேசுவை மண்ணுலகுக்கு அனுப்பிவைத்தவர்; குற்றமற்ற வேதத்தினை மண்ணுலக மக்களுக்காக வெளிப்படுத்தி அதனை முறையாக வகுத்து வழி வழியாகக் காத்து வருபவர்; மக்களைத் தீவினையில் இருந்து மீட்பவர்; மெய்வழி காட்டக்கூடிய வித்தகர் என்று கடவுளின் தெய்வீக நலன்களைப் பாராட்டிப் போற்றுகிறார். திருஅகவலின் இறுதியில் தாயினும் மேலான இறைவனின் பேருபகாரத்தினை மறந்து வாழ்பவர்கள் நாயினும் கடையானவர்கள் என்கிறார்.

நிறைவுரை

இறைவன் மூன்றில் ஒன்றாய் விளங்கும் திரித்துவக் கோட்பாடு கிறித்துவத்தின் தலையாய கோட்பாடு ஆகும். கிறித்துவ சமயம் கடவுள் ஒருவரே என்றாலும் அவர் பிதா, சுதன், பரிசுத்தஆவி ஆகிய மூன்றுமாயிருக்கிறார் என்பதைக் கொண்டது. இது கிறித்துவத் திருமறையின் போதனையும் சத்தியமுமாகும். கிறித்துவ சிந்தாந்தத்தில் திரித்துவம் என்பது விசுவாசத்தின் மணிமுடியாக விளங்குகிறது. இந்தத் திரித்து வத்தை இரட்சணிய மனோகரத்தில் உள்ள போற்றித் திருஅகவல் எடுத்துக்காட்டுகிறது.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாடும் அதில் முத்தாரம்மன் வழிபாடு பெற்றுள்ள இடமும்

இரா. சுதமதி
கோவிந்தம்மாள் கல்லூரி
திருச்செந்தூர்

முன்னுரை: இயற்கையின் ஆற்றலைக்கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். அதன் அடிப்படையில் இயற்கை வழிபாடுகளும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பலிகள் தருவதன் மூலம் இயற்கையினை வயப்படுத்திவிடலாம் என்ற அடிப்படையில் விழாக்களும் கொண்டாட்டங்களும் தோன்றின. இயற்கை இடமும், மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணமாகும். நாட்டுப்புற மக்களிடையே இன்றும் இயற்கை வழிபாட்டைக் காணலாம்.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு: நாட்டுப்புறத் தெய்வங் களைத்தான் சிறு தெய்வங்கள் என அழைக்கிறோம். குடும்பம் தெய்வ வழிபாடும். குல தெய்வ வழிபாடும், ஊர்த் தெய்வ வழிபாடும் இவற்றில் அடங்கும். ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குலத்திற்கும் ஒரு தெய்வம் உண்டு. சில நேரங்களில் செல்வாக்கு மிக்க குல தெய்வம் ஊர்த் தெய்வமாகவும், பின்னர் பல ஊர்த் தெய்வ மாகவும், மாறுவதுண்டு சிறு தெய்வங்கள் வேதக்கடவுளோடு பெரும்பாலும் தொடர்பு கொள்ளாதவை. பூசை திருவிழா முதலியவற்றில் திட்டவட்டமான வரையறை கிடையாது. கோவில் போன்ற அமைப்பும் கிடையாது. அச்சத்தின் காரண மாகவும், வளமைக்காகவும், அம்மை போன்ற நோய்களைத் தடுக்கவும் நாட்டுப்புறத் தெய்வங்களை வழிபடுகின்றனர். சிறு

தெய்வங்களில் மாரியம்மன், அய்யனார் போன்றவை பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

பெண் தெய்வ வழிபாடு: டாக்டர். சு. சக்திவேல் நாட்டுப் புறத் தெய்வங்களை ஐந்தாக வகைப்படுத்துகின்றார்.

1. ஆண் தெய்வங்கள் 2. பெண் தெய்வங்கள் 3. குல தெய்வங்கள் 4. சாதித் தெய்வங்கள் 5. ஊர்த் தெய்வங்கள்.

நாட்டுப்புறத் தெய்வங்களில் வேளாண்மையோடு தொடர்புடைய பெண் தெய்வங்கள் தான் அதிகம்.

பழந்தமிழகத்தின் பெண் தெய்வ வழிபாடு குறித்துத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் ஆகியவை சான்று பகருகின்றன. கொற்றவை பழந்தமிழரின் வெற்றித் தெய்வமாக வழிபடப்பட்டதைத் தொல்காப்பியம் கூறும். சங்க இலக்கியங்களும் பழையோள், நாடுகிழபோர் விறல்கெழு சூலி, துணங்கை என்றும் கொற்றவை வழிபாட்டைக் கூறுகின்றன. சிலப்பதிகாரம் கொற்றவை வழிபாட்டின் ஒரு திருப்புமுனை என்றே கூறலாம். இப்பழந்தமிழ் இலக்கியங்கள் பெண் தெய்வ வழிபாட்டில் தேவியைப் பரம்பொருளாக முழு முதலாகக் கொண்டு வளர்ந்த வளர்ச்சி நிலையைக் காட்டுகின்றன. பெண் தெய்வ வழிபாடே மிகப் பழமையான வழிபாடாக இருந்தமையை இன்றும் கிராமங்களில் மாரியம்மன், முத்தாரம்மன், எல்லையம்மன் போன்ற தெய்வங்களே முதன்மை இடத்தில் இருக்க சுடலை, சாத்தான் முதலிய ஆண் தெய்வங்கள் காவலர்களாகவும், ஏவலர்களாகவும் இருந்து வருகின்றமையால் அறியலாம். இவ்வாறு அம்மன் வழிபாடு இன்று உயர்ந்த வழிபாடாகச் சிறப்பு நிலையை அடைந்துள்ளது.

முத்தாரம்மன் வழிபாடு: அம்மன் வழிபாட்டில், குறிப்பாக தமிழகத்தின் தென்மாவட்டங்களில் முத்தாரம்மன் வழிபாடு பெரும் சிறப்பு பெற்றுத் திகழ்கிறது.

முத்தாரம்மன் பெயர்ச் சிறப்புக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. 'பாண்டிய நாட்டில் சிறப்புற்று விளங்குவது முத்துக்கள். பாண்டிய மன்னர்கள் முத்துக்களைக் குளித்து தேவியாக வழிபட்டனர். அம்முத்துக்கள் அம்பாளாகத் திருமேனி கொண்டன. முத்துக்கிளிலிருந்து தேவி உதித்ததால் முத்தாரம்மன் என்று அழைக்கப்பட்டாள்' என்றும், 'முத்து + ஆற்று + அம்மன்

அதாவது உடலில் தோன்றும் முத்துக்களை ஆற்றுவதால் முத்தாற்று அம்மன் எனப்பட்டு பின்னர் அதுவே முத்தாரம்மன் என்றும் வழங்கலாயிற்று என்றும் கூறுவர்.

முத்தாரம்மன் தென்பாண்டி நாட்டில் உள்ள உழவர் பெருமக்களால் வணங்கப்படும் தெய்வம். சில சிற்றூர்களில் இவளுக்குப் பெரிய கோயிலும், தேரும், திருவிழாவும் உண்டு. இவள் பிறப்பு 'முத்தாரம்மன் வில்லுப்பாட்டில்' சொல்லப் படுகிறது.

'ஏழ்கடலுக்கும் அப்பாலுள்ள மணிநாகப்புற்றிலுள்ள நாகம் மூன்று முட்டைகளிட்டது. பார்வதியின் அருளால் முட்டை களிலிருந்து மூன்று பெண்கள் தோன்றினர். அவர்கள் பிரம்மராக்கு சக்தி, சின்ன முத்தார், பெரிய முத்தார் என்பவர்கள். அவர்கள் மூவரும் தவம் செய்து சக்தி முனியின் அருளால் குழந்தைகள் பெற்றார்கள். அனைவரையும் அழைத்துக் கொண்டு போய் கயிலையில் சிவபெருமானை வணங்கினர். நாட்டிலுள்ள கொடுமைகளை அழிப்பதற்கு மூவரும் கொடும் வியாதிகளை வரமாகக் கேட்டார்கள். பிரம்ம ராக்கு சக்திக்குக் குணமாகாத பல நோய்களையும், சின்ன முத்தாருக்கும் பெரிய முத்தாருக்கும் சின்னம்மை, பெரியம்மை என்ற வியாதிகளையும் கயிலையங் கடவுள் வரமாக அளித்தார். இவ்வாறு கொடிய நோய்களை உண்டாக்கும் சக்தி பெற்ற மூன்று சகோதரிகளும், தமிழ் நாட்டிலே வந்து குடியேறி கொடியவர்களைத் தண்டிக்கப் பரமசிவனுடைய வரங்களைப் பயன்படுத்தி வருகிறார்களாம். முத்தாரம்மன் தென்பாண்டி நாட்டிலுள்ள ஒவ்வொரு ஊரிலும் கோயில் கொண்டிருக்கிறாள். இவள் தீயவர்களைக் கொடு நோயால் தண்டிப்பாள். நல்லவர்களை வாழ்த்தி வரம் கொடுப்பாள்:

இவள் பார்வையில் உடலில் முத்துக்கள் ஆயிரக் கணக்கில் தோன்றுவதால் ஆயிரத்தம்மன் என்றும், மாரியோடு கலந்து விட்டதால் முத்துமாரி என்றும், தேசம் முழுவதும் பரவியிருப் பதால் தேச முத்துமாரி என்றும் பல பெயர்கள் வழங்குகின்றன. நவராத்திரி உற்சவத்தின்போது இவள் சிம்ம வாகனத்தில் ஏறி வருவாள். பெண்கள் இவள் புகழ் பாடிக் கும்மியடிப்பார்கள்.

கோயில் அமைப்பு: பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வக் கோயில்கள் பீடங்களாகவே அமைந்துள்ளன. பீடங்களே கோயில்களாகக் கருதப்படுகின்றன. பொதுவாகத் தென்

மாவட்டங்களில் சிறிய கிராமங்களில் காணப்படும் முத்தாரம்மன் கோயிலின் அமைப்பு ஒரே மாதிரியான அமைப்பில் காணப் படுகிறது.

முத்தாரம்மன் கோயில்கள் பெரும்பாலும் வடதிசை நோக்கியே அமைந்துள்ளன. சில ஊர்களில் ஆகம விதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை, முன்மண்டபம், கொடிக்கம்பம், சுற்றுச்சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. உதாரண மாகச் சிதம்பரனார் மாவட்டம், குலசேகரன்பட்டினம், முத்தாரம்மன் கோயிலும் குரங்கணி முத்துமாலையம்மன் கோயிலும் இவ்வாறு அமைந்துள்ளன. பல ஊர்களில் இவ்வமைப்பு இல்லை. பிரகாரங்கள் கிடையாது. பலிபீடம் மட்டுமே அமைந்துள்ளது. கொடிமரம், மகாமண்டபம் இவை இல்லை. முத்தாரம்மன் கோயில்களில் துணைத் தெய்வங்களாக மாடன், விநாயகர் போன்ற தெய்வங்களின் சிலைகளே பெரும் பாலும் அமைந்துள்ளன.

உருவ அமைப்பு: முத்தாரம்மன் உருவச் சிலைகள் பெரும் பாலும் கல்லால் அமைக்கப்பட்ட வடிவத்திலேயே அமைந் துள்ளன. அமர்ந்திருக்கும் கோலத்தில், பல கோயில்களில் சாந்தமாகவும், சில கோயில்களில் சினம் கொண்ட தோற்றத் திலும் அம்மனின் வடிவம் காணப்படுகிறது. பொதுவாக எல்லாக் கோயில்களிலும் அம்மன் நான்கு கைகளுடன் காட்சி தருகின்றாள். கைகளில் சூலம், உடுக்கை, விபூதிக் கொப்பரை ஆகியவற்றை ஏந்தியுள்ளாள். இவற்றோடு நாகத்தையும் ஏந்தி யிருக்கும் முத்தாரம்மனை 'சிவசக்தி' என்றும், சங்கினை ஏந்தி யிருந்தால் 'விஷ்ணுதுர்க்கை' என்றும் கூறுகின்றனர். உதாரண மாகச் சிதம்பரனார் மாவட்டம் மாவடிப்பண்ணை கிராமத்தைச் சேர்ந்த முத்தாரம்மன் கோயிலில் அம்மன் சூலம், விபூதிக் கொப்பரை, உடுக்கை இவற்றோடு நாகத்தையும் வைத்துள்ளாள். இவளைச் 'சிவசக்தி' என்று மக்கள் கூறுகின்றனர்.

சிதம்பரனார் மாவட்டம் குரங்கணி என்ற ஊரைச் சேர்ந்த முத்துமாலையம்மன் கோயிலில் அம்மன் சூலாயுதத்தோடு சங்கும் சக்கரமும் ஏந்தியுள்ளாள். இவள் விஷ்ணு துர்க்கையவாள்.

அம்மன் மட்டும் கருவறைத் தெய்வமாய் வீற்றிருக்கும் கோலமே தென்மாவட்ட கோயில்களில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. ஆனால் அவள் சுவாமி ஞான முர்த்திஸ்வர

ரோடுவீரப்பல் புனைந்து வீற்றிருக்கும் கோலத்தைச் சிதம்பரனார் மாவட்டம் குலசேகரன்பட்டினம் என்ற ஊரில் மட்டுமே காண முடியும்.

வழிபாட்டு முறை: முத்தாரம்மன் கோயில்களிலும் நாட்டுப் புற பிற தெய்வக் கோயில்களிலும் கொண்டாடப்படும் விழாவைத் தென் மாவட்டங்களில் 'கொடை' என்று அழைப்பர். ஆண் தெய்வங்களுக்கு வெள்ளிக்கிழமையும், பெண் தெய்வங்களுக்குச் செவ்வாய்க்கிழமையும் கொடை நடைபெறுகிறது. முத்தாரம்மன் கோயில் கொடை விழா, ஊர்க்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு கால்நட்டு, விரதமிருந்து, காப்பு கட்டி, கொடை விழா நடந்து, பின் படைப்பு படைக்கப்பட்டு நிறைவுறும். காணிக்கை செலுத்துதல், காவடி எடுத்தல், பால் குடம் எடுத்தல், மாவிளக்குப் பெட்டி எடுத்தல், முளைப்பாரி எடுத்தல், மிருகங் நேர்ந்து விடல் போன்ற சடங்குகளும் உண்டு.

சிதம்பரனார் மாவட்டத்தின் தென்பகுதியில் முத்தாரம்மன் விழாவை நாடார் சமூகத்தைச் சார்ந்தவர்களே பெரும்பான்மை கொண்டாடுகின்றனர். தேவர், பிள்ளைமார், பறையர், சக்கிலியர் போன்ற சமூகத்தைச் சார்ந்தவர்களும் வழிபடும் கோயில்கள் ஒரு சிலவே உள்ளன. அவ்வாறு பல சாதியினர் சேர்ந்து வழி படும் இடங்களில் கொடை விழா தனித்தனியாய் நடைபெறுவ தில்லை. ஒரே கொடை விழாவாகத்தான் கொண்டாடப்படு கின்றது.

முடிவுரை: பொதுவாகச் சிறு தெய்வ வழிபாட்டை மனித உணர்வுகளோடு ஒன்றி விளங்கும் வழிபாடாகக் காணலாம். 'நாட்டுப்புறத் தெய்வங்கள் கிராம மக்களோடு ஒன்றிக் காணப் படும் சக்தியாக விளங்குவதோடல்லாமல், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக் கொடுப்பதால் கிராமப் புறத் தெய்வங்கள் அன்றாடம் நினைத்து வழிபடப்படுகின்றன. அதனால் இங்கு கிராமப்புறத் தெய்வங்கள், கிராம மக்களுக்கு ஒரு பாதுகாவலாக வழிகாட்டியாக இணைந்து காணப்படு கின்றன என டாக்டர் கைலாசபதி கூறுவது சிந்திக்கத்தக்கது. இவ்வகையில் முத்தாரம்மன் வழிபாடும் கிராமப்புறத் தெய்வ வழிபாடாகச் சிறந்து விளங்குகிறது. இவ்வழிபாடு மனித உணர்வின் அடிப்படையில் தோன்றிய வழிபாடாகும். மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுவது. சமூக ஒற்றுமைக்கும் கலை வளர்ச்சிக்கும் பெருமளவில் இவ்வழிபாடு பயன்படுகிறது. சில ஊர்களில் இவ்வழிபாடு பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்வதும் சிந்திக்கத்தக்கதாகும்.

□ 673 □

'எழுத்தோரன்ன' கோட்பாடும் குற்றியலிகரமும்

மு. சுதர்சன்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி 605 001

'அகரமுத(ல்) னகர விறுவாய் முப்பஃதும் **எழுத்து**' என்று குறிப்பிடும் தொல்காப்பியர் குற்றியலிகரத்தை **'எழுத்தோரன்ன'** வகையில் அடக்குகின்றார். இதற்கு அவர் சில வரையறைகளை மனத்திற் கொண்டிருக்கிறார். அவருடைய வரையறைகள் தெளிவாகப் புலப்படாத காரணத்தால் பின் வந்த இலக்கணத் துறையினர் 'சார்பெழுத்து' என்ற பெயரில் தத்தம் கருத்து களைத் தொல்காப்பியத்தில் புகுத்தியதோடு அதிலிருந்து விலகியும் சென்றுள்ளனர். தொல்காப்பிய நூற்பாக்களையும் பிற சான்றுகளையும் கொண்டு குற்றியலிகரத்தினையும் எழுத்தோரன்ன கோட்பாட்டினையும் இனங்காணும் முயற்சியின் வெளிப்பாடே இக்கட்டுரை.

'சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங்கோல் ஆகாது, அதுபோல உகரங்கள் குறுகினவிடத்தும் அவை உயிராகற்பாலன, அவற்றைப் புணர்ச்சிவேற்றுமையும் பொருள்வேற்றுமையும் நோக்கி வேறெழுத்தென்று வேண்டினரென உணர்க' என்ற உரையில் குறுக்கம் பற்றிய காரணத்தை முதன்மையாக எடுத்துக் கொண்ட நன்னூல் முதலான இலக்கண ஆசிரியர்கள் சார்பெழுத்துத் தொகையை மிகுந்து எழுதினர்.

குற்றியலிகரம் இகரத்தின் குறுக்கமன்று. பிறப்பே குறுக்கம் தான் என்பது சிவஞானமுனிவர் கருத்து. எனவேதான் (முதல்) எழுத்திலிருந்து குறுகிய ஐகார மகரக் குறுக்கங்களைப் பற்றிப் பேசியபோதும் (நூற்பா. நூன். 13, மொழி. 57) தொல்காப்பியர் அவற்றை 'எழுத்தோரன்ன' வகைப்பாட்டிற்குள் அடக்கவில்லை

என்பது சிவஞானமுனிவர் வாதம். குறுக்கம் மட்டும் அன்று தொல்காப்பிய உரையாசிரியர்கள் சுட்டும் 'புணர்ச்சி வேறுபாடும் பொருள்வேறுபாடும்' கூட அடிப்படை என்பதைப் பேராசிரியர் செ. வை. சண்முகம் எடுத்துக்காட்டுகின்றார். (எழுத்திலக்கணக் கோட்பாடு, ப. 126).

முற்றிய லுகரமொடு **பொருள்வேறு படாஅது**
அப்பெயர் மருங்கின் நிலையிய லான (மொழி. 35)

என்பதிலிருந்து தொல்காப்பியர் 'எழுத்தோரன்ன' கோட்பாட்டிற்குப் பொருள்வேறுபாட்டையும் (ஒலியனியல்) கருதியுள்ளமை புலனாகும். இதற்கு முந்தைய நூற்பாவில் ஒலியியல் நோக்கில் கூறப்பட்ட 'நுந்தை' சொல்முதலில் வருவதைவிடவும் பொருள் வேறுபாடு இன்மை பற்றியே குற்றியலுகரமாகப் பிற்காலத்தில் ஏற்கப்படவில்லை.

காட்டியாத்தான் < காட்டின்கண் யாத்தான் கு. இகரம் 'காட்டு'
காண்பித்து யாத்தான்-இகரம் 'காட்டி'

நாடியது < நாடு + யாது—தேசம்—கு.இகரம்
நாடி + யாது—தாது —இகரம்

திரு. கோபாலய்யர், பேராசிரியர் சோ.ந. கந்தசாமி ஆகியோரின் காட்டுகளை எடுத்துத்தரும் பேரா. செ. வை. சண்முகம் இவற்றில் புணர்ச்சிவேறுபாடு இல்லையென மறுக்கிறார். "நிலைமொழியிலேயே குற்றியலிகரமும் முற்றியலிகரமும் நின்று, புணர்ச்சி மாறுபட்டால்தான் புணர்ச்சிவேறுபாடு உடையதாகக் கருத முடியும்" என்கிறார் (ப. 79).

வருமொழி முதலைச் சார்ந்த ஒலியும் (குற்றியலிகரமும்), நிலைமொழியீற்று ஒலியும் (இகரம்) நிலைமொழியில் வந்தால் தான் அதனைப் புணர்ச்சி வேறுபாடுள்ளதாக ஏற்கமுடியும் என்று பேரா. செ. வை. சண்முகம் விரும்புவது இயலாததும் பொருந்தாததும் ஆகும்.

அவரே வருணனை மொழியியலார் அடிப்படையில் எடுத்துக் காட்டும் (ப. 80) **குன்றியாது** போன்ற உதாரணங்கள் குற்றியலிகரமாயும் (குன்று + யாது), முற்றியலிகரமாயும் குன்றி + யாது) வருவதால் அவை குறைந்தபட்ச இணைச்சொற்கள் (minimal pair). எனவே இரண்டும் தனித்தனி ஒலியன்கள்.

முன்னோக்கி இயைதல் (Progressive Assimilation) 'இயர்' என்பதுதான் தொல்பழஞ்சொல் என்று கூறுவாருமுளர்' ஆகியவற்றை எடுத்துக்காட்டும் பேராசிரியர் சோ. ந. கந்தசாமி

''குற்றியலுகரத்தின் ஒலிமாற்றம் குற்றியலிகரம்'' என்ற முடிவுடன் நின்றுவிடுகிறார்.

குற்றியலிகரம் தொடர்பாகத் தொல்காப்பியத்தில் ஏழு நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் மொழிமரபு - 1, 2 குற். புணரியல். 5 ஆகிய மூன்றும் சிறப்பு நூற்பாக்கள். பிற நூற்பாக்களில் 'சார்ந்து பிறப்பது–தனித்தியங்கும் இயல்பற்றது–அரை மாத்திரை அளவினது-புள்ளிபெறுவது' - எனும் செய்திகள் பேசப்படுகின்றன. சிறப்பு நூற்பாக்கள் குற்றியலிகரம் யகரத் திற்கு முன்பாக மட்டுமே வரும் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றன.

'குற்றியலிகரம் நிற்றல் வேண்டும் யாவென் சினைமிசை' என்பதை நிரலான சிறப்புவிதி என்றே குறிப்பிடலாம். மற்ற இரண்டு நூற்பாக்களிலும் வரும் குறுகும் குறுகல் எனும் ஆட்சி களுக்குச் சிவஞானமுனிவர் கூறும் 'நெருங்கித் தோன்றும்' என்ற பொருளைக் காண்பதே அளவில் குறைந்தொலிக்கும் என்பதை விடப் பொருந்துவதாகும்.

மொழிமரபு முதல் நூற்பாவின் 'கேண்மியா' வேங்கடராசுலு ரெட்டியார் (எழுத்ததிகார ஆராய்ச்சி ப. 36) குறிப்பிடுவதுபோல் பகுபதமே. கேளும் + ஐயா என்பது கேள்ம் + ஐயா → 'கேண்ம் + யா' → கேண்மியா எனத் திரிந்து உரையசைக்கிளவி என்ற பெயரில் தொல்காப்பியர் கால இலக்கிய/இலக்கணத்தில் இடம் பெற்றுவிட்டிருக்க வேண்டும். சொல் வரலாற்றைவிட **உரையசைக் கிளவி**'யாகக் குறிப்பிடப்பட்டுவிட்ட அச்சொல்லில் இடம்பெறும் குற்றியலிகரத்தின் **ஒலிநிலையைச் சரியாகச்** சுட்டிக்காட்டுவதற் காகவும் குற்றியலுகரத்தை நிலைமொழியாகக் கொள்ளாமலும் கூடக் குற்றியலிகரம் வரும் என்பதைக் காட்டுவதற்காகவும் தொல்காப்பியர் இந்நூற்பாவைப் பயன்படுத்திக் கொண்டிருக் கிறார். மேலே கூறியதுபோல் தொடக்கவரியில் சிறப்புவிதியையும் கூறிவிடுகிறார். உரையாசிரியர்கள் உரையசைக்கிளவி எது என்பதில் திசைமாறியது போலவே நூற்பாவின் கருத்திலும் திசைமாறினர். ''புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே'' என்பதில் வரும் உம்மை புணர்ச்சியில் குற்றியலிகரம் 'வெளிப் படலாம் வெளிப்படாமலும் போகலாம்' என்பதைச் சுட்டு கின்றது. [(முதல்) எழுத்தின் மாத்திரைக் குறுக்கம் என்பார் கருத்துப்படி இங்கே அளவு குறுகியும் ஒலிக்கலாம் என்று

பொருளுரைக்க முடியாது என்பதும் நினையத்தக்கது]. எனவே தொல்காப்பியர் காலத்திலேயே குற்றியலிகரம் புணர்ச்சியில் சில இடங்களில் பதிவாகியும் சில இடங்களில் நெகிழவிடப்பட்டும் இருக்கலாம் என்பது தெரிகிறது. குற்றியலிகரம் துணை ஒலியாய்ப் புதைநிலையில் இருப்பதே இதற்குரிய காரணம். இன்றைய மொழியியலார் குறிப்பிடும் தொடக்க ஒலித்துணை ஒலியாக (Onglide) (David Crystal, The Cambridge Encyclopaedia of Language - P. 421) இகரம் யகரத்திற்கு முன் இடம்பெற்றுள்ளது. இது பொருளோடு புணர்ச்சிவேற்றுமையை ஏற்படுத்தினாலும் தனிஒலியனா எழுத இயலாத நிலை நிலவுவதைத் தொல் காப்பியர் உணர்ந்திருக்கிறார். **எழுத்து** நிலை (ஒலியன்) வழங்கினால் 'இயா' என எழுதப்பட்டு யகரம் ஒலியன் நிலையை இழக்கும். இது மேல்வரி ஒலியன்போல் செயல்படுகின்றமையைப் புள்ளியிட்டு எழுதப்படும் மரபுக்குறியீட்டின் வழி அறியலாம். எனவே 'எழுத்தோரன்ன' கோட்பாட்டை உருவாக்கி அதில் அடக்கினார்.

இனி "'இயா' என்ற தொடர் சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை (கலித்தொகை தவிர) கிடையாது" எனும் பேரா. செ. வை. சண்முகம் அவர்களின் கருத்துத் (ப. 83) தவறானது; குறைபாடுடையது.

ஊர்துஞ்**சி யா**மமும் (குறுந். 32 : 2)
நன்மயில் வலைப்பட் டாங்**கியா**ம் (244:5)
சி**றியா**ழ் (மதுரைக். 569)
ஓ**ரியா**ன் மன்ற (குறுந். 3:4 பாட வேறுபாடு)
ஆ**ரிய**ர் கயிறாடு பறையின் (7:3)
பே**ரியா**க்கை (திருமுரு. 57)
குரூஉ மயி**ரி யா**க்கை (313)
பே**ரியா**ழ் (பெரும். 462).

தொல்காப்பிய நூற்பாவிலேயே 'நல்லியாழ்' என்ற ஆட்சி இடம் பெற்றுள்ளது. மேற்கண்டவற்றுள் குற்றியலுகரம் அல்லாத (நிலைமொழி) சான்றுகளிலும் குற்றியலிகரம் வந்து உள்ளது. சில முற்றியலுகர ஈற்றின் திரியாகக் கருதத்தக்கன. 'ஆரியர்' தனிமொழி சார்ந்தது – வடசொல்லின் தமிழாக்கம். குற்றியலிகரம் தமிழியல்பு என்பது பெறப்படும். மயிரியாக்கை, நல்லியாழ், ஆகியன குற்றியலுகர முற்றியலுகர ஈறுகளுக்குள்

அடங்காதவை. 'பிணந்தின் யாக்கை' (பட்டினப். 260) புல்லென் யாக்கை (பெரும். 22) ஆகியன 'குறுகலும் உரித்தே' என்ற தொல்காப்பியவிதிப்படி நெருங்கித்தோன்றாத இடங்களுக்குரிய சான்றுகள்.

இனி நன்னூலார் 'தன்னொழி மெய்முன் யவ்வரின் இகரந் துன்னும்' (மெய். 206) என்றுகூறி மண்ணியானை ஆகிய சான்றுகளில் வருதி இகரம் சாரியை என்று கூறுவது ஒரு நிலைப்பட்ட இகரத்திற்குத் தரும் மறுநிலை விளக்கமாகும். இடையண்ண இகரஒலியில் இடையண்ண இகரம் கலந்துவிடும் ஆதலால் அவர் 'தன்னொழி மெய்முன்' என்றது ஒலியியல் கருத்தறிந்த செய்தியே. 'வறுமை யாழ்ப்பாணர்' (குறுந். 19:1) என்பதன் நிலைமொழியீறு ஒத்தஒலி பெற்றதால் குற்றியலிகரம் வெளிப்படவில்லை.

குற்றியலிகரம் சரியாக ஒலிக்கப்படாத காரணத்தாலேயே யானு, யாண்டு, யாடு, யாமை, ஆகிய பெயர்களில் யகர இழப்பு நேரிட்டது. யாது, யாவை முதலாம் வினாச் சொற்களில் எகரப் பேறு ஏற்பட்டது.

யகரத்தின் தொடக்க ஒலித்துணையாக அமையும் இகரம் பிறப்பிலேயே மாத்திரையிற் குறைந்து புதைநிலையில் இருந்து புணர்ச்சியில் மட்டும் வெளிப்படுகின்றது. புணர்ச்சியில் பொருள் வேறுபாடு செய்யும் இதனை எழுத்தாகவும் கொள்ளாமல் வெற்றொலியாகப் புறக்கணிக்கவும் இயலாமல் 'எழுத்தோரன்ன' நிலையினது எனத் தொல்காப்பியர் பகுத்தார் என முடிவுரைக் கலாம்.

ஆண்டி கண்டியபத்தேவர் வழிபாடு

சி. சுந்தரேசன்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005

தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் கருக்காடிப் பட்டி என்ற கிராமம் உள்ளது. இக்கிராமம் பத்தை, காரப் பத்தை, கருக்காடிப்பத்தை என்றெல்லாம் பெயர் வழங்கிவந்து தற்போது கருக்காடிப்பட்டி என்றழைக்கப்படுகிறது. இங்கு மிகப் பெரும்பான்மையாகக் கள்ளரின மக்களின் கண்டியர் என்ற பட்டப் பெயர் கொண்டவர்களே உள்ளனர். இவர்களைச் சார்ந்து செட்டியார், வலையர், ஆதிதிராவிடர் முதலானவர் களும் உள்ளனர். இவர்கள் ஆண்டி கண்டியத்தேவர், பெத்தாயி வளவாயி, மழவப்பன், முனியன், காளியம்மன் முதலான தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர்.

ஆண்டி கண்டியத்தேவர்: பல தலைமுறைகளுக்கு முன்னர் ஆண்டி கண்டியத்தேவர் மிகப் பெரிய செல்வாக்குடையவராக இருந்து ஊர்மக்களைக் காத்து வந்திருக்கிறார். அவரின் உதவி யாளராக நரியாண்டி என்ற ஆதிதிராவிடர் இருந்திருக்கிறார். குதிரைமேலிருந்து எருமைமாடுகளை மேய்ப்பது அவரது வழக்கம். ஒருநாள் பக்கத்து ஊரான தெக்கூரின் விசலுண்டாரின் பசு மாடுகள் இவரது எருமைக் கூட்டத்தில் சிக்கி இறக்கும் நிலைக்கு உள்ளாயின. அதனால் ஆத்திரம் கொண்ட விசலுண்டார் தேவரை ஏளனமாகப் பேசி அடித்தும் விட்டார். அதனால் கவலைக் கொண்ட தேவர் தமது எருமைமாடுகளை விற்றுவிட்டு, நரியாண்டியுடன் மேற்குச் சீமைக்குச் சென்று பசுமாடுகளை வாங்கி வந்தார்.

தேவரும் நரியாண்டியும் குதிரைகளில் வரும்போது பெத்தாயி, வளவாயி என்ற மேல்சாதியைச் சார்ந்த (வடுவப் பெண்கள்) சகோதரிகள் தண்ணீர் எடுத்து வந்தனர். அவர்களைப் பார்த்த

தேவர் தம் வில்லில் களிமண் உருண்டையை வைத்து அடித்து அவர்களின் குடத்தை ஓட்டையாக்கினார். இதனைப் பார்த்த நரியாண்டி தன் வில்லில் களிமண் உருண்டையை வைத்து அடித்து குடத்தின் ஓட்டையை அடைத்தார். இச்செயலைக் கண்டு வியந்து, பெத்தாயி ஓட்டையாக்கியவரைத் தான் மணந்து கொள்வதாகவும் ஓட்டையை அடைத்தவரைத் தான் மணந்து கொள்வதாகவும் கூறி அவர்களின் வருகைக்காகக் காத்திருக் கின்றனர். தேவரும் நரியாண்டியும் அருகில் வந்ததும் அவரவர் விருப்பத்தைத் தெரிவித்தனர். தேவர் உடனே பெத்தாயியைத் தனது குதிரையில் ஏற்றிக்கொண்டார். நரியாண்டி வளவாயியை ஏற்க மறுத்தார். தேவர் வற்புறுத்திய பின்னர் நரியாண்டி வளவாயியை ஏற்றிக் கொள்ள இருவரும் ஊருக்கு வந்தனர்.

பெத்தாயி - வளவாயி: தேவர் பெத்தாயிக்கு தாலிகட்டி ஊருக்கு மேற்குப்புறத்தில் குடி வைக்கிறார். அக்காளைத் தேவர் மணக்கத் தங்கையைத் தான் மணப்பது முறையல்ல, தன்னை விரும்பியதற்காக சீவனாம்சத்தைக் கொடுத்து நரியாண்டி ஒதுங்கிக் கொள்கிறார். அக்காள் தங்கை இருவரும் தேவ ருடனே இருக்கின்றனர். இவர்கள் தண்ணீர் எடுக்கச் செல்லும் போதும் பிறபொது இடங்களுக்குச் செல்லும்போதும் ஊர்ப் பெண்கள் ஏளனமாகப் பேசுகின்றனர். தேவரிடம் முறையீடு செய்கின்றனர். தேவரும் இழிவாகப் பேசியப் பெண்களுக்கு என்ன தண்டனை அளிக்கலாம் என்று அவ்விருவரையும் கேட்கின்றார்.

வளவாயியும் பெத்தாயும் ஒருமனதாகத் தம்மை இழிவாகப் பேசியப் பெண்கள் இனிமேல் மூக்குத்தி, வளையல் அணியக் கூடாது. காதில் பூச்சிக்கூடுதான் போட வேண்டும். தங்களுக்கும் அப்பெண்களுக்கும் பார்த்தவுடனே வேறுபாடு தெரிய வேண்டும் என்கின்றனர். தேவரும் ஊர்மக்களைக் கூப்பிட்டு கட்டுப்பாடு விதிக்கின்றார். அவர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

தாதன் பள்ளம்: தேவரும் நரியாண்டியும் பசுக்களை மேய்த்துக் கொண்டிருக்கும்போது பொறாமைக் கொண்ட விசலுண்டார் தேவர் மீது அம்பை எய்துவிடுகிறார். அம்பைப் பிடுங்க வந்த நரியாண்டியைத் தடுத்து உடனே தாதர்களை அழைத்துவந்து நாடகம் போடச்சொல்கிறார். நாடகம் பார்த்தத் தேவர் அந்த இடங்களை நடித்தத் தாதர்களுக்கே இலவசமாக

வழங்குகின்றார். அந்த இடம் இன்றும் தாதன் பள்ளம் என்று அவர்களுக்கே சொந்தமாக இருக்கிறது.

தேவர்-நரியாண்டி மறைவு: தேவர் மார்பிலிருந்த அம்பைப் பிடுங்க உயிர் பிரிகிறது. மக்கள் ஊர் மரியாதையுடன் அடக்கம் செய்கின்றனர். தேவர் பயன்படுத்தும் அரிவாளை நரியாண்டி எடுத்துக்கொண்டு, தெக்கூர் சென்று விசலுண்டாரை வெட்டிக் கொல்கிறான். ஊர் மக்கள் விரட்ட தம்மூர்வந்து தாழங் கட்டையில் தூக்குமாட்டிக் கொண்டு இறக்கிறான்.

பெத்தாயி வளவாயி மறைவு: தேவர் மறைவிலிருந்தே அன்னம் தண்ணீர் சாப்பிடாமலிருந்த இவ்விரு பெண்களும் நரியாண்டி மறைந்த மறுநாளே இறந்து விடுகின்றனர் இவர் களது மறைவினால் ஊர் மக்கள் மிகவும் கலக்கமுற்று அவர் களைத் தெய்வமாகக் கருதத் தொடங்குகின்றனர்.

தெய்வமாக்கல்: ஊர்மக்கள் தேவர், நரியாண்டி, பெத்தாயி, வளவாயி ஆகியோர்களின் செயல்பாடுகளினால் அவர்களைத் தெய்வமாக ஏற்றுக்கொண்டு தேவர் மாண்ட இடத்தில் கோவில் கட்டியிருக்கின்றனர். தேவரை மய்யத்தில் வைத்து அவருக்கு இருபுறமும் பெத்தாயி, வளவாயியை வைத்திருக்கிறார்கள். கோவிலுக்கு வெளியே நரியாண்டிக்கு வளைவு கட்டி வைத்திருக் கிறார்கள். தம்மூர் மக்களை நோய் தாக்காமல், பஞ்சம்வராமல், கால்நடைகள் நன்றாக இருக்கவும் விளைச்சல் பெருகவும் தேவரையும் பெத்தாயி, வளவாயி நரியாண்டியையும் வழிபடத் தொடங்கினர். தேவர் போட்ட உத்தரவான மூக்குத்தி, வளையல், தோடு முதலியனவற்றைத் தொடர்ந்து நீக்கியிருக்கவும் உறுதி பூண்டனர்.

பச்சைப் பரப்பல்: கண்டியர் குடும்பங்களில் தீட்டு (சூதகம்) இல்லாத நாளில் 'ஊர் மக்கள் மற்றும் இவ்வூரிலிருந்து கட்டிக் கொடுத்த பெண்கள் சேர்ந்து மூட்டைக்கணக்கில் பச்சரிசி, வண்டிக்கணக்கில் தேங்காய், பழங்கள், கூடைக்கணக்கில் பூ முதலானவற்றைக் கொண்டு வந்து கோவிலுக்கு முன்னர் பச்சைப்பரப்பி [சமைக்காதப் பொருட்கள்] வழிபடுகின்றனர். முறைப்பாடு காரணமாகச் சில ஆண்டுகள் இடையில் நடை பெறாமலிருந்து பின்னர் நடந்திருக்கிறது. பத்தாண்டுகளாகப் பச்சைப்பரப்பல் வழிபாடு செய்யவில்லை. [முறைப்பாடு என்பது சாமி பெயரில் ஒருவருக்கொருவர் சத்தியம் செய்து கொள்வது].

பெட்டி சாமி: மாட்டுப் பொங்கலன்று இரவு வீட்டுச்சாமி என்ற பெயரில் பட்டவனாகத் தேவருக்கும் மற்றும் பெத்தாயி, வளவாயிக்கும் புதுத்துணிமணிகள் எடுத்து வைத்து முட்டை பெட்டை அடித்து, கருவாடு மற்றும் மீன் குழம்பு வைத்து சாமி கும்பிடுவர். பெட்டி சாமி என்ற பெயரில் இந்த மூன்று சாமிக்கும் மூன்று கரைகாரர்களின் முதன்மையாளர்களின் வீட்டில் பெட்டி சாமி கும்பிடுவர். சாமிகூடம் அல்லது சாமி அறையில் பழங் காலத்து மரப்பெட்டியில் ஆண்டுதோறும் எடுத்து வைத்து சாமிகும்பிடும் துணிமணிகள் இருக்கும். அந்தப் பெட்டியில் அம் மூன்று தெய்வங்களும் உறைந்து இருப்பதாகக் கொண்டு வழி பட்டு வருகின்றனர்.

கோவில் மரியாதை: தேவரைப் பெரியசாமி என்றே அழைக் கின்றனர். அவர் குடிகொண்டிருக்கும் கோவிலை அவர் பெயரால் அழைப்பதில்லை. அக்கோவிலுக்கு வடபுறம் ஆண்டிற்கு ஒரு முறை பச்சைக் கூடாரம் அடித்து வழிபாடு செய்யப்படும் மழவப்பன் சாமியின் பெயராலேயே மழவப்பன் கோவில் என்று மக்களால் அழைக்கப்படுகிறது. காரணம் கேட்டதற்குத் தேவரின் பெயரைச் சொல்லி அழைப்பது மரியாதைக் குறைவு என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கட்டுக்குதிரை: தேவருக்கு வேண்டிக்கொண்டு, தமது வேண்டுதல் நிறைவேறியதால் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் அய்யாவுக்கண்டியர் கோவிலுக்கெதிரில் மேற்கு முகமாகக் கட்டுக் குதிரை ஒன்றைக் கட்டித் தமது வேண்டுதலை நிறைவேற்றிருக் கிறார். முப்பதாண்டுகளுக்கு முன்னர் ஆண்டியப்பக்கண்டியர் ஒரு கட்டுக்குதிரை கட்டியிருக்கிறார். வேண்டுதலினால் செய்யப் படுவதை இசவுகாரவுங்க செய்தது என்கின்றனர்.

கட்டுப்பாடு: பல தலைமுறைகளுக்கு முன்னர் ஆண்டி கண்டியத்தேவரால் விதிக்கப்பட்ட ஆணையை ஏற்று அவர் பரம்பரையைச் (கண்டியர்) சார்ந்த பெண்கள் மூக்குத்தி அணிவ தில்லை. வளையல் போடுவதில்லை தோட்டிற்குப் பதிலாகக் குறவனைக் கொண்டு துளைக்காது கீறிக்கொண்டு பூச்சிக் கூடு என்று சொல்லப்படும் தண்டட்டி, நாவடம் அணிந்துள்ளனர். இளம்பெண்களும் துளைக்காதுடன் இப்போதும் சிலர் இருப்பதைக் காணமுடிகிறது. கையில் வளையல் இல்லாமல் காப்பாகப் பவுனில் அணிகின்றனர்.

கண்டியர் மட்டும் ஊரில் இருப்பதால் மணவுறுக்காக வெளியூரில் பெண் நிச்சயம் செய்தவுடனே அப்பெண் அணிந்திருக்கும் மூக்குத்தியைக் கழற்றிவிடுவர். வளையலை நீக்கித் துளைக்காதையும் ஏற்படுத்திக் கொள்வதும் நடைமுறையிலிருந்திருக்கிறது. அவ்வூரில் உள்ள மற்ற இனத்தவர்களான செட்டியார், வலையர், ஆதிதிராவிடர் முதலானவர்கள் எல்லா அணிகலன்களையும் அணிகின்றனர்.

தற்கால நடைமுறை: தற்போதும் கண்டியர் வீட்டுப் பெண்கள் மூக்குத்தி அணிவதில்லை இருபதாண்டுகளாச் சிலர் பவுன்தோடு போடத் தொடங்கி உள்ளனர். கல் தோடு போடுவதை முற்றிலும் தவிர்க்கின்றனர். இளம் பெண்கள் சிலர் பவுன் வளையல் அணிந்திருக்கின்றனர். ஆனால் கண்ணாடி இரப்பர் வளையல்கள் தவிர்க்கப்படுகின்றன. இவ்வூரிலிருந்து கட்டிக் கொடுத்தப் பெண்களில் பலர் மூக்குத்தி, வளையல், கல் தோடு அணிவதைத் தவிர்க்கின்றனர்.

மூக்குத்தி, வளையல், தோடு அணிந்தால் அவைகள் உடைந்து விடுவதும் காணாமல் போய்விடுவதும், தெரித்து விடுவதும் நிகழ்கிறது என்று கூறுகின்றனர்.

மூக்கு வீங்கி விடுவதும் காதில் புண் ஏற்பட்டுச் சீழ் பிடிப்பதும் கை-வேலை செய்யமுடியாமல் சோர்ந்து போவதும் சாமிக் கோளாறினால் ஏற்படுகிறது என்று நம்புகின்றனர். சாமி மூக்குத்தி, தோடு, வளையல் போட்டிருப்பதால் நாமும் போடக்கூடாது என்றும் நம்பிக்கைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

தொடக்கக் காலத்தில் ஆணையாக ஏற்றுக்கொண்டு கடமையாகச் செயல்படுத்திய மக்கள் பின்னாளில் அவர்களுக்குச் செய்யும் மரியாதையாகக் கொண்டும் பின்னர் அதனை மீறினால் சத்தியம் மீறியதாகும் என்றும் சாமிக்குற்றம் ஏற்படும் என்றும் நம்பி இந்நாள் வரை நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

தகவல் தொடர்பியலின் அவசியம்

மு. சுப்பம்மாள்
ஏ.பி.சி. மகாலட்சுமி கல்லூரி
தூத்துக்குடி

பல்வேறு கால கட்டங்களில் மனிதன் தனியாகவும் குழுவாகவும் வாழத் தொடங்கிய நிலையில் ஒருவரோடொருவர் தொடர்பு தேவைப்பட்டது. ஆங்காங்கே சமூகமாகவும், குழுவாகவும் பிரிந்த நிலையிலும் தொடர்பு அவசியமாகிவிட்டது. மனிதனின் அறிவுவளர்ச்சிக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் தொடர்பு வேண்டும் என்ற நிலைபெறுகிறது. சமுதாயத்தில் வாணிகம், போக்குவரத்து, கல்வி, வங்கி, அலுவலகங்கள், கழகங்கள் போன்றவை செயல்படத் தொடர்பு தேவைப்பட்டது. இன்றைய அறிவியல் உலகில் தனி மனிதனால் தகவல் தொடர்பின்றி உயிர்வாழ இயலாது. மனித வாழ்க்கையில் தகவல் தொடர்பு பலவகைகளில் பயன்படுகிறது. அத்தகைய தகவல் தொடர்பின் தேவையையும் அவசியத்தையும் இக்கட்டுரையில் காணலாம்.

மனிதன் உயிர்வாழ இன்றியமையாதது: இன்றைய உலகில் மனிதனுக்கு உணவும் தண்ணீரும் எவ்வளவு முதன்மையானதோ அதை விட இன்றியமையாதது தொடர்பு ஆகும். உண்பதும் உறங்குவது, அன்பு செலுத்துவது போலத் தகவல் தொடர்பும்' தேவைப்படுகிறது. மனிதர்கள் விலங்குகள், தாவரங்கள் அடங்கிய இவ்வுலகில் முக்காலத்திலும் தொடர்பு நடந்து கொண்டிருக்கிறது.

''நெல்லும் உயிரன்றே
நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்''

என்ற புறநானூற்றிற்கு ஏற்ப ''தொடர்பினை உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்று இப்பொழுது கூறினால் தவறில்லை. மக்கள், விலங்குகள், தாவரங்கள் உயிர் வாழத் தொடர்பு

இன்றியமையாதது. தகவல் தொடர்பு இல்லையென்றால் இவ்வுலகின் இயக்கமே நின்று விடும் என்று கூறினால் மிகையாகாது.

தனிமனிதன் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளாமல் சில நாட்களே வாழ முடியும். இருபதாம் நூற்றாண்டில் மனிதனால் தகவல் தொடர்பு இல்லாமல் தனித்து வாழ இயலாது. மேலை நாடுகளில் தகவல் தொடர்புக் கருவிகளின் உதவியில்லாமல் மனிதனால் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சமுதாயத்தில் உயிர் வாழவும் பிறருடன் சேர்ந்து வாழவும் மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்தவும் தகவல் தொடர்பு தேவைப்படுகிறது. மனிதன் தன்னுடைய உள்ளார்ந்த உணர்வுகளை கூறிச் சமுதாயத்தில் உயிர்வாழத் தொடர்பு இன்றியமையாததாகிறது.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுக்குத் தொடர்பு தேவைப்படுகிறது. குழந்தையோ, இளைஞனோ, வயோதிகர்களோ யாராக இருந்தாலும் அவர்களைத் தனிமைப் படுத்தினால் அவர்களின் நடவடிக்கைகளும் மாறிவிடும். சான்றாகக் குழந்தைகள் விலங்குகளுடன் சேர்ந்திருந்தால் விலங்குகளைப் போலவே உணவு உண்பர். விலங்குகளைப் போல நடப்பது முதல் பிற செயல்களும் அமைந்து விடும். இதற்கு நேபாள ஓநாய்க் குழந்தைகளைச் சான்றாகக் கூறலாம். ஒருவரைத் தனிமையில் வைத்து விட்டால் அவர்களது பேச்சுத் திறமை குறைந்து விடும். உடலும் வலுவிழந்து விடும். நெப்போலியன் தனிமைச் சிறையில் இருக்கும்போது இருமுறை தற்கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படுகிறது. ஒருவனைத் தனிமைச் சிறையில் அடைத்து விட்டால் அவனது மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டு விடும் என்பது தெளிவு.

குழுவாக வாழ்வதற்காகத் தொடர்பு அவசியம்: தனித் தனியாக காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்த மனிதன் சமூக மாகக் குழுவாக வாழத் தலைப்பட்டான். மனிதன் கூடிவாழ முயன்றபோது சமூகம் உருவாகியது. இன்றைய புதிய சமுதாயத்தில் மனிதன் தனித்து வாழ முடியாது. ஒவ்வொரு வரும் மற்றவரைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. சமூகத்தில் நடைபெறும் இன்பதுன்பச் செய்திகளைப் பகிர்ந்து கொள்ளவும்.

புதிய செய்திகளைத் தெரிவித்துக் கொள்ளவும் தொடர்பு தேவைப்படுகிறது. தனது எண்ணங்களையும் விருப்பு வெறுப்புக் களையும் சமுதாய நலனைத் தெரிவிப்பதற்கும் தொடர்பு கட்டாயத் தேவையாகிறது.

இன்றைய பல்வேறு சங்கங்களின் அமைப்பும் தனி மனிதன் குழுவோடு தன்னை இணைத்துக் கொள்ள உதவுகிறது. பிறருடைய கவனத்தை ஈர்க்கவும் தகவல் தொடர்பு பயன்படு கிறது. மிருகங்கள், பறவைகள், ஈக்கள் போன்றவை தகவல் தொடர்பின் மூலம் மற்றவற்றின் கவனத்தை ஈர்க்கின்றன. முக்கூடற்பள்ளுவில் தவளைகளின் ஒலி மழை வருவதை அறிவிக்கும் என்று இயம்புகிறது. வாகன ஒலிகள், ஆலைச் சங்குகளின் ஒலிகள் போன்றவை மக்களின் கவனத்தை ஈர்த்துச் செயல்பட வைக்கின்றது.

கருத்துகளை வெளியிட உதவும் கருவி: மனிதனுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் பிரதிபலிக்கும் கருவியாகத் தகவல் தொடர்பு அமைகிறது. தன்னுடைய கற்பனைகளையும், பண்புகளையும் பிறருக்குக் கூற தகவல் தொடர்பு வேண்டும். இல்லையெனில் மனிதன் மனதிற்குள்ளேயே தன் கருத்துகளை வைப்பதால் அவனுக்கு மனநோய் ஏற்பட வழி வகுக்கிறது. மனிதன் தன்னையும் தன் மனதையும் சுமையின்றி மகிழ்ச்சியா கவும், சந்தோஷமாகவும் வைத்துக்கொள்ள தொடர்பு கட்டாயத் தேவையாக அமைந்து விடுகிறது.

சமூகம் நெறி பிறழாமல் செல்லத் தொடர்பு உதவுகின்றது. சமுதாயத்தில் குற்றவாளிகளை தொடர்பு இனங்காட்டுகிறது. சமூகத்திற்கு நீதி, நன்னடை, நல்லொழுக்கம் போன்றவற்றைக் கற்பிக்கத் தொடர்பு பயன்படுகிறது. மக்கள் நல்வாழ்வு, தனி மனிதன் நெறி பிறழாமல் வாழவும், தவறான வழியில் செல்லும் போது அதைத் தடுத்து நேர்மைப் படுத்தவும் தொடர்பு உதவுகிறது.

பல்வேறு நிலைகளில் தொடர்பு அவசியம்: சிறுவயது முதல் வயோதிகம் வரைக்கும் மனிதன் பல்வேறு நிலையில் பல்வேறு மக்களுடன் தொடர்பு கொள்கிறான். குழந்தை தாய், தந்தை

உறவினர், உறவு என்பது முதல் கட்டத் தொடர்பு. குழந்தை பள்ளி செல்லும் பருவம் வந்தவுடன் மிகுதியான தொடர்பு குழந்தைக்குப் பள்ளியில் ஏற்படுகிறது. பலதரப்பட்ட குழந்தை களோடும் ஆசிரியர்களோடும் குழந்தை தன்னைத் தொடர்பு படுத்திக் கொள்கிறது. விளையாட்டு, கல்வி, பல்வேறு கலை நிகழ்ச்சிகள் போன்ற புதிய புதிய துறைகளில் குழந்தை தொடர்பு கொள்ள நேரிடுகிறது. ஒழுங்கோடும், கட்டுப் பாட்டோடும் குழந்தை உருவாகத் தொடர்பு இன்றியமையாததா கிறது. பள்ளிப் பருவம் முடிந்து கல்லூரி செல்லும் மாணவன் சமுதாயத்தில் பல்வேறு நிலைகளிலும் மாறுபட்ட மாணவர் களையும் ஆசிரியர்களையும் தொடர்பு கொள்கிறான். இங்கு மனிதன் ஒற்றுமையோடு வாழ்வதற்கு, எந்தச் சூழலிலும் சமாளித்துக் கொள்ளவும் தன்னைத் தயார்படுத்த தொடர்பு பயன்படுகிறது. தொடர்பு வாழ்க்கைக் கல்வியைப் புகட்டுகிறது. எனலாம். இதே நிலை வேலைக்குச் செல்கின்ற நிலையிலும் தொடர்கிறது. புதிதாகத் திருமணம் ஆன மணமக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், கணவன் மனைவி உறவு சுமுகமாக இருக்கவும், புதியவர்கள் இருவர் தங்களை அறிமுகம் செய்து கொள்ளவும் தொடர்பு தேவையாகிறது. வயோதிக நிலையில் தனக்குத் தனிமை வந்து விடக்கூடாது. தன்னை யாரும் உதாசீனப் படுத்தி விடக்கூடாது என எண்ணுவதெல்லாம் தன்னோடு எல்லோரும் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நிலையைக் காட்டுகிறது. ஒவ்வொரு நிலையிலும் மனிதன் தனக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று எண்ணுவது எல்லோருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளும் ஆவலைத் தெளிவாக்குகிறது.

மனிதன் மட்டுமல்லாது விலங்குகளும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், உணவு தேடுவதற்கும் இனப் பெருக்கம் செய்வதற்கும், தங்கள் உடலுக்கும் உயிருக்கும் பாதுகாப்புத் தருகின்ற சூழலை நாடிச் செல்வதற்கும் தொடர்பு தேவை.

இவ்வாறாகத் தகவல் தொடர்பு உலகில் வாழும் ஓரறிவு உயிர் முதல் ஆறறிவு உயிரான மனிதன் வரைக்கும் தேவைப் படுகிறது. மனிதனை விலங்கினின்றும் பிரித்து முழு மனிதனாக

மாற்றுவது தகவல் தொடர்பு எனில் மிகையாகாது. தகவல் தொடர்பு இல்லையெனில் மனிதன் காட்டுமிராண்டிகளாகவும், பகுத்தறியும் தன்மை இல்லாமலும் வாழ்ந்து கொண்டிருப்பான். உலகம் அறிவியல் முன்னேற்றம் கண்டிருக்க இயலாது. இன்றைய உலகத்தின் இயக்கமே தகவல் தொடர்பின் உள்ளடக்கமே எனில் மிகையாகாது.

தொல்காப்பியப் பாடவேறுபாடுகள் 'ப' 'வ'

ச. வே. சுப்பிரமணியன்
தமிழூர்

1. எழுத்தெனப் படுப (1) நச்சினார்க்கினியர் ''படுப, படுவ; படுப என்பது படுத்தலோசையால் தொழிற்பெயராகக் கூறப்படும். பகரமும் வகரமும் ஈண்டு நிற்றற்குத் தம்முள் ஒத்த வுரிமைவேனும் எழுத்தெனப் படுவவெனத் தூக்கற்று நிற்கும் சொற்சிரடுக்குப் படுப என்பது இன்னோசைத்தாய் நிற்றலின் ஈண்டு **படுப** என்றே பாடம் ஒதுக'' என்று எழுதுகின்றார்.

விளி எனப் படுப (603); சொல்லெனப் படுப (643); இடை எனப் படுப (734); இவ்விடங்களில் 603-ஆம் நூற்பாவிற்கு 951 ஆம் சுவடி 'படுவ' என்று பாடம் கொள்கிறது. 643–ஆம் நூற்பாவிற்கு 48, 951, இரண்டு சுவடிகளும் 'படுவ' என்றே பாடம் கொள்கின்றன. 734 ஆம் நூற்பாவிற்குத் தெய்வச் சிலையார் 'படுவ' என்றே பாடம் கொள்கிறார். இன்று கிடைக்கின்ற முதல் பதிப்புக்களும், பல சுவடிகளும் 'படுப' என்பதையே பாடமாகக் கொள்கின்றன. அதனால் 'படுப' என்ற பாடமே பொருந்தும் எனக்கொள்ளலாம்.

2. இசை நிலை நிறைய **நிற்குவதாயின்**
அசை நிலை வரையார் சீர்நிலை பெறலே. (1284)

இங்கு 'நிற்குவ' என்ற பாடத்தை இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் மூவரும் கொள்கின்றனர். ஆயின் சுவடிகள் 1, 43-A, 115 ஆகிய மூன்றும் **'நிற்குப'** என்பதைப் பாடமாகக் கொள்கின்றன. பொதுநிலையில் ஒலியால் 'ப'கரம் வகரத்திற்கு முந்தியது என்பது ஒன்று. பழந்தமிழில் 'ப'கரம் மிகுதியாகப் பயன்கொள்ளப் பெற்றுள்ளது என்பது மற்றொன்று. அதைக் கீழ்வரும் சான்றுகளால் விளக்குவோம்.

3. அளத்தலால் அளவு. முகத்தலளவை, நீட்டலளவை, நிறுத்தலளவை, என அழைக்கிறோம். ஆனால் ஒலியை அளக்கும் போது அளபு என உரைக்கிறோம். ஓரளபு இசைக்கும் குற்றெழுத்தென்ப — (3) ஈரளபு இசைக்கும் நெட்டெழுத் தென்ப (4) என; அளபு எடுத்தலால் அளபெடை என்கிறோம். இங்கும் அளவு, அளபு; எனப்பாட வேறுபாடுகள் பதிப்புக் களிலும், சுவடிகளிலும் உள்ளன. 'அளபு' என்பதே பல நிலை களில் பொருந்துவதால் அதனையே சரியான பாடமாகக் கொள்கிறோம்.

4. உருவுட்காகும் புரை உயர்பு ஆகும் (785)

உயர்பு என இளம், சேனா, தெய்வ; சுவடி 48-ம் கொள் கின்றன. உயர்வு என நச்சர், 73, 115 ஆகிய சுவடிகள் கொள்கின்றன. காலத்தால் முந்தியவர் இளம்பூரணர், அதோடு பெரும்பாலான முதற் பதிப்புக்களில் 'உயர்பு' என்றே உள்ளது. அதனால் 'உயர்பு' சரியான பாடமாகக் கொள்ளப்பெறுகின்றது. பரிபாட்டு எல்லை

நால்ஈர் ஐம்பது உயர்பு அடியாக
ஐ ஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை — (1418)

'உயர்பு' என இளம், பேராசிரியர் இருவரும் கொள்கின்றனர். முதற்பதிப்புகளும் இதனையே கொள்கின்றன.

'உயர்வு' என நச்சர், 1, 16, 73, 115, 575 ஆகிய சுவடிகளும் கொண்டுள்ளன. இச்சுவடிகள் அனைத்தும் காலத்தால் 10-ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியனவாக இருத்தல் வேண்டும். தொல்காப்பியத்தில் 'உயர்பு' என்பதே மிகுதியான வழக்கில் உள்ளது.

5. இழிபு, இழிவு என்ற இரண்டு பாடங்களும் தொல்காப்பியத்தில் காணப்பெறுகின்றன.

ஐ ஐந்து ஆகும் இழிபு அடிக்கு எல்லை (1418)

இளம், பேரா, இருவரும் இழிபு என்ற பாடத்தைக் கொள்கின்றனர். நச்சர் இழிவு என்று கொள்கின்றார். பிற்காலத்தில் பகரம் வகரமாயிற்று என்பது தெளிவாகிறது.

சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப
இழிந்துழி இழிபே சுட்டலான (1040)

இங்கு இழிவு என இளம் கொள்ள, நச்சர், 73, 115 சுவடிகள் முதல் பதிப்புக்கள் அனைத்தும் இழிபு என்றே கொள்கின்றனர். பதிப்பாசிரியர் செய்த பிழையாக இளம்பூரணர் பதிப்பில் இழிவு என குறிக்கப்பெற்றிருக்கலாம்.

6. திரிபு, திரிவு என்ற பாடவேறுபாடுகள் எட்டு இடங்களில் காணப்பெறுகின்றன. திரிபு வேறு கிளப்பின் (432) திரிபு வேறு படூஉம் எல்லாப்பெயரும் (657) துயவு என் கிளவி அறிவின் திரிபே (851) பொருட்கு திரிபில்லை உணர்த்தவல்லின் (875) நிலத் திரிபு இன்று அஃது என்மனார் புலவர் (1170) திரிபின்றி வருவது கலிவெண்பாட்டே (1410) திரிபின்றி முடித்தல் தெள்ளி யோர் கடனே (1499) திரிபில் சொல்லொடு தழா அல் வேண்டும் (1589)

இந்த எட்டு இடங்களிலும் உரையாசிரியர்களும், பதிப்புக் களும், சுவடிகளும், 'திரிவு' என்ற பாடத்தையும் கொள்கின்றன. பெரும்பான்மை கருதியும், முதற் பதிப்புக்கள் கருதியும், மொழி வரலாற்று முன்னிலை கருதியும்' 'திரிபு' என்ற பாடமே பொருந்தும் என்று தோன்றுகிறது.

7. பிரிபு, பிரிவு என்ற பாடம் ஒரு நூற்பாவில் காணப் பெறுகின்றது.

பிரிபு வேறுபடூஉம் செய்தியவாகி (707) இங்கு பிரிபு என்ற பாடத்தை நச்சர், கல்லாடர், சேனாவரையர், 1868 முதற் பதிப்புகள்; 115, 951, 1053 ஆகிய சுவடிகள் கொண்டுள்ளன. இளம்பூரணரும் 11-ஆம் சுவடியும் பிரிவு என்ற பாடத்தைக் கொண்டுள்ளன.

8. கவர்பு விருப்பாகும் (845) தெய்வச் சிலையார் தவிர ஏனைய எல்லா உரையாசிரியர்களும் 'கவர்வு' என்பதையே பாடமாகக் கொள்கின்றனர். சில பதிப்புகள் 'கவர்பு' என்றே கொள்கின்றன.

9. முடிபு, முடிவு இவையும் பாடவேறுபாடுகளாகக் கொள்ளப் பெறுகின்றன.

ஏவல் முடிபும் வினாவும் செப்பும் (1116) 'முடிபு' என்பதை இளம் பாடமாகக் கொள்கிறார். முடிவு என்பதை நச்சர், நமச் சிவாய முதலியார், புன்னைவனநாத முதலியார், சாமிக்கண்ணுப் பிள்ளை போன்ற பதிப்பாசிரியர் கொள்கின்றனர்.

எண்வகை இயல்நெறி பிழையாதாகி
முன்னுறக் கிளந்த முடிபினது அதுவே (1461)

இங்கு முடிபினது என்பதை 115-ஆம் எண் சுவடி பாடமாகக் கொள்கின்றது. இளம், பேரா, நச்சர் மூவரும் 'முடிவினது' என்பதையே கொள்கின்றனர் 73-ஆம் எண் சுவடியும் 'முடி வினது' என்பதையே கொள்கின்றது. ஓசை நிலையும், பொருளமைதியும் 'முடிபினது' என்பதையே பாடமாகக் கொள்ளல் பொருந்துமெனத் தோன்றுகிறது.

10. சார்பு, சார்வு என்ற சொற்களும் பாட வேறுபாடாகின்றன.

ஊரது சார்பும் செல்லும்தேயமும் (986-3)

'சார்பும்' என்பதை இளம், நமச்சிவாய முதலியார், 115, 1054 ஆகிய சுவடிகளும் பாடமாகக் கொள்கின்றனர்.

'சார்வும்' என்பதை நச்சர், சாமிக்கண்ணுப்பிள்ளை, புன்னைவனநாத முதலியார், 73-ஆம் சுவடி கொள்கின்றனர். தங்களுக்கு இலக்கணம் தெரியும் என நினைத்த பதிப்பாசிரியர்களால் ஏற்பட்ட பாடமே இதுவாக அமையலாம்.

ஆங்க நால்வகையினும் அடைந்த சார்பொடு (1442-3)

பேராசிரியர் சார்பொடு என்ற பாடத்தைக் கொள்கின்றார்; இளம், நச்சர் 'சார்வொடு' என்ற பாடத்தைக் கொள்கின்றனர்.

11. சோர்பு, சோர்வு என்ற வடிவங்களும் பாட வேறுபாடுகளாக அமைகின்றன.

அவன் சோர்பு காத்தல் கடன் எனப்படுதலின் (1120-1)

சோர்பு, என்பதை நச்சர், நமச்சிவாயமுதலியார், புன்னைவனநாத முதலியார், சாமிக்கண்ணுப்பிள்ளை 115-ஆம் எண் சுவடி ஆகியன பாடமாகக் கொள்கின்றன.

இளம்பூரணரும் 73-ஆம் சுவடியும் 'சோர்வு' என்பதைப் பாடமாகக் கொண்டுள்ளனர்.

தொல்காப்பியம் முழுவதையும் முதல் முதல் பதிப்பித்தவர் சாமிக்கண்ணுப்பிள்ளை. பெரும்பான்மையும் அவர் பார்த்த, சுவடிப்பாடம் பொருத்தமாக அமைந்துள்ளது.

12. நிமிர்பு நிமிர்வு, இச்சொற்களும் பாட வேறுபாடுகள் காட்டுகின்றன.

அம்மை தானே அடி நிமிர்பு இன்றே (1491–3)

நிமிர்பு என்பதைப் பேராசிரியரும், 73–ஆம் எண் சுவடியும் பாடமாகக் கொள்கின்றனர்; 'நிமிர்வு' என்பதை இளம், நச்சர், 115-ஆம் எண் சுவடி கொள்கின்றன. முதற் பதிப்புக்கள் 'நிமிர்பு' என்பதையே பாடமாகக் கொண்டுள்ளன.

13. வார்தல் போகல் ஒழுகல் மூன்றும்
நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள (800)

இளம், சேனா, தெய்வ, நச்சர் அனைவரும் 'நேர்பு' என்பதைப் பாடமாகக் கொள்கின்றனர். சுவடிகள் 115, 1044 இரண்டும் 'நேர்வு' என்று குறிக்கின்றன. பிற்கால மக்கள் வழக்கில் 'நேர்பு' மக்கள் வழக்கில் நேர்பு என்பதை நேர்வு எனக் குறிப்பிட்டிருக்க லாம். அதன் தாக்கத்தை இச்சுவடிகள் காட்டுகின்றன.

14. உருபு, உருவு என்ற வடிவங்களும் பாட வேறுபாடுகளாக அமைகின்றன. இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள் உருபு என அழைக்கப்பெறுவது இயல்பு உருவு வடிவத்தைக் குறிக்கும். ஆயின் பழங்காலத் தமிழில் 'உருபு' என்ற சொல் வடிவத்தைக் குறித்திருத்தல் வேண்டும். வேற்றுமை உருபுகள் தோன்றிய பின்பு, வேறுபடுத்துவான் வேண்டி உருவு வடிவத்தையும் – உருபு வேற்றுமை உருபுக்களையும் குறிக்கப் பயன் கொண்டனர் எனத் தோன்றுகிறது.

(அ) மேற்கூறிய பாடவேறுபாடுகளால் 'ப'கரம் வகரத்திற்கு முந்தியது என்பதை உணர்கிறோம்.

(ஆ) வரிவடிவத்தில் ஓலையில் எழுதும் போது 'ப' 'வ'வைக் காட்டிலும் எளிதாக எழுதிவிடலாம் 'வெ' ப, பெ, — சுழிக்கும் போது ஓலை கிழிந்து விடும். முந்தைய வடிவம், எளிதாக ஒலிக்கும் எழுத்தாகவும் 'ப' அமைகிறது.

குறிப்புகள்

1. ( ) இக்கோடுகளுக்குள் உள்ள எண்கள் தொல்காப்பியச் சூத்திர எண்களைக் குறிக்கும். தொல்காப்பியம் – மூலம் – சுழகப் பதிப்பு - 1943.
2. சுவடி எண்கள் டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூலகத் தொல்காப்பியச் சுவடி எண்கள்.

மகாகவி பாரதியின் மொழித்திறன்

சி. சுப்பிரமணிய பிள்ளை
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்

ஒரு கவிஞனுடைய மொழித் திறனை, மொழிப் பயன் பாட்டைப் புரிந்து கொள்வதற்குக் கவிதை வரலாற்றில் கவிஞனின் இடத்தை வரையறை செய்வது தேவை. கவிதையில் கற்பனை வளம், கவிதை நயம், சமுதாயச் சிந்தனை, ஒப்புமைத் திறன் என்பன கவிஞர்களுக்கும், கவிதைக்கும் சிறப்பைத் தரும் எனினும் இவற்றை மட்டும் அளவுகோலாகக் கொண்டு ஒரு கவிஞனுக்குரிய இடத்தை முற்றிலும் நிர்ணயம் செய்ய இயலாது. கவிதையின் உணர்வுத் தன்மை, மொழிப் பயன்பாட்டு நிலை, உத்தி, ஆகியவற்றின் ஆற்றல் போன்றவற்றையும் உணர்தல் வேண்டும்.

ஒரு கவிஞன் கவிதை வரலாற்றில் இடம் பெற இரு தகுதிகள் சிறப்பானவை. 1. கவிஞன் தோற்றுவித்துள்ள புதுமை 2. தொலைநோக்குத் தன்மை. இப்புதுமைப் பண்பு கவிதை சொல்லும் பாங்கிலோ அல்லது வடிவிலோ அமையலாம். புதுமையில் முக்கிய பங்கு மொழிக்குண்டு. அதுவே சொல்லாட்சித் திறன் அல்லது மொழித் திறன் எனப்படும். இத்தகு மொழித் திறன் மகாகவி பாரதியின் பாடல்களில் இடம் பெற்றுள்ள பாங்கைக் காணலாம். நமக்குத் தொழில் கவிதை, பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாவித்திட வேண்டும். சொல் புதிது, சுவை புதிது, பொருள் புதிது, சோதிமிக்க நவகவிதை எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவையே பாரதியின் மொழித்திறன்; மொழிக் கொள்கை சுருங்கச் சொன்னால் கவிதைக் கண்ணோட்டம்.

பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த பாரதிதாசன் கவிதை மொழியில் புது நெறி காட்டிய "புலவன் பாரதி" எனவும், வா. வே. சு. அய்யர், பாடல் பொருளில் மகாகவி புரட்சிச் செய்தார் என்பது மட்டுமல்ல, அப்புரட்சி மொழியின் கையாள்கையிலும் புலப்பட்டது. புதிய பொருள், புதிய நடை இவற்றின் சேர்க்கை கவிதையில் பொலிவும் பூரணத்துவமும் ஏற்படுத்தியது என்று மொழி ஆளுமையைப் புலப்படுத்துவது நினைவு கூரத்தக்கது. இலக்கியப் புரட்சி என்பது ஒரு வகையில் மொழிப் புரட்சியையும் சார்ந்ததுதான் எனும் கருத்தேற்றத்திற்கு ஏற்பக் கவிஞர்கள் கவிதைகளில் அவ்வக் காலகட்ட மக்களுக்குத் தெளிவாகத் தெரியக் கூடிய பதங்களையே வழங்கவேண்டும். அசாதாரணமான அலௌகீக அந்தகார நடையில் எழுதுவது சிறந்த கவிதைக்கு ஏற்புடைத்தாகாது. இதனைப் பாரதியின் கவிதைமொழியில் தெளிவுறக் காணலாம்.

தாயுமானவரையும், இராமலிங்கரையும் மொழிவழிப் பின்பற்றும் பாரதியார், தம் கவிதைகளில் பா எளிமை, இசை இன்பம் அனைத்தும் சிறக்கும் வண்ணம் நாட்டுப்பாடல் வடிவங் களைப் பயன்படுத்திய உன்னதப் போக்கைக் காணலாம். பாஞ்சாலி சபதத்தில் குறிப்பிடுவது போல 'எளிய நடையாலும் எளிய பதப்பிரயோகங்களாலும்' புதுமை செய்துள்ளார். மேலும், பாஞ்சாலி சபதத்தில் பாத்திரப் பண்புகளுக்கேற்ற நடை, தனி மொழிகளின் ஆதிக்கம் போன்றவற்றையும் இங்குச் சுட்டலாம். தேர்ந்தெடுத்த சொற்களையும், தெளிவான தொடர்களையும் கையாண்டுள்ளதையும் காணலாம். பாப்பாப் பாடலில் அமைந்துள்ள மிகமிக எளிமையான சொற்கள், 'எளிமையே புதுமை' என்ற கருத்துக்கு வலிவூட்டுகின்றன. கண்ணம்மா-என் குழந்தை என்ற பாடலில் உணர்ச்சிப் பிழம்பான சொல் வடிவங்கள் உள்ளன. (பிள்ளைக்கனியமுது, பேசும் பொற் சித்திரமே, உன்மத்தமாகுதடி, உதிரம் கொட்டுதடி) இதைப் போன்றே கண்ணன் – என் காதலன் என்ற பாட்டிலும் பாவி, மறுகுதடி போன்ற சொல்லாட்சிகள் உணர்ச்சியைக் கொட்டி நிற்கின்றன. கவிஞனின் உள்ள உணர்ச்சிகளுக்கு ஏற்ப இவ்வகைச் சொற்கள் உணர்ச்சி ததும்புவனாக அமைந்துவிடக் காண்கிறோம்.

பாரதியின் ஆங்கிலப் புலமை, வடமொழிப் புலமை, தமிழ்ப் புலமை, தமிழ்ப் பண்பாட்டின் தாக்கம் போல்வன மொழித்

தாக்கத்திலும் இயல்பாக அமைந்து விடுகின்றன. ஏராளமான வடமொழிச் சொற்களைக் கவிதைகளில் பரவலாகக் காண இயலும். இத்தாக்கம் கவிதையின் ஓட்டத்தை, எவ்விதத்திலும் பாதிப்படையச் செய்ததாகக் கூற இயலாது.

பாரதி மொழியைக் கையாளும் பாங்கு இடத்திற்கு ஏற்பவும் அவர்தம் மனநிலைக்கு ஏற்பவும் அமையும் இயல்புடையதைப் பலவிடங்களில் காணலாம். குயில் பாட்டில், குயிலைச் சிறப்பிக்கும் அடைகள் இதற்குச் சான்று பகரும். (மைக்குயில், நீசக்குயில், பொய்க்குயில், நீலக்குயில், சிறுகுயில்) குயில் பாட்டில் அவர் சொற்களைப் படைத்துப் பயன்படுத்தி உள்ள கலைத்திறன் சிறக்கக் காணலாம்.

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாடிய பாரதி தமிழிலக்கியத்தில் 'தந்தையர் நாடு', 'புரட்சி', 'பொதுவுடைமை. போன்ற புதிய சொல்லாக்கங்களைப் படைத்தளித்துள்ளான்' அதுபோன்றே 'வேதம்', 'கிருதயுகம்', 'அமர நிலை' (மனிதனின் தராதரம்) போன்ற சொல்லாட்சிகளைப் புதிய பார்வையில் அணுகியுள்ளதும் குறிப்பிடலாம். விநாயகர் நான்மணிமாலை, கண்ணன் பாட்டு, பாரத சமுதாயம் ஆகிய பாடல்களில் சுட்டப் பட்டுள்ள அமரநிலை என்பதற்கு,

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
    எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
    எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
    எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
    எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்பதே, பாரதி கூறவந்த கருத்து; இத்தன்மையைத் தான் 'அமரநிலை' என்று பாரதி எண்ணிப் பாடியதாக ஜீவா கூறுகின்றார்.

கவிதைகளில் நடைத் தெளிவு, சொல் தெளிவு, கருத்துத் தெளிவு அமைந்து எந்நாளும் அழியாத கவிதையாக நவகவிதையாக விளங்குவன பாரதியின் கவிதை என்பது போன்று உரைநடையும் அற்புதப் படைப்பே எனலாம். 'சின்னசங்கரன்' உரைநடைக்கதையும் பழகுதமிழில் கிராமியச் சொற்கள் கலந்த அமைப்பில் எளிய ஜனரஞ்சகப் பாணியில் படைத்துள்ளமை புதுமையிலும் புதுமையே எனலாம்.

சாதாரண விஷயங்களைச் சாதாரண மக்கள் வழங்கும் மொழியில் பாடுவது தான் தங்கள் குறிக்கோள் என ஆங்கிலப் புலவர்களான கோல்ரிட்ஜ், வேட்ஸ்ஒர்த் ஆகியோர் கூறியதுடன் இதனைச் செயல்படுத்தி இலக்கியத்தில் ஒரு புதிய பார்வையை இலக்கிய வகையை ஏற்படுத்திவிட்டனர். திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டும் இலக்கிய வகைகளுள் தனி இலக்கிய வகையாக அமையும் தன்னுணர்ச்சிப் பாடல்களை விடவும் காப்பிய இலக்கிய வகையாக அமைந்து அறம் மொழியும் தன்மையிலான அரசியல், இறையுணர்வு, சமூகம், சமயம், சீர்திருத்தம் போன்ற வற்றைக் கருப்பொருளாகக் கொண்ட பாடல்களில் மொழிப் பயன்பாடு புதிய பரிமாணத்தில் தோற்றம் கொள்கின்றது.

இதனைப் பாரதியின் கூற்றிலிருந்தே தெரியலாம். ஓர் ஆங்கிலச் சொல்லைத் தமிழ்ப் படுத்துவதற்குத் தான் மேற் கொண்ட அரிய முயற்சி பற்றி, "மெம்பர்" இதற்குரிய தமிழ்ச் சொல் அகப்படவில்லை. ஆச்சரியத்திலும் ஆச்சரியம், 'அவயவி' சரியான வார்த்தையில்லை. அங்கம் என்பது கட்டிவராது, 'சபிகள்' என்பது சரியான பதந்தான். ஆனால், இது பொது ஜனங்களுக்குத் தெரியாது. அரைமணிநேரம் யோசித்துப் பார்த்தேன். உறுப்பாளி' ஏதெல்லாமோ நினைத்தேன் ஒன்றும் மனதிற்குப் பொருந்தவில்லை என்ன செய்வேன். கடைசியில் மெம்பர் என்றே எழுதி விட்டேன். இன்னும் ஆர அமர யோசித்தும் சரியான பதம் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்கிறேன்' என எழுதியுள்ளார். எனவே பொருள் தெளி வில்லாத, புரியாத தமிழ்ச் சொல்லை அப்படியே எழுதி விடுவதில் தவறில்லை, பாதகமில்லை, என்பதே கவிபாரதியின் கவிதை மொழிப் பயன்பாட்டுக் கோட்பாடு எனலாம்.

அதே வேளையில் புத்தாக்கச் சொற்களைப் படைத்து உள்ளார் பாரதி. வீட்டின் மாடிப்பகுதியை 'மேனிலம்' என்று குறிப்பிட்டுள்ளதும் காணலாம். உரைநடைப்பகுதிகளில், பாரதி யார் சொற்களைத் தேர்ந்தெடுத்து, அதன் பொருளை உணர்ந்து அமைத்துள்ளமையை எழில்முதல்வன் சுட்டிக் காட்டி யுள்ளதையும் காணலாம்.

பாரதி சமுதாய மாற்றத்திற்குரிய கருத்துகளை வெறும் அரசியல் மொழியில் அறிவிப்பாக மட்டும் தராமல் கற்பனை

வடிவமான புராண மொழியில் கூறுவது கவிதை மொழியைப் பற்றிய தெளிவான பார்வையை உணர்த்துகின்றது எனும் சிற்பியின் கருத்துரையும் நோக்கத் தக்கது.

கவிதை, சுவை இன்பத்திற்கும், இலக்கியப் பயன் உணர்வுக்கும் பயன்பாடாகின்றது. மொழி வழியே இலக்கியத்தைத் திறனாய்வு செய்வதற்கு மொழிப் பயன் பாட்டின் பாங்குகளை அறிதல் தேவையாகும்.

துணை நூல்கள்

1) சிற்பி (தொ), மகாகவி பாரதி மதிப்பீடுகள்

2) கா. மீனாட்சிசுந்தரம், பாரதி பா நிலை

3) ரகுநாதன், பாரதி சில பார்வைகள்

4) ப. ஜீவானந்தம், பாரதி வழி

5) ப. ஜீவானந்தம், பாரதியைப் பற்றி - ஜீவா

ஆதி நாடகத்தில் திருமணம் - சமூகவியல் பார்வை

சுப்புலெட்சுமி இரவீந்திரன்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்மொழியில் பல்வேறு கதைத் தளங்களைக் கொண்ட இசை நாடகங்கள் பல வெளியிடப்பட்டன. இசைப்பாடல்களாகப் பாடி மக்களிடையே நடிக்கப்பட்டு வந்த இசை நாடகங்களுள் வீராச்சாமி உபாத்தி யாயரால் இயற்றப்பெற்ற 'ஆதி நாடகம்' ஒரு சமூக சீர்திருத்த நாடகமாகும். சமூகத்தில் காலங்காலமாய்ப் புரையோடிக் கிடக்கும் சாதியத்தை ஒழிப்பது இந்நாடகத்தின் நோக்கம். இதில் பகவமுனி என்னும் அந்தணனுக்கும் ஆதி என்ற தோட்டி குலப் பெண்ணுக்கும் நடைபெறும் கலப்பு மணம் நாடகத்தின் கருப் பொருளாகும். இத்திருமணம் சமூகவியல் நோக்கில் இங்கு ஆராயப்படுகின்றது.

நாடகக்கதை:

சிவபெருமானின் அடிமுடிதேடிய கதையில் திருமுடியைக் கண்டு வந்ததாகப் பொய் கூறிய பிரம்மனும், பொய் கூறுவதற்கு உடந்தையாக இருந்த அவனது நாவிலுள்ள சரஸ்வதியும் இறைவனின் சாபத்தைப் பெறுகின்றனர். பிரம்மன் அந்தணக்குலத்திலும் சரஸ்வதி தோட்டிக் குலத்திலும் பிறந்து மணமுடித்துக் கொண்டு மக்களைப் பெறுதல் வேண்டும் என்பது சாபத்தின் பலனாகும். இதனால் பூமியில் பிரம்மன் பேறாழி முனிவனின் மகன் பகவமுனியாகவும், சரஸ்வதி வேம்பான் தோட்டியின் மகள் ஆதியாகவும் வந்து பிறக்கின்றனர். பகவ முனி யாகம் ஒன்று செய்கின்றான். யாகத்திற்கு வேண்டிய தர்ப்பை முதலான பொருட்களைப் பறித்துக்கொடுக்கும் பணி

யினை ஆதி செய்து வருகிறாள். ஒருநாள் ஓம குண்டத்தில் நெய் வார்த்துக் கொண்டிருந்த பகவமுனி ஆதியின் அழகில் ஈடு பட்டு, காமவயப்பட்டு அப்பெண்ணோடு சேர்ந்து விடுகிறான். பின்பு அப்பெண் தோட்டிகுலம் என தெரிந்ததும் அவன் மனம் ஒரு போராட்டக் களமாக மாறுகின்றது. அவளைக் கைவிட்டு விட்டு காசியாத்திரை போக முற்படுகிறான். ஆனால் ஆதியோ காசி வரைக்கும் அவனைப் பின் தொடர்ந்து போராடி காசி பிராமணர்கள் முன்பு பகவமுனிக்கும் தனக்கும் திருமணத்தை நிகழ்த்துகின்றாள். இது ஒரு புரட்சித் திருமணம்.

திருமணங்கள்

நால்வகை வருண பேதங்களும் அவற்றின் ஒழுங்கு முறை களும் மாறுபட்ட போது திருமணம் என்ற அமைப்பில் பல்வேறு கோட்பாடுகளும் பிரிவுகளும் உருவாயிற்று. இவ்வகையில் திருமணம் என்ற நிறுவனத்தில் பல்வேறு பிரிவுகள் உண்டு என்பது சமூகவியலார் கருத்து 1. பன்மைந்தர்மணம் (Poly andry) 2. குழுமணம் (Conogemy) 3. பன்மனைவியர் மணம் (Polygemy) 4. ஒருமனை வாழ்க்கை (Monogemy) 6. அனுலோம பிரத்திலோம மணங்கள் என்பவை அவை.

இவற்றுள் உயர்ந்த வருணத்து ஆண் தாழ்ந்த வருணத்துப் பெண்ணை மண முடித்துக் கொண்டால் அது அனுலோம (Anuloma marriage) மணமாகும். தாழ்ந்த வருணத்தைச் சார்ந்த ஆண் உயர் குலப் பெண்ணை மணந்து கொண்டால் அது பிரத்திலோம (Pratiloma marriage) மணமாகும். ஆதி நாடகத்தில் அந்தணனுக்கும் தோட்டி குலப் பெண்ணுக்கும் நடைபெறும். திருமணம் அனுலோம மணமாகும்.

புரட்சியும் கலப்பு மணமும்

நாடகத்தில் பகவமுனி அந்தணக் குலத்தைச் சார்ந்தவனாக இருப்பதால் கீழ்க்குலத்துப் பெண்ணுக்குச் சம அந்தஸ்தினைக் கொடுக்க இயலவில்லை. ஏனெனில் இத்தகைய திருமணங்களுக்கு சமூக அங்கீகாரம் இல்லை. தரும சாத்திரத்தில் கூறப்படும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. உயர்ந்த குல ஆடவன் ஒருவன் சூத்திரப் பெண்களோடு வைத்துக்கொள்கின்ற உறவு நிலை விரும்பத்தகாத செயலாகக் கருதப்பட்டது. சூத்திரப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. உயர்ந்த குலத்தவர் தங்கள் சடங்கு ஆச்சாரங்களுக்கும், சாதிக் கலாச்

சாரத்திற்கும் மாறாக மற்ற சாதிப் பெண்களை மண முடிப்பது தவிர்க்கப்பட்டது. (Marriages and Family in India P. 102.) நாடகத்தில் பகவமுனி ஆதியைச் சேர்ந்து இன்புற்ற பின்பு 'பாதகி' உன்னை நான் சேரும் போது நான் பறைச்சி என்று உன் சாதியை ஏன் சொல்லாமல் விட்டு விட்டாய்? என்று கேட்டு,

"பார்ப்பான் வயிற்றினில் பாலனாய்ப் பிறந்தேனே
விஸ்வநாதா பொல்லா
பறைச்சியைப் புணர்ந்திட பாரில் விதித்தாயே
பலாத்காரமாகவே பறைச்சியைச் சேர்ந்தேனே"

(ஆதி நாடகம் ப. 80)

என வருந்தி ஆட்டி விட்ட பம்பரம் போல் சூழன்று வயிற்றில் அடித்துக் கொள்கிறான். ஒரு பெண்ணின் உணர்வைப் புரிந்து கொள்வதை விட அவள் கீழ் சாதி என்ற உணர்வே மேலோங்கி இருக்கின்றது. அதனால் அப் பெண்ணைக் கரண்டியால் அடித்துத் துரத்துகின்றான். கீழ் சாதிப் பெண்ணைத் தொட்ட பாவம் தொலைய காசியாத்திரை செல்ல முற்படுகிறான். இது கீழ் சாதியை ஏற்க மறுக்கும் உயர்ந்த குலத்தவரின் உள்ள வெளிப்பாடாகும் "சாதி அமைப்பை எதிர்த்து மனித நேயம், காதல் என்ற உணர்வுகள் வேறுபட்ட சாதியைச் சேர்ந்தவர் களிடையே உறவை ஏற்படுத்தினால் அதனை அழிக்கவும் அவ்வாறு உறவு கொண்டவர்களை அழிக்கவும் சமூகத்தில் மாறுதலை விரும்பாத உயர்ந்த வர்க்கம் முற்படுகின்றது" (வானமாமலை, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் ப. 89) என்னும் கருத்து கருதத்தக்கது.

ஆதி நாடகத்திலோ நாடகாசிரியர் சமூகத்தில் மாற்றம் தேவை என்று கருதி உயர்ந்த வர்க்கத்தாரை எதிர்த்து தாழ்ந்த குலப் பெண்ணால் ஒரு வர்க்கப் போராட்டத்தையே நிகழ்த்துவது புதுமையாகும். ஆதி தன்னை ஏமாற்ற எண்ணிய பகவ முனியிடம்

"தாலி நான் கட்டச் சொல்லிசகல பேருமறிய
கோலம் பறைச்சேரிக்குக் கொண்டு போவேன்
பறைச்சேரிக்கு அழைத்துப் போய் பறையர்களுடனே உன்னை
சரிசமானம் செய்து தாலி கட்டச் செய்வேன்"

என்று போராடுகிறாள். அந்தணர்கள் தன்னைச் சாதியில் சேர்த்துக் கொள்ள மாட்டார்களே என்று வாதிடுகின்ற பகவ

முனியிடம், ஆதி தேவதாசி மைந்தனான வசிஷ்டர் அருந்ததி என்னும் சக்கிலியப் பெண்ணை விவாகம் செய்து கொண்டார் என்றும், திருவண்ணாமலையில் அண்ணாமலையார் வண்ணாரப் பெண்ணை பெண்ணாளவில்லையா என்றும், சாத மீரிஷி புங்கனூர் சேரியில் புலைச்சியைச் சேர்ந்தணைந்தார் என்றும், வேதவியாசர் கருவூர் கரும்பறைச்சி வயிற்றில் பிறந்தார்'' என்றும் வாதிடுவதாகக்கதை புனையப்பட்டுள்ளது. நாடகாசிரியர், கீழ்ச்சாதிப் பெண்களை உயர்ந்த வர்க்கத்தார் இன்பத்திற்காகவே வைத்துக் கொள்ளலாம் என்று கூறும் தரும சாத்திர நெறிகளை உடைத்து விட்டு உயர்ந்த குலம், தாழ்ந்த குலம் ஆகிய இரண்டின் மண உறவுக்குச் சமூக அங்கீகாரம் தேவை என்பதை வலியுறுத்துகிறார்.

சமூக மரபுமீறல்

ஆதிக்கும் பகவமுனிக்கும் காசிவிசுவநாதர் கோயிலின் ஆயிரங்கால் மண்டபத்தில், அந்தணர்களுக்கு முன்பு நடக்கின்ற திருமணம் சமூக மீறலாகும். தாழ்ந்த குலப் பெண்ணை மணப்பது கொடிய பாவம். அப்படி மணந்தால் உயர் குலத்தவர் கீழ் நிலைக்குத் தள்ளப்படுவர். இந்தக் கொடிய பாவத்திற்குக் கழுவாயில்லை. உயர்ந்த குல ஆடவனோடு சேர்ந்த சூத்திரப் பெண்ணுக்குப் பிறந்த மக்கள் உயிருள்ள பிணமாகவே (living corpse) கருதப்படுவர்'' என சாத்திரங்கள் கூறுகின்றன. (Marriages and Family in India, P. 102) இங்கு நாடகத்தில் பகவமுனிக்கும் ஆதிக்கும் ஏழு குழந்தைகள் பிறக்கின்றன. வாதவூரில் ஔவையாரும், ஊத்துக்காட்டில் பத்திர காளி அம்மனும், வெள்ளிமலையில் வள்ளியம்மனும், காவிரிப்பூம்பட்டினத்தில் மாரியம்மனும், மயிலாப்பூரில் திருவள்ளுவரும், சோழ தேசத்தில் அதிகமானும், திருவாரூரில் கபிலரும் ஆகிய ஏழு குழந்தைகளும் பிறக்கின்றன என்று கதை புனையப்பட்டுள்ளது. கல்வி, அறிவு, கொடை, சான்றாண்மை, தெய்வீக ஆற்றல் அழியாத பெரும் புகழ் போன்ற உயர்பண்புகளோடு மக்கள் பிறப்பதற்குச் சாதியோ, வருண பேதங்களோ தடையாக இருக்க முடியாது என்ற கருத்து நாடகாசிரியரால் வலியுறுத்தப்படுவதும் சமூக மரபுமீறல் எனக் கொள்ளலாம்.

முடிவுரை

1. சமூகத்தில் மிகச் சாதாரண மக்கள் உயர்வடைய வேண்டும் என்பதும், சாதி வேறுபாடு சமுதாய முன்னேற்றத்திற்குத்

தடையாக இருக்கக் கூடாது என்பதும் ஆதி நாடகத்தின் நோக்கமாகும்.

2. சாதி வெறியை அழிக்க சமூகப் போராட்டம் எழ வேண்டும் என்பதையும் நாடகாசிரியர் உணர்த்துகிறார்.

3. கலப்பு மணம் சாதீயத்தை ஒழித்து சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் என்பதும் நாடகத்தில் வலியுறுத்தப்படும் கருத்தாகும்.

துணை நூல்கள்

1. K.M. Kapadia, Marriage & Family in India.
2. A. R. Gupta, Women in Hindu Society, Jyotsna prakashan, New Delhi, 1982.

புதுக்கவிதைகளில் பெண்ணுரிமை

பெ. சுபாசுசந்திரபோசு
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 017

உரிமையும், கடமையும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இயல்பாகவும், சமமாகவும் அமைய வேண்டும். ஆனால் சமய ஆதிக்கமும், பொருளாதிக்கமும், அரசியல் ஆதிக்கமும், ஆண் ஆதிக்கமும் உருவானபோது சமூக வாழ்விலும், குடும்ப வாழ்விலும், தனிமனித வாழ்விலும் பெண்களின் வாழ்வில் பேதமும், ஒரு தாழ்வும், உரிமை மறுப்பும் ஏற்பட்டன. இவற்றை எதிர்த்து இராசாராம் மோகன்ராய், பாரதியார், பெரியார், பாரதிதாசன் முதலியோர் பெண்களின் உரிமைக்கும், வாழ்வுக்கும் பாடுபட்டு உள்ளனர். பெண்ணுரிமையை நிலைநாட்டச் சட்டங்கள் இருந்தாலும் நடைமுறையில் பெண்ணுரிமை என்பது பல இடங்களில் ஒரு கனவாகவும், இலட்சியமாகவும், சில இடங்களில் ஒரு அடையாளமாகவும் தான் வெளிப்படுகின்றன. இச்சூழலில் புதுக்கவிதை கூறியுள்ள பெண்ணுரிமை இக்கட்டுரையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நேற்றைய இலக்கியத்தில் பெண்: சங்க இலக்கியத்தில் இளங்கீரனார் பாடிய,

"... ... ...உள்ளிய
வினைமுடித் தன்ன இனியோள்" (நற்றிணை)

என்பதில் பெண்மையைப் போற்றி வாழ்ந்துள்ளதை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் கண்ணகி, கோவலனின் சோதனையான நேரத்தில் 'சிலம்புள கொண்ம்' என்று நம்பிக்கை தந்ததோடு 'கள்வன்' என்று கருதிக் கணவரைக் கொன்ற பாண்டிய நெடுஞ்செழியனை எதிர்த்துக்குரல் கொடுக்கிறாள். இது ஆண்மையைப் போற்றிய பெண்ணின் எதிர்ப்புக்குரல். ஆனால் கம்பரின் காவியத்தில் வரும் சீதை அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்ட போது,

"எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன்; அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்"

என்பதில் சீதையிடம் இருந்த போர்க்குணமும், ஆண்மையைப் போற்றிய பெருமித உணர்வும் வெளிப்படுகின்றன. ஆனால் இராமனோ மீண்டு வந்த சீதையை ஒரு குற்றமற்றவளாகக் காட்டத் தீக்குளிக்கச் சொல்லும் போது பெண்மை அங்கே மறுபரிசிலனைக்குட்படுத்தப்படுகிறது.

கண்ணகி, சீதை ஆகியோரின் இச்செயல்களைப் புதுக் கவிதையாக்கிய கவிஞர் புவியரசு,

"சீதை மூழ்கிய தீயில் ராமன்
சந்தேகம் தகனம்
கண்ணகி மூட்டிய தீயில் அரசின்
கொடுங்கோன்மை தகனம்"

என்று மறுவார்ப்புச் செய்துள்ளார்.

பாரதி பாரதிதாசனில் பெண்: நாட்டு விடுதலையையும், சமுதாய விடுதலையையும் பாட வந்த பாரதியார் தான், "ஆணும், பெண்ணும் சம உரிமை பெறக் கற்பை இருவருக்கும் பொதுவில் வைப்போம்" என்னும் புதிய பண்பாட்டுக் குரலைச் சமுதாயத்தில் முன் வைத்தார். அத்தோடு பாரதியார் பெண்கள் சமுதாய வாழ்விலும், நாட்டு வாழ்விலும் சட்டங்கள், பட்டங்கள் பல பெற்றுப் பணிகள் பல ஏற்கும் புதுமைப் பெண்ணாக வரவேற்றுப் பாடியுள்ளார். இந்த கனவின் அடையாளங்களை நம்மிடையே சில இடங்களில் பார்த்தாலும் இன்னும் பெண்ணுரிமை நிறைவு பெறவில்லை. பெண்ணுக்கு விடுதலை இல்லையென்றால் உலக வாழ்க்கை இல்லை என்பதைச் சொல்லும் பாரதி,

"பெண்ணுக்கு விடுதலை நீரிலை என்றால்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை இல்லை"

என்கிறார். இதைத்தான் ஷெல்லியும்,

"Can Man be free if women be a slave"

என்பதில் பெண்ணை அடிமைப்படுத்திவிட்டு ஆண் உரிமை பெற முடியுமா? என்ற கேள்வியில் பாரதியார் உணர்வை வழிமொழிந்து உள்ளார்.

பாரதி படைத்த பாஞ்சாலி சபதத்தில் பெண்ணடிமைத் தனத்தை எதிர்த்துப் பேசும் பாஞ்சாலி,

"... ... ...என்ன
சாத்திரத் தாலெனைத் தோற்றிட்டார்?"

என்று எதிர்ப்புக்குரல் கொடுக்கிறாள். இறுதியில் பாஞ்சாலி,

"பாவிதுச் சாதனன் செந்நீர் — அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை யிரத்தம்
மேவி யிரண்டுங் கலந்து — குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்"

என்று வீரசபதத்தைப் பிரகடனப்படுத்துகின்றார்.

மக்களாட்சியையும், சமத்துவச் சமுதாயத் தேடலையும் முன்வைத்துப் பாடிய வால்ட்விட்மன் கூட,

"The female equally with the man I sing"
"I am the Poet of the woman the same as the man
And I say it is as great to be a woman as to be a man
And I say there is nothing greater than the mother of men"

என்னும் கவிதைகளில் பெண்ணுரிமையையும் தாய்மையின் பெருமையையும் பாடியுள்ளார்.

புதிய உலகம் படைக்க விரும்பிய புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் நாட்டில் பெண்ணடிமைத்தனம் இருக்கும்வரை நாட்டின் அடிமைத்தனம் போகாது என்பதை வலியுறுத்திக் கூறும்போது,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே"

என்கிறார்.

பெண்விடுதலையே அவரின் கவிதைகளில் முகப்புரையாக அமைந்துள்ளது. இந்த நோக்கத்தில்தான் பாரதிதாசன் தம் படைப்புகளில் பெண்மையை ஓங்கச் செய்தும், ஆண்மையை ஒதுங்கச் செய்துள்ளார். சம உரிமையான வாழ்வைத் தேடும் பெண்களாக வஞ்சி, அமுதவல்லி, வீரத்தாய், சுப்பம்மாள், அன்னம் முதலான பெண்மாந்தர்களைப் படைத்துக்காட்டி உள்ளார். பாரதியின் பாஞ்சாலி, கொடுமைக்காரர்களை எதிர்த்துப் போராட ஒரு வீரசபதம் எடுக்கிறாள்; ஆனால்

பாரதிதாசனின் தமிழச்சியாகிய சுப்பம்மாள் கையில் கத்தியை ஏந்திப் போராடுகிறாள்.

ஆண் - பெண் சமம் என்னும் முதன்மையைக் காணும் போதுதான் வாழ்வும் முழுமை பெறமுடியும் என்பது ஷெல்லியின் கருத்தாகும். இக்கருத்தை 'இராணிமாப்' (Queen mob) என்ற கவிதையில் ஆணும் பெண்ணும் இணைந்து சரிநிகராக நடைபோடுவதை,

"Woman and man is confidence and love
Equal and free and purse together trod
the mountain - paths of virtue"

என்று பாடியுள்ளார்,

சிற்பியின் கவிதைகள்: பரத்தமை என்பது சங்க காலந் தொட்டு இன்றுவரை இருந்து வரும் சமூகக் கொடுமையாக உள்ளது. பரத்தமை என்னும் மாறாத சாபத்தை மீட்டுப் பெண்ணின் உரிமையை, வாழ்வை நிலைநாட்ட விலைமகளிரைக் காதல் நாயகியாக ஏற்கும் ஆண்மையை 'மௌன மயக்கங்கள்' என்ற கதை கவிதையைப் படைத்துள்ளார். இக்கவிதையே பெண்ணின் மீட்பு என்றும் சொல்லலாம். இதை கவிஞர் சிற்பி, "தீர்வு அல்ல - தீர்வை நோக்கிய பயணம் இந்தக் காவியம்" என்று கூறியுள்ளார். இக்காவியத்தில் வரும் காவியத்தலைவன் (அவன்) விபச்சார விடுதியிலிருந்து மல்லிகாவை மீட்டு மணந்து பெண் விடுதலைக் கிளர்ச்சிகளில், உரிமைப் போர்க்களங்களில் போராடுகிறான். பெண்மையின் வாழ்வும் ஏற்பினும் பண்பாட்டுத் தளத்திலும் ஒரு புதிய மாற்றத்தை முன்வைத்துள்ளார் கவிஞர் சிற்பி. இதற்குக் காரணம் சமூக விடுதலை உணர்வு என்பதை மையமாக்கி,

"இப்போது எங்களுக்கு இல்லை
மௌன மயக்கங்கள்
ஏனெனில்
எங்களை இணைத்திருப்பது
சமூக விடுதலை இயக்கங்கள்"

என்று முடித்திருக்கிறார். இதில் பெண்ணுரிமையை நிலை நாட்டப் பெண்களும் ஆண்களும் இயக்கமாகச் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் சொல்லியுள்ளார். பெண்

குலம் விடுதலை அடைய முடியாதபடி பரத்தைமையாக்கி மரித்துப் போக வைக்கும் சமூக சூழலைச் சாடும் சிற்பி,

''இனி மேலாவது
அவளைக்
கொஞ்சம் தூங்கவிடுங்கள்''

(சர்ப்பயாகம் - ஒரு விலைமகளின் கல்லறை)

என்று பாடியுள்ளார். இந்த உணர்வுதான் கவிஞர் சிற்பியிடம் பரத்தமையை நீக்கிப் பெண்மையை மீட்கப் பாடிய 'மௌன மயக்கம்' என்ற கவிதைக் காவியமாகப் பரிணாமம் பெற்று உள்ளது.

இப்படிப் பல புதுக்கவிதைகளில் பெண்ணின் உரிமை முன் வைக்கப்பட்டிருந்தாலும் கவிஞர் புவியரசு கூறுவது போல் பெண் விடுதலை இன்னும் முழுமை பெறவில்லை. மக்களாட்சியின் மரபும், உரிமையும் அதிக அளவில் பேசப்படும் இந்நாளில்தான் விளம்பரங்களிலும், திரைப்படங்களிலும் பெண்கள் ஒரு நுகர்வுப் பொருளாகக் காட்டி வருகின்ற அவலநிலை ஒரு பக்கம் நிலவி வருகிறது. பெண் இயக்கங்கள் இன்னும் கூர்மையடைந்து, பூங்கொடிகள் போர்க்கொடிகளாக மாற வேண்டும். உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்கள் பொறுப்பேற்ற சமூகச் சூழலும், ஆட்சிப் பொறுப்பில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு இடம் பெற வேண்டும் என்பதும் நல்ல அடையாளங்கள். இந்த அடையாளங்களும் மத்தியில் பெண்கள் அதிக அளவில் பொது வாழ்க்கைக்கும், அரசியல் கட்சிகளின் தலைமைக்கும் முன்வர வேண்டும். பெண்கள் பொது வாழ்வில் ஒதுங்காமல் பாரதி, பாரதிதாசன், புதுக்கவிஞர்கள் கண்ட எதிர்பார்ப்பில் பொது வாழ்வுக்கு முன்வர வேண்டும். அப்போதுதான் அரசியல் ஆதிக்கமும், ஆண் ஆதிக்க சக்திகளும் வழிவிட்டு ஒதுங்கும். ஆண் எழுத்தாளர்களும், பெண் எழுத்தாளர்களும் பெண் உரிமையை அதிக அளவில், சரியான போர்க்குணத்தில் படைக்கும் போதுதான் பெண் சிசுக் கொலை, முதிர்கன்னிக் கொடுமைகள் நீங்கிப் பெண்ணுரிமை பெற்ற புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும்.

விடுகதைகளில் நம்பிக்கை

சீ. சுலோச்மணி
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம் 627 802

முன்னுரை: மொழி தோன்றிய காலத்தை வரையறுத்துக் கூற முடியாததது போன்றே வாய்மொழி இலக்கியம் தோன்றிய காலத்தையும் வரையறுத்தல் இயலாது. மனிதன் என்று சிந்திக்கும் திறனை வளர்க்க முற்பட்டானோ அன்றே எழுதா இலக்கியங்களும் உருவாகத் தொடங்கி விட்டன. அவையே ஏட்டிலக்கியங்கள் பல முகிழ்க்கக் காரணிகளாயின. செவி வழியாகப் பரவி வந்த இலக்கியங்களில் விடுகதைக்கும் சிறந்ததோர் இடமுண்டு. விடுவிக்கப்பட வேண்டிய புதிர்மைப் பண்பு கொண்ட விடுகதைகள் அவற்றை அமைப்போரின் பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், கலை, நம்பிக்கை போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் நம்பிக்கை என்னும் பண்பாடு விடுகதைகளில் புதைந்து கிடக்குமாற்றைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நம்பிக்கை: என்ன நடக்குமோ என்ற அச்சம் எழுகின்ற போது மனிதனை வழி நடத்திச் செல்லும் சிறந்ததொரு வழிகாட்டியாகச் செயல்படுவது நம்பிக்கையே. மனித வாழ்வின் பற்றுக்கோடாக விளங்கும் நம்பிக்கை இன்று நேற்றுத் தோன்றிய ஒன்றன்று. "நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும். இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில சிக்கல்களுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன" (நாட்டுப்புறவியல் ஆய்வு ப. 171). இங்ஙனம்

முன்னோர்களால் உருவாக்கப்பட்ட நம்பிக்கைகள் ஒருதலை முறையில் இருந்து மற்றொரு தலைமுறைக்கும் பரவத் தொடங்கின. சிற்றூர் மக்கள் கணக்கற்ற நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். அவற்றுள் மந்திரம், கண்ணேறு, தெய்வம், போன்றவற்றில் கொண்டுள்ள நம்பிக்கைகள் விடுகதைகளில் அமைந்து கிடப்பதைக் காண முடிகின்றது.

மந்திரம்: இனக்குழு மக்கள் எந்த தெய்வத்தையும் அறியாது இருந்தனர். அதனால் தெய்வ வழிபாட்டு முறையும் அவர்களால் அறியப்படவில்லை. எனவே தங்களின் ஆற்றல் கொண்டு தங்களுக்குப் புறம்பாக இயங்கிக் கொண்டிருக்கும் இயற்கையின் ஆற்றலை அடக்க மந்திரத்தைக் கருவியாக்கிக் கொண்டனர். வாழ்வோடு தொடர்புடைய மந்திரத்திற்கு விடுகதையிலும் இடமளித்தனர் இதற்குத்

'துடு துடு மலையிலே சுந்தர மடுவிலே
அந்தரத் தோகை மந்திரக் கூத்தாடுது' –(தயிர் மத்து)

எனும் விடுகதையினைச் சான்றாக்கலாம். தயிரைக் கடைவ தற்குப் பயன்படும் தயிர் மத்து இயங்குவது போன்ற மந்திரத் தால் ஒன்றினை இயங்கச் செய்ய முடியும் என்று நாட்டுப் புறத்தவர் நம்புகின்ற உண்மையினை இவ்விடுகதை சுட்டி நிற்றலை அறியலாம்.

இயற்கையின் தன்மைகளை அறியாத ஆதிமனிதன் அதனைக் கட்டுப்படுத்தவும், அதன்வழி பல பயன்களைப் பெறவும் உருவாக்கியதே மந்திரமாகும் என்று மந்திரத்திற்கு இலக்கணம் வரையும் மானுடவியலார் பிரேசர், அதனை ஒத்த மந்திரம் அல்லது பாவனை மந்திரம், தொற்று மந்திரம் என அவை நிகழ்த்தப்படும் தன்மை கொண்டு வகைப்படுத்துகிறார். ஏற்பட வேண்டிய விளைவும் அதற்காகச் செய்யப்படும் செயலும் ஒத்திருக்கும் என்பதே ஒத்த மந்திரம் அல்லது பாவனை மந்திர மாகும். இரு பொருட்கள் பிரிக்க முடியாதபடி ஒன்றாகின்ற போது ஒன்றிற்கு ஏற்படும் மாற்றம் மற்றவற்றையும் தொற்றிக் கொள்ளும் என்பது தொற்று மந்திரம் ஆகும்.

அசுத்த ஆவியினாலோ, நோயினாலோ பாதிக்கப்பட்டவரின் தலையை ஒருவிதமந்திரம் கூறிக் கோழி முட்டையால் மும்முறை சுற்றி, பின்னர் அம் முட்டையை முச்சந்தியில் எறியும் மந்திரச்

சிகிச்சை முறை நாட்டுப் புறத்தவரால் கடைப்பிடிக்கப் படுகிறது. இச்சிகிச்சை வழி அசுத்த ஆவி அல்லது நோய் சுற்றப்பட்ட முட்டைக்கு மாற்றப்படுகிறது என்றும் அம்முட்டையினை எறிந்து அழிப்பதன் மூலம் முட்டையில் தோற்றிக் கொண்ட அசுத்த ஆவி அல்லது நோய் அழிந்து விடுகிறது என்றும் நம்பப் படுகின்றது. இச்சிகிச்சை முறையினைத் தொற்று மந்திரத்திற்கு எடுத்துக் காட்டலாம் இந்நம்பிக்கையின் விளைவாக.

மந்திரமெல்லாம் ஒரு முட்டைக்குள்ளே
மானமெல்லாம் ஒரு கொட்டைக்குள்ளே - (பருத்தி)

என்ற விடுகதை உருவாகியுள்ளது எனலாம். இதனால் கிராமத்தவர் 'மந்திரம் கால் மதி முக்கால்' என்பதிலும், 'நோய்க்கும் பார் பேய்க்கும் பார்' என்பதிலும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளமை புலனாகின்றது.

கண்ணேறு: சிலரின் கண்களுக்குத் தீமை விளைவிக்கும் சக்தி உண்டு என்றும், அத்தகையவரின் கண்கள் பட்டால் அத்தாணி மண்டபம் கூட இடிந்து தகர்ந்து விடும் என்றும் சிற்றூரார் நம்புகின்றனர். இதன் பாதிப்பால்.

ஆயிரம் தச்சர் கூடி அதுகோடி லட்சம் கூடி
அமைந்ததாம் மண்டபம் ஒருவர் கண்பட்டு
உடைந்ததாம் மண்டபம் - (தேன் கூடு)

என்று விடுகதை பிறந்து விடுகின்றது. இதனால் புதிய வீட்டினைக் கண்ணேறிலிருந்து பாதுகாக்க வைக்கோலால் செய்யப்பட்ட பொம்மையிலும் தடியன் காயிலும் கரும்புள்ளிகள் இட்டு வீட்டின் முன்னே அவற்றைக் கட்டித் தொங்க விடுகின்றனர், கண்ணேறு என்ற ஒன்று உண்டா என்ற வினா எழுந்தாலும் அதற்காகச் செய்யப்படும் சடங்கு முறைகள் செலவில்லாத எளிய தன்மையுடையன. அத்தகு எளிய சடங்கு முறைகளினால் தொடர்புடையவர்களின் உள்ளத்தில் கண்ணேறு பாதிக்காது என்ற மன நிறைவு ஏற்படுகிறது. இம்மன நிறைவே மா-மருந் தாகவும் அமைந்து விடுகிறது'

தெய்வ நம்பிக்கை: இயற்கையோடு இணைந்த வாழ்வினை மேற்கொண்ட தொடக்க கால மனிதன் அதன் சீற்றம் கண்டு அஞ்சினான். அதனால் அதனை வழிபடத் தொடங்கினான். நாளடைவில் இயற்கையின் இயக்கத்திற்கு இறைவனே காரணம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று நம்பினான். அதனால் சிறு தெய்வங்களைப் படைத்தான். பின்னர் பெருந்

தெய்வங்களை உருவாக்கிக் கிருஷ்ணன், கண்ணன், நாராயணன், மகாலிங்கம், பூவண்ணநாதன் என்றெல்லாம் பல பெயர்கள் இட்டு வணங்கத் தொடங்கினான். அத்தெய்வப் பெயர்களை விடுகதைகளின் புறவடிவில் அமைத்துப் பூரிப்படைந்தான் என்பதற்குப்.

'பெட்டியைத் திறந்தேன் கிருஷ்ணன் பிறந்தான்'
– (நிலக்கடலை)

'அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணனுக்கு
அங்கமெல்லாம் தங்கக் கண்ணாடி' – (மயில்)

'ஒற்றைக்கால் நாராயணன் ஓடையில மீன்
பிடிக்கிறான் – (கொக்கு)

'மஞ்சணத்தி மரத்தில மகாலிங்கக் கொப்புல
மூணு முத்து இருந்து வாழுது' - (தாலி)

'செண்பகவல்லி அம்மாளும் பூவண்ணநாதனும்
சிரித்து மகிழ்ந்து தொடுத்த பூவை
சிக்கில்லாமல் அவிழ்த்தவருக்கு சிக்கந்தா மலை சீதனம்'
-- (தூக்கணாங் குருவிக் கூடு)

என்பன போன்ற விடுகதைகளை எடுத்துக் காட்டாக்கலாம்.

வழிபாட்டு முறைகள்: மனிதன், வாழ்வின் மேன்மைக்கும், தாழ்வுக்கும் முறையே இறை நம்பிக்கை, அவநம்பிக்கையே காரணமாகின்றது என்று கருதி, மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை வழிபட, கோவில்கள் கட்டி சிலை வடித்து வழிபடத் தொடங்கினான் என்பதையும் விடுகதைகள் பல விளக்குகின்றன. இதற்குக்,

'கோவிலைச் சுற்றிக் கருப்பு
கோவிலுக்குள்ளே வெளுப்பு' – (சோற்றுப்பானை)

'கொண்டையில் அடி வாங்கி
கோட்டையைப் பிளந்து
கோவில் சிலை வடிக்கும்
கோடிக் கலை படைக்கும்' – (உளி)

போன்ற விடுகதைகளைச் சான்று காட்டலாம்.

தெய்வத்திற்கு நாளும் விளக்கேற்றி தேங்காய் உடைத்து, வாழைப்பழம் படைத்து, கற்பூரம் ஏற்றி வழிபாடு செய்து வந்தால் கோடி நன்மைகள் நம்மை நாடி வரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்,

'வெள்ளப் பிள்ளையாரு கோயிலுக்கு
விளக்கேற்ற முடியாது
கருத்தப் பிள்ளையாரு கோயிலில்
கால் வைக்க முடியாது' - (கண்)

'தாடிக்காரன் மீசைக்காரன் கோவிலுக்குப் போனால்
வெள்ளைக்காரன்' - (தேங்காய்)

'மஞ்சக் குருவி ஊஞ்சாலடும்
மகா தேவனுக்குப் பூசைக்காகும்' - (வாழைப்பழம்)

'கொளுத்திய பின் கோடிக் கும்பிடு' - (கற்பூரம்)

என்பன போன்ற விடுகதைகளையும் உருவாக்கியுள்ளனர்.

தொகுப்புரை: நாட்டுப்புற மக்களின் சிந்திக்கும் ஆற்றலை வெளிப்படுத்தும் விடுகதைகள் அவர்களிடையே காணப்படும் நம்பிக்கைகளையும் பிரதிபலிக்கின்றன.

பழங்காலத்தில் இயற்கைப் பொருட்கள் பெரும் புதிராகவே மனிதனுக்குத் தோற்றம் தந்தன. அத்துடன் அச்சத்தையும் விளைவித்தன. எனவே மந்திரத்தினைக் கருவியாகக் கொண்டு அவற்றை அடக்கலாம் என்று நம்பினான். தீய சக்தியிலிருந்து மந்திரச் சடங்குகள் மூலம் விடுதலை பெறலாம் என்றும் நம்பினான். அதனால் நம்பிக்கையின் அடிப்படையாகக் கொண்டு விடுகதைகள் பல தோன்றின எனலாம்.

இன்ப துன்பங்களுக்கு இறைவனே காரணம். எனவே அவனுக்குக் கோவில் அமைத்து சிலை வடித்து, வழிபாடுகள் செய்தால் வாழ்வில் வளம் பல பெறலாம் என்ற நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டு விடுகதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அறிவியல் வளர்ந்து வரும் இன்றைய காலக் கட்டத்தில் மந்திரம், கண்ணேறு, போன்ற நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகள் என்றாலும், உளவியல் அடிப்படையில் பார்க்கின்றபோது, அவை மனித மனத்திற்கு ஒருவித நிம்மதியைத் தருகின்றன. அந் நிம்மதியே உள நோய்க்கும், உடல் நோய்க்கும் சிறந்ததொரு மருந்தாக அமைந்து விடுகின்றது எனலாம்.

கற்பும் கரணமும்

சு. சுஜாதா
பாரதிதாசன் கலை, அறிவியல் கல்லூரி
ஈரோடு – 116

கற்பு என்ற கைகோளின் மதிப்பு காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே வந்துள்ளது. ஆதிமனிதர்கள் 'கற்பை' மந்திரத் தன்மை வாய்ந்ததாகக் கருதினர். நாகரிகம் அடைந்த மக்கள் அதனை ஓர் உயர்ந்த அறமாகப் போற்றினர். போற்று கின்றனர். வளமைக்காகப் போற்றப்பட்ட புனிதமான கற்பினின்றும் மாறுபட்ட இயற்கைக்கு முரணான திணிப்பே பிற்காலக் கற்பென்று ஹேவ்லாக் எல்லீசு என்ற சமூக உளவிய லாளர் விளக்குகிறார்.

கொடுத்தற்குரிய மரபினர் கரணவழி நின்று தலைவியைக் கொடுக்கக் கொள்ளுதற்குரிய தலைவன் கொள்ளும் (தொல். பொருள். கற். 1) சடங்கு வழிப்பட்ட நிகழ்வே கற்பு என்று வரையறுக்கும் தொல்காப்பியம், மறைவெளிப்படுதல், தமரிற் பெறுதல், மகிழ்தல், புலத்தல், ஊடல் தீர்தல், பிரிதல், என்பவை கற்புக்கால நிகழ்வுகள் என வரையறுக்கிறது.

கரணம் என்பது வதுவைச் சடங்கு என்றும் கொளற்குரி மரபின் கிழவோன் ஒத்த குலத்தானும், உயர்ந்த குலத்தானும் என்றும், கொளற்குரி மரபின் கிழத்தி ஒத்த குலத்தாளும், இழிந்த குலத்தாளும் என்றும் விளக்கும் இளம்பூரணர் உரையில் ஆரியச்சாயல் படர்கிறது. நச்சினார்க்கினியர் கருத்தின்படி, வேள்விச் சடங்கோடு தலைவன் தலைவியைத் தமர் கொடுக்கக் கொள்வதே கற்பு ஆகிறது. "இவரே பிறிதோரிடத்தில் "மணம் முடிந்த மூன்று நாட்கள் வரையில் புணர்ச்சியின்றி நான்காம் நாள் புணர்கையில் தலைவன் அதற்கு உரிய காரணத்தைத் தலைவிக்குக் கற்பிப்பதும் "கற்பு" என்கிறார். முதல் நாள் திங்களுக்கும் மறுநாள் கந்தருவருக்கும், மூன்றாம் நாள் அங்கிக்கும்

மணப்பெண் அளிக்கப்பட்டு அதன் பின்னரே மணமகன் அவளைப் புணர்தல் வேண்டும் என்ற நச்சரின் விளக்கம் அல்தமிழ் நெறி யாவதை வ. சு ப. மாணிக்கம் அவர்களும் தம் நூலில் விளக்கி யுள்ளார்.

கரணம் தோன்றிய சூழல்: கரணம் தோன்றிய காலத்தையும், காரணத்தையும் "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர், யாத்தனர் கரணம் என்ப" (தொல். கற். 4) என்ற தொல்காப்பிய நூற்பா விளக்குகிறது. இதன்படி, களவுக் காலத்தில் பொய்த்தொழுதிக் குற்றம் புரிவோர் பெருகிய நிலையில் கரணம் விதிக்கப்பட்டமை புலனாகிறது. முதல் ஊழியில் கரணம் இன்றிய இல்வாழ்க்கை நடத்ததாகவும், இரண்டாம் ஊழியில் பொய்யும் வழுவும் புகுந்ததால் கரணம் தோன்றியதாகவும் இளம்பூரணர் கூறுகிறார். முதல் ஊழி என்று இவர் குறிப்பிடுவதை வரைமுறையற்ற புணர்ச்சி (Promiscuity) நிலவிய காலமாகவும், இரண்டாம் ஊழி என்பதைச் சமூகத்தில் கற்பு என்னும் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட கால மாகவும் கொள்வது பொருந்தும், காதல் வாழ்வில் விளைந்த குழப்பங்களைத் தவிர்க்கச் சான்றோரால் ஏற்படுத்தப்பட்ட சடங்குமுறையே கரணம் எனல் தகும்.

பொய்யும் வழுவும் மெய்யாதல்: பாடல்சான்ற புலனறி வழக்கம் தழுவி இயற்றப்பட்ட சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே சிற்சில இடங்களில் காணப்படும் குறிப்புகள் சமூகத்தின் மெய்யான நடப்பை உணர்த்துகின்றன.

"யாருமில்லைத்தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ (குறுந். 25)

என்ற குறுந்தொகை அடிகளில் தலைவன் பொய்த்துவிடுவானோ என்று அஞ்சும் தலைவியின் மனநிலை வெளிப்படுகிறது.

"கரும்பமல் படப்பைப் பெரும்பெயர்க் கள்ளூர்த்
திருநுதல் குறுமகள் அணிநலன் வௌவிய
அறனிலாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறியப்பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே" (அகம் 256).

என்ற அகநானூற்றுப் பாடல் வரிகளில் கள்ளூர் என்ற ஊரில் பெண் ஒருத்தியை ஏமாற்றிப் பொய்த்தொழுகிய அறனிலாளனை' ஊரவையோர் கூடி மரத்தில் கட்டி வைத்துத் தலையில் சுண்ணாம்பைக் கொட்டியமை அலரின் பெருக்கத்திற்கு உவமை யாகக் கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சி உவமையாகும் அளவிற்கு ஊரறிந்த செய்தியானமை சிந்தித்தற்குரியது.

கரணம் மணப்பதிவு: சி. இலக்குவனார் தம் தொல்காப்பிய ஆராய்ச்சியில் கரணம் என்பது பதியப்பட்ட திருமணச் சடங்கு என்று நிறுவுகிறார். கிராம, நகரங்களில் உள்ள நிலபுலக் கணக்குகளை வைத்திருந்த கணக்குப் பிள்ளைக்குக் 'கர்ணம்' என்ற பெயர் இருப்பதையும், முற்காலப் பதிவு முறையின் எச்சங்களாகவே தற்காலத்திலும் மணவோலை எழுதுதல், நிச்சயதார்த்தம், பாக்கு வெற்றிலை மாற்றம் முதலிய சடங்குகள் விளக்குகின்றமையை எடுத்துக்காட்டும் அவர் தொல்காப்பியர் காலத்திலேயே 'மணம்' பதியப் பெற்றிருந்தலையே 'கரணம்' என்ற சொல் உணர்த்துவதாகக் கூறுகிறார். திருமணத்தை (இனக்குழு) மன்றங்கள் நிகழ்த்தியிருப்பதாலேயே 'மன்றல்' என்ற சொல் மணத்தைக் குறிப்பதாய் அமைகிறது. 'மறையலராகி மன்றத்த.தே'' என்ற அகநானூற்றபடியும் மன்றத்தைப் பற்றிக் கூறுகிறது.

கற்பு விளக்கம்: கற்பிற்குத் தொல்காப்பிய நெறியில் விளக்கம் கூறப்புகுந்தோரிற் பெரும்பாலோர் காரணம் என்ற மணச்சடங்கையே கருத்திற்கொண்டதால் கற்பை நிகழ்த்தும் முறையே விவரித்தாரேயன்றி அதற்கொரு வரை யறையைக் கூறவில்லை.

கற்பித்தல்: சமூகத்தில் அகமண மரபை (Endogamy) விடுத்துப் புறமண மரபை (Excgamy) மேற்கொண்டவரிடையே ஒரு கூட்டத்தைச் சேர்ந்த பெண் பிறிதொரு கூட்டத்திற்குச் செல்கையில் அச்சமூகத்தின் வாழ்க்கை முறை, வழிபடுதெய்வம் போன்றவை பற்றிய அறிவைப் பெறவேண்டியவளாகின்றாள். ''தெய்வம் அஞ்சல் புரையறம் தெளிதல்'' என்ற தொல்காப்பிய நூற்பா வரிக்குத் ''தலைவரின் தெய்வமே (தொல் மெய். 24) தனக்கும் தெய்வமாகக்கொண்டு அஞ்சி வணங்குவதும், தனக் கொத்த இல்லறம் இன்னதென்று தெளிந்து நடப்பதும் என்று பேராசிரியர் எழுதும் உரை புறமணச் சமூகத்தில் பெண்ணிற்குப்

புதிய வாழ்வு நெறிக் கல்வி புகட்டப்படுவதை எண்ண வைக்கின்றது.

கற்பு என்பதற்குப் பாலியற் கல்வியைக் கற்பித்தல் என்ற விளக்கத்தைத் தே. தியாகராசன் கூறுகின்றார். களவின் வழி வந்த கற்பு வாழ்வில் பாற்கல்வி தேவைப்படாததால் இவ் விளக்கம் ஓரளவே ஏற்புடையதாகிறது.

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை: முல்லைநில வாழ் வோடு கற்பைப் பொருத்திப் பார்க்கும் மு. வரதராசனார் சொன்ன சொல் மாறா நிலையே கற்பு என்று பொருளுரைக் கிறார். வினைவயிற் பிரியும் தலைவர் குறித்த காலத்திற்குள் திரும்பி வருவதாகவும், மனையில் காத்திருக்கும் தலைவி அவன் வரும்வரை கலங்காமல் ஆற்றியிருப்பதாகவும் உறுதி கூறுவதை எடுத்துக்காட்டி இருவரும் இருவகை சொற்களால் கட்டுப்பட்டு மாறாமல் நடப்பதே கற்பு என்று இருசாரார்க்கும் பொதுவாக விளக்குகிறார்.

நிறையெனப்படுவது மறைபிறர் அறியாமை: கற்பைக் குறிக்க 'நிறை' என்ற சொல்லும் வழங்கப்படுகிறது. இது களவுக்கால வாழ்வோடும் தொடர்பு உடைய சொல்லாகும். தலைவனோடு களவொழுக்கம் பூண்ட தலைவி அதனைப் பிறர் அறியாதவாறு மறைத்தலை 'நிறை' எனப்படுகிறது.

''நிறையுடையேன் என்பேன்மன் யானோ என் காமம்
மறையிறந்து மன்றுபடும்'' (குறள் 1254)

''மறையலர் ஆகி மன்றத் ததே (அகம். 133) என்னும் சான்றுகள் களவில் நிறை கடந்த நிலையை எடுத்துரைக்கின்றன.

அன்றியும் ''அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி என்ற ஆடவர்க்குரிய தகுதிகளைத் தொல்காப்பியம் குறிப்பிடும்போது நிறை - ஆடவர்க்கும் உரித்தாகிறது. ''பிற நிறைக்குப் பொருள் கொள்கையில் அது மனையுறை பெண்டிர்க்கு விதிக்கப் படும் கட்டுப்பாடாகிறது.

தனிச்சொத்துரிமையும் கற்பும்: கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் தனிச்சொத்துரிமை வேரூன்றியதை எங்கெல்சு விரி வாக விளக்கியுள்ளார். இத்தொழில் ஆடவர் பங்கே மிக்கிருந்த தால் கால்நடைகளும், அவற்றால் கிடைத்த பிறபொருள்களும் பரிவர்த்தனையால் பெற்றசரக்குகளும்அவர்கட்கே உரிமையாயின சொத்துரிமை ஆடவர் கைக்கு மாறியதும் வாரிசுரிமைச் சிக்கல்

ஏற்பட்டது. இதைத் தவிர்க்கவே "ஒருத்திக்கு ஒருவன்" என்ற 'கற்பு' முறை கொண்டு வரப்பட்டது. ந.சி. கந்தையா, மனைவி கணவனுக்கு அடங்கி நடத்தலோடு கணவனை ஒழிந்த பிற ஆடவரோடு சேர்க்கை வைத்திருத்தல் கூடாது என்னும் கட்டுப் பாட்டைக் கடைப்பிடித்தொழுகுதலே 'கற்பு' என வரையறுக் கிறார்.

கற்பு – கட்டுப்பாடு: 'கற்பு' பெண்ணுக்கு விதிக்கப்பட்ட சூழலை ஆராய்ந்த பிரெண்டா பெக் என்பார் கால்நடை வளர்ப்பும் வேளாண்மையும் ஆண் ஆதிக்கத்தின் கீழ்வந்ததும். ஆண்களின் கை மேலோங்கியதையும், பெண்டிர் அவர்களைச் சார்ந்து வாழ வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதையும் விவரிக் கிறார். உடைமைச் சமூகம் பெண்களை அடிமைகள் போன்றும், பரிவர்த்தனைப் பொருள் போன்றும் நடத்தியதை சோ. இலக்கு மிரதன் பாரதியும் எடுத்துரைக்கிறார். சமுதாயத்தில் உற்பத்திக் கருவிகள் ஆண்களின் கைக்கு வந்ததும் பெண்களின் செயல் பாட்டுத்திறன் குறைந்து அவர்கள் வெறும் அழகுப்பதுமைகளாக இருக்க நேரிட்டதால், ஒருவனையே சார்ந்து வாழ்ந்தால் அழகு அழிந்து போனாலும் வாழ வயிற்றுக்குச் சோறாவது கிடைக்கு மென்று பெண்களே 'ஒரு கணவர் முறை'யாகிய கற்பை விரும்பி ஏற்றனர் என்கிறார் ராபர்ட் பிரிஃபால்ட்.

கற்பித்தல், சொல் திறம்பான்மை, நிறுத்தல் என்று 'கற்புக்குக் கூறப்பட்ட விளக்கம் மூன்றும் கட்டுப்பாட்டிலேயே அடங்கக் காணலாம். "முல்லை சான்ற கற்பு" என்ற தொடரால் கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் இது கால் கொண்டதையும் உணரலாம். 'கற்பித்தல்' என்ற விளக்கம் கற்பிக்கும் ஆடவரின் மேலாண்மையையும் கற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாடு பெண்ணுக்கே இருந்தமையையும் குறிப்பாக உணர்த்துகிறது. சொல் திறம்பா நெறியும் "ஆண் கற்பைத்" தழுவி நிற்காததால் விளைவுயிற் பிரிந்த தலைவன் வரும் வரை யிலும் எல்லா வகையிலும் ஆற்றி இருக்க வேண்டிய பெண்ணின் சார்நிலைக்கே பொருந்துகிறது. 'நிறுத்தல்' ஆகிய நிறையும் பெண்பாலார்க்கே வற்புறுத்தப்படுவதால் அதிலும் கட்டுப்பாடே கவிந்து நிற்கிறது. எனவே தந்தை வழிச் சொத்துரிமைச் சமூகத்தால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடே 'கற்பு' என்ற பொருண்மையே "இருகட்சிக்கும் பொதுவாக வைக்கும் வரை" ஏற்றுக்கொள்ளத்தக்கது.

உழையர் கூற்று

சே. செந்தமிழ்ப்பாவை
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

தொல்காப்பியர் செய்யுளியலில் அகப் பாடல்களில் கூற்று நிகழ்த்துவதற்கு உரிமை படைத்த மாந்தர்களை, களவில் கூற்று நிகழ்த்துதற்குரியோர், கற்பில் கூற்று நிகழ்த்துதற்குரியோர் என்று வகைப்படுத்தி மொழிகின்றார்.

''பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவரும் களவில் கூற்று நிகழ்த்துதற்குரியர். இவ்வறு வருடன் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவருமாகப் பன்னிருவரும் கற்பில் கூற்று நிகழ்த்துற் குரியர் ஆவர் (தொல் : பொ : 501, 502) தொல்காப்பியரால் கூற்று நிகழ்த்துற்குரியோருள் குறிக்கப்படாத உழையர் கூற்று சங்கப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. தொல்காப்பியத்தில் மட்டுமன்றி, பிற இலக்கண நூல்களிலும் கூட உழையர் கூற்று இடம்பெறாதது குறிப்பிடத்தக்கது.

உழையர் என்பதற்கு neighbours, பக்கத்தவர், ஏவலாளர் என்று லெக்சிகன் பொருள் கூறுகிறது. சங்க இலக்கியத்தில் உழையர் கூற்றாக மூன்று பாடல்களும் (அக.நா. 324, 354, 384) தலைமகன் உழையரிடம் கூறுவதாக இரண்டு பாடல்களும் ஐங்: 328. 329 உள்ளன. உழையர் கூற்றுப் பாடல்கள் அதிக மில்லையெனினும் உழையர் என்ற சொல்லாட்சி அகப்பாடல் களில் இடம்பெற்றுள்ளது. சான்றாக,

''காதல ருழைய ராகப் பெரிதுவந்து
சாறுகொளூரிற் புகல்வேன் மன்ற'' (குறு:41)

''வளர்பிறை போல வழிவழிப் பெருகி
உழைய ரன்மையி னுழப்ப தன்றியும்'' (குறு:289)

''பிரியாக் காதலொடு உழைய ராகிய'' (அக.நா:241)

"தாம் நம் உழையராகவும்" (நற்:281) என்று தலைவியும்

"காதலி உழையள் ஆகவும்" (நற்:356) என்று தலைவனும்.

"உழையிற் போகா தளிப்பினும்" (நற்:35) என்று தோழியும் தம் கூற்றில் குறிப்பிடுகின்றனர். குறிஞ்சி, முல்லை, பாலை நெய்தல் ஆகிய நான்கு திணைப்பாடல்களிலும் இச்சொல் இடம் பெற்றிருப்பதுடன், அவ்விடங்களில் பக்கத்தவர், பக்கத்தில் உள்ளவர் என்ற பொருளைக் குறித்தே நிற்கிறது. இதிலிருந்து உழையர் என்பதற்குப் பக்கத்தவர் என்று பொருள் புலப்படும். நமது வீட்டிற்குள் அருகிலுள்ளோரைப் பக்கத்து வீட்டுக்காரர் என்கிறோம். அதுபோலத் தலைவனுக்கோ அல்லது தலைவிக்கோ பக்கத்திலுள்ளவர்கள் உழையர் ஆவர். தலைமக்களுடன் நெருங்கிப் பழகுபவராகவும் இருப்பர்.

"ஊரு மயலுஞ் சேரி யோரும்
நோய்மருங் கறிதருந் தந்தையுந் தன்னையுங்
கொண்டெடுத்து மொழியப் படுத லல்லது
கூற்றுவ ணின்மை யாப்புறத் தோன்றும் (தொல்.பொ. 503)

என்ற நூற்பாவில் இவர்கள் அனைவரும் கூற்றிற்குரிமையில்லா மாந்தர்கள் என்பர் தொல்காப்பியர். பக்கத்தில் உள்ளவர்கள் பேசலாம் என்றால் கூற்றுக்குரியோருள் சேர்த்திருப்பர். பேசக் கூடாது என்றால் கூற்றிற்குரிமையில்லா மாந்தர்களுடன் சேர்த்திருப்பர். எனவே இவ்விரண்டிலும் இடம் பெறாததைக் கொண்டும், கூற்றுகளை வைத்துப் பார்க்கும் பொழுதும் உழையர் என்பதற்கு ஏவலாளர் என்றே கொள்ளல் தகும். "படம்புகு மிலேச்சர் உழையராக" (66) என்ற முல்லைப் பாட்டு அடிகளும் இக்கருத்தை அரண் செய்யும். இல்லத்தில் தலைவி மகிழ்ச்சியாக இருந்தால் தான் அங்குள்ள (பணிபுரியக் கூடிய) மற்றவர்களும் மகிழ்ச்சியாக இருக்க முடியும். தலைவனைப் பிரிந்த தலைவி வருத்த மிகுதியால் பசலை நோயுடன் காணப் படுகின்றாள். இந்நிலையில் அவள் வருத்தத்தையும், நோயையும் தீர்க்கும் ஒரே மருந்து தலைவன் வருகை. இந்நிலையில் வினை முடித்துத் தலைவன் வருவதைக் கண்டவுடன் இனித் தலைவி மகிழ்வாள் என்பதால் ஏவலாளர்களுக்கு மகிழ்ச்சி பிறக்கிறது. அதன் விளைவாகப் பிறந்தனவே உழையர் கூற்றுப் பாடல்கள் ஆகும்.

"விருந்தும் பெறுகுநள் போலுந் திருந்திழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி யரிவை
தளிரியற் கிள்ளை இனிதின் எடுத்த
... ...
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுகச்
செல்லும் நெடுந்தகை தேரே
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே" (அக.நா: 324)

"பசிய பயிரினையுடைய காட்டில் மிகுதியாக மழை பெய்தது. அதனால் குளிர்ந்த நிலத்தில் முல்லை மலரும் மாலைக் காலத்தில் தலைவன் தேர் விரைந்து செல்கின்றது. திருந்திய அணியினையும், மூங்கில் போன்ற தோளினையும், மடப்பம் வாய்ந்த மொழிகளையுமுடைய தலைவி இன்று விருந்தயர்வாள்" என்று தலைவன் கருத்துணர்ந்த உழையர் குறிப்பிடுகின்றனர். வினைமுற்றிய தலைவனிடம், "இடியென ஒலிக்கும் வென்றி முரசம் போர்க்களத்தில் ஒலிக்க, அரசன் வெற்றி பெற்றான். ஆயர்களும், ஆனினங்களோடு இல்லத்திற்குத் திரும்பினர். பாகனால் நெறிப்படுத்தப்பட்டு, விரைந்து செல்லக்கூடிய குதிரையில் வெற்றி கொண்ட உவகையுடன், நின் மனையில் புகுதலை நீ விரும்பினமையால், மையுண்ட கண்ணினையுடைய தலைவியின் அழகிய நெற்றியிற் படர்ந்த பசலை இனி எங்குத் தங்கும்? என நேரிடையாகவே உழையர் உரைக்கின்றனர். (அக.நா. 354)

"இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்தவாறு
நனியறிந் தன்றோ ... ...
... ...
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்
வரைமருள் மார்பின் நளிப்பனன் முயங்கி
மனைக் கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே"(அக.நா: 384)

"பாசறைக்கண்ணிருந்த நம் அரசன் போரில் வெற்றி பெற்றான். வெற்றியைக் கொண்டாடி விட்டுத் தேரில் ஏறிய தலைவனை, முல்லையாகிய காட்டினைக் கடந்து, தலைவியின் இல்லின் முன் தேரை நிறுத்தி இறங்குக என்றான் பாகன். பாகனின் சொற்கேட்டு மருட்சியுற்ற தலைவன் பாகனை

நோக்கி, காற்றினைக் குதிரையின் வடிவாகப் பூட்டி வந்தனையோ? இல்லை நினது மனத்தினை அங்ஙனம் பூட்டி வந்தனையோ? கூறுவாயாக என்றவன், அவனைத் தழுவி, தன் இல்லினுள் அழைத்துச் சென்றான். திருந்திய அணிகளையுடைய அவன் தலைவி விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றாள்'' என்பது தலைமகன் வரவு கண்ட உழையர் கூற்றாகும்.

''மழை பெய்தலால் சுரம் தண்ணென்றது. இனி
வருத்தமின்றிப் போகலாம் என்ற உழையர்க்குத்
தலைவன் சொல்லியது'' (ஐங்: 328)

''இடைச்சுரத்தின் கண் மீளலுறும் நெஞ்சினை
நொந்து, தலைமகன் உழையர்க்குச் சொல்லியது
(ஐங்: 329)

இந்த இரண்டும் கேட்போர் நிலையில் உழையர் இடம் பெற்றமை ஆகும்.

உழையர் ஆணா பெண்ணா?

ஒரு இல்லத்தில் பணி புரியக் கூடியவர்கள் இரு பாலராகவும் இருக்கலாம்.

''தலைவி இன்று விருந்தயர்வாள்''
''தலைவியின் பசலை இனி நீங்கி விடும்''
''தலைவி விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றாள்''

என்ற கூற்றுகளைக் காணுகின்ற பொழுது, சில ஐயங்கள் தோன்றுகின்றன. தலைவியின் பசலை நோயைப் பற்றி நன்றாக அறிந்தவள் தோழி. தலைவன் வந்து விடுவான், தலைவியின் பசலை நீங்கி விடும் என்று தனக்குள்ளோ. அல்லது தலைவி யிடமோ நேரிடையாகக் கூறக்கூடிய உரிமை படைத்தவள் தோழி. தோழியைப் போலவே பிற பெண் ஏவலாளர்களும் இந்நோயைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. அதை விடுத்து ஒரு ஏவலாளர் அதுவும் ஆண் ஏவலாளர் தலைவியின் பசலை நோயைப் பற்றித் தலைவினிடமே கூறுவது என்பது ஏற்புடைத்தன்று. அத்துடன் தலைவி விருந்து பெறுவது பற்றியும், விருந்தோம்பும் சிறப்பினைப் பற்றியும் கூறுவதால் உழையர் கூற்று நிலையில் பெண்பாலராகவும், கேட்போர் நிலையில் ஆண்பாலராகவும் இருக்கலாம்.

ஆய்வு முடிவுகள்

1. உழையரைப் பற்றியோ, அவர்கள் கூற்று உரைப்பது பற்றியோ தொல்காப்பியர் குறிப்பிடவில்லை.

2. இறையனார் களவியல், நம்பி அகப்பொருள், இலக்கண விளக்கம், சுவாமி நாதம், முத்து வீரியம் போன்ற இலக்கண நூல்களிலும் உழையர் கூற்று இடம் பெறவில்லை.

3. சங்க இலக்கியத்தில் அகநானூற்றில் மட்டுமே உழையர் கூற்று இடம் பெற்றுள்ளது. கேட்போராக ஐங்குறுநூற்றில் இருக்கின்றனர்.

4. இவ் உழையர்கள் ஏவலாளராவர்.

5. இருபாலராகவும் ஏவலாளர்கள் இருக்க கூற்றுகள் இடம் தருகின்றன.

திருமண மதிப்புகள்

மெ. செந்தாமரை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625 021

தொடக்கவுரை: வரலாற்று நோக்கில் இந்தியப் பெண்களின் சமுதாய நிலையை நோக்கும் பொழுது ஆரம்ப கால கட்டங்களில் பெண்களின் நிலை மேம்பட்டே காணப்பட்டது. வேதக் காலங்களில் பெண்கள் மேன்மையுற்றிருந்தார்கள் என்பதை வரலாற்று அறிஞர் அல்டேகர் (Alrekar) சில சான்றுகளுடன் விளக்குகிறார். 16 வயதிற்கும் பின்பே திருமணங்கள் நடந்தன. திருமணத்திற்கு முந்திய கால கட்டத்தை அறிவை வளர்க்கப் பயன்படுத்தினர். பெண்கள் தங்கள் மனதுக்கியைந்த கணவன்மார்களைத் தெர்ந்தெடுக்கும் உரிமையினையும் பெற்றிருந்தனர். பெண்கள் ஆண்களுக்கிணையான தொழில்களும் செய்து வந்தனர். தாய் வழிப் பெயர்களையே சூட்டினர். சொத்துரிமை பெண்கள் வசம்இருந்தது. பெண்கள் செய்து வந்த உழவுத் தொழிலை ஆண்கள் கைப்பற்றினர். சொத்துக்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பெண்களிடமிருந்து, ஆண்கள் வசம் போயின. இக்கால கட்டத்தில் தான் தந்தை வழிச் சமுதாயம் தோற்றம் பெற்றது எனலாம். காலம் செல்லச் செல்ல பெண்களின் நிலை வீழ்ச்சியுற்றது. பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்த நிலை மாறி ஒரு பெண் அவளது ஆயுட்காலம் முடியும் வரையிலும் காக்கப்பட வேண்டியவள். திருமணத்திற்கு முன்பாகத் தந்தையாலும், திருமணத்திற்குப்பின் கணவனாலும், முதுமையில் மகனாலும் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்று வலியுறுத்தின.

பெண்கள் ஆண்களால் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்ற நிலை தோன்றிய பொழுது பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் செய்து கொடுக்கும் பழக்கம் ஏற்பட்டது. ஒரு தந்தை தான் பெற்ற பெண் குழந்தையின் பாதுகாவற்

பொறுப்பைத் திருமணத்தின் மூலம் அடுத்தவரிடம் ஒப்படைத் தான். எனவே, பெண்கள் வலிமையற்றவர்கள் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்துக்கள் வலிமை பெற்றன. பெண்களுக்கு திருமணமே வாழ்க்கையின் குறிக் கோளாயிற்று, அவள் கணவனுக்குத் தொண்டுத் செய்து அடிமை செய்வதையும், குழந்தைகள் பெற்று வளர்க்கவும் அவர்களிடம் அடங்கி ஒடுங்கி வாழவே பயிற்றுவிக்கப்பட்டாள்.

குடும்ப வாழ்க்கையில் ஆண் ஆதிக்கம் செலுத்துபவனாகவும் பெண் அடங்கியிருக்க வேண்டிய நிர்பந்தத்திற்கும் தள்ளப் பட்டாள். "திருமணம் என்ற வரன்முறை வந்த பிறகு தான் அதிகாரங்கள் அனைத்தும் ஆடவனுச்குச் சென்றன என்கிறார்". மெக்லினன். ராஜம்கிருஷ்ணன் "திருமணம் ஒரு பெண்ணைக்காவு கொள்ளும் பலி பீடம்" என்கிறார். இத்திருமணத்தில் பெண்ணின் மதிப்புகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பெண் மன உணர்வைச் சிதைக்கும் சடங்குகள்: பெண்கள் படித்து கல்வியறிவு பெற்ற காலத்திலும் கூடப் பெண் பார்த்தல் என்பது ஒரு சடங்காக நிகழ்ந்து கொண்டுதானிருக்கிறது. திருமணச் சந்தையில் பெண் இழிவாகவே நடத்தப்படுகிறாள். வீட்டிலுள்ள வேண்டாத பொருட்களை அகற்றப் பேரம் பேசி விற்பதைப் போன்று பெண் நடத்தப் படுகிறாள். அங்கு பெண்ணின் விருப்பம் கேட்கப்படுவதில்லை. பெண் பார்ப்பதாகக் கூறிக் கொண்டு ஆண் ஓர் உறவுக் கூட்டத்தோடு வருவதும், பெண்ணின் அலங்காரத்தைப் பார்த்துவிட்டும் அவள் தரும் பலகாரங்களை உண்டுவிட்டும், வரதட்சணை பிடிக்கவில்லை என்றும், பெண்ணைப் பிடிக்க வில்லை என்றும் செல்கின்றனர். இவ்வாறு செய்யும் பொருட்டு சமூகத்தில் ஆண் தன் மேலாதிக் கத்தை நிறுவுகிறான். திருமணம்என்பது ஆண்களுக்கு வாழ்க்கையின் ஓர் அம்சமாக விளங்குகிறது. இங்கு அவனது தொழில் உத்தியோகம் பதவி உயர்வு, தொழில் முன்னேற்றம் என்பதே முக்கிய இலக்காக அமைகின்றன. ஆனால் பெண் திருமணத்தின்பொழுது ஒரு பண்ட மாற்றுப் பொருளைப் போன்றே பயன்படுத்தப்படுகிறாள். அங்கு அவளின் விருப்பு வெறுப்புகளுக்கே இடமில்லாது போய்விடுகிறது. திருமணத் திற்காகப் பெண் தன் உணர்வுகளையும், விருப்பு வெறுப்புகளை யும், ஆசைகளையும், தேவைகளையும், கனவையும், லட்சியத்தை

யும், ஆளுமையையும் அழித்துவிட்டு தன்னையே ஆணுக்கு அர்ப்பணிக்கிறாள்.

சமூக நிர்பந்தம்-வரதட்சணை: "முதலாளித்துவம் வலுப் பெறுவதன் ஒரு வடிவமே வரதட்சணையாகும்". திருமணம் இல்லாமல் ஒரு பெண்ணிற்கு கௌவுரவமான சமூக வாழ்வு இல்லை என்ற நிலையில் பையன் வீட்டார் கேட்பதையெல்லாம் கொடுத்து பெண்ணைக் கரையேற்றிவிட வேண்டும் என்ற பெண் வீட்டாரின் முனைப்பே வரதட்சணை வாங்கும் வழக்கத்தை உண்டாக்கியது. முற்காலங்களில் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும் பொழுது பெண்ணின் பெற்றோர் அன்பு காரணமாக பணமாகவோ, பொருளாகவோ சில பரிசுப் பொருட்களைக் கொடுத்தனுப்புவர். பின்னர், அதுவே நாளடைவில் வரதட்சணை யாக வலுப்பெற்றுவிட்டது என்று கூறலாம். ஆண், பெண் மண உறவுக்கு குறுக்கே வரதட்சணை வாய் பிறந்து நிற்பதை ராஜம் கிருஷ்ணனின் எறும்புக்கடி என்ற சிறுகதை உணர்த்துகிறது. "மாப்பிள்ளை வீட்டார் வந்து போகச் செலவு மாப்பிள்ளை டிரஸ், மோதிரம் அது இதுக்கெல்லாம் குடுக்கணும் இந்த இடத்தில் தான் கல்யாணம் பண்ணனும்னு அவங்க சொல்றதைக் கேக்கணும் வரதட்சணை இல்லையேங்கற ஒரு துருப்புச்சீட்டை வச்சிட்டு அவங்க மேலாவே ஆடிட்டிருப்பாங்க" (எறும்புக் கடி. ராஜம் கிருஷ்ணன், ப. 76) என்று வரதட்சணை மட்டுமல்லாது வேறுவழிகளில் வியாபாரக் கொள்ளை நடப்பதைக் காட்டு கின்றது.

வரதட்சணை கொடுக்க இயலாது ஏராளமான பெண்கள் சமூகத்தில் முதிர் கன்னிகளாகவே இருக்கின்றனர். வரதட்சணை கொடுத்து திருமணம் செய்து கொள்ள இயலாத ஒரு பெண்ணின் ஏக்கம் பெருமூச்சினை,

"பூக்களிலே நானுமொரு
பூவாய்தான் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே
பொன் விரல்கள் தீண்டினாலும்
பூமாலை யாகவியே" (கண்ணீர் பூக்கள் மு. மேத்தா)

அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர். சிலர் இரண்டாந்தாரமாகவோ, மூன்றாம் தாரமாகவோ, அல்லது வயது முதிர்ந்தவரையோ திருமணம் செய்து கொள்கின்றனர். வயது முதிர்ந்த கிழவன் இறந்து விட்டாலோ அவள் கைம்மைக்

கோலம் பூண வேண்டும் என்று கட்டாயமும் படுத்தியது. ''வெள்ளம் பெருகும்போது பெரிய பெரிய மரங்களைக் கூட வேரோடு சாய்ச்சிட்டுப் போறது தான். அந்தப் பாவி மூத்தாள் பிள்ளை என்னை அழைச்சிட்டு போய் தலையைக் கோலம் பண்ணி மூலையில் வச்சுக் குலைக்கணும்னு நினைச்சான்''. (சுழலில் மிதக்கும் தீபங்கள்-ப. 83) என்ற கூற்று இக்கருத்தினை வலியுறுத்தும்.

சமூகச் சீர்கேட்டு விளைவே பெண்சிசுக்கொலை

பெண்ணைக் கலைமகள், மலைமகள் என்று தெய்வமாகவும்' பெற்றெடுத்த தாயாகவும் பார்த்து மகிழ்ந்த இச்சமூகத்தில் தான் பெண் குழந்தை பிறந்தால் ஏதோ வராத துன்பம் வந்தது போன்றும் கருதுகின்றனர். ஆண் மக்கள் பிறந்தது முதல் இறப்பது வரை பெற்றோர் உடன் இருந்து இறுதிவரை பெற்றோரைக் காப்பாற்றும் பொறுப்புடனும் இருக்கிறார்கள். ஆனால் பெண் குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி திருமணம் செய்து கொடுப்பது பெற்றோருக்கு பெருஞ்சுமையாகவும் கருதப் பட்டது. பெண் பிறத்தலை சமூகம் ஏற்றுக் கொள்ளாததற்கு பொருளாதார அடிப்படையும் ஒரு காரணமாகும்.

பெண் குழந்தை பிறந்தால் குடும்பத்திற்குச் சுமையாக மட்டுமல்லாது அவள் ஒட்டு மொத்த சமூகத்திற்கே சுமையாகப் பார்க்கப்படுகிறாள். மனித இனப் பெருக்கத்திற்கு முக்கிய காரணியாக விளங்கும் பெண் சிசுக்களை அழித்துவிட்டு மக்கள் பெருக்கத்தினைக் கட்டுபடுத்திவிடலாம்என்ற கருத்துக்கள் தான் சுமையாகப் பார்ப்பதற்குக் காரணமாக அமைகின்றன. இதை சிமோன் தெபவ்வர் என்ற அறிஞர் ''ஒரு சமூகம் தாயை எந்த அளவு புகழ்கிறதோ அந்த அளவு அவளைச் சிதைக்கவும் செய் கிறது'' என்கிறார்.

இந்த வகையில் பெண் அழிப்புக்கு காரணிகளாக இருக்கும் வரதட்சணை சீதன வகைகளும் நியாயமாக்கப்படாமல் இல்லை. இவைகளில் இரண்டு வகையைக் கூறுகிறார் ராஜம் கிருஷ்ணன் அவை ஆட்சி பீடங்களிலோ, பெரும் பதவிகளிலோ இருப்பவர்கள் தங்கள் வாரிசுகளின் திருமணத்தைத் தண்ணீராகச் செலவழித்து தன் குமாரிகளின் திருமணத்திற்கு வைக்கும் சீர் வரிசைகள், செய்நேர்த்திகள், திருமண வைபவங்களின் ஆடம் பரங்கள், மற்றொன்று பெண்களுக்கு இவ்வரிசைகளைச் செய்தல்

சமூகத்தில் பெரிய மனித கௌவுரவத்தை நிலை நாட்டக்கூடும் என்று விரும்பும் பெற்றோர். எனவே, பெண் வர்க்கத்தைச் சுரண்டிக் கொல்லும் அந்த தருமங்கள் அவர்களாலேயே ஒப்புக் கொள்ளப்படும் சூழல் அவர்களறியாமலே உருவாகி வந்திருக் கிறன''. (காலந்தோறும் பெண் ப. 96)

பெண் சிசுக்களைக் கொல்வதற்காக நெல், எருக்கம்பால் போன்றன பயன்படுத்தப் படுகின்றன. இந்த வாழ்க்கையின் அவலங்களையே என்னால் சுமக்க முடியவில்லை. பெண்ணாக பிறந்து நீ இன்னும் அவலங்களைச் சுமக்க வேண்டுமா? என்று பெற்ற தாய்மார்களே அச்சிசுக்களுக்கு நஞ்சூட்டுகிறார்கள். பிறந்த குழந்தை பெண்ணாக இருந்தால் அதைக் கொன்று விட்டு வா என்ற ஆணின் ஆதிக்க வெறி இப் பூந்துளிகளையும் விட்டு வைக்கவில்லை.

தொகுப்புரை: ஆரம்ப கால கட்டங்களில்நிலை பெண்களின் நிலை உயர்வடைந்திருந்தது. காலம் செல்லச் செல்ல பெண்களின் நிலை வீழ்ச்சியுற்றது. பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள் என்ற நிலை தோன்ற ஆரம்பித்தது. குடும்ப வாழ்க்கையில் ஆண் ஆதிக்கம் செலுத்துபவனாகவும், பெண் அடங்கியிருப்ப வளாகவும் நிர்பந்தம் செய்யப்படுகிறாள். படித்து கல்வியறிவு பெற்றிருந்தாலும் திருமணத்தில் பெண் பார்த்தல் கட்டாய மாக்கப்படுகிறது. வரதட்சணை என்பது சமூக அங்கீகாரம் பெற்று விடுகிறது. வரதட்சணை கொடுக்க இயலாததால் பெண் குழந்தைகள் பெரிய சுமையாகக் கருதப்பட்டன. அதனால் சிசுக்கள் கருவிலேயே கொல்லப்பட்டனர். பெண்களை அடிமைப் படுத்த கற்பு என்பது ஆயுதமாகப் பயன்படுகின்றது. இச்சமூக காரணிகள் பெண் அடிமையை வளர்ப்பவையாகவே உள்ளன.

வள்ளலாரும் கல்வி இயலும்

அர. செயச்சந்திரன்
திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி
விருத்தாசலம்

ஆதி மனிதன் இயற்கையிலிருந்து நேரிடையாகக் கல்வி கற்றான். அடுத்த தலைமுறையினர் குருமுகமாகக் கேள்வி அறிவால் கல்வி கற்றனர். மூன்றாம் நிலையில் சிறிய நிலையில் ஏட்டுக்கல்வி தொடங்கியது. இன்றுள்ள பொது கல்வி முறையை நான்காம் நிலை எனலாம். வள்ளலார் ஒரு பண்முக புலமை யாளர். இது கல்வி யுகம். இந்நாளில் கல்வித் தொடர்பான அவரது சிந்தனைகளைத் தொகுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமும் தேவையுமாகும். ஆண்டு அடிப்படையில் அடிக் குறிப்புகள் இடப்பட்டுள்ளன. எண்கள் அருட்பா எண்களைக் குறிக்கும். தி.அ.உ. எண் - திருஅருட்பா உரைநடைப்பகுதியின் பக்க எண்களைக் குறிக்கும்.

அடிப்படைக் கொள்கைகள்

வள்ளலார் வாழ்ந்த காலத்திலும் பிற்காலத்திலும் மக்களுக்கு கல்வி அறிவு தேவை எனக் கருதினார். அவர் சுய முயற்சியினால்இயற்கையானஇறைவனை ஒருமுகமாகக் கொண்டு கல்வி கற்றார். இதனை "ஓதாது உணர்ந்திட ஒலி அளித்து எனக்கே ஆதாரமாகிய அருட்பெருஞ்சோதி" (4615-24, 25) எனும் அகவல் வரிகளால் அறியலாம்.

அருட்பெருஞ்சோதியாகிய இறைவன் "மகனே" (3699) எனத் தன்னை அழைத்து அறிவு புகட்டியதாகக் கூறுவதன் மூலம் ஆசிரியர்கள் மாணவர்களைப் பிள்ளைகளாகக் கருத வேண்டும் எனும் வள்ளலாரின் கருத்தினை அறியலாம். துறை, வழி, முறை, துணிவு இவற்றை உணர்த்தக் கூடியவராக ஆசிரியர் அமைய வேண்டும் என்கிறார் (4615 - 1170).

அருள்நெறி வளர்ச்சிக்கு தொண்டாற்றக் கூடிய மாணவர்களைத் தயார் செய்து அதன்மூலம் அருள்மயமான உலகினை உருவாக்க வள்ளலார் விரும்பினார். இதனால் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில தகுதிகளை வரையறை செய்தார். அவை ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எனும் பொதுநோக்கம், கடவுள் பக்தி, மனம், வாக்கு, உடல் ஆகியவற்றின் அடக்கமாகிய திரிகரண அடக்கம், நல்லொழுக்கம், நற்செய்கை என்பன (தி. அ. உ. 431).

கற்றலும் கற்பித்தலும்

கண்ணாடியின் முன் அமர்ந்து முருகக்காட்சியைக் கண்டும் சம்பந்தரைக் குருவாகக் கொண்டும் அருட்பெருஞ்சோதியரை சற்குருவாகக் கொண்டும் சுய முயற்சியால் வள்ளலார் கல்வி கற்றதைக்கொண்டு சுய சிந்தனையின் பெருமையை உணரலாம். அவ்வாறு ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற அளவு முயன்று தன்னை அறிந்தும் தானாகக் கற்றும் தேர்ச்சி அடையலாம். இதற்கு மனத்தைத் தூய ஒளி நோக்கில் நிறுத்திபெறும் அருளறிவே துணை செய்யும் என்கிறார் (தி. அ. உ. 298) அவ்விதம் செய்யும்போது ஒருமித்த மனத்தில் உள்ளுணர்வால் பல பிறவிகள் எடுத்தாலும் படித்துமுடித்தற்கரிய நூலறிவைக் கன நேரத்தில் பெறலாம் என்கிறார். இதற்கு பேருபதேசத்தில் அவர் கூறும் இறைநெறி சார்ந்த அகவழி ஆராய்ச்சி அணுகு முறையான விசாரம் என்பது துணை செய்யும்.

ஒரு பொருளை அதன் உண்மைத்தன்மை, காட்சித்தன்மை, தொழில்தன்மை எனும் (1987. வள்ளலாரின் பேருபதேசம், ஆய்வேடு, 195) மூன்று வகைகளில் பகுத்துணரலாம். தனித்தும் மனத்தால் இயற்கையுடன் ஒன்றியும் பலருடன் உரையாடியும் மேற்சொன்ன விதங்களில் அறிவைப் பெறலாம். பதினான்கு வகையான அறிவு நிலைகளை வள்ளலார் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் பேரறிவு என்பது இறை ஆற்றலை அறியும் ஆற்றல். அதனை உணர துணை செய்வது அருளறிவு. அவ்வாறு உணர்வதைத் தடை செய்வது கலையறிவு. அதன் தன்மைகளை உணர்ந்து கற்றல், கற்பித்தல் முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடித்து கற்பித்தல் கூடாது (அருட்பா. 3445). தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கள் ஆனாலும் அவற்றையும்

எளிமையாகப் புரியும்படி கற்பிக்க வேண்டும். மறைபொருள், குழூஉக்குறி கடுஞ்சொற்கள் முதலியவற்றை விளக்குவதன் மூலம் எளிமை உருவாகும். ஆசிரியரை மனத்தில் வைத்துப் போற்றுவது சிறந்த முறையில் கல்வி கற்க உதவும் என்பது அவர் கருத்து.

கல்வித்துறைகள்

தெய்வமாகிய இயற்கைப் பேராற்றல், அண்டம், மனித உடல் எனும் பிண்டம் ஆகியவற்றைப்பற்றி விசாரம் செய்ய வேண்டும் என வள்ளலார் கூறுவதால்; அறிவுத் துறைகள் இந்த மூன்று வகையில் அமையவேண்டும் என அவர் விரும்பியதாகக் கொள்ளலாம். அகவலில் இதற்கான அடிப்படைகளைத் தெளி வாகக் காணலாம். இன்றுள்ள பெரும்பாலான அனைத்து அறிவுத்துறைகள் பற்றிய செய்திகளும் வள்ளலாரின் படைப்பு களில் பரவலாக வெளிப்படுகின்றன. குறிப்பாக ஐம்பூதவியல், அண்டவியல் (4615 - 398 - 782), உணவியல் (தி.அ.உ. 237) மருத்துவம் (தி. அ. உ. 219-234), இவற்றிலேயே ஒளியியல், ஒலி யியல். உயிரியல் முதலியவை அடங்குகின்றன. சீவகாருண்ய ஒழுக்கம் எனும் நூல் மனுமுறைகண்ட வாசகம் 'சன்மார்க்க உலகின் ஒருமை' எனும் பதிகத்தைத் தொடர்ந்து அமையும் ஆறாம் திருமுறையின் பிற்பகுதியிலும், அரசியல் பொருளாதாரச் சிந்தனைகள் வெளிப்படுகின்றன. ஆய்த புரட்சி என்ற ஒன்றைத் தவிர மார்க்சியத்திற்கும் ராமலிங்கியத்திற்கும் இடையே ஒற்றுமை உண்டு என திரு.வி.க. கூறுவது வள்ளலாரது அரசியல் கொள்கையை விளக்குகிறது (1991, தமிழ்க்கலை, ப. 25).

"கல்லும் நெல்லும் கலந்து விற்றேனோ" எனக் கேட்டு நீதித்துறைக்கு வித்திடுகிறார். "வெய்யிலுக்கு ஒதுங்கும் விருட்சம்(மரம்) அழித்தேனோ" என வினவியும் (1982, திரு அருட்பா திரட்டு. 349) ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையினை கூறியும் வனப்பாதுகாப்புக் கொள்கைக்கு வித்திட்டார்.

இன்று அறிவியலார் எல்லா உயிரினங்களுக்கும் வாழும் உரிமை உண்டு எனக் கூறும் சூழல் இயல் தத்துவத்தைச் சீவ காருண்ய ஒழுக்கம் எனும் பெயரில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே எடுத்துரைத்தவர் வள்ளலார். சாகாக்கல்வி என்பதும் மக்களுக்கு அவர்கூற விரும்பிய தலைசிறந்த கல்வித்துறையாகும்.

எத்துறைகளைக் கற்பது. எவை கூடாது என்பதற்கான ஒரேவிடை கருணை உணர்ச்சியை அழிக்கக் கூடிய எதுவும் கல்வியில் இடம்பெறக் கூடாது என்பதை அடிப்படையில் வள்ளலார் வழியில் கல்வித்துறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

பயிற்றுமொழி

இன்றுள்ள பயிற்றுமொழி சிக்கலுக்கு அன்றே தீர்வு கண்டவர் வள்ளலார். தமிழ், ஆரியம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கல்வி கற்பிக்க விரும்பினார். (1987, 21) முதலிடம் தாய்மொழிக்கு அளித்திருப்பதால் தாய்மொழிவழிக் கல்வி யினையே அவர் ஆதரித்தார் எனத் தெரிகிறது. அறிவு வளர்ச்சிக் காகவும் உலகத்தொடர்பு, வாழ்க்கை மேம்பாடு முதலியவற்றிற் காகவும் பிற மொழிகளைக் கற்பதை அனுமதிக்கிறார். வள்ள லாரது மும்மொழித்திட்டம் அரசியல் சார்பற்றது; அவரது எந்தத்திட்டமும் கருணைக்கு எதிரான வற்புறுத்தல் நெறியில் அமையாது.

கல்விப்பணிகள்

சன்மார்க்க போதினி எனும் தொடக்கக்கல்வி நிலையத் தையும் சமரச வேதபாடசாலை எனும் உயர்கல்வி நிறுவனத் தையும் அமைக்க விரும்பினார், இங்கு பயிலும் மாணவர்கள் மரணமிலாப்பெருவாழ்வு உட்பட பல்வேறு துறைகளிலும் பயிற்சி பெற்று உலகெங்கும் சென்று சன்மார்க்க நெறியைப் பரப்பிட வேண்டும் எனக் கருதியிருக்கலாம் (1987. 20)

இதற்கு ஏற்ற உறைவிட பள்ளிமுறையினை உருவாக்கவே விரும்பினார். இதனை கிளைச்சாலைகள் திட்டத்தினைக் கொண்டு உணரலாம். அவற்றுள் மருத்துவமனை நூலகம், அகப்புற மானுட மேம்பாட்டு மையம் ஆகியவை குறிப்பிடத் தக்கன.

தொழுவூர் வேலாயுதனார் எனும் தமது மாணவரைக் கொண்டு தமிழகத்தில் முதல் திருக்குறள் வகுப்பை நடத்தினார். கல்வெட்டு ஆராய்ச்சிக்கு வித்திட்டார். முதியோர் கல்வி தொடங்கி வைத்தார் (ஊரனடிகள், 1995, வள்ளலாரின் தமிழ்ப் பணி, கல்விப்பணி, 19)

முழுநேர சத்துணவுத்திட்டத்தையே அறிமுகப்படுத்தினார். குழந்தை தொழிலாளர் ஒழிப்புக்காக படிக்கின்றப் பிள்ளை

களுக்கு உதவித்தொகை அளிப்பதோடு அதனை அப்பிள்ளைகளின் குடும்பத்தாருக்கும் அளிக்க விரும்பினார். (1987. 25)

கடிதங்கள் வாயிலாகக் கருத்துகளைச் சன்மார்க்க அன்பர்களுக்கு தெரிவித்த வள்ளலாரின் பணியினை அஞ்சல்வழித் திட்டத்தின் முன்னோடிப்பணி எனலாம். யோகம் முதலிய துறைகள் உட்பட மகளிருக்குக் கற்பிக்கப்பட வேண்டும் எனக் கூறி பெண்கல்விக்கு வித்திட்டார் (தி. அ. உ. 322). உபயக் கலாநிதி எனும் பட்டத்தினை தொழுவூர் வேலாயுதருக்கு வழங்கியதன் மூலம் பட்டம் வழங்குதலில் வள்ளலாருக்கு இருந்த விருப்பம் வெளிப்படுகிறது.

முடிவுகள்

1. நிறுவனம் சார்ந்தும், சாராதும் தத்தம் நிலைக்கு ஏற்பக் கல்விக் கற்கலாம்.
2. விடுதி சார்ந்த பள்ளி முறைக் கல்வியே சிறந்ததாகும்,
3. சூழல்இயல் எனப்படும் இயற்கைநெறிக் கல்வியே உலகை உய்விக்கும்.
4. வள்ளலாரது படைப்புகள் முழுவதும் ஆராய்ந்து அவரது கல்விக் கோட்பாட்டினை உருவாக்குவது இன்றியமையாப் பணியாகும்.

துணை நூல்கள்

1. இராமலிங்க அடிகள், திருஅருட்பா உரைநடைப்பகுதி, ஊரனடிகள் (பதி), சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 1978
2. ஊரனடிகள், (தொகுப்பாசிரியர்), திருஅருட்பாத் திரட்டு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 1982
3. இராமலிங்க அடிகள், திருஅருட்பா முதல் ஐந்து திருமுறைகள், ஊரனடிகள் (பதி), சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், வடலூர், 1989
4. திருஅருட்பா ஆறாம் திருமுறை, மேற்படி.
5. ஊரனடிகள் (பதி), வள்ளலாரின் தமிழ்ப்பணி, கல்விப்பணி' சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம்' வடலூர், 1995
6. கலியாணசுந்தரனார், திரு.வி.க, தமிழ்க்கலை, பாரிநிலையம், சென்னை, 1991.
7. செயச்சந்திரன், அர., வள்ளலாரின் பேருபதேசம், வெளியிடப்படாத எம்ஃபில் ஆய்வேடு, சென்னைப்பல்கலைக் கழகம், 1987.

பாரதிதாசன் எதிர்நோக்கிய தமிழ்நாடு

ச. செயசீலன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 600 113

தமிழ்நாடு இந்நூற்றாண்டில் தந்த மிகச்சிறந்த பாவலருள் ஒருவர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ்மொழி, இனம், நாடு, பண்பாடு என எல்லா நிலைகளிலும் தமிழைச் சிறப்புற அவர் பாடியுள்ளார். தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் சூழலின் பின்புலத்தில் வாழ்ந்த அவரால், இந்தியம், திராவிடம், தமிழியம் பாடப்பட்டுள்ளன. அவற்றை அவர் எந்த நிலையில் ஒப்பி நின்றார் என நோக்கி, அவர் 'தமிழ்நாட்டை' எந்நிலையில் எதிர்நோக்கினார் என ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

இந்தியம்

பாரதிக்கு தாசனாகப் பாரதிதாசனாகத் தனது பெயரை மாற்றிக்கொண்ட சுப்புரத்தின பாவலரிடம் பாரதியின் தொடர்பு இந்தியத்தைப் பாடத் தூண்டியது. "தொடக்கக்கட்டத்தில் பாரதிதாசன் இந்தியா பற்றியும் கதர்ப்பாட்டுக்களையும் புனைந்தார்" (ப. 29, திரவியம், கா., தேசியம் வளர்த்த தமிழ், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1982). இந்தியா ஒன்று என உளமார நம்பி ஒப்பி பாடியிருக்கிறார் (ப. 145, தமிழன்பன், புரட்சிக்கவிஞர் கவிதைகளில் தமிழ் தமிழன் தமிழ்நாடு, பாப்லோ பாரதி பதிப்பகம், சென்னை, 1994). ஆனால் அவர் மனம் அதில் நிலைத்திடவில்லை. ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலைப் போராட்டம் முற்றுப்பெறும் முன்பே இந்தியா பற்றிப் பாடுவதை விட்டுவிட்டார் (ப. 32, திரவியம், கா.). எனினும் மீண்டும் பாரதிதாசன் 1962இல் பாரத ஒற்றுமைப் பற்றிப் பாடுகிறார் (ப. 147, தமிழன்பன்). இப்பாடல்களை நோக்க அவை சீனப்படையெடுப்பின் எதிர்ப்பினால் எழுந்தவை (மேலது) என அறியமுடிகிறது.

எனவே, பாரதிதாசன் தொடக்கத்தில் சிறிது, காலமும் இறுதியில் சிறிது காலமும் இந்தியம் பற்றிப் பாடியுள்ளார். இக்காலங்களை நோக்க இந்தியம் பற்றிப் பாடிய முதல் கட்டம் ஆங்கிலேயர் எதிர்ப்பில் எழுந்தவை. அடுத்தக்கட்டம் சீனர் எதிர்ப்பில் எழுந்தவை. எனவே, அவர் பாடிய இந்தியம், இந்திய ஒற்றுமை என்பன ஆங்கிலேயே சீனர் எதிர்ப்பில் எழுந்தவையே ஆகும்.

திராவிடம்

பாரதிதாசன் தந்தை பெரியாரோடும் அவரின் பகுத்தறிவு, ஆரியர் எதிர்ப்பு இயக்கங்களோடும் தொடர்புகொண்டு இருந்தார். அதன் தாக்கம் ஆங்கில எதிர்ப்பிலிருந்த அவரை ஆரிய எதிர்ப்புக்கு அழைத்து வந்தது. திராவிடநாடு என்ற கருத்தாய் அது வெளிப்பட்டது.

> ''செந்தமிழ் நாட்டாட்சிப் பெற்றுச்
> செம்மை திராவிடத்தில்'' (ப. 9. பாரதிதாசன் குயில் பாடல்கள், பூம்புகார் பிரசுரம் பிரஸ், சென்னை, 2-ஆம் பதிப்பு, 1983)

எனப் பாடினார். அந்த திராவிடத்தை அவர் ஏற்றுப் போற்றியதும் கூட,

> ''தெலுங்கு கன்னடம் கேரளம் வங்கம்
> எனும் பெயருடையவை எல்லாம் தமிழகமே''

என பரந்துபட்ட தமிழகத்தை அதில் கண்டதால்தான். இந்த திராவிட நாடு எண்ணமும் கூட, திராவிட நாடு என்று சொல்வது சரியன்று தமிழ்நாடே வேண்டும் (ப. 25, தந்தை பெரியார், தமிழ்நாடு தமிழருக்கே, தமிழ்நாடு தன்மதிப்புரை பரப்புகைக் கழகம், மூன்றாம் பதிப்பு, 1925) என்ற பெரியாரின் முழக்கத்திற்குப் பின் மாறுபாடு அடைந்தது.

தமிழ் தேசம்

நில அமைப்பு, மரபுவழிப்பட்ட இனம், வாழ்வியல், சமய பண்பாட்டுக் கூறுகள், மொழி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே தேசம் என்ற வரையறை அமையும். இதிலும் மொழி முதன்மையாக நிற்றலை வரலாறு சுட்டுகிறது. இரு மாறுபட்ட அரசியல் முறைகளைக் கொண்டிருந்த கிழக்கு செர்மனியும் மேற்கு செர்மனியும் இணைந்தது ஒரே மொழி என்ற நிலையில்தான். ஒரே அரசியல், வாழ்க்கை முறைகளைக் கொண்டிருந்த செக்கோசுலோவாகிய செக், சுலோவோகியா

என இரு நாடுகளாகப் பிரிந்ததும் அவை இரு மொழி வழிப்பட்ட தேசியங்கள் என்பதாலேயே.

இந்தியாவை நோக்க, "அதற்கென்று ஒரு பொதுமொழியோ பண்பாடோ வரலாற்றுப் பின்னணியோ இல்லை. இருக்கவும் முடியாது" (ப. 1, தியாகு, முடியவில்லை மொழிப்போர், தமிழ் மாணவர் இயக்கம், சென்னை, 1995). அதனால், இந்தியா என்ற ஒரு தேசிய இனம் வரலாற்றில் எந்த காலத்திலும் இருந்ததில்லை. இனியும் அப்படி உருவாக்க முடியாது. இதுதான் விஞ்ஞானம். இயற்கையும் ஆகும் (ப.62, ஞானையா டி., மதவாத அரசியலில் இந்தியாவின் எதிர்காலம், பாட்டாளித் தோழன் பதிப்பகம், சென்னை, 1993). இந்தியா ஆங்கிலேயரால் செயற் கையாக உருவாக்கப்பட்ட பல்வேறு இனங்களின் சிறைக்கூடம் (ப.1, பச்சையப்பன், கி.த., தமிழ் உரிமைக் கூட்டமைப்பு கோரிக்கை வரைவு அறிக்கை, தமிழ் உரிமை கூட்டமைப்பு, 1996). இந்தியாவின் 2/3 பகுதியே ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. 632 தனி அரசர்கள் இருந்தனர் (ப.17, பெரியார்).

இதே நேரத்தில் 'ஒரு நாட்டை/நாட்டினத்தை வரையறை செய்வதற்கு அகவயமாகவும் புறவயமாகவும் தேவைப்படும் கூறுகள் அனைத்தையும் தமிழகம் பெற்றிருக்கிறது. தமிழ் நாடு தனித்த நாடாகவும், தமிழர் தனித்த நாட்டினத்தவராகவும் இருந்து தனிப்பட்ட வரலாற்றுப் போக்கை பழங்காலத்திலிருந்தே உருவாக்கி வந்திருக்கின்றனர் (ப.212, கிருஷ்ணன், ப., தமிழ் இலக்கியங்களில் தமிழ் இனம், தமிழ்மொழி, தமிழ்நாடு, இளந்தமிழர் பதிப்பகம், சென்னை, 1984).

இவ்வாறு தமிழகம் தமிழ் தேசமாகவும், தமிழ் நாடாகவும் ஏற்கத்தக்க தகுதியுடையதாக இருக்கிறது.

தமிழ்நாடு:

தமிழகம், தமிழ்நாடு, தமிழ் வரை என தமிழ் நிலத்தை அமைத்தவர் இளங்கோவடிகள் (ப.162, சஞ்சீவி, ந., சிலப்பதிகார விருந்து, அருள்வாழ்வு பதிப்பகம், சென்னை, 4ஆம் பதிப்பு, 1976). அவரே தமிழ்நாடு எனும் சொல்லாட்சியையும் அமைத்தார் (ப.132' தமிழன்பன்). பாரதியும், 'செந்தமிழ்நாடு, எங்கள் தந்தையர் நாடு, சோழபாண்டிய தாய்நாடு-தமிழ்நாடு' என எல்லை வகுத்துத் தெளிவாகப் பாடுகிறார் (ப:47,

பாரதியார், பாரதியார் கவிதைகள், அருணா பதிப்பகம் மதுரை, 1959)

அரசு செயல் முறையில் 'தமிழ்நாடு' எனும் பெயரை ஏற்கா முன்பே அறிஞர் அதைப் பயன்படுத்தினர். 1942ஆம் ஆண்டிலேயே 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' என 'தமிழ்நாடு' எனும் பெயர் கொண்டு அமைப்பு ஏற்படுத்தியவர் இன்றைய முதல்வர் மு. கருணாநிதி (ப.55, அன்பரசன்.கல்வி. மு.ப, தமிழ் உணர்வு பெறுவோம், கல்வி வெளியீடு, சென்னை, 1991). பாரதிதாசன்,

"செந்தமிழா உன் பேரென்ன செப்பென்றால்
இந்தியா என்றே இளிக்கின்றான் என்தாயே"

(ப.26, பாரதிதாசன்,
தமிழுக்கு அமுதென்று பேர்,
பூம்புகார் பிரசுரம்,
சென்னை, 1978).

வையத்துள் சிறந்த பண்பாடு
வாய்த்த நாடு செந்தமிழ் நாடு (ப.19, பாரதிதாசன்)

என அதன் சிறப்பைச் சுட்டுகிறார்.

"நம் தமிழ்நாடே நம்தாய்நாடு" (ப.41, பாரதிதாசன்)

எனத் தெளிவாக அறிவித்தார்.

என்னருந் தமிழ்நாட்டில் எல்லோரும் கல்வி கற்றிடும் சிறந்த நாளை எதிர்நோக்குகிறார்.

அயல்புலத்துத் தமிழர் அல்லலுரும்போது, நம் இனத்தார் செம்மைத் தமிழர்கள் இலங்கை அரசினால் எய்தும் இன்னலை ஆதரித்த இந்தியத்தைக் கண்டிக்கிறார் (ப.101). அவர் தில்லிக்கு எச்சரிக்கையாய்,

"பூனையல்ல தமிழ்நாடு நெஞ்சம் அஞ்சாப்
புலி என்று காட்டும் மட்டும் அவர் திருந்தார்" (ப.99)

என்கிறார். இவ்வாறு தமிழ்நாடே தமிழர் தாய்நாடு என்று முழங்கினார் பாரதிதாசன்.

தமிழ்நாட்டு விடுதலை

தமிழ்நாடே தாய்நாடு என முழங்கிய பாரதிதாசன்,

"தன்நாட்டைத் தான் பெறான் உலகில்
என் நாட்டானாயினும் இழிந்தோன்" (ப.44)

எனத் தெளிவாய் அறிந்திருந்தார். அதனால்,

> ''தமிழகம் மீள வேண்டும் தமிழர்கள் வாழவேண்டும்'' (ப.29)

என்பதோடு,

> ''அதுதான் என் ஆசை - தமிழ்
> அன்னை அவள் முன்னைப்போலத்
> தன்னைத் தானே ஆளவேண்டும்'' (ப.18)

எனத் தனது ஆசையை வெளிப்படுத்துகிறார்.

'என் தாய்நாடே இத்தமிழ்நாடே' என அழைத்து தமிழக வளமையெலாம் கூறி (ப.15. தமிழன்பன்), அந்தத் தமிழகம்,

> ''விடுதலை பெறுவது முதல்வேலை
> அடிமையில் உழல்வது முடியாது
> விழி துயில்வது மிகு தவறாகும்'' (ப.78)

என்பதோடு 'நம் தமிழ் நாட்டை விடுதலை செய்வோம்' (40) என அழைப்பு விடுத்து,

> ''சலுகை போனால் போகட்டும், என் அலுவல்
> போனால் போகட்டும்
> தலைமுறை ஒருகோடி கண்ட என்தமிழ் விடுதலை
> ஆகட்டும்'' (23)

எனத் தானே முன்வருகிறார். இவ்வாறு தமிழின, தமிழ்நாட்டு விடுதலையைப் பாடி தானே களம் காண வரும் வீரராய் பாரதிதாசன் அமைகிறார்.

தொகுப்புரை

ஆங்கில, சீன எதிர்ப்பாய் இந்தியாவையும், ஆரிய எதிர்ப் பாய் திராவிடத்தையும் சிறிது பாடினார்.

இந்தியா தனி தேசமல்ல; தமிழ்நாடு தனிதேசம், நாடு. அதுவே தமிழர் தாய்நாடு. அது விடுதலை பெறவேண்டும் என்ற பாரதிதாசன், 'நம் தமிழ்நாட்டை விடுதலை செய்வோம்' என அழைப்பு விடுக்கிறார்.

கைக்கிளை

சு. செல்லையாபிள்ளை
தெ. தி. இந்துக்கல்லூரி,
நாகர்கோவில் – 629 002

முகவுரை

தமிழ்மொழியின் தனிச்சிறப்பு அதில் அமைந்துள்ள பொருள் இலக்கணம். பிறமொழிகளில் எழுத்து இலக்கணமும் சொல் இலக்கணமும் உள்ளனவே அன்றி மக்கள் வாழ்க்கையைக் குறித்த பொருள் இலக்கணம் இல்லை. பொருள் அகம் புறம் என இரண்டாகப் பகுக்கப்படும். அகத்திணையைத் தொல்காப்பியம் கைக்கிளை, அன்பின் ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) பாலை, பெருந்திணை என்னும் ஏழு திணைகளாகப் பகுத்துப் பேசும். காதல் என்பது வாழ்க்கையோடு தொடர் புடையது. கைக்கிளையை ஒருதலைக்காமம் என்றும் ஐந்திணையை ஒத்த காமம் என்றும் பெருந்திணையை ஒவ்வாக்காமம் என்றும் கூறுவர்.

கைக்கிளை: அகத்திணையில் அடங்கிய ஏழு திணைகளில் கைக்கிளை முதலிடம் பெற்றாலும், அதன் இலக்கணம் ஐந்திணை விரிவுக்குப் பின்பே தொல்காப்பியத்தில் கூறப்படுகிறது. கைக் கிளை விரிவு இல்லாதது. இத்திணை குறித்தபாடல்கள் கலித் தொகையில் நான்கே (56, 57, 58, 109) உள்ளன. இதன்மூலம் கைக்கிளையின் சிறுநிலை தெரிய வருகிறது.

கைக்கிளை – விளக்கம்

காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கியப் புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே

– (தொல். அகத். 53)

பருவம் எய்தாத இளம்பெண் ஒருத்தியை (பருவம் எய்தின வளாக மயங்கி) ஒருவன் காதல் கொள்கிறான். காதல் துன்பம் கொண்டு நன்மை எனவும் (தனக்குச் சாதகமாகவும்) தீமை எனவும் (தனக்குப் பாதகமாகவும்) அவளைத் தன்னோடு உறவு படுத்திச் செருக்குறுகிறான். ஆனால் அவளிடமிருந்து எந்தவித மறுமொழியும் கிடைக்கவில்லை. "சொல் எதிர் பெறா அன்" என்றாலும் தனக்குத்தானே சொல்லி இன்புறுகிறான். இதுவே கைக்கிளையின் விளக்கமாகத் தொல்காப்பியம் தரும் கருத்து.

தொல்காப்பியர் 'காமஞ் சாலா இளமையோள் வயின்' என்று குறிப்பிட, நம்பியகப்பொருள் "காமஞ் சான்ற இளமை யோள் வயிற்" (ந.அ. 29) எனக் குறிப்பிடுகிறது.

காமஞ்சாலா இளமையோள் – விளக்கம்; ஒருவன் ஒரு பெண்ணைக் கண்டு காம உணர்வு கொள்கிறான். ஆனால் அப்பெண் காம உணர்வு தோன்றாத பேதைப் பெண். எனவே அவளிடத்து யாதொரு குறிப்பும் தோன்றவில்லை. அதன்பிறகே அப்பெண் பருவம் வராத பெண் என்பதைத் தெரிந்து கொண்டான். முதலில் பெண்ணின் உடல் தோற்றத்தைக் கண்டு குமரிப்பெண் என நினைத்துத் தன் காதலை அப்பெண்ணிடம் புலப்படுத்தினான். ஆனால் அவளிடம் உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ எந்தவிதமான செயல்களும் தோன்றாத காரணத்தால் அவள் காதல் கனியும் பருவம் வராத பெண் பக்குவம் வராத பெண் எனத் தெரிந்து கொண்டான். பெருமையும் உரனும் உடைய தலைவன் தன் காதலைப் பின் வாங்கிக் கொண்டான். இது ஒரு பொருள்.

இரண்டாவதாக, வயதிற்கு வராத பெதும்பைப் பருவம் (11 வயது) உள்ள பெண் என்பதைத் தெரிந்தே தலைவன் காதலிக்க, அவளிடத்துக் காதல் உணர்ச்சி தோன்றாததால் தன் காதலைத் தடுத்து நிறுத்திக் கொண்டான் எனப் பொருள் உரைப்பர் இரண்டாவது கருத்துப் பொருந்தவில்லை.

கைக்கிளை என்பது பருவம் வாய்ந்த இளைஞன் ஒருவனுக்கும் தோற்றத்தால் எடுப்பு இல்லாத 11 வயது பெண்ணிற்கும் நிகழும் காதல் நிகழ்ச்சியைக் கூறும் திணை அன்று. இளைஞனால் காதலிக்கப்பட்ட பெண் பூப்படையாதவள் என்றாலும் கூடிய விரைவில் வயதுக்கு வரக்கூடிய பெண்ணாக இருப்பவளே. இதனையே "காமஞ்சாலா இளமையோள்" எனத்

தொல்காப்பியர் குறிக்கிறார். பருவம் வாய்ந்த பெண்களே காதல் செய்வதற்கும், திருமணம் செய்வதற்கும் உரியவர்கள் ஆனால் பருவம் வராத பெண்ணிடம் இளைஞன் காதல் கொள்ளும் காட்சியைக் கலித்தொகை (56, 58) சித்திரிக்கிறது.

தலைவன் பெண்ணின் உடலழகைப் பாராட்டி, இத்தகைய அழகைக் கண்டால் யாராவது காமம் கொள்ளாமல் இருப்பாரா? என வினவுகிறான். அந்த இளைஞன் பேசுகின்ற காதல் வார்த்தைகளை அப்பெண் கேட்கவில்லை. தனது அழகு காரணமாகத் தலைவன் படும் துயரத்தை அப்பெண் அறிய வில்லை.

ஏனெனில் அப்பெண் முன்னிலையில் அவள் கேட்கும்படி யாகவோ உணரும் படியாகவோ நேருக்குநேர் நின்று அந்த இளைஞன் கூறவில்லை. இளைஞன் தனது உள்ளத்தில் வாயளவில் கூறிக் கொள்கின்றானே தவிர நேரிடையாகக் கூறவில்லை. தனது காதலைப் புலப்படுத்த அவன் மனம் ஆசைப்படுகிறது.

அந்தத் தலைவனைப் பற்றியோ அவனது காதலைப் பற்றியோ காமஞ்சாலா இளம்பெண் ஒன்றுமே அறியமாட்டாள். ஆனால் இளைஞன் தானாக மனதில் ஒன்றை நினைத்துக் கொண்டு பேராசைப்பட்டுத் துன்பப்படுகின்றான்.

"நேர்சிலம்பு அரிஆர்ப்ப நிரைதொடிக்கை வீசினை
ஆருயிர் வௌவிக்கொண்டு அறிந்துஈயாது இறப்பாய்
கேள்" - (கலித் 58)

எனக் கலித்தொகை இளைஞன் புலம்புகிறான். இன்னொரு இளைஞன் தான் அப்பெண்ணிடம் பலவற்றைக் கூறியும் அவளிடம் எந்தவித மாற்றமும் தோன்றவில்லை எனக் (கலித். 56) கூறுகிறான்.

தான் விரும்பும் அப்பெண் தன்னை விரும்பவில்லை என்று ஓரளவு உண்மையை உணர்ந்தவுடன் தன் காதல் அரும்பைக் கிள்ளி எறிகிறான். முதலில் தான் பார்த்த பெண் குமரிப் பெண் போலத் தோற்றம் அளித்த காரணத்தினால்தான் காதல் கொண்டான். இம்மயக்கத் தோற்றத்தின் அடிப்படையிலேயே கைக்கிளைக்காதல் அரும்புகிறது. இத்தகைய கைக்கிளைத் தலைவனைக் குறை கூறலாகாது. தோற்றத்தைக் கண்டு தான் காதலித்த பெண் குமரிப்பெண் அல்ல என்பதை உணர்ந்தவுடன்

கைக்கிளை - ஆண்பாற்குரியது: கைக்கிளைக் குறியீடு இருபாலார்க்கும் பொருந்தும் என்றாலும் இளைஞனின் காதலை எடுத்துக் கூறுவதே மரபு என்பார் ச. சோமசுந்தர பாரதியார். (தொல். அகத். உரை. ப. 185) ''சொல் எதிர்பெறா அன்'' என்பதிலிருந்து அப்பெண் பேசவில்லை என்பது தெளிவாகிறது. இளம்பெண்கள் தங்கள் காதலை முதலில் எடுத்துக்கூறும் மரபு கிடையாது. பருவம் வந்த பெண்கள் பருவமடையாத ஆண்களைக் காமுறுவதும் மரபு அல்ல. அதுமட்டுமல்ல ஒரு பெண் தன் காம உணர்வைத் தானே முதலில் கூறுவதும் இல்லை.

> ''தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்
> எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை''

- (தொல். கள. 28)

இவையெல்லாம் கொண்டு பார்க்கின்றபோது அகத்திணைக் கைக்கிளையில் பெண்பாற்கு இடமே இல்லை என்பதை அறியலாம். பெண்ணைப் போல ஆணும் நாணம் கொண்டு தன் காதலை அடக்கிக் கொண்டால் காதலைப் புலப்படுத்துவது வேறு யார்? ஆதலின் ஆணே தன் காதல் உணர்வை முதலில் வெளிப்படுத்துவான்.

காமஞ் சாலா இளமையோள்: ''காமஞ் சாலா இளமையோள்'' என்பதற்குக் காமக்குறிப்பு இல்லாத பேதைச் சிறுமி (7 வயது) எனப் பொருள் கொள்வதும் உண்டு. ஆனால் இது பொருந்தாது. கைக்கிளைத் தலைவன் தான் கண்ட பெண்ணின் உறுப்புக்கள் தன்னை மிகவும் வருத்துவதாகக் கூறுகிறான். வருணனைகள் முழுவதும் குமரிப் பருவத்தை அடையப் போகும் நிலையையுடைய பெதும்பைப் பருவத்தாள் என்பதையே உணர்த்துகின்றன. (கலித்தொகை. 56, 57, 58, 109)

கைக்கிளை என்பது ஒரு மனநிலை: காமஞ்சாலாத பெண்ணை (பக்குவம் எய்தாத பெண்ணை) ஓர் இளைஞன் காதலிக்கும் வழக்கம் சமுதாயத்தில் கிடையாது. ஆனாலும் இக்காமத்தன்மை இளைஞர் மனத்தில் எழுவது இயல்பே. பெண்ணின் உடல் அழகால் பருவம் மயங்கிய இளைஞன் கொள்ளும் மனநிலையைச் சுட்டிக்காட்டுவதே அகத்திணைக் கைக்கிளை. இளம்பெண்களைக் காணுகின்றபோது இளைஞர்

உள்ளத்தில் இயல்பாகவே ஓர் உணர்ச்சி தோன்றும். ஆனால் அது காமத்தைத் தந்த பெண்ணுக்கும் ஏனையோர்க்கும் தெரியாது. ஆடவன் மனத்தில் தோன்றி மாறுவது. அதைக் குற்றமுடையதாகக் கருத முடியாது.

அகப்புறக்கைக்கிளை: நம்பியகப்பொருள், காமஞ்சாலாப் பெண்ணிடம் அவள் குறிப்பறிவுறாது குறுகி அவளிடம் கூறுவது அகப்புறக் கைக்கிளை (ந. அ. 241) எனவும், இது இறைமை இல்லோர்க்கும் இழிகுலத்தோர்க்கும் உரியது (ந. அ. 242) எனவும் கூறும் காம உணர்வு இன்னும் வராத பெண்ணை விரும்பி, அவளை அணுகி நிறை அழிந்து நிகழ்த்துதல் குற்றமுடைய அகப்புறக்கைக்கிளை என மாறாகப் பொருள் (319) உணர்த்துகிறது.

புறத்திணைக்கைக்கிளை: புறத்திணையிலும் கைக்கிளை இடம் பெறுகிறது. தன்னை விரும்பாத தலைவியைத் தலைவன் காதல் கொள்வது ஆண்பாற் கைக்கிளை எனவும், தன்னை விரும்பாத தலைவனைத் தலைவி காதல் கொள்வது பெண்பாற் கைக்கிளை எனவும் கூறப்படும். அகத்திணைக் கைக்கிளையைச் சிறப்புடைக் கைக்கிளை எனவும் அகப்புறக்கைக்கிளை, புறத்திணைக் கைக்கிளை ஆகியவற்றைச் சிறப்பில்லாக் கைக்கிளை எனவும் அடக்குவர். அகத்திணைக் கைக்கிளை ஆண்மகனிடத்தில் மட்டுமே தோன்றுவது. புறத்திணைக் கைக்கிளை பருவம் எய்தின இருபாலார் இடையே நிகழ்கின்ற அறிந்த கைக்கிளையாய் அமைய, அகத்திணைக் கைக்கிளை பருவம் வாய்ந்த ஆடவனிடம் மட்டிலுமே நிகழும் அறியாக் கைக்கிளையாக அமைகிறது.

அகத்திணைக் கைக்கிளை உள்ளத்தில் சிறிதுநேரம் நின்றாலும், துறை விரிவு இல்லை என்றாலும் பெருமையும் சிறப்பும் உடையது. ஆதலின் திணை என்ற பெயரைப் பெற்று அகத்திணை ஏழில் ஒன்றாகவும் அகத்திணையின் தொடக்கப் பகுதியாகவும் விளங்குகிறது.

நாட்டியத் தமிழ்

சண்முக. செல்வகணபதி
அரசர் கல்லூரி
திருவையாறு – 613 204

பொருள் நிலைக்கு முக்கியநிலைதரும் இயற்றமிழும், ஓசை இன்பத்தை உயிர் நிலையாகக் கொண்ட இசைத்தமிழும், பல்வகைச் சுவையுணர்வுகளை வெளிப்படுத்தும் நாடகத்தமிழும் தமிழ்மொழியின் முப்பரிணாமங்களாக விளங்குகின்றன. நாடகத் தமிழின் ஓர் அங்கமாக நாட்டியத் தமிழ் விளங்குகின்றது. காந்தாரம் இசையமைத்துக் காரிகையார் பண்பாடவும், வலம் வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சிக் கிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் தமிழகத்தில் முத்தமிழும் செம்மாந்து நடைபோட்டதனை வரலாறு கூறும். சிற்றிசை, பேரிசை, இசை நூல், இசைவிளக்கம், பஞ்சமாபாரதீயம், பண்அமைதி, பண்வரி விளக்கம், பாட்டும் பண்ணும், இசைக்கூறு, பாடற்பண்பு, தாளவகையோத்து, தாளசமுத்திரம், கருவி இலக்கணம், ஆளத்தி அமைப்பு செயிற்றியம் முதலிய நூல்கள் தமிழகத்தில் இருந்துள்ளன. பஞ்ச மரபு, கூத்துநூல், அபிநய தர்ப்பணம், மகாபாரத சூடாமணி என்ற நூல்கள் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளன.

நாட்டியத்தமிழின் இலக்கணமாகவும், இலக்கியமாகவும் சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இந்நூலுக்கு எழுதப்பட்ட அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும் நாட்டியத் தமிழின் வளமையையும், பெருமையையும் கூறுகின்றன. சீவகசிந்தாமணி, பெருங்கதை, திருமுறை, திவ்வியபிரபந்தம், திருப்புகழ், தமிழிசை ஆதிமும்மூர்த்திகளின் பாடல்கள், திருவருட்பா, பாரதி, பாரதிதாசன் பாடல்கள் போன்றவற்றில் நாட்டியத்தமிழின் நளினக் காட்சிகளைக் காணலாம்.

"குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமுங் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே."

ஆடல் வல்லானின் அழகுக் காட்சியைக் காண மனிதப்பிறவியை நாவுக்கரசர் வேண்டுகிறார். கடவுள் வடிவில் கலையையும், கலையைக் கடவுளாகவும் தமிழர்கள் கண்டனர். ஆடற்கலையின் வடிவமாகச் சிவபெருமானையும், அழகு தெய்வத்தின் வடிவமாக உமையம்மையையும், வீணையேந்திய நிலையில் கலைமகளையும், குழலூதும் நிலையில் கண்ணனையும், மத்தளம் கொட்டும் நிலையில் நந்தியம் பெருமானையும் வாயில் காவலரான துவாரபாலகர் முதல் கருவறை தெய்வம் வரை கலைநுட்பத்துடன் விளங்குகின்றனர். தமிழரின் கலை முதிர்ச்சியினைக் காட்டும் வடிவமாக ஆடல் வல்லான் விளங்குகிறார். ஆடல் வல்லானின் மூல வடிவம் தில்லையில் உள்ளது.

நடனம், நாட்டியம், நாடகம், கூத்து என்பன ஒன்றோடொன்று தொடர்புடைய நாட்டிய வகைகளைக் குறிக்கும். கதைத்தழுவிய ஆடலைக்கூத்து என்றும் உயிருணர்வால் எழுந்த கூத்து, பாவராகதாளத்தோடு இயைந்த பொழுது நடனமாயிற்று, நடனம் நாட்டியம் என்ற இரு சொற்களும் 'நட்டு' என்ற வேர்ச் சொல்லடியாகப் பிறந்த சொற்களாகும். அபிநயத்தால் என்பது பொருள். மெய்ப்பாடாகிய சுவையும், பாவமும், மூவகை அபிநயங்களும் இணையும்பொழுது நாட்டியமாகின்றது. இதனை நிருத்தம், நிருத்தியம், கூத்து என்றும் வகைப்படுத்துவர். தனி ஆடல் நிருத்தம் என்றும் பொருள் விளக்கம் தரும் அபிநயத்துடன் கூடியதனை நிருத்தியம் என்றும் கதை தழுவியகலைக் கூத்து என்றும் உரைப்பர். ஆடவர் ஆடும் ஆடல் அமைப்பைத் தாண்டவமென்றும், பெண்கள் ஆடும் ஆடல் அமைப்பை இலாஸ்யம் அல்லது இலலிதம் என்றும் அழைப்பர்.

சிலப்பதிகாரம்: சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர் குரவை ஆயமகளிர் தம் குலதெய்வமான கண்ணனை வேண்டிக் குரவைக் கூத்து ஆடியதனை உரைக்கின்றது. குரல் முதலாகப் பெயரிய பெண்கள் முதலில் சமநிலையாக நின்று, பின்வளையமாகக்

கற் கடகக்கைகோத்துக் கொண்டு முல்லையம் தீம்பாணி பாடி ஆடும் ஆடலைச் சுட்டுகின்றது.

மாதவி ஆடிய பதினோர் வகையான ஆடலைக் கடலாடு காதை உரைக்கின்றது. கொடுகொட்டி. பாண்டரங்கம், அல்லியந் தொகுதி, மல்லாடல், துடிக்கூத்து, குடைக்கூத்து, குடக்கூத்து, பேடிக்கூத்து, மரக்காற்கூத்து, பாவைக்கூத்து, கடையக்கூத்து என்ற பதினோர் கூத்துகளைச் சிலம்பு உரைக்கின்றது.

சிலப்பதிகாரத்தின் நடுகற்காதையில் 'இமையவனாடிய கொட்டிச்சேதம் என்ற கொடுகொட்டி ஆடல்பற்றி உரைக்கப் பட்டுள்ளது. இறைவன் ஆடும்பொழுது சிலம்பு ஒலிக்கின்றது. கையில் உள்ள துடி ஒலிக்கின்றது, அவரின் கண்கள் ஆயிரக் கணக்கான கருத்துகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வண்ணம் இறைவன் சுழன்றாடுகின்றார். அம்மையோ ஆடாமல் அசை யாமல், ஒலியாமல் விம்மாமல் அச்சமும் வியப்பும் தோன்ற ஒருபால் ஒதுங்கி நிற்கின்றாள் என்று சிலம்பு கொடுகொட்டிக் காட்சியை உரைக்கின்றது.

திருமந்திரம்: ஆடல் வல்லானின் அழகுக் காட்சியை அக, புற வழிகளால் கண்ட காட்சிகளைத் திருமூலர் திருமந்திரத்தில் உரைத்துள்ளார். சுந்தரக்கூத்து, பொற்பதிகூத்து பொற்றி இல்லைக்கூத்து, சிவானந்தக்கூத்து, அற்புதக்கூத்து என்ற ஐவகைக் கூத்துகளைத் திருமந்திரம் உரைக்கின்றது. இவை இல்லாமல் திருக்கூத்துத் தரிசனம் என்ற தலைப்பில் திருக்கூத்தின் தத்துவத்தையும். உருவ அமைப்பையும் திருமந்திரம் விளக்கு கின்றது.

திருவாலாங்காட்டு மூத்த திருப்பதிகம்: 'அறவா' நீ ஆடும் போது நின் அடியின் கீழ் இருக்க வேண்டுகிறார் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் கண்ட காரைக்காலம்மையார் குரல், துத்தம், கைக்கிளை, விளரி, தாரம், உழை, இளி என்ற வரிசையில் அமைந்த பண்களுடன் கச்சரி, கொக்கரை, தக்கை, தகுணிச்சம், துந்துபி, தாளம், வீணை, மத்தளம், காடிகை, வன்கைமென் தோல் தமருகம், குடமுழா, மொந்தை என்ற இசைக்கருவிகள் முழங்க ஆடல் நிகழ்வதனைக் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் உரைக்கின்றது.

தேவாரம்: திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகள் பாடிய தேவாரத்தில் ஆடல் தமிழின் அழகைக்

காணலாம். ஞானசம்பந்தரின் பதிகத்தில் திருத்தாளச்சதியும் ஒன்று. தாளமும் சதியும் பின்னிப்பிணைந்து செல்வதனைப் 'பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்ற' என்று தொடரும் பாடல் உரைக்கின்றது. தாளம், சதி என்ற பெயர்தாங்கிய இப்பதிகம் நாட்டியத்திற்கெனப் படைக்கப்பட்ட பதிகமாகும். தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம் பயின்றாடும் நாதனை ஒன்றியிலிருந்து நினைமின்கள், சென்றுகை தொழுமின்கள் உம்தமக்கு ஊனமில்லை என்று திருநாவுக்கரசர் கூறுகிறார். கருத்தாடும் கரதலத்தில் தமருகமும், எரியகலும், கரியபாம்பும் பிடித்தாடும் புலியூர் பெம்மானைச் சுந்தரரும் பலபட உரைத்து உள்ளார்.

திருவாசகம்: எட்டாம் திருமுறையான மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் 51 பதிகங்களுடன் 656 பாடல்களைக் கொண்டுள்ளது. திருச்சாழல், திருத்தெள்ளேணம், திருத்தோ ணோக்கம், திருவம்மானை பதிகங்கள் நாட்டியத்திற்குரியன, மகளிர் மூவர் ஒருங்கிருந்து பாட்டுடைத் தலைவனது புகழையும் அழகையும் ஆற்றலையும் வியந்து ஒருத்தி வினாவாகப்பாட மற்றவள் அதனை ஒட்டியும் வெட்டியும் உரைக்க, மூன்றாமவள் அமைதிகூறும் முறையாகப் பாடியாடும் பாடலாக அம்மானை அமையும். அச்சோபதிகத்தில் 'கூத்தன் தன் கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளியவாறு யார் அருளுவர்' என்கிறார்.

திருவஞ்சைக்களத்துச் சேர அரசர் சேரமான் பெருமாள் கூத்தப் பெருமானின் சிலம்பொலி கேட்டு மகிழ்ந்ததையும், பட்டினத்தடிகளின் 'கோயில் நான் மணிமாலை' - யில் கூறும் திருக்கூத்துத் தரிசனமும், நம்பியாண்டார், சேக்கிழார், அருணகிரியார், வள்ளலார் காட்டும் நாட்டியக் காட்சிக்களும் சிறப்புடன் உள்ளன.

நாட்டியப்பதத்தின் தந்தை: தமிழிசை ஆதி மும்மூர்த்தி களான சீகாழிமுத்துத்தாண்டவர் (கி.பி. 1560 - 1640) தில்லை விடங்கள் மாரிமுத்தாப்பிள்ளை (கி.பி. 1712 - 1787) சீகாழி அருணாசலக் கவிராயர் (கி.பி. 1711 - 1779) மூவரும் விளங்கு கின்றனர். இவர்களுடன் கோபால கிருஷ்ண பாரதியாரையும் (கி.பி. 1786 - 1881) சேர்த்துத் தமிழ்க் கீர்த்தனை ஆசிரியர் முதல் நால்வர் என்று கலைமாமணி வரகூர் ஆ.க. முத்துக் குமாரசாமி குறிப்பிடுவார்.

இவர்களில் முத்துத்தாண்டவர் தமிழில் கீர்த்தனை என்ற இசை வடிவை உருவாக்கித் தந்தார். இவர் நாட்டிய உருவப்படிகளுள் ஒன்றான 'பதம்' என்ற இலக்கிய வகையை முதன் முதலில் உருவாக்கித் தந்தார். இதனால் இக்கட்டுரையாளர் இவரை 'நாட்டியப் பதத்தின் தந்தை' என்று குறிப்பிட்டு உள்ளார்.

பதம், பல்லவி அனுபல்லவி, சரணங்களுடன் சொற்சீர் கொண்டு, இசைச் சங்கதிகள் அதிகம் இடம் பெறாமல், நிரவல் கற்பனை சுரங்கள் இடம் பெறாமல் பாவத்திற்கு முக்கியத்துவம் தந்து, இரக்தி இராகங்களில் அமைந்து உவகைச் சுவையுடன் கூடியதாக மதுரபக்தியாலோ, மானுடக்காதலோ பேசும் நிலையில் பெரும்பாலும் தோழியிடம் உரைப்பது போன்ற கூற்றுடன் அமையும். நாட்டிய இலக்கிய வகையாகப் பதம் என்ற உருப்படி உள்ளது.

முத்துத்தாண்டவர் பாடிய பதங்களில் 25 கிடைத்துள்ளன. இவைகள் 12 இராகங்களிலும் 12 தலைவி நேரில் பேசுவதாகவும், 6 தலைவி தோழியிடம் பேசுவதாகவும் 3 தோழி தலைவியிடம் கூறுவதாகவும் அமைந்துள்ளன. இப்பதங்களில் பல நாட்டிய மேடையில் தொடர்ந்து இடம் பெற்று வந்துள்ளன. 'தெருவில் வாரானோ என்னைச் சற்றுத் திரும்பி பாரானோ' என்று தொடரும் கமாசு இராகப் பதத்தை ஆடாத ஆடல் மகளிர் இல்லை என்று கூறும் அளவிற்குச் சிறப்புடையது.

இயல் இசை நாட்டியம் மூன்றும் தனித்தனியாகப் பிரிந்து செயல்பட்டு வருகின்றன. இயலறிந்தோருக்கு இசை, நாட்டியம் பற்றிய புலமைக் குறைவாலும் இசையறிந்தோர்க்கு இயல் நாட்டியப் புலமைக் குறைவாலும், நாட்டியம் அறிந்தோர்க்கு இயல்லறிவு போதாமையாலும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள இயலாமல் உள்ளன. முத்தமிழ் அறிந்தோர் தமிழின் முழு இன்பத்தையும் உணர்வர். நாட்டியத்தமிழில் கலிப்பாவில் கூறப்படும் அராகம், அம்போதரங்கம் என்ற உறுப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன. சந்தமிகுபாக்கள், பாக்கள் பல நாட்டியத் தமிழில் உள. இதனை உணர்தல் அவசியம்.

உருவகத்தின் பிறப்பிடம் - விபரீத உவமை

ஐ. செல்வராஜ்
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை, அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் – 641 020

தொல்காப்பியம் உவமையணியை மட்டுமே கூற பின்னர் தோன்றிய வீரசோழியம், தண்டியலங்காரம் போன்ற இலக்கண நூல்கள் அணி வகைகளை விரிவாகக் கூறுகின்றன. அவற்றுள் உருவக அணியும் ஒன்று. தண்டியலங்காரம் கூறும் உவமை அணியின் வகைகள் இருபத்து நான்கினுள் உருவக அணியின் பிறப்பிடம் நோக்கி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

உவமையின் சிறப்பு

உவமையைக் கொண்டு பொருளை விளங்கிக் கொள்ளும் வகையில், உவமைக்கும் பொருளுக்கும் இடையே உள்ள "ஒப்புமை தோன்ற செப்புவது உவமை" (தண்டி. உவ. நூற். 31) ஆகும். பொருளையே உவமையாக்கிக் கூறினாலும் அதுவும் உவமையே, என்பது தொல்காப்பியர் கருத்து. இதனை,

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மறுளறு சிறப்பின் அஃது உவமமாகும்"

(தொல். உவம. நூற். 9) என்பதனால் அறியலாம். உவமைச் சொல், பொருளைப் புலப்படுத்துவதோடு அப்பொருளை விட உயர்ந்ததாக அமைதல் வேண்டும். "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" (தொல். உவம. நூற். 2) என்பதனால் விளங்கும். 'உவமைக்குக் கவிதையில் ஒருபங்கு இருக்குமானால் அது புலவனுடைய சொற்களையும் தொடர்களையும் பொருள் புலப்பட விளக்குவது ஒன்றே ஆகும்' (பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கை, பக். 99-100) என்பதனாலும் உவமை பொருளை விளக்கி நிற்கும் தன்மையைப் பொருத்தே அதன் சிறப்பு அமைகிறது எனலாம்.

தண்டி–உவமை வகைகளுள் பொருளின் சிறப்பு

தண்டியலங்கார உவமை வகைகள் இருபத்து நான்கினுள் உண்மை, நிந்தை, தெரிதரு தேற்றம், இன்சொல், அறியமம், விகாரம், இயம்புதல் வேட்கை, பலபொருள், அபூதம், பொதுநீங்கு உவமை என்னும் பத்து வகைகளில் உவமையினும் பொருளின் சிறப்பே உயர்ந்து நிற்பதை உணர முடிகிறது. உவமையணிக் குள்ளேயே உவமையணியிலிருந்து மாறுபட்ட, மிதமான மாற்றம் நிகழ்ந்திருப்பதை இதன்மூலம் உணரலாம். **சிறப்பிக்கப்பட வேண்டியது பொருளே என்ற உள்ளுணர்வின் உந்துதலினால் இம்மாற்றங்கள் நிகழ்ந்தனவாகக் கருதலாம். இம்மாற்றங்களே உருவகஅணி தோற்றத்திற்குக் காரணமாக அமைகின்றன.** எனவே உவமை, உருவக அணிகளை அமைப்பு அடிப்படையில் காண்பது அவசியமாகிறது.

உவமையின் அமைப்பு

உவமை (உவமானம்), பொருள் (உவமேயம்), உவம உருபு, பொதுத்தன்மை ஆகிய நான்கு உள்ளுறுப்புகளை உடையது விரியுவமை. ''செவ்வான் அன்ன மேனி'' (அகநா. கட. வாழ்த்து) என்பதனுள் 'வான்' என்பது உவமை, 'அன்ன' என்பது உவமை உருபு, 'மேனி' என்பது பொருள், செம்மை நிறம் உவமைக்கும் பொருளுக்கும் இடையே உள்ள பொதுத்தன்மை. இவற்றுள் உவமை (வான்) முன்னும் பொருள் (மேனி) பின்னுமாக அமைகின்றன.

தொகையுவமை என்பது விரியுவமையுள் கூறப்பட்ட நான்கு உள்ளுறுப்புகளுள் பொதுத்தன்மையும், உவம உருபும் மறைந்து (தொக்கி) வருவது அல்லது இவ்விரண்டில் ஒன்று மட்டும் மறைந்து வருவது. ''தாமரை வான்முகம்'' (தண்டி. தொ. உவம. மேற்.) என்பதனுள் தாமரை என்பது உவமை, 'முகம்' என்பது பொருள். அன்ன என்ற உவம உருபும் செம்மை நிறமாகிய பொதுத்தன்மையும் மறைந்து வந்துள்ளன. இதனுள்ளும் உவமை (தாமரை) முன்னும், பொருள் (முகம்) பின்னுமாக வந்துள்ளன.

எனவே உவமை முன்னும் பொருள் பின்னுமாக அமைவதையே உவமையணியின் அமைப்பாகக் கொள்ளலாம். எனினும் இதனுள் உவமை வேறு, பொருள் வேறு என்ற பேத உணர்வே நிலைபெறுகிறது.

உருவகத்தின் அமைப்பு

உருவகம் என்பது பொருள் உவமையோடு ஒன்றிவிடுவது ஆகும்.

> ''உவமையும் பொருளும் வேற்றுமை ஒழித்து
> ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்''

(தண்டி. நூற். 35) ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள ஒப்புமையின் ஆழம், நெருக்கம் காரணமாக 'இரு பெயரொட்டாய் இசைப்பது'' (மா. அலங். நூற். 29) உருவகம் ஆகும்.

ஆகிய, ஆக, ஆ என்ற மாட்டேற்று உருபுபெற்று விரியாகவும் பெறாமல் தொகையாகவும் உருவகம் வரும். ''கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக'' (தண்டி. விரி. உரு. மேற்) என ஆக என்ற மாட்டேற்று உருபு பெற்று விரியுருவகமாக வந்துள்ளன. இவற்றுள் 'கொங்கை மருங்குல்' ஆகிய பொருள்கள் முன்னும் 'முகை, கொம்பு' ஆகிய உவமைகள் பின்னுமாக முறையே வந்துள்ளன.

தொகை உருவகம் ''துன்பக் கடலாகத் தழுந்த வேண்டா'' (சீவ. சிந். விமலை.25) என வரும். இதனுள் ஆகிய என்னும் மாட்டேற்று உருபு மறைந்து 'துன்பக்கடல்' என வந்துள்ளது. இத்தொகை உருவகத்துள்ளும் 'துன்பமாகிய' பொருள் முன்னும், 'கடலாகிய' உவமை பின்னுமாக வந்துள்ளன.

எனவே 'பொருள்' முன்னும் உவமை பின்னுமாக அமைவதையே உருவகத்தின் அமைப்பாகக் கொள்ளலாம். எனினும் இவ்வமைப்புள் பொருளும் உவமையும் ஒன்றே என்ற அபேத உணர்வு மேலோங்கி நிற்பதை உணரலாம்.

உருவக அணியின் கருநிலை

மேற்கூறப்பட்ட உவமை அணியின் அமைப்பையும், உருவக அணியின் அமைப்பையும் ஓரடிக்குள் பெற்று வருவதை இதர விதர உவமை என்பர். அஃதாவது பொருள் ஒருகால் உவமையாயும், உவமை ஒருகால் பொருளாயும் ஒரு தொடர்ச்சிக் கண்ணே வருவது (தண்டி. இதரவிதரம் விளக்.)

> ''களிக்கும் கயல்போலும் நுங்கண் நுங் கண்போல்
> களிக்கும் கயலும்''

"தாமரைபோல் மலரும் நும்முகம் நும்முகம் போல்
தாமரையும் செவ்வி தரும்"

(தண்டி. இதரவிதர மேற்.) என வரும் மேற்கோள்களுள் 'களிக்கும் கயல் போல் நுங்கண்', 'தாமரை போல் மலரும் நும்முகம்', என உவமை முன்னும் பொருள் பின்னுமாக உவமையின் அமைப்பைப் பெற்றும்; 'கண்போல் களிக்கும் கயலும்' 'முகம் போல் தாமரையும் செவ்வி தரும்' என பொருள் முன்னும் உவமை பின்னுமாக உருவகத்தின் அமைப்பைப் பெற்றும் ஓரடிக்குள் வந்துள்ளன. இதனை உருவக அணியின் கருநிலை எனலாம்.

விபரீத உவமையின் அமைப்பு – உருவகத்தின் தோற்றம்

இதரவிதர உவமையினும் விபரீத உவமையில் மாற்றம் இன்னும் தெளிவாகத் தெரிகிறது. மேற்றொட்டு உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளாய் வருவதனை உவமையாக்கி உரைப்பது விபரீத உவமையாகும் (தண்டி. விபரீ. விளக்).

இவ்வணியுள் பொருள் முன்னும் உவமை பின்னுமாக உருவகத்தின் அமைப்பில் உள்ளன. எனினும் இதனுள் உள்ள உவம உருபே உவமையணி என்பதை நிலைநாட்டி நிற்கிறது.

"திருமுகம் போல்மலரும் செய்யக் கமலம்"
"கருநெடுங் கண்போலும் கயல்"
"இயல் போலும் மஞ்ஞை"
"இடைபோலும் கொம்பர்" (தண்டி. விபரீ. மேற்)

என நான்கு மேற்கோள்களைத் தண்டியலங்காரம் காட்டுகிறது. இவற்றுள் உவம உருபு விரிந்து வந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

உவம உருபு இன்றி மேற்காண் மேற்கோள்கள் தொகையாக வரின் எவ்வாறு அமையும் என்பதைக் காணல் இன்றியமையாத ஒன்றாகும்.

"திருமுகம் மலரும் செய்யக் கமலம்"
"கருநெடுங் கண்கயல்"
"இயல் மஞ்ஞை"
"இடை கொம்பர்"

என அமையும். இவற்றைத் 'திருமுகம் போல்' என உவம உருபு கொண்டு விரிப்பின் உவமையாயும், 'திருமுகமாக என மாட்டேற்று உருபு கொண்டு விரிப்பின் உருவகமாகவும் அமை வதை நுண்ணிதின் உணரலாம். இதுபோன்றே மாட்டேற்று உருபு கொண்டு 'கண்ணாகிய கயல்'. 'இயலாகிய மஞ்ஞை', 'இடையாகிய கொப்பர்' என விரிப்பின் உருவகமாகவும் அமைவதைக் காணலாம். எனவே இவ்வணி (விபரீத உவமை வகையையே உருவக அணியின் பிறப்பிடமாகக் கருதலாம்.

தொகை உருவகம்

விபரீத உவமையின் தொகைநிலை அமைப்பு முறையையே, உருவக அணிவகைகளுள் ஒன்றான தொகை உருவகமும் பெற்று "அங்கை மலரும், அடித்தளிரும், கண்வண்டும்" (தண்டி. தொ. உருவ. மேற்) என வந்துள்ளது. 'அங்கை மலர்', 'அடித்தளிர்' 'கண்வண்டு' என்ற இடங்களில் மாட்டேற்று உருபு தொக்கி வந்துள்ளன. எனவே விபரீத உவமையின் தொகை நிலையே தொகை உருவகம் எனலாம்.

தொகுப்புரை

பொருள் விளக்கத்திற்குக் கொடுக்கும் முதன்மை காரணமாக உவமையினும் பொருளுக்கு முதன்மை வந்ததாகக் கருத இடமுண்டு. பொருளுக்கு முதன்மை தரும் உள்ளது உணர்வே பொருளை விளக்கும் சொல்லிற்கு முதன்மையும் உவமைக்கு அடுத்த நிலையையும் தரக் காரணமாயிற்று எனலாம். இந் நிலையில் உவமையும் பொருளும் ஒன்றே என்ற நிறைவு உள்ளுணர்வில் எழுகின்றது.

இதரவிதர, விபரீத உவமைகளில் மேற்காண் மாற்றங்களைக் காணமுடிகிறது. விபரீத உவமையில் உவமைச் சொல் விரிந்து நிற்றல் வேண்டும் என்பதும் அஃது தொகையாக அமையின் உருவகமாக விரித்துக் காண்பதற்கு இடந்தருகின்றது என்பதும் விளங்குகிறது. அவ்வாறு அமையும் உருவகம் தொகை உருவகத் துடன் அமைப்பு அடிப்படையில் நெருங்கிய ஒப்புமை உடையதாக உள்ளது. ஆகவே விபரீத உவமைத் தொகையே தொகை உருவகம் எனலாம். தொகை உருவகமே விபரீத உவமைத் தொகையிலிருந்து முதலில் தோன்றிய உருவகமாக இருத்தல் வேண்டும். அதுவே பின் பல உருவக வகைகளாக விரிந்து பெருகியிருக்க வேண்டும் என்பதையும் உய்த்துணரலாம்.

கலைச்சொற்கள் - தரப்படுத்துதல்

க. செல்வராசு
வேளாண்மைக் கல்லூரி
மதுரை - 625 104

ஒரு சொல் ஏற்றுக் கொள்ளப்படுவதும் ஒதுக்கப்படுவதும் மக்கள்கையில்தான்– குறிப்பாக பாமர மக்கள் கையில்தான் உள்ளது "The best word makers are the uneducated classes" என்பார்கள் கலைச் சொல்லாக்கம் செய்யப்படும் சொல் பாமர மக்கள் பயன்படுத்தும் சொல்லாக - அவர்கள் புரிந்து கொள்ளும் சொல்லாக அமைந்தால் அது நீண்ட நாட்கள் வழங்கப்படும் சொல்லாய் அமையும் என்பது உறுதி. இச்சொல்லை ஆக்கும் போது துறை வல்லுநர்களும் மொழி வல்லுநர்களும் ஒன்றி இணைந்து செயல்பட்டால் அச்சொல் மாட்சிமை மிக்கதாய் அமையும்.

கலைச்சொற்கள்

"தகுதியான ஒரு கருவி அதாவது 'கலைச்சொல்' என்ற கருவியை உருவாக்குவதன் மூலமாக மட்டுமே தொழில்முறைச் செய்தித் தொடர்புகளை மேம்படுத்த முடியும்" என்றார் யூஜின் ஊஸ்டர்.

"ஆங்கில மொழிக்குற்ற கலைச் சொற்களை ஏற்றவாறு தமிழ்ப்படுத்துதலே. தமிழ் வாயிலாகக் கல்வி பெறும் முயற்சிக்கு உயிர் நிலையாம்" என்றார் சுவாமி பரமாத்மாநந்தர்.

மொழியாக்கம்

கலைச் சொல்லாக்கத்திலேயே மொழி பெயர்ப்பு என்பது தான் கடினமான பணி. பொருள் மாறுபடாமலும் தனிச் சொல்லாகவும் ஒரு கலைச் சொல்லை மொழிபெயர்க்க மிக்க பயிற்சியும் உழைப்பும் தேவை.

பாக்டீரியாக்களை (Bacteria) முதலில் அவற்றின் கண்ணுக்குத் தெரியாத அளவினைக் கருத்திற்கொண்டு நுண்ணுயிர்கள் என்று குறித்தார்கள். இது தவறான மொழியாக்கம். பாக்டீரியாக்கள் மட்டுமின்றி, வைரசுகள் (Viruses) மைகோபிளாஸ்மா (Mycoplosma) போன்றவையும் நுண்ணுயிர்களே. எனவே 'Microbes' என்ற சொல்லுக்கு நிகரான சொல்தான் "நுண்ணுயிரிகள் என்று கொள்வது பொருத்தமானது.

கலைச்சொற்கள் – தனிச்சொற்களும் கூட்டுச் சொற்களும்

கலைச் சொற்களில் பல தனிச் சொற்கள். பல கூட்டுச் சொற்கள். சான்றுகள்: Osmosis, cell, nucleus போன்ற தனிச் சொற்கள், anthocyanin chromosome, isodiametry interphase, pseudopodium போன்றன கூட்டுச் சொற்கள். மேற்குறித்த சொற்களில் தனிச் சொல்லினைத் தமிழ் வழிப் படுத்தும்போது அதன் பொருளை உணர்ந்து 'சவ்வூடுபரவல்' என்று அழகாகத் தமிழிற் குறித்தனர். ஏறத்தாழ இருபது ஆண்டுகளாகப் பள்ளிப் பாடங்களில் நிலைத்துவிட்ட இந்தச் சொல் மேல் வகுப்பு நூல்களில் கைவிடப்பட்டு ஆஸ்மோஸிஸ் என்று குறிக்கப்பட்டு வருகிறது. இது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

ஒரு சார்பு சொற்கள்

ஒரு சார்பு சொற்களுக்கு எடுத்துக்காட்டாக mechanics, statics, dynamics, kinetics, kinematics போன்றவற்றைச் சொல்லலாம். இவையெல்லாம் பொருள்களின் இயக்கம் குறித்த சொற்கள்; ஆயினும் ஒன்றுக்கொன்று கருத்தில் சற்று மாறுபட்டவை. mechanics என்பது பொருட்கள் விசையின் இயக்கம் அல்லது ஓய்வு நிலையில் இருத்தலை ஆராயும் துறை. statics, என்பது ஓய்வுநிலை ஆராய்வுகளையும் dynamics இயக்க ஆராய்வுகளையும் உள்ளடக்கிய துறைகள். kinetics என்பது பொருட்களில் ஏற்படுத்தும் இயக்கத்தையும் kinematics என்பது விசையில் சிந்தை செலுத்தாமல் இயக்கத்தை மட்டிலும் ஆராய்வதாகும். எனவே இவற்றுள் உள்ள நுணுக்கமான வேறுபாடுகளைச் சுட்டும் வகையில் தனித்தனிச் சொற்கள் வரையறுத்து வற்புறுத்தப்பட வேண்டும்.

ஒலி பெயர்த்தல்

கலைச் சொல்லாக்கத்தில் 'ஒலிபெயர்த்தல்' ஒரு சிறப்பிடத்தை வகிக்கிறது. உயிரியலைப் பொறுத்தமட்டில் நொதிகள்

மற்றும் வேதிப்பொருள்களின் பெயர்களை ஒலி பெயர்த்து வழங்குதல் சாலச் சிறந்தது. நொதிகளின் பெயர்கள் நொதி ஆணையத்தால் Enzyme commission உருவாக்கித் தரப்படு கின்றன. அவற்றை அப்படியே ஒலி பெயர்த்துப் பயன்படுத்துதே சிறந்தது.

எ. கா. ATP ase — ஏ.டி.பி. யேஸ்
Luciferase — லூஸிஃபெரேஸ்

ஒட்டுச் சொற்கள்

தமிழ்மொழி நிலையின்படி, ஒரு சொல்லினோடு பொதுவானதோர் முன் ஒட்டு (Prefix) அல்லது பின்னொட்டு (suffix) இணைத்துக் கலைச்சொற்களை வரிசைப்படுத்தலாம்

சான்றாக

Television, Telephone போன்ற சொற்களை முறையே 'தொலை' (Tele) என்ற முன்னொட்டுச் சேர்த்து தொலைக் காட்சி, தொலைபேசி என வழங்குகின்றோம். அதே போன்று 'Meter' என்ற 'அளவி'னைப் பின் ஒட்டாக இணைத்து Ammeter, voltmeter போன்ற கருவிகளை முறையே மின்னளவி, மின் அழுத்த அளவி எனக் குறிப்பிடுவதும் பொருத்தமானதாகும்.

கருத்தழியாச் சொற்கள்

ஒலியியல் அடிப்படையில் எழும் கலைச் சொல்லாக்கத்திலும் கருச்சிதைவு கூடாது. சான்றாக 'Thrust' என்பதற்குத் 'தள்ளு விசை' எனும் தமிழ்ச் சொல்லோ மிகப்பொருத்தமானது. சில பாடநூலாசிரியர்களும் அறிவியல் எழுத்தாளர்களும் இதனை 'உந்துவிசை' என்றே எழுதுகின்றனர். இது அறிவியலுக்கும் ஒலியியலுக்கும் ஒவ்வாத சொல்லாட்சியாகும்.

புதுச் சொற்களை உருவாக்குதல்

இன்றைய அறிவு வளர்ச்சியால் புதுப்புதுச் சொற்கள் ஆங்கிலத்தில் உருவாகிக் கொண்டிருக்கும்போது, அவற்றை உடனுக்குடன் தமிழிலே கொண்டு வருதல் நம் தலையாய பணியாகும். புதுச்சொல்லாக்கத்தின் மூலமே பெரும்பாலான கலைச் சொற்களைத் தமிழிலேயே உருவாக்க முடியும். புதிதாக உருவாக்கப்படும் சொற்கள் எளிமையாக பொருள் பொதிந்தன வாக இருக்க வேண்டும்.

சான்று

Skelton — வலிவுக் கூடு
Notochord — முதுகு நாண்
Chlorophyll — பச்சையம்
Baleen — வடிதகடு

கலைச் சொற்களைத் தரப்படுத்துவதற்கான இன்றைய தேவை

குழுக்கள் தரப்படுத்த வேண்டும். குழுவில் துறை வல்லுநர்களும் மொழி வல்லுநர்களும் இடம்பெற வேண்டும்.

இந்தக் குழுக்கள் உறுதிப்படுத்துகின்ற சொற்களையே அனைவரும் பயன்படுத்த வேண்டும் என்ற மரபு உருவாக வேண்டும்.

இக்குழுக்கள் உறுதிப்படுத்துகின்ற சொற்களை உயர்நிலை – மேல்நிலைப்பள்ளிப் பாடநூல்களில் மாற்றம் ஏதுமின்றிப் பயன்படுத்துதல் வேண்டும்.

மொழிபெயர்ப்போ புதுச் சொற்படைப்போ எதுவானாலும் ஒரு விதி முறையை உருவாக்கிக் கொண்டு பின் அதிலிருந்து மாறுபடாமல் சொற்களை ஆக்க முயல வேண்டும்.

முடிவுரை

அறிவியல் தமிழ் மேன்மைக்கும் அஃது மக்களுக்குப் பயனளிப்பதற்கும் கலைச் சொற்களைத் தரப்படுத்துதலும் வலியுறுத்துதலும் தேவை. இதற்கான நிரந்தர அமைப்பும், செயல் திட்டங்களும் வகுக்கப்பட வேண்டும்.

பல்லவர் கால இலக்கியச் சமூகவியல்

சிலம்பு நா. செல்வராசு
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி - 605 001

நாயன்மாரும் ஆழ்வாரும் "தமிழ், தமிழ்" என்று முழக்க மிட்ட பல்லவர் கால மொழிச் சூழலுக்கும் (க.கைலாசபதி. 1966) முழுவதும் ஆரிய மொழி வயப்பட்டு விட்ட அல்லது சமசுகிருதம், பெருமொழி வழக்கை எய்தி விட்ட சோழர்கால மொழிச் சூழலுக்கும் (சு. இராசாராம். 1992) இடையே காணப்படும் பெருவெளி முதன்மையான ஆராய்ச்சிக்குரியது. தேவாரமும் திருவாசகமும் உள்ளிட்ட திருமுறைகளும் பிரபந்தங்களும் அவை தோன்றிய காலத்தில் இலக்கியங்களாக ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்ட பிறகு (கா. சிவத்தம்பி. 1995) பல்லவர் காலத் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு கருத்து மயக்கம் தோன்றுவதைத் தவிர்க்க இயலவில்லை. பல்லவர் காலத்து இறுதியில் தமிழிலக்கிய வளர்ச்சியைவிடச் சமசுகிருத இலக்கியமே மகத்தான வளர்ச்சி பெற்றிருந்ததை அறியும்போது (க. ப. அறவாணன். 1995) இதற்கு நேர் எதிர் நிலையில் இயங்கிய தமிழிலக்கியத் தொகுப்பு முயற்சிகள், தொன்மையை நிறுவ முயலும் தொன்மங்கள் ஆகியவற்றிற்கான விளக்கங்களை வேறெங்கும் தேடி அலைய வேண்டியதில்லை.

கா. சிவத்தம்பியின் (1995) கூற்றுப்படி பக்தி இலக்கியங் களை ஒதுக்கி விட்டுப் பார்க்கும் போது பல்லவர் காலத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் படைப்பிலக்கியங்களாக முத் தொள்ளாயிரமும், நந்திக்கலம்பகமும் மட்டுமே தென்படுகின்றன. இவை தவிரத் தொல் இலக்கியத் தொகுப்புகள், தொல்காப்பியம் பாயிரத்தோடு நிறுவனவயமாதல் இவற்றையும் முச்சங்கத் தொன்மத்தையும் கணக்கில் கொள்ளுதல் வேண்டும்.

இவற்றின் அடிப்படையில் பல்லவர்கால இலக்கியச் சமூகவியல் எவ்வாறு தொழிற்பட்டது என்பதை இனிவரும் கட்டுரைப் பகுதி சுருக்கமாக ஆராயும்.

பல்லவர் காலத்துத் தமிழக அரசியல் இரண்டாகப் பாகம் பட்டு நின்றதைப் பல்வேறு வரலாற்று ஆசிரியர்கள் (பி. டி. சீனிவாச ஐயங்கார் 1930; மா. இராசமாணிக்கனார். 1944; நீலகண்ட சாஸ்திரியார். 1966; கே. கே. பிள்ளை) தெளிவுபட விளக்கி இருக்கிறார்கள். தமிழகத்தின் வடபகுதி உள்ளிட்ட பெரும்பகுதி பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தென்பகுதி யின் சிறிய நிலபரப்பு பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. தென்பகுதியில் பாண்டியர் ஒழிந்த ஏனையோர் (சோழர், சேரர்) பல நேரங்களில் பல்லவர்க்கு எதிராகப் பாண்டியரோடு கூட்டுச் சேர்ந்துள்ளனர். தென்பகுதியில் பாண்டியர் ஆண்டாலும் கூட அவர்கள் பல ஆண்டுகள் பல்லவரிடம் தோற்று அடிமைப்பட்டுக் கிடந்தனர் என்பதை வரலாற்று ஆவணங்கள் தெளிவுப்படுத்து கின்றன. வேளாண்பெரு வளம் மிக்க சோழநாடு பாண்டியர்க்கா பல்லவர்க்கா என்ற போராட்டம் வரலாற்றின் உண்மைகளில் புதைவுண்டு கிடப்பதை அறியமுடியும்.

ஆகக் கி.பி. 6 முதல் 9 வரையிலான தமிழக அரசியல் பாண்டியர் × பல்லவர் என்பதாகக் காட்சியளிக்கிறது. இவருள் பல்லவரே மேலாண்மை மிக்க பேரரசராக விளங்கினர். இவர் தம் ஆட்சிமொழி சமசுகிருதம்; இவர்தம் இலக்கிய வளம் சமசுகிருத இலக்கிய வளம்; இவர்தம் பண்பாடு ஆரியப்பண்பாடு (க. ப. அறவாணன். 1995). ஆக ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது பல்லவர் ஆட்சி அயலார் ஆட்சியாகவும் அயன்மொழி ஆட்சியாகவும் அயற் பண்பாட்டு ஆட்சியாகவும் விளங்கியது. பல்லவர் காலத்தில் சமய மாற்றம் நிகழ்ந்தபோதும் கூட இறுதியில் சமசுகிருதமே கோலோச்சிய நிலையைத் தொடர்ச்சி யான மொழிவரலாறு எடுத்து மொழியும். தமிழகம் முழுவதும் ஊடுருவி நின்ற இந்த அயன்மைச் சக்திகளுக்கு நேர் எதிர் முனையில் நின்று செயல்பட வேண்டிய அரசியல் தேவைகள் பல்லவர்தம் பகைவராகிய பாண்டியர்க்கு வேண்டப்படுவ தாயிற்று.

பாண்டியர் பல்லவரை எதிர்ப்பதன் மூலம் அயலார் ஆட்சி யையும் அயல்மொழி ஆட்சியையும் அயல் பண்பாட்டு

ஆட்சியையும் எதிர்க்க வேண்டியதாயிற்று. இதன் மறுபக்கமாக அயன்மை ஒழிந்த தமிழ்த்தேசியம் சார்ந்த ஆட்சி, மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைக் கட்டமைக்க வேண்டியதாயிற்று. தெளிவாகக் கூற வேண்டுமானால் 'தமிழ்த்தேசியம்' எனும் தத்துவம் அற்றைச் சமூகத்தில் ஊடுபாவாக ஓடியதைச் சொல்ல வேண்டும். இதன் விளைவாகத் தமிழ் மொழிச்சூழலில் பின்வரும் நிலைகள் தோற்றங் கொண்டன.

1. பாண்டியர்க்கும் தமிழுக்கும் உள்ள நெருக்கமான உறவுகள் தோற்றுவிக்கப் பெற்றன. 'சங்கம் மூன்று இரீஇயினார் பாண்டியர்' என்ற முச்சங்கச் செய்தி மூலம் பாண்டியரின் தொன்மையும் தமிழின் தொன்மையும் வெளிப்பட்டதோடு தமிழ் மொழிப்புரவலர் பாண்டியர் என்ற கருத்துவாக்கம் தோற்றுவிக்கப்பட்டது.

2. தொல்காப்பியம் பாயிரத்தோடு நிறுவனவயப்பட்ட பிறகு தமிழகம் மொழியால் ஒரே நிலப்பரப்பாக எண்ணும் போக்கும் வடவேங்கடம் தென்குமரி இடைப் பட்ட தமிழ் கூறு நல்லுலகமும் அந்நிலத்து ஒருங்குவழிப் பட்ட மக்களும் பாண்டிய அரசும் ஒரு நூலிழையில் ஒருங்கிணைக்கப்பட்டனர்.

3. பாண்டியரே அன்றிச் சேரரும் சோழரும் தமிழ் வேந்தரே என்னும் கருத்து வலிமை பெற்றதும் இவர்தம் ஒற்றுமை வேண்டப்பட்டதும் முத்தொள்ளாயிரம் சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் வழி அறியலாகும் செய்திகளாகும். இவை ஒன்றுபட்ட தமிழ்த் தேசியம் பல்லவ அரசியலுக்கு எதிர்முனையில் கட்டமைக்கப்பட்டதைத் தெளிவாக்குகின்றன.

தமிழின் தொன்மையைப் பேசுதற்குத் தொல்லிலக்கியத் தொகுப்புகள் துணைபுரிந்தன. ஒட்டு மொத்தமாகப் பல்லவர் காலத் தமிழிலக்கியங்கள் பாண்டியர் சார்பாகப் பேசப்படும் போது நந்திக் கலம்பகம் மட்டும் தனித்து நிற்பதை அறிய முடிகிறது. நந்திக் கலம்பகத்தை விரிவான முறையில் சமூகவியல் ஆய்வுக்கு உட்படுத்தும் போது இரண்டு விதமான முடிவுகள் கிடைக்கின்றன. அவை வருமாறு:

1. ஒட்டுமொத்தமாக நந்திக்கலம்பகச் செய்திகளைக் கொண்டு பார்க்கும்போது பல்லவ மன்னனுக்கும் தமிழ்ப் புலவர்க்கும் இடையே ஏதோ ஒரு காரணத்தால் பகை நேர்ந்தமை தெரிய வருகின்றது. இங்கே கணிகண்ணன் பற்றிய தொன்மத்தையும் நினைவு கொள்ளுதல் வேண்டும். இப்பகை உணர்வே ஒரு பெரும் சாம்ராச்சியத்தின் மன்னனைக் கொலை செய்யும் அளவிற்குப் பாடல்களைப் பாட வழி வகுத்திருக்க வேண்டும். இக்கலம்பகத்தின் தலைவனாகிய மூன்றாம் நந்திவர்மனின் இறுதிக் காலம் பற்றி வரலாற்று ஆவணங்கள் மௌனம் சாதிக்கின்றன என்று பி.டி. சீனிவாச ஐயங்காரும் (1930) மா. இராசமாணிக்கனாரும் (1944) கருதுகின்றனர். இம் மன்னனோடு ஏறத்தாழப் பல்லவப் பரம்பரை முடிவிற்கு வந்து விடுகிறது. தமிழால் பாடிக் கொல்வது என்பது ஒரு தொன்மமே என்றாலும் கூட அதன் உட்பொருள் மன்னனுக்கும் புலவனுக்கும் இடையே உள்ள பகைமை என்பதாகத்தான் தெரிகிறது.

2. மேலே கூறப்பெற்ற செய்திகளுக்கு நேர் எதிர் முனையில் நின்று பிறிதொரு கருத்தையும் ஈண்டுக் கூறுதல் வேண்டும். அது பல்லவரின் தமிழ்ப்பற்று; ஒரு தமிழ்க்கவிதைக் காகப் பல்லவ மன்னர் தம் உயிரையே விடுவர் என்ற கருத்தை நிலைநிறுத்தி அதன் மூலம் பல்லவரின் தமிழ்ப்பற்றை உலகறியச் செய்யும் முயற்சிதான் நந்திக்கலம்பகத்தின் உருவாக்கமாகும். இக்கலம்பகம் பற்றிய தொன்மம் எந்தத் தமிழ் மன்னரும் செய்யத் துணியாத உயிரைவிடும் செயலைத் தமிழுக்காகப் பல்லவ மன்னர் செய்யத் துணிந்தனர் என்ற கருத்தைச் சமூகத்தில் உருவாக்கத் துணைபுரிந்தது என்று முடிவு கூறுவதில் தவறு இருக்காது. பாண்டியர்க்குச் சார்பாக மொழிவழித் தமிழ்த்தேசியம் கட்டமைக்கப்பட்டதின் எதிர் விளைவே நந்திக் கலம்பகத்தின் உருவாக்கம் என்பதுதான் பல்லவர் கால இலக்கியச் சமூகவியல் புதைத்து வைத்திருக்கும் செய்தியாகும். (இக்கட்டுரையில் கூறப்பெற்ற 'தமிழ்த் தேசியம்' என்பதற்கு மிகத் துல்லியமான கோட்பாட்டுப் பொருளைக் கொள்ளத் தேவையில்லை)

துணை நூல்கள்

அறவாணன், க.ப. 1995. தமிழ்ச் சமுதாய வரலாறு. சமசுகிருத காலம். புதுச்சேரி: தமிழ்க்கோட்டம்.

இராசமாணிக்கனார், மா. 1944. பல்லவர் வரலாறு. சென்னை: சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

இராசாராம், சு. 1992. வீரசோழிய இலக்கணக் கோட்பாடு. நாகர்கோயில்: இராகவேந்திரா.

கைலாச பதி, க. 1966 (1991). பண்டைத்தமிழர் வாழ்வும் வழி பாடும். சென்னை: என் சி பி.எச்.

சிவதம்பி, கா. 1995. "தமிழிற் கவிதை பற்றிய இலக்கணமாய் படுத்தப்பட்ட நோக்குகளும் தமிழிலக்கியத்தின் உள்ளார்ந்த படைப்பாற்றல் நெகிழ்வுணர்வும்". எட்டா வது உலகத் தமிழ் மாநாட்டு முதன்மை ஆய்வுரைகள். தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

சீனிவாச ஐயங்கார், பி.டி. 1930. பல்லவர் சரித்திரம். (ப.வி.இ).

நீலகண்ட சாஸ்திரியார், 1966. தென்னிந்திய வரலாறு. இலங்கை: இலங்கை அரசு.

வள்ளுவரின் சொல்தேர்வு

தூ. சேதுபாண்டியன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

இலக்கியப் படைப்பாளன் ஒருவன் தன் படைப்பில் தான் கூற வரும் கருத்துக்கேற்பவும், தான் படைக்கும் இலக்கிய வடிவத்திற்கேற்பவும் தன் மொழியின் சொற்களஞ்சியத்திலிருந்து சொற்களைத் தேர்வு செய்து தன் படைப்பைப் படைக்கின்றான். இக்கட்டுரை ஒரு படைப்பாளியின் சொல் தேர்வினை அவன் படைக்கும் இலக்கிய வடிவம் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதை விளக்குகிறது. இந்த ஆய்விற்குத் திருக்குறள் நூல் முதன்மைச் சான்றாகின்றது. உரையாசிரியர்களின் உரைகள் துணைமைச் சான்றாகின்றன.

இக்கட்டுரைக்கு வித்திட்டது,

'படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்' (253)

என்ற குறளேயாகும்.

இக்குறளின் முதலடியில் **நெஞ்சம்** என்ற சொல்லும் இரண்டாவது அடியில் **மனம்** என்ற சொல்லும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இச்சொல் தேர்வு பொருண்மை மாற்றம் தரும் நோக்கில் அமைந்ததா? என்ற வினாவே இக்கட்டுரைக்குரிய சிக்கலாகும்.

இக்குறளுக்கு எழுதியுள்ள உரைகள் பின் வருமாறு

மணக்குடவர்: ஆயுதம் கையிற் கொண்டவர் **நெஞ்சு** போல் நன்மையை நினையாது; ஒன்றின் உடலைச் சுவைபட உண்டார் மனம் என்றவாறு.

பரிதியார்: அரிவாளும் கையும் பிடித்தார் **மனம்** கொலை மேலே நினைப்பது போலப் புலாலுண்டார் **மனமும்** கொலையை நினைக்கும் என்றவாறு.

பரிமேலழகர்: கொலைக் கருவியைத் தம் கையிற் கொண்டவர் **மனம்** அதனால் செய்யும் கொலையையே நோக்குவதல்லது அருளை நோக்காதவாறு போல, பிறிதோருயிரின் உடலைச் சுவைபட உண்டவர் **மனம்** அவ்வூனையே நோக்குவதல்லது அருளை நோக்காது.

இராமாநுசக் கவிராயர்: கொலைக் கருவியாகிய ஆயுதத்தைக் கையிலே கொண்டவருடைய **மனமா**னது போல ஒன்றின் உடலைச் சுவையுண்டாக உண்டவர் **மனமா**னது அருளை நோக்காது.

கவிராச பண்டிதர்: கொல்லத்தக்க ஆயுதத்தைக் கையிலே பிடித்தவர் **மனது** அந்த ஆயுதத்தாலே செய்யப்பட்ட கொலையையே செய்யப் பார்க்கும் அல்லால் தயையைப் பாராது; அது போல ஒரு சீவன் உடம்பைத்தின்றவன் மனது மாமிசத்தினையே தின்ன வேணும் என்று எண்ணு கிறதல்லது தயையை நினையாது.

பழைய உரை: கொலை செய்யும் கருவியைத் தம்கையில் கொண்டவர் மனம் அவ்வூனை நோக்குவதல்லது அருளை நோக்காது போல பிறிதோர் உயிரின் உடலைச் சுவைத் துண்டவர் மனம் அருளை நோக்காது.

இவ்வுரைகள் யாவும் கூறும் கருத்தை ஒட்டு மொத்தமாக வைத்துப் பார்க்கும் போது **நெஞ்சம், மனம்** ஆகிய இரு சொற் களும் ஒரே பொருண்மையில்தான் இக்குறளில் கையாளப் பட்டுள்ளமை தெளிவாகிறது.

'நெஞ்சம்' என்ற சொல் தமிழ்ச் சொல், 'நெஞ்சு' என்ற உடல் உறுப்பினைக் குறிக்கும் சொல்லிலிருந்து ஆக்கப்பட்டு 'உள்ளம்' என்ற பொருளைக் குறிக்கும் சொல். நெஞ்சு, நெஞ்சம் என்ற சொற்கள் 'உள்ளம்' என்ற பொருளில் 54 இடங்களில் திருக்குறளில் இடம் பெற்றுள்ளன.

'மனம்' என்ற சொல் 'உள்ளம்' என்ற பொருளைக் குறிக்கும் வடசொல். இது 'மனஸ்' என்ற சமஸ்கிருச் சொல்லின் தமிழாக்க வடிவமே யாகும் (K.Paramasivam & J. Ameslindholm 1980 : 116) இச்சொல் திருக்குறளில் 27 இடங்களில் இடம் பெறுகின்றது.

பொருண்மை நிலையில் திருக்குறள் முழுமையும் இவை இரண்டு சொற்களும் வேறுபாடின்றியே பயன்படுத்தப்பட்டுள்ளன

குறள் சொல்லடைவுகளில் இவ்விரு சொற்களுக்கும் 'உள்ளம்' என்ற பொருளே அவற்றின் வருகைளில் எல்லாம் கொடுக்கப்பட்டு உள்ளது இவ்விரு சொற்களின் வருகையைப்பொருண்மை கொண்டு வரைறை செய்ய இயலாத நிலையே திருக்குறளில் காணப்படு கின்றது. இப்பின்னணியில் மேலே குறிப்பிட்ட குறளில் ஒரே பொருளைக் குறிக்க இருவேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டிருப் பதற்கு வேறு காரணம் ஏதோ உள்ளது என்றால் அக்காரணம் யாது?

மனம் என்ற சொல் இக்குறட்பாவின் ஈற்றடியில் இறுதிச் சீராக அமைந்துள்ளது. பொருண்மை நிலையில் **மனம், நெஞ்சம்** இவையிரண்டும் ஒன்றற்கொன்று பதிலீடு செய்யக் கூடிய சொற்களேயாம். இருப்பினும் இந்த ஈற்றடி இறுதிச்சீரில் **மனம்** என்ற சொல்லுக்குப் பதிலாக **நெஞ்சம்** என்ற சொல்லை அமைத்தால் குறட்பாவின் ஈற்றடி இறுதிச் சீர்வாய்பாடு மாறும். வெண்பாயாப்பு சிதையும் இந்த அமைப்புக் கருதியே இங்கு **மனம்** என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது எனக் கருத வாய்ப்புள்ளது.

நெஞ்சம் என்ற சொல்லைப் போடாது **'நெஞ்சு'** என்ற சொல்லைப் பயன்படுத்தினால் வெண்பாவின் ஈற்றடி இறுதிச் சீர் வாய்பாடு சரியாக இருக்குமே என்றால், அப்போது இறுதிச் சீர் வாய்பாடு அமையும்; ஆனால் இறுதிச் சீருக்கும், ஈற்றயற் சீருக்கும் இடையே உள்ள தளை அமைப்புச் சிதையும்.

உடல் சுவை **உண்டார் மனம்**
உடல் சுவை **யுண்டார் நெஞ்சு**

இயற்சீர் வெண்டளை அமைப்பு மாறி நேரொன்றாசிரியத்தளை ஆகிவிடும். இக்காரணத்தாலேயே **மனம்** என்ற சொல்தேர்வு இடம் பெற்றுள்ளது எனக் கருத வாய்ப்புள்ளது. இதனால் வள்ளுவரின் சொல் தேர்வு அவர் கையாண்ட வெண்பா யாப்பு வடிவத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெளிவாகிறது. இக்கருத்தை அரண் செய்ய இன்னும் சில குறட்பாக்களைக் காணலாம்.

திருக்குறளில் கையாளப்படும் மற்றொரு வடசொல் **'ஆசாரம்'** என்ற சொல்லாகும். இச்சொல் திருக்குறள் முழுமை யிலும் ஒரே ஓர் இடத்தில்தான் இடம் பெறுகிறது. **ஆசாரம்**

என்ற இந்த வட சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லான ஒழுக்கம், ஒழுக்காறு ஆகிய சொற்கள் 53 இடங்களில் இடம் பெற்றுள்ளன. **பண்பு** என்ற தமிழ்ச்சொல் 25 இடங்களில் இடம் பெறுகின்றது **இயல்பு** என்ற தமிழ்ச்சொல் 15 இடங்களில் இடம் பெறுகின்றது. **ஆசாரம்** என்ற சொல்லிற்கு இணையான தமிழ்ச் சொற்களை இத்தனை இடங்களில் பயன்படுத்திய வள்ளுவர் ஒரே ஒரு குறளில் **ஆசாரம்** என்ற வடமொழிச் சொல்லையே பயன்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

அச்சமே கீழ்களது ஆசாரம் எச்சம்

அவா உண்டாம் சிறிது (1075) இக்குறளில் **ஆசாரம்** என்ற சொல் பொருண்மை வேறுபாட்டிற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ளதா? என்று உரையாசிரியர்களின் உரையை நோக்கினால் **ஆசாரம்** என்ற சொல் 'இயல்பு/ஒழுக்கம்' என்ற பொருளில்தான் கையாளப்பட்டிருப்பது தெளிவாகிறது. அங்ஙனமாயின் இப் பொருள் தரும் தமிழ்ச் சொற்களை விடுத்து இவ்வட சொல்லைத் தேர்ந்து எடுத்தற்கு என்னகாரணம்? என்ற வினாவிற்கு வெண்பா யாப்புதான் காரணமாகக் கூடும் என்றே விடையிறுக்க வேண்டியுள்ளது.

இது போன்றே

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு" (261)

என்ற குறளில் 'தவம்' என்ற வடசொல்லுக்கு இணையான நோற்றல், நோன்பு, நோன்மை, நோன்றல் போன்ற தமிழ்ச் சொற்களைப் பல குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ள வள்ளுவர் இக்குறளில் மட்டும் 'தவம்' என்று தேர்ந்து எடுத்ததற்கு வெண்பா யாப்பும் ஒரு காரணமாயிருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

வள்ளுவர் படைத்த குறள் எத்துனை நுண்மையானது என்பதற்கு அவர் தேர்ந்தெடுத்த யாப்பு வடிவமே - குறட்பா வடிவமே சான்றாகும் இயல்பாகவே வள்ளுவர் பொற்களை வீணே இட்டு நிரப்புவதை விரும்புபவரல்லர். "பயனில்லாது சொற்களைப் பயன்படுத்துவனை" 'மகன், அல்லன்மக்களுட்பதடி' என்றெல்லாம் கூறிய வள்ளுவர் கூடத் தேவைக்கு மேற்பட்ட சொற்களைப்பயன்படுத்தியுள்ளமையைச் சில குறட்பாக்களில்

காணமுடிகிறது. இதற்கும் அவர் தேர்ந்தெடுத்த வெண்பா யாப்பே காரணமாகிறது. வள்ளுவர் யாப்பின் பொருட்டே சில சொற்களைத் தேவைக்குமேல் வெற்றெனத் தொடுத்துள்ளார் என்பதைப்பின்வரும் குறட்பாக்களில் அடைப்புக் குறியிட்ட சொற்கள் விளக்கும்.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை (செய்யாமை) நன்று (297)
பீலிபெய் சாகாடும் அச்சிறும் (அப்பண்டம்)
சாலமிகுத்துப் பெயின் (475)

இக்குறட்பாக்களில் செய்யாமை என்ற சொல் இரட்டித்து வருவதால் பொருண்மைச் சிறப்பு ஏதும் இருப்பதாகக் கூற இயலாது. **அப்பண்டம்** என்ற சொல் இல்லாமலும் குறள் கூற வரும் பொருள் வெளிப்படுகிறது, இவ்விடங்களில் எல்லாம் வள்ளுவர் வெண்பா யாப்புச் சிதையாமல் இருக்கும் பொருட்டே சில சொற்களை இட்டு நிரப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது காறும் கூறியவற்றால் வெண்பா யாப்பு என்ற இலக்கிய வடிவம் வள்ளுவரின் சொல் தேர்வைக் கட்டுப்படுத்தியுள்ளது என்பது தெளிவாகிறது.

துணை நூல்கள்

திருக்குறள் - உரைக்கொத்து - அறத்துப்பால், ஸ்ரீகாசிமட வெளியீடு, திருப்பனந்தாள், 1969.

திருக்குறள் - உரைக்கொத்து - பொருட்பால் ஸ்ரீகாசிமட வெளியீடு, திருப்பனந்தாள், 1960

Parama sivam, K., and Lindholm J., A Basic Tamil Reader and Grammar vol. II, Illinois, 1980.

John Ayto, Dictionary of word origins, Blooms bury Publishing Ltd, London 1990.

தொலைக்காட்சித் தமிழில் தொடரியல் அமைப்பும், கருத்துப்புலப்பாட்டுத்திறன் வழிமுறையும்

இ. சேனாவரையன்
வி. எல். பி. ஜானகியம்மாள் கலை, அறிவியல் கல்லூரி
கோவை – 641042

செய்திப் பரவல் தொடர்புச் சாதனமான சென்னைத் தொலைக்காட்சியில், தமிழ் மொழிப் பண்பாட்டைக் கொண்டு தொடரியல் அமைப்பை ஆராய்வதன் மூலம் கருத்துப் புலப் பாட்டின் ஆற்றல் (Communicative efficiency) எந்த அளவில் அமைந்துள்ளதை அறிய இயலும். தொலைக்காட்சி மகளிர்க்கான நிகழ்ச்சிகளில் நேர்காணல் உரையாடல், பேட்டி போன்றவை களிலும், தொழிலாளர்களுக்கான செய்தி விளக்கப்படம், மெல்லிசை நிகழ்ச்சி, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளிலும் தமிழ் மொழிப் பயன்பாட்டில் தொடரியல் குறித்த ஆய்வு மொழி வளர்ச்சிக்கும், கருத்துப் புலப்பாட்டுத்திறன் வெளிப்பாட்டிற்கும், உறுதுணைபுரியும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

தொடரியல் என்பது சொற்களைச் சொல்லமைப்புக்களை இணைத்துச் சொற்றொடர்களையும், சொற்றொடர்களை இணைத்து வாக்கியங்களையும் விளக்கும் மொழியியற் பிரிவாகும். மொழியின் தொடர் அமைப்பை, வகைப்படுத்தல் இலக்கணம் (Taxonomic grammer) மாற்றிலக்கணம் (Transformational grammer) படைப்பு இலக்கணம் (Generative grammer) பயனுருபியல் இலக்கணம் (Tagemmic grammer) போன்ற பலவகை இலக்கணக் கொள்கைகள் மூலம் இக்கால மொழியியலாளர் விளக்குகின்றனர்.

தொடர்களில் காணப்படும்

1. சொற்களின் வரிசை நிலை (Linear structure)

2. சொற்களின் இலக்கண இணக்க நிலை (co-occurrence).

3. சொற்றொடர்களின் இலக்கணக் கிளை அமைப்பு வடிவம் (herechical structure.)

4. சொற்றொடர்களில் பங்கு பெறுகின்ற பெரிய மற்றும் சிறிய இலக்கணக் கூறுகள் (grammatical categories and their sub- categories).

5. சொற்றொடர்களில் காணப்படும் சொற்களின் இலக்கணப் பயன்பாடுகள் (grammatical functions).

6. சொற்றொடரின் அமைப்பியல் மயக்கத்தன்மை (gramm structural ambiginity).

7. ஒரே பொருளைக் குறிக்கின்ற பலவகை சொற்றொடர் களின் அமைப்பு வேற்றுமை (paraphrase relation structural dissimilarity).

8. சொற்றொடர்களின் இலக்கண வழுத்தன்மை (ungrammaticality).

9. சொற்றொடர்களில் தோன்றும் கூறுபுரைடக்கநிலை (recursivense) போன்ற ஒன்பது வகையான சொற் றொடர் தொடர்பான செய்திகள் இன்றைய தொடரி யலில் விளக்கப்படுகின்றன.

தொலைக்காட்சி தமிழில் இடம்பெறும் தொடர் மற்றும் வாக்கிய அமைப்புகள் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் ஆங்கிலம் மற்றும் தமிழ் இரண்டும் கலந்து அமைந்துள்ளமையைக் காணலாம். மொழி அமைப்பில் தொடர்களும், வாக்கியங்களும் இலக்கண முறைப்படி தொகுத்து வகுத்து நிகழ்ச்சிகளில் இடம் பெற்றால்தான் கருத்துக்கள் தெளிவான முறையில் மக்களுக்குப் பரிமாற்றம் செய்யமுடியும். தொடரமைப்பு வாக்கிய அமைப்பு எழுத்து வழக்கில் முறையாக இடம் பெற்றிருக்கும். ஆனால், தொலைக்காட்சித் தமிழ் நிகழ்ச்சிகளில் இடம்பெறும் பேச்சு வழக்கு தொடரமைப்பு, வாக்கிய அமைப்பு முன்னுக்குப்பின் முரணான நிலையில் குறைவாக்கியமாகவும் இடம் பெற்றுள்ள மையினைக் காணலாம். இதற்குக் காரணம், ஏதேனும் ஒரு பொருள் பற்றி உரையாடல் நிகழ்த்தும் போதோ, நாடகங் களிலோ பேச்சு வழக்குப் பயன்பாடு மிகுதியும் பயன்படுத்தப் படுவதே எனலாம்.

வாக்கிய அமைப்பில் எழுவாய் இல்லாத வாக்கியங்கள், குறைவாக்கியங்கள், எழுவாய் பயனிலை இயைபு இல்லாத வாக்கியங்கள் போன்றவை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலும், ஆங்கிலச் சொற்கள் அதிகமாகப் பயன்படுத்தி தொடர்களையும், வாக்கியங்களையும் உருவாக்குகின்றனர். இதனால் பொருள் குழப்பம் ஏற்படாவிடினும், படித்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளும் விதத்தில் அச்சொற்றொடர்கள் காணப்படுகின்றன. இத்தொடர்களை, படிக்காத பாமர மக்கள் நன்கு பொருள் உணர்ந்து கொள்வது கடினமான செயலாகும். ஆகையால் இத்தகைய தொடர்களைத் தவிர்த்து எளிய வழக்குச் சொற்களைப் பயன்படுத்தினால் எல்லா பிரிவினருக்கும் ஏற்றதாக அமையும்.

ஒரு குறிப்பிட்ட கருத்துப் பற்றிய விளக்கம் கோர்வையாகக் கூறப்படும்போது எழுவாய் திரும்பத் திரும்பவும் சில இடங்களில் பதிலிடு பெயர்களும், இன்னும் சில இடங்களில் எழுவாய்ப் பதிலிடு பெயர்கள் இல்லாமலும் வாக்கியங்கள் அமைந்துள்ளன. பேச்சு வழக்கு இயல்புகளும் இதுவும் ஒன்றாகும். மேலும், ஆங்கிலச் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தும் போது மொழி பெயர்த்தும் கூட்டுச் சொற்களாக இருப்பின் மொழி பெயர்க்கப்படாமல் அப்படியே பயன்படுத்துகின்ற நிலையினையும் காண முடிகிறது.

பெயர்த் தொடர்: பெயர்த் தொடர்களில், பலவகையான அடைச்சொற்கள் உள்ளன. அடைச் சொற்களில் பலவகைகள் உண்டு.

1. அளவையினைக் குறிக்கும் அடைச் சொற்கள் (quanlitative adjectives)

2. குணத்தைக் குறிக்கும் அடைச்சொற்கள் (qualitative adjectives)

3. எண்ணிக்கையினைக் குறிக்கும் அடைச்சொற்கள்

4. ஆறாம் வேற்றுமை உருபினைத் தாங்கி வரும் அடைச் சொற்கள்

அளவை அடை பெயர்

(எ.கா) அரை ஆழாக்கு பருப்பு
அதிகபட்ச சம்பளம்
பல வருஷங்கள்

குண அடை பெயர்

(எ.கா) இளம்பெண்

இளமை வசந்தகாலம்

பச்சகாய்கறிகள்

எண்ணிக்கை அடை + பெயர்

(எ.கா) எண்ணூறு கிராம்

ஐநூறு ஆண்கள்

நாலாவது குரூப்

ஆறாம் வேற்றுமை உருபு தாங்கிய அடை + பெயர்

(எ.கா) உன்னுடைய வேலை

நமது தேஷத்தில்

நம்முடைய Company-ல்

பெயரெச்ச அடை + பெயர்

(எ.கா) உயர்ந்த கல்வித்திறமை

கரடு முரடான

வெறும் ஞானக்காற்றில்

சுட்டு + பெயர்

(எ.கா) இந்த + வருமானம் இந்தவருமானம்

எந்த + வேலை எந்தவேலை

இந்த + work-ல் இந்தwork-ல்

வினைத்தொடர்: வினைத் தொடரில் கருவாகவும், அவ் வினைச் சொற்களைத் தழுவி வினையடைகள். வேற்றுமைத் தொடர்கள் காலம், இடம் காட்டும் பெயர்த் தொடர்கள், வினையெச்சத் தொடர்கள் (செய்து, செய்ய என்னும் எச்சங்கள்) ஆகியவை இடம்பெறும் வினைச்சொற்கள் சில தன்வினைச் சொற்களாகவோ, துணைவினைச் சொற்களாகவோ அமைந் திருக்கும். வினைச்சொற்களில் காலம் காட்டும் இடைநிலைகள், பால், எண், இட விகுதிகள் காணப்படும். வாக்கியங்களில் காணப்படும் எழுவாயின் (பெயர்களின்) பால், எண் தன்மையின் இணக்கநிலையினைக் காட்டுகின்றன.

வினையடைகள் + வினை

உருண்டை யாக உருட்டி

பெருமையா பேசறாங்க

காலவினையடை + வினை

இப்போது பண்றதில்லை

எப்போ வாங்கறது, எப்போ பண்றது

வேற்றுமை வினையடை + வினை

வேகத்துடன் இயக்கிய வண்ணமாக இருக்கணும்

இந்த யோசனையைச் சொன்னதுக்காக

அந்த வை சொன்னதுக்கு

வினையெச்சத் தொடர்கள்: பெண்களே பெண்களுக்காக மட்டும் நடத்தற இந்த நிறுவனம் பலவருஷங்களா ரொம்ப லாபகரமாக நடந்துட்டு வருது.

பால் - எண் – இட விகுதியில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள இணக்கம்

பொது ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள்

இந்த உணவுகள் கோதுமையினால் செய்யப்பட்டவை

மேற்கண்ட தொடர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் இடம் பெற்றுள்ளன. அந்தந்த துறை வல்லுநர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்கும்போது, ஆங்கிலச் சொற்களை மிகுதியாகப் பயன் படுத்துகின்றனர். குறிப்பாக, ஆய்வுக்குரிய நிகழ்ச்சிகளில் பெண்களே ஆங்கிலத்தை அதிகமாக தொடர்களில் பயன்படுத்தி யுள்ள நிலை காணலாம். இதனால் சொல்லப்படும் கருத்து சாதாரண மக்களிடம் சென்று சேர்கின்றனவா என்பது கேள்விக் குறியாகும். இவ்வகை உணர்வோடு நிகழ்ச்சிகளில் பங்கேற்றால் தொடரமைப்பில் மொழிச்சிக்கல் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். கருத்துப்புலப்பாட்டுத் திறனை மேம்படுத்தலாம். செல்வாக்கு மிக்க தொலைக்காட்சி தகவல் தொடர்பு சாதனத்தில், செய்தி பரிமாற்றம் என்ற நிகழ்வில் பங்கேற்கும் செய்தி அனுப்புநர்கள், தங்கள் மனதில் செய்தி பரிமாற்றச் சிந்தனைகளைக் கருத்தில் கொண்டு செயல்படுவது அவசியம்.

உள்ளே உருவாகி வரும் உளநிலையின் வெளிப்பாடு உடல் மொழி. இவ்வுடல்மொழி திட்டமிடப்பட்டு நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் போன்றவைகளில் வெளிப்படுத்துகின்றனர் கலைஞர்கள் மேலும் உடல்மொழி இயல்பாக அமையும் தன்மையது இயல்பாக அமையும் ஒருதிறன், உணர்வுநிலையில் இல்லாத ஒன்றைத் தெரிந்தெடுத்து, முருகியல் இன்பம் பெறுவதற்காக கலைகளில் வெளிக்காட்டுவர். இதுபோன்று, உடலசைவு நிலைகள், வாய்மொழியின் வழிதரப்படும் உணர்வு செய்திகள், உடைகளாலும், ஒப்பனைகளாலும் தகவல் பெறு நரைக் கவர்வது, மனநிலைகளையும், உணர்வுகளையும் ஒருங் கிணைத்து, மொழியைப் பயன்படுத்துவது ஆகியவை தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் பங்குபெறுபவர்கள் மனதில் கொண்டு செயல்பட்டால், கருத்துப்புலப்பாட்டுத்திறன் நன்கு அமையும்.

நகரத்தார்களின் வாகனத் தருமம்

தே. சொக்கலிங்கம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

திருக்குளம், திருக்கோயில் என்று அறப்பணிகளைச் செய்து வந்த நகரத்தார்கள், இறை வழிபாட்டுக்கு நிலையான களங் களை அமைத்த பின்னர்த் திருக்கோயில் தொடர்பான அகவளர்ச்சிகளிலும் புறவளர்ச்சிகளிலும் ஈடுபடலாயினர்.

நிலையான அமைப்பும் வளர்ச்சியும்

ஒருவன் தனக்கு நிலையாக வருமானம் ஏற்பட்ட பின் தான் வாழச் சொந்தமாக வீடு அமைத்துக் கொண்டபின் தன்னுடைய பிற தேவைகளைப் பெருக்கிக் கொள்ளவும் வசதி களை அமைத்துக் கொள்ளவும் செய்வான்; அதன்பின் சிறுகச் சிறுகத் தனக்கு வேண்டியவற்றை அவன் சேகரிக்கத் தொடங்கு வான். அது போலச் சிவபெருமான் எழுந்தருளச் சாலச் சிறந்ததும் திட்ப நுட்பம் அமைந்ததுமாகிய திருக்கோயிலை நகரத்தார்கள் கட்டி முடித்தனர். பாடல் பெற்ற திருத்தலங் களில் எல்லாம் கல் திருப்பணி செய்யப் பெற்றுச் செவ்வனே நிறைவேறிற்று. அவர்கள் வாழ்ந்த ஊர்களிலும் விநாயகர் கோயிலோ அம்மன் கோயிலோ சிவன் கோயிலோ கட்டப் பட்டன. திருக்கோயில்கள் கட்டி முடித்தபின் தொடர்ந்து நகரத்தார்களின் மனம் தெய்வப் பணியை விழைந்த அவர்கள் உள்ளது, கோயில் வளங்களைப் பெருக்கிடச் சென்றது. இறை பணியே இனிய பணி என்று மேன்மேலும் நகரத்தார்கள் பெருகிய செல்வத்தைக் கோயில் வழிபாட்டுத் தொண்டு களிலேயே செலவிட்டனர்.

திருக்கோயில் திருப்பணி, நகரத்தார்களுக்குப் பல்வேறு சமூகத்தினருடன் உறவாட வழிவகுத்தது. ஸ்தபதிகளுடனும் சிவாச்சாரியார்களுடனும் பழகிய நகரத்தார்கள், அவர்

களுடைய கதைத்தொடர்பான அறிவுண்மைகளை அறியலாயினர்; அவர்களிடையே கருத்துப்பரிமாற்றங்கள் ஏற்பட்டன. சிற்ப சாத்திரம், ஆகம சாத்திரம் ஆகியன பற்றிய அறிவும் நகரத்தார் களுக்கு உண்டாயிற்று. இதனால் கோயில் தொடர்பான பணிகளில் நகரத்தார்கள் ஈடுபட வாய்ப்பேற் பட்டது.

இறைவன் திருவுலா

கோயிலில் இருந்த இறைவன், கோயிலுக்கு வெளியே வந்து அடியார்களுக்கு அருள்புரிய எழுந்தருளினான். அவ்வாறு இறைவன் வெளிப் போந்தபோது எவ்வாறு வர வேண்டும் என்று அடியார்கள் எண்ணலாயினர். இறைவன் உலா வந்திட எந்நாளில் என்ன வாகனத்தில் வர வேண்டும் என்று ஆகமங்களால் நகரத்தார்கள் அறிந்தனர். இதனால் கோயிலுக்குத் தேவையான புதிய புதிய வாகனங்களை அவர்கள் செய்யலாயினர். அம் முயற்சியில் தச்சாசாரிகளும் கொல்லாசாரிகளும் பங்கு பெற்றனர். இதனால் திருக்கோயிலில் பல்வேறு வாகனங்க்ள், மரத்தால் செய்யப்பட்டன; அவற்றுக்கு வண்ணங்கள் பூசப்பெற்றன. மரத்தில் வாகனங்கள் செய்யப் பெற்றுத் திருவிழாக்கள் சீரும் சிறப்புமாக நிகழ்ந்தன.

மரவாகனம் வெள்ளியாதல்

தொடக்கத்தில், திருமேனிகளைக் கையில் தூக்கியும் படிச் சட்டப் பலகைகளில் வைத்துத் தூக்கியும் உலாவாகக் கொண்டு திருவிழாச் செய்த மக்கள், இறைவனுக்கு வாகனங்கள் அமைத்து அவற்றில் இறைவனை எழுந்தருளச் செய்தனர். இதற்காக மரத்தில் வாகனங்கள் செய்தனர். மரவாகனங்களைத் திருவிழாவில் எழுந்தருளிச் செய்ய அவற்றுக்கு எண்ணெய் பூசியும் வண்ணம் பூசியும் அழகுபடுத்தினர். மரவாகனங்களின் வண்ணம் ஓரிரு ஆண்டுகளில் குலைந்து விடுவதாலும் கறையான் பிடித்து அழிந்து போவதாலும் வாகனங்களை அடிக்கடி செப்பனிட வேண்டியதிருந்தது; ஆண்டு தோறும் அவற்றைப் புதுப் பித்து வண்ணம் பூச வேண்டியிருந்தது. எனவே வாகனங் களை நெடுநாள் காக்க என்ன வழி என்ற எண்ணம் ஓடலா யிற்று; நகரத்தார்களிடம் செல்வமும் நிலையாகக் குவிந்தது; சொத்துகளும் சேர்ந்தன; இதனால் மரவாகனங்கள், வெள்ளியால் செய்யப்பட்டன. வெள்ளி வாகனங்கள், நெடுநாள் கெடாதன வாயும் திருவிழாவில் எழுந்தருளி வரும் போது அழகு தருவ தாயும் விளங்கின.

வாகனத் திருப்பணியாக வளர்தல்

பாடல்பெற்ற திருத் தலங்களிலே தான் முதற்கண் வெள்ளி வாகனங்கள் செய்யும் பணி தொடங்கப் பெற்றது. பின் நகரத்தார்கள் தாங்கள் வாழ்ந்த ஊர்களிலேயுள்ள கோயில் களிலும் இப்பணியை மேற் கொண்டனர். திருக் கோயில்களில் தனியாகவும் கூட்டாகவும் கோயில் வாரியாகவும் (இளையாத்தக் குடி, மாத்தூர் என்பன போல) பொருள் திரட்டிப் பல்வேறு வாகனங்களைச் செய்தனர் நகரத்தார்கள்.

கடவுள் காட்சி தரக் காளை வாகனம்: நகரத்தார்கள் சிவன் கோயிலுக்கு வழங்கிய வாகனங்களில் மிகுதியானவை காளை வாகனமே (ரிஷபம்) இது சிவபெருமானுக்கு உகந்த வாகனம்; இன்றியமையாத வாகனம். திருஞான சம்பந்தரைப் 'பால் கொடுத்தது யார்? காட்டு' என்று கேட்டபோது, அவர் அங்க அடையாளங்களுடனே 'என்னை இது செய்த பிரான் இவனே' என்று காட்டினார். உலகத்தவர்க்கு இறைவரைக் காட்டியருளிய முதல் திருப்பாட்டில் 'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி'' என்று திருஞானசம்பந்தர் குறிப்பித்தார். சிவபெருமான் அடியார்க்கெல்லாம் காட்சி தந்தமையைத் 'துணையுடன் விடைமேல் கண்டார்'' (399) என்றும் ''மழவிடை மேல் எழுந்தருளி வந்தது'' (3657) என்றும் திருத்தொண்டர் புராணமும் பேசுகின்றது. இதனால் சிவ பெருமான் நயந்த ஊர்தி காளை வாகனம் என்பது பெறப்படும். எனவே நகரத்தார்கள், திருக்கோயில்களுக்கு ரிஷப வாகனம் செய்வதில் பேரீடுபாடு காட்டினார்.

சிவன் கோயில்களில் ரிஷப வாகனம் மிகப்பெரியது பெரியது, சிறியது என்று பல அளவுகளில் இருந்தன. திங்கள் தோறும் பிரதோஷ விழாவில் இறைவன் எழுந்தருளச் சிறிய காளை வாகனம் உண்டு. இவ்வாகனத்தில் பிரதோஷத்தன்று பிரதோஷநாயகர் அல்லது உமாமகேசுவரர் எழுந்தருளிக் காட்சி தருவார். இந்த ரிஷப வாகனம் அழகியதாயும் சிறிதாயும் குறைந்த எண்ணிக்கையுள்ளவர்களால் தூக்கக் கூடியதாயும், விளங்கும். மற்றைய காளை வாகனங்கள் இதைவிடப் பெரியன வாக இருக்கும். பெரிய ரிஷபம், பஞ்சமூர்த்தி திருவுலாக் காட்சியில் பங்குபெறும். எல்லாக் காளைகளும் கட்டைக் கொம்புடனும் அளவான திமிலுடனும் நின்ற கோலமாகக்

காணப்படும்; இதன் கழுத்தில் மணிக்கோவையும் கொம்பில் கொப்பியும் கால்களில் சலங்கையும் திகழ்கின்றன. ஓர் அழகிய வெண்ணிறக் காளை உயிருடன் நிற்குமாறு ரிஷபம் விளங்கும். காளையின் உடலில் பல அணிகள் நிறைந்து அழகு வீசச் சிற்பி உருவாக்கியிருக்கும் கலைச் சிறப்பு, நகரத்தார் கலை வரலாற்றில் குறிப்பிடற்பாலது.

இலக்கியம் உருவாக்கிய வாகனம்: கைலாசமலை, சிவ பெருமானைத் தாங்கி நிற்பது. இம்மலையை இராவணன் பெயர்த் தெடுக்க முயலவே, சிவபெருமான் தன் கால் பெரு விரலால் சிறிது அழுத்தவே அதில் மாட்டிக் கொண்டு அலறினான்; பின் இராவணன் அஸ்தம் என்னும் யாழைப் பூட்டிச் சாமதேவம் பாடி உய்தி பெற்றான். இதனைத் திருநாவுக்கரசர் தான் பாடிய தேவாரப் பதிரங்களின் பத்தாவது பாடல் கருத்தாகக் கொண்டு தமக்கு அருள் செய்யப் பாடியிருக்கிறார்.

''நரம்பெழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்களெல் லாம்கொண் டெடுத்தான் ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில் வீரட்டஞ்சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவதும் இல்லை''

என்று திருநாவுக்கரசர் தனக்கு இராவணனுக்குக் கருணை செய்தது போலச் செய்ய வேண்டும் என்ற குறிப்பமையப் பாடினார். மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில் கண்ணுதலான் பெருங் கருணைக் கைக்கொள்ளும் என்று காட்டிட அமைந்த காட்சியைக் கைலாச வாகனம் என்ற பெயரால் சிற்பாசிரியர்கள் துணையோடு நகரத்தார்கள் உண்டாக்கினர். தேவார திருமுறைகளை ஓதியோதி உணர்ந்த தன் வாயிலாக இந்த வாகனம் உருவாகியிருக்கிறது.

கற்பகத் தருவும் காமதேனுவும்

கைலாச வாகனம் மரத்தாலும் வெள்ளியாலும் செய்யப் பட்டிருக்கிறது. கற்பக விருட்சம் தேவலோகத்திலுள்ளது. இது வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும் தன்மையது. கற்பக மரம்

போன்ற வடிவில் இவ்வாகனம் இருக்கும். "திண்டோர் கற்பகத் தருவோடு ஈந்தான்" (திருவால வாயுடையார் புராணம். 37 : 75) என்று கற்பகத் தருவாகிய வாகனம் வழங்கியமை பேசப்படுகிறது. கற்பக மரம், தேவர்கள் பாற்கடல் கடைந்த காலத்தில் தோன்றியது. மரங்களைப் போல எட்டுக் கிளைகளுடன் காமவல்லி என்ற கொடி படர்ந்திருக்க அமைக்கப் பெறும். காமதேனு, அமிர்த மதன காலத்தில், தோன்றிய தெய்வீகப்பசு. ஆவின் தோற்றமும் மனித முகமும் தலையில் கொம்பும் மார்பில் முலையுமாக நான்கு கால்களுடன் விளங்கும் பௌராணிக விலங்கு காமதேனு. இது வேண்டுவார்க்கு வேண்டுவன நல்கும். இதனை இறைவன் உலாவர நகரத்தார்களுடன் பிறரும் செய்தளித்திருக்கின்றனர்.

உலாவரும் கடவுளரும் வாகனக் கவியும்

கடவுளரை வாகனங்களில் எழுந்தருளச் செய்து உலா வருகின்ற காட்சியைப் புலவர்கள் பாடியமையைத் தனிப் பாடல்களால் அறிய முடிகின்றது. காளமேகப் புலவர் திருமாலைப் 'பருந்து எடுத்துப் போகுதுபார்' என்று வருவது இதற்குச் சான்றாகும். இறைவன் வாகனங்களில் எழுந்தருளி வருகின்ற காட்சியைச் சிறப்பித்துப் பாடுவது, 'வாகனக் கவி' எனப்படும். ஐந்து, அல்லது பத்துச் செய்யுட்கள் இச்சிறுநூலில் இருக்கும். அரியக்குடி சீனிவாசப் பெருமாள் பற்றிய வாகனக்கவி நகரத்தார் ஒருவரால் பாடப் பெற்றிருக்கிறது. இது திருக்கோயில் திருவிழாவை ஒட்டி எழுந்த புதிய இலக்கிய வகையாகும். திருக்குற்றாலக் குறவஞ்சி போன்ற நூல்கள் சிவபெருமான் வாகனத்தில் உலாவருதலைப் பாடுகின்றன. இது போன்ற குறிப்புகள், திருவிழாவில் வாகனத்தில் இறைவன் வருதலைப் பற்றியனவேயாகும்

இவ்வாறு நகரத்தார்கள் திருக்கோயில் கட்டுவதில் பெரும் பொருள் செலவழித்திருப்பது போல வாகனங்கள் செய்வதிலும் நிறையப் பொருளைச் செலவழித்திருக்கின்றனர்.

வளாக இதழ்கள்

நெல்லை ந. சொக்கலிங்கம்.
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை 625 021

நுழைவாயில்: தகவல் பரிமாற்றத்திற்குப் பெரிதும் உதவும் கருவிகளே இதழ்கள் ஆகும். பல்வேறு வழிகளில் படிப்படியாக வளர்ந்து வந்த தகவல் பரிமாற்றம், செர்மனியின் ஜான் கூட்டன் பர்க் என்பார் 1430-இல் அச்சுப்பொறி கண்டுபிடித்ததன் விளைவாக இதழியல் ஒரு கலையாக மிக வேகமாக வளர்ந்தது. நாளிதழ், வார இதழ், திங்களிதழ் எனப் பல நிலைகளில் வளர்ந்துள்ள இதழ்களில் வளாக இதழ்களும் அடங்கும். இங்கு வளாக இதழ்களின் நோக்கம், உள்ளடக்கம், வடிவம் போன்ற கருத்துகள் எடுத்து விளக்கப் பெறுகின்றன.

நோக்கம்: ஆங்கிலதத்தில் House Journal, House Megazine, House orgam என்று அழைப்பதன் தமிழாக்கமே 'வளாக இதழ்கள்' என்பன. வளாக இதழ்களை அரசுத்துறை நிறுவனங்களும் பல தனியார் நிறுவனங்களும் வெளியிடுகின்றன. நிறுவனத்திற்கும் அதன் பணியாளர்களுக்கும் இடையே நல்லுறவை நாளும் வளர்க்கவும், வளப்படுத்தவும், வலுப்படுத்தவும் வேண்டும் என்னும் ஒப்பற்ற நோக்கத்திலேயே இவை வெளியிடப் பெறுகின்றன. இவ்விதழ்கள் நிறுவனப் பணியாளர்களுக்கு மட்டுமே என்பதால் இதில் இலாப நோக்கம் எதுவும் கிடையாது: மேலும் இது தனிச்சுற்றுக்கு உரியதாகவே வெளியிடப் பெறுகின்றது. தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் ஓர் இணக்கமான – புரிந்து கொள்ளுதல் – தன்மையை வளர்ப்பது இதன் பணி. ஆயின் சில வளாக இதழ்கள் விலையிடப் பெற்று விற்பனைக்கும் வருகின்றன. சான்றாகத் 'தமிழரசு' இதழைச் சுட்டலாம்.

உள்ளடக்கம்: ஒரு நிருவாகத்தின் கீழ்ப் பணிபுரியும் அனைவரையும் ஒரு குடும்ப உறவு நெறியில் நிறைப்படுத்துவது வளாக

இதழின் பணியாகும். 1865-ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டின் சிங்கர் நிறுவனமே முதன்முதலில் வளாக இதழைத் தோற்றுவித்தது; இது அந்நிறுவனத்தின் வாடிக்கையாளர் உறவை வளப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்டது. இன்று உலகெங்கும் உள்ள பல்வேறு நிறுவனங்கள் தங்கள் தங்கள் ஊழியர்களின் நன்மையை மையமாகக் கொண்டு வளாக இதழ்களை நடத்துகின்றன.

தொழிலாளர்களின் நலன், தொழிற்சாலை விதிமுறைகள், தொழிற்சாலைகளின் புத்தம் புதிய தொழில் நுட்பங்கள், கருவிகளின் இயக்கங்கள் பணியாற்றும்போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பணிப்பாதுகாப்புகள், பணி உயர்வுகள் போன்ற தகவல்கள் வளாக இதழ்களில் வெளியிடப் பெறும்.

துணைத்தொழில்கள், உற்பத்தியை மேம்படுத்துதல், நேர்முக வேலை வாய்ப்புகள். மறைமுக வேலை வாய்ப்புகள் குறித்த கட்டுரைகளை வளாக இதழ்கள் வெளியிடுகின்றன. தொழிற் கல்வி, ஆய்வு, தொழில் நுட்பப் பயிற்சி குறித்த செய்திகள் இவற்றில் வெளியிடப்பெறும்.

சமுதாயச் சிந்தனை, தேசியப் பாதுகாப்பு, வறட்சிக்கு உதவுதல், இயற்கைச் சீற்றங்களின் போது எடுக்க வேண்டிய செயல்கள், உதவிகள் போன்ற குறிப்புகள் வளாக இதழ்களில் வெளியிடப்பெறும். இவற்றால் சமுதாய நலனில் அந்நிறுவனம் காட்டும் ஆர்வம் புலனாகும். HAL News Letter, Bharath Mines News Letter போன்ற வளாக இதழ்கள் மேற்கண்ட செய்திகளுக்கு முதன்மை தருகின்றன.

மேலும் சில வளாக இதழ்கள் பொழுதுபோக்குச் செய்திகளாகிய சிறுகதை, துணுக்குகள், பண்பாடு, கலை, சமயம், விளையாட்டு ஆகியன குறித்த செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிடுகின்றன.

வளாக இதழ்கள் சில சான்றோர்தம் பொன்மொழிகளையும் நகைச்சுவைத் துணுக்குகளையும் படக் கதைகளையும் வெளியிட்டு நிறுவன ஊழியர்களோடு ஏனையோரையும் படிக்கும் வண்ணம் தூண்டுகின்றன. ஏர் இந்தியா நிறுவனத்தின் The Magic Carpet இதழில் தவறாமல் நகைச்சுவைத் துணுக்குகள் இடம்பெறுகின்றன என்பது இவண் குறிப்பிடத்தகும்.

நிறுவனத்தின் விழாக்கள், பணியாற்றுவோரின் பதவி உயர்வுகள், அவர்கள் பெறும் சிறப்புகள் பணிபுரிவோரின் குழந்தைகள் கல்விச்சிறப்புகள் எனப் பல தகவல்களைச் சில வளாக இதழ்கள் செய்திகளாக வெளியிடுகின்றன; சில இதழ்கள் கறுப்பு வெள்ளைப் படங்களாகவும் சில வண்ணப் படங்களாகவும் வெளியிடுகின்றன. இவற்றால் அந்நிறுவன ஊழியர்கள் சிறப்பிக்கப் பெறுவதோடு, பிறரையும் இத்தகை பெருமைகளை அடையுமாறு தூண்டுகின்றன எனலாம். துர்க்காப்பூரில் இயங்கி வரும் அல்லாய் ஸ்டீல் அமைப்புத் தன்னுடைய ASP MIRROR என்னும் இதழில் மரம் நடுவிழாவைக் கொண்டாடுவதனைப் படத்தின் மூலம் வெளியிட்டுள்ளது. இவ்விதழ் உலகச் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நாள், சிறந்த மணிப்புரி நடனம் நிகழ்த்திய நிறுவனத் துணை மேலாளரின் மகளின் படம் இப்படிப் பல செய்திகளை நிழற்படங்களுடன் வெளியிட்டுள்ளது. இவற்றால் சமுதாய நலன் பெரிதும் பேணப்பெறும் என்பது தெளிவு.

நிறுவனத்திற்கு வருகை தந்த பெருமக்கள் பற்றிய செய்திகளைப் பல வளாக இதழ்கள் வெளியிடுகின்றன. மேலும், MRL News 'Know Your Colleagues, என்ற தலைப்பிலும் IBP News, Know Your Dealer' என்ற தலைப்பிலும் வெளியிடும் செய்திகள் இவ்வகையில் அமைவன.

இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகக் கல்வித் துறையின் கீழ் இயக்கும் நேசனல் புக் டிரஸ்டின் செய்தி மடல் தமிழில் கறுப்பு வெள்ளைப் படங்களுடன் செய்திகளை வெளியிடுவதனை இங்கே சுட்டலாம். ஆயின் புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் 'தேடல் செய்தி விழுதுகள்' என்ற இதழில் படங்கள் வெளியிடப்படவில்லை. இவ்வாறு நிழற் படங்களை வெளியிடுவது படிப்பவர்தம் ஆர்வத்தைத் தூண்டும் என்பது உண்மை; எனினும் நிதி ஒதுக்கீடும் இங்கு கணக்கில் கொள்ள வேண்டிய ஒன்றாக உள்ளது.

வடிவமும் வகைகளும்: பெரும்பான்மையான வளாக இதழ்கள் 'டேபுலாய்டு' (Tabloid) அளவில் வெளிவருகின்றன. 8 பக்கங்கள் முதல் 32 பக்கங்கள் வரை இவை அமைகின்றன பெரும்பாலும் இவற்றில் விளம்பரங்கள் அச்சிடப் பெறுவதில்லை; விதிவிலக்குகளும் உண்டு. ஒரு வளாக இதழை வெளியிடத் தேவையான அடிப்படைகள் வருமாறு:

அடிப்படை அமைப்பு (Basic Forms)

பதிப்பிக்கும் செலவு (Editorial costs) பதிப்பாசிரியர், படைப்பாளர்கள் இவற்றுக்கு உரிய செலவுகள்	கலை நுணுக்கச் செலவு (Art costs) ஒதுக்கீடு (Lay out) வடிவம், கலை நுணுக்கப் பணிகள், நிழற்படங்கள், அச்சிடல்,அஞ்சற் செலவு, உறைகள் இன்ன பிற செலவுகள்

வளாக இதழ்களை வெளியிட நிறுவனங்கள் தகுந்த அளவு நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். திங்கள் தோறுமா இரண்டு மாதத்திற்கு ஒருமுறையா என்று வெளியீட்டின் கால இடைவெளி உறுதி செய்யப்படல் வேண்டும்; அதற்கு ஏற்ப இதழ்களை வெளியிட ஆசிரியர் ஒருவரை அமர்த்துவது சிறப்பு. பல நிறுவனங்கள் இம்முறையைப் பின்பற்றுகின்றன. வளாக இதழ்களில் 'தலையங்கம்' தேவை என்று பேரா. கே. ஆர். பாலன் வலியுறுத்துகின்றார். இதழின் மொழி பற்றியும் உறுதி செய்ய வேண்டும், 'லிக்னைட் ஜோதி' என்பது தமிழில் வெளிவரும் வளாக இதழாகும். இந்தியத் தொலைபேசித் தொழிற்சாலை ஆங்கிலம், இந்தி, கன்னடம், மலையாளம், தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் முத்திங்கள் இதழாக வெளியிடுகின்றது. யாருக்கு உரியது என்பதைப் பொறுத்தே வளாக இதழின் மொழியமைப்புத் தேர்வு செய்யப் பெறுகின்றது.

நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப, கால அளவும், பக்க அளவும், வெளியிடும் தாளின் தரமும் உறுதி செய்யப் பெறுகின்றன. வளாக இதழ்களின் அட்டை, பின் அட்டை போன்றவை வழவழப்பான அட்டைத்தாளில் படங்களுடன் கண்ணைக் கவரும் வகையில் அமைகின்றன சான்று: Export Inspection Journal.

முடிவுரை: வளாக இதழ்கள் நிறுவனத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையில் இணக்கமான உறவை மேம்படுத்தவே வெளியிடப்பெறுகின்றன. இவற்றை வெளியிட நிறுவனங்கள் தகுந்த நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும். மேலும் பொது நல உணர்வு உடைய படைப்புக்களை வெளியிடுவதன் வாயிலாக நிறுவனங்களின் சமுதாய உணர்வையும் அறிந்துணர முடிகிறது.

துணை நூல்கள்

1. அலகு 3, தாள் 10, செய்முறைப் பயிற்சிப் படாம், முதுகலை இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியல் துறை, தொலை நிலைக் கல்வி இயக்கக வெளியீடு, மதுரை – 21.

2. Prof. K.R. Balan, Applied Public Relations and Communications, Sultan Chand & Sons, New Delhi, 3rd Edition, 1983, Page : 229.

3. திரு. ந. ரெங்கநாதன், ஐ. ஐ. எஸ். தகவல் அலுவலர், பத்திரிகைத் தகவல் மையம், மதுரை – 2 அவர்களின் குறிப்புகள்.

முதல் பெண்வழக்குரைஞர்

இரா. சோதிவாணன்
சி. அப்துல் அக்கீம் கல்லூரி
மேல்விசாரம் 632 509

முன்னுரை: சேரன்தம்பி இளங்கோ இசைத்த சிலம்பின் தலைவி, தேர்ந்த சொற்களால் தென்னவன் முன்னர் வழக்குரைத்துச் சிலம்பினால் வென்று "சாட்சியச் சட்டத்திற்கு" ஒளி கொடுத்த காப்பியச் சுடராக விளங்குகிறாள். மண்ணுலக நீதிமன்றங்கள் மதிக்கத்தக்க மதிநுட்பத்தோடு வழக்காடிய "முதல் பெண் வழக்குரைஞர்" என்ற பெருமையோடு தமிழர்களின் இலக்கிய உலகில் திகழ்கிறாள். வழிவழியாய்க் கற்பின் செல்வியாகக் கண்டு மகிழ்ந்த நாம், சிறிது வழிவிட்டு விலகி, வழக்குரை திறத்தின் செல்வியாகக் கண்ணகியைக் கண்டு மகிழலாம் என்பதே இக்கட்டுரையின் புதுமுயற்சியாகும்.

கண்ணகிக்கு முதல் தகவல்: கண்ணகியை அடைக்கலமாக ஏற்ற இடைக்குல நங்கை மாதரி அவள் மகள் ஐயை, கோவலன் சிலம்பு விற்கச் சென்றபின்னர், ஆயர் சேரியில், பால்தோயாமை, ஆட்டுமறிகள் துள்ளி ஆடாமை முதலிய உற்பாதங்கள் தோன்றியதால், அவை நீங்க, கண்ணகி கண்டு மகிழ, ஆய மகளிர் சிலரோடு சேர்ந்து ஆய்ச்சியர் குரவை ஆடித்தெய்வத்தை வேண்டிப்பாடி முடிக்கின்றனர். ஆய்ச்சியர் குரவை முடிந்ததும், வைகையில் நீராடித் திருமாலின் திருவடியை வணங்கிவர மாதரி செல்கின்றாள். சென்று திரும்பிவந்தவள் சொல்லாட முடியாமல் திகைத்து நிற்கிறாள். ஐயை திடுக்கிடும் ஒரு செய்தியைத்தாய் வழி அறிகிறாள். சேரிக்கே அச்செய்தி பரவி விடுகிறது. ஆயமகளிர் எதையோ மறைமுகமாகத் தன்னை நோக்கி நோக்கிக் கலக்கத்தோடு பேசுவதைக் கண்ணகி காண்கிறாள். "தோழி, என் அன்பனைக் காணாது அலமுறுகின்றது என் நெஞ்சம் என்ன வஞ்சமோ" என்று கண்ணகி ஐயையிடம் கலங்கி மயங்கி வினவுகிறாள்.

"அரைசுறை கோயிலணியார் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனாமென்றே
குரைகழல் மாக்கள் கொலை குறித்தனரே"

என்று ஐயை கண்ணகியின் காதுகளில் முதன் முதலாகத் துயரத் தோடு பதிவு செய்கிறாள்.

கண்ணகியின் கதறல்: அது கேட்டுக் கண்ணகி பொங்கி எழுகிறாள்; பூமியில் விழுகிறாள்; செங்கண் சிவப்ப அழுகிறாள்; தன் கணவன் உடலம் எங்கேயோ என்று ஏங்கி மயங்கிக் கதறுகிறாள், இடிச் செய்தியைக் கேட்ட ஒரு மனைவிக்கு முதலில் ஏற்படும் துயர விளைவுகள் இவை. இவற்றை அடுத்து, இப்பெருந்துயரத்துக்கு ஆளாக்கிய அரசன் மீது கண்ணகியின் சினம் பொங்குகிறது.

"மறனொடு திரியும் கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய்! அவலங் கொண்டழிவலோ
செம்மை யினிகந்த கோற்றென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி அழிவலோ"

எனக் கண்ணகியின் நெஞ்சம் எரிமலையாக வெடிக்க அவள் வாயிலிருந்து கனல் வரிகள் தெறிக்கின்றன. தவறிழைத்த கொற்றவன் மீது கொண்ட செற்றமும் சீற்றமும், கணவன் மீது சுமத்தப்பட்ட கடுங்களங்கத்தைக் களையவேண்டிய கடமை வெறியம் அவ்வரிகளில் எதிரொலிக்கின்றன.

செங்கதிரோன் சாட்சியம்: கண்ணகி முதலில் ஆயர் சேரிக்குத் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை மெய்ப்பிக்க வேண்டும் என நினைக்கிறாள். அதற்குரிய காரணத்தை நாம் கண்டு சொல்லலாம்.

அ) கண்ணகியின் காற்சிலம்பைப் பெற்றுக் கோவலன் விற்கச் சென்றிருப்பது மாதரிக்கோ ஆயர்சேரிக்கோ தெரியாது.

ஆ) அடைக்கலம் வந்த ஒரு பெண்ணின் கணவன் கள்வனா என ஆய மகளிர் நெஞ்சத்தின் ஓரத்தில் சிறு ஐயம் அரும்பிவிட்டால் கூட, அது, ஒப்படைத்த கவுந்தி அடிகளுக்கு இழுக்கு; கண்ணகி, கோவலன் குடிக்குக் களங்கம்; அடைக்கலம் கொடுத்த ஆயர் சேரிக்குப் பெருத்த அவமானம்.

இ) அரசனிடம் வழக்குரைக்கச் சென்ற பின்பு மீண்டும் ஆயர் சேரிக்கும் கண்ணகி வருவாள் என்பது உறுதி இல்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் கண்ணகி முதலில் ஆய மகளிருக்குத் தன் கணவன் கள்வன் அல்லன் என் பதை நிறுவச் சாட்சியம் தேடுகிறாள். வானத்தில் நாளும் வலம் வரும் வெய்யோனுக்குப் பாரில் நடக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் காணத்தக்க ஆற்றலும் வாய்ப்பும் உண்டு என்பதால், கண்ணகி அவனையே சாட்சிக்கு அழைக்கிறாள். ''குரவைக் கூத்திற்கு வந்து ஈண்டிய ஆய மகளிர் எல்லாரும் கேளுங்கள்'' என்று அழைத்துக் கதிரவனைநோக்கிப்,

''பாய்திரை வேலிப் படுபொருள் நீயறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்''

என வினவுகிறாள்.

''கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்
ஒள்ளெரி யுண்ணுமிவ்வூர்''

எனக்குரல் கொடுக்கிறான் வெய்யோன்.

கண்ணகியின் வினாவுக்குக்கதிரவனே ''கள்வன் அல்லன்'' என வாய் மொழிச் சான்று வழங்கும்போது ஆய மகளிர் கண்ணகியின் பேராற்றலையும் கோவலன் குற்றமற்றவன் என்பதையும் அதற்கு சிறந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த தங்களின் சீர்மையையும் எண்ணி வியந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. கதிரவன் சாட்சி சொல்வது இன்றைய நடைமுறை உலகத்திற்கு இயற்கை இகந்த நிகழ்ச்சியாக இருக்கலாம். கண்ணகியே வஞ்சின மாலைப் பகுதியில் தன் பதியில் வாழ்ந்த பத்தினிப் பெண்கள் பற்றிப் பேசும் போது, ஒரு பத்தினிப் பெண்

''வன்னி மரமும் மடைப்பளியும் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய் குழலாள்'' என்கிறாள்

மடைப்பள்ளியும் வன்னிமரமும் சாட்சி சொல்லுமா? இவை இயற்கை இகந்த நிகழ்ச்சியாக இருப்பினும் இவற்றின் அடியில் தேங்கிக்கிடக்கும் உண்மையை ஒதுக்கிவிட முடியாது. எந்த ஒரு வழக்கிற்கும் சாட்சியம் (Evidence) இன்றியமையாதது என்னும் சட்டமுறையில் தமிழர்கள் தெளிவு பெற்றிருந்தார்கள் என்பதை மறுக்க முடியாது.

ஊரவர் முன்பு ஒற்றைச்சிலம்பு: கோவலன் கள்வனெனக் கொல்லப்பட்ட செய்தி ஊரெங்கும் பரவி இருக்கும். அதனால் ஆயர்சேரிக்கு அடுத்து ஊர்மக்களுக்குத் தன் கணவன் கள்வன் அல்லவன் என்பதை மெய்ப்பிக்க வேண்டிய கடமை கண்ணகிக்கு எழுகிறது. எஞ்சியிருந்த தன் ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்திக் கொண்டு ஆயர்சேரியை விட்டு மதுரை வீதிகளில் நடக்கிறாள் ''முறைசெய்தல் இல்லாத அரசனிருக்கின்ற ஊரில் வாழும் கற்புடைய பெண்களே கள்வன் இல்லை என் கணவன். என் காற்சிலம்புகளில் ஒன்றை விற்க வந்து, அதற்கு விலை கொடுக்க முடியாதவரால் கொல்லப்பட்டான். இதோ அதன் இணைச் சிலம்பு என் கையில் காணுங்கள்'' என்று ஊரவர் முன்பு கண்ணகி சாட்சியத்தோடு பேசுகிறாள். மேலும் ''காதற் கணவனைக் கண்டுதீதறு நல்லுரை கேட்பேன்'' எனச் சூளுரைக்கின்றாள்.

''கரையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது இது வென்கொல்
செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்தது இது வென்கொல்''

என்று மதுரை மக்கள் வியப்பு கலந்த அச்சத்தோடு பேசுவதிலிருந்தே தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை ஊருக்கு மெய்ப்பிக்க வந்த கண்ணகியின் எண்ணம் ஈடேறிவிட்டது என்பதை அறியலாம்.

கோவலன் வாக்கு மூலம்: கண்ணகி, மதுரைப் பெண்கள் முன்னிலையில் சூளுரைத்தபடியே, தன் காதற் கணவன் உயிர் பெற்றெழுந்து, தீதறு நல்லுரை பேசுவதைக் கேட்கிறாள். கோவலன் கண்ணகியிடம் 'இருக்க' என ஒரு வார்த்தையை இறுதியாகச் சொல்லி வானுலகம் செல்கிறான். 'இருக்க' என்னும் கோவலன் வாக்குமூலம் கண்ணகிக்கு எதனை உணர்த்தி இருக்கும்?

கொலைக் களக் காதையின்படி, கோவலன் தான் கொல்லப் படப் போவது பற்றிச் சிறிதுகூட எதிர்பார்க்காத நிலையிலும், தான் கொல்லப்படுவதற்குரிய காரணம்கூடத் தனக்கு யாராலும் சொல்லப்படாத நிலையிலும் அவன் கொல்லப்படுகிறான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இது நீதித் துறையில் மிகவும் கொடுமையாகும். இரங்கத்தக்கதாகும். அதனால்தான் கோவலன் தான் கொல்லப்பட்டதற்குரிய

காரணத்தை இருந்து அறிந்து வா எனக் கண்ணகியிடம் குறிப்பாக உணர்த்தியிருக்க வேண்டும். காரணத்தைக் கண்டறிந்தால் கண்ணகி அதற்குரிய நடவடிக்கையை எடுப்பாள் என்னும் நம்பிக்கையும் அவனுக்கு ஏற்பட்டிருக்கும். ஏற்கெனவே மதுரைக்கு வரும் வழியிடையில் தம்மை இழித்துப்பேசிய வம்பப் பரத்தையரை 'முள்ளுடைக் காட்டில் முதுநரியாகுக' எனச் சாபமிட்ட கவுந்தி அடிகளிடம் அவர்களின் சாபம் விடுபட அருளுமாறு கண்ணகி வேண்டியதைக் கோவலன் அறிவான். அத்தகைய கண்ணகி தன் சாவுக்கான காரணம் கண்டு தக்க நடவடிக்கை எடுப்பாள் என்று அவன் நம்பியதில் தவறில்லை.

வெளிநாட்டு வேந்தனோடு வழக்கு: மதுரைக்கு வந்து இரண்டு மூன்று நாட்களில், அறிமுகமில்லாத ஒரு வெளிநாட்டு வேந்தனை நேரில் கண்டு அவனுக்கெதிராக வழக்கு தொடுக்க வேண்டும். அதற்கு ஒரு பெண்ணாகிய கண்ணகியிடம் எவ்வளவு நெஞ்சத்துணிவு இருக்க வேண்டும்? நினைக்க நினைக்க நம் நெஞ்சம் வியப்பால் விரிகிறது.

வேந்தனின் இசைவு பெற்றுவந்த வாயிற்காவலன் அரசவைக்குள் அனுப்ப, அரசன்முன் வந்துநிற்கிறாள் கண்ணகி. கருங்குழல் மேனியில் விரிந்துகிடக்கையில் ஒற்றைச் சிலம்போடு நிற்கும் கண்ணகியைக் காணும் பாண்டியன்,

"நீர்வார் கண்ணை எம்முன்வந்தோய்
யாரையோ நீமடக்கொடி யோய்"

என வினவுகிறான்.

தன் தேவியின் சிலம்பைத் திருடியதால் கொல்லப்பட்ட கள்வனின் மனைவியாக இவள் இருப்பாளோ என அறிய விரும்பும் எதிர்பார்ப்பில்தான் அரசனின் வினா அமைந்துள்ளது. இன்று, இந்தியச் சாட்சியச் சட்டம் 141 ஆம் பிரிவு அதனைத் தான் விடைபொதிவினா (Leading Question) எனக் குறிப்பிடுகிறது.

முடிவுரை

இன்று அரசுதரப்பு வழக்குரைஞர், குற்றம் சாட்டப்பட்ட கொலைகாரனின் குற்றத்தைச் சாட்சியம் முதலியவற்றால் மெய்ப்பித்துத் தண்டனை பெறச் செய்வது வழக்கம். ஆனால், தவறுதலாகக் கொலை தண்டனை பெற்றுவிட்ட தன் கணவனுக்காக அரசனை எதிர்த்து வழக்குத் தொடுத்துச் சாட்சியச் சிலம்பால் வென்று, அவனை உயிர்விடச் செய்த கண்ணகியின் வழக்குரை ஆற்றல் வியப்பிலும் வியப்பு.

பாரதியின் வசன கவிதையில் சுற்றுச் சூழலியல்

ச. சோமசுந்தரம்
பிசப் ஈபர் கல்லூரி
திருச்சி - 620 017

'சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்' என்ற முழக்கம் இன்று உலகெங்கிலும் ஒலித்து வருகிறது. அறிவியலின் முன்னேற்றமும், தொழில் துறையின் வளர்ச்சியும் ஏற்படுத்தி வருகின்ற பெரும் பாதிப்புகளால் நாம் அறியாமலே நமது சுற்றுச் சூழல் பாதிக்கப் பட்டு வருகிறது. இந்த நிலை தொடருமேயானால் எதிர்காலமே இருளடைந்து போய் விடக் கூடிய அபாயம் நம்மெதிரேயுள்ளது. வானும், மண்ணும், நீரும், காற்றும், சூரியப் பரப்பும் மாசடை கிறபோது உயிரின வாழ்க்கை வினாக் குறியாகிறது. சுற்றுச் சூழலியல் ஆய்வாளர்கள் வேதனையின் விளிம்பில் நின்று விளைவுகளைச் சுட்டிகாட்டிய வண்ணம் உள்ளனர். பெருகி வரும் மக்கள் தொகையாலும், நாகரிக வாழ்வியல் வசதிப் பெருக்கங்களாலும் இயற்கையின் சூழல்கெடுவது தவிர்க்க இயலாததாயிற்று. எனவே இன்றைய மனிதரிடம் சுற்றுக் சூழல் பற்றிய விழிப்புணர்வும், கல்வியும் மிகத் தேவையாம். மொழி யோடும், இலக்கியத்தோடும், பிற கலைகளோடும் சுற்றுச் சூழலைத் தொடர்பு படுத்தி அறிவு கொளுத்த வேண்டியது அவசியமாகும்.

உலக மக்களின் மீது அக்கறை கொண்டு இலக்கியம் படைக்க வந்த படைப்பாளிகள் இந்த உண்மையை உணர்ந்திருந்தனர். சமுதாய விடுதலைக்கான வழிகளையும், லட்சியங்களையும் தங்களின் படைப்புகளில் எடுத்துரைத்த தோடு இயற்கையையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைந்துள்ளனர். இயற்கையை நேசிப்பதாலும் இயற்கையைப் புரிந்து கொள்வ

தனாலுமே அது இயலும். தமிழ் இலக்கியப் பரப்பில் சங்க இலக்கியங்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை எடுத்தியம்புகின்றன. இயற்கை வழிபாடு செய்யப்பட்ட நிலைகளைக் காணுகிறோம். அதன்பிறகு தனித்து இயற்கை பாடப்படும் நிலையினை பிற்காலக் கவிஞர்களிலும் காண முடிகிறது. பாரதியும், பாரதிக்குப் பின்வந்த கவிஞர்களும் சுற்றுச்சூழல் பேணப்பட வேண்டிய தேவையை ஆழமாக உணர்த்தியுள்ளனர். குறிப்பாகப் பாரதியாருக்குச் சுற்றுக்சூழலின் மீதிருந்த அளவு கடந்த அக்கறையினை அவரது வசனகவிதைகள் சிறப்பாகப் புலப்படுத்துகின்றன. அதனை வெளிப்படுத்துவதாகவே இக் கட்டுரை அமைகிறது.

'காடு, மலை, அருவி, ஆறு, கடல், நிலம், நீர், காற்று, தீ, வான், ஞாயிறு, திங்கள், வானத்துச் சுடர்கள் - எல்லாம் தெய்வங்கள். உலோகங்கள், மரங்கள், செடிகள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன, மனிதர் - இவை அமுதங்கள்' என்று தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும் நேசித்துப் பாடுகிற பாரதி இவையெல்லாம் இனிமையுடையன என்று ஈடுபாடு கொள்ளச் செய்கிறார். இயற்கையின் அதிசயங்களை ஆர்வத் தோடு பாடுகிற இவரது வசன கவிதை எல்லாம் சக்தி மயம் என்று கூறுகிறது. மேலும் 1. ஈடுபாடு கொள்ள வைத்தல் 2. பெருமைகளை எடுத்துரைத்தல் 3. ஆற்றல்களை வியத்தல் 4. உருவகமாக்கிக் காட்டுதல் 5. பயன்பாட்டை எடுத்துரைத்தல் 6. போற்றிப் புகழ்ந்து காப்பாற்றத் தூண்டுதல் என்ற போக்கினில் வசன கவிதை செயல்படுகிறது.

ஞாயிறு, வானம், ஒளி, காற்று, மழை, கடல் என்ற இயற்கையின் பெருவிளைவுகளைச் சுட்டிக்காட்டி, சூழல் மாறுபாடு ஏற்பட்டால் ஏற்படும் தீமைகளையும் எடுத்துரைக்கிறார். பூமியின் தோற்றத்தையும், இயக்கங்களையும், கிரகங்களின் செயல்பாடுகளையும் வசனகவிதையில் விளக்கியுள்ளார்.

"பூமி சந்திரன் செவ்வாய், புதன், சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ், நெப்த்யூன் முதலிய பலநூறு வீடுகள். இவை எல்லாம் நின் கதிர்பட்ட மாத்திரத்திலே ஒளியுற நகை செய்கின்றன. தீப்பந்தத்திலிருந்து பொறிகள் வீசுவது போல இவையெல்லாம் ஞாயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டன வென்பர். இவற்றைக் காலமெனும் கள்வன் மருவினான். இவை ஒளி குன்றிப் போயின. ஒளியிழந்தனவல்ல. குறைந்த

ஒளியுடையன. ஒளியற்ற பொருள் சக்தியேயில்லை. இருளென்பது குறைந்த ஒளி'' செவ்வாய் புதன் முதலிய கிரகங்கள் சூரியனாகிய தந்தையின் மீது அன்பு கொண்டு சுற்றுகிற குழந்தைகள் என்று பாரதியின் வசனகவிதை பூமியின் தோற்றம் குறித்து விளக்கம் தருகிறது.

ஓசோன் படலம்: நம்மைச் சுற்றியுள்ள காற்று மண்டலப் பகுதியில் ஓசோன் படலம் திரையாக நின்று காக்கிறது. இந்த ஓசோன் படலம் ஞாயிற்றிடமிருந்து வெளிப்படும் மிகவும் சக்தி வாய்ந்த யூ.வி. கதிர்களை வடிகட்டி, பூமியில் வாழும் உயிரினங் களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் காக்கிறது. பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் திரையாக நின்று காக்கும் இப்படலத்தில் சுற்றுச் சூழல் பாதிப்பு காரணமாகத் துளைகள் ஏற்பட்டு தீமைகள் விளைவதாக அறிவியல் உணத்துகிறது.

பாரதியின் வசன கவிதை இதனைப் பேசுகிறது. ''ஞாயிறு வையகமாகிய கழனியில் வயிர ஒளியாகிய நீர் பாய்ச்சுகிறது. அதனை மேகங்கள் வந்து மறைக்கின்றன. அஃது மேகங்களை ஊடுருவிச் செல்கிறது. மேகமாகிய சல்லடையில் ஒளியாகிய புலனை வடிகட்டும் போது மண்டிகீழும் தெளிவு மேலுமாக நிற்கின்றன. மேகச் சல்லடை சூரிய வெளிச்சத்தைச் சலித்துத் தர வேண்டும்'' அதற்குரிய சூழ்நிலை காப்பாற்றப் படவேண்டும் என்ற பாரதியின் சிந்தனை வியக்க வைக்கிறது,

இந்த ஓசோன் படலம் அழிக்கப்படுமானால் சக்தி வாய்ந்த சூரியக் கதிர் வீச்சால் உயிரினங்களும் பொருட்களும் அழிவுபடும். வான வூர்திகளாலும், அணுவெடிச் சோதனைகளாலும். வெடிக்கும் எரிமலைகளாலும் வெளிப்படும் நைட்ரஜன் ஆக்ஸைடு என்ற வேதிப்பொருள் ஓசோன் படலம் அழிபடக் காரணமாகிறது. ஓசோன் அழிவினால் மனிதர்கட்குத் தோல் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது. ஆக்ஸிஜன் மூலக்கூறுகளால் இயற்கையாக உருவாகும் இந்த படலம் ஆக்கப்பட்டும், அழிக்கப்பட்டும் தனது வடிவத்தில் வேறுபட்டும் ஓசோன் வட்டத்தில் காணப்படுகிறது. வான வெளியில் இந்த ஓசோன் வேலி அழிக்கப்படாமல் காப்பாற்றப்பட வேண்டும் என்பது சுற்றுச்சூழல் அறிவியளார் களின் கருத்தாகும். காக்கவேண்டியது மானுட சமுதாயத்தின் கடமையாகும். பாரதியின் வசன கவிதையில் இக்கருத்து பிரதிபலிக்கப்பட்டுள்ளது. பாரதி சொல்கிறார்.

''மண்ணிலே வேலி போடலாம். வானத்தில் வேலி போடலாமா? போடலாம். மண்ணிலும் வானந்தானே நிரம்பி யிருக்கிறது. மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டியதாகாதா?

என் முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது. அதற்கு ஒரு வடிவம், ஓரளவு, ஒரு நியமம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நியமத்தை அழியாதபடி சக்தி பின்னே நின்று காத்துவருகிறது. (தலையணையை ஓசோன் படலம் என்றும் சக்தியை ஆக்ஸிஜனாகவும் நாம் எண்ணிப்பார்த்தால் தெளிவு கிடைக்கும் கட்டுரையாளர்) மனித ஜாதி இருக்குமளவும் இதே தலையணை அழிவெய்தாதபடி காக்கலாம்.

அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால் அந்த 'வடிவத்திலே' சக்தி நீடித்து நிற்கும். புதுப்பிக்காவிட்டால் அவ்வடிவம் மாறும்.

வடிவத்தைக் காத்தால் சக்தியைக் காக்கலாம். அதாவது சக்தியை அவ்வடிவத்திலே காக்கலாம் வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை. எங்கும் எதனினும் எப்போதும் எல்லாவிதத் தொழில்களும் காட்டுவது சக்தி. வடிவத்தைக் காப்பது நன்று. சக்தியின் பொருட்டாக'' என்று தொடர்கிறது கவிதை.

ஓசோன் படலம் காப்பாற்றப்பட வேண்டும் என்று சுற்றுச் சூழல் அறிவியல் அறிஞர்கள் கூறிவரும் கருத்தினைப் பாரதியார் தனது வசனகவிதையில் வானத்துக்கு வேலிகட்டவேண்டும் என்று கூறுவதாகக் கொள்ளலாமல்லவா? மேலும் உயிர்ச்சத்து காற்றில் அதிகமாக இருந்தால்தான் மண்ணில் உயிர்கள் நன்கு செழிக்க முடியும் என்பதையும் கவிதை புலப்படுத்துகிறது.

காற்று: நாம் உட்கொள்ளும் பொருட்களில் காற்று 80 விழுக்காடு ஆகும். தண்ணீரைக் காட்டிலும் 6 மடங்கும் உணவை விட 12 மடங்கும் காற்றினை உட்கொள்ளுகிறோம். 'காற்றினைத் தூய்மை செய்' என்று பாவேந்தர் தனது ஆத்திசூடியில் உரைப்பார். தூய்மையான காற்றைச் சுவாசிப்பது பல நோய்களிலிருந்தும் விடுதலை அளிக்கும். காற்று மண்டலத் திலுள்ள பல்வேறு வாயுப் பொருட்களின் தன்மைகளும் அளவு களும் மாறாமல் இருக்கும்வரை பூமியிலுள்ள உயிரினங்களுக்குப் பாதிப்பு இல்லை. இதனில் மாற்றங்கள் ஏற்பட்டாலும் புதிய

பொருட்கள் வந்து சேர்ந்தாலும் சுற்றுச்சூழல் பாதிப்படையும் நெருக்கடி உள்ளது. நிலத்திலும் நீர்நிலைகளிலும் ஏற்படும் மாசினை நீக்கக்கூடிய ஆற்றல் காற்றுக்குண்டு. மாசுபட்ட காற்றினைத் தூய்மை செய்கிற ஆற்றல் மரம் செடி கொடிகளுக்குள்ளது. காற்று மாசுபடாமல் காப்பாற்றப்பட வேண்டுமேயானால் புதிய மரஞ்செடி கொடிகளை நட்டு வளர்க்க வேண்டும். மரஞ் செடி கொடிகளில் கலந்தெழுந்து வருகிற காற்று தூய்மையும் உயிர்ச்சத்து கொண்டதாகவும் விளங்கும். பாரதி தனது வசனகவிதையில் காற்றைப் பற்றிக் கூறுகிறபோது.

''காற்றே வா! மகரந்தத்தூளை சுமந்து கொண்டு மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா! இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த பிராணரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு காற்றேவா எமது உயிர் நெருப்பை நீடித்து நின்று நல்லொளி தருமாறு நன்றாக வீசு. சக்தி குறைந்து போய் அதனை அவித்துவிடாதே. பேய் போல வீசி அதனை மடித்து விடாதே. மெதுவாக நல்ல லயத்துடன் நெடுங்காலம் நின்று வீசிக்கொண்டிரு'' என்று வேண்டுகிறார். மகரந்தத் தூளைச் சுமந்தபடி வரும் காற்று தூய்மையாக அமையும் என்பது பாரதியின் கருத்து.

காற்றுதான் மேகங்களாகிக் கடலின் நீரினைக் குடித்து வெக்கையைப் போக்க மழையாகப் பெய்கிறது. எனவே காற்று தூய்மையாகவும், உயிர்ச்சத்து கொண்டதாகவும் விளங்க வேண்டும் என்ற கருத்தைப் பாரதி வலியுறுத்துகின்றார் ஞாயிறு காரணமாகவே இவை அனைத்தும் நிகழ்வதாகப் பாடுறகிார்.

''ஞாயிறே நின்னைப் பரவுகின்றோம். மழையும் நின்மகள், மண்ணும் நின்மகள்; காற்று கடலும் கணலும் நின் மக்கள்; வெளிநின்காதலி; இடியும் மின்னலும் நினது வேடிக்கை. நீ தேவர்களுக்குத் தலைவன். நின்னைப்புகழ்கின்றோம்'' என்று சுற்றுச் சூழலின் சிறப்பினையும், மாசுபடாமல் காக்கப்பட வேண்டிய தேவையையும் பாரதியின் வசன கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

ஹைக்கூ கவிதைகளில் சித்தர் சிந்தனைகள்

இராம. சௌந்திரவல்லி
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்—627 802

இந்திய நாட்டு பௌத்தம், சீனதேசத்து கன்ஃபூசியம், தாவோயியம் போன்ற பன்னாட்டு ஆன்மீகச் சிந்தனைகளின் செறிவாக உருவானது ஜப்பானிய 'சென்' பௌத்தம். சென் பௌத்த சித்தாந்தங்கள் ஜப்பானியக் கவிதை வடிவாகிய ஹைக்கூவில் ஏற்படுத்திய தாக்கங்கள் பல. சென் கோட்பாடுகள் பலவற்றை நம் தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்களிடமும் காணலாம். எனவே தமிழில் எழுந்துள்ள ஹைக்கூக்களில் தமிழ்ச் சித்தர்களின் சிந்தனைகள் தம் தடம் பதித்துள்ளனவா என்பது ஆய்வுக்குரியது.

பதினெண் சித்தர்கள் எனப்படும் சித்தர் பரம்பரை தமிழ் இலக்கிய வரலாற்றில் தத்துவமுத்திரை பதித்துள்ளது. "சித்தர்கள் யாவரும் மனிதநேயம் மிக்கவர்கள்; சாதிசமய வேறுபாடு அற்றவர்கள்; சமரச சன்மார்க்கத்தைப் போற்றுபவர்கள், போலிச் சடங்குகளையும் பொருளற்ற செயல்களையும், மூடநம்பிக்கைகளையும் கண்டிப்பவர்கள்" என்று சித்தர்கள் இயல்பு பற்றி மு. வை. அரவிந்தன் குறிப்பிடுகின்றார்.

புதுமைக் கருத்துக்கள் நிறைந்த இச் சித்தர்களிடையே சென் புத்தமதக் கொள்கைகளையும் காணலாம். "மனத்துக்குள் தேடிப்பார், 'புத்தரைக் கண்டடைவீர். தியானமே முக்திக்கு வழி' என்பது தோகனின் சென் போதனை. 'கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே' என்று பரம்பொருளைத் தேடிப் பரவசமடைவார் சிவவாக்கியர். தமிழின் ஒரு சென் பௌத்த சித்தர் இவர் என்கிறார் நெல்லை சு. முத்து. இச்சித்தர்களின் சித்தாந்தங்களும் எந்த அளவுக்குத் தொடர்புடையதாக இருக்கின்றன என்பதை எண்ணுதல் வேண்டும்.

நிலையாமைக் கொள்கைகள்: இவ்வுலகில் வாழ்ந்தாலும் உலகியலோடு ஒட்டும் உறவும் இல்லாமல் வாழ்ந்தவர்கள் சித்தர்கள். வாழ்வின் நிலையாமையைப் பல கோணங்களில் பாடித் திரிந்தவர்கள். இளமை, யாக்கை, வாழ்க்கை, உறவு செல்வம் என்ற அனைத்தின் நிலையாமையையும் அறிந்தமையினால்தான், இவ்வுலக வாழ்கையினின்றும் விலகியே சித்தர்கள் வாழ்ந்துள்ளனர் நம் வாழ்வில் இறப்பு என்பது பிறப்பிலேயே நிச்சயிக்கப்படும் ஒன்று. மண்ணில் தோன்றிய அனைத்தும் மண்ணையே சென்றடைகின்றன. எந்த நேரத்திலும் இந்த உண்மையை மனத்திலிருந்தும் அப்புறப்படுத்தாமல் வாழ்ந்தவர்கள் சித்தர்கள்.

மொட்டு மலர்ந்தது
சருகு விழுந்தது
வந்து போனது காற்று
பூ பிஞ்சு காய் கனி
யாவற்றையும் இங்கே புதைக்கிறார்கள்
கல்லறைத் தோட்டம்

என்ற ஹைக்கூக்களும் இவ்வுண்மையை எடுத்தியம்புகின்றன. இறப்பிற்கு வயதில்லை; வாழ்க்கை ஐந்திலும் முடியலாம், ஐம்பதிலும் முடியலாம் என்ற திடமான உண்மையை மறந்தவர்களல்ல ஹைக்கூ கவிஞர்களும்.

“நரி எனக்கென்னும் புன்னாய் எனக்கென்னும்
இந்நாறுடலைப்
பிரியமுடன் வளர்த்தேன் இதனால் என்னபேறு எனக்கே”

என்னும் பட்டினத்தார் பாடல் வாழ்வின் நிலையற்ற தன்மையை எள்ளல் சுவையோடு வெளிப்படுத்துகிறது.

மனிதமனம் இவ்வுடம்பு பற்றிய எண்ணத்தை மிகுதியும் கொண்டது. இந்த உடம்பு என்னுடையது என்ற மனிதனின் ஆளுமை உணர்விலும், இவன் இறந்தால் இது நாய் நரிகளுக் கல்லவா என்ற நடப்பியல் உண்மையிலும் காணப்படும் முரண் பாடு தெளிவாகப் பேசப்படுகிறது. கொஞ்சம் கடுமையாகத் தோன்றும் இச்சித்தர் தத்துவத்தை

நிலையில்லா மனிதன்
சிரித்தது நெடுஞ்சுவர்
கயிற்றில் மனிதன்

என்னும் ஹைக்கூ இதமாக விமர்சிக்கிறது. மிக உயர்ந்த சுவற்றில் கட்டப்பட்ட சாரக்கயிற்றில் தொங்கிக் கொண்டு வண்ணம் பூசும் ஒரு தொழிலாளி; தன் நிலையாமையை உணராமல் எனக்கு வண்ணம் தீட்டுகிறானே என்று சுவர் சிரிக்கிறது எனக் கூறுவது பல நடப்பியல் உண்மைகளைத் தனக்குள் பெற்றுள்ளது. நிலையில்லாத மனிதன் நிலைத்து வாழ்வோம் என வீடு கட்டுகிறான். கரணம் தப்பினால் மரணம் என்று இருப்பவன் சுவரை அலங்கரிக்கின்றான். ஒரு நிமிடம் தன் வாழ்வின் உண்மையை உணர்ந்தால் இக்காரியங்களில் ஈடுபடுவானா என்பன போன்ற சிந்தனைகள், சித்தர்களின் கருத்துச் சாயலைப் பெற்றுள்ளன.

உலக இன்பங்களைக் கண்டு மகிழ்கிறது மனிதமனம். அவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பிறகு அவற்றினின்று விடுபட இயலாது வருந்துகிறது. இன்ப துன்ப அனுபவங்களுக்குப் பிறகும்கூட சராசரி மனிதமனம் இவ்வுலகியலை வெறுப்பதில்லை.

ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப்போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே''

என்று பட்டினத்தார் இத்தகு விடுபட இயலா நிலையைச் சாடுகின்றார். நிலையாமையைக் கண்டும் இவ்வுலக இன்பத்தின் மீது விருப்பமா என ஆச்சரியப்படுகிறார்.

''முடிசார்ந்த மன்னரும் மற்றுமுன்னோரும் முடிவிலொரு
பிடிசாம்பலாய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னும்''

நம் கண்ணெதிரிலேயே மாமன்னர்களின் வாழ்க்கை கூடத் தடமின்றி அழிந்து போவதைக் கண்டபின்னும் உலகியல் பொருளிலெல்லாம் இந்த மனித மனம் மகிழ்கிறது.

''விடிய விடிய
மீன்கள் கும்மாளம்
சூரியனுடன் நாரை''

''குளத்தைச் சலனப்படுத்திப்
பூரித்த கல் - இதோ
அமைதியாய் குளத்துக்குள்''

"தென்றலில் ஆடி
மகிழ்ந்த மலர்
இதோ தரையில்"

என்ற ஹைக்கூக்கள் உலகியல் நிலையாமையை மையப்படுத்துவனவாக உள்ளன. இருக்கிற வரையில் தன்னிலையாமை உணராது ஆடிப்பின் ஓய்ந்து போகும் வாழ்க்கையை இயற்கை நிகழ்வுகளோடு பொருத்திக் காணும் கவிதை உள்ளம் தான் காணும் பொருளில் நிலையாமையை உணர்கிறது.

இவ்வாறு உலகியலைவிட்டு விலகி வாழ்ந்த சித்தர்கள் கூறிய நிலையாமைக் கருத்துக்கள் ஹைக்கூக் கவிதைகளில் ஆங்காங்கே காணப்படுகின்றன. எனினும் மிகுதியான இடம் பெறவில்லை எனலாம். சித்தர்களுக்கு வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டு எள்ளி நகைக்கும் மனத்துணிவு இருந்தது. ஆனால், நிலையாமையை உணர்ந்திருந்தாலும் வாழ்வின் அனுபவ இனிமைகளைப் பேசும் நம்பிக்கை மிக்க குரலைச் சென் சித்தர்களிடம் காணலாம்.

"என் மடிந்தநம்பிக்கைகள்
வாடிய கனவுகள்.. ஆனால் இன்னும்
ஒவ்வொரு வசந்தத்திலும் பூ!"

"வாழ்க்கை! அசைந்தாடும் புல்லின்மேல்
வண்ணத்துப் பூச்சி... அவ்வளவுதான்
ஆனால் எத்தனை அழகு"

என்னும் ஜப்பானிய ஹைக்கூக்கள் சென் சித்தர்களின் வேறுபட்ட பார்வையைப் புலப்படுத்துகின்றன. நிலையில்லாதது தான் வாழ்க்கை! ஆனால் வாழும் வரை அதை இனிமையாக்குவோம்; அதன் ஒவ்வொரு அசைவையும் ரசிப்போம் என்ற சிந்தனை நம்சித்தர்களிடமிருந்து வேறுபட்டதாகும்.

"சூரியோதயத்தில்
மரணம் என்றாலும்
சிரிக்கும் பனித்துளி"

என்ற ஹைக்கூ மரணத்திற்காக வாழ்வைப் வெறுக்காமல், மரணத்திலும் சிரிக்கக் கற்றுத் தருகிறது.

"தூரத்து வெளிச்சம்
விழிகளில்
பாதங்களின் இருட்டில்"

என்னும் ஹைக்கூ இன்றைய வாழ்வு இருட்டில் இருந்தாலும், நாளைய விடியலை நோக்கி நாம் நடை போடுவோம் என்று நம்பிக்கையோடு வாழ்வைச் சந்திக்க நினைக்கிறது. இத்தகு ஹைக்கூக்கள் மனிதவாழ்வு நிலையற்ற தாகலாம் ஆனால் பொருளற்றவை அல்ல என்று கூறுவன.

சாதி சமய பேதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள் சித்தர்கள். மிகச் சிறந்த சீர்திருத்தவாதிகள். சமரச மனப்பான்மை மிக்கவர்கள்.

"பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா
இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டிருக்குதோ"

என்னும் சிவவாக்கியரின் கேள்வி சிந்தனைக்குரியது.

முடிவுகள்: 1) வாழ்வின் நிலையாமை பேசுவதில் ஹைக்கூ சித்தர்களின் வழியில் சென்றுள்ளது. எனினும் வாழ்வில் இனிமை காணவேண்டும் என்று மனித வாழ்வுக்குப் பொருள் தருகிறது ஹைக்கூ. 2) பேதமற்ற சமயத்தையும், சமூகத்தையும் பார்க்கும் பார்வையைப் சித்தர்களைப் போலவே, ஹைக்கூவும் பெற்றுள்ளது. 3) வாழும் வாழ்க்கையில் நீரில் கிடக்கும் தாமரை இலைபோல் ஒட்டாமலேயே வாழ்ந்தமையால் சித்தர்களின் சமூகப் பார்வை மக்களின் வறுமையையும், அன்றாட வாழ்வியல் துன்பங்களையும் தொடவில்லை. 4) துறவு என்பது பெண் மறுப்பு என்பதைவிடப் பெண்ணை இழிவுபடுத்துவதுதான் என்பது போன்ற பார்வை சித்தர்களிடம் காணப்படுகிறது. ஆனால் பெண்ணியச் சிந்தனைகளுக்கு ஹைக்கூக்கள் நிறைய இடம் அளித்துள்ளன. 5) இயற்கைச் சூழலில் வாழ்ந்தாலும், அவர்களது அறிவு சார்ந்த பார்வை காரணமாகச் சித்தர்களை இயற்கை நிகழ்வுகள் பாதிக்கவில்லை. உணர்வு நிலையில் நின்று பாடுவதால் ஹைக்கூக் கவிஞர்கள் இயற்கை எழிலில் தங்களைக் கரைத்துக் கொண்டுள்ளனர்.

தேவேந்திர குல வேளாளர் பெயர்க்காரணம்

தே. ஞானசேகரன்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் 641 046

சங்க காலத்தில் மள்ளர் என்றும் பிற்காலத்தில் பள்ளர் தேவேந்திரகுல வேளாளர் என்றும் அறியப்படும் இம்மக்கள் இம்மண்ணின் அசல் மைந்தர்கள் ஆவர். தமிழகத்தில் வாழும் பல்வேறு பூர்வீகக் குடிகளில் அட்டவணைச் சாதியினர் (Scheduled Castes) பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள இம்மக்களின் தாய்மொழி தமிழ் மொழி ஆகும். இவர்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை ஆகும். சங்க இலக்கியங்களில் மள்ளர் என்று அறியப்படும் இவர்கள் தமிழில் மகரம், பகரமாக ஒலி மாற்றம் பெறும் என்பதற்கேற்ப பிற்காலக் கல்வெட்டுக்களிலும் பள்ளு நூல்களிலும் பள்ளர் என்ற பெயரில் குறிக்கப்பட்டனர். இன்று இவர்கள் "தங்களைத் தேவேந்திரகுல வேளாளர்" என்று அழைத்துக் கொள்கின்றனர். இப்பெயர் இம்மக்களுக்கு ஏற்பட்ட விதம் குறித்து இக்கட்டுரை விளக்க முயல்கின்றது.

மள்ளர்-பள்ளர்: "சங்க இலக்கியத்தில் வரும் வீர இனத்திற்குப் பேர்போன மள்ளர் பள்ளரின் மூதாதையர் ஆவர்" என்று வரலாற்றறிஞர் கே. ஆர். அனுமந்தன் குறிப்பிடுவார். டாக்டர் ஜி. ஓப்பர்ட் மள்ளர் பள்ளர் ஆனது உச்சரிப்பு வேறுபாடே ஆகும் என்பார். மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் பள்ளர் மள்ளர் மருத நிலத்தில் வாழும் உழவர் என்பார். மேற்கண்ட அறிஞர்களின் கருத்துக்களிலிருந்து இன்று பள்ளர் என்று குறிக்கப்படும் இனத்தவரே சங்க காலத்தில் மள்ளர் என்று குறிக்கப்பட்டனர் என்று கருதஇடமுண்டு. இக் கருத்தை வலியுறுத்துவதாகவே நிகண்டுகளின், பள்ளுநூல்களின் கருத்துக்களும் அமைகின்றன.

திவாகர நிகண்டு

அருந்திறல் வீரர்க்கும் பெருந்திறல் உழவர்க்கும்
வரும் தகைத்தாகும் மள்ளர் எனும் பெயர்

பிங்கலநிகண்டு

செருமலை வீரரும் திண்ணியோரும்
மருத நில மக்களும் மள்ளர் என்ப

என்றவாறு நிகண்டுகள் மள்ளரைப் போர் வீரரென்றும் உழவ ரென்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது.

மருத நிலமும் மள்ளரும்: மள்ளர் என்போரை வீரராக, உழவராகக் காட்டும் சங்க இலக்கியம் மருத நில வாழ்க்கையை உழவர் வாழ்க்கையாகக் காட்டத் தவறவில்லை. சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் மருதநில மக்கள் மள்ளர், உழவர், உழத்தியர், கடைசியர், ஆற்றுக் காலாட்டியர் என்று குறிக்கப் படுகின்றனர். இன்று தேவேந்திர குல வேளாளர் என்று அறியப்படும் இனத்தவர்களின் தொழில் வேளாண்மை ஆகும். இவர்கள் இன்றும் தங்களின் கடவுள் தேவேந்திரன் (வேந்தன்) என்று வணங்கி வருவதும் இவர்கள் சங்க கால மருதநில மக்களின் வழித் தோன்றல்கள் என்பதை வலியுறுத்தும்.

தேவேந்திரகுல வேளாளர் பெயர்க்காரணம்: வட இந்தியாவின் பண்பாட்டு வரலாறு (Social History of North India) என்பது வடமொழியில் புனையப்பட்டு வேதகால இலக்கியங்கள், இதிகாசங்கள் புராணங்களிலிருந்து தொடங்குவது ஆகும். தமிழ் நாட்டின் பண்பாட்டு வரலாறு (Social History of Tamil nadu) தமிழில் எழுதப்பட்ட தொல்காப்பியம், சங்க கால இலக்கியங் களிலிருந்து தொடங்குவது ஆகும். தமிழகத்தில் வடமொழி யாளர்களின் ஆதிக்கம் ஏற்படும் முன்னரே இங்கு நாகரிகமும், அரசியலும் மேலோங்கி இருந்தன. இது குறித்து டாக்டர் க. கைலாசபதி வருமாறான கருத்தைச் சொல்வார்.

"சிறு சிறு குலங்களாகவும், குடிகளாகவும் குலங்களின் இணைப்புக்களாகவும் சிதறிக்கிடந்த தமிழகத்து மக்கள் ஓயாத போரில் ஈடுபட்டிருந்தனர். ஓயாதபோர், படையெடுப்பு, ஊர் அழிவு, அரசுரிமைச் சண்டை ஆகியவற்றின் அடிப்படையிலேயே சங்ககாலத் தமிழகத்திலே மெல்ல மெல்ல அரசுகள் தோன்ற லாயின. சங்க காலத்தில் அரசு செலுத்திய பேரரசரும் தொடக்கத்தில் சிறு கூட்டத்தினருக்குத் தலைவராக இருந்

திருத்தல் வேண்டும். சங்க காலத்தின் நடுப்பகுதியில் அவர் அரசரான நிலையை அடைந்தனரென அக்கால நூல்கள் வாயிலாக அறிகின்றோம். ஈற்றில் பொருளாதாரத்திலும் தொகையிலும் சிறந்த உழவர் (மருதநிலத்) தலைவனே தமிழ் நாட்டு அரசியலில் வலிமை சிறந்து விளங்கினான். இந்தச் சூழலில்தான் வடமொழியாளர்களின் ஆதிக்கம் தமிழகத்தில் தோன்றியது'' (பண்டைத்தமிழர் வாழ்வும், வழிபாடும் ப.96) இக்கருத்தின்படி வடமொழியாளர்களின் செல்வாக்கு தமிழகத்தில் ஏற்படும் முன்னரே மருத நில உழவர் குடியினர் அரசியலில் வலிமை பெற்று விளங்கினர் என்பதும் மருத நிலத்தலைவன் வேந்தன் (தேவேந்திரன்) என்று சுட்டப் பட்டான் என்பதையும் மனதில் கொள்ளவேண்டும்.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் நிலத்தை நால்வகையாகப் பாகுபாடு செய்தனர். மலையும் மலை சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்றும், காட்டையும் காடு சார்ந்த பகுதியை முல்லை என்றும், வயலும் வயல் சார்ந்த பகுதியை மருதம் என்றும், கடலும் கடல் சார்ந்த பகுதியை நெய்தல் என்றும் பிரித்துக் கண்டனர். இதனடிப்படையில் கடவுளர்களையும் பிரித்துக் கண்டனர். இதனைத் தொல்காப்பியம்

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே''

என்று குறிப்பிடும். இங்கு குறிக்கப்படும் வேந்தனே தீம்புனல் (வயலும் வயல் சார்ந்த) மருத நிலத்தின் கடவுள் ஆவான். தொல்காப்பியரின் இலக்கணப்படி மருத நிலத்தின் கடவுள் வேந்தன் என்று அறிகின்றோம். அப்புறம் ஏன் உரையாசிரியர்கள் மருதநிலக் கடவுளை வேந்தன் என்று குறிக்காமல் இந்திரன் என்றே குறிக்கின்றனர் என்பதற்கு மறைமலையடிகள் வருமாறு விளக்கம் தருவார்.

''ஆரியர்களின் இந்திரன், இடி, மின்னல், மழை முதலிய வற்றிக்குரிய தெய்வமாதலோடு, அவர்தம் பகைவரோடு போராடுங்கால் அவர்க்கு உதவி புரிந்து வெற்றியைத் தருபவனாகவும், அவர்களும் சோமபானம் (மது) விலங்கின் இறைச்சி போன்றவற்றை நிறைய உட்கொண்டு அவர் வேண்டிய

நலங்களையெல்லாம் அவர்க்கு விளைவிப்பவனாவும் சொல்லப் படுகின்றான். தமிழர் வணங்கிய இந்திரனோ (வேந்தன்) வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய மருதநிலத்தில் உள்ள உழவர்களால் மழையின்பொருட்டு மட்டும் வேண்டி வணங்கப்பட்ட மழைக் கடவுள் ஆவான். மழையின் பொருட்டாகவன்றி வேறெந்த நன்மைப் பேற்றின் பொருட்டாக வேனுந் தமிழர்களால் அவன் வணங்கப்பட்டவன் அல்லன். இருக்கு வேதத்திலுள்ள பாட்டுக் களில் மூன்றில் ஒரு கூறு இந்திரன் மேற்செய்யப்பட்டிருத்தல் போல, தமிழ் நூல்களில் எங்கும் ஒரு பாட்டேனும் இந்திரன் மேற் செய்யப்படவில்லை. தொல்காப்பியம் முதலான மிகப் பழைய தமிழ் நூல்களில் ''இந்திரன்'' என்னுஞ் சொல்லே காணப்படவில்லை. மருதநிலத்து மக்களால் கொண்டாடப்பட்ட தெய்வம் வேந்தன் என்று சொல்லப்படுகின்றது. தமிழர் மழையின் பொருட்டாக வணங்கிய இந்திரனும் ஆசிரியர் மழையின் பொருட்டாக வணங்கிய இந்திரனும் மழைக்கடவுளாதல் பற்றிப் பிற்காலத்தவரால் அவ்விருவரும் ஒருவராகக் கொள்ளப் படுவராயினர். அவ்வாறு கொள்ளப்படினும் தமிழர்க்குரிய வேந்தனுக்கும் இருக்கு வேத ஆசிரியர்க்குரிய இந்திரனுக்கும் ஏதோர் இயைபும் இல்லையென்பது நன்கு விளங்கும். உற்று ஆராயுங்கால் தமிழர்க்குரிய ''வேந்தன்'' என்போன் தமிழர்க்குள் முதன்முதற் தலைவனாய் மழை பெய்யுங்காலமும் அம்மழை யினுதவியபற் பயிர் செய்தற் கேற்ற வளவிய நிலமும் அந் நிலத்தைத் திருத்திச் செல்வனே பயிர் விளைவிக்கும் வகைகளும் நன்குணர்ந்து உழவுத் தொழிலைக் கற்பித்துத் தமிழ் மக்களை மேல் நிலைக்குக் கொணர்ந்தவன் ஆதல் வேண்டுமென்பது புலப்படும். நன்றி செய்த முன்னோரை நினைத்து அவர்களைப் பரவுதல் (வழிபடுதல்) தமிழர்க்கு இயற்கையாதலால் அவர் கால் வழியில் வந்த மருத நிலத்து உழவர் முதல் வேந்தனான அவனது ஆவியை வேண்டி வணங்குவரானார் என்பர்''

பழனிப்பட்டயம், பள்ளு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், புராணங்கள் முதலியனவும் தேவேந்திரகுல வேளாளரை இந்திரன் மரபினர் என்றே கூறு கின்றன. தேவேந்திரர்களை இந்திரனுடன் தொடர்புபடுத்தியும், நஞ்சை வேளாண்மையைக் குறிப்பாக நெல்லை இவர்கள்தான் முதன் முதலில் உண்டுபண்ணினர் என்றவாறும் பல புராணக் கதைகள் வழங்குகின்றன. வேளாண் வாழ்க்கையை முழுவது

மாகச் சித்தரிக்கும் பள்ளு நூல்களில் இம்மக்களே கதை மாந்தர்களாக விளங்குவதைப் பார்க்கின்றோம். இதிலிருந்து மருதநில மக்களான மள்ளர் வழியினரே இன்றைய தேவேந்திரர்கள் என்ற கருத்தைப் பெறமுடியும். இங்கு மருதநிலத்து மக்கள் வணங்கிய வேந்தன் அவர்களது குல முன்னோர் ஆவான் என்றும் உணரலாம், மேலும் மருதநில மக்கள் மழை வேண்டி அவனது ஆவியை வழிபட்டதனால் பிற்காலத்தில் மழைவேண்டி வழிபடப் பட்ட ஆரியர்களின் தெய்வமான இந்திரனும் ஒன்றெனக் கருதப்படலாயினர்.

தமிழர்களின் கடவுள் கோட்பாடு முன்னோர்களின் வழிபாடு (Ancestoral worship) என்பதை நாம் நினையவேண்டும். தமிழர்கள் நில அடிப்படையில் நால்வகை நிலத்துத் தெய்வங்களை வணங்கினர். "இந்த நால் வகை நிலத்துத் தெய்வங்களும் அந்தந்த நிலத்து மக்களுக்குத்துணை செய்த வீரர்களின் தலைவராக இருக்கலாம்" என்று சாமி சிதம்பரனார் குறிப்பிடுவதும் (பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.31) இங்கு கருதத்தக்கது, இக்கருத்துக்கள் தமிழர்கள் நில அடிப்படையில் தெய்வங்களைப் பிரித்து வழிபட்டமையைப் புரிய உதவும். இங்கு நாம் கருத வேண்டியது மருத நிலத்துக் கடவுளான வேந்தன் ஆரியக்கலப்பு ஏற்பட்ட பின்னர் புராணத்துடன் தொடர்புடைய இந்திரனுடன் சேர்த்துப் பேசப்பட்டான். பின்னர் வேந்தன், இந்திரனாகிய, பின்பு தேவேந்திரனாகி மருத நிலத்து மக்களான தேவேந்திர குல வேளாளர்க்கு முழுமுதற் கடவுளாக விளங்கியிருக்க வேண்டும். ஆக தேவேந்திர குல வேளாளர்களுடன் பண்பாட்டு அடிப்படையில் தொடர்பு உடையவன் மருதநிலக் கடவுளான வேந்தன் (இந்திரன்) தானே தவிர புராணத்துடன் தொடர்புடைய கடவுள் இல்லை. ஆக ஆரியர்களின் கடவுள் இந்திரன் வேறு என்பதே இக்கட்டுரை எழுதப்பட்டதன் நோக்கமாகும். இருப்பினும் இந்தியப் பண்பாட்டில் எல்லாச் சமுதாயத்தின் வரலாறும் கட்டுக் கதைகளோடு சம்மந்தப்பட்டு வழக்கிலிருப்பது போலவே சில கதைகள் இவர்களிடமும் வழக்கிலிருக்கின்றன. ஆனால் தமிழகத்தில் வேளாண்மையை உண்டு செய்து, அரசியல் அமைத்து, நாகரிகத்தை உண்டாக்கிய உழவர் பெருங்குடி மக்களான தேவேந்திர குல வேளாளரின் பண்பாட்டு வரலாறு வேளாண்மையோடு தொடர்புடைய மருதநிலக் கடவுளான வேந்தனிடமிருந்தே தொடங்குகின்றது என்பதை இங்கு நினையவேண்டும்.

கீழிருந்தும் கீழல்லவர்

வி. மி. ஞானப்பிரகாசம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

வீரமாமுனிவர் தமது தேம்பாவணியில், சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருந்த இடையர்களையும், இடைச்சியரையும் உயர்ந்த பண்புடையவராகக் காட்டுகின்றார்.

இடையர்கள்

இயேசு பெத்லகேமில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றார். இந்த நற்செய்தி வயலில் தங்கள் கிடையைக் காத்துக் கொண்டிருந்த இடையர்களுக்கு அறிவிக்கப்பட்டது. "இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டு நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவ ராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கின்றார், "(லூக் 2 : 10-11) விவிலியத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட இச்செய்தி தேம்பாவணியில் விரிவாகத் தரப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், இடையர்களுக்கு நல்ல பெயர் இல்லை. இவர்கள் முரட்டு ஆள்கள். தங்கள் ஆடுகளை விலங்குகளிடமிருந்து காப்பாற்ற வேண்டியவர்கள். ஏனெனில் ஓர் ஆடு காணாமற் போனால், பக்கத்து ஆயரின் மந்தை யிலிருந்து திருடிக் கொள்வது ஆயர்களின் வழக்கம். பிறருடைய வயல்களில் ஆடுகளை மேயவிடுதல், பிறர் வயல்களின் விளைச்சலைத் திருடல், பொய் பேசுதல் இடையர் வாழ்வில் ஏற்படும் குற்றங்கள். எனவே நீதிமன்றத்தில் இடையர்களின் சாட்சி செல்லாது.

இத்தகைய இழிநிலையில் இருந்த இடையர்களிடம் "உம்பர் பொன் உருக்கொடு ஆங்கு போய்" "இன்பம் உண்ண

அழைத்தனர்'' (111 : 1) தங்களைத் தேடிக் கடவுள் வந்துள்ளா÷ என்ற செய்தியை அறிந்த இடையர்கள் வேண்டினர். "இறைவனே, நல்ல ஆயனே'' உன்னை விட்டு பிரிந்து போன ஆட்டைத் தேடி அதை மீட்கவோ நீ இங்கு மனிதனாகப் பிறந்துள்ளாய்'' (11 : 5) உன்னை வாழ்த்துதல் சொற்களில் அடங்காது. உன் மீது நாங்கள் கொண்ட அன்பு நீங்காது (11:7)

தங்கள் அன்பின் அடையாளமாகப் பாலைக் காணிக்கை ஆக்கினர். குழந்தை இயேசு அவர்களை நோக்கினார். அவர்கள் வானுலக இன்பம் அடைந்தனர். மரியாவும், சூசையும் உரையாடிக் கொண்டிருந்ததைக் கேட்டு மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தனர். குடிலை விட்டுப் பிரிய நேரம் வந்தது. தமக்கு உயிராக இருந்த அம்மூவரை விட்டு விலகியமை உயிரில்லாத வெறும் ஓடம்பு ஊரை வந்தடைந்ததை ஒத்திருந்தது (11:11-13)

ஒருவனாய் இருந்து உலகை ஆளும் இறைவன் பொன் அணி பூண்ட பூ மன்னரை விலக்கி விட்டு இடையர்களைத் தெரிந்து கொண்டதை எண்ணி, சூசையும் மரியாவும் திருமகனை வாழ்த்தினர்.

> "ஆகம் மாடை வேந்தர் நீக்கி ஆயரைத் தெரிந்தது என்று
> ஓகை ஆக. ஒகனோடும் ஓங்கு தாயும் வாழ்த்தினாள்''
> (11:14)

இடைச்சியர்

இயேசுவைக் காண இடையர் வந்தனர் என்று விவிலியம் கூற, இடையரோடு இடைச்சியரும் வந்தனர் என வீரமா முனிவர் உரைக்கின்றார். இடையர்கள் தாங்கள் பெற்ற நற்செய்தியைப் பலருக்குத் தெரிவித்தனர் (லூக். 2:19) அப் பலருள் தங்கள் வீட்டுப் பெண்களும் இடம் பெற்றிருப்பர் என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பெண்கள் இயேசுவைக் காண ஒவ்வொரு நாளும் சென்றர்கள் என்பதை முனிவர் விரிவாக (11:15-70)க் கூறுகின்றார். இப்பகுதியில் பெண்கள் பெறும் உயர்வு, அன்றைய வரலாற்றுப் பின்னணியில் வைத்துச் சிந்திக்கத் தக்கது.

யூத சமுதாயத்தில்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், யூதப் பெண்கள் தாழ்வாகவே கருதப்பட்டனர். ஒரு குடும்பத்தில் குழந்தை பிறந்தால், தாய் மட்டுமே தூய்மை செய்யப்படவேண்டும். ஆண்

மகனைப் பெற்றெடுத்த தாய் 40 நாள்களுக்கும் பெண் மகளைப் பெற்றெடுத்த தாய் 80 நாள்களுக்கும் தீட்டுடையவளாகக் கருதப்பட்டாள்.

யூதர் ஒருவர் காலையில் கண் விழித்ததும், மூன்று காரணங் களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவார். பிற இனத்தாரய்ப் பிறக்காமல் யூதராகப் பிறந்ததற்காக, அடிமையாகப்பிறக்காமல் குடிமகனாகப் பிறந்ததற்காக, பெண்ணாகப் பிறக்காமல் ஆணாகப் பிறந்ததற்காக நன்றி நவில்வார்.

தமிழ்நாட்டில்

கிறித்தவ மறைப்பணியாளர்கள் ஆண்டுதோறும் உரோமைத் தலைவருக்கு எழுதிய மடல்கள் பெண்களின் பரிதாப நிலை பற்றிக் கூறுகின்றன. 16ஆம் நூற்றாண்டில் புன்னைக் காயல் போன்ற கடற்கரைப் பகுதிகளில் உழைத்த ஹென்றிரிக் குவஸ், அப்போது பெண்ணடிமை நிலை இருந்ததாக எழுது கிறார். எ. கா. 31—10—1548 மடல் பெண்கள் கோவில் வழிபாட்டுக்குச் செல்ல அனுமதி இல்லை இந்நிலை சரியன்று என மறைப் பணியாளர்கள் எடுத்துரைத்த பின், பெண்கள் கோவில் வழிபாட்டுக்குச் செல்லலாம்; ஆனால் தங்கள் தலைவர்கள் (எஜமானர்கள்) கோவிலிருந்து வந்த பிறகே ஞாயிறு வழிபாட்டுக்குச் செல்லலாம் என ஏற்பாடு செய்யப்பட்டது.

17 ஆம் நூற்றாண்டில், தெ நோபிலி காலத்தில் பணிபுரிந்த பல்தசார் த கோஸ்டா தமது (14.10.1646) ஆண்டு மடலில் இக்கருத்தை எழுதுகிறார். பெண் பிள்ளைகள் 7 ஆம் வயதி லிருந்தே திருமணத்துக்கு உட்படுத்தப் படுகின்றனர். கணவன் இறந்த பின், பெண் கைம்பெண்ணாகவே காலத்தைக் கழிக்க வேண்டும். இது கண்டிப்பான ஒழுங்கு. இதை மீறி ஒரு பெண் திருமணம் செய்வதை விடப் பொதுமகளாக மாறுவது அனுமதிக்கப்படும்.

வீட்டு வேலைகள் அத்தனையும் பெண்களே செய்தல் வேண்டும், அவர்களுக்கு உரிமை என்பதே இல்லை; கணவர் முன் நிற்கக் கூட உரிமை இல்லை; வீட்டுக்கு வெளியே கணவரோடு பேசவும் கூடாது. பல பிள்ளைகளுக்குத் தாயான பிறகு பேசலாம். இந்த வழக்கம் எவ்வளவு வேரூன்றி இருந்த தென்றால், கிறிஸ்தவர்களின் மனைவியர் கோவிலில் உட்காந்து

மறைஉரை கேட்கக் கூடாது; கோவிலுக்கு வெளியே சென்று உட்கார வேண்டும். அது இயலாதெனில் கோவிலில் நின்று கொண்டே மறைஉரை கேட்க வேண்டும்.

தேம்பாவணியில் இடைச்சியர்

யூத சமுதாயத்திலும், தமிழ்நாட்டிலும் பெண்களுக்கு இருந்த இழி நிலையை அறிந்திருந்த வீரமாமுனிவர் தேம்பாவணியில் பல இடங்களில் பெண்களுக்கு உயர்வு தருகின்றார். அவற்றில் ஒன்று இயேசு பிறந்ததும் அவரைக் காண இடைச்சியர் ஒவ்வொரு நாளும் சென்ற நிகழ்ச்சியாகும்.

குழந்தை இயேசு இடைச்சியரை நோக்கினார். அது நீர் கொண்ட மேகம் மின்னுவது போல் இருந்தது. அப்போது அவர்கள் உள்ளத்தில் ஞானஒலி வீசினார். இன்பம் எனும் மழையைத் தூவினார்.

"விண்ணில் நீர் முகில் மின் என நோக்கலோடு
உள் நிலாவொடு இன்பு ஓர் மழை தூவினான்" (11:16)

அம்பை ஒத்த விழி உடைய இப்பெண்கள் முத்துப் போன்ற புகழுரைகளைப் பொழிந்தனர். (11:19) இவர்களுள் சாந்தி என்ற பெயர் கொண்ட பெண் பணிவோடு கேட்டாள்.

மாலையைப் போன்ற மரியே, இடைச்சியின் சொல் பழுதுள்ளது எனத் தள்ளி விடாதே. கிளி சொல்வதை யாராவது கேட்காமல் இருப்பார்களா? இறைவன் எளிமைக் கோலத்தில் வந்து துன்புறுவது ஏன்? அரசனுக்குரிய சேனை, அரண்மனை, அணிகலன், செல்வம் இல்லாதது ஏன்? இருக்க இல்லம் இல்லாதது ஏன்? இந்தக் குகையைத் தேடி வந்தது ஏன்? வானுலகுக்கு மக்களை அழைக்க வந்த இறைவன் வானுலக உருவோடு வந்தால் என்ன? (11 : 20 – 23)

இதைக் கேட்ட மரியா கண்ணீர் சொரிந்த வண்ணம் பதிலுரைத்தார். "தளர்ந்த கொடியே கொம்பைத் தேடும். தனியே வீரச் செயல் புரிய இயலாதவரே, வீரர் துணையை நாடுவர். கடவுள் தனியே வீரச் செயல் புரியக் கூடும். தனியே பகையை ஒழிக்கக் கூடும். ஆனால் இது கருணையின் காலம்" (11:29)

சாந்திக்கு மீண்டும் ஓர் ஐயம் ஏற்பட்டது "ஆண்டவர் மனிதரை மீட்க வரும் போது இவ்வுலக அரசர்கள் அஞ்சுவர். வணங்காதவர்கள் கெட்டு அழிவர் என வேத நூல் சொல்

கிறதே'' இங்கு இடைச்சிப் பெண்ணுக்கு வேதநூல் அறிவு உண்டு என்று சுட்டப்படுகிறது. (11 : 32) மரியா, ஆண்டவனின் வருகை பற்றி நீங்கள் விரிவாக அறிய விரும்பினால் சொல்கிறேன் கேளுங்கள் என்றார் எல்லா இடைச்சியரும், பகலவனின் சுடரை உண்ட தாமரை போல் மனம் விரிந்த நிலையில் மகிழ்ந்து கேட்டனர்.

''திருமகனுக்கு இரு வருகை உண்டு. முதல் வருகை அன்பு வருகை: அடுத்த வருகை. நீதியின் வருகை. இப்போது அன்பின் காலம். எனவே ஒரு குழந்தையாகத் தோன்றி, பாவம் புண்ணைக் கனிவோடு ஆற்றும் மருந்தாக வந்துள்ளான்''

''புண்கனியக் குளிர்ந்து ஆற்றும் மருந்துபோன்றான்'' (11:36)

''பாவ நஞ்சை உண்டவர், தாமே கசப்பு மருந்து உண்ண வேண்டும், பாவிகள் மீது அன்பு கொண்ட ஆண்டவன், நமக்காகத் தானே துன்பத்தை ஏற்று தானே மருந்தாக வந்துள்ளான்''. (11:57)

இதைக் கேட்ட சாந்தி, இறையே ''பாவியாகிய எனக்காக நீ அழுவாய் கொல், உளைந்து அயர்வாய் கொல்'' எனத் தொழுதாள், அழுதாள். (11 : 58) மீண்டும் உரைத்தாள், ''நாங்கள் சிற்றின்ப நஞ்சை உண்டோம். அதைத் தீர்க்க நீ உடல் துன்பம் என்ற கசப்பு மருந்தை உண்டாயோ?'' இவ்விடத்தில் சிவபெருமான் நஞ்சுண்ட செய்தி முனிவரின் நினைவில் இருந்திருக்க வேண்டும்.

''காட்டில் இடி இடித்த போது ஆண் யானை பெண் யானையைத் தன் துதிக்கையால் தழுவித் தேற்றும். மழை பெய்த போது தாய்ப் பறவை மானிடரைக் காக்க வந்தார்'' என்று உரைத்த சாந்தி நொந்து குழைந்து அழுதாள் (11:70).

இத்தகைய பணிவும், பண்பும், அறிவும் படைத்த சாந்தியைப் 'பேர் அறிவு ஓங்கிய சாந்தி' (11:50) என முனிவர் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்.

தாழ்ந்த நிலையில் இருந்த இடையர்கள் இயேசு பிறந்த நற்செய்தி கொடுக்கப் பெற்று அவரைக் காண அழைக்கப்பட்ட தால் உயர்வு பெறுகின்றனர். யூத சமுதாயத்திலும் தமிழ் நாட்டிலும் பெண்கள் தாழ்ந்திருந்த காலத்தில், தேம்பாவணியில் இடைச்சியர் இயேசுவைக் கண்டு, இறைத் திட்டத்தை அறிந்து, அதை அன்போடு ஏற்றுக் கொண்டதால் உயர்வு அடைகின்றனர்.

''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும்
கீழல்லார் கீழ்ல்லவர்'' (973)

முருகவேள் கருணை

ப. ஞானம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர் 608 002

பயிர்களின் நல்வாழ்வுக்குக் களைகளைக் களைதல் இன்றியமையாதது. களைகள் போக்கப்படுவது பயிர்கள் வளர வேண்டும் என்னும் கருத்தினால் நிகழ்வதாகும். உலகில் பலரும் வாழ சில கொடியவர்கள் அழிவதும் இன்றியமையாததாகிறது. அத்தகைய ஒரு செயலையே மறக்கருணை என்னும் பெயரால் இறைவனுக்குரிய செயலாகச் சுட்டுகின்றனர்.

உலகத்தைத் தோற்றுவிப்பதும் காப்பதும் அழிப்பதும் இறைவனுடைய செயலாகச் சிவஞானபோதம் சுட்டுகின்றது. இவற்றுள் இடைப்பட்டதாகிய காத்தற்தொழிற்கு இறைவனின் மறக்கருணை இன்றியமையாததாகின்றது. இவற்றை இறைவன் மிக எளிதாகச் செய்கிறான் என்னும் கருத்து பற்றி இறைவனின் திருவிளையாட்டு என்று அவனுடைய செயல்களைக் குறிப்பிடுவர். 'அலகிலா விளையாட்டு' என்று சுட்டுகின்ற சுட்டும் இது கருதியதே ஆகும்.

இறைவன் அல்லது இறைவனை ஒத்ததன்மையுடைய முருகன் போன்றோரிடத்தில் குறிக்கப்படும் மறக்கருணை என்பது தனி அமைப்புடையது. இறைவன் கருணையோடு அருள் செய்தாலும் அல்லது ஒறுத்தாலும் அருள் செய்யப் பட்டோரும், ஒறுக்கப்பட்டோரும் இறைவனின் பேரருளைப் பெறுவதற்கு உரியவராகின்றனர். இறைவனை எதிர்த்துப் போர் புரிந்ததாகக் கருதப்படும் பலரும், அழிவிலும் ஒரு நன்மையைப் பெற்றுள்ளனர் என்பதனைப் புராணச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. முருகக் கடவுள் மறக்கருணையாலும் அறக்கருணையாலும் உலகத்தை உய்விக்கின்றான் என்னும் செய்தியைப் பல நூல்களும் குறிப்பிடுகின்றன. குறிப்பாக அவன்

கைகள் மறக்கருணையைச் செய்வதற்கும் பாதங்கள் அறக் கருணையைச் செய்வதற்கும் உரியவையாகும் என்பதனை,

"உறுநர்த் தாங்கிய மதனுடைய நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை"
(திருமுருகாற்றுப்படை வரி 4-5)

என்ற அடிகள் புலப்படுத்தும்.

மறக்கருணைக்கு ஆட்பட்ட தேவர்களில் இந்திரன், பிரமன், திருமால் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள், அவுணர்களும் இதில் அடங்குவர். இந்திரன் பகையுணர்ச்சி கொண்டு குழந்தையாக இருந்த முருகனைத் தன் வச்சிரப்படையால் தாக்கினான். ஆறு உருவினனாக இருந்த முருகன் ஒருருக்கொண்டு இந்திரனை வெற்றிகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. முருகன் ஒருருக் கொண்ட செய்தியைக் கந்தபுராணம், குமாரசம்பவம் என்னும் நூல்கள் உமையம்மை அன்புடன் தழுவியமையால் ஏற்பட்ட தாகக் குறிப்பிடுவதும் ஈண்டு கருதத்தக்கது. முருகன் இளமைப் பருவத்தில் விளையாட்டாக மலைகளையும் கடல்களையும் ஓரிடத்தில் சேர்க்கின்றார். மேருமலையைப் பாதாளத்தில் செல்லுமாறு அழுத்துகின்றார். கதிரவனைத் திங்கள் மண்டிலத்தில் எறிகின்றார். இதனால் தேவர்கள் துன்புற்றனர். இந்திரனைத் தலைமையாகக் கொண்டு தேவர்கள் முருகனை எதிர்க்கின்றனர். அப்போரில் இந்திரன், வருணன், இயமன், கதிரவன் ஆகியோர் தோற்று ஓடுகின்றனர். இச்செய்தியை நாரதர் வியாழனிடம் சென்று உரைக்கின்றார். வியாழன் போர்க்களம் சென்று முருகனை வழி படுகின்றார். முருகன் யார் எனத் தெரிந்து கொள்ளாமையால் இந்திரன் போர் செய்தான் என்றும், அவுணர்களால் நேர்கின்ற துன்பத்தை அவனுக்குப் போக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார். பாசத்தினின்றும் நீங்காத தேவர்களுக்குத் தக்க ஒறுத்தலை முருகன் கொடுத்து தனது பேருருவைக் காட்டி அருள் செய்தார். அப்பேருரு உலகங்கள் அனைத்தையும் தன்னுட் கொண்டிருந்த நிலையைத் தேவர்கள் கண்டு வியந்தனர். அதனைக்கண்டு தொழுத இந்திரன் முதலிய தேவர்கள் முருகனுக்குத் தொண்டு புரிந்தனர். தேவதச்சனைக் கொண்டு கந்தவெற்பு என்னும் மலையைத் தோற்றுவித்து அதில் முருகனை அரியணை ஏற்றி வழிபட்டனர் என்பது புராணக்குறிப்பு. சங்கநூல்களில் பரிபாடல் நீங்கலாக மற்றைய நூல்களில் முருகன் இந்திரனோடு

போரிட்டதாகக் குறிப்பு ஒன்றையும் காண இயலவில்லை. இன்று பிறந்த குழந்தை என்று எளிதாக எண்ணி இந்திரன் முதலான தேவர்கள் ஒன்று சேர்ந்து முருகனோடு போர் புரிந்து தோற்று, பின் கந்தன் கருணையால் அருள்பெற்ற செய்தியைக் கந்த புராணத்தைத் தொடர்ந்து திருப்புகழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் முதலான பல பிற்கால இலக்கியங்கள் குறிப் பிட்டுள்ளன என்பது கருதத் தக்கது.

அடுத்து, நான்முகனை முருகனோடு இணைத்துப் பேசு கின்ற நிலை இலக்கியங்கள் பலவற்றிலும் காணப்படுகின்றது. சிவபெருமானைக் காண்பதற்காக நான்முகன் கைலைமலை செல்கின்றான். இறைவனைக் கண்டு திரும்புங்கால் அங்கே கோபுர வாயிலில் வீற்றிருந்த முருகனை மதியாதவனாகச் செல்லுகின்றான். நான்முகனை நோக்கிய முருகன் அவனைத் தன்பால் வருமாறு விளித்தான் முருகனை முறைப்படி வணங்காமல் நான்முகன் தொழுதான். முருகவேளும் உனது தொழில் யாது என்று பிரமனிடம் கேட்க, அவன் இறைவன் ஆணையால் உலகத்தைப் படைப்பேன் என்றான். ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருள் யாது என முருகன் கேட்டான். அதற்குரிய பொருள் தெரியாமையால் அயன் மயங்கினான். அதற்காக ஒறுக்கும் நிலையில் அவனுடைய படைப்புத் தொழிலை இகழ்ந்து நான்முகன் தலையில் முருகன் குட்டினான். பின் பிரமனைச் சிறையிலடைத்து முருகனே படைப்புத் தொழிலை மேற்கொண்டதாகக் கந்தபுராணம் குறிப்பிடுகிறது. பிரமனைச் சிறையிட்ட செய்தியைத் திருமுருகாற்றுப்படை முதற்கொண்டு இலக்கியங்கள் பலவும் கூறுகின்றன எனினும் அவற்றில் காணப்படும் சிற்சில வேறுபாடுகள் உள்ளம் கொள்ளத் தக்கவை.

''வேதா விதித்த விதிப்படியை
விலக்கி வெகுண்டு மீட்டளித்தாய்''

(திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் சிற்றில் பருவம் 7 : 6 – 7) என்பதால் முருகன் பிரமனை ஒறுத்தல் மறக்கருணையே என்றறியலாம். முருகன் பிள்ளைத்தமிழ் நூல்கள் பலவும் இச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளன.

அடுத்து திருமாலைப் பற்றிய ஒரு புராணக் குறிப்பு. இரணியாக்கன் என்னும் அசுரன் ஒரு கற்பத்தில் உலகினைப்

பாயாகச் சுருட்டிக் கொண்டு ஓடினான். பூமி தேவி திருமா லிடத்தில் முறையிட்டாள். அதனால் பன்றி வடிவு கொண்டு அவனைத் துரத்திச் சென்று பூமியை மீட்டு வந்தார் திருமால். அந்த வெற்றிக் களிப்பினால் செறுக்குற்ற பன்றி மதம் கொண்டு பூமியை அலைக்கத் தொடங்கியது. அதனை அடக்கி வருமாறு இறைவன் முருகனை அனுப்ப, முருகன் அதன் கொம்பைப் பிடுங்கிவந்தார். சிவபெருமான் அக்கொம்பினை ஏற்று மார்பிலே அணிந்து கொண்டார் என்ற செய்தியைப் புராணங்களும் முருக இலக்கியங்களும் சுட்டுகின்றன. திருமால் தேவர்கள் அமுதம் பெறுவதற்காக ஆமையாக வடிவு கொண்டு உதவி, பின் செறுக் குற்று திரிந்த காலத்தும், இறைவனால் அனுப்பப்பெற்ற முருகன், அதன் செறுக்கினை அடக்குமுகமாக, அதன் ஓட்டினை மட்டும் பெயர்த்து வந்து இறைவனிடம் சேர்ப்பித்தார் என்ற புராணக் குறிப்பும் உண்டு. பிரமன் திருமால் போன்ற தேவர்கள் ஒரு மலம் உடைய விஞ்ஞானாகலர் எனக் கருதப்படுவர். புலன்களில் ஒன்று குறைந்தால் மற்றவற்றின் ஆற்றல் மிகுதியாகும். அது போல, மும்மலம் ஒருமலமாகக் குறையும் பொழுது முனைப்பு மிகுதியாகும். அவ்வாறான முனைப்பே 'வராக, கூர்ம' அவதாரங்களில் சுட்டப்பட்டுள்ளன. அத்தகைய செறுக்கினை அடக்குவதற்கு இறைவன் ஒருவனே தகுதியுடையவன் என்பதைப் புராணங்கள் உருவகமாகக் கூறியுள்ளன. இறைவனோடு ஒத்த தன்மை முருகனுக்கு உண்டு எனக் கருதிய காரணத்தால் இப்புராண வரலாறுகள் அவன் மீது ஏற்றிக் கூறப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

பிரமன், சிறைவீடு பெற்றதாலும், முருகப்பெருமானால் தீண்டப் பெற்றதாலும் திருவடிதீட்சை பெற்றதாக உணர் கிறான். யான் எனது என்னும் அகப்பற்றும் புறப்பற்றும் நீங்கியதாக உணர்கின்ற நிலையும் குறிப்பிடத்தக்கது. எனவே ஒறுத்தலோடு கூடிய கருணையை இக்கதைகள் கொண்டிருத் தலைக் காணலாம், அவுணர்களில் தாரகன், சிங்கமுகாசுரன், சூரபன்மன் ஆகியமூவரும் மறக்கருணைக்கு ஆட்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

''பொரும் பலமதுடை அசுரன் தாரகனைப் பொருது
பொன்று வித்த பொருளினை''

என்ற தேவாரக் குறிப்பால் பெரும் வலிமையுடைய தாரகனை முருகன் வென்றான் என்ற செய்தி பெறப்படுகிறது. கொலை,

களவு, பொய், கள்ளான், குருநிந்தை எனப்படும் ஐந்து பெரும் பாதகங்களைச் செய்தவன் தாரகன் என அருணகிரிநாதரும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கொடிய அசுரனுக்கே முருகன் கருணைத் தரிசனம் தந்து அருளினான் எனக் கந்தபுராணம் கூறுதல் மனங்கொள்ளத் தக்கது. தாரகன் சூரபன்மனின் ஒரு தம்பி என்பது குறிப்பிடத்தக்கது. மற்றொரு தம்பி சிங்கமுகாசுரன். போர்க்களத்தில் சிங்கமுகனின் தலைகளையும் கைகளையும் எவ்வளவு முறை வெட்டினாலும் மீண்டும் மீண்டும் அவை வளருவதைக் கண்டார் முருகன். அது சிங்கமுகனுக்குத் தன் தந்தை கொடுத்தவரம் என உணருகிறார், அவ்வரத்தை மாற்றி குலிசாயுதத்தால் கொன்றார். சிங்கமுகனை இறக்கச் செய்வது அவருடைய நோக்கமல்ல. அவனைத் திருத்துவதே நோக்கமாதலால் சிங்கவாகனமாகப் பராசக்திக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறும் புராணக் குறிப்புண்டு. சூரபன்மனின் தம்பியராகிய தாரகன், சிங்கமுகன் ஆகியோர் தோற்று அழிந்த பின், சூரன் போருக்கு எழுந்து வருகின்றான். பல்வேறு மாயத் தோற்றங்களைக் காட்டி முருகனை அச்சுறுத்துகின்றான். கடல் நடுவில் மாமரமாக ஒளிந்துகொண்ட சூரனை முருகன் தன் வேலால் அழிக்கின்றார் இரு கூறாகப் பிளந்து சூரனின் உடல் சேவலும் மயிலுமாகி திரும்பவும் செறுக்குடன் போர் புரிய வந்தன. கொடியவனாக இருந்தாலும் சூரன் பரம்பொருளாகிய முருகனுடன் போர் புரிதலின் வாயிலாக அவருடைய திருவருளுக்கு ஆளானான் என்பதே குறிப்பிடத்தக்க செய்தியாகும். சேவலும், மயிலுமாகி நின்ற சூரனுக்கு அருள் செய்யும் நோக்கில் சேவலைத் தம் கொடியாவும், மயிலைத் தம் ஊர்தியாகவும் ஏற்றுக் கொண்டார் என்று புராணம் கந்தவேளின் கருணைத் திறத்தினைப் பலபடியாக விரித்துக் கூறுகின்றது.

திருச்செந்தூரில் வாழ்ந்த தேவதாசி, சுருளி மலைப் பகுதியில் வாழ்ந்த முருகனிடத்தில் அளவிலா பற்று கொண்ட அநாதை ஒருவர் ஆகியோருக்கெல்லாம் முருகன் கண்கண்ட தெய்வமாக இருந்து உற்ற காலத்தில் அருள் புரிந்திருக்கின்றான். அடியார்கள் பெற்ற அருள் அனுபவங்களில் சில புராணக் குறிப்புக்களாக அமைந்துள்ளன சில செவிவழிச் செய்தியாக அமைந்துள்ளன. சில சரித்திரச் சான்றுகளாகவும் உள்ளமை கருதத்தக்கவை.

மீட்டாத வீணையில் 'ஹேமா'

பா. ஞானம் மாரியப்பன்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சி - 17

பாலகுமாரன் எழுதிய புதினம் மீட்டாத வீணை. இப்புதினத்தின் தலைவி ஹேமா. இப்புதினத்தில் இடம்பெறும் பாத்திரங்களனைத்தும் தனித்தனிப் பண்புகளைப் பெற்றிருப்பினும் ஹேமாவின் படைப்பு அவையனைத்துள்ளும் சிறப்பிடம் பெறுகின்றது. எனவே ஹேமாவின் பாத்திரப்படைப்புத்திறம் குறித்து இக்கட்டுரை அமைந்துள்ளது.

பண்புநலன்கள்

கோபம், வேகம், படபடப்பு, அறிவுக்கூர்மை, மன அழுத்தம் மனஉறுதி ஆகியவை நிரம்பிய பெண் ஹேமா. தனக்கு எது தேவை, தன்னுடைய நல்வாழ்விற்குத் தேவை எது என்பதைத் தானாகவே திட்டமிடத் தெரிந்த அறிவாளிப் பெண் அவள். வீட்டிற்குள் அவள் நுழைந்து வெளியேறும் காட்சியைப் புயல்வீசி அடங்குவதற்கு ஒப்பாகக் கூறுகிறார் ஆசிரியர்.

தகப்பனாரிடமிருந்து விவாகரத்து பெற்ற தாய், தகப்பன் சொத்தில் எப்படியும் தங்களது பங்கினைப் பெற்றுவிட வேண்டும் என்ற பெயரில் வக்கீல் வீட்டிலும் கோர்ட் வழக்குகளிலும் வாழ்நாளைக்கழிக்கும் அண்ணன் சுந்தரம், இருவரிடமும் ஹேமா தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டாது வாழ்கிறாள். இளம் பெண்களுக்கேயுரிய குறும்புத்தனத்திற்குக் குறைவில்லை என்றாலும் தன் பொறுப்பு இன்னது என்று தெரிந்து நடப்பவள். அவள் அண்ணன் சுந்தரம் தன் தாயிடம், ''அவ சந்தோஷமாக இருக்கணும்னா சுதந்திரமாக இருக்கவிடு'' என்று ஹேமாவைப் பற்றிக் கூறுகிறான்.

ஹேமா சுதந்திரம் கேட்கவில்லை. வாங்கப் போராடவில்லை. சுதந்திரம் அவளுக்குத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து நீட்டப்

பட்டது. அவள் அதை மிக மரியாதையுடன் வாங்கிக் கொண்டாள். காப்பாற்றினாள். வக்கீல் சந்தானம் ஹேமாவிடம் தான் கொண்ட காதலைப் பற்றிச் சொல்லும் போது, "நாம் இன்னும் பேசிப் பழகிப் பார்ப்போம். பிறகு அவசியம்னா லவ் யூ சொல்வோம்" என்று கூறுகிறாள்.

பாச உணர்வு

ஹேமா வெளிப்படையாகப் பாசத்தைக் காட்டாதவளாய் இருந்த போதும் தன்னுடைய அண்ணன் மீதும் தாய்மீதும் மரியாதையும் பாசமும் மிகுந்தவள். அண்ணன் சுந்தரம் ஒரு கிறித்துவப் பெண்ணைக் காதலிப்பதாய்க் கேள்விப்படும் போது அதனை நம்ப மறுக்கிறாள். தன் கண்களாலேயே அண்ணனையும் அந்தக் கிறித்துவப் பெண்ணையும் ஒன்றாகக் கண்டபோது தான் கொண்ட நம்பிக்கை தகர்ந்து விட்ட கோபத்தில் அண்ணனிடம் சண்டை பிடிக்கிறாள். "அம்மாவின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்காத இரு" என்று அண்ணனை எச்சரிக்கிறாள்.

அந்தக்கிறித்துவப் பெண்ணின் தாய் வக்கீல் அனிதா மாத்யூஸிடமும், "என் தாய் அவள் மகனோடுதான் இருக்க வேண்டும். வாழ்நாளின் கடைசியிலாவது அவள் நிம்மதியாக இருக்க வேண்டும்" என்று உறுதியாகக் கூறுவது தாய்மீது அவள் கொண்டிருக்கும் பாசத்தை வெளிப்படுத்துகிறது.

தன்னம்பிக்கை

ஹேமாவின் தன்னம்பிக்கையும் துணிச்சலையும் ஆசிரியர் நாவல் முழுவதும் வெளிப்படுத்துகிறார். தன் பரம்பரைச் சொத்து மூலம் தனக்குக் கிடைக்கவிருக்கும் சொத்தின் உதவி யால் தனியே தொழில் தொடங்க வேண்டும் என்று விரும்பு கிறாள். அதற்காக அவள் போடும் கணக்கும் திட்டமும் அவளுக்குத் தன் தொழில் மேல் எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. கைக்குச் சொத்து வந்ததும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நினைக்காமல் சம்பாத்தியம் பண்ண வேண்டும் என்ற அவள் நினைப்பு வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற லட்சியத்தைக் காட்டுகிறது. தன்னையும் வக்கீல் சந்தானத்தையும் தவறான கண்ணோட்டத் துடன் பார்க்கும் தாய்க்கு அவள் தரும் பதிலில் அவளது சுய மரியாதையும் மனஉறுதியும் புரிகிறது.

காதலைப்பற்றிய மதிப்பீடு

தன் அண்ணன் சுந்தரம் கிறித்துவப் பெண்ணைக் காதலிப்ப தாய் அறியும் போது ஹேமாவால் அதை நம்பமுடியவில்லை. தன் தாய்க்கு விவாகரத்து வாங்கிக் கொடுத்த தங்கள் தந்தை யிடமிருந்து சொத்தில் பங்கு வாங்கிக் கொடுத்த தங்கள் குடும்ப வக்கீல் அனிதா மாத்யூஸ், தான் செய்த உதவிக்குத் கைமாறாகத் தன் மகளைச் சுந்தரத்திற்குத் திருமணம் செய்து வைக்க நினைப்பதை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. "உங்கள் மகள் என் தமயனைக் காதலிப்பதை நான் விரும்ப வில்லை'' என்கிறாள்.

வக்கில் சந்தானம் தன்னுடைய காதலை ஹேமாவிடம் வெளிப்படுத்தும்போது, "அழகு, உயரம், தமாஷ் இதுமட்டும் பார்த்து காதல் வராது'' என்று பதில் கூறுகிறாள். அண்ணன் சுந்தரம் ஹேமாவிடம் யாரையாவது அவள் காதலிக்கிறாளா என்று கேட்பதற்குத் தன்னால் யாரையும் நம்ப முடியவில்லை என்று கூறுகிறாள். சொத்துக்கள் கைக்கு வந்தபின்பும் தன் தாயிடம், "காசு வாங்குவதற்கு முன்னேயே எனக்கு ஆம் பிள்ளைன்னா பயம். இப்ப அந்த பயம் இன்னும் அதிகமாகிறது. என்னால யாரையும் நம்ப முடியலே'' என்கிறாள்.

தகப்பனின் அன்பைத் தெரியாது தாயின் துன்பங்கள் மட்டுமே பார்த்து வளர்ந்த பெண்ணாதலால் ஹேமாவின் மனதில் காதல் என்ற உணர்வு ஏற்படவுமில்லை. சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று எப்போதும் யோசிக்கிற பெண் அவள். கட்டி ஆள வேண்டும் என்ற விருப்பமுள்ள பெண். அவளால் காதலுக்கு ஏங்குகிற பெண்ணாகவோ காதலிக்கிற பெண்ணாகவோ இருக்க முடியவில்லை.

மன அழுத்தம்

ஹேமா ஏனைய சாதாரண பெண்களில் இருந்து மாறு பட்டவள். அழுத்தமான மனமுடையவள். சாகுந்தறுவாயில் இருக்கும் தந்தையை அவள் சென்று பார்க்க விரும்பாதது மட்டுமல்ல; அவரை மன்னிக்கவும் மறுத்து விடுகிறாள். அவர் கொடுத்து, தான் சொத்துக்களை வாங்கவும் அவள் விரும்ப வில்லை. "என் அப்பாவை என்னால் மன்னிக்க முடியாது அவர் அளித்து நான் வாங்கிக் கொள்ள விரும்பவில்லை'' எனக் கூறுகிறாள். வக்கீல்சந்தானத்துடன் கைகுலுக்கியதைத்தவறாகக்

கூறும் தாயிடம், நீயும் வேண்டாம் உன்புள்ளையும் வேண்டாம்னு தூக்கி போட்டுட்டு போறதுக்கு ரொம்ப நாழியாகாது. ஒரு தடவை அப்படி தூக்கி போட்டேன் செத்தாலும் திரும்பி வரமாட்டேன்'' என்றாள்.

தன்னுடைய காதலைச் சந்தானம் ஹேமாவிடம் வெளிப் படுத்தும்போது, உலகத்தில் நல்ல பிரண்ட்ஷிப் கிடைப்பது கஷ்டமான விஷயம். நல்ல சினேகிதர்களாக இருப்போம் என்று கூறுகிறாள். காதல், கல்யாணம் என்ற சராசரி இளம் பெண் களின் ஆசைகளுக்கு அவள் மனதில் இடமில்லை.

தன் மதிப்பீடு

ஹேமா தன்னைப் பற்றியும், தன் குடும்ப சூழ்நிலை பற்றி யும் தெளிவான அறிவு கொண்டவள். திருமணம் பற்றிச் சந்தானம் கேட்கும் போது, "நான் அப்பா வளர்க்காத பெண், புருஷன் ஒதுக்கி வைத்த தாயால் வளர்க்கப்பட்ட பெண்... கொஞ்சம் அழகாயிருக்கிறேன் என்பதைத் தவிர எந்த பிளஸ் பாயிண்டும் இல்லை'' என்று கூறுகிறாள். நான் சம்பாதிக்க வேண்டும், நான் ஜெயிக்க வேண்டும், நான் என் இலக்கைத் தொட வேண்டும், என்மீது எனக்கு மதிப்பு வந்தால்தான் எனக்குப் பிறர்மீது காதல் வரும் இல்லையெனில் இடைவிடாது பயம் கவ்விக் கொண்டிருக்கும் என்றெல்லாம் யோசிக்கிறாள்.

இருவேறுபட்ட மனோபாவமும் ஹேமாவிடம் காணப் படுகிறது. அண்ணன் வேறு சாதிப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் தன் திருமணம் எப்படி நடக்கும் என்று அண்ணனிடம் சண்டை போடுகிறாள். அதே சமயம் சொத்து கைக்கு வந்ததும், "என்னால் யாரையும் நம்ப முடியவில்லை நம்பிக்கையா ஒரு ஆள் வருகிறவரைக்கும் கல்யாணம் பண்ணிக் மாட்டேன்'' என்றும் கூறுவதிலிருந்து அவளது மனம் திருமணத்தைப் பற்றிய ஒரு தெளிவான முடிவில் இல்லை என்பது தெரிகிறது.

முடிவுரை

வீணை என்று ஒன்று இருந்தால் அது மீட்டப்பட வேண்டும். பெண் என்று ஒருத்தி இருந்தால் அவள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். ஆனால் ஹேமாவின் லட்சியம் வேறு. அவள் தன் வாழ்வில் தனியே நின்று காட்ட எண்ணும் புதுமைப்பெண்

யாராலும் அதிகாரம் செய்யப்படாமல் அதிகாரம் செய்து வாழ விரும்பும் பெண். எதனாலேயோ அவளுக்கு கல்யாண ஆசை வரவில்லை. தன்னுடைய லட்சியத்தை அடையும் வரையில் தான் ஒரு மீட்டாத வீணையாகவே இருந்துவிடத் தீர்மானித்து விடுகிறாள்.

பாத்திரப்படைப்பில் சில முடிவுகள்

ஹேமா தந்தையால் வளர்க்கப்படாத, கணவனால் விவாகரத்து செய்யப்பட்ட தாயால் வளர்க்கப்பட்ட பெண். ஆதரவாய் இருக்கும் அண்ணனும், தன் விருப்பத்திற்கு மாறாக வேற்று மதத்தில் மணமுடிக்க நினைப்பதும், தன் தாய் அவனால் புறக்கணிக்கப்படுவதும் அவளால் தீராத மனவருத்தத்தை ஏற்படுத்துகின்றன. ஆண்கள் யாரையுமே நம்ப முடியாதவளாய் அவள் மாறிவிடுகிறாள். காதல், திருமணம் என்ற கட்டுப்பாடுகளில் சிக்கிக் கொள்ளாது தனித்து வாழ்வதே சிறந்தது என்று அவள் எண்ணுகிறாள்.

தன்னம்பிக்கையும், வாழ்வில் எப்படியும் முன்னேற வேண்டும் என்ற கொள்கைப்பற்றும் கொண்டவள். வெறும் உடல் கவர்ச்சி பற்றிய காதலைவிட தூயநட்பே சிறந்தது எனும் எண்ணம் கொண்டவள். தன்னையும், தாயையும், தமையனையும் நிராகரித்த தந்தையை அவர் இறக்கும் போதும்கூடச் சென்று பார்க்காதவளாய் அவனை மன்னிக்கும் மனம் இல்லாதவளாய் இருக்கிறாள். தனித்து நின்று போராடி வாழ்க்கையை எதிர்கொள்ளத் துணிகின்றாள்.

நாட்டுப்புறக் கதைப் பாடல்களும் வடிவ மாற்ற முயற்சிகளும்

பீ. டாக்டர் நசீம்தீன்
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம்

தமிழகத்தில் வழங்கிவரும் கதைப்பாடல்களை நான்கு வகைகளாகப் பாகுபடுத்துவர். இக்கதைப்பாடல்கள் வில்லுப் பாட்டு, கூத்துப்பாட்டு முதலான பல வடிவங்களில் நாட்டுப்புற மக்களின் எண்ண வெளிப்பாடுகளுக்கு ஒரு வடிகாலாக இருந்து வந்தன. இன்றும் நாட்டில் சில பகுதிகளில் கதைப்பாடல்கள் பல வடிவங்களில் வழங்கி வருகின்றன. இவற்றில் பல அச்சு வடிவம் பெற்றுள்ளன; பல, ஏடுகளில் முடங்கிக் கிடக்கின்றன; சில, மக்களின் வாய்மொழி வழக்காறாக வழங்கிவருகின்றன கதைப்பாடல்கள் அக்கால மக்களின் வாய்மொழி இலக்கியங்களாகக் கொள்ளத்தக்கனவாகும். இவற்றில் 'அயோத்திகதை', 'ஐவர் ராசாக்கள் கதை', 'கோவிலன் கதை' போன்றவை நாட்டுப்புறக் காப்பியங்களாகக் (Folk Epic) கருதத்தக்கன வாகும். கதைப்பாடல்களை ஆராய்கின்றபோது, சில எழுத்திலக்கியங்களுடன் பொதுக் கதை அமைப்பில் தொடர்புடையன வாகக் காணப்படுகின்றன. புராணங்களிலும் இதிகாசங்களிலும் கதைகள் எழுத்திலக்கியங்களாக உருக்கொண்டது போன்றே நாட்டுப்புற வழக்காற்றில் கதைப் பாடல்களாக வடிவம் கொண்டுள்ளன. அரிச்சந்திரன் கதை, நளன் கதை, இரணியன் கதை, மயில்ராவணன் கதை போன்றவை இவ்வகையைச் சார்ந்தனவாகும். நாட்டார் வழக்காற்று வடிவங்கொள்ளும் போது இலக்கியப் பாங்கான அமைப்பு மறைந்து 'இயல்புநிலை வழக்குகள்' உள்ளூறுத்தப்பட்டுவிடுகின்றன. ஆயினும் கதை மாந்தரின் பண்புகள் பெரிய மாற்றங்கொள்வதில்லை. சில வேளைகளில் நாட்டுப்புற வழக்காற்று நிலையிலுள்ள கதைகளும்

எழுத்து இலக்கிய வடிவங்கொள்கின்றன. இவற்றில் நாட்டார் வழக்காற்று இயல்புநிலை வடிவங்கள் மாற்றப்பட்டு மெரு கூட்டுதல் நிகழலாம். இவ்வுருமாற்று முயற்சிகளை மூவகை யாகப் பாகுபடுத்தலாம்.

1. எழுத்திலக்கிய வடிவிலிருந்து நாட்டுப்புற வடிவங் கொள்ளும் போதான மாற்றங்கள்.

2. நாட்டார் வழக்காற்றிலிருந்து எழுத்திலக்கிய வடிவங் கொண்டு மீண்டும் நாட்டார் வழக்காற்று வடிவங் கொள்ளும் போது அமையும் மாற்றங்கள்.

3. வாய்மொழி வரலாற்றடிப்படையில் (Oral History) கதைப்பாடல் உருவாக்கம் கொள்ளும்போது ஏற்படும் மாற்றங்கள்.

பெரிய புராணங்கூறும் பரஞ்சோதியாரின் (சிறுத்தொண்டர்) வரலாற்றை முதல் வகைக்குச் சான்றாகக் கூறலாம். இறைவனின் சோதனைக்குட்பட்டுத் தன் பிள்ளையான சீராள தேவரைத் தன் மனைவியான திருவெண்காட்டு நங்கையின் உதவியுடன் அறுத்துக் கறிசமைத்துப் பைரவர்க்குப் படைத்துப் பின் இறையருளால் மகனை உயிருடன் வரப்பெற்று முக்தி அடைவதைக் கூறுவது சிறுத்தொண்டர் புராணம். இது நாட்டார் வழக்காற்று வடிவங் கொள்ளும்போது சில பகுதிகள் இணைக்கப்படுகின்றன:

1. சிறுத்தொண்டரைக் கர்ணனின் மறுபிறப்பாகக் கூறுதல்.; வடபுல வெற்றிக்குப் பதிலாக (பெரியபுராணம்), அவரது கொடைச் சிறப்புக்கூறுதல்.

2. சிவபெருமானின் வரத்தின்படி சீராளதேவரைப் பெற்றெடுத்தல்.

3. பொன்னும் மணியும் தானம் செய்தால் போதாது; அடியார்க்கு உணவிடுதலே சிறப்பெனத் திருவெண்காட்டு நங்கை கூறல்.

4. அன்னக்கொடி கட்டித் தானம் செய்தல் - இது பற்றிய நீண்ட வர்ணனை.

5. கங்காள வைரவர் வேடமிட்டு வரும்போது நீண்ட வர்ணனை இடம் பெறுதல்.

6. கங்காள வைரவர் சென்றமர்ந்ததும் மரங்களெல்லாம் பூத்துக் குலுங்குதல் பற்றிய வர்ணனை.

7. வைரவர், 'உன் மகன் சீராள தேவனின் கறியே உண்பேன் எனல். பெரியபுராணத்தில் சீராளன் இருப்பதை அறிந்ததாகவே சிவன் காட்டிக் கொள்ளவில்லை. சிறுத்தொண்டர் சம்மதித்தபோது வைரவர் கூறும் கூற்று நாட்டுப்புற வழக்காற்றமைப்பினைப் பெற்றமைகிறது.

"குருவிருந்த ஆசனத்தில் சிஷனிருந்து
கூறுங்கலையுரைக்கும் கொடியகாலம்
கொடுத்தகடன் கேட்பாரைக் கொல்லும் காலம் பத்தா
கூசாமல் பெரியாரை வையுங்காலம்
பெற்றதாய் புத்தி சொன்னா லுதைக்குங்காலம்; கொண்ட
பெண்சாதி மயிர்பிடித்தால் பொறுக்குங்காலம்
பிள்ளைக்கறியுஞ்சோறும் போடுகிறேனென்று
போதவே யெமக்குநீர் தாரை வாரும்". (பக்: 16)

கதைக்கருத்தில் மாற்றம் செய்யாமல், உரையாடல் முதலிய வற்றில் மாற்றம் செய்து கதை நீட்சி பெறுகிறது; நாட்டார் வழக்காற்றுச் சாயல்கதை கூறுவதில் வந்திணைகிறது.

8. சிவன் சீராளனின் மனதைச் சோதிக்க எண்ணி அவனுக்கு உறக்கம் உண்டாக்குதல். உறக்கத்தில் தாயும் தந்தையும் தன்னை அறுப்பதாகக் கனவு காணுதல், அக்கனவு பற்றிக்கேட்டு ஆசிரியர் வருந்தல். அவரைச் சீராளதேவன் மனந்தேற்றுதல்; வீடுவந்த போது அவனை உறங்கச் செய்யத் தாய் தாலாட்டுதல். (இப்பகுதி பெரியபுராணத்தில் இல்லை; கதை நீட்சிக்காக இது இணைக்கப்படுகிறது; கதை கேட்போரின் மன ஈடுபாட்டை மிகுவிக்கும் நாட்டார் வழக்காற்று அமைப்புடன் அமைந்துள்ளது)

9. தாயும் தந்தையும் குழந்தையை அறுக்கும் நிகழ்ச்சி நீண்ட வர்ணனையுடன் பாடப்பட்டுள்ளது. இது போன்ற எழுத்திலக்கியத்திலுள்ள கதைகள் நாட்டுப்புறக்கதைப்பாடல் வடிவங்கொள்ளும் போது மாற்றங்கள் பெறுகின்றன.

கதைகளை மீட்டுருவாக்கம் செய்யும் போது அவை எழுத் திலக்கிய வடிவங்கொள்வதற்கு முன்னர் எவ்வடிவம் கொண் டிருந்தன என்பதை ஓரளவு கணிக்க இயலும். பின்னர் எழுத் திலக்கிய வடிவம் நாட்டார் வழக்காற்றில் கதைப்பாடல் வடிவம் கொள்ளும் போது மேலும் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிடுகின்றன. கண்ணகி கதையின் மூலபடிவம் (ARCHETYPE) சங்க காலத்தின்

பேகன் கண்ணகி கதைக்கும் முந்தியதாதல் வேண்டும் இக்கதை யானது நாட்டுப்புற வழக்காறாக வழங்கிவந்ததற்கான சான்றைச் சாத்தனார் இளங்கோவடிகளிடம் கதையினைக் கூறினார் எனும் பதிகச் செய்தியிலிருந்து தெளிவாகிறது. சிலப் பதிகாரத்தில் கோவலன் கண்ணகி இருவரும் சாதாரண மனிதர் களாகவே பிறந்து வளர்கின்றனர். கோவலன் வானுலகெய்திய பின்னர் கண்ணகி தெய்வமாகிறாள். கண்ணகி மதுரையை எரித்துப் பதினான்கு நாட்கள் கடந்த பின்னர் திருச்செங்குன்றில் வானுலகு ஏகினாள்: பின்னர் தெய்வமாக வழிபடப்பட்டாள். சிலம்பில் கண்ணகியின் மறுபிறப்பு பற்றிக் கூறப்படவில்லை; ஆனால் கோவலனின் முற்பிறப்பு கூறப்படுகிறது. தீதிலா வணிகன் ஒருவனை விசாரியாது கொன்ற ஊழ்வினை கோவலனை உருத்து வந்தூட்டுகிறது. மதுரை எரியூட்டப்பட வேண்டும் என ஒரு சாபம் இருந்தது என்றும் அதனால் மதுரை கண்ணகியால் எரியூட்டப்பட்டது என்றும் மதுராபுரித் தெய்வம் கூறுகிறது. மாதவியின் முற்பிறப்பும் சிலம்பில் கூறப்படவில்லை. 'சலதி யோடாடி' என்ற கோவலனின் கூற்றைத் தவிர்த்துப் பார்த்தால் மாதவி சிறந்த பண்புடையவளாகவே காட்டப்படுகிறாள். சிலப் பதிகாரத்திற்கு முன்னர் நாட்டுப்புறக் கதையாக வழங்கிய கதையில் மாதவி தீயவளாயிருந்திருக்கலாம். அக்கணிகையைச் சிறந்த பண்புடையவளாகவே ஆக்கும் இளங்கோவடிகள், 'பாத்திரங்களில் பண்பாட்டு மெருகூட்டும்' பாணியை உத்தியாகப் பயன்படுத்தியிருக்கிறார். இவ்வுத்திதான் வால்மீகியின் அகலி கையைக் குற்றமற்றவளாகவும், தாரையைக் கற்புடையவளாக வும் படைக்கப் பிற்காலப் புலவர்களுக்கு முன்னோடியாக இருந்திருக்க வேண்டும். சிலம்பிற்குப் பிற்பட்ட காலத்தில் தோன்றிய கதைப் பாடல்கள் சில இந்நிலைக்குக் காரணம் காணப்புகுந்து 'மாதவியை முற்பிறப்பில் கோவலனின் மனைவி என்றாக்கிவிடுகின்றன. கோவலன் இறந்தபின் சிலப்பதிகார மாதவி துறவு பூணுகிறாள்; கதைப்பாடல்களில் கோவலனுக்கு மூட்டிய சிதையில் விழுந்து மடிகிறாள். இதனால் சிலப்பதிகார 'மாதவி' மெருகூட்டப்பட்ட பாத்திரம் என்பது தெளிவாகிறது. பிற்பட்ட கதைப்பாடல்கள் அவற்றின் கால வழக்காறுகளை உட்படுத்தி 'உடன்கட்டை' ஏறினாள் என மேலும் மாற்றி விடுகின்றன.

கண்ணகி பற்றிய கதைப்பாடல்கள் கண்ணகியை, தனது பக்தனைக் கொன்ற பாண்டியனைப் பழிவாங்கப் பிறந்த காளி

யின் வடிவாகக் குறிப்பிடுகின்றன. இது போன்ற கதை நிகழ்ச்சிகளுக்குக் காரண காரியங்கூறும் முயற்சியினால் கதைப் பாடல்களில் முன்னொட்டுக்கள் வந்து தோன்றுகின்றன. கோவலன் கதையில், கோவலன் முற்பிறப்பில் வடபத்திரகாளியின் பக்தனான எண்ணெய் வணிகனென்றும் பாண்டிமன்னனின் ஆணையை அறியாததால் கோவிலில் விளக்கு ஏற்றித் தண்டனை பெற்று மாய்வதாகவும் காட்டப்படுகிறது. இது பாண்டிய மன்னனைப் பழிவாங்கக் காளி கண்ணகியாகப் பிறப்பெடுத்ததற்குக் காரணங்காட்டுவதற்காக இணைக்கப்பட்டதாகலாம். பலியான எண்ணெய் வணிகன் கோவலனாகப் பிறக்கின்றான். இப்பிறப்பில் கொலைப்படக் காரணம் காணப்புகுந்த கதைப் பாடலில், கோவலனின் தந்தை காமதேனுவின் கன்றைக் கவனெறிந்து கொன்ற சாபத்தால் பதினாறாவது வயதில் கோவலன் கொலைப்படுகிறான். பழங்குடிகளிடையே வழங்கும் கோவலன் சரித்திரத்தில் லிங்கத்தைக் கட்டிப்பிடித்துத் தப்பிக்க முனைந்த ஏழைக்கண்ணன் எனும் வணிகன் கொல்லப்பட்டதனால் காளி பழி வாங்கப் பாண்டியனின் மகளாகப் பிறந்ததாக வேறோரு காரணம் கூறப்படுகிறது.

கண்ணகி பற்றிய கதைப்பாடல்களில் கோவலன் கண்ணகி மாதவி ஆகியோர் ஒரே காலகட்டத்தில் பிறந்தவர்களாகக் காட்டப்படுகின்றனர். கோவலன் 16-வது வயதிலும் மாதவி அவனுடன் எட்டு ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் தனது 12-வது வயதிலும் இறப்பதாகக் காட்டுவதும், கண்ணகிக்கு அவளது 5-வது வயதில் திருமணம் நிகழ்வதாகக் காட்டுவதும் கால உணர்வின்றி அமைவனவாகும்.

தலைமைப் பாத்திரம் ஒரு இடத்தில் பிறந்து மற்றொரு இடத்துக்கு இடம் பெயர்ந்து மற்றொரு இனத்தாரால் வளர்க்கப்பட்டுப் பின்னர் பிறந்த இடம் திரும்பவோ அல்லது அங்கு வந்து பழிவாங்கவோ செய்வதாக வரும் கதைப்பகுதி, இந்தியாவில் காணலாகும் கதைப்பாடல்களின் ஒரு பண்பாகும். இது எழுத்திலக்கியங்களில் புகுந்துள்ள தொன்மங்களிலும் (MYTHS) பிரதிபலிக்கக் காணலாம். நாட்டு மக்களின் மனதில் ஊறிப்போன மூல படிமங்களின் மறு வெளிப்பாடாக இவை இருக்கலாம். இடம்பெயர்வு நிலை, மனித இனத்தின் ஆரம்ப கால வாழ்க்கை முறையாக இருந்துவந்திருக்கிறது. இதற்கும் கதைகளில், தொன்மங்களில் அமையும் 'இடம் பெயர்வு' கோட்பாட்டுக்கும் தொடர்பு இருக்கிறது எனத் தோன்றுகிறது.

தாக்கத்தால் விளைந்த விளைவுகள்

ஜே. ஜி. என். டாசன்
ஸ்காட் கிறிஸ்தவக்கல்லூரி
நாகர்கோவில்

பட்டினத்தாரின் 'திருஏகம்பமாலை'யில் இடம் பெறும் 2-வது பாடல் பிறபடைப்பாளர்களிடம் எத்தகைய தாக்கத்தை உருவாக்கியுள்ளது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இலக்கியங்களுக்குள் பின்வரும் நிலைகளில் தாக்கம் ஏற்படும். 1. கடன் பெறுதல் 2. தூண்டுதல், 3. ஈடுபாடு, 4. வழிகாட்டி, 5. செல்வாக்கு, 6. எதிர்நிலை.

இறப்பு தவிர்க்க முடியாத – தடுக்க முடியாத ஒன்று என்பது பட்டினத்தார் கருத்து. அவர்,

'கட்டியணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி அழுவார் மயானம் குறுகிஅப்பால்
எட்டிஅடி வைப்பரோ இறைவா கச்சிஏகம்பனே'
(திருஏகம்பமாலை –2)

என்று மயானத்தோடு மனைவி மக்களின் உறவு முடிந்து விடுவதைக் குறிப்பிடுகின்றார்.

பட்டினத்தாரின் பாடலில் ஈடுபாடு கொண்ட கவிஞர் கண்ணதாசன் பொருள் மாறாத நிலையில்,

'வீடு வரை உறவு
வீதிவரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ
ஆடும் வரை ஆட்டம்
ஆயிரத்தில் நாட்டம்
கூடி வரும் கூட்டம்,
கொள்ளி வரை வருமா'

என எளிய சொற்களால் இறப்பைச் சுட்டுகின்றார். பணத்தில் நாட்டம் கொண்டு ஆட்டம் போடும் மனிதனைச் சார்ந்திருக்கும் கூட்டம் கொள்ளி வைக்கின்ற வரைக்கும் வருமா என ஐயப் பாட்டையும் எழுப்புகின்றார். இதற்குக் காரணம் கவிஞர் கண்ணதாசன் வாழ்ந்த காலச் சூழ்நிலையாகும்.

'பாத காணிக்கை' திரைப்படத்தில் இடம்பெற்ற கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலால் ஈர்க்கப்பட்ட இன்னொரு கவிஞர்,

'வீடு வரை மனவி
வீதி வரை உறவு
காடுவரை கடன்காரர்கள்'

[கவிஞர் தேவிகணேஷ், மலைமலர் (பத்)]

என கவிஞர் கண்ணதாசன் பயன்படுத்திய தொடர்களை இடம் மாற்றி அமைத்து 'காடுவரை கடன்காரர்கள்' என்கின்றார். இறந்தவனுக்குக் கடன் கொடுத்தவன் காடுவரை நிச்சயம் வருவான் என்பது கவிஞரின் எண்ணம். இதற்குக் காரணம் இன்றைய நாட்களில் கடனில்லாமல் யாரும் இல்லை என்பதாகும். இதுவும் இன்றைய காலச் சூழலை வெளிப் படுத்துகிறது.

மற்றுமொரு படைப்பாளர் கவிஞர் கண்ணதாசனின் பாடலிலுள்ள வீடு, வீதி, வரை ஆகிய சொற்களை எடுத்தாண்டு

'வீடு வரை மேக்கப்
வீதி வரை சைட்
பீச் வரை மோகம்
லாட்ஜ் வரை தீரும்
அவள் வயிற்றில் பாரம்
அவனுக்கோ –
வேறொருத்தி தாரம்'

[கவிஞர். செல்வன்: மலைமலர் (பத்)]

என படைத்துள்ளார். பட்டினத்தார், கவிஞர் கண்ணதாசன், கவிஞர் தேவிகணேஷ் ஆகிய மூவரும் இறப்பு எனும் பொருளில் ஒன்றுபட்டிருக்க, இக்கவிஞர் மட்டும் பொருள் நிலையில் மாறுபடுகின்றார். வீதி, வீடு வரை போன்ற சொற்கள் கவிஞர் கண்ணதாசனிடம் கொண்ட ஈடுபாட்டால் ஏற்பட்ட ஒன்று. ஆனால் பொருள் நிலையில் இன்றைய இளம் உள்ளங்களின்

காமக் காதலைச் சுட்டுகின்றது. நமது உரையாடல்களில் பெரும் பாலும் ஆங்கில சொற்கள் விரவி வருவதைப் போன்று கவிதையிலும் கவிஞர் ஆங்கில சொற்களைக் கலந்துள்ளார். இக்கவிதையும் இன்றைய காலச் சூழலை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு ஒரு படைப்பாளனது படைப்பின் தாக்கம் பிற படைப் பாளர்களைத் தொடர்ந்து, பொருள் நிலையில் காலச் சூழ்நிலைக்கேற்ப மாறி வருவதைக் காணலம். 'நாம் எதையும் பார்த்து எழுதுவதில்லை. நாம் மாறி இருக்கின்றோம். நம் படைப்பு, மாறிய மனிதனின் எழுத்தாகும். நாம் கடன் வாங்க வில்லை. நாம் விரைவிற்கு ஆளாகி ஒரு மரபுத் தொடர்ச்சியைத் தாங்குபவர்களாக இருக்கின்றோம். எக்கவிஞனும் தானே தனித்து நிற்பதில்லை. அவனைத் தனியே மதிப்பிட முடியாது. முன்னவர்களுடன் இணைத்தே மதிப்பிட வேண்டும் என்பார் டி.எஸ். எலியட். எனவே தாக்கம் என்பது இலக்கியத் திருட்டு அல்ல; மாறிவரும் காலச் சூழலால் ஏற்படுகின்ற ஒன்று.

ஒவ்வொரு படைப்பாளனுக்கும் தனித்தன்மை உண்டு. தாக்கத்தால் அத்தனித் தன்மை அழிந்து விடுவதில்லை. ஒரு படைப்பாளனுக்கு அடிப்படையில் உள்ள முன்னைய படைப் புகளை இனம் கண்டு ஒப்பிட்டு நோக்கும்போது அப்படைப் பாளனது தனித்தன்மையைக் கண்டு கொள்ள முடியும். இதனையே 'முன்னையதை அடிப்படையாக வைத்தே பின்னனையது கட்டப்படுவது என்பதால் தாக்கம் பற்றிய ஆய்வும் பயனுடையது' என ரெனிவெல்லாக் குறிப்பிடுகின்றார்.

எனவே இலக்கியத் தாக்கத்தால் ஏற்படுகின்ற விளைவுகளை ஒப்பிட்டு நோக்கும்போது, படைப்பாளனது தனித்தன்மையை யும், எவ்வாறு காலச் சூழ்நிலைக்கேற்ப மாற்றங்களைப் பெறுகின்றன என்பதையும் கண்டு கொள்ளலாம்.

தொல்காப்பியரின் வேற்றுமைக் கோட்பாடு

ஒய். டென்னிசன்
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 17

வேற்றுமை பெயர்க்காரணம்: வேற்றுமை இலக்கணம் சொல்லதிகாரத்தில் மூன்று இயல்களில் பேசப்படினும் அதன் குறிப்புக்கள் பிற இயல்களிலும் காணக் கிடக்கின்றன.

"ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
அவ்வாறென்ப வேற்றுமை உருபே"

"வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு
ஒல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்"

ஆகியவை எழுத்ததிகாரத்தில் புணரியலில் வேற்றுமை பற்றிக் காணக்கிடக்கும் செய்திகள். இதனை 'வேற்றுமை' என்றதற்கான காரணம் என்ன என்பதைத் தொல்காப்பியர் கூறவில்லை. ஆனால் உரையாசிரியர்கள் வேற்றுமை என்றதன் காரணத்தைக் கூறாது விடவும் இல்லை.

"செயப்படுபொருள் முதலியன வாகப் பெயர்ப்
பொருளை வேறுபடுத்தலின் வேற்றுமை ஆயின"

என்பர் சேனாவரையர்.

பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர். ஒரு பொருளை ஒருகால் வினை முதல் ஆக்கியும், ஒருகால் செயப்படு பொருள் ஆக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்துவது என்க என்பர் தெய்வச்சிலையார்.

இதனை ஒட்டியேதான் நன்னூலாரும்,

"ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கு மீறாய்ப் பொருள்
வேற்றுமை செய்வன எட்டே வேற்றுமை"

எனக் கூறினார்.

வேறுபடுத்துவது எதுவோ அதுவே வேற்றுமை எனப்படும் எனவும் விளக்கலாம். உருபு தான் சாரும் பொருளை வேறு படுத்தலின் வேற்றுமை எனப்படும்.

"ஐ எனப் பெயரிய வேற்றுமைக்கிளவி" (சொல். 71) என நன்னூலார் கூறியுள்ளதும் இதனைத் தெளிவுபடுத்தும்.

வேற்றுமை உருபு என்பது வேற்றுமை ஆகிய உருபு என விரியும். உருபுக்கு வேற்றுமை என்ற சிறப்புப் பெயர் உண்டு.

உருபும் இடைச்சொற்களும்: உருபுகள் தான் சாரும் சொற் களைப் பொருள் வேற்றுமை செய்வது போன்று சொற்களும் தாம் சாரும் சொற்களின் பொருள்களை வேறுபடுத்துகின்றன. எனவே இடைச்சொற்கள் எல்லாம் வேற்றுமை ஆகுமா? என்ற வினா எழுகிறது. ஆனால் தொல்காப்பியரே "இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே" என்கிறார் சேனாவரையரும், "இடைச் சொல் எல்லாம் பிறிதோர் சொல்லை, வேறுபடுக்குஞ் செயல்தான்" என்பர். என்றாலும் ஐ, ஒடு முதலிய உருபிடைச் சொற்களே வேற்றுமை என்ற பெயர் பெற்றன. அது எவ்வாறு எனில் நெய் என்பது பசு நெய்க்கே ஆனது போலாகும். ஐ முதலிய வேற்றுமைச் சொற்கள், தாம் பெயர்களிற் சார்ந்து வேறுபடுத்துதலும், சாராமல் மறைந்து நின்று வேறுபடுத்துதலும் என இரு தன்மை உடையன. ஆனால் மற்றைய இடைச் சொற்கள் சார்ந்து நின்று மட்டுமே பொருள் வேறுபடுத்துவன. அதனால்தான் வேற்றுமை என்ற பெயர் வேற்றுமை உருபு களுக்கே உரியதாயிற்று. பெயரை வேறுபடுத்தின உருபு வேற்றுமை ஆயிற்று.

வேற்றுமை கருத்து விளக்கங்கள்: மொழியியல் வல்லார் சொற்றொடரில் உள்ள பெயர்ச் சொல்லுக்கும், வினைச் சொல்லுக்கும் உள்ள தொடர்பை விளக்கி நிற்பதே வேற்றுமை எனக் கூறுவர்.

வேற்றுமைகளின் எண்ணிக்கையில் கருத்து வேற்றுமைகளுக்கு நிறைய இடம் உள்ளன. தொல்காப்பியர் முதல் நூற்பாவில் ஏழென்றும், அடுத்த நூற்பாவில் எட்டென்றும் கூறுவார். முன்னர் எழுத்ததிகாரப் புணரியலுள் ஆறு என்பர். அதாவது வேற்றுமை எட்டு. அவற்றுள் பெயரும், விளியும் தனித்தனவாக இல்லாமல் பெயர்ச் சொல் வடிவிலே அமைகின்றன. மற்றையன தனித்தனிச் சொற்கள். அதனால் வேற்றுமை உருபு ஆறு எனக் குறிப்பிட்டார் என்பர்.

"ஐ ஒடு கு இன் அது கண் என்னும்
அவ்வா றென்ப வேற்றுமை உருபே" (தொ. எ. 113)

இன்னொரு வகையில் பார்க்கும் போது நிலைவருமொழிகளாகச் சொற்கள் புணர்தற்குரிய வகையில் வேற்றுமை உருபுகள் ஆறெனப்பட்டன. தொடர் அமைப்பு முறையில் வைத்துப் பார்க்கும் போது வேற்றுமை எட்டாகிறது. முன்னோர் கொண்ட வழக்குப்படி வேற்றுமை ஏழாகக் கொள்ளப்பட்டது எனலாம்.

வேறொரு வகையாகப் பார்க்கும் போது வெளிப்படையாகத் தனிவடிவம் உடைய உருபுகள் ஆறு. விளியை நீக்கி எழுவா யுடன் ஏழு. "விளியோடு எட்டே" எனத்தேற்றேகாரம் கொடுத்துள்ளதிலிருந்து அவர் கொள்கை வேற்றுமை எட்டென்பது தெரியலாகிறது. பி.எஸ்.எஸ். சாஸ்திரியாரும் வேற்றுமை ஏழென்றது தொல்காப்பியர் கருத்தன்று. வேற்றுமை எட்டென்பதே தொல்காப்பியர் கருத்து என்பர்.

வடமொழியில் வேற்றுமை ஏழென்பது பரகஸ்பதியின் கருத்து. வேற்றுமை எட்டென்பது ஐந்திரம் கூறும் செய்தி. தொல்காப்பியர் ஐந்திரத்தைக் கருத்தில் கொண்டே என்ற கருத்தைக் கொண்டார் என்பர்.

வேற்றுமைகள் பல: திராவிட மொழிகளில் வேற்றுமைகள் எண்ணற்றனவாக உள்ளன. பெயர்ச் சொற்களின் பின்னர் இணைக்கப்படும் ஒவ்வொரு இணைப்பும் இம்மொழிகளில் பொதுவாக ஒரு புதிய வேற்றுமையைத் தோற்றுவிக்கின்றன. வடமொழி இலக்கண வல்லுனர்கள் அம்மொழியிலுள்ள வேற்றுமைகளை எட்டாக வரையறுத்து விளக்கிச் சென்றனர். இலத்தீன் மொழியின் இலக்கணத்தை ஒட்டி ஆங்கில மொழிக்கு இலக்கணம் அமைத்ததைப் போன்று, வடமொழியில் காணப் படும் வேற்றுமைப் பாகுபாட்டை பின்பற்றித் தமிழிலும் ஒப்புமையாக்கமாக வேற்றுமைகள் எட்டு என்று வரையறுத்து விட்டனர். அதனால்தான் தமிழில் பொருள் நோக்கியோ, உருபு நோக்கியோ வேற்றுமைகள் செம்மையுற அமையாமல் குறைபாடு உடையதாக அமைந்துள்ளது என்பர் கால்டுவெல். தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் காணப்படும் வேற்றுமைகள் எட்டிற்கு மேற்பட்டனவாய்க் கணக்கின்றி உள்ளன என்பர். மேலும் பெயரோடு சேரும் ஒவ்வோர் உருபும் ஒவ்வொரு வேற்றுமை ஆக வேண்டும் என்றும், உணர்த்தும் பொருளுக்

கேற்ப வேற்றுமைகளின் தொகை அமைய வேண்டும் என்றும் குறிப்பிடுவர்.

உருபுகள் குறியீடுகளே: சொற்கள் ஒன்றோடொன்று தொடரும் பொழுதே வேற்றுமைப் பொருள் உண்டாகிறது. அவ்வேற்றுமையை உருபுகள் என்ற குறியீட்டைக் கொண்டு தொல்காப்பியரும் நன்னூலாரும் வழங்கியுள்ளனர். உருபுகள் வெறும் அறிகுறிகள்தாம். 'மதிமுகம்' என்பதும் 'மதி போலும் முகம்' என்பதும் உவமப் பொருளில் பொருந்தும் தொடர் களாகும். 'போலும்' என்பது இல்லாவிட்டாலும் 'மதிமுகம்' என்பது உவமத் தொடரே ஆகும். அதே போல 'மரம் வெட்டினான்' என்ற தொடரில் 'ஐ' என்ற உருபு இல்லா விட்டாலும் அது வேற்றுமைப் பொருள் தொடரே ஆகும். எனவே வேற்றுமைப் பொருள் சொற்கள் தொடரும் தொடர் பால் உண்டாவதன்றி உருபுகளால் நேர்வது அன்று. உவம உருபு, உவமப் பொருளை அறியத் துணை செய்வது போல 'ஐ' என்பதும் வேற்றுமைப் பொருளை அறிய நிற்கும் அறிகுறியாகும்.

திராவிட மொழிகளில் முற்காலத்தில் வேற்றுமையை உணர்த்த முழுச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டு மென்றும், நாளடைவில் அச்சொற்கள் திரிந்து தனித்தியங்கும் ஆற்றலற்ற உருபன்களாக மாறி, பின்னர் உருபுகள் என்ற நிலையை அடைந்திருக்க வேண்டுமென்றும் கால்டுவெல் கூறுவர்.

வேற்றுமைகள் திராவிட மொழிகளில் இரண்டுவிதமாக அமைவதைக் காணலாம்.

1. பெயர் + சொல்லுரு
   (எ.கா.) மரத்தின் **மேல்**, கல் **கொண்டு**
2. பெயர் + உருபு
   (எ.கா.) **கல்லால், அவனது**

இவ்வாறு வேற்றுமையை உணர்த்தப் பயன்படுத்தப்படும் உருபுகள் அல்லாத சொற்களைச் சொல்லுருபுகள் என்பர். வேற்றுமை உருபுகளோடு இத்தகைய சொல்லுருபுகள் பல தமிழிலும் திராவிட மொழிகளிலும் உள்ளதால் திராவிட மொழிகளில் வேற்றுமை எட்டு அல்ல பல என்பது தெளிவாகிறது.

வேற்றுமைப் பகுப்பு பொருத்தமற்றது: எட்டு வேற்றுமை களில் முதல் வேற்றுமை வெறும் பெயராகவே உள்ளது. ஏனைய

வேற்றுமைகள் போன்று உருபுகள் இல்லாத இதனையும் வேற்றுமையுள் ஒன்றாகக் கணக்கிட்டு எண்ணுவது பொருத்த மாகத் தோன்றவில்லை. இதைப் போன்று எட்டாம் வேற்றுமை யாகிய விளிவேற்றுமையும் உருபற்றதாக அமைகிறது. ஆனால் விளிவேற்றுமையில் பெயர் விளி ஏற்கும் போது, அப் பெயர்ச் சொற்களில் ஓரளவு வடிவ மாற்றத்தையாவது காணமுடிகிறது. மூன்றாம் வேற்றுமையைப் பொறுத்தவரை, அவ்வேற்றுமை கருவி, கருத்தா, உடன்நிகழ்ச்சி போன்ற பல பொருள்களில் வருவதாக மரபிலக்கணம் கூறுகிறது. எனவே இவ்வேற்றுமையைக் கருவிப் பொருள் வேற்றுமை, உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை என்று இரண்டு தனி வேற்றுமைகளாகப் பிரிப்பதே பொருத்த முடையது.

டாக்டர் கால்டுவெல் நீங்கள் பொருள் உணர்த்துவதாகக் குறிப்பிடப்படும் ஐந்தாம் வேற்றுமையினையும், இடப் பொருள் உணர்த்தும் ஏழாம் வேற்றுமையினையும் தனித்தனி வேற்றுமை களாகக் கொள்ள வேண்டிய தேவையில்லை என்று கூறுவர்.

வேற்றுமை இலக்கணம் உணர்த்தும் முறை

ஒவ்வொரு வேற்றுமையும் இரண்டு நூற்பாக்களில் விளக்கப்படுகிறது. முதல் நூற்பா அவ்வவ் வேற்றுமையின் பொது இயல்பைக்கூற, இரண்டாம் நூற்பா அதன் பாகுபாடு களைக் கூறுகிறது. சில வேற்றுமைகளில் இவ்வரையறையி லிருந்து சற்று மாறுபட்டு, முதல் நூற்பாவில் அடங்காதன வற்றையும் சேர்த்து இரண்டாம் நூற்பாவில் காணமுடிகிறது. சான்றாக வினைமுதல், கருவி என்ற இரண்டுமே மூன்றாம் வேற்றுமைக்குக் கூறப்பட, ஒப்பு ஏது போன்றனவாகிய வேறு காரணங்களையும் இரண்டாவது நூற்பாவில் கூறியிருக்கிறார், எனவே வேற்றுமையைத் தொல்காப்பியர் அணுகிய முறையைப் பொதுப்படக் கூறுவது கடினமாகிறது.

ஞானவாசிட்டத்தில் சிவன் பற்றிய சிந்தனைகள்

சு. தங்கத்துரை
திரு. கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி
விருத்தாசலம்-606 001

ஞானவாசிட்டம் இராமனின் வைராக்கிய நிலையை மாற்றுவதற்காக விசுவாமித்திர வசிட்டர்களால் கூறப்பட்ட கருத்துகள் அடங்கிய 37 கதைகளைக் கொண்ட நூல் ஆகும். இதன் ஆசிரியர் வீரை. ஆளவந்தார். இவரது காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டு.

இந்த நூல் இராமாயணத்தோடு தொடர்புடையதாகும். இதில் அத்துவிதச்செய்திகள் நிறைந்து காணப்பட்டாலும் சிவன் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. அவற்றைத் தொகுத்து சிவன் காட்சி பெற்றவர்கள், பெற்ற காரணம், அதன் மூலம் அறியலாகும் செய்திகள் எண்வகை செய்தி இந்தக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

சிவன் காட்சி பெற்றவர்கள்: அயிந்தவர் கதையில் இந்து என்ற அந்தணனும், பகீரதன் கதையில் பகீரதனும், தேவபூசை கதையில் வசிட்டரும், விரதசூயை கதையின் பிருங்கீசரும் சிவனின் காட்சி பெற்றவர்களாவார்கள்.

காரணம்; இந்து என்ற அந்தணன் தனக்குப் பல ஆண்டு களாய் குழந்தை இல்லாததினால் கைலாய மலையில் தன் மனைவியுடன் தவம் இருந்து சிவன் காட்சிபெற்று குழந்தை வரமும் பெற்றான்.

"தவமேற்கொண்டு மாதவம்போற் சலமேயருந்தி
வருந்திடுநாள்
சிவன் உள்மகிழ்ந்து வேண்டியதன் செப்பு மென்னச்
சிரம்பணிந்து
கவலைதீர வீரைவர் கலைதேர் புதல்வர் வேண்டுமென
வனங்களிப் பவிவர்களிப்போடு அகன்றார் புதல்வர்
அவதரித்தார்" (அயித்.6)

பகீரதன் தன் முதாதையர்களுக்கு வீடுபேறு கொடுக்க வேண்டும் என்பதற்காக, சிவனை வேண்டி தவம் இருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்து அவர்களது உடலைப் புதைத்து வைத்திருந்த இடத்தில் செல்லச் செய்தான்.

தேவபூசைகதையில் வசிட்டர் கைலாய மலையில் தவம் இருந்த இடத்திற்கே சிவன் உமை, நந்தியோடு வந்து வசிட்டவரின், தெய்வம் யாது? தேவபூசையாது? போன்ற கேள்விகளுக்குப் பதில் கூறியதாக அமைக்கப்பட்டுள்ளது.

பிருங்கீசர் என்ற முனிவர் கைலாய மலையில் வீற்றிருக்கும் சிவபெருமானிடம் சென்று 'இந்த உலகில் இளைப்பாறித் திரிய எப்போதும் அச்சம் இல்லாதிருக்கின்ற வழியாது' எனக் கேட்டார். அதற்கு சிவனே பதில் கூறுவதாக இந்த விரதசூயை கதை அமைந்துள்ளது.

அறியலாகும் செய்திகள்: இந்துவிடமும் பகீரதனிடமும் சிவன் உரையாடல் நடந்ததாக இல்லை. வசிட்டர், பிருங்கீசர் இவர்களுடன் சிவன் உரையாடிய செய்திகளைத் தொகுத்து வகைசெய்து விளக்கப்பட்டுள்ளது.

பிருங்கீசருக்கு சிவன், 'சந்தேகங்களைக் கொடுத்து, இறைவனை அடையவேண்டும் என்ற எண்ணத்தோடு இருந்தால் மாகத்தன், மாபோகி, மாதியாகி என்ற நிலையை அடையலாம்' என்றார். அவற்றின் விளக்கம் கேட்க சிவன் கீழ்வரும் செய்திகளைக் கூறுகிறார்.

மாகத்தன்: விருப்பும் வெறுப்பும், சுகதுக்கமும், தரும அதருமமாகிய இவற்றில் தவறாத பலமும் அபலமுமாகிய இச்சை கொள்பவன். பிறப்பிலும் இறப்பிலும் மனம் ஒத்தவனே மாகத்தன் ஆவான் (விரத.10).

மாபோகி: உப்பின் தன்மையைப் போல நன்மை தீமை இரண்டிலும் சமமாகச் சேர்ந்திருப்பவன். கோபத்தினால் ஒன்றையும் தள்ளாதவனாய், விரும்பாதவனாய் இயல்பாக வந்ததைப் புசிப்பவனே மாபோகி ஆவான் (விரத,12,13).

மாதியாகி: தருமஅதருமம், இன்பதுன்பம், பிறப்புஇறப்பு ஆகிய அனைத்தையும் சேரத்தள்ளுகின்றவனே மாதியகி, பார்க்கின்ற அனைத்தையும் களங்கமில்லாமல் விட்டவனே மாதியாகி (விரத. 14, 15).

இந்தச்செய்தி மட்டுமே விரதசூயைகதையில் விளக்கப் பட்டுள்ளது. தேவபூசைகதையில்வசிட்டர் கேட்ட கேள்விகளுக்குச் சிவன் கூறிய விளக்கங்கள் கீழ்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது.

சிவனின் பெருமை: சிவபெருமான் எங்கும் நிறைந்திருக்கக் கூடியவன். எனவே அவனை வழிபட வேண்டும் இந்தக்கருத்தைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

''நயனமூக்குசெவி தொகு நாக்குமனமாஞ் சக்திகளால்
இயல்பில் எங்கும் விடயங்கள் அருந்திய எண்ணங்களுக்கு
எல்லாம்
அயலதாகும் எவ்விடதிதும் பரமசிவம் என்றகத்து எண்ணி
உயர் தெய்வத்தைவிதிநெறியே ஓங்குபூசை செயவேண்டும்''
(தேவ.35)

சிவனைச் சிந்திக்கும் சிந்தனையானது ஞானாமிர்தத்திற்கு ஓர் நிறைகுடமாகவும் மோட்சத்திற்கு வழிவகுக்கும் கருவி யாகவும் உள்ளது. சிவனைச் சிந்திக்காதவர்கள் துன்பத்தால் மிதிபடுவர் (தேவ.18). விண்ணவர்கோனாகிய சிவனின் அருளைப் பெற்றவர்களுக்கு அச்சங்கம் அருகில் வராது. மேலும் பெற வேண்டியது எதுவுமில்லை (தேவ.16)

எது தெய்வம்; சிவனின் பெருமையைப் பலவாறாகப் பேசிவந்தவர் முரண்பட்ட சில செய்திகளைப் பின் கூறியிருப்பது ஆய்வுக்குரிய ஒன்றாக உள்ளது. எது தெய்வம் என்ற கேள்வியை எழுப்பியபோது, ''உணர்வே தெய்வம்'' என்று வலியுறுத்து வதாகக் குறிப்பிடுகிறார்.

... ...''தெய்வம் தான் யாதென்றோதில்
கேவலமே அரியல்ல அரனல்ல பூத உடல் கிடைத்ததல்ல
ஓவுமனமன்று அடியுமுடிவு மிலாச் செயப்படா வுணர்வே
தெய்வம்'' (தே.20,2-4)

மேலும் அச்சம்அற செய்கைஅற அடிமுடியவற்றுள் உணர்வே பரம போதமாதலினால் அதுவே தெய்வம் அதுவே அர்ச்சித்தற் குரியதாகும் (தேவ-21) என்றும், பராபரமற்ற சிறக்களம் (ஞானகயாம்) எவரிடத்தும் நிறைந்து இருக்கும் வலிதான பழமையாகிய கற்பகங்கள் அனைத்திலும் கெடாததனால் உணர்வே தெய்வம் (தேவ.22) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இறைவன்சுயஞ்சோதி (தேவ.34.4) எனக் குறிப்பிடுகிறார். சோதி வடிவில் காட்சி கொடுத்தவன் சிவன். அடுத்தபாடலில்

(35) பரமசிவனை வழிபடவேண்டும் என்கிறார். இன்னொரு இடத்தில் (தேவ.24) நீங்குவதற்கு அரிய சத்தாமாத்திரமே உண்மையான தெய்வம் எனக் குறிப்பிட்டுள்ளார். உரையாசிரியர் அருணாசல சுவாமிகள் இப்படிப்பட்ட சத்திகளை உடையவன் சத்தன் என்று குறிப்பிடுகிறார். சத்தி என்பது சிவதத்துவம் ஐந்தின் ஒன்று. சத்தியை உடையவன் சத்தன். சத்தன் என்பதற்கு சிவன், ஆற்றலுடையவன், அருவத்திருமேனி உடையவன் எனப் பொருள் கொள்வர் (கழகத்தமிழ் அகராதி, ப.421). எனவே சத்தன் எனக் குறிப்பிடப்படுவது சிவனே ஆகும்.

பூசை: பூசைப்பற்றி குறிப்பிடவந்த ஆசிரியர் 'வினைத்தேக உடலை நான் என்னும் அது விடுதலே மிகுந்த பூசை' (தேவ.30.2) என்கிறார். அறிவு சம்பாவனை, சந்தோசம் என்கின்ற மலர் களால் அர்ச்சிப்பதே பெரிய பூசை. குறிவடிவில் செய்யும் பூசை பூசை அல்ல (தேவ.23).

இழிவு உயர்வு பார்வையில் பட்டால் வெறுக்காமல் தேசம், காலம், தொழில் ஆகியவை சேருகின்ற சுகதுக்கம், குற்றம் பொருந்திய வேற்றுமைகெட ஆராதிக்கவேண்டும், எல்லாம் பரமம் எனத் துணிந்து பூசை செய்யவேண்டும் (வேத.51).

கிடைக்காத ஒரு பொருளைப்பெற வேண்டுமென்று அதற்காக இரங்காமல், ஆசையினால் தவறான வழியில் செல்லாமல் அறிவுப்பூர்வமாகப் பூசித்தலே முறையான பூசை யாகும் (தேவ 49). கிடைக்காதப் பொருளைப் பெறவேண்டும் என்பதற்காக இரக்காமல்ஆசையில் தடங்கல் இல்லாமல் அறிவால் வழிபட்டு பெறுதல் ஒழுக்கமாகும். அன்னபானத்தால், முறை யாயுள்ள செல்வத்தால், ஆசனத்தால், வாகனங்களால் சென்று அடைகின்ற சுகத்தால் அறிந்து பூசை செய்யவேண்டும். அச்சப்படுகின்ற இன்பதுன்பம் பொருந்துகின்ற அனைத்தையும் உணர்வடிவாய், அழிவற்ற கடவுள் பூசை என எல்லோரும் சிந்தித்துப் பூசை செய்யவேண்டும் (தேவ.50).

சதாகாலமும் துன்பம் இல்லாமல் மகிழ்ந்து ஒன்றாகி தனது ஞானத்தால் பூசை செய்யவேண்டும் (தே.36).

சதாகாலமும் உடம்பிலிருக்கின்ற தெய்வமான இந்தப் பரமசிவத்தை மறவாமல் வருபவனும் செல்வவிடயங்களை அனுபவிப்பவனும் தியானித்து தவறாது ஞானபூசனையால் சிவலிங்கத்தைப் பூசை செய்யவேண்டும் (தேவ. 41.42).

இறந்த உணவை உண்ணக்கூடாது. அதுவே உணர்வின் பூசையாகும் (தேவ.50).

இவ்வாறு குறிப்பிட்ட பூசையை அகப்பூசை, புறப்பூசை என இருவகையாகக் குறிப்பிடலாம்.

அகப்பூசை

1. எப்பொழுதும் உடலில் உறைந்திருக்கின்ற தெய்வத்தை ஞான அர்ச்சனையினால் ஆராதனை செய்தல்.

2. மனம் முதலிய யாவும் அபினசத்தியாயுள்ள சத்தியை ஆராதித்தல்.

3 எல்லாவற்றையும் உணர்வாக நினைத்துப் பூசை செய்தல்

4. பலநூற் பொருட்களினாலும் குருவசனத்தினாலும் பெறுதற்கரிய தனது ஞானத்தினால் தானே உணர்ந்து பூசை செய்தல் (தேவ.41-59).

5. உணர்வே தெய்வம் என பூசை செய்தல்.

புறப்பூசை:

1. விக்கிரக வழிபாடு கூடாது.

2. வினை வடிவான உடலை, நான் என்கின்றதை நீக்குதலே மேலான ஆராதனை.

முடிவு

1. சிவவழிபாடே சிறந்தது.
2. சிவலிங்க வழிபாடு உருவவழிபாட்டில் சிறந்தது.
3. அகப்பூசை, புறப்பூசை செய்யவேண்டும்.
4. பக்குவப்பட்டவர்களுக்கே அறிவுரை கூறவேண்டும்.
5. பக்குவ நிலைக்கு ஏற்ப இறைவன் காட்சி கிடைக்கும்.
6. தவத்திற்கு என்றும் வலிமை உண்டு.
7. பூசைக்குத் தக்க பலன் கிடைக்கும்.
8. போகத்தை மாற்றவேண்டும்.
9. இராமனுக்கு வசிட்டர், சிவன் நேரடியாக வந்து ஐயங்களை நீக்கியதாகக் கூறிய இந்த உத்தி ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்துகிறது எனலாம்.

புதுமைப்பித்தனின் துரோகம் - ஒரு மதிப்பீடு

பி. தட்சணாமூர்த்தி
ம.தி.தா. இந்து கல்லூரி
திருநெல்வேலி 627 010

தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் நெல்லை நாட்டாருள் குறிப்பிடத்தக்கவர் புதுமைப்பித்தன். தமது மாவட்ட எழுத்தாளர் புதுமைப்பித்தனின் எழுத்துக்களில் உள்ளத்தைப் பறிகொடுத்தவர். புனை கதை எழுத்தாளர் ஆதவன், அங்கதச் சுவைபடப் புதுமைப்பித்தனைத் தமது கதைக்குத் தலைப்பாக்கி யுள்ளார் ஆதவன். 1979ல் கணையாழியில் வெளிவந்த கதையே புதுமைப்பித்தனின் துரோகம். கல்கி, கணையாழி, தீபம், தினமணிக்கதிர், வாசகன் இதழ்களில் ஆதவன் எழுதிய கதை களின் தொகுப்பு நூலுக்குப் பெயரும் புதுமைப்பித்தனின் துரோகம் என்பதாகும்.

கதைகளின் தொகுப்பு நூலான இச்சிறுகதைத் தொகுப்பில் மூன்றாவது கதையாக விளங்குவது புதுமைப்பித்தனின் துரோகம் கட்டுரையும் கதையாகலாம் என்ற இலக்கணத்திற்கு ஏற்ற சிறுகதை புதுமைப்பித்தனின் துரோகம்.

இக்கதையில் ராம், வேணு என்ற இருபாத்திரங்கள் இடம் பெறுகின்றனர். தொழிலதிபர் ராமும், எழுத்தாளர் வேணுவும் நண்பர்கள். தில்லிப் பெருநகரத்தில் வாழும் இவர்கள் சந்தித்து உரையாடுவதன் மூலம் கதை நகர்த்தப்படுகிறது. ஐந்து நட்சத்திர உணவு விடுதியில் சிற்றுண்டி அருந்திக்கொண்டு வேணுவின் படைப்பு குறித்து ராம் புகழ்ந்து பேசுகிறான். ஓர் எழுத்தாளனுக்கு அங்கீகாரம் என்பது அப்படைப்பைப் படித்துப் பிறர் பாராட்டுவதன் மூலமே அமைகிறது. ஓர் எழுத்தாளனும்

அவனது மச்சினியும் பற்றி வேணு குறுநாவல் எழுதி வருவதாகக் குறிப்பிட்டதும் அது சொந்த வாழ்வோ எனவும் கேட்டதும் வேணு மறுப்பதும் முதலில் இடம் பெறுகிறது. உணவு விடுதியில் பரிமாறப்பட்ட இட்டிலி சாம்பாரின் சுவை திருநெல்வேலி தென்காசிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, புதுமைப்பித்தன் ஏன் இது குறித்து எழுதவில்லை அவருக்கு அல்வா மட்டும்தான் பிடித்ததோ என நண்பர்கள் பேசி இறுதியில் புதுமைப்பித்தனின் கதைகளை விமர்சனம் செய்யத் தொடங்குகிறார்கள்.

மனைவி என்ற பாத்திரத்திற்கும் புதுமைப்பித்தன் சிறப்பு அளிக்கவில்லை. காஞ்சனை ஒரு மோகினிப் பிசாசு என்றால் செல்லம்மாள் ஒரு சீக்காளிப் பெண். குழந்தைப் பாத்திரத்திற்கே சிறப்பளித்தார் அவருக்கே ஒரு பெண் குழந்தைதானே உண்டு சிற்றன்னை அவதாரம் அன்று இரவு உபதேசம், கடவுளும் கந்தசாமி பிள்ளையும் போன்றகதைகளில் தந்தைப் பாத்திரங்கள் துறவியாகப் போகும் நிலை. கடவுளும் கந்தசாமி பிள்ளையும் நையாண்டியும் தத்துவ வீச்சும் கொண்ட கதை. புராண நிகழ்ச்சி சாபவிமோசன இலக்கிய ஊற்றாய் மாறியுள்ளது என்று ராம் புதுமைப்பித்தனை அலசினான். ராம், வேணு தானும் ஒப்புக்கு ஓர் எழுத்தாளன் கதையை இரண்டு உலகங்கள் என்ற தலைப்பில் அமைந்ததை விமர்சனம் செய்தான். மனைவியுடன் எதையும் பகிர்ந்து கொள்ளாத வறட்டு அறிவு ஜீவி எழுத்தாளனான கணவன் பற்றிய கதை இது. ராம் இதே கருவைக்கொண்ட நினைவுப் பாதை எனும் கதையை விவரித்தான். இலக்கியமும் இலக்கிய ரசனையும் எழுத்தாளராகிய தனக்கு மட்டும்தான் என எண்ணிய வேணுவுக்கு ராமின் விமர்சனம் ஒரு சாட்டையாக விழுந்தது.

நடுத்தர வர்க்கத்தினரின் இல்லற அவலத்தை நினைவுப் பாதை சித்திரிக்கிறது என்றும் அது ராம் போன்ற பணக்கார வர்க்கத்தினருக்கு உற்சாகமான உலுக்கலாக இருக்கிறது என்றும் வேணு எரிச்சலுடன் கூறினான். புதுமைப்பித்தனுடைய தத்துவ விசாரத்தின் கூற்று நிறைவற்ற திருமண உறவாக இருக்குமோ என்று வேணு கூறியதை ராம் மறுத்தான். இரு நண்பர்களின் திறனாய்வும் வேறு வேறு கோணத்தில் அமைந்தது. புதுமைப்பித்தனின் அடி மனத்தில் உள்ளவையே கதைகளில் வெளிப்படுவதாக ராம் கூறி அதற்குச் சாட்சியாக

கே.என்.எஸ் என்ற புதுமைப்பித்தனின் நண்பரையும் துணைக் கொள்கிறான். கதையின் உள்ளீட்டை எழுத்தாளன் மட்டுமே அறிய முடியும் என்று இருமாந்திருந்த வேணுவுக்கு ராமின் இலக்கிய ரசனை சரியான பாடம் கற்பித்துவிட்டது.

வேணு வீட்டிற்கு வருகிறான், ராமும் அவன் மனைவியும் புதுமைப்பித்தன் கதைகளைப் படிப்பார் என்ற சிந்தனையில் ஆழ்கிறான். வேணுவின் மனைவி ஆசுவாசப்படுத்துகிறாள். மனைவியின் உச்சரிப்பு வேணுவுக்கு எரிச்சலாக இருக்கிறது. தனக்குத்தானே வெட்கப்பட்டுக் கொண்டான். தானும் ஒரு நடுத்தர வர்க்க குடும்பக் கணவன் தானே என்ற நினைப்பு. புதுமைப்பித்தனின் கதை நினைவுக்கு வருகிறது. அலுவலகத்தில் ஒரு குமஸ்தா வீட்டில் சர்வாதிகாரியான கணவன் பற்றிய கதை. நடுத்தரவர்க்க குடும்பக் கணவனைப் பாத்திரமாகக் கொண்டு கிண்டல் கேலி என்ன வேண்டிகிடக்கிறது.

ராம் போன்றவர்களின் மனோரஞ்சகத்துக்காகத் தன் வர்க்கத்தினரைக் கோமாளியாக ஆக்குவது துரோகி" என்று வேணு கூறுவதில் ஓர் அங்கத சுவை உள்ளது. வாசகனைத் திருப்திபடுத்தக் கதை எழுதினால் படைப்பாளியைப் புரட்டி எடுத்துவிடுவார். எழுத்தாளனின் உள்வாழ்க்கையெல்லாம் வெளிவந்து விடும். கதை படிப்போர் அவரவர் கோணத்தில் விமர்சனம் செய்யும் போது ஒரு காலத்தில் முதல் தர எழுத் தாளராக இருந்தவர் மற்றொரு காலத்தில் மூன்றாம்தர எழுத்தாளராகத் தூக்கி எரியப்பட்டுவிடுவர். கதை ஆசிரியரின் நோக்கத்தை அறிய வேண்டும் எழுத்தாளனின் உள்வாழ்க்கையை ஆராயக்கூடாது. எழுத்தாளனும் சமுதாயத்தில் ஓர் அங்கமே. அவன் வாழ்விற்கும் பொருளே ஆதாரம். புதுமைப்பித்தன் திரைப்படத்திற்குக் கதை எழுதினார். எழுத்தாளனின் எழுத்துக் களைக் கொண்டு அவனது சொந்த வாழ்க்கையை விமர்சிக்கக் கூடாது என்ற கருத்தை வேணு என்ற பாத்திரத்தின் மூலம் ஆதவன் உணர்த்துகிறார், வாசகனும் ஒரு திறனாய்வாளன் என்ற முறையில் நடுத்தரவர்க்க எழுத்தாளனை ஏளனம் செய்வதற்குப் புதுமைப்பித்தன் வழி வகுத்துத் தந்துவிட்டாரே என்ற ஆதங்கமே ஆதவன் எழுதிய இக்கதையில் வெளிப்படு கிறது. அந்த ஆதங்கமே எரிச்சலாக மாறி துரோகி என வசைபாட நினைக்கிறது, ஆசிரியரின் மனம், அதன் விளைவே இக்கதை.

கதை ஆசிரியர் வேணு என்ற பாத்திரமாக மாறி விடுகிறார். உரையாடலைக் கதை உத்தியாக்குகிறார். நாடறிந்த கதை மன்னனைத் தலைப்பில் அமைக்கிறார். தலைப்பே கதைப் பிடிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது. கதையின் முதல் வரியைத் தொடங்கியிருப்பது மூலமாகவும் ஆதவன் சிறுகதை எழுத்தாளன் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரஞ்சியர் காலத்துத் தமிழ் இதழ்கள்

சு. தமிழ்வேலு
அ. வ. அ. கல்லூரி
மயிலாடுதுறை – 609 305

அறிவிப்பது அறிவுறுத்துவது அறிமுகப்படுத்துவது என்ற முத்தரப்புச் செயல்களைச் செய்யக்கூடியன இதழ்கள். இத்தகைய இதழ்களின் தொடக்கம் ஐரோப்பியர்களின் தொடர்பினால் இந்தியாவிற்கு ஏற்பட்டதாகும். இக்கட்டுரையில் ஐரோப்பியர்களில் ஒருவரான பிரஞ்சியர்களின் தொடர்பினால் புதுச்சேரியில் இதழ்கள் எங்ஙனம் உருப்பெற்றன. வளர்ச்சி பெற்றன என்பன விளக்கப் பெறுகின்றன.

இதழ்களை நாளிதழ், வாரஇதழ், மாதஇதழ் என்று கால முறைப்படியும் உள்ளடக்கத்தையொட்டி சிறுவர் இதழ், மகளிர் இதழ், அரசியல் இதழ், சமூக இதழ், பல்சுவை இதழ் என்றும் பாகுபடுத்துவர். புதுச்சேரியிலிருந்து வெளிவந்த இதழ்களில் வார இதழ்களே மிகுதி. ஒன்றிரண்டு மட்டும் மாத இதழ்களாகும் பாடுபொருள் அடிப்படையில் பெரும்பான்மை பல்சுவை இதழ்களே ஆகும். சிறுபான்மையே பிறவகை இதழ்களாக அமைந்துள்ளன.

புதுவையில் இதழ்கள்: புதுச்சேரியில் முதல் இதழ் 1823-ஆம் ஆண்டு வெளி வந்துள்ளது. பிரஞ்சு-இந்திய அரசு நிர்வாக ஆவணம் எனும் அவ்விதழ் அரசு இதழாகத் திகழ்கிறது என்பதைச் சுட்டுகினறது. இதனைத் தொடர்ந்து 1954-ஆம் ஆண்டு வரை 58 இதழ்கள் வந்துள்ளன.

ஆண்டுகளைப் பத்துப்பத்தாகப் பகுத்துக் கொண்டு பார்க்கும் பொழுது 1821 — 30 — இல் ஒன்று
1831 — 40 — இரண்டு
1841 — 50 — இரண்டு
1851 — 60 — —

1861 — 70	—	—
1871 — 80		ஒன்று
1881 — 90	—	பதினொன்று
1891 — 1900	—	பனிரெண்டு
1901 — 1910	—	ஒன்பது
1911 — 1920	—	மூன்று
1921 — 1930	—	இரண்டு
1931 — 1940	—	ஏழு
1941 — 1650	—	ஆறு
1951 — 1960	—	ஒன்று

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் முதல் பகுதியிலும் தான் மிகுதியான இதழ்கள் வெளிவந்தன.

இதழ்களின் பெயர்கள்: தொடக்கக் காலத் தமிழ் இதழ்களின் பெயர்கள் பெரும்பாலும் பிரஞ்சு சொல் கலந்த பெயர்களாகவே அமைந்திருந்தன. (மொனிதேர் ஒப்பிசியேல்) அதன் பின் வடசொல் கலந்த பெயர்களாக அமைந்திருந்தன (சீறிசுகுண ரஞ்சனை) புதுவையில் பாரதியின் வருகைக்குப் பின் வெளிவந்த இதழ்களில் பெரும்பாலும் தமிழ்ச்சொற்களே பெயர்களில் ஆளுகை செலுத்தின (தமிழ் மகவு)

உள்ளடக்கம்: புதுவை இதழ்களில் பெரும்பாலானவை சென்னைச் சார்ந்த செய்தியாளர்களை மையமிட்டே நடந்து வந்தன. ஆகையால் பொதுச் செய்திகள் அனைத்தும் எளிதில் கிடைத்தன. இதழ்களின் உள்ளடக்கம் குடும்பம், சமூகம், அரசியல், இலக்கியம், மருத்துவம், மொழிபெயர்ப்பு என்னும் பகுதிகளைக் கொண்டு அமைந்திருந்தது.

பொதுவாகப் புதுச்சேரி இதழ்கள் அரசியலுக்கே மிகுதியான பக்கங்களை ஒதுக்கின. சிறுபான்மை பக்கங்களையே பிற பொருட்களுக்கு ஒதுக்கின. தமிழகத்தின் முன்னணிப் புலவர்கள் அனைவரது கவிதைகளுமே அவ்விதழ்களில் வெளிவந்தன. எனினும் கவிதையைக் காட்டிலும் கட்டுரைகளே மிகுதியாக வெளிவந்தன. முழுக்கக் கவிதையிலேயே வெளிவந்த இதழ் சுப்பிரமணிய பாரதியார் கவிதா மண்டலம் என்னும் இதழாகும்.

தேசசேவகன், புதுவை முரசு, குயில் போன்ற இதழ்கள் பிரஞ்சுக் கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றை வெளியிட்டன. இதழ்கள் நடத்துவதற்கு விளம்பரங்கள் இன்று துணைபுரிவது போன்று அன்றும் துணைபுரிந்தன. பிரஞ்சுநாட்டுப் பொருட்கள்,

மதுவகைகள், பாவேந்தர் பாரதிதாசன் நூல்கள் பற்றியன குறித்த விளம்பரங்கள் மிகுதியாக வெளிவந்தன.

அரசின் அறிவிப்புகள் இலவசமாக வெளியிடப்பட வேண்டும். என்ற நிபந்தனையுடன் இதழ்கள் தொடங்க அனுமதி அளிக்கப் பெற்றன. விளம்பரக் கட்டணம் இவ்வளவுதான் வாங்கப் பெற வேண்டும் என்று 1849-ஆம் ஆண்டில் நீதிபதியால் அறிக்கை ஒன்று வெளியிடப் பெற்றது.

ஆங்கிலேய இந்தியப் பகுதியில் விடுதலை உணர்வு எழுந்த அதே காலக்கட்டத்தில் பிரஞ்சு இந்தியப்பகுதியில் விடுதலை வேண்டுவதா? பிரஞ்சியரின் ஆளுகையிலேயே தொடர்ந்து இருத்தல் வேண்டுமா? என்ற இருவேறு சிந்தனையுடன் அரசியல் தலைவர்கள் இருந்தனர். அது தொடர்பான விவாதங்களும் ஆதரவு எதிர்வு பிரச்சாரங்களுமே இதழ்களுக்கு முதன்மையான உள்ளடக்கப் பொருள்களாக அமைந்தன.

1881-ஆம் ஆண்டு புதுச்சேரி வாக்காளர்களை ஐரோப்பியர், துறந்தவர், துறவாதவர் என்று பகுக்கப்பெற்று ஒரு சட்டத்தை உண்டாக்கினர். இதனை எதிர்த்தும் ஆதரித்தும் இதழ்கள் எழுதின.

அரசினை எதிர்த்தும் அரசியல் வாதிகள் செய்யும் தவறு களைச் சுட்டிக்காட்டியும் இதழ்கள் வெளிவந்தன. அவற்றுள் புதுவை முன்னேற்றம் என்னும் இதழின் வெளியீட்டாளர் இரா. இராசேந்திரன் தவறு செய்த சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற உறுபபினர்கள் ஆகியோர்களைக் கண்டித்து எழுதினார். ஆகையால், இவருக்கு ரூ 1000 பிராங்கு தண்டமாக நீதிமன்றம் விதித்தது.

இவ்வாறு அரசியல் தொடர்பான பல செய்திகள் வெளி வந்தன.

இதழ்கள் நின்று போயினமைக்குக் காரணங்கள்: புதுச்சேரி யிலிருந்து வெளிவந்த இதழ்களில் பெரும்பாலனவை ஓரிரு ஆண்டு களில் நின்று போயினவையாக இருக்கின்றன. அதற்கான காரணத்தை நோக்கும்பொழுது ஒரு சில கருத்துகள் புலனாகின்றன.

புதுச்சேரியிலிருந்து வெளிவந்த இதழ்கள் எதுவும் தனித்த பொருள் பற்றி வரவில்லை. அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் எனக் கலந்து வந்தன. ஆனால் அதே நேரத்தில் பல்சுவை இதழாகவோ பொழுதுபோக்கு இதழாகவோ அமையவில்லை.

தனித்த பொருளுடைய இதழ்களாக இல்லாமல் பல்சுவை இதழ்களாக இருந்திருப்பின் நல்லதொரு விற்பனைத் தளத்தினைப் பெற்றிருக்கும்.

அரசியல் செய்திகள் மிகுதியாக எழுதப்பெறும் இதழ்களே எண்ணிக்கையில் மிகுதியாக இருந்தன. அரசியல் செய்திகள் காலத்துக்குத் தக்கபடி மாறக்கூடியன. அதனால் ஒரே நிலையாக நடத்த முடியாமல் போயிருக்கக் கூடும்.

புதுச்சேரியிலிருந்து எவ்வளவு இதழ்கள் வெளிவந்தனவோ, அதைவிட அதிகமாகத் தமிழகத்திலிருந்து இதழ்கள் வெளிவந்தன. அதோடு எண்ணிக்கை அதிகமான அளவில் வந்தமையால் தமிழக இதழ்களுக்கிடையிலேயே போட்டி மிகுதியாக இருந்தது. அவற்றுடன் புதுச்சேரி இதழ்கள் போட்டியிட முடியவில்லை. அதோடு புதுச்சேரி இதழ்களுக்கு இடையிலேயும் போட்டி ஏற்படவில்லை. இதனால் இதழ்களின் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டது எனச் சொல்லாம்.

புதுச்சேரிப் பகுதி என்பது எல்லாத் தளங்களிலும் தமிழகத்தைச் சார்ந்தே நிற்கக் கூடியது. புதுச்சேரிக்கெனத் தனித்த எண்ணப்போக்கு, சித்தனைப் போக்கு என்பன இருக்கவில்லை ஆகையால் தமிழகத்திலிருந்து வரும் இதழ்களை அப்படியே பிரதி செய்யும் விதமாகவே புதுச்சேரி இதழ்கள் வெளிவந்தன. ஆகையால் இவற்றுக்கென தனித்த இடம் இல்லாமல் போய்விட்டது.

இத்தகு காரணங்களினால் புதுச்சேரியிலிருந்து வெளிவந்த எல்லா இதழ்களும் இன்று வெளிவரவில்லை.

அச்சகங்கள்: தொடக்கக் காலத்தில் இதழ் தொடங்க வேண்டுமென்றால் முதலில் அச்சகம் ஆரம்பிக்கும் எண்ணம் இருந்தது. அதன்படியே புதுச்சேரியில் தொடங்கிய இதழ்களுக்கும் அச்சகங்கள் இருந்தன.

1745-இல் இலபூர்தொனே சென்னையைக் கைப்பற்றிய பொழுது அச்சியந்திரம் ஒன்றினைப் புதுச்சேரிக்குக் கொணர்ந்தார். முதல் அச்சகம் 1761-ல் தொடங்கப்பெற்றது. 1816-இல் அரசு அச்சகம் தொடங்கப்பெற்றது. 1838-இல் தமிழ் எழுத்துகள் அச்சு வார்க்கப்பெற்றன. 1875-க்குள்ளாகப் புதுச்சேரியில் 10-க்கும் மேற்பட்ட அச்சகங்கள் உண்டாயின.

அச்சகம் தொடர்பானதும் அச்சிடுவது குறித்தும் பல சட்டங்கள் அவ்வப்போது வெளியிட்டபோதும் 1918-இல் தான் முறையான சட்டங்கள் வெளிவந்தன.

முடிவாக இக்காலக் கட்டத்தில் இதழ்ப்பணியைப் புதுச் சேரியில் செவ்வனே நிகழ்த்த மக்களின் ஆர்வம் உறுதுணையாக இல்லாது போயினும் முயற்சிகள் எடுக்கத் தயங்காமல் இதழ்கள் நடத்திய வண்ணம் இருந்தனர்.

இதழ்களின். பெயர்ப்பட்டியல் (ஆண்டு வரிசையில்)

பிரஞ்சு-இந்திய அரசு ஆவணம் 1823; புதுவை நடுநிலை 1838; இந்திய ஞாயிறு 1838; மொனிதேர் அபீசியல் 1850; மொனிதேர் ஒப்பிசியேல் 1950; காரைக்கால் முன்னேற்றம் 1879; நாகரிக வர்த்தமானி 1880; சத்தியாபிமானி 1882; புதுவை நாகரிக வர்த்தமானி 1882; பிரஞ்சு இந்தியா 1883; புதுவை முன்னேற்றம் 1883; நடுநிலை 1883; புதுவை நீதியபிமானி 1884; புரோகிறோ 1885; புதுவை இந்துநேசன் 1887; விகட பிரதாபன் 1888; இந்திய விகடவிநோதகன் 1888; புதுவைக் குடியரசு 1891; பொந்திச்சேரியன் 1892; சிறீ சுகுண ரஞ்சனை 1892; சுவேத பத்மாஜன 1893; திராவிட மந்திரி 1893; மெய்ஞான பானு 1894; வித்யா விநோதன் 1895; புதுவை இந்து 1895; செங்கதிரோன் 1896; சுதந்திரன் 1897; வித்யாபிவிருத்தினி 1897; தியாகி 1893; புதுவை விநோதன் 1900; புதுவை நேசன் 1900; புதுவை மித்திரன் 1900; சுதேச வர்த்தமானி 1904; இந்தியா 1908; கர்மயோகி 1909; விசயா 1909; சூர்யோதயம் 1909; ஞானரதம் 1909; தருமம் 1909; கற்பகம் 1913; கலைமகள் 1913; தமிழ் மகவு 1918; தேசச்சேவகன் 1922; குடியரசு 1923; தாய்நாடு 1930; பொன்மலர் 1932; ரம்ஜான் மாத நோம்பின் பயன் 1937; சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் 1934; சுதந்திரம் 1934; புதுவை முரசு 1936; வெண்ணிலா 1945; தமிழ்ச்செல்வி 1945; முல்லை 1946; குயில் 1948; பாட்டி 1948; பித்தன் 1948; ஜல்ஜல் 1953; ஆசிரியன் 1953.

சமற்கிருதமயமாக்கம்

தமிழண்ணல்
மதுரை

தொடக்கத்தில் தமிழே அரசோச்சும் மொழியாக இருந்த காலத்தில் வடமொழிச் சொற்கள் தமிழ்மயமாக்கப் பட்டதைச் சங்க நூல்கள் வழி அறிகிறோம். பின்னர் **ஆறேழு நூற்றாண்டு கள்** சமற்கிருத ஆதிக்கம் தோன்றியும் பரவியும் அரசோச்சியும் அதனால் மேனிலையாக்கமாகியும் விளங்கிய பல்வேறு கால கட்டங்களில் தமிழ்ச்சொற்கள் பல வடமொழி வடிவப்பட்டன; தமிழ்க்கலைகள், சமயம் வடமொழிச் சார்புபடுத்தப்பட்டன; தமிழ் நூல்களும் தமிழ்ப்பண்பாடும் வடமொழி மூலம் வந்தன என மாற்றப்பட்டன. இங்ஙனம் **வடமொழிச் சொற்படுத்துதல் அல்லது வடமொழிப் பெயர்ப்படுத்துதல்; வடமொழி மூலப்படுத்து தல்; வடமொழிச் சாயற்படுத்துதல்; வடமொழி வண்ணப் படுத்துதல்** எனப் பல்வேறு முயற்சிகள் தொடர்ந்து நடந்தன.

பூசுதலிலிருந்து வந்த 'பூசனை', பூஜனை - பூஜை' ஆனது. பதறுதலிலிருந்து தோன்றிய பதற்றம் பதஷ்டமாகி, பதட்ட மானது. வேகும் கடம் - 'வேங்கடம்' ஆகி, இன்று வேங்கடா சலம், வெங்கிடாசலம், வெங்கடேஷ், வெங்கட் வரை ஆனது. இவை போல்வன **'வடமொழிச் சொற்படுத்தலில்'** அடங்கும். இங்ஙனம் ஆயிரம் காட்டுகள் உள.

சொக்கன் சுந்தரர் ஆனதும் அங்கயற்கண்ணி மீனாக்ஷி ஆனதும் முதுகுன்றம் விருத்தாசலம் ஆனதும் மறைக்காடு வேதாரணியம் ஆனதும் என ஆயிரம் ஆயிரம் பெயர்கள் **'வடமொழிப் பெயர்ப்படுத்தப்பட்டன'**. தமிழக இறைவன், இறைவி பெயர்கள் இங்ஙனம் ஆன வரலாறு தனி ஆய்வுக்குரியது. பல பெயர்கள், பொருள் விளங்காமல் அல்லது திரித்து வடமொழி யாக்கப்பட்டனவும் உள.

பக்கம் 'பட்சம்' (தேய்பிறை, வளர்பிறை) ஆனதும் பெரு வங்கியம் நாதசுரமானதுமெனப் பல ஆயிரம் தமிழ் வழிக் கலைச் சொற்களை வடமொழியாக மாற்றி, தமிழ் மூலச் சொற்களை வழக்கிழக்கச் செய்த கொடுமையால், தமிழுக்கு இசையறிவு, வான நூலறிவு எதுவுமில்லையென ஆக்கப் பெற்றமை 'வட **மொழி மூலப் படுத்தலில்'** அடங்கும். மதுரையில் நடத்த திரு விளையாடல் கதைகளைக் கூறும் நூல் 'ஹாலாஸ்ய மகாத் மியம்' என்ற நூலிலிருந்து வந்ததெனக் கதை படைத்தது, இங்ஙனம் **'வடமொழி மூலப்படுத்தி'** எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகளைப் பறைசாற்றும் சான்றாகும். இதுகணக்கிறந்த மாற்றங்கள் நிகழ்ந்துள.

தமிழர் நிலவழிபாடும், மெய்யியல் சிந்தனைகளும் வட **மொழிச்** சாயற்படுத்தப்பட்டன. முருகவழிபாடு கந்தவழி பாட்டுடன் கலக்கப்பட்டதைச் சான்றாகச் சுட்டலாம். சித்தாந் தத்தில் தமிழ்மூலங்கள் தேடிக்கண்டு பிடிக்கவேண்டிய நிலையிலுள.

இங்ஙனம் வடமொழி வண்ணப்படுத்துதலில் தமிழரே முன்னின்று உழைத்ததும் உண்டு. கலைகளும் மருத்துவமும் வான நூலறியும் பிறவும் தத்தமக்கே வழிவழியாக உரிமை பூண்டு, பணம் தேட உதவவேண்டுமென்பதற்காகப் பொது மக்களுடையன அல்லாத வடமொழில் இடைக்காலத்தே இவை எழுதிவைக்கப்பட்டன. இதனால் தமிழ் மூலங்கள் சிதைந்து போயின; அழியலாயின. தமிழில் இசையில்லை; நாட்டிய மில்லை; நாடகமில்லை என்ற நிலைகள் உருவாக இவை வழி வகுத்தன.

மேலும் தமிழில் எதுவுமே இல்லை என்பது போலவும் எல்லாம் வடமொழியிலிருந்தே பெற்றன போலவும் காட்ட இவை பெரிதும் உதவின. உண்மை என்னவெனில், மூலப் பிரா கிருதங்களிலிருந்தும் (வடவர் பைசாச பிராகிருதமென்றனர்) தமிழிலிருந்தும் வடமொழி பெற்றுக்கொண்டவையே மிகமிகக் கூடுதலாகும். அவற்றை வடமொழி மூல முடையன போல் காட்டப்பட்டன. இவை வடமொழிச் சாயற்படுத்தப்பட்டாலும் வடமொழி வண்ணப்பூச்சுப்படுத்தப்பட்டாலும் உள்ளீடெல்லாம் தமிழேயாகும்.

யாழ் என்ற என்ற இசைக்கருவி ஆயிரம் விதமாக வளர்ச்சி பெற்று, தமிழர் வாழ்வோடு ஒன்றிக் கிடந்தது. அது மறைக்கப் பட்டு, வீணை உருவான வரலாறு இதற்கொரு சான்றாகும்.

மேலே கூறிய ஒவ்வொன்றும் தனிப்பெரும் ஆய்வுக்குரியன. 'சமற்கிருதமயமாக்கல்' பற்றிய வரலாற்றுச் சமூகவியல், மொழியியல் ஆய்வுகள் பெருகவேண்டும்.

இச் 'சமற்கிருதமயமாக்கம்' எந்த அளவு நீண்டது, வளர்ந்தது என்பதற்கு, ஒரு சான்று காண்போமெனில், இது போல் நாம் ஆயிரம் ஆய்வுகள் செய்து காணவேண்டியதற்கு அது ஒரு முன்னோடியாதல் கூடும்.

தமிழ் 'அரசு' - ராஜா ஆனமை

'அரசு' தான் 'ராசு' ஆகும். 'இலது' தான் 'லேது' ஆனது உயிர் முதன்மொழியாக வரும் சொற்களில் இங்ஙனம் **முதலில் உள்ள உயிர் இடம் பெயர்ந்து**, அடுத்த மெய்யுடன் சேர்ந்து நீளும், அ+ர+சு. முதல் உயிர் (அ) - அடுத்த 'ர'வுடன் சேர்ந்து - ரா ஆகும். 'ராசு'தான் பிறகு ராஜு ஆகி, 'ராஜா' ஆகிறது.

அதாவது முதலிலுள்ள உயிருக்கு அடுத்த மெய் ர,ல,வ என இடையின் மெய்களாக இருப்பின் அவை மென்மையுடையனவாதலின், இம்மாற்றம் நிகழுமென்பர். அதனால் தமிழ் திரிந்த தெலுங்கில் இம்மாறுதல் ஏராளம் அவருவாரு. இவரு - வீரு. ஒரலு - ரோலு. இலது - எலது - லேது.

உலகு தமிழ்ச்சொல்லே அதுதான் முதல் உயிர் இடம் பெயரும். உலகு - ஒலகு ஆகிப் பிறகு லோகு - லோகம் - லோகநாயகி ஆகும். லோகு - உலகு ஆகாது. தமிழ்ச்சொல் உருமாறி 'லோகு' ஆனது. லோகு தமிழில் 'உலகு' என மாறி வந்ததாகக் கூறுவது மொழியியல்புக்கு ஒத்துவராது. "காலம், உலகம் என்பன வடசொல் அன்று, ஆசிரியர் வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறார் ஆகலின்" என்று நச்சினார்கினியர் கூறுவதும் காண்க. (தொல் சொல். 58).

தமிழில் 'அரசு' என்ற சொல்லும் அதன் தொடர்பான அரைசு, அரசவை, அரசாளன், அரசியல், அரசுகட்டில், அரசுவா அரைசர், அரையன் போன்ற சொல் வடிவங்களும் தொல் காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், மணி மேகலை போலும் நூல்களில் நூற்றுக்கணக்கான இடங்களில் காணப்படுகின்றன.

திராவிட மொழிகளில் 'அரசு' என்ற சொல் பல்வேறு விதங்களில் ஆட்சியிலுளது. மலையாளத்தில் அரசன், அரயன், அரசம், அரசு எனவும் கோடர் மொழியில் அர்ச் எனவும் தோடர் மொழியில் அர்ஸ் என்றும் கன்னடத்தில் அரச, அரசு,

அரசி, அரசத்தி (அரசாத்தி), அரமனை என்றும் துளுவில் அரசு, அரசெ என்றும் தெலுங்கில் அருசு என்றும் சமற்கிருதத்தில் ராஜன் என்றும் இச் சொல்வடிவங்கள் காணப்படுவதை 'திராவிட மொழிகளின் வேர்ச் சொல் அகராதி' குறிப்பிடுகிறது (T. Burrow, M. B. Emeneau - A Dravidian Etymological, Dictionary,' 1961) தமிழ் நாட்டில் பேச்சுவழக்கில், நகரத்தார் மரபில் 'ராசு' எனவும் 'ராசாச்சி' எனவும் வழங்கும் சொற் களைக் காணலாம். அது போலவே, ராசப்பன், ராசாத்தி என்ற பெயர்களும் உள. இவையே சூடு-ஜூடு ஆவதுபோல் ராஜு, ராஜன், ராஜா, ராஜப்பன், ராஜாத்தி என வடமொழி ஒலி மருவி வழங்கலாயின.

தேவர் + அரசன் = தேவராசன். இது தேவராயன், தெய்வ ராயன் என்றெல்லாம் வழங்கும். 'தேவராச அரசு' என்ற கன்னடப் பெயரில் அரசு குலப்பெயர். அதை ஆங்கிலத்தில் அர்ஸ் (Ars) என ஒலிப்பதால், முன்னைய வடிவமே மறக்கப் படுகிறது. மகராஜன் உண்மையில் மகராசனே ஆகும். மகவை அரசனாகக் கொஞ்சுவது மரபு. மக + அரசன் = மகாராசன் ஆகிறது. **'உயிர் இடம் பெயர்தல்'** விதியால் இடம் மாறுதல்கள் நேர்கின்றன. அரசகேசரி எனும் பெயரும் காணலாம். இராசராசன், இராசாதிராசன் என்பனவே 'ஜ' ஒலிப்புச் பெற்றுச் சமற்கிருதமாய் மாறிவிடுகின்றன.

ராயரும், ராவும் யார்?

அரையன், அரயன் என்பனவும் தொன்மை வடிவங்களே. அரசன்-அரயன் ஆவது எழுத்துப்போலி. அரயனிலும் உயிர் இடம் பெயர்ந்தே 'ராயன் ஆகிறது. 'ராயப்பன்' என்பது பழக்க மான பெயர். ராயனிலிருந்து 'ராய்' தோன்றுகிறார். தேவராசன், தேவராயனமாகும். தமிழ் நாட்டில் ராயவேலூர், தேவராயன் பட்டினம், சேர்வராயன் பட்டணம் எனப் பல ஊர்ப்பெயர்கள் வழங்குகின்றன.

புறநானூறு இரண்டாம் பாட்டின் அடியில் எழுதப்பட்டுள்ள கொளு 'சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை, முரஞ்சியூர் முடிநாகராயர் பாடியது' என்பதாகும். அன்றே எவ்வாறு 'ராயர்' வந்தார் எனத் தமிழறிஞர்கள் ஐயப்பட்ட துண்டு. அரசன், அரயன், ராயன் என்ற வழக்குத் திரிபை உணர்ந்தால் 'முடிநாகராயர்' தொன்மைத் தமிழரே என்ற உண்மை விளங்கும். கிருட்டின தேவராயன் என மகாராட்டிர

மொழியில் 'ராயர்' வழங்குவது எதைக் காட்டுகிறது? திராவிட மொழிகளில் எல்லாம் 'அரசன்' வழங்குவதுபோல, 'ராயனும்' திராவிட மொழிகளின் பொதுக் கூறே என்பது இதனால் போதருகின்றது. கன்னடத்தில் ராயன் எனவும் தெலுங்கில் ராயலு எனவும் மலையாளத்தில் 'ராய்' எனவும் மாஹியில் ராவ் எனவும் இச்சொல் வழங்கும். 'ராவ்' என்ற பெயருடையாரும், 'ராயரே' என்றுதான் அழைக்கப் பெறுகின்றனர்.

மொழி ஞாயிறு பாவாணர் அவர்கள் தம் 'முதல் தாய் மொழியில், 'உரவு' என்ற சொல்லே, அரவு, அரசு, அரசன் என ஆயிற்றென வேர்ச்சொல் காட்டுவர் (பக். 225-226). அவர் கூறுவதுபோல் அரவு, ராவு, ராவ் என்பதும் பழமையான வடிவமாக இருக்கக் கூடும். உரவு-வலிமை. வலிமையுள்ளவன் 'அரவு' 'ஆகி' 'அரசு' 'அரசன்' ஆனான் என அவர் கருதினாரெனத் தோற்றுகிறது.

அரசன் என்ற சொல்லே, பேச்சில் திரிபுறும்போது ராசன் ஆகும். வடமொழி ஒலிப்பில் 'ராஜனும்' ஆகும். கட்டியங் கூறும்போது 'ராசாதிராச ராசமார்த்தாண்ட ராசகுலதிலக' என வருவன பேச்சுவழக்கில் அரசன் – ராசனாக வேண்டிய சூழல்களை உணர்த்துகின்றன. இடைக் காலத்தில் ராசராசன், ராசேந்திரன், ராசாதித்தன் என வருவன தமிழ் மூலச்சொல் திரிந்து, ஒலித்திரிபேற்றனவே. அவை அயற்பெயர்களல்ல.

இதனைப் போலவே பல நிலைகளில், பல விதங்களில், 'சமற்கிருதமயமாக்கும்' போக்கு, இயல்பாகவும் வலிந்தும் காணப்படுகிறது. வரலாற்றில் மேலேயுள்ள அடுக்குத்தான் கண்ணுக்குத் தெரியும். கீழேயுள்ளன புலனாகாமையால் அவை பொய்யாகிவிடா. தமிழ் மூலங்கள் புதையுண்டு போக, வடமொழி வண்ணப்பூச்சு மட்டும் வெளியே தெரிகிறது. பூச்சைக் கண்டு சில அறிஞர்கள் 'தமிழில் எதுவுமில்லை' என ஆய்வு முடிவு செய்வர். தில்லியில் இன்று காணப்படுவன எல்லாம் மொகலாயர்களின் நினைவுச் சின்னங்களே. அதனால் காலங் காலமாக, வடநாடு மொகலாயர்தம் நாடே என ஆகிவிடுமா? தமிழ் இசையை, நடனத்தை, கூத்தை, நாடகத்தை, வானியலை, இன்ன பிற கலைகளை 'சமற்கிருதமயமாக்கிய' போக்கை ஆராயாமல், எல்லாம் வடமொழியிலிருந்து வந்தன என முடிவு செய்வது எளிது. இங்குக் காட்டிய தமிழ் 'அரசை'ச் சிந்தித்தால், அத்தகைய அறிஞர்கள் சிந்தனையில் மாற்றம் ஏற்படக் கூடும்.

மூவருலாவில் விக்கிரம சோழனுலா

சு. தமிழரசி
ஜெ. ஜெ. கலை, அறிவியல் கல்லூரி
புதுக்கோட்டை

முன்னுரை

உலாவென்பது பலவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப் படுதலின் இப்பெயர் பெற்றது. இது திருவிழாவாக ஒரு காலத்தில் நடைபெற்றிருக்கிறது. மன்னவனின் தோற்றத்தை மகிமைப் படுத்த, மங்கையரின் நிலையைக் கூறுவது. இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. மூவருலாக்களில் ஒன்று விக்கிரம சோழனுலா இதனை இயற்றிய ஆசிரியர் ஒட்டக்கூத்தர்.

உலாவின் இலக்கணம்

அறிவு, செல்வம், எழில் போன்ற பண்புகளில் உயர்ந்த ஓராடவனைத் தலைவனாகக் கொண்டு அவனுடைய குலம், குடிப்பிறப்பு, பரம்பரை முதலியன விளங்கக்கூறி, அவன் !முடி புனைந்தோ, மணம் புரிந்தோ, வெற்றி பெற்றோ வீதியில் தேர் மீது ஒரு நாளோ அன்றி ஏழு நாட்களோ உலா வருங்கால் எழுபருவ பெண்டிரும் காதல் கொண்டதாகக் கலிவெண்பாட்டில் பாடப்படும் நூல் உலாவாகும். 'ஊரொடு தோற்றமும் உரித் தென மொழிப' எனத் தொல்காப்பிய பாடண்திணை உலா வருதலைப் பற்றி உணர்த்தியுள்ளது. பேதை முதல் ஏழு பருவ மகளிரும் உலா வரும் தலைவனைக் கண்டு காதல் கொண்டு விடுவதாகப் பாடப் பெறுவது உலாவின் இலக்கணம்.

> "பேதை முதலா எழுவகை மகளிர் கண்டு
> ஓங்கிய வகை நிலைக்கு உரியான் ஒருவனைக்
> காதல் செய்தலின் வரும் கலிவெண் பாட்டே"

என்பது பன்னிரு பாட்டியல்.

உலாப் பெறுதற்கு உரியோர்

புலவர்கள் கடவுளர்மீதும், தம்மைப் பேணிய அரசர்கள் மீதும், கடவுளோடு ஒப்ப வைத்து எண்ணத் தகுந்த அடியார் மீதும் பண்டைக் காலந்தொட்டு உலாப் பிரபந்தங்கள் பாடி வந்துள்ளனர்.

விக்கிரம சோழனின் குலப்பெருமை

பாட்டுடைத் தலைவனான விக்கிரம சோழன் பாடப்பெற்ற தால் இப்பெயர் பெற்றது. பாட்டுடைத் தலைவனின் சிறப்பினைக் கூறும்பொழுது அவன் தோன்றிய குலச்சிறப்பினைக் கூறுதல் இயல்பு. விக்கிரம சோழனின் குலச்சிறப்பினை 23 கண்ணிகளில் கூறுகின்றார் ஒட்டக்கூத்தர்.

அரசாட்சிச்சிறப்பு

அபயனுக்குப் பிறகு பெருமைக்காக முடிபுனையாடல், உலக மக்களைப் புரப்பதற்கு அறிகுறியாக முடிபுனைந்தான் விக்கிரம சோழன் என்பதை ஆசிரியர், "புவனம் புரக்க முடிகவித்து" என்றார். மற்றையரசர்களுக்கும் உரிமையுடையது இப்பூமி என்று நினைக்க இடமின்றித் தனக்கே உரிமையுடையதாகக் கொண்டு அரசு புரிந்தான் என்பதை ஆசிரியர்,

"... ... பனைத்தேறு
நீராழி யேழு நிலவாழி யேழுந்தன்
போராழி யொன்றாற் பொது நீக்கி" (32)

என்ற அடிகள் மூலம் விளக்குகிறார்.

பசி, பிணி முதலிய துன்பத்தை நீக்கியவன் என்பதை
"ஆதியுகம்வந் தடிக்கொள்ள – மேதினிமேல்
ஊன்று கலிகடிந்த வுத்துங்க துங்கண்" (120–121)

என்ற அடிகள் மூலம் உணர்த்தினார். விக்கிரம சோழன் வரத்தில் உதித்தவன் என்பதை 'வரோதயன்' என்ற சொல்லால் குறிப்பிடு கின்றார். அவன் குடைநிழல் எட்டுத் திசைகளிலுள்ளவரையும் இன்பமடையச் செய்தது என்பதை

"ஒரு குடையால் எட்டுத் திசைக் கவித்த"

என்ற அடி உணர்த்துகிறது.

விக்கிரம சோழனின் பட்டப்பெயர்

விக்கிரம சோழனின் பட்டப்பெயர் தியாக சமுத்திரம், அகளங்கன் என்பன ஆகும்.

எழுபருவ மகளிர் நிலை

பேதை முதல் பேரிளம்பெண் வரை எழுபருவ மகளிரும் உலாவரும் தலைவனைக் கண்டு, காதல் கொண்டு வாடுவதாகப் பாடப் பெறுவது உலாவின் இலக்கணம். உலா இலக்கியங்களில் எழுபருவ மகளிரையும், முறையே அவரவர் பருவத்திற்கேற்ற விளையாடல்களைக் கூறி, அறிமுகப்படுத்தி, ஒவ்வொருவரும் தலைவனைக் கண்டு மையல் நோயுற்று வாடுவதாகப் பாடுவது உலாவின் அமைப்பாகும்.

எழு பருவ மகளிரை வருணிக்கும்போது அவரவர்க்குரிய ஆடல்களை அமைத்துப் பாடுதல் மரபு.

''சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழில்விளையாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க் குரிய ஆகும் என்ப''

என்று எழுபருவ மகளிரின் விளையாடல்களைப் பன்னிரு பாட்டியல் குறிப்பிடுகின்றது.

பேதைப் பருவப் பெண்

இது தாய்மார்கள் செய்கின்ற செயல்களைப் பார்த்து, தானும் அதுபோல் செய்கின்ற பருவம் என்பதை,

''தாயர் வரவந்து தாயர் தொழத்தொழுது
தாயர் மொழிந்தனவே தான் மொழிந்தாள்'' (122)

என்ற அடிகளில் ஒட்டக்கூத்தர் புலப்படுத்துகின்றார்.

பெதும்பைப் பருவப் பெண்

இது காமத்தை உணர்ந்தும், உணராமலும் உள்ள நிலை என்பதை,

"... மாரனும்
தக்குத் தகாதானை யெய்து தரைப்படுத்தப்
புக்குதி தொடைமடக்கிப் போயினான்" (162)

என்று கூறுகின்றார் ஆசிரியர்.

மங்கைப் பருவப் பெண்

காம நுகர்ச்சிக்கு ஏற்புடைய பருவமாக இப்பருவத்தை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மடந்தைப் பருவப் பெண்

விக்கிரம சோழன் வந்து சென்றபின் உள்ளமும் உயிரும் இல்லாத தன்மையாக, காதல் கொண்ட தன்மையைக் கூறுவது.

அரிவைப் பருவப் பெண்

காம நோயால் வருந்தி காதலால் ஒருவருடனும் உரையாடாது, தனிமையாகவே இருக்கக்கூடிய நிலையை உணர்த்துவது இது.

தெரிவைப் பருவப் பெண்

இப்பெண் காம மிகுதியால் வருந்தி, சோழன் உலா வந்த பட்டத்து யானையை நோக்கி, மன்மதன் கையில் உள்ள வில், கரும்பு, அம்பு இம்மூன்றையும் நீ தொலைத்துவிட்டால், காமன் போர்புரிய வரமாட்டான், எம் போல்வார் துன்பம் நீங்கும். ஆதலால், நீ பெயராது சிறிது நேரம் நில் என்று காம மிகுதியால் வேண்டுகிறாள்.

பேரிளம் பெண்

இவள் உயிர்ப்பாரத்தைக் காமன் சினம் தாங்கியிருக்கிறது. அவன் சினம் தாங்கவில்லையெனில் உயிர் நீங்கும். சினம் நீங்கினால் உயிர் வரும். இந்நிலையில் இருக்கிறாள் என்பதை,

"திருநாண் மடமகளிர் தம்மை – ஒருநாளில்
வேளைக் கரசன் விடுமே யவன் சினமிகப்
பானற்கண் ணல்லா உயிர்ப் பரமே." (338-339)

உணர்த்துகிறார்.

முடிவுரை

சிற்றிலக்கியங்களுள் ஒன்றான மூவலருலாவில் விக்கிரம சோழனுலா அம்மன்னனின் பல்வேறு சிறப்புக்களை எடுத்தியம்பு கின்றது. சோழ மன்னர்களில் தனக்கெனத் தனியிடம் வகித்த மன்னன் பெருமைகளையும், எழுபருவ மகளிரின் நிலைகளையும் அறிய முடிகின்றது.

சிலம்பில் வரைவு

இரா. தனசேகரன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை – 625 021

அறிமுகம்

மனித வாழ்வில் திருமணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். உலகின் பல்வேறு மனித இனங்களில் பல்வகைச் சடங்குகளுடன் கூடிய திருமண நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. தொல்தமிழினத்தின் திருமண நிகழ்வுகளின் விளக்கமாக இக்கட்டுரை அமைகின்றது. மேலும் சங்ககாலத் தமிழர்களின் திருமண முறைகள், சிலம்பில் இடம் பெற்றுள்ள கோவலன்–கண்ணகி இவர்களின் திருமண நிகழ்வுகள் போன்றவைகளின் விளக்கம், கோவலன் – கண்ணகி இருவரின் திருமணத்தின் தனித் தன்மைகளைக் கண்டு வெளிப்படுத்த சங்ககாலத் திருமண நிகழ்வுகளுடன் அவற்றை ஒப்புநோக்குதல் ஆகியன இக்கட்டுரை யின் முதன்மை நோக்கங்களாகும்.

வரைவு – விளக்கம்

வரைவு என்பது திருமணம் ஆகும். வரைதல் – மணத்தல். வரைவு, திருமணம் என்பன ஒரு பொருள் குறித்தனவே ஆகும். ''இவ்வுலகம் ஆண் – பெண் வடிவாக இலங்குகின்றது. ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்வே முழுமையான வாழ்வாகும். ஒரு பாதியாகிய பெண்ணும் மறுபாதியாகிய ஆணும் ஒன்று படுவதையே ஆன்றோர் 'திருமணம்' – என்றனர். ஒவ்வொரு பாதியாக வளர்ந்து வரும் இரண்டு உயிர்கள் ஒன்றி முழுத் தன்மை எய்திக் கடனாற்றுவதற்கு அவற்றை அன்புக் கயிற்றால் இயற்கை பிணிக்கின்றது. இப்பிணிப்பே திருமணம் ஆகும்.'' (ந. சுப்புரெட்டியார், இல்லற நெறி, ப. 21).

களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன் தலைவியை மணந்து கொள்வதில் இரு முறைகள் உள்ளன. அவை களவு

வெளிப்படுவதற்கு முன் வரைதல், களவு வெளிப்பட்ட பின் வரைதல் என்பனவாகும். இதனைத் தொல்காப்பியம்,

'வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்(று)
ஆயிரண்டு என்ப வரைதல் ஆறே' (களவியல்-50)

என்று குறிப்பிடுகின்றது. காதலர்களின் களவொழுக்கம் வெளிப்படாமுன் தலைவன் தலைவியைப் பிறரறியாமல் தன்னூர்க்கு அழைத்துக் சென்று மணம் செய்து கொள்ளுதல் களவு வெளிப்படுவதற்கு முன் வரைதல் ஆகும். இம்மணம் தலைவியின் பெற்றோர்கள் இன்றியே நிகழும். இதனைத் தொல்காப்பியர்,

'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான' (களவியல்-2)

என்று குறிப்பிட்டுள்ளார். ஆயினும் களவு வெளிப்பட்ட பின் தலைவியின் தமர் உடன்பட்டுக் கொடுத்தலே முற்காலத்துப் பெரு வழக்காக இருந்தது. இதனை,

'மறை வெளிப்படுதலும் தமரிற் பெறுதலும்'
(தொல். செய்யு. 139)

என்ற தொல்காப்பியரின் கூற்றால் அறியலாம். கற்பொழுக்கமாகிய இல்லறம் புகுவதற்கு இரு நெறிகள் உள்ளன. ஒன்று களவு நெறி; மற்றொன்று மரபு நெறி. தமிழர் திருமணத்திற்கு களவு நெறியேயன்றி தமர் கொடுப்பக் கொள்ளும் மரபு நெறியும் பழைமையுடையது ஆகும்.

சங்க கால வரைவு

சங்க காலத்தில் இயற்கையை ஒட்டியே மணவினை நடந்து வந்துள்ளது. களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன்-தலைவி இருவர்தம் பெற்றோரும் காதலர்களின் கருத்துக்குடன்படுவர். பெண்ணின் பெற்றோர் உடன்பாடு கொள்ளுதலே மரபு. பின்னர் மணமகன் பெற்றோர் சுற்றஞ்சூழ மணமகள் இல்லம் சென்று விருந்துண்டு, மணவினை நாள் குறித்து மீள்வர். அதன் பின் இரு பெற்றோரும் அவரவர் சுற்றத்தார்க்கும் நட்பினருக்கும் அழைப்பு விடுவர். குறித்த நாள் வந்ததும் பெண் வீட்டார் வீட்டை ஒப்பனை செய்து வாயிலிற் பந்தலிடுவர். பந்தலின் கீழ் மணலைப் பரப்பி, மாலை தொங்கவிட்டு, விளக்கேற்றி வைப்பர். நட்பும் சுற்றமும் வந்து அத்திருமண பந்தலில் அமர்வர். பல்லியம் முழங்க இல்லுறை தெய்வ வழிபாடு செய்வர்.

தலைவிக்கு வதுவை மணம் புரிவதற்கு முன் தலைவனுடைய தாய் அவனால் கொண்டுவரப் பெற்ற தலைமகள் பொருட்டு

'சிலம்பு கழி நோன்பு' செய்தல் பண்டைய மரபாகும். மணம் புரிவதற்கு முன் மணமகளது காலில் அவள்தம் பெற்றோர் களால் அணியப் பெற்ற சிலம்பை நீக்குவதற்குச் செய்யப்படும் சடங்கே சிலம்பு கழி நோன்பு ஆகும். இதனை,

'நும்மனைச் சிலம்பு கழீஇய அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகெனச்
... ... காளையை ஈன்ற தாய்க்கே' (ஐங்குறு. 399)

என்ற சங்கப் பாடலின் வழி அறியலாம்.

அடுத்து தலைவிக்கு வதுவை மணம் நடைபெறும். வதுவை மணம் என்பது மணமகளை நீராட்டுதல் ஆகும். நல்ல நாளில் மூன்று அல்லது ஐந்து மங்கல மகளிர் புதுக்குடங்களில் நீர் கொண்டு வந்து புதுத்தாழியில் ஊற்றி, அந்நீருள் பூவையும் நெல்லையும் இடுவர். பின்பு மணமகளை ஒரு மனையிலிருத்தி, மக்களைப் பெற்ற நான்கு மகளிர் மணமகளைச் சுற்றிநின்று, மூதாட்டியர் சிலர் தாழியிலுள்ள நீரை மொண்டு தரத்தர வாங்கி, 'ஏ நங்காய்! கற்பினின்றும் வழுவாது இல்லற நிகழ்ச்சிக்கு வேண்டுவன உதவி நின் கணவனைப் பேணும் துணைவியாவாயாக' என வாழ்த்தி நீராட்டுவர். இதுவே வதுவை மனம் எனப்படும் (புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், ப. 158).

மணமகளை நீராட்டிய பின், வாகை இலையும் அறுகம் புல்லும் சேர்த்து வெண்ணூலினால் கையில், காப்பு கட்டி மனையில் இருத்துவர். அப்பொழுது பெண்ணின் பெற்றோர் வந்து, குழந்தாய்! உன் விருப்பப்படியே, நீ விரும்பியவனுக்கே கொடுக்கிறோம். நீ அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாகி இணைபிரியாது இன்புற்று வாழ்வாயாக' என வாழ்த்திக் கொடுப்பர். பின்பு யாவரும் வாழ்த்துவர். இதுவே சங்ககால மணமுறையாகும்.

சிலம்பில் வரைவு

சிலம்பில் கோவலன் - கண்ணகி இவர்களின் திருமணம் தமர் கொடுப்பக் கொள்ளும் மரபு நெறியில் அமைந்துள்ளது. பதினாறு வயது கோவலனுக்கும் பன்னிரண்டு வயது கண்ணகிக்கும் திருமணம் செய்து வைக்க அவர்தம் பெற்றோர்கள் விரும்பினர். அத்திருமணச் செய்தியினை அழகிய அணிகலன் அணிந்த மகளிர் சிலரை யானையின் பிடரியிலேற்றுவித்து அவர்தம் வாயிலாய் புகார் நகர மக்களுக்கு அறிவித்தனர். இதனை,

'யானை எருத்தத் தணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்' (சிலம்பு – : 43 – 44)

என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

திருமணச் செய்தி அறிவித்த பின் குறித்த நாளில் முரசு, முழவு, சுங்கு முதலியன முறையே முழங்க, மங்கல மரபினவாகிய வெண்குடை முதலியன எழலாயின. அப்பொழுது அழகிய திருமணப் பந்தரின் கீழ், திங்கள் உரோகிணியைச் சேரும் நன்னாளில், பார்ப்பனன் திருமணத்திற்கு மறை நூலிற் சொன்ன நெறியை முன்னின்று காட்ட, கோவலன் கண்ணகியைத் திருமணம் செய்து கொண்டான். பின்பு அவ்விருவரும் வேள்வித் தீயை வலம் வந்தனர். இதனை,

'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்பார்' (சிலம்பு - 1 : 52 – 53)

என்ற சிலம்பின் வரிகள் தெரிவிக்கின்றன. கண்ணகியின் கை பற்றிக் கோவலன் வேள்வித் தீயை வலஞ்செய்து தொழுத பின்னர் செம்முது பெண்டிர் கோவலன் கண்ணகி இருவரையும் நோக்கி,

'காதலர் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல்
தீதறு கென' (சிலம்பு – 1 : 61 - 62)

வாழ்த்தினர்.

வரைவு – ஒப்புநோக்கு

காதலித்து மணப்பது தமிழர் தம் பண்பாடாகும். அவ்வகையில் சங்க காலத் தமிழர்கள் பெரும்பான்மையும் களவு வழி வந்த கற்பையும் மிகச் சிறுபான்மை மரபுவழி மணத்தையும் மேற்கொண்டுள்ளனர். ஆனால் சங்கப் பின்னூலாகிய சிலம்பில் கோவலன் கண்ணகி இவர்களின் கற்பு மரபுவழிப்பட்டதாக அமைந்துள்ளது. கோவலன் கண்ணகி இருவரும் திருமணத்திற்கு முன் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்ளவில்லை. மாறாக இவர்களின் திருமணம் பெற்றோர்கள் பேசி முடிவு செய்யப் பட்டதாகும். எனவே இது 'களவு வழி வாராக் கற்பாக' அமைந்துள்ளது.

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவியர்க்குரிய திருமண வயது பற்றி குறிப்பிடப்பெறவில்லை. ஆனால் சிலம்பில் திருமணத்தின்பொழுது கோவலனின் வயது பதினாறு என்றும் கண்ணகியின் வயது பன்னிரண்டு என்றும் இளங்கோவடிகள்

குறிப்பிட்டுள்ளார். சங்ககாலத்தில் தலைவன் தலைவியர்க்குத் திருமணநாள் குறித்த பின்னர் இரு பெற்றோரும், அவரவர் சுற்றத்தார்க்கும் நட்பினருக்கும் அழைப்பு விடுவது வழக்கம். அவ்வழக்கினை அடியொற்றியே இளங்கோவடிகள் சிலம்பில் கோவலன் கண்ணகியரின் திருமணச் செய்தியினை அழகிய அணிகலன் அணிந்த மகளிர் சிலரை யானையின் பிடரியிலேற்று வித்து அவர்தம் வாயிலாகப் புகார் நகர மக்களுக்கு அறிவித்து உள்ளார். இந்நிகழ்வு கோவலன் கண்ணகியர் தம் பெற்றோர் களின் செல்வச் செழிப்பை உணர்த்துவதாய் அமைந்துள்ளது.

சங்க காலத்தில் தலைவியின் பெற்றோர் அறியாமல் தலைவன் இல்லத்தில் திருமணம் நடைபெறுதலும் தலைவியின் பெற்றோர் உடன்பட்டு தலைவியின் இல்லத்திலேயே திருமணம் நடைபெறுதலும் உண்டு. பெரும்பாலும் பெண் வீட்டிலேயே திருமணம் நடைபெறுதல் மரபு. ஆனால் சிலம்பில் கோவலன் கண்ணகியரின் திருமணம் இரு பெற்றோர்களின் விருப்பப்படி ஓர் அழகிய மண்டபத்தின்கண் நடைபெற்றுள்ளது.

சங்க காலத்தில் திருமணம் நல்ல நாளிலேயே நடைபெறுவது வழக்கம். திங்கள் உரோகிணியைக் கூடிய நன்னாளின் விடியற் காலையில் திருமணம் நடைபெறும். இளங்கோவடிகளும் சங்க கால மரபினை அடியொற்றியே சிலம்பில் கோவலன் கண்ணகி யரின் திருமணம் நல்ல நாளில் நடைபெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க காலத் திருமண நிகழ்வுகளையும் சிலம்பில் இடம் பெற்றுள்ள கோவலன் கண்ணகியர் தம் திருமண நிகழ்வுகளையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, மாமுது பார்ப்பான் மறைவழி காட்டுதல், கோவலன் – கண்ணகி இருவரும் தீயினை வலம் வருதல் போன்ற நிகழ்வுகள் சங்க காலத் திருமணத்தில் காணப் பெறாத ஆனால் சிலம்பில் இடம் பெற்றுள்ள புதிய நிகழ்வுகளாகும்.

நிறைவு

சிலம்பில் இடம்பெற்றுள்ள கோவலன் – கண்ணகி இருவரின் திருமண நிகழ்வுகளைச் சங்கத் திருமண நிகழ்வுகளுடன் ஒப்பு நோக்கும்பொழுது, சங்ககாலத் திருமணங்களில் இடம்பெறாத சில புதிய நிகழ்வுகள் சிலம்பில் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம். 1. கோவலன் கண்ணகியரின் திருமணச் செய்தி யினைப் புகார் நகர மக்களுக்கு அழகிய மகளிரின் வழி அறிவித்தல் 2. மாமுது பார்ப்பான் மறைவழி காட்டுதல். 3. கோவலனும் கண்ணகியும் தீயினை வலம் வருதல் போன்றவை ஆகும்.

ஔவை படைப்பின் கிறித்தவப் பதிப்பு

தாயம்மாள் அறவாணன்
கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர்

ஔவையாரின் ஆத்திசூடியும் கொன்றைவேந்தனும் குறள் போலச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன. பாமர மக்களின் பழமொழி போல்வன. பாடல்கள் அகரவரிசையில் நினைவாற்றலுடன் எளிதாகப் பதிய வைக்க வாய்ப்பாக அமைவன. ஆத்திசூடியில் 108 வரிகளும், கொன்றை வேந்தனில் 91 வரிகளும் உள்ளன. ஆத்திசூடியின் தொடக்கம் உயிர்-13, அகரம் ஏறியமெய்-18, க வர்க்கம் 11, ச வர்க்கம்-11, ஞ வர்க்கம்-இல்லை, த வர்க்கம்-11 ந-11, ப-11, ம-11, ய-இல்லை, வ-11-மொத்தம் = 108 கொன்றை வேந்தனில்-உயிர்-13, அகரம் ஏறிய மெய் 18-இல்லை, க வர்க்கம்-12, ச-11, ஞ-இல்லை, த-11, ந-11, ப-11, ம-11, ய-இல்லை, வ-11 மொத்தம்=91 ஞகர, யகர வர்க்கச் சொற்கள் இருந்தும் அவற்றைத் தொடக்கமாகக் கொண்ட பாடல்கள் இல்லை. 'கௌ'வை முதலாக உடைய சொல் கொன்றை வேந்தனில் இருப்பது போல் ஆத்திசூடியில் இல்லை. இரண்டு நூல்களிலும் அ,ஆ,வொ,வோ தொடக்கத் திற்குப் பதில், உ,ஊ,ஒ,ஓ முதலாகக்கொண்டு தொடங்கப் பெற்ற வரிகள் குறிப்பிடத்தக்கன.

மேற்கண்ட இரு நூல்களும் தெய்வம், நல்லொழுக்கம், கல்வி, பெற்றோர்ப் பேணுதல், மகளிர் ஒழுக்கம், ஊக்கமுடைமை, உடல் நலம், உழவு, பயிர்த்தொழில் முதலியவற்றை எடுத்துணர்த்துகின்றன. இவ்விருநூல்களையும் சிறுவர் கல்விப்புதையல் என்ற நூல் எடுத்தாளுகின்றது. அந்நூலின் முகப்புப் பகுதியில்,

> "ஔவையார் நீதிச் சொற்களிலும், திருவள்ளுவர் குறள்களிலும், நீதிவெண்பா என்னும் செய்யுட்களிலும் நாலடியார் நீதி நூலிலும், தேம்பாவணியிலும் மற்ற சில நூல்களிலும் தெரியலான பொருட்களும் ஒன்றாகச் சேர்த்துப்

புதுவையில் 1864–இல் கல்விச்சாலை அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது''

என்று சிறுவர் கல்விப் புதையல் நூலின் முகப்புப் பகுதி சுட்டு கிறது. மேற்கண்ட இருநூல்களும் ஔவையார் அருளிய முதல் நீதிச்சொல் என்றும் 2-ஆம் நீதிச்சொல் என்றும் சுட்டப்படு கின்றன. அவற்றை 1) எழுத்து மாற்றம் 2) சொல் மாற்றம், 3) முழு மாற்றம் என மூவகைப் படுத்தலாம்.

1. **எழுத்து மாற்றம்**: சில எழுத்துகள் மட்டும் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இதனால் பொருள் மாற்றம் ஏற்பட வில்லை. சான்று:

இடம்பட வீடெடேல் (ஆத்திசூடி. 18) இடம்பட வீடிடேல் (நீதிச்சொல் 18)

2. **சொல் மாற்றம்:** ஒரு சொல்லுக்குப் பதில் இன்னொரு சொல்லை மாற்றி எழுதினால் பொருள் முற்றிலும் மாறுவது இயல்பு. மன்று பறித்து உண்ணேல் (ஆ.சூ.23) மண்பறித்து உண்ணேல் (நீ.சொ.23) அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் (கொ.வே.1) அன்னையும் பிதாவும் சொன்னெறி தவறேல் (நீ.சொ-1) மன்று பறித்தல் என்பது நீதி நியாயங் களை அழித்து வாழ்தல் என்பதாகும். நீதிச் சொல்லில் மண் பறித்து என்று மாற்றம் பெற்று பிறர் இடத்தை அபகரித்து உண்ணாதே என்று பொருளில் மாற்றம் பெறுகிறது. முன்னறி தெய்வம் என்பது (கொ.வே,1) சொன்னெறி தவறேல் என்று மாறும்பொழுது மேலும் கருத்து அழுத்தம் பெறுகிறது.

3. **முழுமாற்றம்**: ஔவைப்பாடல்களில் (14 வரிகள்) மூல பதிப்பினின்று முழு மாற்றம் செய்யப்பெற்றுள்ளன. சமூகத்தை மனதில் கொண்டு வாழ்க்கைக் கேற்ற மாற்றம் அமைந்துள்ளது; அவை வருமாறு:

1. சனி நீராடு (ஆ.சூ. 16) சரி நீராடு (நீ.சொ. 16)
2. திருமாலுக் கடிமை செய் (ஆ.சூ-56) திருவருட் கடிமை செய் (நீ.சொ.56)
3. மெல்லினள்ளாள் தோள்சேர் (ஆ.சூ-93) மெய்ப்பொருள் கடைப்பிடி. (நீ.சொ.93)
4. ஒன்னாரைத் தேறேல் (ஆ.சூ. 107,) ஒன்னார் பிழை பொறு-(நீ.சொ. 107.)

5. இல்லற மல்லது நல்லற மன்று (கொ.ாவே.3), இல்லறந் தனினு நல்லறந்துறவறம் (நீ.சொ.3),

6. சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு (கொ. வே. 28), சித்தங் கோணிற் செய்கையுங் கோணும் (நீ. சொ. 28).

7. தந்தை சொல் மிக்க மந்திர மில்லை (கொ. வே. 37) தந்தை தாய்ப் பேணல் மைந்தருக் கழகு (நீ. சொ. 37)

8. தாயிற் சிறந்த தொரு கோயிலுமில்லை (தொ. வே. 37) தாயுரை சாபம் தனையரைச் சுடும் (நீ. சொ 38)

9. திரைகட லோடியுந் திரவியந் தேடு (கொ. வே 39). தினமிரு பொழுதுந் தெய்வந் தொழுதிரு (நீ. சொ. 39).

10. புலையும் கொலையும் களவும் தவிர் (கொ. வே. 63) புரையும் கொலையும் பொய்யும் தவிர் (நீ. சொ. 63)

11. பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம் (கொ. வே. 64) பூரியோ ருள்ளுஞ் சீரியர் பலரே – (நீ. சொ. 64)

12. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம் (கொ. வே. 66) பேதைமை யன்று மாதர்க்கு அணிகலம் (நீ. சொ. 66)

13. நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை– (கொ. வே. 58) நோன் பென்பது வான் பெற வழியாம் – (நீ. சொ. 58)

14. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் – கொ. வே. 59) பயன்தகு திரவியம் பண்ணிய புண்ணியம் – (நீ. சொ. 59)

மேற்கண்ட மாற்றங்கள் பல நிலைகளைக் கருத்தில் கொண்டு நிகழ்ந்திருக்க வேண்டும். சமயப் பொதுமை, பழக்கவழக்கம், பெண்ணடிமை நீக்கம், சாதிமறுப்பு, வாழ்க்கைப் போக்கு, இவற்றை மனதில் கொண்டு மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும், யாரால் மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும்? ஏன்? எந்த அடிப்படையில் இம் மாற்றங்கள் என்று ஆராய்கிற போது சில நிலைகள் தெளிவாகின்றன.

1. சமயப் பொதுமை விரும்பிகள் செய்த மாற்றம்

2. குறிப்பிட்ட சமயச் சார்பால் நிகழ்ந்த மாற்றம்

3. ஐரோப்பியச் சார்பால் நிகழ்ந்த மாற்றம்

4. கிருத்துவத் துறவியரால் நிகழ்ந்த மாற்றம் என்று வகைப்படுத்தலாம்.

1. சமயப் பொதுமை விருப்ப மாற்றம்: சிறுவர் கல்விப் புதையல் நூல் எந்த மதத்தினரையும் சுட்டுவது அன்று.

பொதுமையே அதன் நோக்கம். சாதி சமயத்திற்கு அப்பாற்பட்ட சமநிலையை வற்புறுத்துவதற்குக் குறிப்பிட்ட தெய்வங்களின் பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

1. திருமாலுக்கடிமை செய் (ஆ, சூ. 56) திருவருட்கடிமை செய் (நீ. சொ. 56) 2. சிவத்தைப் பேணிற் றவத்திற் கழகு (கொ. வே. 28) சித்தங் கோணிற் செய்கையுங் கோணும் (2ஆம் நீ. சொ. 28) திருமால் திருவருளாகவும், சிவம் – சித்தம் ஆகவும் மாற்றம் பெற்றுள்ளன. குறிப்பிட்ட கடவுட் பெயர் சுட்டப்படாமல் மன உறுதிக்கு முதன்மை தரப்பெற்றுள்ளது.

2 குறிப்பிட்ட சமயச் சார்பினரே இம்மாற்றத்தைச் செய் திருத்தல் வேண்டும்: தினம் இருபொழுதும் தெய்வந் தொழுதிரு (நீ. சொ. 39) என்று மாற்றம் பெற்ற வரி சிந்தனைக்குரியது. காலையில் எழுந்தவுடனும் இரவில் தூங்கும் முன்பும் ஆகிய இருபோதும் இறையை வழிபடுதல் கிருத்துவப் பழக்கம், தந்தை சொல் மிக்க மந்திரமில்லை (கொ. வே. 37) என்றவரி தந்தை தாய்ப் பேணல் மைந்தருக்கழகு (நீ. சொ. 37) தாயுரை சாபம் தனையரைச் சுடும் தீ(நீ,சொ.38) இங்கே தாயையும் சேர்த்துக் கொள்ளப் பெறுகிறது. அன்னைக்கு முதன்மை கொடுக்கப் பெற்றுள்ளது. பகைவரை நம்பலாகாது என்ற பொருளில் ஒன்னாரைத் தேறேல் (ஆ. சூ. 107) என்ற தொடர் ஒன்னார் பிழை பொறு (நீ. சொ. 107) என்று மாற்றம் பெறுகிறது. தாம் செய்வது இன்னதென்று அறியாது செய்யும் பிழையைப் பொறுத்து மன்னிக்கிறது விவிலியம். இதனால் கிருத்தவ நெறியினரே மேற்கண்ட நூலைப் பதிப்பித்தனர் எனலாம்,

ஐரோப்பியச் சார்பால் நிகழ்ந்த மாற்றம்: ஐரோப்பியர் இந்தியாவில் வந்து, பெண்ணடிமை, மூடநம்பிக்கை, சாதி, கனவு, பொய் இவற்றைக் கண்டு, சமுதாய மாற்றம் செய்ய வேண்டி, பாடல் மாற்றம் நிகழ்ந்திருக்கலாம்.

1. பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம் (கொ.வே 66)
   பைதைமை யன்று மாதர்க்கு அணிகலம் (நீ. சொ 66)
2. புலையும் கொலையும் களவும் தவிர் (கொ.வே.6)
   புரையும் கொலையும் பொய்யுந் தவிர் (நீ.சொ. 63)
3. பூரியோர்க் கில்லை சீரிய ஒழுக்கம் (கொ.வே. 64)
   பூரியோருள்ளுஞ் சீரியர் பலரே (நீ.சொ. 64)

4. பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் (கொ.வே. 59)

பயன்தரு திரவியம் பண்ணிய புண்ணியம் (நீ. சொ. 5)

பேதைமை மாதர்க்கு அணிகலன் அன்று என்றும், புலைத் தொழிலைவிடப் பொய்யும் களவும் கொடியவை என்றும் ஐரோப்பிய கிருத்துவர் கருதி இருக்கின்றனர். சாதிச்சழக்கை வேரோடு நீக்க கிழோருள்ளும் சிறப்புப் பெற்றோர் உளர் என்று கூறியிருக்கின்றனர்,

வெள்ளைக்காரக் கிருத்தவத் துறவியரால் நிகழ்ந்த மாற்றம்:

இல்லறந் தனினும் நல்லறந் துறவறம் எனவரும் நீதிச் சொல்வரி தொண்டுள்ளம் வாய்ந்த துறவியர் எழுதியது. மெல்லினள்ளாள் தோள் சேர் (ஆ. சூ. 93) என்பது மாற்றம் பெற்று மெய்ப் பொருள் கடைப்பிடி (நீ. சொ. 93) என்று மாற்றம் பெறுகிறது.

முடிவுரை: ஐரோப்பிய வணிகர் கி. பி. 15-ம் நூற்றாண்டளவில் இந்தியா வரத் தொடங்கினார். அண்ணாருடன் கத்தோலிக்கக் கிறித்தவ மதமும், மதத் துறவியாரும் தமிழகம் வரத் தொடங்கினர். வரவே தொண்டுள்ளம் வாய்ந்த துறவிமார் தமிழ் மக்களின் வாழ்க்கைப் போக்கு, பண்பாட்டுப் பழக்க வழக்கங்களைக் கூர்ந்து கவனித்தவர் தமிழ் மக்களிடையே ஔவையார் எழுதிய ஆத்திசூடி கொன்றை வேந்தன் செல் வாக்கில் இருந்ததைக் கவனித்திருத்தல் வேண்டும். முறையான தமிழ்ப் பள்ளிகள் இல்லை என்றாலும் திண்ணைப் பள்ளி வழித் தமிழ்க் கல்வி ஓரளவு நடந்து வந்திருத்தல் வேண்டும், அப்பள்ளி களில்,எளிய தமிழில் அமைந்த ஔவை நூல்கள்குழந்தைகளுக்கே கற்பிக்கப் படுவதைத்துறவியர் கவனித்திருக்க வேண்டும் எனவே மதம். மாறிய தொடக்கக் காலத் தமிழ்க் கிறித்தவர்க்குக் கிறித்தவமதத்திற்கேற்ப மாற்றங்களைச் செய்து ஔவைப் பாடல்கள் கற்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும் முதலில் தமக்காகவும் பிறகு பிறருக்காகவும் பதிப்பித்ததே நீதிச்சொல் என்ற தலைப்பு, அத்தலைப்பில் விளைந்த நூலே சிறுவர் கல்விப் புதையல்.

தமிழிலக்கிய இலக்கணங்களைக் கற்று மேதையாக விளங்கிய இத்தாலிநாட்டு வீரமாமுனிவர் தம் துறவு நெறிக் கேற்ப அவற்றை மாற்றியுள்ளார் போலும்.

திருப்புகழில் 'ஞானநிலைச்' செய்திகள்

சு. திருநாவுக்கரசு
ஸ்ரீமத் சி.பா.சு. தமிழ்க் கல்லூரி
மயிலம் 604 304

சான்றோர்கள் ஆய்ந்திடத்தக்க பொருள்கள் மூன்று என்பர் அருளாளர்கள். அவையாவன இறை, உயிர், தளை எனப் பெறுவனவாகிய பதி, பசு, பாசங்கள் ஆகும். அறிவும், அறியாமையும் கலந்த நிலையில் உள்ள உயிர், அறியாமை ஒன்றுமே உடைய உலகப் பொருள்களிலிருந்து விடுபட்டு, அறிவே வடிவான பொருளாகிய இறைவனை அடைந்து இன்னலே இல்லாத இன்பத்தை அடைதல் வேண்டும், அதற்காகத்தான் கருணைக் கடலாகிய இறைவன் கடலைக் கடந்து கரையேறுவதற்குக் கப்பல் உதவுவது போல இன்பப்பொருளாகிய தன்னைச்சேர்ந்து உய்ய வேண்டும் என்றே மனிதப்பிறவியை உயிர்களுக்கு வழங்கு கின்றான்.

இவ்வுரிய ஞானத்தைச் சமயச் சான்றோர்கள் தெளிவாக உணர்ந்தது மட்டுமல்லாமல், மக்கள் உணர்ந்து உய்யவேண்டும் என்னும் கருணைப் பெருக்கினால் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் நன்னோக்கில் உணர்த்தியுள்ளனர். அவ்வகையில் பரம்பொருளை முருகனாகக் கண்டு வழிபட்டுப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றவர், அநுபூதிச் செல்வராகிய அருணகிரிநாதர். அவர் பாடி அருளிய ஒன்பது ஞான நூல்களுள் ஒன்றாகிய திருப்புகழில் காணப் பெறும் ஞானம் பற்றிய செய்தி களைக் கண்டுணர்ந்து, பக்க வரையறை கருதி ஒரு சிலவற்றை மட்டும் சுருக்கமாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

நால் நெறிகளுள் ஒன்றாகிய ஞானநெறி: உயிர்கள் பிறவிக் கடலைக் கடந்து முத்திக் கரையேறி, இறைவனுடன் இரண்டறக் கலந்து, இன்பத்தில் திளைப்பதனை முத்தி, வீடுபேறு, மோட்சம் என்னும் சொற்கள் குறிக்கின்றன. இம்முத்தி நெறியை அடைய

வாயிலாக நிற்கும் ஞானசாதனங்கள் நான்கு ஆகும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும். இவற்றைச் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பார், அறிவாற் சிவனேயாகிய மாணிக்கவாசகர். நன்மையை நன்மையென்று உணர்ந்து மேற் கொள்வது போலவே, தீமையைத் தீமையென்று உணர்ந்து அவற்றை விட்டு விலகுவதும் ஞானமாகும். உலகப் பொருள்கள் நிலையற்றவை; அறிவற்றவை; அளவிடப்பட்டவை; நிலைத்த இன்பமற்றவை. இவற்றை வடநூலார் முறையே அநித்தம், அஞ்ஞானம், அனந்தம், அனானந்தம் என்பர். அவ்வாறே இறைவனிடத்தும் நாற்பண்புகள் உள்ளன. அவையாவன நிலைபேற்றுத்தன்மை, முற்றறிவுத் தன்மை, அளவிறந்த தன்மை, நிலைத் தன்மை ஆகியவை யாகும். இவற்றை நித்தம், ஞானம், அனந்தம், சுகம் என்பர் வடநூலார். எனவே, உயிரானது உலகப்பொருள்களைச் சார்ந்து நிற்கும் தன்னிலையை உணர்ந்து, சார்புகெட ஒழுகுவதே ஞானமாகும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கினையும் அரும்பு, மலர், காய், கனி என்பனவற்றோடு ஒப்புமைப்படுத்தி விளக்குவார் தவராசயோகி தாயுமானவர். சரியை முதலாக ஒவ்வொன்றிலும் சரியை முதலாக நான்கினையும் இணைத்துப் பதினாறாக விரித்துக் கூறுவதும் உண்டு. எவ்வாறாயினும் இவை நான்கும் ஒன்றோடொன்று தொடர்பு உடையன வாகும். சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் ஞானத்திற்கு ஏதுவாக உள்ளன. ஞானமொன்றே வீடுபேற்றுக்கு ஏதுவானது' என்பார் கற்பனைக் களஞ்சியம் சிவபிரகாசர்.

இறைவனின் உருவத்திருமேனியை வழிபட்டு, உடலால் தொண்டு செய்வது சரியையாகும். அருவுருவத்திருமேனியை வழிபட்டு உடலாலும் உள்ளத்தாலும் தொண்டு செய்வது கிரியையாகும். அருவத் திருமேனியை உள்ளத்தால் வழிபாடு செய்வது யோகமாகும். இம்மூன்றினாலும் முறையே சாலோக, சாமீப, சாரூபம் என்னும் பதமுத்திகிட்டும் என்பர் சான்றோர். இவையாவற்றினும் மேலானது ஞானநெறியாகும். இறைவனை அறிவால் அறிந்து வழிபடும் இந்நெறியை 'நன்னெறி' என்றும் உரைப்பர்.

ஞானம் – விளக்கம்: ஞானம் என்னும் சொல்லை, 'நான் + அம்' என்பதாகப் பிரிக்கலாம். 'நான்' என்பது தன்மையிடத்து

ஒருமைச் சொல்லாகும். எனவே, உயிரானது தன்னைப் பற்றி அறிகின்ற அறிவே 'ஞானம்' என்றாகும். தனையறியும் அறிவு, தலைவனாகிய இறைவனை அறியத் துணை செய்கிறது. நண்டு – ஞண்டு; நேயம் – ஞேயம் என்பன போல, நானம் என்பது ஞானம் என்றாயிற்று. நகரத்திற்கு ஞகரமானது மொழி முதற் போலியாக அமைந்திருப்பதை உணர்தல் அவசியமாகிறது.

இத்தகைய ஞானத்தைத் 'தனையறியும் அறிவை அறிவு' என்பார் சிவப்பிரகாசர். இதனையே 'தன்னையறித்து இன்பம் உற வெண்ணிலாவே' என்பார் வள்ளலார். இந்த ஞானத்தை 'அபர ஞானம், பரஞானம்' என்று இருவகைப்படுத்துவது உண்டு. திருவருளைப் 'பரஞானம்' என்றும், வேதசிவாகமங்கள் முதலான நூல்களை 'அபர ஞானம்' என்றும் குறிப்பிடுவர். பிறிதொரு வகையில் நூலறிவை அபர ஞானம் என்றும், அனுபவ அறிவைப் பரஞானம் என்றும், குறிப்பர் ஆன்றோர். 'உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்று இவற்றை முறையே குறிப்பார் தெய்வச்சேக்கிழார்.

சலனப்படாஞானம் வேண்டுதல்: சரியை, கிரியை, யோகம் முதலானவற்றின் வழியே ஞானம் பெறுதல் உளதாயினும். அம் மூன்றும் செய்தற்கரியவை என்றும், அவற்றோடே நின்றுவிடுதல் பயனன்று என்றும் ஞானம் நிலையில் மேன்மையை இறைவன் அருள்கின்றான் என்றும் குமரகுருபரர், 'சரியை, கிரியா, யோகம் சார்வித்து... ஆலோகந் தன்னை அகற்றுவித்து... மலபரிகாகம் வருமளவிற் பன்னாள் அலமருதல் கண்ணுற்றருளி... அறிவிற் காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி' (கந்தர் கலிவெண்பா) என்னும் பாடல் பகுதியால் விளக்குகின்றார்.

சீர் கெட்டவர், ஆடம்பரப் பேச்சாளர், மந்திரவாதிகள், சமய ஆசார நியமங்கள் ஆகியவற்றில் மடியாமலும், சரியை, கிரியை, யோக ஒழுக்கங்களில் காலம் கடத்தி மடியாமலும், ''சலனப்படா ஞானம் தருக' என்று முருகன்பால் அருணகிரிநாதர் வேண்டுகின்றார்.

'கமையற்ற சீர்கேடர் வெகுதர்க்க கோலாலர்
களையுற்று மாயாது மந்திரவாதக்
கடைகெட்ட ஆபாத முறுசித்ர கோமாளர்
கருமத்தின் மாயாது கொண்டு பூணுஞ்

சமயத்த ராசார நியமத்தின் மாயாது
சகளத்து ளே நாளு நண்புளோர் செய்
சரியைக்கி யாயோக நியமத்தின் மாயாது
சலனப்படா ஞானம் வந்து தாராய்!''
(கமையற்ற - பொதுத் திருப்புகழ்)

தாய் தந்தையரின் அருளைப் பெறும் மகவினைப்போல் 'நான் மாஞான போதம் பெற, நீ நினைக' என்று வேண்டுகின்றார்.

'மாதாபி தாவி னருணல மாறாம காரி லெனையினி,
மாஞான போதம் அருள்செய நினைவாயே'.
(ஆசார - பொது)

இவ்வாறே, ஞானநூல்களைப்படித்து அவற்றின் வழி அனுபவ நிலையில் இறைவனை அடைய முயலாமல். உலகியல் நூல் களைப் பேசித்திரிவது பயனில்லை என்னும் பொருளிலும், அத்தகைய கலைகள் 'போதும் போதும்' என்பதாகவும் கிழ்க்காணும் பாடலால் புலப்படுத்துகின்றார்.

... ... 'சிவகலை யலது இனி
உலக கலைகளும் அலம் அலம்' (குருதி - வயலூர்)

ஞான பூசை: ஞான நூல்தனை ஓதல், ஓதுவித்தல், ஆசானிடம் நூற்பொருளை விளங்கக் கேட்டல், பிறர் கேட்குமாறு உரைத்தல், சிந்தித்தல் ஆகியவை ஐந்து 'எழில் ஞான பூசை என்பார் அருணந்தி சிவாசாரியார்.

'ஆசைமிக்க அன்பனாகிய யான், என் மனமென்னும் தாமரையை நடுவே வைத்து, அன்பென்னும் நார்கொண்டு, நாவிலே அழகாத் தொடுத்து, ஞானமணம் வீசி, ஒளிவிளங்கவும், ஞானியருடைய அறிவாகிய வண்டு மொய்க்கவும் மானசீகமாகத் தொடுக்கப் பெறும், மந்திரமாலையான புட்பமாலையை நின் திருவடியில் அணிவேனோ?' என்று அருணகிரி நாதர் முருகன்பால் வேண்டுகிறார்.

''ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மான பூ வைத்து நடுவேயன்
பானநா லிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி யொருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட

மாக்குதா புஷ்ப மாலைகோ லப்ர்
வாளபா தத்தில் அணிவே னோ?''
(ஆசைகூர் - பொது)

என்னும் பாடலால் இதனை உணரலாம்.

இவ்வாறு ஞான நிலையில் நின்று இறை வழிபாடு செய்வதனை, 'நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே மஞ்சன நீர்; பூசை கொள்ள வாராய் பராபரமே என்பார் தாயுமானவர்.

சிவஞான அமுதுண்டு பசியாறுதல்: காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பெரும் பத்திமையுடன் பாடித் தொழுதால், நன்றாக உருக்கிய பொன்னில் மணி பதிவதுபோல இறைவனுடன் கலந்து நிற்கும் நிலையை, எய்த முடியும் என்பதனையும், அதனால் அவர்களின் உள் நாவில் இன்பச் சுவையின் குமிழி பொங்கச் சிவ அமுது ஊறுவதால் வயிற்றுப்பசி ஆறும் என்பதனையும் கீழ்க்காணும் பாடல்கள் உணர்த்துகின்றன.

'சிவமா துடனே அநுபோ கமதாய்
சிவஞா னமுதே பசியாறி'
(சிவமா துடனே - திருவருணை)

'குகனே குருபர னேயென நெஞ்சிற்
புகழ அருள்கொடு நாவினி லின்பக்
குமுளி சிவவமு தூறுக வுந்திப் பசியாறி'
(குகனே - சிதம்பரம்)

இவ்வாறு பத்தியால் இறைவன் பொருள்சேர் புகழைப்பாடி, அவனோடு கலத்தலை, மணமாகக் கொண்டு

'சிவசுட ரதனைப் பாவை மணமென மருவி''
(திருநில - கயிலை)

என்றும் பாடியுள்ளார் அருணகிரிநாதர்.

முடிப்புரை: 'ஞானத்தால் தொழுவார் சிலர் ஞானிகள்' என்றும் அப்பரின் ஒப்பரிய வாக்குக்கேற்ப ஞானத்தால் இறைவனைப் பாடித் தொழுதல் வேண்டும் என்பதுவும், அவ்வாறு தொழுவதால், 'உள்ள மலம் நீங்கி, ஓங்கும் சிவானந்த வெள்ளம் திளைத்து அதுவாய் மேவுதலே விள்ளரிய சித்தாந்த முத்தி என்பதவும், அம்முத்தி நிலையே ஞான வழிபாட்டின் முடிந்த முடிவு என்பதுவும் திருப்புகழால் உணர்த்தப் பெறுகின்றது.

சிவசங்கரியின் "கடைசியில்" நாவலில் குறுநாவல் பண்புகள்

ம. திருமலை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை - 625 021

முன்னுரை

குறுநாவல் என்ற இலக்கிய வகையினைப் பற்றிக் குறிப்பிடும் அறிஞர்களும் படைப்பாளிகளும் குறுநாவல் என்பது சிறுகதையை விடப் பெரியதாகவும் நாவலைவிடச் சிறியதாகவும் இருக்கும் என்பர். ''இலக்கியத்தகுதி குன்றிய ஓர் இலக்கிய வகை'' என்று சி. எப். ஸ்காட் என்பவர் குறுநாவலைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.[1] தமிழ் மொழியைப் பொறுத்தவரை நாவல் இலக்கிய வரலாற்றில் பல சிறந்த குறுநாவல்கள் தோன்றியுள்ளன. எனவே குறுநாவலின் உத்திகளான கரு, கதைப்பின்னல், கதைமாந்தர் படைப்பு, கால அமைப்பு போன்றவைகளைச் சிவசங்கரியின் 'கடைசியில்' என்ற நாவலில் பொருத்திப் பார்க்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

குறுநாவலின் பண்புகள்

அறிஞர்களால் கூறப்பட்ட செய்திகளின் அடிப்படையில் குறுநாவலின் பண்புகளாகக் குறுநாவல் என்னும் இலக்கிய வகை பற்றிப் பல்வேறு கருத்துக்களை உய்த்துணரலாம். அவை பின்வருமாறு:

1. குறுநாவலின் கதைப்பின்னல் ஏறத்தாழ நான்குக்கு மேற்படாத தலைமை நிகழ்ச்சிகளைக் கொண்டிருக்கும்,
2. குறுநாவலின் கதைப்பின்னலில் தலைமைக் கதை மட்டும் கதைப்பின்னலை உருவாக்குகிறது; துணைக் கதைகள் இடம்பெறுவது மிகமிகக் குறைவு.

3. குறுநாவலில் கதைநிகழ்ச்சிகள் ஒரே சீராக ஆற்றொழுக் காகக் கூறப்படும். இதனால் பெரும்பான்மையான குறுநாவல் கதைப்பின்னல்கள் மிக எளிமையான அமைப்புடையனவாக இருக்கும்.

4. கதைமாந்தர் படைப்பு சிறுகதையில் இருப்பதைப் போல, மனிதனின் ஒரு கோணத்தை மட்டும் காட்டு வதாகவும் அதே சமயம் ஒரு கோணத்தை விரிவாகக் காட்டுவதாகவும் இருக்கும்.

5. குறுநாவல் கதைமாந்தர் படைப்பில் ஏதேனும் ஒரு கதைமாந்தர் மட்டுமே முதன்மையான இடத்தைப் பெறும் நிலையிலும், ஏனைய கதைமாந்தர்கள் வெறும் நிழல்கள் போல வந்துபோகும் நிலையிலும் படைக்கப் படுவர்.

6. குறுநாவல்களில் பெரும்பாலும் தொகுப்புக் கால அமைப்பு பின்பற்றப்படும்; இதற்கு மாறாக நீட்டல்கால அமைப்பு பின்பற்றப்படுகின்ற குறுநாவல்களில் தொகை உரை உத்தி மிகுதியாகப் பயன்படுத்தப்படும்.

மேற்கூறப்பெற்ற இச்செய்திகளின் பின்னணியில் சிவசங்கரி யின் ‘கடைசியில்’ என்ற குறுநாவல் இக்கட்டுரையில் ஆராயப் படுகின்றது.

கரு

உலகில் பணத்திற்கு ஆசைப்படாத மனிதனே இல்லை. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு விலையுண்டு. தகுந்த சூழ்நிலைகள் உருவாகும்போது மனிதனுக்குள்ளே ஆழ்ந்திருக்கும் பொருள் வேட்கை வெளிப்படும் என்ற கருத்து இக்குறுநாவலின் கருவாக அமைந்திருக்கின்றது.

கதைப்பின்னல்

‘கடைசியில்’ என்ற இக்குறுநாவலின் கதைப்பின்னலில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைப் பின்வருமாறு காணலாம்.

1. சென்னையிலிருந்து கிராமத்திற்கு மாற்றலாகி வந்த வங்கி அதிகாரி சரவணனின் மனைவி கிராமத்தில் பொழுதுபோக்காக வீட்டுத்தோட்டம் போடுகிறாள்.

2. தோட்ட வேலை செய்வதற்காக வந்த பாவாடை என்பவனின் நற்பண்புகளை அறிகிறாள்; அவனது வாழ்க்கையில் முதல் மனைவி வேறொருவனுடன் ஓடிப்

போனதால் அவன் இரண்டாம் திருமணம் செய்து கொண்டு அவளை மிகுந்த பொறுப்புடன் காப்பாற்றி வருவதையும் அவள் அறிகிறாள்.

3. பாவாடையின் முதல் மனைவி (ஓடிப்போனவள்) பழனியம்மாளை மீண்டும் பாவாடையுடன் சேர்த்து வைக்க முயற்சி செய்கின்றனர்; பாவாடை உறுதியாக மறுத்து விடுகிறான்.

4. நிலக் குத்தகைக்குப் பணம் தேவைப்பட, பாவாடை பலரிடமும் பணம் கேட்டுக் கிடைக்காத நிலையில், முதல் மனைவியான பழனியம்மாளை நகை, சீர், பணம் முதவியவற்றுடன் ஏற்றுக் கொண்டு இரண்டாம் மனைவி தேவகியை வீட்டை விட்டுத் துரத்தி விடுகிறான்.

இந்நான்கு நிகழ்ச்சிகளே 'கடைசியில்' குறுநாவலின் கதைப் பின்னலை உருவாக்குகின்றன. இவை ஒரே சீராக, ஆற்றொழுக் காகக் கூறப்பட்டு, மிக எளிமையான கதைப்பின்னல் அமைந் திருக்கின்றது.

கதைப்பின்னலில் நிகழ்ச்சிகளுக்கிடையே ஒருமைப்பாடு காணப்படுகின்றது. சிறுசிறு நிகழ்ச்சிகள், உரையாடல்கள் அனைத்துமே நாவலின் முதன்மை நோக்கிற்குத் துணைசெய்யும் வகையில் அமைந்திருக்கின்றன. பாவாடை பணத்திற்காக அதிக ஆசைப்படாமை, வீட்டு எஜமானி பணம் தருகின்றபோதும் பெற்றுக் கொள்ளத் தயங்குதல், துன்பங்களைத் தானே எதிர் கொள்ளுதல், பிறருக்கு உதவியாக இருத்தல், இரண்டாவது மனைவி தேவகி மீது அன்பைச் சொரிதல் ஆகிய பண்புகள் சிறு சிறு நிகழ்ச்சிகளின் மூலம் விரிவாகக் காட்டப்படுகின்றன. குறுநாவலின் போக்கில் இந்நிகழ்ச்சிகள் மிகையாகச் சித்திரிக்கப் படுகின்றன என்ற எண்ணம் தோன்றும் வண்ணம் இவை விரிவாகக் கூறப்படுகின்றன. எனினும் நாவலின் இறுதியில் பாவாடை பணம், நகை, சீர்வரிசைகள் ஆகியவற்றின் பொருட்டு ஓடிப்போன முதல் மனைவியை மீண்டும் ஏற்றுக்கொண்டு இரண்டாம் மனைவியைத் துரத்திவிடும் செயல் கூறப்படும்போது இந்நிகழ்ச்சிகள் மிகுந்த பொருள் உடையனவாகின்றன.

முதலில் செய்திகளை நுட்பமாகவும் விரிவாகவும் ஓர் ஆவணப் பதிவேட்டில் பதிவது போல விவரித்து, பின்னர் பிறிதோரிடத்தில் அச்செய்திகளுக்குப் பொருளும் இலக்கியச் சுவையும் ஏற்படுமாறு கூறுகின்ற இவ்வுத்தி இக்குறுநாவலில் மிகச் சிறப்பாக அமைந் திருக்கின்றது.

கதைமாந்தர்-ஒரு கோணம் மட்டும்

'கடைசியில்' குறுநாவலில் கதைமாந்தர் படைப்பு, கதைமாந்தரின் ஒரு கோணத்தை மட்டும் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. குறுநாவலின் தொடக்கம் முதல் இறுதிவரை பாவாடை என்ற கதைமாந்தரின் பண்புகள் விரிவாக எடுத்துக்காட்டப்படுகின்றன. எவ்வளவுதான் உயர்ந்த பண்புகள் உடையவனாக இருந்தபோதிலும் பணநெருக்கடி ஏற்படும்போது அவன் பண்புகளினின்று தாழ்ந்து விடுவது இறுதியில் காட்டப்படுகின்றது. குறுநாலின் கருத்துக் குவிவாக வரும் இப்பகுதிக்குரிய பின்னணியாகத்தான் விரிவான செய்திகள் இக்குறுநாவலின் முதற்பகுதியிலும் இடைப்பகுதியிலும் அமைகின்றன. பணத்திற்கு மனிதன் அடிமையாகும் ஒரு கோணம் மட்டுமே பாவாடை பாத்திரப் படைப்பின் மூலம் காட்டப்படுகின்றது. இதே செய்தி ஒரு சிறு கதையின் மூலம் காட்டப்பட்டிருந்தால், பாத்திரப் பண்புகளை விளக்கும் பின்னணிச் செய்திகள் இவ்வளவு விரிவாகக் கூறப்பட்டிருக்கமாட்டா; இதுவே ஒரு நாவல் வடிவத்தில் இடம் பெற்றிருக்குமாயின் பின்னணிச் செய்திகள் விரிவாகக் கூறப்பட்டிருக்கும்; கதைமாந்தர் பண்பு விளக்கமும் பண்பில் ஏற்படும் மாற்றமும் பல படிநிலைகளில் வைத்துக் கூறப்பட்டிருக்கும்; இதனால் பாத்திரப்பண்பில் பல கோணங்களும் வெளிப்பட்டிருக்கும். இதற்கு மாறாகக் குறுநாவல் என்ற வடிவத்தில் கூறப்பட்டிருப்பதால், பாத்திரத்தின் ஒரு பகுதி மட்டுமே விளக்கம் பெற்றிருக்கின்றது.

'கடைசியில்' என்ற குறுநாவலில் படைக்கப்பட்டிருக்கும் ஏனைய கதைமாந்தர்களான பழனியம்மாள், தேவகி, உமா, சரவணன் ஆகியோரின் செயல்கள் முழுமையாகக் காட்டப்படவில்லை. பாவாடையுடன் இவர்களுக்கு எந்த எல்லைவரை தொடர்பு இருக்கின்றதோ, அந்த அளவிற்கே இவர்களின் பண்புகள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

கால அமைப்பு

இக் குறுநாவலில் நீட்டல் கால அமைப்பு இடம் பெற்றிக்கிறது. அதாவது மிகச் சிறிய கதையைக் கூறுவதற்கு மிக விரிவான கால எல்லை இதில் அமைந்திருப்பதால் அதனைச் சமன் செய்யும் நோக்குடன் இக்குறுநாவலில் தொகையுரையை நாவலாசிரியை சிவசங்கரி பயன்படுத்தியிருக்கிறார்.

"இரண்டு மாசங்களா!

உம்...எண்ணி இரண்டே மாதம். அதற்குள் உமாவிடமும் அவள் தோட்டத்திலும் ஏக மாற்றங்கள்"[2]

என்றும்,

"இங்கு வந்து பத்து மாதங்கள் ஓடிவிட்டன"[3]

என்றும் குறுநாவலின் கால எல்லையுடன் தொடர்புடைய வகையில் தொகையுரைகள் அமைந்திருக்கின்றன.

பெரும்பான்மையான குறுநாவல்களில் தொகுப்புக்கால அமைப்பு[4] அமைந்திருக்கும். ஜெயகாந்தனின் 'எனக்காக அழு', 'ராஜம் கிருஷ்ணனின்' 'பாரத குமாரிகள்' அசோக மித்திரனின் 'தலைமுறைகள்' போன்ற குறுநாவல்களில் பின்பற்றப் பட்டிருக்கும் கால அமைப்பினை இங்குக் கருதிப் பார்க்கலாம். ஆயின் சிவசங்கரியின் இக்குறுநாவலில் நீட்டல் கால அமைப்பு அமைந்திருக்கின்றது. எனினும் கால எல்லையுடன் அதில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இயைபுடையதாக ஆக்குவதற்கு மேற்காட்டியவாறு தொகையுரை உத்தி பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

முடிவுரை

குறுநாவல் என்ற இலக்கிய வகையின் பொதுப்பண்புகள் எழுத்தாளர் சிவசங்கரியின் 'கடைசியில்' என்ற குறுநாவலில் முற்றிலும் பொருத்தமுற அமைந்திருக்கின்றன. குறுநாவல் என்ற இலக்கிய வகையைக் கையாண்டிருக்கும் தமிழ் எழுத்தாளர்களுள் சிவசங்கரி ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெறுகின்றார்.

குறிப்புகள்

1 C. F. Scott, Current Literary Terms (London:Macmillan, 1967), p 197.

2. சிவசங்கரி, காளான் (சென்னை; வானதி பதிப்பகம், 1981) ப. 101.

3. மேலது., ப. 163

4. நீட்டல் கால அமைப்பு என்பது வாழ்வில் நடப்பதைப் போல முதலில் நடந்ததை முதலிலும் கடைசியில் நடந்ததைக் கடைசியாகவும் இலக்கியத்தில் படைப்பதாகும். தொகுப்புக் கால அமைப்பு என்பது பலதரப்பட்ட செயல்களைச் செறிவாக அமைத்துக் கூறுவதாகும்; இதில் காலவரிசை முறை பின்பற்றப்படாது. - வை. சச்சிதானந்தன் - மேலை இலக்கியச் சொல்லகராதி, ப. 95.

'மான விஜயம்' கவிதை நாடகமா?

சாமி. திருமாவளவன்
தேசியக் கல்லூரி
திருச்சி-1

தமிழ் நாடக மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் குறிப்பிடத் தக்கவர் வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் அவர்கள். தமிழின் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தனது பெயரைப் பரிதிமாற்கலைஞர் என மாற்றிக் கொண்டவர். அவரது படைப்புக்களில் முதலிடம் பெறுவது நாடகவியல் என்னும் இலக்கண நூலாகும். இந்நூல் நாடக அமைப்பிற்கு இலக்கணம் வகுக்கிறது. அவரது 'மான விஜயம்' கவிதை நாடக நூலா? என்பதை இக்கட்டுரை ஆய்கிறது.

நாடகம்- சொல்- விளக்கம்

நாடகம் என்ற சொல்லிற்கு நடித்தல் என்று பொருள் கொள்ளலாம். அதாவது நாட்டில் நிகழ்ந்த, நிகழும் நிகழ்ச்சி களைப் போலச் செய்தலே நாடகமாகும்.

நாடு + அகம் - நாடகம். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம் அதாவது நாட்டின் சென்ற கால, நிகழ்கால, வருங்கால நிகழ்ச்சிகளைத் தன் அகத்தே காட்டுவதால் நாடு + அகம் - நாடகம் என்றானது என்பார் ஔவை தி. க. சண்முகம்[1]

கவிதை நாடகம்

கவிதை நாடகம் அண்மைக் காலத்தில் தோன்றியதாகும். உரைநடை அமைப்பில் இருந்த நாடகம் காலப்போக்கில் மாற்றமடைந்து பல கூறுகளாகப் பிரிந்ததில் கவிதை நாடகம் என்ற துறை உருவாயிற்று.

பெரும் பாலான கவிதை நாடகங்கள் ஆசிரியப்பா அமைப்பிலும் களம், அங்கம் முதலிய பிரிவுகளாகவும் படைக்கப் பட்டுள்ளன.

முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல், என்ற ஐவகைக் கூறுகளையும் உள்ளடக்கியதாக நாடகம் படைக்கப்பட வேண்டும் என்பது நாடகவியல் கூறும் இலக்கணமாகும். அந்நூலே கவிதை நாடகத்தின் உட்பிரிவாகிய அங்கத்திற்கு

ஒன்று முதலாப் பத்து காறும்
அங்கம் அடைந்திடும் அரிய நாடகம்[2]

எனவும் களத்திற்கு

பகரும் ஓர் இடத்தினே நிகழ்ந்திடும் காட்சியைக்
களமென மொழிப இளர் மேல் திசையோர்[3]

என்றும் இலக்கணம் கூறுகிறது.

மேற்சொன்ன இலக்கணக் கூறுகளை அடியொற்றியே மான விஜயம் படைக்கப் பட்டுள்ளது.

மான விஜயத்தில் முதலில் வாழ்த்துப் பாடலும், முதல் அங்கத்தில் பாத்திர அறிமுகங்களும் இரண்டாம் அங்கத்தில் பாத்திர உரையாடல்களும், மூன்றாம் அங்கத்தில் கதையின் உச்சமும், நான்காவது அங்கத்தில் கதைத்திருப்பு முனையும், ஐந்தாம் அங்கத்தில் முடிவும் பயனும் கூறுமுகமாக அமைந்துள்ளது.

சிறந்த பாத்திரங்களை அறிமுகப்படுத்திக் கதையைக் கூறிச் சிக்கலை உருவாக்கி வளர்த்து அவிழ்த்து முடிவைத் துன்பியலாக முடித்துள்ளார்.

கதைக் கரு

மறக்குடி பிறந்தோன் எந்நிலையிலும் எந்நாளும் தன் மானம் இழந்து வாழ மாட்டான் புலமைச் செருக்குள்ளவன் எக்காலத்தும் மற்றவன் தாள் பணிய மாட்டான் என்பதைக் கருவெனக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது.

கதைச் சுருக்கம் களம் வாரியாக

சேரமான் கணைக்காலிரும்பொறை, அவனது புலவன் பொய்கையார் இவர்கள் மீது ஏதோ காரணத்தால் பகை கொண்ட சோழ மன்னன் செங்கணான் என்பவனால் சிறை வைக்கப்படும் நிலையில் கதை தொடங்குகிறது.

முதற்களம்

சேரனும் பொய்கையாரும் சிறை வைக்கப்பட்ட மாலைப் பொழுதில் பொய்கையாரிடம் 'உம்மைக் கைது செய்த நான் எம் விருப்பப்படி ஆட்டுவிக்க முடியும்' என்று கூற பொய்கை யாரோ தாமே சிறைப்பட்டதாகக் கூற நகைத்த சோழனிடம், 'என் உடலைத் தான் சிறை செய்ய முடிந்ததே தவிர உள்ளத்தை யல்ல' என்று கூற சோழன் சினமடைந்து பொய்கையார் கேட்பது எதுவும் தரக்கூடாது என்று சிறைக் காவலரிடம் கூறுவதுடன் முதற்களம் நிறைகிறது,

இரண்டாம் களம்

போரில் தோற்றுச் சிறையிலிருக்கும் சேரமான் உணவு உண்ணாமல் தன் இழிநிலை எண்ணி வருந்துவதைக் கூறுகிறது.

மூன்றாம் களம்

சிறைக்கோட்டம் செல்லும் சோழன் செங்கணான் பொய்கையார் தரையில் படுத்துறங்குவதைக் கண்டு மனம் வருந்தித் திருந்துவதைக் கூறுகிறது.

நான்காம் களம்

சேரன் மனைவி இராசமாதேவி தான் கண்ட கனவு பற்றித் தோழி அறிவுடை நங்கையிடம் கூறுவதாய் அமைந்துள்ளது.

ஐந்தாம் களம்

காலைப் பொழுதில் பொய்கையாரைக் கண்டு மனம் திருந்திய சோழன் வணங்கியது கண்டு மகிழ்ந்து களவழி நாற்பது பாடி சேரனையும், சோழனையும் நண்பர்களாக்க எண்ணிச் சிறைக்கோட்டம் செல்வதையும் கூறுகிறது.

ஆறாம் களம்

தனிமைச் சிறையில் வாடும் சேரமான் நீர் வேட்கையால் சிறைக் காவலர்களிடம் நீர் கேட்கின்றான். அவர்களோ காலந் தாழ்த்தி நீர் தருகின்றனர். அதை ஏற்க மறுத்துத் தனக்கு இந்த இழிநிலை வந்துவிட்டதே என எண்ணி வருந்தி வேதனை யுற்று உயிர் துறப்பதும், புலவர் பொய்கையாரும் தன் நண்பன் உயிர் துறந்ததை எண்ணி உடன் உயிர் துறப்பதும், சோழன் மனைவி தான் கண்ட கனவு பலித்துவிட்டதே எனப் புலம்பு வதும், தனது பாவச் செயல்களுக்குக் கழுவாயாக எழுபது

கோயில்கள் அமைக்க எண்ணுவதுடன் ஆறாவது களம் நிறைவு பெறுகிறது.

அங்கம் – விளக்கம்

அவலச் சுவைத்தாய் அங்கமொன்று உடைத்தாய்க்
கவலை கொள் மகளிர் கசிந்து உளம் அழுங்க
வன்மினர் வாய் விடுத்து அரற்றும் மான்பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள் பாத்திரம் வயங்குறு வதுவே
அங்க மென்ன அறிதல் வேண்டும்.

என்பது அங்கமென்பதற்கு நாடகவியல் தரும் இலக்கணமாகும்.

அதாவது பெண்கள் மனமிரங்கி வருந்தும்படியும், எதிரிலிருப்பவர்கள் வாய்விட்டு அழும் வண்ணமும் அவலச் சுவையையே பெரிதும் கூறி ஓரங்கத்தைக் கொண்டு உரையாடல் அமைத்து நாடகப் பாத்திரங்களுடன் அனைவரும் ஒன்றுமாறு அமைப்பது 'அங்கம்' என்னும் நாடக வகையாகும்.

இதன்படி ஓர் அங்கத்துடன் ஆறு களங்களைக் கொண்டு நூற்றிமுப்பத்திரண்டு செய்யுட்களை ஆயிரத்துப் பதினாறு வரிகளில் அகவற்பாவால் அமைத்துப் பாடப்பட்டது. 'மான விஜயம்' இடையிடையே விருத்தமும், வெண்பாவும் விரவிவர அமைக்கப்பட்டுள்ளது.

களம் கூறும் செய்திகள்

முதலாவது களம் உயிரின் இலக்கணத்தைக் கூறுகிறது.

இரண்டாவது களம் போர் முறைகளைப் பற்றியும், நீதி முறைகளையும் விவரித்துக் கூறுகிறது.

மூன்றாவது களம் உடல் நலத்தினைப் போற்றும் விதத்தினைக் கூறுகிறது.

நான்காவது களம் கனவைப் பற்றிக் கூறுகிறது.

ஐந்தாவது களம் ஆசிரியர், மாணவர் ஒழுகலாறுகளைக் கூறுகிறது.

ஆறாவது களம் பொருட்சிறப்பு, மானத்தின் சிறப்பையும் வலியுறுத்திக் கூறுகிறது.

நாடகவியல் கூறும் களம் அங்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அகவற்பா அமைப்பில் 'மான விஜயம்' படைக்

கப்பட்டுள்ளதால் இந்நூல் சிறந்த நாடக நூல் என்பது மட்டு மன்றி, நாடகவியல் இலக்கணத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு நூலாகவும் அமைந்துள்ளது.

குறிப்புகள்

1. அவ்வை தி.க. சண்முகம், **நாடகக் கலை**, (சென்னை, அவ்வை பதிப்பகம், 1972), ப. 15.
2. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், **நாடகவியல்**, (மதுரை, வி.சூ. சுவாமிநாதன், 1956) நூ. எ - 189,
3. மேற்படி, நூ. எ. 191.
4. மேறபடி, நூ. எ - 151.

சங்க இலக்கியத்தில் மக்கட்பேறு

க. திலகவதி
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

சங்க காலம் முதல் அறிவியல் யுகமான இக்காலம் வரை மக்கட்பேறு என்பது மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒரு பேறாக, செல்வமாகக் கருதப்பட்டு வருகின்றது. குழந்தையில்லாதவர்கள், குழந்தைப்பேற்றிற்காகப் பல்வேறு சமயச் சடங்குகளை மேற்கொண்டு வேண்டி வழிபடுவதையும் காணலாம். இக்காலத்தில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் வாயிலாகச் சோதனைக்குழாய் முறை மூலமாகவும், செயற்கை முறையில் கருவூட்டல் மூலமாகவும், வாடகைத் தாய் முறை மூலமாகவும் குழந்தைப் பேற்றை அடைந்து வருகின்றனர். இவ்வாறின்றிக் குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்கும் முறையும் காணப்படுகின்றது. இந்நிலையில் சங்க இலக்கியத்தில் மக்கட்பேற்று நிலை எவ்வாறு பேசப்பட்டுள்ளது என்பதை ஆராய்வது சிறப்புடையதாகும்.

வாழையடி வாழையாக வளர்ந்து நிலைத்துவரும் குடிப் பெருமையை உயர்த்திடும் மக்கட்பேற்றைப் பண்டைத் தமிழர் மிகவும் விரும்பினர். 'பொருளோடு புணர்ந்த பக்கம்' என்பதற்கு இளம்பூரணர் உரைகூறுமிடத்துப் 'புதல்வர்ப்பேறும் கொள்க' என்று குறிப்பிடுவதால் (இளம்பூரணர் உரை ப. 125) 'புதல்வர்ப் பேற்றின் அருமையை உணரலாம். குடிக்கு விளக்காகிய புதல்வனை ஈன்றெடுக்கும் மனைவியை மிக உயர்வாகப் போற்றினர். கணவனும், மனைவியுமாக உரிமை பூண்டு வாழும் அன்பு வாழ்க்கையின் மணிமுடியாகத் திகழ்வது குழந்தைச் செல்வமாகும். குழந்தையை ஈன்று புறந்தருதலை (புற. 312) தம் தலையாய கடனாகக் கொணடனர் மகளிர். இதனாலேயே வள்ளுவர் தம் குறளில் (60) "மங்கலம் என்ப மனைமாட்சி

மற்றதன், நன்கலம் நன்மக்கட்பேறு'' என்று கூறியுள்ளார். குடியின் பெருமையை உணரச் செய்யும் அரிய கடமையை ஆற்றியவள் தலைவி என்று தலைவனும், தோழியும் அவளைப் புகழ்ந்துரைப்பதை அகநானூற்றுப் பாடல்கள் (110, 230) காட்டுகின்றன. 'மனைக்கு விளக்காயினள் புதல்வன் தாய்' என்று ஐங்குறுநாறு (405) தாய்மையைப் போற்றுகின்றது. குழந்தை யுள்ள குடும்பம் சிதைவுபடாது என்பதனை மருதக் கலியில் பரத்தமைத் தந்தையையும், ஊடல் கொண்ட தாயையும், இணைக்கும் பாலமாகப் புதல்வன் விளங்கியது கூறப்படுவது கொண்டு அறியலாம். இதனால் குடும்பம் என்ற நிறுவனத்தைச் சிதையவிடாமல் ஒருமைப்படுத்துகிற ஆற்றலாகக் குழந்தை இருந்தது என உணரலாம்.

மகளிர் கருவுற்றிருக்கும் காலத்தில் மண்ணையும், புளிச்சுவை யுடைய பொருளையும் விரும்பி உண்பர். மகளிர் சூலுற்றிருக்கும் பொழுது அவளைச் சுற்றத்தார் மிக்க பொறுப்புடன் கவனித்துக் கொண்டனர். சூல் கொண்ட பெண் ஓர் இடுக்கணுமின்றிப் புதல்வனைப் பெறுதல் வேண்டும் என்று தெய்வத்தைப் பரவினர். பின் நேர்ந்து கொண்ட பலிக்கடனைத் தெய்வத்திற்குச் செய்தனர் என்று மதுரைக்காஞ்சி (600 – 610) குறிப்பிடுகிறது. குழந்தை தாயின் கருவில் பத்துமாதம் (திங்கள்) வளர்தலையும், சிறந்த புதல்வனை ஈன்ற தாயை வாழ்த்தும் போது அவள் வயிற்றை வாழ்த்துதலையும் பற்றிப் பதிற்றுப்பத்து இயம்புகிறது ஒரு குழந்தையோடு (மகன் அல்லது மகள்) இருந்த பெற்றோரைப் புறநானூறும் (புற. 279, 338), நற்றிணையும் (நற். 184) கூறு கின்றன. மகளிர் தன் கணவர் இம்மை, மறுமை பயன்களைப் பெற்றேம் என்று மகிழும்படி பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்தனர். இதனைக், ''கணவர் உவப்பப் புதல்வர்ப் பயந்து'' என்று மதுரைக்காஞ்சியும் (600), ''இம்மை உலகத்து இசையொடும் விளங்கி, மறுமை உலகமும் மறுவின்று எய்துப, சிறுவர்ப் பயந்த செம்மலோர் என அகநானூறும் (66) குறிப்பிடு கின்றன. புதல்வனைச் செல்வம், பொன் எனப் போற்றியமை (அக. 16, ஐங். 265, பதி. 57, 74) புதல்வரைப் பெறாதவர் களுக்குப் போரில் விலக்கு அளித்தமை (புற. 9, அக. 222) ஆகிய வற்றைச் சங்கப் பாடல்கள் சுட்டுகின்றன. தம் மக்கள் சிறு கையால் அளாவிய கூழ் அமிழ்தினும் இனியதாகும். அத்தகைய மயக்குறு மக்களைப் பெறாதவர்களுக்குத் தாம் வாழும் நாளின்

கண் ஒரு பயனும் இல்லையாகிவிடும் என்பதைப் பாண்டியன் அறிவுடைநம்பி புறப்பாடலில் (புற. 188) கூறுவதால் குழந்தைப் பேற்றின் அருமையை உணரமுடிகிறது. தென்புலத்தார் (பிதிரர்) கடன் கழிக்கப் புதல்வர்ப்பேறு இன்றியமையாதது. தென் புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலால் நிறைவெய்தும் என்பதனை, "இளந்துணைப் புதல்வரின் முதியர் பேணித் தொல் கடன் இறுத்த" எனப் பதிற்றுப்பத்து (70) கூறுகிறது.

தாய் – சேய் உறவுநிலை

அக இலக்கியத்தில் தாயின் செயற்பாங்கு, மகளின் காதல் வாழ்வோடு பேசப்படுகிறது. தன் மகனது காதல் வாழ்வோடு தாயின் செயற்பாங்கு பேசப்படவில்லை. மேலும், குழந்தை ஆணாயின் புற இலக்கியத்தில் போர்க்களத்தோடு இணைத்தும், அக இலக்கியத்தில் ஊடல் தீர்க்க அமைந்த ஒரு வாயிலாகத் தாயுடன் இணைத்தும் பேசப்படுகிறது. பிள்ளை பெறுதல், பிள்ளையை வளர்த்தல், போர்க்களம் சென்று போரிட ஆயத்தப் படுத்தல், ஆண் குழந்தை முதன்மை பெறுதல், பெண் குழந்தை உடைமைப் பொருளாகக் கொள்ளப்படுதல் ஆகிய நிலைகளில் சங்க காலத்தில் தாய்-சேய் உறவு காணப் படுகின்றது. போர்க்களத்தில் வீரச் செயல்கள் மூலம் அரசுக்கும், தாய்க்கும், தன் குடிக்கும் பெருமை தேடித் தருபவனாக ஆண்மகன் அமைவதும், மகள் மறுத்தல் காரணமாகப் போர் ஏற்படவும், ஊரின் அமைதி கெடவும் காரணமாகப் பெண் மகள் அமைவதுமான நிலையைக் காரணமாகக் குறிப்பிடலாம். ஊரின் அமைதியைக் கெடுக்கும் பெண்ணைப் பெற்றவளை அறனிலள், மண்பில்தாய் என்றும், பகையினை அல்லவா வளர்த்திருக்கிறாள் என்றும் ஊரவர் கூறும் கூற்றுக்கள் காணப்படுகின்றன. ஆண் பிள்ளையை முன்வைத்துத் தாயைச் பேசும் பொழுது அவளைக் கொண்டாடும் சமூகம் பெண்பிள்ளையைப் பெற்றவளை நினைத்து இவள் இந்தப் பெண்பிள்ளையைப் பெறாமலேயே இருந்திருக்கலாம் எனக் கருதும் போக்கும் (புற. 336, 348, 349) காணப்படுகிறது.

அவற்றைக் கருத்தில் கொண்டு நோக்குங்கால், மகப்பேற்றில் ஆண்மக்கட்பேறு மதிக்கப்பட்ட அளவு, பெண் மக்கட்பேறு மதிக்கப்படாத நிலை, சங்க காலத்தமிழ்ச் சமுதாயத்திலும்

இருந்துள்ளது. இதற்கு அமைதியாக, பெண்பாலின் மென்மைத் தன்மை உடலியல் அடிப்படையில் (வீட்டுவிலக்கு, கருவுற்ற காலம், மகப்பேற்றுக்காலம்) போரில் நேரே ஈடுபட இயலாமை, ஆண்மக்கள் வழியே குடும்ப உடைமையும், உரிமையும் இறங்கும் அமைப்பு, சமய நம்பிக்கை அடிப்படையில் எழுந்த பிதிர்க்கடன் புரியும் உரிமை இன்மை போன்றவற்றைக் கூறலாமாயினும், சமுதாய நினைப்பில் அன்றும் ஆண்-பெண் சமத்துவ உணர்வு இல்லாமை நிலவிய உண்மையை மறுத்தற்கில்லை. உலகில் அக்காலத்தே சிறந்து விளங்கிய பிறநாட்டுச் சமுதாயங்களில் பெரும்பாலும் இந்நிலையே இருந்துள்ளது.

இந்தியத் திருச்சபை வரலாறு
கி.பி. 52 - 1997

ஜெ. துரைராஜ்
தமிழ்ப்பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 5

முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கைச் சிறப்பு, உயிர்த்தெழுதல் என்னும் நிகழ்ச்சிகள் ஒரு சிறிய நாட்டில் நிகழ்ந்தவை. எனினும் அவற்றின் செய்தி உலகின் ஐம்பெருங்கண்டங்களிலும் பரவி அதனைக் கேட்ட மக்கள் வாழ்க்கையை மாற்றியமைத்தது. அதன் வாயிலாக ஆங்காங்கு சபைகள் தோன்றின. அத்துடன் கிறிஸ்துவ வரலாறும் தோன்றலாயிற்று. இந்தியத் திருச்சபை வரலாற்றை ஆறு பகுதிகளாகப் பிரித்து அதன் வளர்ச்சியை இவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

முதல்படி நிலை கி.பி. 52 – கி.பி. 345: சுமார். கி.பி. 52-ஆம் ஆண்டு இயேசு கிறிஸ்துவின் 12 சீடர்களில் ஒருவராகிய தோமா இந்தியாவிற்கு வந்து மேற்கு கடற்கரைப் பகுதியில் 7 சபைகளை ஏற்படுத்தியதாகவும், கிழக்குக் கடற்கரையில் சென்னை மயிலாப்பூரில் இரத்த சாட்சியாக மரித்தார் என்றும் பாரம்பரியம் கூறுகிறது. இந்த பாரம்பரியத்தின் படி இன்றும் மலபார் பகுதியில் தோமா கிறிஸ்தவர்கள் வாழ்கின்றார்கள். அத்தோடு மயிலாப்பூர் தூய தோமா ஆலயத்தில் ஆண்டுதோறும் தோமா இரத்த சாட்சியாக மரித்தகை விழாவாகக் கொண்டாடு கிறார்கள். இதிலிருந்து கிறிஸ்தவம் இந்தியாவிற்கு முதல் நூற்றாண்டில் வந்தது என்று கூறலாம்.

கி.பி. 345-ஆம் ஆண்டு கேரளாவில் உள்ள மலியங்கார என்னுமிடத்திற்கு "தாமஸ் காண" என்பவர் சில ஆயர் களோடும், சில குடும்பத்தினரோடும் வந்து சேர்ந்தார்கள். இவர்

கள் சீரியா நாட்டுக் கிறிஸ்தவர்கள். இவர்கள் மலபாரிலுள்ள தோமா கிறிஸ்தவர்களைக் கவனித்துக் கொள்ள வந்தார்கள். இவர்களே கல்தேயத் திருச்சபையின் பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டவர்களான சீரியா கிறிஸ்துவராவார்கள்.

இரண்டாம்படி நிலை: கி.பி. 345-1498 ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் சீரியாவிலிருந்தும், பெர்சியாவிலிருந்தும், ஆர்மீனியாவிலிருந்தும் பல திருத்தொண்டர்கள் இந்தியாவிற்கு வந்து நற்செய்தியைப் போதித்து ஜேக்கபயிட், மார்தோமா, சூரியானி கிறிஸ்தவ சபைகள் ஏற்படுத்தினார்கள். கி.பி. 813-910 இக்காலத்தில் கேரளாவிலுள்ள கொய்லானிற்கு "புரோத்" "சபோர்" என்ற இரண்டு பேராயர்களும், இவர்களோடு "சப்ரிஸ்க்" என்ற வியாபாரியும் வந்தார்கள். இவர்கள் முன்பே ஏற்படுத்தப்பட்டிருந்த சபைகளுக்குக் கிறிஸ்துவப் போதனைக் கொடுத்தார்கள்.

1291-ம் ஆண்டு ஜான்-ஆப்-கானாயோ சீனாவிற்குச் செல்லும் வழியில் மைலாப்பூரில் தங்கி சிலரைக் கிறிஸ்தவராக்கி லத்தீன் சபையை நிறுவினார். இவருக்கு 30 ஆண்டுகளுக்குப் பின்னர் "ஜோர்டான் கேட்லேயர் செவிராக்" என்ற பிரான்ஸ் கன் ஒருவர் தன்னோடு 4 டொமினிக்கன் துறவிகளோடு "தான" பகுதிக்கு வந்தார், சுமார் 10,000 பேர்களைக் கிறிஸ்தவர் களாக்கினார். இவர் இந்தியாவில் பேராயராகக் நியமிக்கப் பட்டார்.

1348-ம் ஆண்டு "ஜான்-டி-மரிங்கோலி" என்ற திருத் தொண்டர், சீனாவிலிருந்து ரோமுக்குச் செல்லும் வழியில் கொய்லோன் பகுதிகளில் தங்கி நற்செய்திப் பணி செய்து பின் ரோம் சென்றார்.

முதல் நூற்றாண்டு முதல் 15-ம் நூற்றாண்டு வரைக்கும் கிறிஸ்தவம் இந்தியாவில் பல பகுதிகளில் பரவியிருந்தாலும் பெரும் வளர்ச்சியும் மாற்றமும் ஏற்படவில்லை.

மூன்றாம்படி நிலை, கி.பி. 1498-1706: 15-ஆம் நூற்றண்டின் பிற்பகுதி, உலக வரலாற்றில் சிறப்பான காலம். மேற்கு ஐரோப்பிய மக்கள் கடல் கடந்து சென்று புதிய நாடு களைக் கண்டுபிடிக்கும் போட்டியில் ஈடுபட்டனர். இதன் மூலம்

இந்தியாவிற்கு கி.பி. 1498-ம் ஆண்டு "வாஸ் கோடகாமா" என்ற போர்த்துக்கீசியர் கடல்வழி கண்டுபிடித்தார். இந்தியா போர்த்துக் கீசியரின் வாணிபத்தளமாக்கப்பட்டது. போர்த்துக் கீசியர் ஆரம்பத்தில் வாணிக ஊழியத்தை நாடியே இந்தியா வந்தனர் என்றாலும் இவர்களை அனுப்பிய அரசர்கள் மனதில் மற்றொரு எண்ணமும் குடி புகுந்தது. அது உரோமக் கிறிஸ்தவ சமயத்தை தம் ஆட்சியின் கீழ்ப்பட்ட மக்கள் அனைவரின் மத்தியிலும் பரப்ப வேண்டும் என்பதே. போர்த்துக்கீசிய அரசு இந்தியாவில் கிறிஸ்தவம் பரவ உதவியாக இருந்தது.

1542-ஆம் ஆண்டு தூய பிரான்ஸ சேவியர் கோவாவிற்கு வந்தார். இவர் இயேசு சங்க முதல் மிசனரி. இவர் தம் முடையத் திருத்தொண்டால் அநேக "தலித்" மக்களைக் கிறிஸ்தவராக்கினார். 1595-ம் ஆண்டு பேராயர் மெனிஸிஸ் என்பவர் உதயம்பூர் மாமன்றத்தைக் கூட்டி, அதன் மூலம் தோமா கிறிஸ்தவர்களை ரோமன் கத்தோலிக்க கிறிஸ்துவத்தின் கீழ் கொண்டு வந்தார். ராபர்டி நோபலி மதுரையில் தன்னை ஒரு பிராமணனாக அடையாளம் காட்டிக்கொண்டு உயர் ஜாதிக்காரரைக் கிறிஸ்தவராக்க முயற்சித்தார். பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் தமிழ் இலக்கியத்தில் அவர் காட்டிய ஆர்வத்தால் இந்தியாவில் கிறிஸ்தவம் வளர்ந்தது. மைசூரில் இந்துக்களைப் போல உண்டு, உடுத்தி வந்த "அபே-டு-பாய்" என்பவரின் மூலம் இந்தியத் திருச்சபை வளர்ச்சி பெற்றது. 17-ம் நூற்றாண்டின் கடைசியில் இந்தியாவில் ஒன்றரைக் கோடியிலிருந்து இரண்டு கோடிக் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள்.

1498-ம் ஆண்டு முதல் 1706-ம் ஆண்டு வரைக்கும் டொமினிக்கன்ஸ், பிரான்ஸிஸ்கன், இயேசு சங்கங்களுக்கு சபையார்கள், சமயப்பணியோடு, சமுதாயப்பணி, கல்விப்பணி, ஆகியவற்றில் சிறந்த பணியாற்றினார்கள்.

நான்காம்படி நிலை 1706 - 1857: 15, 16ம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட அரசியல், சமுதாயம், சமயம், மறுமலர்ச்சி, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், புதிய கடல்வழி கண்டுபிடிப்புகள், சமயப்போதனைகள், புதிய பகுத்தறிவுக் கொள்கைகள், சீர்திருத்த இயக்கங்களும் சீர்திருத்தத் தலைவர்களின் கருத்துக்களும், உலகத்திருச்சபை வரலாற்றில் பெரும்

மாற்றம் ஏற்படுத்தின. ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையி லிருந்து 1517ம் ஆண்டு மார்ட்டின் லூத்தர் மூலம் ஜெர்மனியில் சீர்திருத்த சபை ஏற்பட்டது. இதன் வாயிலாக இந்தியாவிற்கு 1706ம் ஆண்டு ''பர்த்தலேமேயு சீகன்பால்க்'' ''புளுசோ'' ஆகிய இருவர் தென்னிந்தியாவிலுள்ள தரங்கம்பாடிக்கு முதல் சீர்திருத்தச்சபை திருத்தொண்டராக வந்தார்கள். இவர்கள் மூலம் லூத்தரன் என்ற சீர்திருத்தச்சபை இந்தியாவில் வளர்ந்தது. 1759ம் ஆண்டு பிரடிரிக்தவாட்ஸ் தென்னிந்தியா விற்கு வந்து தென்னிந்தியா முழுவதும் கிறிஸ்துவம் பரவச் செய்தார்.

1792ம் ஆண்டு பேப்டிஸ்ட் மிசனரி சங்கம் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டு, அதன் திருத்தொண்டர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். வில்லியம்கேரி, மார்ஸ்மென், வார்டு ஆகியோர் கல்கத்தாவில் மிசன் பணியைத் தொடங்கி வட இந்தியா முழுமையிலும்நற்செய்திப்பணி, கல்விப்பணி, சமுதாயப்பணிகளை ஆற்றினார்கள். இந்தியத் திருச்சபை வரலாற்றில் இந்திய மொழிகளில் இலக்கணம், நற்செய்தியை மொழிபெயர்த் தார்கள். பள்ளிகளையும், கல்லூரிகளையும் ஆரம்பித்தார்கள். மூடநம்பிக்கையினை ஒழிக்கப்பாடுபட்டார்கள். முதல் வழியாக இந்தியத் திருச்சபை வளர்ந்தது.

வில்லியம் வில்பர்போர்ஸ், சார்லஸ் கிரேண்ட் போன்ற சீர்திருத்தவாதிகளின் முயற்சியால் ஆங்கிலேயப் பாராளுமன்றம் 1813ம் ஆண்டு உரிமை சாசனச் சட்டம் ஒன்று இயற்றியது இதன் அடிப்படையில் சி. எம். எஸ். (சர்ச் மிசனரி சொசைட்டி) சங்கத்தின் மூலம் இந்தியாவிற்குத் திருத்தொண்டர்களை அனுப்ப வழிபிறந்தது. இக்காலத்தில் இந்தியாவந்த திருத் தொண்டர்கள், இந்தியாவில் நற்செய்திப்பணியோடு பள்ளி களையும், கல்லூரிகளையும் ஆரம்பித்தார்கள். இங்கு ஆங்கிலம், பிராந்திய மொழிகள், அறிவியல், மேற்கத்தியத்தத்துவம் ஆகியவைகள் போதிக்கப்பட்டன. இப்பள்ளிகளிலும், கல்லூரி களிலும் படித்தவர்கள் 19ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இந்தியாவின் மறுமலர்ச்சிக்கும், விடுதலைக்கும் ஏதுகரமாக அமைந்தார்கள். இவர்கள் வழியாகவும் இந்தியாவில் திருச் சபைகள் வளர்ந்தன. 1813ம் ஆண்டு சாசனத்தின் மூலம்

அமெரிக்க மிசன், லண்டன் மிசனரி சங்கம், சர்ச்மிசனரி சங்கம், மெதடிஸ்ட் மிசனரி சங்கம் போன்ற மிசனரி சங்கங்கள் இந்தியா முழுவதும் தங்கள் பணியைத் தொடங்கி திருச்சபைகளை ஆரம்பித்தன.

இக்காலத்தில் சீர்திருத்த சபை திருத்தொண்டர்கள் ''பிட்டரேசன் தியரி''யை அனுபவத்தில் கொண்டு வந்தார்கள். இந்தியச் சமுதாயத்தில் மேல்சாதி மக்கள் என்ற பிராமணர் களை மதமாற்றத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு மீதியுள்ள மக்களை மதமாற்றம் செய்தார்கள். இதனால் அயல்நாட்டுத் திருத்தொண்டர்களை ஆங்கிலேய அரசாங்கத்தில் ஏஜெண்டுகள் என்று நினைக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. இதனால் 1857ம் ஆண்டு முதல் சுதந்திரப் போராட்டம் (சிப்பாய்க்கலகம்) ஏற்பட்டது. நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபைகள், சீர்திருத்தத் திருச்சபைகள் சற்று தொய்வு ஏற்படலாயிற்று.

முடிவுரை: இந்தியத் திருச்சபை முதல் நூற்றாண்டு முதல் இன்று வரை சமயப்பணி மட்டுமல்லாது கல்விப்பணி. மருத்துவப் பணி, சமுதாயப் பணியில் அதிக ஈடுபாடு கொண்டு, பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவ மனைகள் சமூக நலப்பணித் திட்டங்கள் பல ஏற்படுத்தி சமுதாயத்தில் நலிவுற்றோர், ஒடுக்கப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், தலித் இன மக்கள் போன்றோருக்குப் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கல்வியின் மூலம் அறிவு வளர்ச்சியையும், அறிவியல் வளர்ச்சியையும், மருத்துவத்தின் மூலம் நல வாழ்வும், சமுதாயப்பணியின் மூலம் மேம்பாடு அடையவும் இந்தியத் திருச்சபை விடிவெள்ளியாக அமைந்தது.

என். ஏ. வேலாயுதம் சிறுகதைகளில் மொழிநடை

டி. தேவசம்பத்
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி
நாகர்கோவில்

இலக்கிய ஆக்கத்திற்கு மொழி இன்றியமையாதது. காலத்திற்கேற்ப மொழிநடையில் வேறுபாடுகள் அமைவது இயல்பு. குமரிமாவட்ட எழுத்தாளரில் ஒருவராகிய என். ஏ. வேலாயுதத்தின் (1931-) 'அருளப்பன் மிகவும் நல்லவன்', 'எப்போது ஆதரவு', 'அதே கண்கள்', 'பட்டிக்காட்டுக் கட்டழகி', 'உயிர்கொடுத்த உத்தமர்' ஆகிய ஐந்து சிறு கதைகளின் மொழி நடையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நடை விளக்கம்

நடை என்பது எடுத்துக்கொண்ட கருத்துக்குக் கலைவடிவம் தரும் முழுநிறைவான ஊடகமேயாகும். படைப்பாளன் மொழியை ஆளும் திறனை நடையழகு புலப்படுத்துகின்றது. நிலைபேறான இந்த நடையழகு தான் முத்திரை என்பார். அகிலன் கதை சொல்லப்படும் முறையாலும், கருத்து வெளிப் பாட்டிற்குப் பயன்படுத்தும், சொல், தொடர் அமைப்பு முறை யாலும் நடைசிறப்பை அறியலாம்.

என்.ஏ. வேலாயுதம் நடை

என். ஏ. வேலாயுதத்தின் நடை உணர்ச்சிப்புலப்பாடும் கருத்து வெளியீட்டுத்திறனும் அமையப்பெற்ற இனிய எளிய நடை. தெரிந்த உவமைகளைப் பயன்படுத்தி அணிநலம் பெறச் செய்துள்ளார். பலவிடங்களில் உணர்வழுத்தத்தோடு அமைத்து உள்ளார்.

மொழிநடையின் மூன்று நிலைகள்

மொழிநடை ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை என்ற மூன்று நிலைகளில் சிறப்புப் பெறுகின்றது. இதனை, இந்நிலை ஒவ்வொன்றிலும் காணப்படுகின்ற கூறுகள் மொழி என்னும் கோணத்திலிருந்தே விளக்கப்படுகின்றன. என்பார் ஜெ. நீதிவாணன், இம்மூன்று நிலைகளும் என்.எ. வேலாயுதத்தின் சிறுகதைகளில் காணப்படுகின்றன.

ஒலிநிலை

பாட்டில் ஒலிநிலையை எளிதில் உணரமுடியும் கருத்துக்கு முதலிடம் தராமல் படிக்கும்போதே உரைநடையில் ஒலி நயத்தை உய்த்துணர முடியும். உரைநடையில் ஒலிக்கூறுகள் அளவாக மாறிமாறியமைந்து ஒருவகையான ஒத்திசைவு நயத்தைத் தோற்றுவிக்கிறது என்பார் இராமலிங்கம்.

ஒலிக்குறிப்புச் சொற்கள்

ஒலிக்குறிப்புச் சொற்கள் கதைச் சூழலோடு வாசகனை ஒன்ற வைக்கின்றன. என். எ. வேலாயுதம் தனது கதைகளில் ஒலிகுறிப்புச் சொற்களைச் சூழலுக்கும், பின்னணிக்கும் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு கையாண்டுள்ளார்.

எ–டு 'ஓ...வென்று அழுதான்' (அதே கண்கள்; ப:7)
'ஓ...வென்று அழுதவாறே' (எப்போது ஆதரவு; ப:15)
'ஊ...ஹூம்... (அருளப்பன் மிகவும் நல்லவன்; ப:79)

கதைமாந்தர் அவல உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் எழுப்புகின்ற ஓலங்களாகவே ஒலிக்குறிப்புச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

இரட்டைக்கிளவி

எ–டு 'படபடப்புடன்' (அதே கண்கள்; ப:6)
'முணுமுணுத்தனர்' (அதே கண்கள்; பக். 76)
'பரபரப்புடன்' (அதே கண்கள்; ப. 6)

என்பன போன்ற இரட்டைக் கிளவிகளை மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். இவை வியப்புச் சுவையைத் தோற்றுவிப்பதாய் அமைகின்றன.

அடுக்குத்தொடர்

எ-டு 'கொஞ்சங் கொஞ்சமாக' (அதே கண்கள்; ப:2)

'எத்தனை எத்தனை விதங்கள்' (அதே கண்கள்; ப:4)

'நினைந்து நினைந்து' (அதே கண்கள்; ப:9)

'விழுந்து விழுந்து' (எப்போது ஆதரவு; ப:24)

'நாகரிகம் நாகரிகம்' (எப்போது ஆதரவு; ப:17)

என்பன போன்ற இத்தொடர்கள் சொல்ல விழையும் கருத்துருக் களுக்கு அழுத்தம் தரும் நிலையில் அமைந்து கதையில் விறுவிறுப்பைத் தோற்றுவிக்கின்றன.

சந்தநயம்

சொற்களைச் சந்த நயத்தோடு அமைக்கும்போது வாச கனைக் கதையின் பால் ஈர்த்து கதை நிகழ்ச்சிகளுடன் ஒன்றச் செய்கின்றன. (எ-டு) 'மாலை நேரத்துத் தென்றல் அந்தி வானத்தின் அழகு சிரிப்பு இவைகளெல்லாம் மூடி மறைத்தபடி வந்து திரண்ட கார்மேகம் சோ என்ற இரைச்சலுடன் மழை யாகப் பொழியத் தொடங்கியது. (பட்டிக்காட்டுக் கட்டழகி, ப:113)

முரண்தொடை

(எ - டு) நான் உயர்குடியில் பிறந்தவள். இலட்சாதிபதியின் மகளாகப் பிறக்காவிட்டாலும் பிட்சாதிபதிக்குப் பிறக்கவில்லை. (எப்போதும் ஆதரவு; ப:5)

சொல்நிலை

கருத்துப் புலபாட்டிற்குத் தேவையான சொற்களை மட்டும் தேர்ந்தெடுத்து அமைக்கும்போது கதைவெற்றி பெறுகின்றது. என்.எ. வேலாயுதம் தனது கதைகளில் தமிழ்ச் சொற்களுக்கே முதலிடம் கொடுத்துள்ளார். எனினும் இவர் நடையில் பிற மொழிச் சொற்களும் அமைந்துள்ளன.

எ - டு **வடமொழிச்சொற்கள்**	**ஆங்கிலச்சொற்கள்**
துஷ்டி (அதே கண்கள் ப:1)	பிளவுஸ் (எப்போது ஆதரவு ப:20)

வடமொழிச்சொற்கள்	ஆங்கிலச்சொற்கள்
குமஸ்தா (அதே கண்கள் ப:6)	டிராயர் (எப்போது ஆதரவு ப: 21)
விஷயம் (அதே கண்கள் ப:6)	டாக்டர் (எப்போது ஆதரவு ப: 20)
கஷாயம் (எப்போது ஆதரவு ப:7)	ஆபீஸ் (அதே கண்கள் ப:1)
காரியாலயம் (எப்போது ஆதரவு ப: 6)	போலீஸ் (அதே கண்கள் ப:77)
கன்னிகாஸ்திரி (அதே கண்கள் ப: 70)	பஸ் (அதே கண்கள் ப:16)
ராட்சஸ மூட்டை (எப்போது ஆதரவு ப:1)	

தொடர்நிலை

சொற்களைத் தேர்ந்தெடுத்து முறையாகத் தொடர்களை அமைக்கும் போதே கருத்துக்கள் தெளிவாகப் புலப்படுகின்றன. சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்களுக்கு இது சிறப்புத்தரும். என்.எ. வேலாயுதம் கதைகளில் வினாத் தொடர்களும், உம்மைத் தொடர்களும் கையளாப்பட்டுள்ளன. தனது கருத்துக்களுக்கு அழுத்தம் தரும் வகையில் பலரும் நன்கறிந்த பழமொழிகளை எடுத்தாண்டுள்ளார்.

வினாத்தொடர்

எ - டு அடிப்பாவி நீயும் ஒரு பெண்ணா? உனக்கும் இந்தக் கண்களா? உனக்கொரு கணவனா? குழந்தைகளை வேறு பெற்று விட்டாயா? பண்பு கெட்டபரத்தைக்கு என்காதல் தெய்வத்தின் கண்களா? (அதே கண்கள்; ப:16)

உம்மைத்தொடர்

(எ.டு) தன் மகளை வளர்த்தது போதாதென்று பேரனையும் பேத்தியையும் வளர்க்க வேண்டியவரானார்கள். தாத்தாவும், பாட்டியும் (எப்போது ஆதரவு: ப:19)

பழமொழிகள்

(எ - டு) ஆடையில்லாதவன் அரைமனிதன் (எப்போதும் ஆதரவு; ப: 18) துஷ்டனைக் கண்டால் தூர விலகு (எப்பொழுது ஆதரவு; ப.22).

உவமைகள்

(எ - டு) நெருப்பு ஏற்ற கோர்வைப் பட்டாசுகள் வெடித்துச் சிதறினாற்போல மேரியின் கோபாக்கினி ஏற்று நாற்புறமும் சிதறி ஓடின குழந்தைகள். பாம்புப்பட்டாசுகளைப் போல் இதமாக நழுவினர், ஆசிரியைகள் (அதே கண்கள் ப.17)

என். எ. வேலாயுதத்தின் சிறுகதைகளில் மொழிநடை ஒலிநிலை, சொல்நிலை, தொடர்நிலை எனும் மூன்று நிலைகளில் சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழ் எழுத்துக்களின் நிலை

டி. தேவதாஸ்
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி
நாகர்கோவில்

தமிழ் மொழியிலுள்ள (முதல்) எழுத்துக்களின் எண்ணிக்கையை உயிர் பன்னிரண்டு மெய் பதினெட்டு என மரபிலக்கணங்கள் வரையறை செய்துள்ளன. பிற மொழிகளின் கலப்புக்கு உட்படாமல் தமிழ் இருந்த காலத்தில் இந்த எழுத்துக்கள் கருத்துப் பரிமாற்றத்திற்குப் போதுமானதாக இருந்தன. ஆனால் தமிழில் சமஸ்கிருதக் கலப்பு ஏற்பட்ட பிறகு சிறிது சிறிதாக இந்த நிலைமை மாறத் தொடங்கியது. மேலும் தமிழ்ச் சொற்களின் இடத்தைச் சமஸ்கிருத சொற்கள் பல பிடித்துக் கொண்டன. இதனால் தமிழ்ச் சொற்கள் பல வழக்கிறந்தன. மேலும் வேதம் சார்ந்த செய்திகளைத் தமிழருக்கு அறிமுகப் படுத்துவதற்காகப்பல சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் புகுத்தப் பட்டன. இதனால் தமிழ் தனித் தன்மையை இழக்கத் தொடங்கியது. இதைக் கருத்தில் கொண்ட தொல்காப்பியர் சமஸ்கிருதச் சொற்கள் அப்படியே தமிழில் வழங்காமல் இருக்க சில கட்டுப்பாடுகளை விதித்தார். அவற்றில் சமஸ்கிருத சொற்களைத் தமிழில் எழுதும் போது சமஸ்கிருதச் சிறப்பெழுத்துக்களை நீக்கிவிட்டு தமிழ் எழுத்துக்களால் எழுதவேண்டும் என்றும் அவ்வாறு எழுதும்போது அந்தச் சொற்கள் சிதைவுற்றன போல் இருந்தாலும் தவறில்லை என்றும் ஆனால் அவற்றைச் சமஸ்கிருதச் சிறப்பு எழுத்துக்களால் எழுதி சமஸ்கிருத வடிவத்திற்கு இயைபுடைய வடிவமாக மாற்றக் கூடாது என்றும் தொல்காப்பியத்தில் வருவது குறிப்பிடத் தக்கதாகும். ஆனால் பிற்காலத்தில் இந்த நிலைமை மாறியது. சமஸ்கிருதச் சொற்கள் அப்படியே தமிழில் எழுத்துப் பெயர்ப்பு செய்யப்பட்டன. இதற்காகத் தமிழில் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ ஆகிய எழுத்துக்கள்

சேர்க்கப்பட்டன. தனித்தமிழ் இயக்கத்தின் செல்வாக்கால் இந்த நிலைமையில் சிறிது மாற்றம் ஏற்பட்டது. ஆயினும் ஜ, ஷ, ஸ, ஹ ஆகியவற்றை முழுதுமாக விட்டுவிட வேண்டிய நிலை இன்று வரை ஏற்படவில்லை.

ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து மக்களின் வாழ்க்கை நிலையிலும் தேவையிலும் வளர்ச்சியும் மாற்றங்களும் ஏற்பட்டன. மேலும் அறிவியல் வளர்ச்சியும் புதிய கண்டுபிடிப்புகளும் தமிழில் தாக்கத்தை ஏற்படுத்தின. இதனால் தமிழ் புதிய மாறுதல்களை அடையத் தொடங்கியது. அந்த மாறுதல்கள் தமிழின் ஒலியன்களின் எண்ணிக்கையும் பெருக காரணமாகியது. இவ்வாறு தமிழில் புகுந்த ஒலியன்களில் B கரம் F கரம் X கரம் ஆகியனவற்றைச் சுட்டிக்காட்டலாம் இவற்றில் B கரம் வருகின்ற சொல்லான 'Bata' என்பதை 'பாட்டா' என எழுதாமல் 'பே(ட்)டா' என எழுதி பிரச்சனையைத் தீர்க்கலாம். இருந்தாலும் 'Bomb' என்ற சொல்லை 'பாம்பு' என எழுதினால் பொருள் குழப்பம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க B கரத்திற்கு தமிழில் வரிவடிவத்தைத் உருவாக்கிக் கொள்வது தேவை போல் தோன்றுகிறது. மேலும் F கரம் Fan, Fanta (ஒரு வகை பானம்) Fast Fill போன்றச் சொற்களில் வருகின்றது. இச்சொற்கள் தமிழிலும் தவிர்க்க முடியாத அளவில் பயன்படுத்தப் படுகின்றன எனவே F கர ஒலியும் தமிழுக்குத் தேவை போல் உள்ளது. இந்த ஒலியனைப் பா.வே. மாணிக்க நாயக்கர் 'ஃப்' என எழுதினார் (செ. வை. சண்முகம். 1994 : 5) துக்ளக் இதழின் ஆசிரியர் சோ. ராமசாமி F, Fா என்றெல்லாம் எழுதி பின் அவ்வாறு எழுதுவதைக் கைவிட்டு விட்டார் (க.ப, அறவாணன் 1988 : 73) இருந்தாலும் தற்போது இந்த ஒலியன் ஃபுளூரின், ஃபாரடே போன்ற சொற்களில் ஆய்த எழுத்தைப் பயன்படுத்தி அதாவது பா. வே. மாணிக்க நாயக்கர் எழுதிய முறையில் எழுதப்பட்டு வருகிறது. X கரம் ஆங்கிலத்தில் கூட B கரம் F கரம் ஆகியவற்றிற்குச் சமமான அளவில் பயன்படுத்தப் படுவதில்லை. மேலும் தமிழில் இது 'e' கரத்தின் மாற்றொலி என்ற அளவிலேயே கவனிக்கப் படுகிறது. இந்த அடிப்படையில் Xerox என்பதை 'சிறாக்ஸ்' என்றோ 'ஜெராக்ஸ்' என்றோ எழுதலாம். இதனை பா. வே. மாணிக்க நாயக்கர் ஃக் என எழுதினார் என்பதுவும் இங்கு நினைவில் கொள்ளத் தக்கது. பொதுவாக தற்கால அறிவியல் வளர்ச்சி என்பது முழுதும்

மேலை நாடுகளையே சார்ந்திருப்பதால் B கரம் F கரம் ஆகிய எழுத்துக்களுக்கு ஆவது தமிழில் வரிவடிவங்களை உருவாக்கிக் கொள்வது நல்லது என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

தமிழில் தற்போது வழக்கில் இருக்கும் நகரம் தனித்து வரும்போது ஆடொலி (trill) ஆகவும் இரட்டித்து வரும்போதும் னகரத்தோடு சேர்ந்து வரும்போதும் தடையொலி (stop) ஆகவும் ஒலிக்கிறது. இந்த இரண்டாவது வேறுபாட்டைக் காட்ட தமிழில் தற்போது எழுத்து வடிவம் இல்லை. ஆனால் இதற்குத் தொல் திராவிட மொழியில் (Proto Dravidian Language) தனி எழுத்து வடிவம் இருந்ததாக மலையாள இலக்கண நூலான கேரள பாணினித்தில் குறிப்பொன்று உள்ளது இந்த ஒலியனும் Teacher, India Today, Tooth paste போன்ற ஆங்கிலச் சொற்களின் வழியாகத் தமிழில் அதிகமாக வழங்குகிறது. இது தற்போது 'டகர' ஒலியன் மூலம் தமிழில் எழுதப்படுகிறது. இதற்கும் தமிழில் புதிய எழுத்தை உருவாக்கிக் கொள்வது நலம் தருவதாகும்.

தமிழில் புதிய எழுத்துக்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்து உருவானது சமஸ்கிருதத்தைப் போலவே தமிழிலும் உள்ள க, ச, ட, த, ப என்ற ஐந்து வல்லினங்களுக்கும் உயிர்ப்பு ஒலி, ஒலிப்பு ஒலி, ஒலிப்பு உயிர்ப்பு ஒலி என மொத்தம் பதினைந்து எழுத்துக்களைக் கூட உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை சிலர் முன் வைத்தனர் (சி. சிவசேகரம், 1993: 154, 165). இவ்வாறு செய்வது பிற மொழிச் சொற்களை அப்படியே எழுத்துப் பெயர்ப்பு செய்து எழுத உதவுமாயினும் உண்மையில் தேவை அற்றதாகும். ஏனெனில் இந்த எழுத்துக் களில் ஐகரம், Bகரம் ஆகியன மட்டுமே தேவை உடையனவாக உள்ளன. ஒரு எழுத்து பல ஒலியன்களின் வரிவடிவமாக இருப்பதை ஆங்கிலம் போன்ற பல மொழிகளில் காணலாம். இதற்காக ஆங்கிலத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது ஏற்புடைய கருத்து ஆகாது. மேலும் ஒரு மொழியில் உள்ள சொற்களை அப்படியே மற்றொரு மொழியில் ஒலிப்பிறழ்வு இல்லாமல் எழுத வேண்டும் என்று நினைப்பது நடைமுறைத் தன்மை உடையதாகவும் இல்லை.

பொதுப்படையாகப் பார்த்தால் மொழியில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வது மொழியை எளிதாகக் கற்பதற்கும் இயந்திரங்களில் பயன் படுத்துவதற்கும் தடையாக அமையும். மேலும் இதனால் மொழி வளர்ச்சி பாதிப்படையும். இருந்தாலும் தமிழில் ஐ, ஔ, முதலிய தேவையற்ற எழுத்துக்களை நீக்கிவிட்டு ஜ, B, F, ஸ, ஷ, ஹ, ற்றகரத் தடையொலி ஆகியவற்றை சேர்த்துக் கொள்வது நன்மை தருவதாக இருக்கும்.

துணை நூல்கள்

1. அறவாணன் க. ப. (ப. ஆ), 1988, மொழிப் பாடம், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை.
2. குழந்தைசாமி வா. செ., 1988, அறிவியல் தமிழ், பாரதி பதிப்பகம், சென்னை.
3. சண்முகம் செ. வை., 1994, அறிவியல் தமிழாக்கம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. சிவசேகரம் சி., 1993, தமிழும் அயலும்.

இருபதாம் நூற்றாண்டும் காரைக்கால் முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பும்!

ஹ. மு. நத்தர்சா
புதுக்கல்லூரி
சென்னை - 14.

"மானமிகு தருமத்தின் வழிநின்று, வாய்மையினில் ஊனமில் சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதியாய்" திகழ்ந்திட்ட "மாடமலி காரைக்கால் வளநகரின்" பெருமை, சைவர்களால் போற்றப்படும் அறுபத்திமூன்று நாயன்மார்களில் ஒரே பெண் நாயன்மாராகத் திகழ்ந்த 'புனிதவதி' என்றழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையாரின் தோற்றத்திற்குப் பிறகே, திசை எட்டும் தெரியத் தொடங்கியது.

"பண்ணார்ந்த பாடல்களால் இறைவனைப் பாடிப்போற்றும் திருநெறிய தமிழ்நெறியை முதன்முதல் தோற்றுவித்த அருளாசிரியர் காரைக்காலம்மையாரேயாவார்" என அம்மையாரின் அளப்பரிய பணியை வியந்து போற்றுகின்றார் அறிஞர் வெள்ளை வாரணனார்.

இரட்டை மணிமாலை என்ற பிரபந்தத்தை முதன் முதலில் பாடிய பெருமையும், அந்தாதி என்னும் இலக்கியத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்திய சிறப்பும் இவரையே சாரும்.

காரைக்காலம்மையார் தோன்றிய களப்பிரர் காலம்தொட்டு இன்றைய நூற்றாண்டு வரை வரலாற்றின் பதிவேட்டில் காரைக்கால் தன் முத்திரையை அவ்வப்போது அழுத்தமாகப் பதிவு செய்து கொண்டு வந்துள்ளது. குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டில் காரை வாழ் முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பு நினைவுகூரத்தக்க வகையில் அமைந்துள்ளது. அதனைக்

கோடிட்டுக் காட்டுவது, இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்க மாகும்.

சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாகத் திகழ்ந்த புகாரா நகரத்தில் தோன்றி, திருச்சியில் ஞானதீட்சைப் பெற்று, காரையில் தன்னை நிலைநிறுத்திய சேக்தாவூது என்னும் திருப்பெயரை உடைய ஹாஜி இமாம்திவான் மஸ்தான் சாகிபு என்னும் சூஃபி ஞானியின் வருகைக்குப் பின்னரே, காரை வாழ் இஸ்லாமியத் தமிழரின் இலக்கியப் பங்களிப்புத் தொடக்கம் பெறுகிறது எனத் துணியலாம்.

காரைப் பகுதியைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழரின் இலக்கியப் பங்களிப்பை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை, 1. அச்சும் பதிப்பும், 2. இதழும் பணியும், 3. இன்றைய இலக்கியமும் காரை முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்பும் என்னும் வகைமைக்குள் அடங்கும்.

1. அச்சும் பதிப்பும்

சிறாப்புராண வசனத்தை அச்சு வடிவில் கொண்டுவந்த பெருமையைக் காரைக்கால் பெற்றுத் திகழ்கிறது.

"நாகூர் குலாம் காதிறு நாவலர் செய்த சிறாப்புராண வசனம், திருநெல்வேலிப்பேட்டை சேய்ப்பு காசிம் ராவுத்தர் குமாரர் காசி முகியித்தீன் ராவுத்தர் அவர்களால் காரைக்கால் முகம்மது சமதானி இயந்திரசாலையில் 1886-இல் பதிப்பிக்கப் பட்டதாக" வரலாறு மொழிகிறது.

காலத்தொன்மைமிக்க மற்றொரு அச்சுப் பதிப்பு, காரைக்கால் அமிர்தகவி சாயபு மரைக்காயரால் இயற்றப்பட்டு, நாகூர் முகியித்தீன் அப்துல்காதர் புலவரால் பார்வையிடப்பட்டு 1911-இல் வெளியிடப்பட்ட "மஹ்பூபு பரபதக் கீர்த்தனமாகும்". இந்நூல் சிங்கப்பூர் ஞானோதய அச்சியந்திரசாலையில் பதிக்கப் பட்டதாக நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காயற்பட்டணம் கண்ணகுமது மகுதூம் முகம்மது புலவரால் அச்சு நோட்டமிடப்பட்டு காரைக்கால் ஸமதானி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டதாக, கும்பகோணம் திருநரையூர் சேகுமுகம்மது லப்பை ஆலம் சாகிபால் இயற்றப்பட்ட "இரத்தின விலாசம்

நசிகத்துலாசம்'' என்னும் நூல் கிடைக்கப் பெற்றுள்ளது. இது பதிப்பிக்கப்பட்ட ஆண்டு தெரியவில்லை.

இந்நூலில் இடம் பெற்றுள்ள—

''இந்தக் கித்தாபு வேண்டிய புண்ணியவான்கள் சென்னப் பட்டணம் குஜிலிக்கடை பிரம்பு ஒத்தவாடை இருசப்ப மேஸ்திரி தெருவில் நாற்பத்தைந்தாவது நம்பர் வீட்டில் பெற்றுக் கொள்ளலாம்.''

என்னும் விளம்பரத்தின் வழி. இன்றைய சென்னை, முன்னர் சென்னப்பட்டணம் என்னும் பெயரில் அழைக்கப்பட்ட விபரத்தை அறிய முடிகிறது.

''காரை மஸ்தான் காரணச் சரித்திரம்'' என்னும் நூல் ம. காதிறுகனி எங்பவரால் எழுதப்பட்டு 1903-இல் காரைக்கால் ''செயின்ட் ஜோஸப்ஸ் அச்சுக்கூடத்தில்'' பதிப்பிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாமாதம்பி மரைக்காயர் மகன் சின்னத்தம்பி மரைக்காயரால் இயற்றப்பட்ட ''ரத்ன மணிமாலை'' என்னும் நூலும் காலத்தால் தொன்மைமிக்க நூல்களில் ஒன்றாகும்.

ஆரிபு மும்மணி மாலை'' என்னும் நூல் 1948-ஆம் ஆண்டு காரைக்கால் 'நியாயபிமானி மின்னியக்கப் பதிப்பகத்தால்' பதிப்பிக்கப்பட்டுள்ளது.

2. இதழும் பணியும்

தமிழகத்தில் இருந்து முதன்முதலில் வெளிவந்த முதல் மூன்று இஸ்லாமியத் தமிழிதழ்களில் ஒன்று - காரைக்காலைச் சேர்ந்தது ஆகும். 1888-இல் 'முகம்மது ஸமதானி' என்னும் பெயரில் அவ்விதழ் வெளிவந்தது. ஆசிரியர், காசிம் முகைதீன் ராவுத்தர்.

1888-இல் தொடங்கி இன்று வரை காரைக்காலில் இருந்து இருபத்தைந்துக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளிவந்துள்ளன. இவ்விதழ்களில் பெரும்மாலானவை இஸ்லாமிய இதழ்களாகவோ அல்லது இஸ்லாமியரால் நடத்தப்பட்டு வந்துள்ளவையாகவோ இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இளம்பிறை, கதிர், குரல், சத்யஜோதி, சன்மார்க்க சங்கு, சாந்திவிகடன், சூறாவளி, பால்யன், பறக்கும் பால்யன், பிர்தௌஸ், பூஒளி, பூஞ்சோலை, மஜ்னவிசரீப், மின்னொளி,

முகம்மதுஸமதானி, முஸலீம் லீக், வர்த்தகன், வானொளி, வெள்ளி, ஸ்டார், தாஜ்மகால் முதலியன காரையில் இருந்து வெளிவந்த இதழ்களாகும்.

இவற்றுள் பெரும்பாலானவை நாற்பதுகளில் வெளிவந்தவை யாகும்.

வானொளி (1945), வர்த்தகன் 1945), கதிர் (1946), பூ ஒளி (1948) என்னும் இதழ்கள் மாத இதழ்களாகவும், சன்மார்க்க சங்கு (1946), மின்னொளி ((1946), ஸ்டார் (1946), குரல் (1949), என்னும் இதழ்கள் மாதமிருமுறை இதழ்களாகவும், பால்யன் (1944), வெள்ளி (1945), முஸ்லிம்லீக் ((1947) என்னும் இதழ்கள் வார இதழ்களாகவும் வெளிவந்துள்ளன.

நாற்பதுகளை இஸ்லாமிய இதழ்களின் பொற்காலமாகக் கருதுகிறார், ''மறுமலர்ச்சி'' ஆசிரியர் ஏ. எம். யூசுப். (தமிழகம் கண்ட முஸ்லிம் இதழ்கள், மறுமலர்ச்சி. 28—12—90)

நாற்பதுகளில் வெளிவந்த இதழ்களுள் தனி முத்திரையைப் பெற்றுத் திகழ்கிறது. ''பால்யன்'' வாரஇதழ்.

3. இன்றைய இலக்கியமும் காரை முஸ்லிம்களின் பங்களிப்பும்:

இன்றைய இலக்கியத்தில் முத்திரைப்பதித்த முன்னோடி எழுத்தாளராகத் திகழ்கிறார். காரை ஏ. எம். அலி.

பிரஞ்சுமொழிபயின்று அதில் வல்லமைப் பெற்றுத் திகழ்ந்த ஏ. எம். அலி, உலகச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராகிய மாப்பஸானின் பிரஞ்சு சிறுகதைகளைத் தமிழில் மொழி பெயர்த்து ''கோழிக்கள்ளன்'' என்னும் பெயரில் நூல் வடிவில் கொணர்ந்தார்.

உலகப்புகழ்ப்பெற்ற நாவலாசிரியர் அலக்ஸாண்டர் டூமாஸ் எழுதிய ''மோன்த் கிரிஸ்தோவின் மன்னன்'' என்ற பெருங் கதையைப் பிரஞ்சிலிருந்து தமிழாக்கம் செய்துள்ளார். மாவீரன் நெப்போலியனின் இறுதிகாலத்தைப் பின்னணியாகக் கொண்டு உள்ள ''ராஜாளி மைந்தன்'' என்னும் நாவலை ''மலேயா நண்பன்'' இதழில் வெளியிட்டுள்ளார். ''ரயில் காதல்'' என்னும் மற்றொரு மொழிபெயர்ப்பு நூலும் குறிப்பிடத் தக்கதாகும்.

பிரஞ்சுமொழியில் ஆகாகான் எழுதிய சுயவரலாற்றைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இந்தியாவில் பிரசித்திப்

பெற்றுத் திகழும் ''விக்கிரமாதித்தன் கதைகளை'' பிரஞ்சு மொழியாக்கம் செய்துள்ளார்.

தனித்தமிழுக்காக ''பூஞ்சோலை'' என்னும் இலக்கியத் திங்களிதழை ஒன்பது ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய காரை இறையடியானின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

குறுகிய காலத்தில் அதிக நூல்களை வெளியிட்ட பெருமை பேராசிரியர் மு. சாயபு மரைக்காயரைச் சாரும்.

''சங்க இலக்கியத்தில் மனையறம்'', ''கண்மணிகளுக்குக் காயிதே மில்லத்'' முதலிய நூல்களைத் தந்த பேராசிரியை நசீமா பானு, "வாழ முயன்றால் வாழலாம்" என்னும் வாழ் வியல் நூலை வழங்கிய பேராசிரியர் மு. இ. அகமது மரைக்காயர், ''சின்ன சின்ன ஆசை'', ''உறவுப்பறவைகள்'' என்னும் சிறுகதைத் தொகுப்புகளைத் தந்துள்ள ஹ. மு. நத்தர்சா – ஆகியோர் தம் இலக்கிய ஆக்கங்களால் இருபதாம் நூற்றாண்டிற்குப் பெருமையைச் சேர்த்துள்ளனர்.

அனைத்திற்கும் மேலாக அல்லாமா ஆ. கா. அ. அப்துல் ஹமீத் பாக்கவி அவர்கள் மேற்கொண்ட திருக்குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்புப் பணிக்குக் களமாகத் திகழ்ந்த காரணத்தினா லேயே காரைக்கால், அறிஞர் உலகில் தனி இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது எனலாம்.

அனுராதா ரமணன் நாவல்களின் வழியாகப் பெறப்படும் கருத்துகள்

பே. நடராசன்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி–12

படைப்பாளி தமது படைப்பாக்கத் திறனால் மனிதனின் உன்னத தரிசனத்தைக் கண்டு, வாழ்க்கையின் உள்ளார்ந்த உயிர்ப்பு மூல ஆற்றல்களை (Potentialities) வெளிபடுத்த முயற்சி செய்கின்றான். நேர்மையும் உண்மையும் விரும்புகின்ற படைப்பாளிக்கு இது சாத்தியமாகிறது. ஆயினும் படைப்பாளர் கள் எல்லாக் காலங்களிலும் இத்தகைய மேன்மையான நோக்கங் களை நிறைவு செய்யும் படைப்புக்களை உருவாக்குவதில்லை. தரமான படைப்புக்களை இனங்கண்டு கொள்வதும் அல்லாத வற்றை ஒதுக்குவதும் சமுதாயக் கடமையாகும். பெண்கள் உருவாக்கும் படைப்புக்கள் வேறுபாடுடையவை. ‘பெண் இலக்கியம்’ (Female literature) என்று இத்தகைய படைப்புக் களை ஓரயி சுட்டுவார். இவை பெரிதும் பெண்களின் அனுபங் களைக் கூட்டாக வெளியிடும் நோக்குடன் உருவாக்கப் பெறுகின்றன. அவை ‘அவற்றிற்கே உரிய தூண்டுதல்கள்’ வழித் தனித்தன்மை கொண்ட தன்னிலை வெளிப்பாடுகளாகக் காட்சியளிக்கின்றன. நாவலாசிரியர்கள் என்ற முறையில் பெண்கள் எப்பொழுதும் தன்னுணர்வு (Self Conscious) கொண்டவர்களாகவே செயற்படுகின்றனர். அதைக் கடந்த ஆன்ம விளக்க வெளிப்பாடு (Self-defising) மிக அருகிலே காணப்படும். என்று எனலன் குறிப்பிடுவது இங்கு உணரத்தக்கது.

எழுத்தின் மட்ட நிர்ணயம் வாசக மட்டத்தால் ஏற்படுத்தப் படுகிறது. ஆசிரியர் தமது வாசகர்கள் யார் என்பதை நிர்ணயம் செய்து கொண்டே எழுதும் நிலை ஏற்பட்டுள்ளது. நுகர்வு முறை, விநியோகமுறைமையும் உற்பத்தி(ஆக்க) முறைமையையும்

தீர்மானிக்கின்ற தன்மையினை இங்கு காணலாம். வாசக வட்டம் என்ற கோட்பாடு இதனாலேயே ஏற்படுகிறது'' என்று கா. சிவத்தம்பி குறிப்பு இன்றைய பெரும்பாலான எழுத்துக் களின் படைப்பு ரகசியத்தையும், வாசகர் ரசனைத் திறத்தையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது.

நான் எழுதும்போது என் ஆத்மாவின் ஓர் அம்சத்தை அப்படியே பிரதிபலிக்கின்றேன். நல்ல கருத்துக்களை எழுதிக் கொடுக்க வேண்டும் என்பது தான் கடமை. மற்றவை கடத்தல் வியாபாரம் போன்றவை. நல்ல கருத்துக்களைக் கொடுக்கா விடில் வாசகர்களுக்கு வஞ்சம் செய்வது போலாகும்'' என பி.சி. குட்டிகிருஷ்ணனின் ''உருபு'' தெளிவுபடுத்துவது சிந்திக்கத் தக்கது. மனித ஆத்மாவின் வேதம் இலக்கியம் என்று மாக்கிம் கார்க்கி சொன்னதன் உண்மையை இங்கு நினைவு கூர்தல் பொருந்தும்.

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று காலங்கள் மூன்றனுள் இறப்பு என்பது காலத்தைக் குறித்து நிற்கிறது. வீழ்ச்சி என்பதை விட கடந்து வந்த நிலையையே இங்கு கடந்த காலம் குறிக்கின்றது. இக்கால ஓட்டத்தை, ஓட்டத்தால் ஏற்படுகின்ற மாற்றத்தைச் சித்தரிக்கும் முன் திரும்பிப் பார்த்து பழங்காலம் எவ்வகை மதிப்பை இப்பண்பிற்குத் தந்திருக்கிறது என்பதை நோக்குவது கடந்த காலச் சமுதாயப் பண்புகளை, மதிப்புக் களை நிர்ணயம் செய்வதற்கு ஆதாரமாக அமையும். அவ்வடிப் படையில் அனுராதா ரமணன் நாவல்களில் குடும்ப நிலையில் கடந்த காலச் சமுதாயப் பண்புகளைக் காணலாம்.

காலம் கடந்த பண்புகள்: மன விருப்பங்கள் நன்முறையில் நிறைவேறும் நிலைபெறும் போது மதிப்பு எனப் பெயர் பெறுகின்றது. எது நல்லது, எது கெட்டது எனப் பகுத்து ஆயும் போது மதிப்புகளிலும், இன்றைய மாற்றத்திற்கு இது தேவையில்லை எனக் கருதும் போது அவ்விருப்பம் நிறைவேறியும் மதிப்பிழந்து போய்விடுகிறது. இவ்வாறு காலம் கடந்த நிலை யில் அமைகின்ற சமுதாய மதிப்புகளைக் கடந்த கால மதிப்பு என்றும் குறிப்பிடலாம். பழமைக்கும் புதுமைக்கும் மோதல்கள் ஏற்பட்டு, சிற்சில காலங்களில் மதிப்பழித்தவை எனக் கருதப் படுபவை காலம் கடந்த சமுதாய மதிப்புக்கள் என்ற குழுவில் அடங்கும். வகை பலவாறாக இருப்பினும் சமுதாய வாழ்வி

லிருந்து இக்கடந்த காலச் சமுதாய மதிப்புக்கள் முற்றாக மறைந்து விட்டன என்று கருத இயலாது.

குடும்ப நிலையில் தனிக் குடும்ப நிலை கூட்டுக் குடும்பநிலை என இரண்டாகப் பகுக்கலாம். அனுராதா ரமணம் எழுதிய ஹேமா உனக்காக'' என்ற நாவலில் ஒரு குடும்பத் தலைவன், தலைவி என்ற தனிக்குடும்ப நிலைக்கு அப்பாற்பட்ட தாய், தந்தை, சித்தப்பா, சித்தி, அத்தை மகள் என ஒரு கூட்டுக் குடும்பம் இடம் பெறுகிறது.

மறுமணத் தடை: ஹேமா சங்கரன் என்பவரின் மகள்' அவள் தாயை இழந்தவள். தன் சித்தப்பா, சித்தி, அத்தை, அப்பா ஆகியோருடன் கூட்டுக் குடும்பத்தில் வசிக்கிறாள். அக் குடும்பத்தில் உறுப்பினராக வீட்டு வேலை செய்கிற சீதம்மா இருக்கிறாள். அப்பெண்ணின் மகன் பாலா என்பவன் ஹேமாவைக் காதலிக்கிறான். ஹேமாவுக்கோ வேறொரு இடத்தில் திருமண உறுதி செய்யப்படுகின்றது. அத்தை காவேரி அப்பணிப்பெண்ணின் மகள் பாலாவைக் காதலிக்கிறாள், என்ற செய்தி கேட்டதும் விரும்பியவனுக்கே கொடுக்க வேண்டும் என அந்தப் பழமைவாதி கருத்துத் தெரிவிக்கிறாள். மூத்த தலை முறையைச் சேர்ந்த ஒருத்தி ஒரு பணிப்பெண் மகன் காதலை ஆதரிக்கிறாள் எனத் தெரிந்ததும் ஹேமாவும் அத்தை வழிச் செல்லவே நினைக்கிறாள். உறுதி செய்யப் பெற்ற திருமணமோ நடந்து விடுகிறது. திருமண வாழ்வும் சரியில்லாமல் போக காதலர் இருவருமே மீண்டும் சேர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு கதை சென்றாலும் நஞ்சுணவால் தற்செயலாகத் தலைவி இறந்து விடுகிறாள். இக்கதையில் காவேரி என்ற அத்தை மனதில் நினைக்கும் விருப்பம், தலைவி நினைக்கும் விருப்பம், தலைவியைக் காதலித்த பாலா நினைக்கும் விருப்பம் ஆகிய மூன்றும் நல்ல திருப்பங்கள். தலைவி சாகாமல் இருந்தால் விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டு மதிப்புடையதாக மாறியிருக்கக் கூடும். நஞ்சுணவு உண்டு தலைவி இறந்ததால் எதிர் மதிப்பாக மாறுகிறது. கடந்த கால பண்புகளுள், மதிப்புகளுள் அடங்கி விடுகிறன. மீண்டும் ஹேமாவுக்கும் பாலாவுக்கும் திருமணம் செய்திருந்தால் புதிய மதிப்பாக, பண்படாக நிகழ்ந்திருக்கும் மாறாக ஆசிரியர் நடந்த கால பண்பாட்டிற்கும், மதிப்புக்கும் இடம் தரும் வகையில் இந்த நாவலைப் படைத்துக் காட்டி யுள்ளார்.

முற்போக்குச் சிந்தனைகள்; ஆடம்பர மோகங் கொண்டு வாழ்க்கையில் மிகச் சாதாரண ஆசைகளை நிறைவேற்று வதிலேயே கருத்தாய் இருப்பவர்கள். இதற்காக எந்தச் செயலை யும், துணிந்து செய்யவும் ஆற்றல் உள்ளவர்கள். இவர்களில் பெரும் பாலோர் நீண்ட பின்னலும் அழகிய கண்களும், வாளிப்பான கட்டுடலும் கொண்டு, தங்கள் அழகில் தாங்களே மயங்கிக் கிடப்பவர்கள். இவர்கள் ஆடவர்கள் ஆசைகளுக்கு எளிதில் இணங்கித் தம்மை இழப்பவர்கள். 'தொடுக்கப்படாத மலர்கள்' என்ற நாவலில் வரும் இந்துவைச் சான்றாக் கலாம். கிராமத்திலிருந்து நகரக் கல்லூரிக்குப் படிக்க வந்து, அறைத் தோழியின் அண்ணன் ஹரியின் வலையில் வீழ்ந்து விடு கிறாள். பின் ஓடிப்போய் பம்பாயில் குடியேறிச் சிறிது காலம் சீரழிந்து, பின்னர் தன் அத்தையின் வளர்ப்பு மகன் பாபுவால் மீட்கப்படுகிறாள்.

அத்தையின் வாழ்வையும் காண வேண்டியுள்ளது. அத்தை சீதா அந்த ஊர் ஜமீன்தாரரால் கற்பழிக்கப்பட்டவள். பிள்ளை பெற்றவள். பிள்ளையை அநாதை விடுதியில் சேர்த்து விட்டுப் பின்னர் விதவைக் கோலம் பூண்டு அப்பிள்ளையே வளர்ப்பு மகனாய் ஏற்கின்றாள். இந்துவிற்குத் தன் நிலை வர வேண்டா மென்று நினைக்கிறாள். பாபுவை அவளை ஏற்றுக் கொள்ளச் செய்கிறாள். இப்பெரும் புரட்சியில் இந்துவின் குழந்தைக்கும் பாபு தகப்பனாக, இந்து தலை நிமிர்கின்றாள். "வாழ்க்கைன்னா என்னன்னு புரியாத வயதிலே உனக்கு ஏற்பட்ட விபத்துக்காக... காலம் முழுக்க நீ கண்ணீர் விட்டிருப்பதை என்னால் தாங்க முடியாது." என்று கூறி இந்துவுக்கு அடைக்கலம் தரும் பாபு ஒரு முற்போக்கான தியாக சீலனாய் உயர்த்தப்படுகிறான். "அனுராதா ரமணன் தொடுக்கப்படாத மலர்கள்" பக். 237.

பொருள் இழப்பு: சிலப்பதிகாரத்தில் கதைத் தலைவன் கோவலன் கண்ணகியோடு இல்லற வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கையில், கணிகையர் குல மாதவியின் மையில் சிக்கிப் பொருளையெல்லாம் இழந்தான். 'கோபுரத்துப் பொம்மைகள்' என்ற நாவலின் கதாநாயகி கல்யாணி இசையில் கொண்ட பற்றினால் இசைக் கலைஞன் மௌலியிடம் வரம் பின்றி உறவாடுகிறாள். மதிப்பிழந்து நிற்கிறாள். அக்காள் மகள் பிரியா அவனைப் பழி தீர்க்கிறாள். ஆனாலும் கல்யாணி, மௌலியைப் மன்னித்துப் பிரியாவிற்கு அறிவு கொளுத்தி

விசால மனமுடைய தியாகியாய்க் காட்சி தருகிறாள். இங்கு கல்யாணி என்ற ஆசிரியைக் கண்மூடித்தனமாகப் பாடகன் பின்னால் சுற்றுவது, அவன் போகும் இடமெல்லாம் அவனைத் தனியாய்க் கண்டு வருவது பரிசுகளை வாரி வழங்குவது, அவனால் புறக்கணிக்கப்படுவது எல்லாம் பல நிலைகளில் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் இன்றைய பெண் சமுதாயத்தினைக் களங்கப்படுத்தும் படைப்பாக்கமாகப் அமைகிறது. கனவுப் பிரதேசங்கள் என்ற நாவல் இன்னொரு கற்பனை பொம்மை நிரம்பிய பெண்ணுலகினைப் படைத்துக் காட்டுகிறது. கல்லூரி மாணவிகளை மயக்கிச் செல்வந்தவர் வீட்டு வாலிபர்களிடம் விலைபேசும் கல்பனா, "காபி பார்" நடத்தும் நவநாகரிகப் பெண்மணி. இவள் வலையில் ஒரு சசி, ஒரு நித்யா என்று பெண்கள் வருவார்கள். போதை மருந்து உண்பார்கள், பைத்தியம் பிடித்துச் சாவார்கள். இவளின் பிடியிலிருந்து கல்லூரிப் பெண்களைக் காக்கப் போர்க்கோலம் பூண்டு முடிவில் தோல்வி அடைவதும் மீண்டும் போர்க்கொடி உயர்த்துவதும் பரத் என்ற வாலிபன் வழி அறியலாம். இவ்வாறு இந்த நாவலில் உயர் படிப்புப் படிக்கக் கல்லூரி செல்லும் பெண்கள் சோரம் போய் மாணமிழந்து நிற்கும் கொடுமையைக் காணமுடிகிறது. இலைமறைக் காய்மறையாக உயர்மட்டத்தில் நடக்கும் கொடுமைகளுக்கு நாவல் என்ற கலைவடிவம் கொடுக்கும் நச்சு விவகாரம் இது. கல்பனாவைக் கடைசி வரை தப்பிக்க விடும் நிலை வராது. இவர்காணும் கல்பனாக்களும், அவர்கள் வலையில் விழும் கல்லூரி இளம் பெண்களும் தான் புதிய புதுமைப் பெண்களா? நாவலாசிரியர் நோக்கம் புரியவில்லை. இத்தகைய 'கனவுப் பிரதேசங்களில்' தான் இவர்தம் ஆன்மத் தேடல் பெரிதும் நடைபோடுகிறது.

முடிவுரை: அனுராதா ரமணன் நாவல்களின் படைப்புகளின் வழியாகப் பழைய மரபுகளையும், புதிய சிந்தனைகளையும் அறிய முடிகிறது. அறிவார்ந்த, தெளிவு பெற்ற, வலிமை மிக்க ஆளுமை கொண்ட பெண்கள் சமுதாயம் உருக்கொள்ள வேண்டிய கால கட்டம் இது. பெண்கள் தம் உரிமைகளை நிலைநாட்டி, சமுதாய நலம் வளர்க்க தொண்டு செய்யும் புனித வேளை இது. அனுராதா ரமணன் நாவல்களில் இதனை அறிய முடிகிறது.

சிந்தாமணிக் காப்பியத்தின் கட்டமைப்பு

அ. நலங்கிள்ளி
பிஷப் ஹீபர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 17

காப்பியம் ஒன்று கால்கொண்டு நிலைபெறுவதற்குத் தக்க கதையமைப்பும் கட்டமைப்பும் அமைய வேண்டும். இவ்விரண்டும் அமையப்பெறாத காப்பியங்கள் மண்ணில் வேருன்றி நிற்பதற்கும் மக்கள் வழக்கில் மிகுதியும் பயின்று வருவதற்கும் வாய்ப்பில்லை. இவ்வகையில் திருத்தக்க தேவர் இயற்றிய சீவகசிந்தாமணிக் காப்பியத்தின் கட்டமைப்பைப் பற்றி அலசிப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நிகழ்ச்சித் தொடர்பும் ஒருங்கிணைப்பும்: சீவகனின் வரலாற்றைக் காப்பியம் கூறுவதாயினும் சச்சந்தன் வரலாற்றில் தான் காப்பியம் தொடங்குகின்றது. சச்சந்தனின் வீழ்ச்சியே, சீவகனின் எழுச்சிக்கும், கட்டியங்காரனின் வீழ்ச்சிக்கும் காரணமாகின்றது. சச்சந்தன் தன் ஒரு மனைவியுடன் கொண்ட காமக்களிப்பினால் ஆட்சியை இழந்தான். சீவகன் எட்டு மனைவியருடன் காம இன்பம் துய்த்தும் தந்தை இழந்த ஆட்சியைப் பிடித்தான்; முத்தியும் பெற்றான்.

சீவகன் சொந்த நகரமான இராசமாபுரத்திலேயே தத்தை, குணமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய ஐவரை மணக்கின்றான். இவருள் தத்தை காந்தாரம் நாட்டினள்; இலக்கணை விதேய நாட்டினள். சீவகன் மணந்த எண்மரும் இலக்கணையார் இலம்பகத்தில் ஒன்று சேர்க்கப்படுகின்றனர். இவர்களுள் தத்தை, குணமாலை இருவர் மட்டுமே முன்னரே நட்பு கொண்டிருந்தனர். குணமாலையும் சுரமஞ்சரியும் நட்பினராயினும், சீவகன் குணமாலையை விரும்பியதால், சுரமஞ்சரி குணமாலையுடன் பொறாமை கொண்டு பிரிகின்றாள்.

சீவகன் கட்டியங்காரனை வெல்வதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியைக் காட்டிலும், அவன் எட்டுப் பெண்களை மணப்பதில் காட்டிய வேகமும் விறுவிறுப்புமே காப்பியக் கதைப்போக்கில் முனைப்பாக உள்ளன.

விசயை தனக்குத் துணைபுரிந்த சுடுகாட்டுத் தெய்வத்தைத் தன் தோழி சண்பகமாலை என்றே இறுதிவரை நினைத்திருப்பதாகக் கதைப்போக்கு அமைகிறது. இறுதியான முத்தி இலம்பகத்தில் அத்தெய்வத்திற்கு விசயை கோயில் கட்டியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால், தனக்குத் துணைசெய்தவள் தெய்வம் தான் என்று விசயை அறிந்ததற்கான குறிப்புக்கள் கதைப் போக்கில் இல்லை.

குணமாலை இலம்பகத்தில் சுதஞ்சணனால் தூக்கிச் செல்லப் பட்ட சீவகன் மீண்டும் தன் நண்பர்களைக் கனகமாலையாரிலம் பகத்தில் சந்திக்கின்றான். குணமாலை இலம்பகத்தில் விடுபட்ட கதைநிகழ்ச்சி கனகமாலை இலம்பகத்தில் தொடர்கிறது.

காந்தருவதத்தையாரிலம்பகத்தில் சீவகன் யாழ்ப்போட்டியில் கலந்து கொண்டு, ஒவ்வொரு யாழிலும் உள்ள குறைகளை நுணுக்கமாகக் கூறுகிறான். இவ்விளக்கம் சுருங்க அமைந்து கதைப்போக்கிற்கு ஊறு செய்யவில்லை. ஆனால் பதுமையாரிலம் பகத்தில் இடம்பெறும் பாம்பைப் பற்றிய விளக்கம் நீண்டதாக அமைந்து கதைப்போக்கில் ஒருங்கிணைப்பைத் தடைசெய்கிறது.

பதுமையாரிலம்பகத்தில் சீவகன் வேடனோடு உரையாடுவது, கேமசரியாரிலம்பகத்தில் சீவகன் முனிவர்களுக்கு அறிவுரை கூறுவது, வழிப்போக்கனிடம் தத்துவம் பேசுவது, கனக மாலையாரிலம்பகத்தில் அநங்கமாவீணை என்ற பெண் சீவகனைப் பார்த்துக் காமுறுவது, முத்தியாரிலம்பகத்தில் இடம் பெறும் நீளமான சமய அறிவுரைகள் ஆகிய இவையெல்லாம் கதையமைப்பிற்கும், கட்டுக்கோப்பிற்கும் எந்தவகையிலும். சமயக் கொள்கையை வலியுறுத்தும் நோக்கு இவ்விடங்களில் வெளிப் படையாகவே புலனாகின்றது.

சீவகனின் முற்பிறவிக்கதை முத்தியிலம்பகத்தின் இறுதியில் கூறப்படுகிறது. இக்கதை, கதைப்போக்கிற்கு ஒருங்கிணைப்பாக அமையவில்லை. காப்பியக் கதையுடன் இடையீடுபட்டு நிற்கிறது.

குணமாலை இலம்பகத்தில், கட்டியங்காரனின் வீரர்கள், சீவகன் இறந்துவிட்டதாக ஒரு பொய்ச் செய்தியைப் பரப்புகின்றனர். இது ஒரு காப்பியப் புதிர் போல அமைந்துள்ளது. இப்புதிரினால் எந்தவிதமான எதிர்விளைவுகளும், பரபரப்பும் ஏற்படவில்லை. தத்தை, தன் வித்தையினால் தொலைக் காட்சியில் பார்ப்பது போல் சீவகனின் ஒவ்வொரு செயலையும் கண்டறிகின்றாள். அவன் நண்பர்களுக்கும் தெரிவித்து விடுகின்றாள். எனவே கதைப்போக்கில் இப்புதிர்ச் செய்தி வலுவிழந்து போகிறது.

பதுமையாரிலம்பகத்தில், சுதஞ்சணன் சீவகனுக்கு, அரணபாத மலை, பல்லவநாடு, சித்திரகூடமலை, தக்கநாடு என அவன் செல்லும் காட்டு வழிகளைக் கூறுகிறான். இந்த வழியமைப்பு முறை, சிறிதும் பிறழாமல், இரண்டு இலம்பகங்களில் தொடர்ந்து செல்கிறது. மத்திம நாட்டு மன்னன் தடமித்தன் தன்மகள் கனகமாலையைச் சீவகனுக்கு மணம்முடிப்பான் என்ற செய்தியை மட்டுமே சுதஞ்சணன் சீவகனுக்குச் சொல்வதாக உள்ளது. ஆனால் சீவகன் சுதஞ்சணன் கூறியமைக்கு மேற்பட்டும், பதுமை, கேமசரி ஆகியவர்களைப் போகும் வழியில் மணக்கின்றான். பின்னரே கனகமாலையை மணக்கின்றான்.

பதுமையாரிலம்பகத்தில், சீவகனிடம் மயங்கிய தேசிகப் பாவை, மீண்டும் இலக்கணையாரிலம்பகத்தில், சீவகனைக் கண்டு அவனைக்கூடி மகிழ்ந்து செல்கின்றாள்.

கனகமாலை இலம்பகம் கதை நிகழ்வுகளின் மையக்களமாக விளங்குகிறது. முதன்முதலாகச் சீவகன் தன் தாயைச் சந்தித்தல், விசயை தனக்குச் சுடு காட்டில் நேர்ந்தவற்றை மீண்டும் நினைத்தல், சீவகன் தன் நண்பர்களோடு மீண்டும் ஒன்று சேர்தல் ஆகியவை இவ்விலம்பகத்தில் இணைந்துள்ளன. கட்டியங்காரனை அழிப்பதற்கு மாமன் கோவிந்தனைத் துணைகொள்ள வேண்டும் என விசயை சீவகனுக்கு அறிவுறுத்துகிறாள். கட்டியங்காரன் விரைந்து அழிவான் என்பதற்கு இவ்விலம்பகச் செய்திகள் கட்டியங் கூறுகின்றன.

பாத்திரங்களின் ஒருங்கிணைப்பு: காப்பியத் தலைவனாகிய சீவகன், எல்லா இலம்பகங்களிலும் இடம்பெறுகின்றான். ஒரு, வகையில் அவனே இலம்பகங்களை இணைத்துச் செல்பவனாகவும் அமைகின்றான். கதைத்தலைவியர்கள் அந்தந்த இலம்பகங்களுடன் நின்றுவிடுகின்றனர். காந்தருவதத்தை, குணமாலை

சுரமஞ்சரி ஆகிய மூவர் மட்டும் வேறுவேறு இலம்பகங்களில் தொடர்புபடுத்தப்படுகின்றன. தலைவியர் எண்மரும் இலக்கணை யார் இலம்பகத்தில்தான் சந்திக்கின்றனர்.

நாமகள் இலம்பகத்தில் சுடுகாட்டுத் தெய்வத்தால், தவப் பள்ளியில் சேர்க்கப்பட்ட விசயையின் செயற்பாடுகள் ஐந்து இலம்பகங்களுக்குப்பின் கனகமாலையாரிலம்பகத்தில் இருந்தே தொடங்குகின்றன.

கட்டியங்காரன் எதிர்நிலைத் தலைவனாக இருந்த போதிலும், அப்பாத்திரத்திற்கு ஏற்ற சூழ்ச்சிப் பின்னல்கள் மிகக்குறைவே.

சீவகனுக்குப் பிறந்த பிள்ளைகட்குச் சச்சந்தன், சுதஞ்சணன் தரணி (உலோகபாலன்), கந்துக்கடன், விசயன், தத்தன் (விசயையின் தந்தை) பரதன் (அச்சணந்தி), கோவிந்தன் எனப் பெயரிட்டிருப்பது அடுத்த தலைமுறைக்கும் அவர்களின் பெயர் நிலைத்திருக்க வேண்டும் என்ற நோக்கமாயினும், பாத்திரங் களின் தொடர்பையும் சுட்டுவதாக உள்ளது.

வேறு வேறு பாத்திரங்கள் ஒரே பெயரில் வழங்கப் பெறுவதையும் இக்காப்பியத்தில் காண்கின்றோம். உலோபாலன் என்ற பெயரில் இருவர் உள்ளனர். இராசமாபுரத்தில் சீவகனுக்குக் கல்வி கற்றுத்தந்த ஆசிரியர் அச்சணந்தியின் முற்பெயர் உலோகபாலன் என்பதாகும். பல்லவ நாட்டில் சீவகன் மணந்த பதுமையின் அண்ணன் பெயரும் உலோகபாலன் என்பதாகும்.

சீதத்தன் என்ற பெயரில் மூவர் உள்ளனர். காந்தருவதத்தை யின் வளர்ப்புத் தந்தையின் பெயர் சீவகனின் தாய்மாமன் கோவிந்தனின் மகன் பெயரும் சீதத்தன். சீவகனின் நண்பர் களில் ஒருவன் பெயரும் சீதத்தன். இவ்வாறு ஒரேபெயரில் பல பாத்திரங்கள் அமைந்திருப்பதனால், படிப்போருக்குத் தெளிவு பிறப்பது அரிதாகிறது.

இலம்பகத் தொடர்பு: சிந்தாமணிக் காப்பியம் பதின்மூன்று இலம்பகங்களைக் கொண்டு இலங்குவது. நெட்டோட்டமான ஒரு பெருங்கதையை இப்பதின்மூன்று இலம்பகங்களில் தேவர் புகுத்தியுள்ளார். ஒவ்வொரு இலம்பகமும் அந்த இலம்பகத்தைப் பொறுத்தவரை தனிக்கதை அமைப்புடையது. ஆசிரியர் தம்மால் இயன்றவரை கதைத் தொடர்பு விடுபடாது இலம்பகங்களை இணைத்துள்ளார்.

நாமகள் இலம்பகத்தில், விசயை, கனவு காண்கின்றாள். ஓர் அசோகமரம் தன்னுடைய பூங்கொத்துக்கள் சிதறிக் கெட்டுத்

தானும் அடியோடு வீழ்ந்தது. இது முதல் நிகழ்ச்சி. அந்த அசோகமரத்தின் அடியில் அந்த அசோகைப் போலவே முளை விட்டு மற்றொரு கன்று வளரத் தொடங்கியது. இஃது இரண்டாவது நிகழ்ச்சி. அந்தக் கன்று எட்டு முத்துமாலைகளை உடைய ஒரு மணிமுடிக்கு இருப்பிடமாக நட்டு வைத்தது போல் ஓங்கி வளர்ந்தது. இது மூன்றாவது நிகழ்ச்சி.

அசோகமரம் விழ்ந்தமை சச்சந்தன் இறப்பையும், மற்றொரு அசோகு அடியில் முளைத்து வளர்ந்தமை சீவகன் பிறப்பையும், எட்டு முத்துமாலைகள் கொண்ட ஒரு மணிமுடி சீவகன் எட்டுப் பெண்களை மணக்க இருப்பதையும் குறிக்கும் குறியீடுகளாகும்.

விசயை கண்ட முதலிரு கனவுகள் நாமகள் இலம்பகத்தில் முடிந்து விடுகின்றன. மூன்றாவது கனவு, சீவகன் எட்டுப் பெண் களை மணக்கவிருப்பதைக் குறிப்பாக இருப்பதால், அந்த ஒரு கனவு காந்தருவதத்தையார், குணமாலையார், பதுமையார், கேமசரியார், கனகமாலையார், விமலையார், சுரமஞ்சரியார், இலக்கணையார் ஆகிய எட்டு இலம்பகங்களுடன் இயைபுடைய தாக அமைகின்றது.

கட்டியங்காரனின் வீழ்ச்சிக்குப் பிறகு உள்ள பூமகள் இலம்பகம், இலக்கணையார் இலம்பகம், முத்தி இலம்பகம் ஆகியவை கதைப்போக்கில் வலுவற்ற நீட்சியைப் பெற்றுள்ளன. முத்தி இலம்பகம் சமயச் செய்திகளின் திணிப்பாக அமைந்துள்ள தால் கதைப்போக்கின் செறிவைத் தளர்த்தி விடுகிறது.

தமிழில் ஒரு பெருங்காப்பியத்தை விருத்தப்பாவில் செய்த முதற் பெருமை திருத்தக்கதேவரைச் சாரும். வடமொழிக் கதையின் மூலத்தை எடுத்து தமிழில் செய்துள்ளார். காப்பியத்தின் கட்டமைப்பு செறிவுடையது என்று சொல்ல இயலவில்லை. திருத்தக்கதேவருக்கு முன்தோன்றிய சிலப்பதி காரத்தைப் போலவோ, அவருக்குப்பின் தோன்றிய கம்பராம யணத்தைப் போலவோ, சிந்தாமணியின் கட்டமைப்பு சிறப்புடை தாக அமையவில்லை. எனினும், தொடர்பு விடாமல் இலம்பகங் களையும், நிகழ்ச்சிகளையும், பாத்திரங்களையும் ஒருங்கிணைத்துச் செல்ல முயன்றுள்ள திறம் போற்றுதற்குரியது. தமக்குப்பின் தோன்றிய காப்பியப் புலவர்கட்கு வழிகாட்டியாகத் திகழும் சிறப்பும் அவருக்கு உண்டு.

புதிய கல்வெட்டுகளும் புதிய தரவுகளும்

மு. நளினி
சீதாலட்சுமி மகளிர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620 017

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கல்வெட்டாய்வர்கள் அண்மைக் காலத்தே மேற்கொண்ட கள ஆய்வுகளின்போது கண்டறிந்த புதிய கல்வெட்டுகள் பல புதிய தரவுகளைத் தமிழக வரலாற்றிற்குத் தந்துள்ளன. இதுவரை கிடைத்துள்ள தமிழகத்துக் கல்வெட்டுகளுள் சில இசை, ஆடல் பற்றிய பல நுட்பமான செய்திகளைத் தருவனவாய் அமைந் துள்ளன. அந்த வரிசையில் மேலுமொரு கல்வெட்டு சிவயோக நாத சுவாமி கோயிலில் கிடைத்துள்ளது. இக்கோயில் கும்பகோணம் பூம்புகார் சாலையில் உள்ள திருவிசநல்லூர் என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது. இக்கோயிலில் இருந்து பதினைந்திற்கும் மேற் பட்ட புதிய கல்வெட்டுகள் ஆய்வு மையத்தால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

பூகரகம் பெருவடகம்

உத்தமசோழரின் பதினாறாம் ஆட்சியாண்டைச் சேர்ந்த கல்வெட்டு, திருவிசலூர் சூர்யனாகிய எதிர்மேல் சிகண்டப் பேரரையன் என்பார் இக்கோயில் கூத்தப்பெருமாளுக்கு நாள் தோறும் பள்ளியெழுச்சி கொட்டவும், இறைவனின் ஆடலுக்கு இசைக் கருவிகள் வாசிக்கவும் இரண்டு உவச்சர்களிடம் பொறுப்பு ஒப்புவித்து, அதற்கென நூறுகலம் நெல் கொடையளித்த தகவலைத் தருகிறது. இந்நெல்லை முதலாக ஏற்ற உவச்சர்கள் இதன் ஆண்டு வட்டி கொண்டு இறையாடலுக்கு இசையெழுப்ப ஒப்பினர். கூத்தப்பெருமாளின் ஆடலுக்கு வாசிக்கப்பட்ட இசைக்கருவிகளின் வரிசையில் வழக்கமான கரடிகை, மத்தளம், தாளம், வீணை, சங்கு ஆகியவற்றுடன், 'பூகரகம் பெருவடகம்' என்னும் புதியதொரு இசைக்கருவியின் பெயரும் குறிப்பிடப்

பட்டுள்ளது. பூகரகம் பெருவடகம் என்னும் இந்த இசைக் கருவியைச் சங்க இலக்கியங்களிலோ, காப்பியங்களிலோ, பக்தி இலக்கியங்களிலோ காண முடியவில்லை. பல தோல் கருவிகளின் பெயர்களைத் தரும் அடியார்க்கு நல்லார் உரையிலும் பூகரகம் பெருவடகம் காணுமாறு இல்லை. இதுவரை கேள்விப்படாத இந்த இசைக்கருவியைப் பற்றிய குறிப்புகளைத் தேடும் ஆய்வு தொடர்கிறது.

பராசவக் காணி

இசைக் கலைஞர்களோடு தொடர்புடைய கல்வெட்டொன்று திருக்கோளக்குடிக் குடைவரையில் கிடைத்தது. திருக்கோளக்குடி புதுக்கோட்டை மாவட்டத்தில் பொன்னமராவதியிலிருந்து பதின்மூன்று கிலோமீட்டர் தொலைவில் மதிலைப்பட்டிக்கு அருகில் அமைந்துள்ள சிற்றூராகும். இவ்வூரிலுள்ள மலையில் முற்காலப் பாண்டியரின் குடைவரையொன்று காணப்படுகிறது. இக்குடைவரையின் முகப்பையொட்டி இரண்டாம் பாண்டியப் பேரரசுக் காலத்தில் பெருமண்டபமொன்று கட்டப்பட்டுள்ளது. இக்கட்டட அமைப்பால் குடைவரையின் முன்னிருந்த பழைய படிக்கட்டுகள் மூடப்பட்டு மேலே தளமிடப்பட்டது. இத்தள வரிசைக் கற்களில் ஒரு கல் பெயர்ந்து போனதால் அப்பகுதியை மரப்பலகையால் மூடியிருக்கிறார்கள். இக்குடைவரையில் கள ஆய்வு மேற்கொண்ட போது இம்மரப்பலகையை அகற்றிப் பார்த்ததில் கீழே படிக்கட்டுகள் தெரிந்தன. இது சுரங்கப் பாதை என்று கோயிலார் தரப்பில் கூறப்பட்ட போதும், கீழிறங்கிப் பார்த்த நிலையில்தான் இது குடைவரைக்கால படியமைப்பு என்பதைக் கண்டறிய முடிந்தது. இப்படிக்கட்டு களின் பிடிச்சுவரில் முதலாம் குலோத்துங்கரின் நாற்பத்தோராம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கிடைத்தது. இப்படிக்கட்டுகளுக்கு எதிரிலுள்ள பாறைச் சுவரில் தமிழகம் இதுவரை கேட்டறியாத பிசாசு பற்றிய செய்தி தரும் கல்வெட்டொன்றும் கிடைத்தது.

முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டு, கோயிலில் உவச்சக் காணியாக நிலமிருந்தும், உவச்சர்கள் இல்லாமையால், கோயில் நிர்வாகிகளான குத்ரமாகேசுவரர்கள் கூடி, குலோத்துங்க சோழ வாச்சிய மாராயனுக்கு அக்காணியைப் பராசவக் காணியாக நிச்சயித்துத் தந்த தகவலைத் தருகிறது. உவச்சர்கள் பற்றியும், உவச்சக் காணிகள் பற்றியும் பல கல்வெட்டுகள் பேசுகின்றன.

ஆனால் அப்படித் தரப்பட்ட காணி 'பராசவக் காணி' என்றழைக்கப்பட்ட தகவல் இக்கல்வெட்டின் மூலமே கிடைத்துள்ளது.

தஞ்சாவூர் ராஜராஜீசுவரத்தின் வடக்குத் திருச்சுற்று மாளிகையின் புறச்சுவரில் காணப்படும் தளிச்சேரிக் கல்வெட்டின் பிற்பகுதியில், முதலாம் இராசராசர் ராஜராஜீசுவரத்திற்களித்த நிவந்தக்காரர்களின் பட்டியல் கிடைக்கிறது. இதில் உவச்சர் களான சகடை கொட்டிகளுக்குத் தரப்பட்ட நிலக்கேணி 'பாதவக்காணி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டில் ஒரே ஒரு இடத்தில் இடம்பெறும் இச்சொல் மிகத் தெளிவாக உள்ளது. இந்தப் பாதவக் காணியும் திருக்கோளக்குடிக் கல்வெட்டு இரண்டிடங்களில் குறிப்பிடும் பராசவக் காணியும் ஒன்று தான் என்பதில் அய்யமில்லை. ஆனால் சொல், பாதவக்காணியா, பராசவக்காணியா என்பது தெரியவில்லை. அகராதிகள் இச்சொல் குறித்து மௌனம் சாதிக்கின்றன இச்சொல்லாட்சி பற்றிய ஆய்வு தொடர்கிறது.

திருவாசித் தலைக்கோலியர்

ஆடல் மகளிரைப் பற்றியும் அவர்கட்குக் கிடைத்த சிறப்புகள் குறித்தும் பல கல்வெட்டுகள் பேசுகின்றன. இக்கல் வெட்டுகளில் பெரும்பான்மையன தஞ்சாவூர் மற்றும் நாகை காயிதேமில்லத் மாவட்டங்களிலுள்ள கோயில்களுக்குரியன இது காறும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து ஆடற் பெண்கள் குறித்த கல்வெட்டுகள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. திருப்பாச்சிலாச்சிராமம் என்று பதிகங்களிலும் கல்வெட்டுகளிலும் பெருமையாகப் பேசப்படும் இன்றைய திருவாசியில் உள்ள மாற்றுரை வரதீசுவரர் கோயில் அந்த வரிசையில் சிறப்புக்குரிய கல்வெட்டொன்றைச் சேர்த்துள்ளது. சிதைந்த நிலையில் கிடைத்துள்ள இப்புதிய கல்வெட்டு, சோழர் காலத்தில் இப்பகுதி ஆடற்கலையில் சிறந்து விளங்கிய தகவலைத் தருகிறது. நிவந்த மொன்றிற்கு முதலாகப் பொன் பெற்றுக் கொண்டு, அதற்கீடாக நெல்லளப்பதாக ஒப்புகையளித்த தளிப் பெண்கள் சிலரின் பெயர்கள் இக்கல்வெட்டிலிருந்து கிடைக் கின்றன. நக்கன் அகம், நக்கன் எதிரி, நக்கன் ஆவடுதுறை, நக்கன் மோடி, நக்கன் கற்பகவல்லி என்பாருடன் சில தலைக் கோலியரின் பெயர்களும் கிடைக்கின்றன. நக்கன் அழகியான

நக்கன் சோழத் தலைக்கோலி, நக்கன் மோடியான மும்முடிச் சோழத் தலைகோலி, நக்கன் கொற்றமான வீதிவிடங்கத் தலைக்கோலி, நக்கன் குராவியான திருவரங்கத் தலைக்கோலி திருவையாற்று நக்கன் தலைக்கோலி என்னும் ஆடற்சிறந்த இப்பெண்கள் திருப்பாச்சிலாச்சிராமத்திலும் அருகிலுள்ள பாச்சில் திருஅமலீசுவரத்திலும் கலை வளர்த்த செய்தி வரலாற்றிற்குப் புதியதாகும். தமிழகக் கல்வெட்டுகளில் தளிப் பெண்களின் பெயர்கள் பலவாகக் கிடைத்திருந்த போதும் தலைக்கோலியர் பெயர்கள் அதிகம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் திருவாசியில் கிடைத்துள்ள இக்கல்வெட்டு வரலாற்று முக்கியத்துவம் பெறுகிறது என்றால் அது மிகையாகாது.

இத்தளிக் கூத்திகள்

மாமல்லபுரம் பல்லவர்கள் கலை வளர்த்த கடற்கரை ஊர். இங்குள்ள தளிகள் சிலவற்றில் பல்லவர் காலக் கிரந்தக் கல்வெட்டுகளும் சோழர் மற்றும் பிற்கால மன்னர்களின் தமிழ்க் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அண்மையில் மல்லையின் மேற்குப் பகுதியில் வராகக் குடைவரையிலிருந்து மேலேறிச் செல்லும் பாறை வழியில் அரியதொரு தமிழ்க் கல்வெட்டு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு வரிகளில் காணப்படும் இக்கல்வெட்டு எட்டாம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது. 'ஸ்ரீ இத்தளிக் கூத்திகள்' என்ற கல்வெட்டுப் பாடம் கோயிலொன்றைச் சேர்ந்த ஆடற் பெண்களைக் கண்முன் நிறுத்துகிறது. இக்கல்வெட்டில் மெய் யெழுத்துக்கள் புள்ளி பெற்றுள்ளன. இப்புள்ளிகள் எழுத்துக் களின் வலப்புறத்தே இடப்பெற்றுள்ளன. அழுத்தமாகவும் தெளிவாகவும் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டே மாமல்ல புரத்தில் கிடைத்திருக்கும் பல்லவர் காலத்தைச் சேர்ந்த முதற் தமிழ்க் கல்வெட்டாகும் மாமல்லபுரத்திலிருந்து இதுகாறும் படியெடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளுள், ஆடற்கலை பற்றிப் பேசும் முதற் கல்வெட்டும் இதுதான் கல்வெட்டு கிடைத்திருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள தளி வராகர் குடைவரையாகும். அதனால் இக்கல்வெட்டு குறிக்கும் ஆடற்பெண்கள் வராகர்க் குடைவரையைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம்.

ஆடற்பெண்களைக் கூத்திகள் என்று குறிக்கும் பழக்கம் பல்லவர் காலத்தில் இருந்தமைக்குக் காஞ்சிபுரம் முக்தேசுவரர் கோயிலில் காணப்படும் இரண்டாம் நந்திவர்மரின் கல்வெட்டு சான்றாகிறது. நந்திவர்மரின் தேவியான தர்மமகாதேவி, முக்தேசுவரம் திருக்கோயிலுக்குத் தளிப் பரிவாரமாக அளித்த கூத்தியரின் பெயர்களை இக்கல்வெட்டு வெளிக்கொணர்கிறது. இக்கல்வெட்டில் கூத்திகள் 'குத்திகள்' என்றே குறிக்கப் பெறுகிறார்கள் மாமல்லைக் கல்வெட்டிலும் 'குத்திகள்' என்ற சொல்லாட்சியே உள்ளது. ஆனால் 'கு' கரத்தின் சுற்றுவளைவுக் கோட்டின் இறுதியில் ஒரு நீட்சி காட்டப்பட்டுள்ளது. இது 'கு'கர நெடிலைக் குறிப்பதற்காக இடப்பட்டதாகலாம்.

ஆடல், இசை தொடர்பான இப்புதிய தரவுகளையொத்த அரிய பிறதுறைத் தரவுகளும் வரலாற்றாய்வு மையத்தின் அண்மைக் காலக் கண்டுபிடிப்புகளால் வரலாற்று வெளிச்சத்திற்கு வெளிவந்துள்ளன.

இஸ்லாமியரின் பழக்க வழக்கங்கள்

ஆ. நாகராசன்
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
ஆத்தூர் – 636 121

முன்னுரை

பரந்த இந்த பாரதநாடு பல மதங்களை உள்ளடக்கியது. இவற்றில் இந்து, இஸ்லாம், கிறித்துவம் என்ற மூன்று மதத்தினர் தாம் அதிகம் வாழ்கின்றனர். இவர்களில் இந்துக்கள், கிறித்துவர்கள் ஆகியோரின் பழக்க வழக்கங்களில் இருந்து இஸ்லாமியர் அதிகம் வேறுபடுகின்றனர். அவற்றை ஆராயும் பொருட்டு சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள இஸ்லாமியர்களைக் களமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

வாழ்க்கை முறை

திருச்செந்தூர் வட்டாரத்தில், திருச்செந்தூர், காயல் பட்டினம், ஆத்தூர் ஆகிய ஊர்களில்தான் அதிகமான இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். அவர்களின் இருப்பிடம் கூட்டாகவே அமைந்துள்ளது. இம்மக்களின் வாழ்க்கை முறைகள் யாவும் சமய நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவர்கள் திருக்குரானின் போதனைப் படியும், முகம்மது நபி (ஸல்) வாழ்ந்துகாட்டிய நெறியின் படியும் வாழ்கிறார்கள். ஒருசில பழக்கவழக்கங்கள் மட்டும் தமிழர்களுக்கு உரியவைகள் கலந்துள்ளன. இதைப் பண்பாட்டுக் கலப்பு என்று கொள்ளலாம்.

தொழுகை

உடலாலும் உள்ளத்தாலும் இறைவனை வணங்குவது தொழுகை ஆகும். இஸ்லாமியர்கள் ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழுகின்றனர். ஊமை தொழுதால் இரட்டைப் பலன் என்று கூறுகின்றனர். ஆண்கள் தொழுகை செய்யும் இடம் 'பள்ளிவாசல்'

எனவும் பெண்கள் தொழுகை செய்யும் இடம் 'தைக்கா' எனவும் அழைக்கப்படுகிறது. தொகையின்போது உடல் முழுவதையும் மறைத்துக்கொள்கின்றனர். தொழுகை தூக்கத்தை விடச் சிறந்தது என்கின்றனர். தொழுகைக்கு முன்பு உடலை நீரால் சுத்தம் செய்கிறார்கள். இதனை ஊஹூச் செய்தல் என்கின்றனர். கை, வாய், மூக்கு, தொண்டை, காதுமடல்கள், கழுத்து, முழங் கைகள், முன்நெற்றி இவ்வுறுப்புக்கள் யாவற்றையும் முறையே மூன்று முறை நீரால் கழுவுவது தான் உஹூச் செய்தல்.

பர்தா அணிதல்

'பர்தா' என்பது உடலை முழுமையாக மறைக்கும் ஒரு ஆடை. இது பெண்களுக்கு உரியது. இவ்வுடையை அணிந்தவரை கோஷா பெண்கள் என்கின்றனர். பர்தா அணியாதவர்கள் 8 முழம் வெள்ளைச் சேலையை உடைக்கு மேலே சுற்றிக் கொள் கின்றனர். இதுவும் இல்லாவிட்டால் குறைந்தது சேலை முந்தானையால் முக்காடு இட்டுக் கொள்கின்றனர். முக்காடு இடாத பெண்களை அவர்கள் இழிவாகக் கருதுகின்றனர். பெண்கள் தங்களின் அழகை அன்னிய ஆண்களுக்குக் காட்டக் கூடாது என்பதே இந்த 'பர்தா' முறையின் நோக்கம் என்கின்றனர்.

பூப்புப் பற்றிய செய்திகள்

பெண்கள் பருவம் அடைவதையே 'பூப்பு அடைதல்' என்றார்கள். பருவம் அடைந்த பெண்களை இந்துக்கள் போல் தனிக்குடிலில் வைப்பதில்லை. பூப்புனித விழாக்களும் கிடையாது. தாய்மாமன் சீரும் கொடுப்பதில்லை.

திருமணம்

பருவம் வந்த ஆண் பெண் இருபாலாரும் இணைந்து வாழ்வதற்குச் சமுதாயம் அளிக்கின்ற சட்டப்பூர்வமான சடங்கே திருமணம் ஆகும். இஸ்லாமியர் இதை 'நிக்காஹ்' என்கின்றனர். இஸ்லாமியத் திருமணம் எளிமையாக நடக்க வேண்டும் என்பது மதச் சட்டம் ஆகும். இவர்கள் நெருங்கிய உறவுமுறைக்குள்ளே திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றனர். வெளியூர் சம்பந்தத்தை இழிவாகக் கருதுகின்றனர். தாய்மாமனை மணம் முடிக்கும் பழக்கம் இல்லை.

மாப்பிள்ளை வீட்டார்தான் பெண்கேட்டுச் செல்வது இந்துக்கள் மரபு. ஆனால் இஸ்லாமியர்களில் பெண் வீட்டார் தான் மாப்பிள்ளை கேட்டுச் செல்கின்றனர். திருமணத்திற்கு முன் மணமகனும் மணமகளும் ஒருவரை ஒருவர் பார்க்கக் கூடாது. பெற்றோர்கள்தான் பேசி மணம் முடித்து வைக் கிறார்கள்.

நிச்சயதார்த்தம் முடிந்த பின்பு நிச்சயம் செய்யப்பட்ட நாளில் இருந்து திருமணம் முடியும் வரை பெண்ணிற்கு ஒவ்வொரு மாதமும் மாப்பிள்ளை வீட்டார் படி கொடுக்கிறார்கள். இஸ்லாமிய நெறிப்படி பெண்ணுக்கு மாப்பிள்ளை பணம் கொடுத்துத்தான் மணம் முடிக்க வேண்டும். இதனை 'மஹர் கொடுத்தல்' என்கின்றனர். தற்போது இந்துக்கள் முறைபோன்று பெண் வீட்டில் பணம் வாங்கும் பழக்கம் இவர்களிடமும் புகுந்துள்ளது.

இஸ்லாமியர் இந்துக்களைப் போன்று திருமணத்திற்கு நாள், ஜோதிடம் பார்ப்பதில்லை. இவற்றைச் சமயம் தடைவிதித் துள்ளது. ரம்சான் மாதம் தவிர ஏனைய 11 மாதத்திலும் திருமணம் நடக்கிறது. நிச்சயதார்த்தம் அன்று பெண் வீட்டார் காய்ச்சிய பால் ஒரு குடம், காய்ச்சாத பால் ஒரு குடம், 5 கிலோ சீனி, வெற்றிலை பாக்கு இவற்றை எடுத்துச் செல்வர். இவற்றுடன் யார் யாருக்குத் திருமணம் என்ற விவரத்தை எழுதி அதை இரண்டு நகல் எடுத்துக் கொண்டு செல்வர்.

மாப்பிள்ளை ஊர்வலம் நடந்தே அழைத்து வரப்படுகிறது. மணப்பெண் ஊர்வலத்தில் பங்கு பெறுதல் இல்லை. மணமேடை அலங்காரங்கள் அதிகம் கிடையாது. தாலி கட்டுதல் என்பது இஸ்லாமியத்தில் இல்லை. ஆனால் தமிழரின் மரபுவழிப் பழக்கத் தால் அவர்களும் பின்பற்றுகிறார்கள். தாலியை மணமகன் கட்டுவதில்லை. அவரின் சகோதரிதான் கட்டுகிறார். மேலும் மணமகளின் கையைப் பிடித்துக் கொடுப்பதற்குப் பதிலாக மண மகளின் முன் நெற்றியில் உள்ள மூன்று முடியைப் பிடித்துக் கொடுக்கின்றனர். இதை 'முடி பிடித்துக் கொடுத்தல்' என்கின்றனர்.

மணமக்கள் இந்துக்களைப் போல் பெரியோர் காலில் விழுந்து வணங்குவது இல்லை. இவர்கள் இறைவனைத் தவிர பிறர்

காலில் விழுந்து வணங்குவது வழக்கம் இல்லை. ஆனால் பெரியவர்கள் மணமக்களை வாழ்த்தி அவர்களின் நெற்றியில் முத்தம் இடுகிறார்கள்.

விருந்து ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனியே நடத்தப் படுகிறது. இலைக்குப் பதில் தாம்பூலத்தட்டு போன்ற செப்புத் தட்டுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரே தட்டில் இரண்டு மூன்று பேர் அமர்ந்து உணவு உண்பார்கள். மேலும் கூட்டு, தண்ணீர் ஆகியவை மண்பாத்திரத்தில் வழங்கப்படுகின்றன. பெரிய பணக்காரர்களும் இம்முறையையே பின்பற்றுகின்றனர் திருமணம் முடிந்தபின் மணமகன் தன் வீட்டிற்குச் செல்லாமல் மணமகள் வீட்டிற்குச் செல்வார். இவர்கள் சேர்ந்து வாழப் பெண் வீட்டார்தான் வீடு கொடுக்கிறார்கள். இதற்கு முஸ்லீம் ஆண்கள் பெரும்பாலும் பொருள் தேட வெளிநாடு செல்வதால் பெண்ணைப் பிறந்த வீட்டில் விட்டுச் செல்வது நலம் எனக் கருதியிருக்க வேண்டும் என்று மு. சாயபு மரைக்காயர் காரணம் கூறுவார். விவகாரத்தை 'தலாக்' என்ற சொல்லால் குறிப்பிடு கின்றனர்,

இறப்பு பற்றிய செய்திகள்

இஸ்லாமியர்கள் இறந்தவர்களுக்காக அழுவது கிடையாது. இறந்தவர் உடல்மீது கண்ணீர் படுவதை மதம் தடைசெய்கிறது இறந்தவர்களுக்காகப் பள்ளி வாசல் சென்று பாவ மன்னிப்பு வேண்டித் தொழுகை செய்கின்றனர். பின் இறந்தவரின் உடலை நீராட்டி புது ஆடை அணிவித்து உறவினர்கள் பிள்ளைகள் வந்து இறந்தவரின் நெற்றியில் முத்தம் இட்டுச் செல்வர். அதன் பின்னர் அடக்கம் செய்கிறார்கள். பிணத்தை எரிக்கும் பழக்கம் இவர்களுக்குக் கிடையாது. இந்துக்களைப் போன்று இறந்தவரின் பிள்ளைகளுக்கு மொட்டைபோடும் வழக்கம் இல்லை.

இத்தா முறை

கணவனை இழந்த பெண்கள் கணவன் இறந்த நாளில் இருந்து நான்கு மாதமும் பத்து நாளும் தனி அறையில் அடைத்து வைக்கப்படுகிறார்கள். வேறு யாரும் பார்க்கவோ, பேசவோ கூடாது. இது அப்பெண் தாய்மை அடைந்திருக்கிறாளா என்று

சோதித்துப் பார்க்கவே இவ்வாறு செய்கிறார்கள். கருவுற்றிருந்தால் குழந்தை பிறந்த பின்புதான் மறுமணம் செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள்.

முடிவுரை

இஸ்லாமியர்கள் பிற மதத்தினரிடம் இருந்து பழக்க வழக்கங்களில் அதிகம் வேறுபடுகின்றனர். அவர்கள் மதக் கொள்கையை அதிகம் கடைப் பிடிக்கின்றனர். இருந்தாலும் காலத்தின் மாறுதலாலும், பண்பாட்டுக்கலப்பாலும் தமிழரின் பழக்க வழக்கங்கள் சிலவற்றை மேற்கொண்டு வருகின்றனர்.

முதல்மொழி - உடல்மொழி

ப. நாகலிங்கம் பிள்ளை
தெ.தி. இந்துக் கல்லூரி
நாகர் கோவில்

முன்னுரை: நாம் ஒவ்வொருவரும் பேசும் நமது தாய்மொழி நமது இரண்டாவது மொழிதான், அவ்வாறெனின் நமது முதல் மொழி எது? மனிதன் தாய்மொழியை விடக் கூடுதலாகத் தகவல் தொடர்புக்குப் பயன்படுத்தும் மொழி முதல்மொழியாகிய உடல்மொழிதான். உடல் உறுப்புகளால் அன்பு, வெறுப்பு, கோபம், ஏமாற்றம் ஆகிய உணர்வுகளை நாம் சொற்கள் எதுவுமின்றி வெளியிடுகிறோம். இதனையே உடல்மொழி என்கிறோம். ஆங்கிலத்தில் 'Body Language' என்றும் மொழி இயல் கலைச்சொல்லாகிய 'Kinesics' என்றும் உடல்மொழி அழைக்கப்படுகிறது. உடல்மொழியின் வகைகளையும் அவை புலப்படுத்தும் பொருளையும் இடம், இனம், மற்றும் பண்பாட்டு அடிப்படையில் ஏற்படும் பொருள் மாற்றங்களையும் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

உடல்மொழியின் வகைகள்: தகவல் தொடர்புத்துறை வல்லுனர்கள் 7,00,000 பல்வேறுபட்ட உடல்சைகைகள் இருப்ப தாக உணருகின்றனர். ஆய்வாளர்கள் 5000 சைகைகளையும் பொருளைப் புலப்படுத்தும் 1000 வகையான உடல் அசைவு களையும் பட்டியலிட்டுள்ளனர். நமது காதுகள் மூலமாக மட்டும் நாம் தகவல்களைப் பெறுவதில்லை. நமது கண்கள் மூலமாகவும் அவற்றைப் பெறுகிறோம் என்கிறார் ட்வைட் போலிங்கன் (1975), உடல்மொழி இயற்கையாக அமைவது (Instinctive) கற்பதால் அமைவது (Learned) எனும் கருத்தும் உடல்மொழி கற்றுக்கொள்வதால் மட்டுமே அமைவது எனும் கருத்துகள் உண்டு என யென்ரென்சவோ கூறுகிறார் (1974)

உடல்மொழியும் பொருளும்: ஒரு மொழியில் விளங்கும் சொற்களை மட்டுமே பயன்படுத்தி நாம் நமது கருத்துக்களை வெளியிட முடியாத சூழலும் உண்டு. என்பார் மர்ஜோரி பொல்டன் (1983) மொழி தெரியாத ஒரு சூழலில் நாம் இருக்கும் போது முழுக்க முழுக்க உடல்மொழியைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே உடல்மொழியைத் தகவல் தொடர்பின் ஒரு முக்கிய வழிமுறையாகக் கொள்ள வேண்டும் என்பது எட்வர்டு கிலிமா மற்றும் உர்சுலா பெல்லக் (1979) ஆகியோர் கருத்து. மொழி மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளும் மக்களிடையே கூட உடல்மொழியின் பங்கு முக்கிய மானதாக அமைகிறது. மொழியியல் வடிவமான சொற்களுடன் சேர்த்து உடல்மொழியையும் பயன்படுத்தி நமது கருத்துக்களுக்கு வலிவு கொடுக்கவும் கேட்பவர்களைத் தன் வயப்படுத்தவும் முயலுகிறோம் என்பார் எஸ்.ஐ. ஹயாகவா (1977)

உடல்மொழி பொது மொழியா? உடல்மொழி மனித இனத்தின் ஒரு பொதுமொழியாக இருந்தாலும் அது புலப்படுத்தும் பொருள் முறையால் வேறுபட்டே நிற்கிறது. இடம், இனம், பண்பாடு இவற்றின் அடிப்படையில் உடல்மொழி உணர்த்தும் பொருள் வேறுபட்டே விளங்குகிறது என்பார் காரெ துர்பத் (1995) ஒரு நாட்டில் ஒரு சைகை மூலம் உணர்த்தப்படும் பொருள் இன்னோரிடத்தில் உணர்த்தப்படுவதில்லை அல்லது முற்றிலும் வேறுபட்ட பொருளை உணர்த்தப் பயன்படுகிறது. பெருவிரல், சுட்டுவிரல் ஆகிய இரண்டையும் இணைத்து வட்டமாக அமைத்து பிற விரல்கள் மேல் நோக்கி அமையும்படி ஒரு சைகையை உருவாக்கினால் அமெரிக்காவில் 'A-OK' என்ற பொருளை அல்லது 'Good Job' என்ற பொருளைக் குறிக்கப் பயன்படுத்தும் அடையாளமாகக் கருதப்படுகிறது. அதே அடையாளம் லத்தீன், அமெரிக்கா, ஜெர்மனி, மத்திய கிழக்கு நாடுகள் ஆகிய இடங்களில் கீழ்த்தரமான பொருளைக் குறிக்கப் பயன்படும் அடையாளமாகி விளங்குகிறது. ஜப்பானில் இவ்வடையாளம் பணத்தைக் குறிப்பிடுவதாகவும், பிரான்சில் 'ஜீரோ' என்ற பொருள் தருவதாகவும் அமைகிறது. இந்தியாவில் இவ்வடையாளம் சிறிது மாற்றியமைக்கப்படும் பொழுது (மடக்காத விரல்கள் கீழ்நோக்கி அமைய) 'சின்' முத்திரையாகக் கருதப்பட்டு மிக உயர்ந்த ஆன்மீகப் பொருளுடைய அடையாளமாக மாறிவிடுகிறது.

உடல்மொழியின் கிளைமொழிகள்: மொழிகளுக்குக் கிளை மொழிகள் இருப்பது போலவே உடல் மொழிக்கும், கிளைமொழி கள் உள்ளன. உடல்மொழி 5 கிளைமொழிகளைத் தன்னுள் கொண்டுள்ளதாக காரெ துர்பக் கூறுகிறார் (1995) அவைகள் கண் நோக்கு (Eye Contact) முகபாவனைகள் (Facial Expression) உல்டநிலைகள் (Body positions) மெய் தீண்டல் (Touching) மற்றும் உடலசைவுகள் (Spelific gestures)

கண் நோக்கு (Eye Contact): உணர்வு மற்றும் கருத்து வெளிப்பாட்டில் கண்நோக்கு முக்கிய இடத்தைப் பெறுகிறது. காதலர்கள் கண்களாலேயே பேசிக் கொள்கிறார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள் கண்பார்வையாலேயே குழந்தைகளை மாணவ மாணவியரைக் கட்டுப்படுத்துகின்றனர். கண்களை ஆன்மாவின் சாளரங்கள் எனக் கூறுவதுண்டு. ஆயினும் சில நாடுகளில் கண்நோக்கு பண்பாட்டு ரீதியாகத் தடுக்கப்பட்ட ஒன்றாகவும் விளங்குகிறது. உரையாடலிலும், சொற்பொழிவிலும் கண்நோக்கு மிகத்தேவையான உத்தியாகக் கருதப் படுகிறது. மேற்குறிப்பிட்ட தகவல் தொடர்பு முறைகளில் கண்நோக்கு நம்பிக்கை, உறுதிப்பாடு, பாதுகாப்பு, அதிகாரம் போன்ற உணர்வுகளை விளக்கும் மொழியாகக் கருதப்படுகிறது. கண்நோக்கு கால அளவிற்குத் தகுந்தவாறு பொருளுணர்த்தும். நீண்டநேர கண்நோக்கு கோப உணர்ச்சியை வெளியிடும் 'முறைத்தல்' எல்லைக்குப் போய் 'அச்சுறுத்தும்' நிலையை எட்டிப் பல சிக்கல்களை உருவாக்கிவிடும்.

முகபாவனை : (Facial Fxpression) அகத்தின் அழகு முகத்தில் தெரியும். உள்ளத்து உணர்வுகளின் வெளிப்பாடே முகபாவனை. நாம் சொற்கள் மூலமாக மறைக்கும் உண்மையான உணர்வுகளை முகபாவங்கள் காட்டிவிடும். சொற்களால் ஏமாற்றினாலும் முகபாவனையால் பிறரை ஏமாற்ற முடியாது. அப்படி ஏமாற்று பவர்கள் உலகில் ஆஸ்கர் பரிசுக்குத் தகுதிவாய்ந்தவர்கள். இமை அசைவுகள் மூலமாக மட்டுமே 23 மாறுபட்ட உணர்வுகளை வெளியிடலாம் என்றும் மொத்தத்தில் கணக்கிலடங்காத முகபாவனைகள் உள்ளன என்றும் கூறுகின்றனர் ஆய்வாளர்கள். இம்முகபாவனைகள் மொழிதெரியாதவர்களுக்குக் கூட உள்ளத்து உணர்வுகளைத் தெள்ளத்தெளிவாகக் காட்டிவிடும் என்பார் யென் ரென் வொ (1974)

உடலசைவுகள் : (Spelific Gestures) நேருக்கு நேர் ஏற்படும் தகவல்தொடர்பில் முக்கியமானதொரு முறையாக உடலசைவுகள் விளங்குகின்றன என்பார் மால்கம் கௌல்தர்டு மற்றும் மார்டின் மாண்கோமரி (1982) நமது அடக்கத்தைத் தெரிவிப்பது, தலை வணங்குவது, பிறர் கருத்தை ஆமோதிக்க அல்லது பாராட்டக் கையொலி எழுப்புவது பிறரை வரவேற்க கைகுலுக்கு முகத்தான் வலது கையை நீட்டுவது போன்ற பொதுஉடலசைவுகள் பெரும் பான்மையாக எல்லா நாடுகளிலும் எவ்விதப் பொருள் மாற்றமு மின்றி விளங்குகின்றன.

நகைமுகம் : (Smile) தலை, முண்டம், முன்கைகள், கைகள் மற்றும் விரல்கள் ஆகிய உறுப்புகளை உடல்மொழியை வெளியிடக் கூடுதலாகப் பயன்படுத்துகிறோம் என்பார் மால்கம் கௌல்தர்டு (1983). நகைமுகம் மிகவும் ஒரு அடிப்படையான உடல்மொழியாக விளங்குகிறது. நகைமுகம் வெளிப்படுத்தும் தகவல் எல்லோராலும் மிக எளிமையாகப் புரிந்து கொள்ளப் படுகிறது. இது மிகவும் சக்தி வாய்ந்த மொழியாகவும் விளங்கு கிறது. இது ஒரு சர்வதேச மொழியாகவும் விளங்குகிறது. இம் மொழி நட்பு, அமைதி, இரக்கம், நல்லுறவு ஆகிய பொருளை எவ்விதத் தடையும் முயற்சியும் இல்லாமல் விளக்கி நிற்கிறது. ஒரு சிறு வார்த்தை கூடப் பேசாமல் உலகம் முழுவதும் நட்புண்டாக்கப் பயன்படும் ஒரு சக்தி வாய்ந்த உடல்மொழியாக புன்முறுவல் விளங்குகிறது.

முடிவுரை: உடல்மொழியே உண்மை மொழி. அதுவே மனிதனின் முதல்மொழி. இவ்வுடல் மொழியின் வகைகள் பலப்பல. அவை விளக்கும் பொருளோ வகையிறந்தன. உடல் மொழியைப் புரிந்து கொண்டால் மனித உணர்வுகளை முழுவது மாக அறிந்து கொள்ளலாம். சொற்கள் விளக்காத பொருளும் உடல்மொழியால் விளக்கப்படும்.

துணை நூல்கள்

1974 Yuen Ran Chao, Language and Symbolic systems, Cambridge University Press, New York.

1975 Dwight Boligner, Aspects of Language (Second Edition) Harcourt Brace Jovanorich Inc. New York.

1977 Hayakawa, S. I., Language In thought and Action, George Allen and Unwin, Great Brition.

1979 Edward Klima/Ursula Bellugi, The Signs of Language, Harward Univeristy Press, London,

1982 Malcolm Coulthard and Martin Montgonery (Eds) Studies in Discourse Alalysis, Routledge & Heganpaul, London

1983 Malcolm couthard, An Introduction to Discourse Analysis, Longman Group limited, England.

1983.a Hariorie Boulton, The Anatomy of Language, Routledge & Hegan Paul, London

1995 Gary Jurbak, 'Watch your body Language' P P 20 - 23 The Rotarian, April 1995, New york.

வைரமுத்து கவிதைகளில் சமூக் விழிப்புணர்வுச் சிந்தனைகள்

நிர்மலா மோகன்
செந்தமிழ்க் கல்லூரி
மதுரை – 625 001

இலக்கியம் என்பது சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி என்று கூறுவர் அறிஞர். சமுதாயத்தை - சமுதாயத்து உணர்வுகளை-சமுதாயத்தில் காணப்படும் அவலங்களை - பிரச் சினைகளை - எடுத்துக்காட்டாத கவிஞன் கவிஞனே அல்லன். சுற்றுமுற்றும் கூர்ந்து கவனித்து, சமுதாயப் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து நல்லதொரு வழி காட்டுகின்றவனே சிறந்த கவிஞன் ஆவான். அத்தகைய கவிஞர்களுள் ஒருவர் வைரமுத்து. தம் கவிதையாற்றலால் இன்றைய இளைஞர்களின் நெஞ்சில் தனியொரு இடத்தைப் பெற்றவர். அவருடைய கவிதைகளில் அமைந்துள்ள சமூக விழிப்புணர்வுச் சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

அரசியல் சீர்கேடுகள்: 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே- ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று' என்று இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே 'சுதந்திரப் பள்ளு' பாடினார் மகாகவி பாரதியார். இந்திய நாட்டிற்கு 'ஆனந்த சுதந்திரம்'– 'இன்ப சுதந்திரம்' – 'வீர சுதந்திரம்' விரைவில் கிடைக்க வேண்டும் என்று விழுமிய கனவு கண்டார் அவர். ஆனால் சுதந்திரம் கிடைத்த பிறகும் இந்தியாவின் நிலை எப்படி இருக்கிறது என்பதைக் கவிஞர் வைரமுத்து '1947 ஆகஸ்ட் 15' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் அழகாகச் சித்திரித்துக் காட்டுகிறார்.

'அவன் ஒரு
பட்டுவேட்டி பற்றிய

கனவில் இருந்தபோது -
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது!'

(இன்னொரு தேசிய கீதம். ப.99)

சுதந்திரம் பெற்று 49 ஆண்டுகள் முடிந்த பின்னரும் இந்திய நாட்டின் ஏழ்மைநிலை ஒழிந்துவிடவில்லை, இந்தியனின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து விடவில்லை என்பதை இக்கவிதையில் மிக அருமையாகச் சுட்டிக்காட்டுகிறார் கவிஞர்.

இந்த இழிநிலைக்குக் காரணம் யார் என்பதையும் வைரமுத்து பிறிதொரு கவிதையில் எடுத்துக்காட்டுகிறார்.

'இந்திய மண்ணில் வியாபாரஞ் செய்ய வந்தவர்கள்
அரசியல் நடத்தினார்கள்!
அரசியல் நடத்த வந்தவர்கள் வியாபாரஞ் செய்கிறார்கள்!
இரண்டிலும்... நட்டப்பட்டது மட்டும்
நாம் தானே இந்தியனே!'

(திருத்தி எழுதிய தீர்ப்புகள். ப.116)

என்று இன்றைய அரசியல்வாதிகளால் சமுதாயத்தில் விளையும் சீர்கேடுகளைக் 'கணக்குப் பார்க்கையில்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் கோடிட்டுக் காட்டுகிறார் வைரமுத்து.

நாட்டின் முன்னேற்றத்திற்காகக் குரல்கொடுக்க வேண்டிய அரசியல்வாதிகள். இன்று சட்டமன்றங்களிலும். பாராளுமன்றங் களிலும் செருப்புகளோடு விளையாடிக் கொண்டிருப்பதைக் 'கோயில் செய்குவோம்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் எள்ளற் சுவையுடன் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர்.

'இன்னும் கொஞ்சம் நாளில்
அத்தனை சட்டசபைகளும்
ஆலயங்கள் ஆகலாம்!
அங்கும் -
செருப்போடு நுழைவது
தடை செய்யப்படலாம்' (இன்னொரு தேசிய கீதம்.ப.49)

ஆலயங்களில் தான் செருப்போடு யாரும் நுழையக் கூடாது என்பார்கள்; ஆனால் இன்றைய அரசியல்வாதிகள் போகிற போக்கைப் பார்த்தால் இனிமேல் சட்டமன்றங்களிலும் செருப்

பணிந்து யாரும் நுழையக்கூடாது என்ற உத்திரவு பிறப்பிக்கப் படலாம் எனக் கருதுகிறார் கவிஞர்.

'எல்லோரும் ஓர் விலை
எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் இந்நாட்டு மன்னர் - ஆம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்'

என்று இந்திய நாட்டு மக்கள் எல்லோரும் சமம் எனப் பாடினார் பாரதியார். அவர் கனவு கண்ட சமத்துவ இந்தியா சுதந்திரத் திற்குப் பின்னர் உருவாகி இருக்கிறதா? இந்திய நாட்டுக் குடிமகனுக்கு எல்லா உரிமைகளும் கிடைத்திருக்கின்றனவா? ஆடம்பரம், சொகுசு, சுகபோகம் என்று அனைத்து வசதி வாய்ப்புகளுடனும் அரசியல்வாதி, மக்களின் வரிப் பணத்தில் திளைத்துக் கொண்டிருக்க, அன்றாடத் தேவைகளுக்குக் கூட சாதாரணக் குடிமகன் அல்லாடும் நிலைதான் இன்றளவும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இதனை 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்னும் தலைப்பில் அமைந்த வைரமுத்துவின் கவிதை அழகுற எடுத்துக்காட்டுகிறது.

அமைச்சர் அடிக்கல் நாட்ட வருகிறார்; தெருவெல்லாம் தீபாவளி; வீதியெல்லாம் வெளிச்ச வெள்ளம்! மறுநாள்-வழக்கம் போல் இருட்டில் நிற்கின்ற குருட்டுக் கம்பங்கள் தெரு விளக்கின் அடியில் பீடி வெளிச்சத்தில் இரு குரல்கள் இப்படிப் பேசிக் கொள்கின்றன.

"மந்திரி சொன்னாரே
எல்லோரும் இந்நாட்டு மன்னராமே?"
"மன்னர்களுக்கேதப்பா மரியாதை?
எல்லோரும் இந்நாட்டு மந்திரிகள் ஆவதெப்போ?"
(கொடிமரத்தின் வேர்கள், ப.43)

இக்கேள்வியின் மூலம் இன்றைய நிலையில் எல்லோம் மந்திரிகள் ஆனால்தான்!-சிறை, மருத்துவமனை போன்ற இடங்களில் கூட வசதிகளைப் பெற முடியும் என எள்ளற் சுவையோடு எடுத்துரைக்கிறார் கவிஞர்.

பெண்களின் அவல நிலை: "பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா" என்று முழங்கினார் பாரதியார். பெண்ணியம் பெண்கல்வி, பெண்விடுதலை என்னும் எழுச்சிக் குரல் எங்கும் கேட்டுக்கொண்டிருக்கும் காலம் இது. ஆனாலும் பெண்கள்

நிலை இன்றைய சமுதாயத்தில் எப்படி இருக்கிறது? 'கருவறையே கல்லறை ஆகிவிடும்' கொடுமை பெண்ணுக்கு இன்றளவும் இருக்கத்தானே செய்கிறது? இதைத்தாண்டி வந்தால், குடும்பம் என்னும் தேரை இழுத்துச் செல்வதற்காகப் பெண் தன்னுடைய உழைப்பு, ஆற்றல், எண்ணம், செயல் எல்லாவற்றையும் அர்ப்பணிக்க வேண்டிய நிலை உள்ளது. 'வித்தியாச அன்னங்கள்' என்னும் தலைப்பில் அமைந்த கவிதையில் இன்றைய பெண் களின் நிலையினைச் சித்திரிக்க முற்படும் கவிஞர் வைரமுத்து 'கல்லாகிப் போன அகலிகை' யாய், 'துஷ்யந்தனால் கைவிடப் பட்ட சகுந்தலை' யாய், 'சம்பளம் என்னும் அட்சய பாத்திரம் ஏந்தி நிற்கும் மணிமேகலை'யாய் அவர்கள் விளக்குவதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

''பாவம் மனைவி! இந்த
இல்லறக் கிரிக்கெட்டில்
கட்டிலறைக்கும் சமையலறைக்கும்
ரன்கள் எடுத்தெடுத்தே
ரணமாய்ப் போனாள்''

(திருத்தி எழுதிய தீர்ப்புகள் ப.18)

என்று மனைவியின் அவல நிலையையும், பிறிதொரு கவிதையில் எடுத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

இது ஒருபுறம் என்றால், மற்றொரு புறம் முதிர்கன்னியரின் அவலம். இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்தியா தற்போது சந்தித்துக் கொண்டிருக்கும் ஒரு முக்கியமான பிரச்சினை வரதட்சணை. பள்ளியில் படிக்கக் 'குருதட்சணை' கொடுத்த காலம் போய் பள்ளியில் படுக்க 'வரதட்சணை' கொடுக்க வேண்டிய சூழ்நிலை இன்று பெண் களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் திருமணம் ஆகாத முதிர் கன்னியரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மிகுந்து கொண்டிருக் கின்றது. பெண்ணின் இளமைக் கனவுகள்-திருமணக் கற்பனை களை—ஜாதி, மதம், ஜாதகம், தோஷம், சாத்திரம், சம்பிரதாயம் என்னும் தடைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அழித்துவிடுகின்றன. தன்னை மணந்துகொள்ள ஒரு 'ராம'னோ ஒரு 'ஷாஜகா'னோ வரமாட்டானா என்று ஏங்கிய நிலை மாறி ஒரு 'ராவணனாவது' வரமாட்டானா என்று எண்ணத் தொடங்கும் நிலையில் இன்று பெண் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார் கவிஞர்

'வேண்டாம்! ஷாஜகானும் வேண்டாம்
ராமனும் வேண்டாம்
நீயாவது ராவணா - நீயாவது...
புஷ்பக விமானமா கேட்டேன்
கள்ளத் தோணியிலாவது...'

(இந்தப் பூக்கள் விற்பனைக்கு அல்ல, ப.73)

இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி ஏங்கும் பெண்ணின் பெருமூச்சு வெப்பத்தில் அவளது மூக்குத்தித் தங்கமும் இளகி விடுகிறதாம்; முன்பு பூக்களில் அணிவகுப்பு மரியாதையைத் தன் கூந்தலில் ஏற்றுக்கொண்டவள் இன்றும் பூச்சூடுவது ஏன் தெரியுமா? தான் விதவையல்ல என்று வெளிக்காட்டா மட்டுந்தானாம்; முன்பெல்லாம் கனவுகளுக்காகவே உறங்கிய அவளுக்கு இப்பொழுது உறக்கமே கனவாகி விட்டதாம்; சிரிப்பு என்பது அவளுக்கு இதழில் இல்லையாம்-ஞாபகத்தில்தான் இருக்கிறதாம். முப்பது மூன்று வயதாகியும் திருமணம் ஆகாத ஒரு முதிர்கன்னியின் அவல நிலையை இங்ஙனம் உருக்கமாக எடுத்துக்காட்டும் கவிஞர் வைரமுத்து, இந்நிலையை மாற்றுவது எப்படி என்பது குறித்தும் ஆழமாகச் சிந்திக்கிறார், அந்தச் சீதையின் சார்பில் உரக்கப் பேசுகிறார்.

"அந்தச் சீதை சிந்திக்கிறாள்!
இந்த வரதட்சணை வில்லை வளைப்பது யார்?
ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை.
ஜனகனோ-பாவம் சாய்வு நாற்காலியில்
இனி நாமே ஒடிப்பதே நிச்சயம்
எங்கே...சீதைகளே கொஞ்சம் சேருங்களேன்!"

(இன்னொரு தேசிய கீதம், ப.12

பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டினால் மட்டும் போதாது; அவை தீர்வதற்குத் தகுந்த ஒரு வழியும் காணவேண்டும் என்னும் வகையில் பெண்கள் எல்லோரும் ஒன்றினைந்து உறுதியாக நின்று இப்பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும்' எனக் கருதுகிறார் வைரமுத்து.

மேலும், கவிஞர் தொட்டுக் காட்டாத சமூகப் பிரச்சினையே இல்லை என்று கூறும் அளவிற்கு, குழந்தைத் தொழிலாளர் அவல நிலை, சாதி, மத வேறுபாடுகள், திரைப்படம் விளைவிக்கும் தீமைகள், போன்ற பலவற்றையும் வைரமுத்து தம் கவிதைகளில் எடுத்துக்காட்டியுள்ளார். எடுத்துக் காட்டுவதோடு நின்று விடாமல், சமூகப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் அவர் தம் கவிதைகளில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பத்திரிகையாளர் பாரதி

தா. நீலகண்ட பிள்ளை
தெ. தி. இந்துக் கல்லூரி
நாகர்கோயில் – 629 002

மதுரையிலிருந்து வெளிவந்த 'விவேகபாநு' என்னும் பத்திரிகையில் பாரதியின் பாடலான 'தன்மை இறக்கம்' என்னும் பாடல் வெளிவந்தது. அது முதல் பத்திரிகைக்கு எழுதவேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு வந்தது. அதனால் பள்ளி வேலையில் விருப்பம் குறைந்தது. இறுதியாக ஆசிரியர் பணியை நிறுத்தி விட்டு சென்னையில் 'சுதேசமித்திரன்' நாளிதழில் உதவி ஆசிரியராகப் பொறுப்பு ஏற்றார்.

இதே காலகட்டத்தில் 1905-இல் வங்கப் பிரிவினை தோன்றியது. அது பாரதியைத் தீவிர புரட்சியாளராக மாற்றி விட்டது. 1906-ல் காசியில் நடைபெற்ற இந்திய தேசிய மாநாட்டிற்குச் சென்று திரும்பிய பாரதி இந்தியா பத்திரிகையின் பொறுப்பாசிரியராகவும் பாலபாரதியின் ஆசிரியராகவும் பொறுப் பேற்றார். காங்கிரஸ் மாநாட்டுச் செய்திகளைக் கண்ணுற்று வந்த பிறகு பாரதியின் எழுத்துக்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்றன வீராவேசம் நிறைந்ததாக அமைந்தன.

பாரதியும் பிற பத்திரிகைகளும்: பாரதி தம் காலத்தில் சுதேசமித்திரன், இந்தியா, பாலபாரதி போன்ற பத்திரிகைகளில் மட்டுமல்லாது, வேறு பல பத்திரிகைகளுக்கும் எழுதியுள்ளார். அவர் எழுதியதாகப் பல்வேறு குறிப்புகள் பல்வேறு பத்திரிகை களிலும் காணக் கிடைக்கின்றன. 'கர்மயோகி', 'சுதேசமித்திரன்' 'விஜயா', 'பாலபாரதா', 'New India', 'Common Weal', 'Hindu', 'செந்தமிழ்', 'காதரத்னாகரம்', 'விவேகபாநு', 'ஞானபாநு' போன்ற இதழ்களிலும் காணமுடிகின்றது. இந்த பத்திரிகைகளில் வந்த செய்திகளை எல்லாம் ரா. சு. பத்மநாபன்

'பாரதி புதையலாகவும்', பெ. தூரன் 'பாரதி தமிழாகவும்' வெளியிட்டுள்ளார். இளசை மணியன் கல்கத்தா நூலகத்திலிருந்து கிடைத்த பல செய்திகளைத் தொகுத்து 'பாரதிதரிசனம்' என இரு தொகுதியாக வெளியிட்டுள்ளார். சீனி. விசுவநாதன், டி. வி. எஸ். மணி போன்றோரும் பாரதி 'சக்கரவர்த்தினி' பத்திரிகையில் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளனர். பத்திரிகைத் துறையைப் பொறுத்தவரையில் தமிழில் எழுத வேண்டும், எழுத முடியும் என்பதை உலகறியச் செய்தவன் பாரதி எனலாம். பேராசிரியர் நா. வானமாமலை 'தமிழ்ப் பத்திரிகையின் வளர்ப்புத் தந்தையாகப் பாரதியாரை' குறிப்பிட்டுள்ளார். அவ்வளவிற்குப் பாரதி தமிழ்ப் பத்திரிகை உலகில் உயர்ந்த இடத்தைப் பெற்று உள்ளார் என்பதை அறிய முடிகின்றது.

பத்திரிகை நடை: புதுயுகக் கவிஞர் எனும் பெயர் பெற்ற பாரதி குழந்தைகளுக்காக எழுதிய பாடலிலும் 'முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா' என வீறுடன் எழுதியவர். வசனநடையில் அவர் இன்னும் ஒருபடி மேலே சென்றுள்ளார். ஆயினும் நளினமாக எழுதினார். அதற்குப் பல சான்றுகளைக் காண முடியும். தன்னுடைய கருத்துக்களையும் அதில் புகுத்தி எழுதுவதில் பாரதி சமர்த்தர். கட்டுரை எழுதும் போதும் பாரதி எளிமை இனிமையைச் சேர்த்து அழகொழுக எழுதினார். அவருடைய எழுத்தில் கனலும் பறந்தது. பாரதியின் எழுத்துக்களில் வடமொழி கலந்தே இருந்தது. மற்றவர்கள் ஆங்கிலத்தை அப்படியே ஒலி பெயர்த்து (Transliteration) எழுதிய காலத்தில் பாரதி மிகவும் முயன்று தமிழில் எழுத முற்பட்டார். ''மக்களிடம் பேசும் போது மக்கள் மொழியில் பேச வேண்டும்'' என்ற லெனின் கூற்றிற்கு ஏற்ப அவர் மக்கள் தெரிந்திருந்த சொற்களை, போலவே எழுதினார். இதனைப் பத்திரிகைத் துறையில் மட்டுமே கையாண்டார். இலக்கிய நிலையில் பெரும்பாலும் தூய தமிழைப் பயன்படுத்தி இலக்கியத் தரத்துடன் எழுதினார்.

பத்திரிகை அனுபவங்கள்: பல கட்டுரைகள், துணுக்குகள், பாஷ்யங்கள் எழுதிய பாரதி 1904இல் சுதேசமித்திரனில் சேர்ந்து உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 15—09—1905-ல் 'வங்க வாழ்த்துக்கவிகள்' சுதேசமித்திரனில் பிரசுரமாகியது. பாரதி

யாரின் தீவிர வேகத்திற்குச் சுதேசமித்திரன் ஈடுகொடுக்காததால் பாரதி அங்கிருந்து கொண்டு வேறு பத்திரிகைகள் துவங்கும் முயற்சியில் ஈடுபட்டார். 1905-இல் சக்கரவர்த்தினி என்ற மாதாந்திரப் பத்திரிகையைத் துவங்கினார். மாதர் முன்னேற்றத்தை முழுமையாகக் கொண்ட இப்பத்திரிகையும் பாரதியின் அரசியல் ஆவேசத்திற்கு உதவவில்லை. 1906-ல் சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு விடுதலை போராட்டத்தில் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்தது. பாலகங்காதர திலகரின் தலைமையில் தீவிரவாதிகள் காலம் ஆரம்பமானது. பாரதியின் இந்தியா நெருப்பு மழையைக் கொட்டியது. 1907-ல் பாரதி சுதேசமித்திரனிலிருந்து விலகினார். பாரதியாரின் அனல் கக்கும் எழுத்துக்களால் ஆங்கில அரசு இந்தியா பத்திரிகையைத் தடைசெய்ய நினைத்தது. அதற்கு வாய்ப்பாக 1799-ல் வெல்லெஸ்லி அச்சுரிமை சட்டத்தைக் கொண்டு வந்தார். 1878-ல் லிட்டன் பிரபு தீவிரவாத போக்கிற்கு தண்டனை கொடுக்கும் தாய்மொழிப் பத்திரிகைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். இந்தச் சட்டங்கள் 1908-1910 ஆண்டுகளில் உச்சத்தை அடைந்தது. அரசு இந்தியா பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீனிவாசனை 1908 இல் கைது செய்து ஐந்தாண்டு தீவாந்தர தண்டனை வழங்கியது. அத்தோடு பாரதியைக் கைது செய்யவும் ஆங்கில அரசு எண்ணியது. எனவே அவரது நண்பர்கள் வற்புறுத்தலால் பாரதி புதுச்சேரி சென்றார்.

புதுச்சேரியில் இந்தியா: 1908 அக்டோபர், 16 ஆம் நாளி லிருந்து இந்தியா பத்திரிகை புதுச்சேரியிலிருந்து வெளிவரத் தொடங்கியது. இந்தியக் கோதுமைகள் இங்கிலாந்திற்கு ஏற்று மதியாவதைக் கண்டித்து ஒரு கார்ட்டூன் வெளியிட்டார். அதனைக் காரணம் காட்டி இந்தியா பத்திரிகையைத் தமிழ் நாட்டிற்குள் நுழைய விடாது அரசு தடைசெய்தது. இதனால் 1910 அக்டோபர் இறுதியில் இந்தியா பத்திரிகை நின்றது.

1915-ஜுன் முதல் அவரது இறப்பு வரை அவரது எழுத்துக் கள் சுதேசமித்திரனில் வந்தன. 1920 நவம்பர் முதல் பாரதி தினந்தோறும் சுதேசமித்திரனில் எழுதினார்.

பிற பத்திரிகைகள்: வறுமையின் பிடி, அடக்குமுறை போன்றவற்றிற்கு மத்தியில் பாரதி பத்திரிகைத் துறைக்குப்

பல பணிகளைச் செய்திருப்பது அவரது விடுதலை உணர்வையும் எழுத்தார்வத்தையும் காட்டுகின்றது. பத்திரிகை மூலமாகத் தமிழ் மக்களின் விடுதலை உணர்வைத் தட்டி எழுப்பலாம் என்ற ஆதங்கத்தையும் அதில் காண முடிகின்றது. பாரதி இதனைத் தவிர இந்தியா, சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைத் தவிர தனது நண்பர்கள் நடத்திய பாலபாரதி, ஞானபாநு, தேசபக்தன், லோகோபகாரி, சூர்யோதயம் போன்ற பத்திரிகை களிலும் எழுதியுள்ளார். இதனோடு பல ஆங்கில பத்திரிகை களுக்குக் கடிதமும் எழுதியுள்ளார். 1918 அக்டோபர், 1904 டிசம்பர் மாதங்களில் 'இந்து' பத்திரிகையிலும், 1915 மே மாதம் நியூ இந்தியாவிலும் பாரதி ஆசிரியருக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதுவும் சமூகப் பிரச்சினையை அடியொற்றியே அமைந்துள்ளது.

அ) **கார்ட்டூன்கள்**: இன்றைய பத்திரிகைகள், இதழ்கள் போன்றன கார்ட்டூன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. மக்களை அது மிகவும் கவர்ந்தும் உள்ளது. முதன் முதலாகத் தமிழ்ப் பத்திரிகைகளில் கார்ட்டூன் வரையும் பழக்கத்தைக் கொணர்ந்தவர் பாரதியே எனக் கூறும் அளவிற்கு அதனை அறிமுகப்படுத்தினார். கல்வி அறிவற்றவர்களும் உணரும் வண்ணன் அதனை வெளியிட்டார். அவருடைய கார்ட்டூன்கள் மிதவாதிகளைக் கேலி செய்வதாகவும், ஆங்கில அரசினைக் கண்டிப்பதாகவும் அமைந்தன.

1909 டிசம்பர் 18-ம் தேதி இந்தியா இதழில் தென்னாப் பிரிக்க இந்தியர்களுக்காகப் போராட காந்தியடிகள் தென்னாப் பிரிக்கா திரும்பினார். தென் ஆப்பிரிக்க அரசாங்கம் அவரை சிறையில் அடைத்தது. இது செய்தி. இதை பாரதி ஒரு கார்ட்டூன் சித்திரமாக வரைகின்றார். சித்திரத்துடன் சித்திர விளக்கமும் தருகின்றார். தலையங்கமும் எழுதினார். அதில் 'காந்தி என்ற பசு வந்து கொண்டிருக்கிறது. சில புலிகள் அதன் மீது பாய்கின்றன'. இது சித்திரம். சித்திர விளக்கமாக ''ஸ்ரீ காந்தியென்ற பசுவானது தனது கன்றுக்குட்டியாகிய இதர இந்தியர்களின் நன்மையின் பொருட்டு இங்கிலாந்திற்குப் போய் பேசிவிட்டு சிறையில் அடைபடுவதற்காக மறுபடியும் டிரான்ஸ்வாலுக்கு வந்திருக்கின்றது. தென் ஆப்பரிக்க உத்தியோகஸ்தர்களாகிய புலிகள் இவருடைய மேன்மை அறியாமல் சிறையில் அடைத்தார்கள்'' என வாக்கியங்கள்

உள்ளன. இந்த காட்டூனுக்கு 'காந்திப் பசு' எனத் தலைப்பும் தந்துள்ளார். 1909 மே 15-ஆம் தேதி இதழில் "கிரஹண விமோசனம்' என்ற கார்ட்டூன் அரவிந்தர் பற்றி கூறுகின்றது.

தலைப்புகள்: மக்களைக் கவர்ந்திருக்கும் வண்ணம், பார்த்த உடன் படிக்கத் தூண்டும் வண்ணம் விந்தையான தலைப்புகளைப் போடுவதும் பாரதியின் பழக்கம். 'பாரத நாட்டின் நவீன உணர்ச்சி', 'இது உங்களுக்கு சந்தோஷ சமயமா'. 'ஆகாய விமானமும் சென்னையும்', 'சென்னை மெயில் பத்திரிகையின் வயிற்றெரிச்சல்', 'இந்தியனாகப் பிறந்திருப்பதே பெரிய பாக்கியம், 'தாய்மார்களின் கடமை', என்ற தலைப்புகளைப் பயன்படுத்தி உள்ளார். எளிய மக்கள் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். பல ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ப் பதங்களைப் பயன்படுத்துகின்றார்.

பத்திரிகை ஆசிரியர்: தான் மட்டும் எழுதுவதோடு நின்று விடாமல் மற்றவர்களையும் எழுதத் தூண்டும் விதத்தில் 1908 ஏப்ரல் 18-ம் நாள் சென்னை இந்தியா பதிப்பில் ஒரு தலையங்கம் விளம்பரமாகவே வந்தது. அது படிக்க சுவராசியமாக உள்ளது. வர்த்தமானம் எழுதி அனுப்புவோருக்கு பணம் தருகின்றோம். நீங்கள் எழுதி ஏன் சம்பாதிக்கக் கூடாது? என்பதோடு எப்படி எழுத வேண்டும் என நிபந்தனையும் விடுத்துள்ளார்.

'எமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்
இமைப் பொழுதும் சோராதிருத்தல்'

என்ற கொள்கைப்படி வாழ்ந்த பாரதி தன் காலகட்டத்தில் மிகச் சிறந்த ஒரு பத்திரிகையாளனாக விளங்கியுள்ளார். அன்றே பத்திரிகை உலகில் புதிய புதிய உத்திகளை எல்லாம் புகுத்தி பத்திரிகையாளனாக விளங்கியுள்ளார். அன்றே பத்திரிகையையும், நாட்டு மக்களின் விடுதலை உணர்வையும் வளர்த்துள்ளார்.

திருக்குறள் உரையாசிரியர்களில் பரிதியார்

ந. நீலமோகன்
கேரள பல்கலைக் கழகம்
காரிய வட்டம்

சிறிய குறள்வரிகள் பெரிய கருத்துகளை அடக்கி நிற்பதால் அறிஞர் பலர் தத்தம் அறிவின் ஆழத்திற்கேற்ப அந்நூலுக்கு உரைகண்டுள்ளனர். திருக்குறளுக்கு உரை கண்ட பழைய உரைகாரர் பதின்மர் பெயர்களை

தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமேலழகர் - திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர் நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்
(திருக்குறள் உரைக்கொத்து 2ஆம் பாகம் ப. 2)

என்ற பாடல் குறிப்பிடும். இவை தவிரப் பழைய உரையாசிரியர் உரைகளும் கிடைத்துள்ளன. ஆனால் பெயர்கள் கிடைத்தில. மேலும் இலக்கண உரையாசிரியர் சிலர் எடுத்துக்காட்டாகக் குறளை எடுத்தாண்டு உரை கண்டதும் உண்டு. நன்னூல் உரை ஆசிரியர்களான மயிலைநாதரும் சங்கரநமச்சிவாயரும் தாம் உரை வகுக்கும் சூத்திரங்களுக்குத் தேவையான குறட்பாக்களைப் பயன்படுத்தியுள்ளனர். மேலும் திரு.வி.க. மு.வ. போன்ற உரை ஆசிரியர்களும் குறளுக்கு உரை வகுத்துள்ளனர்.

பரிதியார்: இப்பரிதியாரைப் பருதியார் எனவும் வழங்கு கின்றனர். திருப்பருதிநியமம் இவரது ஊராய் இருக்கலாம் எனத் துடிசைக்கிழார் கருதுகிறார். (மு. வை. அரவிந்தன், உரை யாசிரியர்கள் ப-368) திருப்பருதிநியமத்தில் குடி கொண்ட கடவுளின் பெயர் பருதியப்பர் என்பதாகும். எனவே கடவுளின் பெயரை இவர் பெற்றோர் இவருக்கு இட்டிருப்பர். பரிதியார்

குறளுக்கும் மட்டுமின்றிப் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படைக்கும் உரைவகுத்துள்ளார் என்பதை

நக்கீரர் செய் நன்முருகாற்றுப் படைக்குத்
தக்கவுரை சொன்ன தகுதியான்–மிக்குலகில்
பன்னூல் அறிந்த பரிதி மறைப்புலவன்
தொன்னூல் அறிவால் துணிந்து''

(மு.வை. அரவிந்தன் உரையாசிரியர்கள் ப. 327)

என்ற பாடல் வழியாக அறிய முடிகிறது.

காலம்: ஓர் ஆசிரியரின் காலத்தை அவர் படைத்த இலக்கியங்களில் காணப்படும் சொல்லாட்சி கருத்துப் போன்ற இன்னபிற அகக்கருத்துக்களைக் கொண்டு அறியலாம். சமகாலப் புலவர், அரசர் போன்ற புறச்சான்றைக் கொண்டும் அறியலாம்.

பரிமேலழகருக்கு முற்பட்டவர்: குறளுக்கு உரைவகுத்த பதின்மருள் பரிமேலழகர் கி.பி. 13-ம் நூற்றாண்டைச் சார்ந்தவர். (தமிழ் புலவர் அகராதி ப. 250)

பரிதியார் காலம் 13-ம் நூற்றாண்டுக்குப்பின் 15-ம் நூற்றாண்டு வரையில் என்று குறிப்பிடுகிறார். மு. அருணாசலம் மேலும் பல உரையாளர் கருத்துக்களைச் சுட்டியும், மறுத்தும் எழுதுகின்ற பரிமேலழகர் பரிதியார் கூற்றுக்களில் ஒன்றையும் குறிப்பிடவில்லை. இதனால் பரிமேலழகர் காலத்தில் பரிதியார் உரைஇல்லை என்றே எண்ண வேண்டியிருக்கிறது. (தமிழ் இலக்கிய வரலாறு 15-ம் நூற்றாண்டு பக்-101, 102)

....செவ்விமுப்பாலுக்கு
ஓர் உரையின்றி ஒன்பது சென்றும்
ஐயுறவாக நையுறு காலை
...குறட்பாத்தமிழ் மனுநூலிற்கு
விழுப்பொருள் தோன்ற விரித்தினிது உரைத்தவன்
பரிமேலழகன் எனப்பெயர் படைத்துக்
தரைமேல் உதித்த தலைமையோனே.

(மு.வை. அரவிந்தன், உரையாசியர் ப. 141)

என்ற பரிமேலழகர் உரைப்பாயிரம் அவருக்கு முன் ஒன்பது உரை ஆசிரியர்கள் இருந்தனர் என்பதையும் அவர்களுள் ஒருவர் பரிதியார் என்பதையும் தெளிவாக்குகிறது.

பதின்மரைக்குறிக்கும் தனிப்பாடல் ஒன்றில் பரிமேலழகருக்கு முன்னர் பரிதியார் குறிப்பிடப்படுகிறார். இவ்விரு பாடல்களைக்

கொண்டு நோக்குகையில் பரிமேலழகர் காலத்திற்கு முற்பட்டவர் பரிதியார் என்பது உறுதியாகிறது.

கலைக்களஞ்சியம், பரிதியாரைப் பற்றிக் குறிப்பிடுகையில் இவர் 13-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பரிமேலழகர்க்கு முற்பட்டவ ராவர் என்கிறது. மேலும் பரிமேலழகர் உரைப்பாயிரத்தால் 9 உரைகள் எழுதப்பட்டும், திருக்குறளில் வரும் ஐயம் தெளிய மாட்டாமல் தமிழுலகம் வருந்தியதாக அந்த ஐயங்கள் நீங்கப் பரிமேலழகர் செவ்விய நல்லுரை செய்தாரென்பதால் அவ் வொன்பது உரையாசிரியருள் ஒருவராகிய பரிதியார் அவர்க்கு முற்பட்டவராதல் தெளிவாதல் காண்க எனக்கூறுகிறது. (கலைக்களஞ்சியம் ப. 766)

பரிமேலழகருக்கு முன்னரே ஒன்பது உரைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று பரிதியார் உரையாகும் என்று பேராசிரியர் சுந்தரமூர்த்தி குறிப்பிடுவார். (திருக்குறள் உரைத்திறன், ஆராய்ச்சி முன்னுரை ப–3)

ஐயனாரிதனார்க்கு பிற்பட்டவர்: ஐயனாரிதனார் வகுத்த புறப்பொருள் வெண்பாமாலை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிக்குரியதாகக் கருதப்படுகிறது. (ந. சி. கந்தையா பிள்ளை தமிழ்ப்புலவர் அகராதி ப. 76)

"வெட்சி முதலான எட்டுவகை மாலை சூடிப்போர் செய்வது மாற்றானைக் கண்ட படை" (தி. உரைக்கொத்து பாகம்-2 ப. 445) என்ற பரிதியார் உரையில் வெட்சி முதலான எட்டுவகை மாலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இவ்வெட்டு வகை மாலையைப் பற்றிய குறிப்புப் புறப்பொருள் வெண்பா மாலையில் காணப்படுகிறது. எனவே பரிதியார் ஐயனாரிதனார்க் கும் பிற்பட்டவர் என்றே கருதலாம்.

ஆண்டாளுக்குப் பிற்பட்டவர்: திருப்பாவை கி. பி. 9-ம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். (ந.சி. கந்தையாபிள்ளை, தமிழ்ப் புலவர் அகராதி ப. 34) திருப்பாவையில் குறிப்பிடப்படும் மார்கழி நீராடல் பரிதியார் உரையில் மார்கழி தீர்த்தம் (தி. 2. கொ, ப. 252) என்று காணப்படுகிறது. எனவே பரிதியார் ஆண்டாளுக்குப் பிற்பட்டவராக எண்ணலாம்.

பரிதியார் ஐனாரிதனார்க்கும் ஆண்டாளுக்கும் பிற்பட்டவர் பரிமேலழகருக்கு முற்பட்டவர் மேலே குறிப்பிட்ட செய்தி

களினின்றும் இவரது காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாக் இருக்கலாம் எனக் கூற முடிகிறது.

பரிதியாரின் உரை அமைப்பு: குறள் உரையாசிரியர்களில் பரிதியார் பிற ஆசிரியர் கருத்துடன் ஒட்டியும் சில இடங்களில் மாறுபட்டும் உரை வகுத்துள்ளார்.

இவர் உரையில் அதிகார முன்னுரை 37 அதிகாரங்களும் இல்லை. ஓர் அதிகாரத்திற்கும் அடுத்த அதிகாரத்திற்கும் தொடர்புபடுத்திக் காட்டும் உரையமைப்பு 34 அதிகாரங்களில் காணப்படுகிறது. 20 குறட்பாவுக்கு இவருடைய உரை முற்றிலும் கிடைக்கவில்லை. ஒன்பது குறட்பாக்களில் இவரது உரை குறை உரையாகக் காட்சியளிக்கிறது.

பரிதியார் ஓர் அதிகாரத்தில் உள்ள 10 குறட்பாக்களையும் படித்து அவற்றின் கருத்துக்களைத் தம் கருத்திற்கு ஏற்ப முறைப் படுத்தி வைத்தமை எல்லா அதிகாரங்களிலும் காணப்படுகிறது எடுத்துக்காட்டாகப் புதல்வரைப் பெறுதல் அதிகாரத்தில் இவர் கண்ட முறைமை 1, 8, 7, 5, 6, 4, 10, 2, 3, 9,.. இவர் சைவ சமயத்தவர் என்பதை, 'தர்மமென்றும் சமுத்திரமாக உள்ள பரமேசுவரன்' (8) 'உலகத்தை ரட்சிக்கின்ற பரமேசுவரன் (388) 'பிறவியாகிய சமுத்திரத்தை நீந்துவர் சிவனடி சேர்ந்தார்'(10) போன்ற உரைகள் மூலம் புலப்படுகின்றன.

இவர் உரையில் வடசொற்களும் அதிகமாகக் காணப்படு கின்றன. சற்புருஷர், சத்துருமித்துரு, தசதானம், சொர்ண தானம், ரிஷபம், போன்ற எடுத்துக்காட்டுகளைக் காட்டலாம்.

பரிதியார் உரை மிகவும் புதுமையாயுள்ளது. நடை, பொருள்கோள், உரை எழுதும் முறை எடுத்துக்காட்டுக்கள் நயங்கள் யாவுமே புதுமை, இவற்றால் இவர் முந்தைய உரைக்காரர் மரபில் வந்தவரல்லர் என்பது தெளிவு, பெரும்பாலும் இவர் பதவுரையோ பொழிப்புரையோ கூறாமல் பாடலின் கருத்தை மட்டும் சொல்லிக்கொண்டு போவார். ஓரளவுக்குக் குறளின் கருத்தைமட்டும் அறிந்து கொள்வதற்கு இவர் உரை உதவும் என்கிறார். மு. அருணாசலம் (தமிழ் இலக்கிய வரலாறு 15ம் நூற்றாண்டு)

உரையாசிரியர்களும் - பரிதியாரின் சிறப்பும்: குறளுக்குப் பரிதியார் வரைந்த உரையில் பல இடங்கள் கருத்துச் செறி வாகவும், எளிமையாகவும் காணப்படுகின்றன. சில இடங்களில் உரையாசிரியர் பிறர் கூறும் கருத்துக்களிலிருந்து மாறுபட்ட

கருத்தைக் கூறுகிறார். அவ்வாறு கூறுகின்ற நிலையில் பல உண்மைகளை வெளிப்படுத்துகிறார். அவற்றுள் சிலவற்றில் சிறப்பான செய்திகள் எடுத்தாளப்படுகின்றன.

மணக்குடவரும் பரிதியாரும்

"அற்றாரைத் தேறுதல் ஓம்புகமற்றவர்
பற்றிலர் நாணார் பழி'' குறள் 506

என்ற குறளுக்கு மணக்குடவர், ஒழுக்கமற்றாரைத் தேறுதலைத் தவிர்க்க, அவர் ஒருவரிடத்துப் பற்றுடையாரும் அல்லர். பழிக்கும் நாணார் ஆதலின் என்பார். (திருக்குறள் உரைக்கொத்து பாகம் 2. ப. 145)

பரிதியார் உரைவகுக்கையில் "பொருளும் கிளையும் கல்வியும் அற்றாரை நம்பாதே, ஏனென்றால் அவர் பற்றும் இலர்-பழிக்கும் நாணார் என்று கூறுகிறார்.

இக்கருத்துக்களில் அற்றாரை என்பதற்கு 'அற்றார்' எனப் பொருள் கொள்கிறார் மணக்குடவர் ஆனால் பரிதியார் ஒழுக்கம் அற்றுப்போவதற்கான காரணமாகிய பொருளும் கல்வியும் கிளையும் இல்லாதவர் என்று ஒழுக்கம் அற்றவரை வகைப் பிரித்துக்காட்டி உரை செய்தது குறிப்பிடத்தக்கது.

பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர் உரையுடன் பரிதியார் மாறுபடும் முறை

மயிர் நீப்பின் வாழாக்கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின்'' (குறள் 969)

என்ற குறட்பாவுக்குப் பரிமேழலகர், தன் மயிர்த்திரளின் ஒரு மயிர் நீங்கினும் உயிர் வாழாத கவரிமானை ஒப்பார், உயிர் நீங்கத் தான் மானம் எய்தும் எல்லைவரின் அதனைத் தாங்காது இறப்பர் என்பர்.

மணக்குடவர், "ஒரு மயிர் நீங்கின் உயிர்வாழாத கவரி மானைப் போன்ற மானமுடையார் மானம் அழியவரின் உயிர் விடுவார்'' என்பர்.

நிறைவுரை: குறளுக்குப் பதின்மர் உரைவகுத்துள்ளார் அவர்களுள் ஒருவர் தாம் பரிதியார் தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த திருப்பருதி நியமம் இவரது ஊராகும். பரிதியார் பரிமேலழகருக்கு முற்பட்டவர். இவர் உரையில் பிற உரை யாசிரியரைக் காட்டிலும் சிறப்பான உரைக் காணப்படுகிறது. பிற ஆசிரியர் கருத்திற்கு இவர் வேறு பட்டாலும் உரையில் செறிவு காணப்படுகிறது.

மலேசியாவில் சிறுவர் பாட்டு இலக்கியம் — ஓர் அறிமுகம்

முரசு. நெடுமாறன்
புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி – 605 014

முன்னுரை; பழந்தமிழ் இலக்கியம் ஈடு இணையற்றுத் தனிச் சிறப்போடு நிமிர்ந்து நிற்கிறதெனினும், அதில் குழந்தைகள் தாங்களே பாடி மகிழத்தக்க பாக்கள் இல்லை. குழந்தைகளைப் பற்றிய குறிப்புகளைக் கொண்ட பாக்களையும், தாலாட்டுப் பாடல்களையும், சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான பிள்ளைத் தமிழையும் குழந்தை இலக்கியம் என்று ஏற்க இயலாது. ஔவையார் அருளிய ஆத்திசூடி முதலியன எளிமையாகவும், குழந்தைகளுக்கும் உரிய கருத்துக்களையும் கொண்டவையாகவும் அமைந்திருப்பினும் அவற்றையும் குழந்தை இலக்கியம் என்று ஏற்க இயலாது. தமிழில் உள்ள பழம்பெரும் இலக்கியச் செல்வங்களில் குழந்தைப்பாடல்கள் என ஏற்கத்தக்கவை.

''நிலா நிலா வாவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூக் கொண்டுவா''

முதலாய நாட்டுப்புறப் பாடல்களே! குழந்தை இலக்கியத்தில் பழமையானவை நாடோடி இலக்கியமே என்று கூறும் முனைவர் பூவண்ணன் கருத்து ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

''தொல்காப்பியத்தில் குழந்தை இலக்கியம் பற்றிய குறிப்புகள் உண்டு, சங்க இலக்கியங்களில் அந்தச் சிந்தனை படிந்துள்ளது. ஔவையார் பாடியவை முழுமையான குழந்தை இலக்கியம்'' என்று சொல்லி மகிழலாம். ஆனால் குழந்தை இலக்கியம் வடிவம் பெற்றுக் குழந்தைகள் கைக்கு வந்தது

இந்த நூற்றாண்டில்தான் "குழந்தை இலக்கியம் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புதுவரவு," என்று முனைவர் சிலம்பொலி செல்லப்பன் கூறுவது தெள்ளந் தெளிந்த உண்மையாகும்.

மலேசியாவில் குழந்தை இலக்கியத்தின் தோற்றம்: தமிழகத் திற்கும் மலேசியாவிற்கும் ஈராயிரம் ஆண்டுகால கலை, பண்பாட்டு, அரசியல் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. எனினும் இப்போதைய மலேசியத் தமிழரின் முன்னோர் ஏறக் குறைய 200 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்களே. அவர்கள் இங்குக் காலூன்றி இலக்கியம் படைக்கத் தொடங்கியது நூறு ஆண்டுகளுக்கு முன்புதான் (1887ஆம் ஆண்டிற்குப்பின்) இந்த நிலையில் இங்கு (மலேசியாவில்) வளமான இலக்கியம் மலர்ந் திருக்க முடியுமா? சிறுவர் இலக்கியம் கால் கொள்ள வாய்ப் புண்டா? என்று வினாக்கள் எழலாம். இதற்கு விடை 'உண்டு' இங்குச் சிறுவர் இலக்கியம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலே காலூன்றிவிட்டது. இதற்கு அடியெடுத்துக் கொடுத்தவர் **தேவிதாசன்.**

"... ... ...
தக்க வழிநடப்போம் - ஒரு
தாயின் பிள்ளைகள் போல்
ஒக்க உழைத்திடுவோம் - தம்பி
ஓர்குல மாயிருப்போம்!"

என்பதே மலேசியநாட்டின் (சிங்கப்பூர் உட்பட) முதல் சிறுவர் பாட்டாகும்.

மலேசியத் தமிழ்ச் சிறுவர் இலக்கியம் குறித்து ஆய்வு செய்த முனைவர் இலக்குமி மீனாட்சி சுந்தரம், திரு. கா. இராமநாதன் அவர்களை ஆசிரியராய்க் கொண்டு வெளிவந்த 'சோலை (1951) இதழே சிறுவர் இலக்கியத்தைத் தொடக்கிவைத்த முதல் இதழ்" என்கிறார்.

மூலவர்: மலேசியத் தமிழ்ச் சிறுவர் இலக்கியம் தழைக்க முறையான அடிப்படை போட்ட பெருமகன் தமிழ்வேள் கோ. சாரங்கபாணியாவார். இவர் 1953 இல் தம் நாளிதழான தமிழ்முரசில் மாணவர் மணிமன்றத்தைத் தொடங்கினார். இதழின் ஒரு சிறு பகுதியாக அது தொடங்கப்பட்டது. பின்

நான்கு பக்கங்கள் கொண்ட தனி (இலவயம்) இதழாக நாளிதழுடன் (திங்கட்கிழமைதோறும்) இணைத்து வழங்கப் பட்டது. இது சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டதோடு, இதுவரை எழுதத்தூண்டி அவர்களையும் எழுத்தாளராய் வளர்த்தது. இன்று மலேசியாவில் மூத்த எழுத்தாளர்களுள் பலர் உருவாக அடித்தளமிட்டது தமிழ்முரசு மாணவர் மணி மன்ற மலரே.

தமிழ் முரசைத் தொடர்ந்து தமிழ்நேசன் (1963), தமிழ்மலர், மலைநாடு, தினமணி, தமிழ்ஓசை, மலேசியநண்பன் முதலிய நாளிதழ்களும் சிறுவர் (இலவயம்) இதழ்களை வெளியிட்டுச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு உதவின.

சிறுவர் இதழ்கள்; நாள், கிழமை, திங்கள் இதழ்களில் சிறுவர்பகுதி இடம் பெற்றதோடு, முழுக்க முழுக்கச் சிறுவர்களுக் கென்றே இதழ்கள் வெளியிடச் சிலர் முயன்றிருக்கின்றனர். அவர்களுள் முதல்வர் மு. அப்துல்லத்தீப் 1956இல் 'மாணவர் பூங்கா' என்ற சிறுவர் இதழை அவர் வெளியிட்டார். ஆனால் அது நீண்ட வாழ்நாளைப் பெறவில்லை. 1058ல் ஏஜான்லாலையா அவர்களை ஆசிரியராய்க் கொண்டு 'சிறுவர் மலர்' என்ற பெயரில் ஒரு சிறுவர் இதழ் வெளிவந்திருக்கிறது. அடுத்தது 'மாணவன்' என்ற இதழ் 1961இல் பசீரை ஆசிரியராய்க் கொண்டு (சிங்கப்பூர்) வெளிவந்தது. இதுவும் மிகக் குறைந்த காலமே உயிர்வாழ்ந்தது. பின்னர் கு. ஏழுமலை ஆசிரியராய்க் கொண்டு 'அன்னை' (1963) என்ற இதழ் வெளிவந்தது. பின்னர் திருமதி சானகி வெங்கடேசன் அவர்களை ஆசிரியராய்க் கொண்டு 'மாணவர் உலகம்' என்ற இதழும் சில காலம் வலம் வந்தது. 1969-இல் சி. வே. கிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த 'திருமகள்' சிறுவர் இதழ் இன்றளவும் நடைப் போட்டுக் கொண்டிருக்கிறது. மலேசியாவில் நீண்ட காலம் நிலைத்திருக்கும் பெருமை கொண்ட சிறுவர் இதழ் இதுவே ஆகும். அண்மைக் காலமாய் கு. செல்வராசுவை ஆசிரியராய்க் கொண்டு செயபக்தி வெளியீடாகக்'குயில்' சிறுவர் இதழ் வந்துகொண்டு இருக்கிறது. இவ்வேட்டில் தமிழுடன் ஆங்கில, மலாய்ப் படைப்புகளும் பாட இயலையொட்டிய பயிற்சிகளும் இடம் பெறுகின்றன.

கல்வி ஒலிபரப்பு: 1966-இல் தொடங்கிய மலேசியக் கல்வி ஒலிபரப்பு, சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு—குறிப்பாகப் பாட்டுத்

துறை வளர்ச்சிக்கு நிறைவான பணி செய்துள்ளது. முதலாம் இரண்டாம் வகுப்புகளுக்கு ஒரு பிரிவாகவும், ஐந்தாம் ஆறாம் வகுப்புகளுக்கு ஒரு பிரிவாகவும் பாடல்களைத் தரத்திற்கேற்ப ஒலிபரப்பியது. பாடல்கள் இனிய இசையோடும், இசைக்கருவி களின் பின்னணியோடும் ஒலியேறியமை பாராட்டிற்குரியது. அப் பாடல்களைக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, புலவர் தணிகை உலகநாதன், முனைவர் தமிழண்ணல் முதலாயோர் வியந்து பாராட்டியுள்ளனர்.

கல்வி ஒலிப்பரப்பில் தொடக்கத்தில் தமிழகக் குழந்தைக் கவிஞர் சிலரின் பாடல்களும் இடையிடையே ஒலியேறின. காலப்போக்கில் முழுக்க முழுக்க மலேசியக் கவிஞர்களின் பாடல்களே இடம் பெற்றன.

ஒரு புதிய திருப்பம்: இங்கு 1816 இல் தமிழ்ப்பள்ளி ஆங்கிலப் பள்ளியில் ஒரு பிரிவாக தோன்றியதாக வரலாறு கூறினாலும் Penang Free School 1946 ஆம் ஆண்டிற்குப் பின்னரே தமிழ்ப் பள்ளிகள் அமைப்பில் ஓரளவு சீர்மை ஏற்படத் தொடங்கியது. 1956 இல் தான் உண்மையான மலேசிய உணர்வுடன் கூடிய கல்வி - பாடத்திட்டம் உருவானது. (ரசாக் கல்வித் திட்டம்) ஆனால் அப்போதும் தமிழுக்கு முறையான பாடத்திட்டம் உருவாகவில்லை. 1982 இல் தான் தொடக்கப்பள்ளிகளுக்கான புதிய பாடத்திட்டம் (K.B.S.R.) நடைமுறைக்கு வந்தது.

புத்துலகச் சிந்தனை தோய்ந்த பாடத்திட்டம் உருவானதால் சிறுவர் இலக்கியத்திற்குத் தேவை ஏற்பட்டது. பாடநூல்கள், துணைப் பாடநூல்கள், பயிற்சி நூல்கள், வழிகாட்டி நூல்கள், நூலகப்புத்தகங்கள் உருவாக்கச் சிறுவர் இலக்கியம் இன்றியமை யாததாயிற்று. தமிழ்ப் பாடத்திட்டத்தில் கவிதைக்கு நிறைவான இடம் வழங்கப்பட்டிருந்ததால் சிறுவர் கவிதைகளின் தேவை மிகுந்தது. அதனால் நூலகங்களுக்கான கவிதை நூல்கள் உருவாக வாய்ப்பமைந்தது. பாடநூல்களிலும் கவிதைகள் இடம் பெற்றன.

நூலகத்திற்காக வெளியிடப்பட்ட தனிக் கவிதை நூல்கள் பள்ளிகளின் அளவிலேயே நின்றதால், அவை இலக்கிய நூல்களின் வரிசைக்கு வரவில்லை. இவ்வகையில் பொன்முடி, தம்பாய் முனியாண்டி (மாலவன்), இக் கட்டுரை ஆசிரியர் ஆகியோரின் சிறுவர் கவிதை நூல்கள் நூல் வடிவில் நிரம்ப வெளிவந்துள்ளன.

நூல்வடிவில்: இங்கு இதழ்கள், கல்வி ஒலிபரப்பு, (ஆசிரியர் கையேடுகள்) சிறப்பு மலர்கள் முதலியவற்றில் வெளிப்போந்த சிறுவர் பாடல்களில் ஒரு சிலவே நூல் வடிவங் கொண்டன. இத் துறையின் முன்னோடி 'பரிதி' என்னும் மு. கந்தன் ஆவார். இவர் வெளியிட்ட, 'முழுநிலாவே' (1960) முதல் சிறுவர் பாட்டு நூல் என்று கருதப்படுகிறது. அதே ஆண்டில் கவி மதிதாசன் 'கத்திக்கப்பல்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். சிறுவர் பாட்டுநூல் வெளியிட்டவர்களுள் சி. வேலுசாமி முரசு. நெடு மாறன், தூ. கலியபெருமாள், பொன்முடி, தம்பாய் முனியாண்டி, (மாலவன்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் ஒவ்வொருவரும் ஒன்றுக்கு மேற்பட்ட நூல்கள் வெளியிட்டவர் ஆவர். பரிதி (மு. கந்தன்) கவிமதிதாசன், மா. இராமகிருட்டினன், எல். எம். பகதூர், ஆ. கிருட்டிணசாமி, மா. அ. சந்திரன், கங்கை ஜாவி சுப்பிரமணியம் ஆகியோர் தலைக்கு ஒருநூல் வெளியிட்டுள்ளனர்.

ஒ.டி. சமாதானம், ஜோசப் செல்வம் ஆகியோர் உருளச்சு முறையில் சிறுவர் பாட்டு நூல் வெளியிட்டுள்ளனர். சி. காவேரி நாதன் 'மலைத்தேன்' என்ற பெயரில் (கையெழுத்துப்படி – பட நகல் செய்தது) ஒரு நூல் தொகுத்து ஒரு போட்டியில் பரிசு பெற்றார். சிங்கை முகிலனும் சிறுவர் கவிதை நூல் ஒன்று வெளியிட்டதாகச் சி. வேலுசுவாமி குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்நூலின் பெயர் வெளிப் போந்த ஆண்டு முதலாய விவரங்கள் கிட்டவில்லை. மூத்த கவிஞரான சோமசன்மா, சிறுவர்களுக்கு நிறைய எழுதியவர்களான மு. திருவேங்கடம்' தமிழ்ப்பாணன், இரா. இராகவன், பெரி. இளம்வழுதி, எஸ். எஸ். மணிமாறன் முதலியோர் நூல்கள் வெளியிடாமை பெரிய குறையாகும்.

பாடு பொருள்: மலேசியா சிறுவர் பாடல்களில் பொதுவாக அறிவுரைகூறும் பாடல்களே மிகுதி எனினும், இயற்கையின்பால் சிறுவர்களை ஈடுபாடு கொள்ளச் செய்யும் பாடல்கள் கணிசமாக உள்ளன. இறைஉணர்வு நாட்டுப்பற்று பல்லின ஒற்றுமை நன்னெறி முதலாய பாடு பொருள்களில் கவிஞர் பாடியுள்ளனர். கதை பாடல்கள் கவிதை நாடகங்கள் சிறுவர்பாவியங்களும் மலர்ந்துள்ளன. சான்றோர் பற்றியும் நிறையப் பாடல்கள் பிறந்துள்ளன. பாடல்கள் சிறுவர்களுக்கு எடுத்துக் கூறும் முறையிலும், சிறுவர் தாங்களே உணர்ந்து பாடும் முறையிலும் அமைந்துள்ளன.

பொதுமக்கள் அறிவியல் ஏன்? எப்படி?

மி. நோயல்
மைய மின்வேதி ஆய்வகம்
காரைக்குடி 630 006

தொடக்கம் எது? அறிவியல் நாம் அறிந்ததுதான். பொது மக்கள் அறிவியல் (popular science) என்பதென்ன? தெளிவான வரையறை எதுவும் இல்லாவிட்டாலும் நாம் பொதுமக்கள் அறிவியலை பின்வரும் வகையில் விளக்கலாம். தனிமனிதனின் அன்றாட வாழ்வோடும், அவன் வாழும் சமுதாயச் சுற்றுச்சூழல் மாற்றங்களோடும் தொடர்புடைய அறிவியல் உண்மைகளை அவன் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் விளக்க முயலும் முயற்சிகளே பொதுமக்கள் அறிவியல் பரப்பும் முயற்சிகள் (Science populariration efforts) எனப்படுகின்றன. இதில் இரண்டுகூறுகள் உள்ளன. முதல்கூறு பொதுமக்கள் வாழ்வோடு தொடர்புடையதாக, அவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டக்கூடிய தாகப் பொதுமக்கள் அறிவியல் படைப்புகள் அமைய வேண்டும் என்பது அடுத்த கூறு அந்தப் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் அறிவியல் எடுத்துச் செல்ல வேண்டும் என்பது. அறிவியலைக் கற்றுப் பயன்படுத்துபவர்களுக்கும் ஏனைய பொதுமக்களுக்கும் ஒரு பாலமாக அமைவதுதான் பொதுமக்கள் அறிவியல் என்றாகிறது.

இப்படி ஒரு முயற்சி தேவைதானா? பொதுமக்களுக்கு அறிவியல் எடுத்துச் செல்லவேண்டிய அவசியம் என்ன? அதை எப்படி எடுத்துச் செல்வது? அதை யார் செய்வது? இந்தக் கேள்விகளுக்கு இங்கே விடைகாண முயல்வோம்.

ஏன்? பல நூற்றாண்டுகளாக உழவனுக்கும் உழைப்பவனுக்கும் படைவீரனுக்கும் கல்வியே தேவையில்லை என்ற கருத்து நம்நாட்டில் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. கல்வி

பொதுச் சொத்தாக இல்லாமல் மிகச்சிலரின் தனிச் சொத்தாக இருந்து வந்ததன் விளைவாகத்தான் நாம் பல பின்னடைவு களைச் சந்திக்க நேர்ந்தது அதன் விளைவுகளை இன்றும் நாம் அனுபவித்து வருகிறோம்.

இவ்வளவுக்குப் பின்னும் அறிவியலைப் பற்றி இதே போன்ற ஒரு சிந்தனைப்போக்கு இன்றும் நம்மிடையே உலாவந்து கொண்டிருக்கிறது. பொதுமக்கள், 'நமக்கெங்கே அறிவியல் புரியப்போகிறது? நமக்கேன் இந்த வம்பு' என்று அறிவியலை விட்டு ஒதுங்கிக் கொள்ள முயல்கிறார்கள் அறிவியல் ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், தொழில் துறை உற்பத்தியாளர்கள் போன்ற அறிவியலைப்படித்துப் பயன்படுத்துபவர்களோ, பொதுமக்களுக்கு அறிவியலைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. நான் சொன்னாலும் அவர்கள் புரிந்து கொள்ளப் போவதில்லை. அப்படி அவர்கள் புரிந்து கொண்டாலும் அதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை' என்று எண்ணி இந்தப் பணியைத் தட்டிக் கழிந்து வருகிறார்கள்.

இன்று அறிவியல் தனிக்கோட்டைக்குள் குடியிருக்க முடியாது இன்றைய தொழில்துறை, பொருளாதாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நல்வாழ்வு, அரசியல் ஆகிய எல்லாத் துறைகளோடும் அறிவியல் பின்னிப் பிணைந்து நிற்கிறது. இந்த நிலையில் பொதுமக்களுக்கும் அறிவியலுக்கும் இடையிலான உறவு விரைந்து வளராவிட்டால் பல எதிர்விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். பொதுமக்கள் அறிவியல் பணிகள் ஏன் தேவை என்பதைச் சில எடுத்துக்காட்டுகள் மூலம் குறிப்பாக ஆராய்வோம்.

அறிவியல் துறை சார்ந்தவர்களின் பிழைப்புக்காக: பொது மக்களின் வரிப்பணம்தான் அறிவியல் அறிஞர்களை, ஆசிரியர் களை, மருத்துவர்களை, பொறியியல் வல்லுநர்களை உருவாக்கு கிறது. கல்வி நிறுவனங்களையும் ஆய்வுக் கூடங்களையும் தொடர்ந்து பராமரிக்கிறது. விண்வெளி ஆராய்ச்சிக்கும் அணு ஆராய்ச்சிக்கும், பாதுகாப்புத்துறை ஆராய்ச்சிக்கும் செலவிடுப வர்கள் பொதுமக்கள்தான் தாங்கள் எதற்காகச் செலவிடு கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு அவர்களுக்கு அதை விளக்கிச் சொல்வது நமது கடமை

மட்டுமல்ல நமது வயிற்றுப் பிழைப்புக்கும் வளர்ச்சிக்கும் அது மிகமிகத் தேவையான பணியும் ஆகிறது.

'இது வெறும் வாய்ப்பேச்சு! அப்படியெல்லாம் பயப்படும்படி எதுவுமில்லை' என்று சொல்லிக்கொண்டிருக்க வழியில்லை! மேலை நாடுகளில் பல ஆராய்ச்சித் திட்டங்கள் இன்று நிதியுதவி பெற முடியாமல் மளமளவென்று மூடப்பட்டு வருகின்றன. நமது நாட்டிலும் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் தாங்களே சம்பாதித்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டு வருகின்றன "இவர்கள் படித்துவிட்டு மேல்நாட்டுக்குப் போக நாம் ஏன் செலவிடவேண்டும்?" என்ற உரத்த குரல் எழுப்பப்படுகிறது. இந்த நிலையில் நாம் நம் நாட்டு மக்களுக்குத் தேவையான ஆய்வு மற்றும் கல்விப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்பது மட்டுமல்ல; 'நாம் என்ன செய்கிறோம்? அதனால் என்ன பயன்? அது எப்படி அவர்களுக்கு முக்கியம்?' என்பதை விளக்க வேண்டும் என்பதும் மிகவும் அவசரத் தேவை.

தவறான கருத்துகள் பரவுவதைத் தடுப்பதற்காக! பேச்சுரிமையும் எழுத்துரிமையும் குடியாட்சிக்கு அடித்தளம். யாரும் எதையும் பேசலாம்! எழுதலாம். அறிவியல் துறையைச் சார்ந்தவர்கள் தங்களைத் தங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலை இவர்கள் வாய்மூடிக் கிடந்தால் பல போலித்தனங்கள் உண்மைகளாகி உலாவரும் அரசியல்வாதிகள் முதல் அறியாப் பாமரர்கள் வரை பலரும் அறிவியலின் பெயரால் பொது மக்களை ஏமாற்றிக்கொண்டிருப்பார்கள்! 'இராமர்பிள்ளைகள்' தண்ணீரைப் பெட்ரோலாக்கி வித்தை காட்டுவார்கள்!

நல்ல செயல்திட்டங்கள் நாட்டை நாசமாக்கிவிடும் என்று புரளிகள் கிளப்பி விடப்படும். பல அனல்மின் நிலையங்கள், அணுமின் நிலையங்கள், நீர்மின் நிலையங்கள் செயலுக்கு வராமல் சிக்கித் தவிக்கும் நாடு இருளில் மூழ்கித் தவிக்கும்.

போலி மருத்துவர்களையும் மந்திரவாதிகளையும் நம்பித் தவம்கிடந்து பல உயிர்கள் பலியாகும். ஒரு மருத்துவரின் கடமை மருத்துவம் பார்ப்பதோடு நின்றுவிடலாமா? இந்தப் போலி மருத்துவர்களைப் பொதுமக்களுக்கு அடையாளம் காட்டுவது யார் பொறுப்பு?.

மக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குவதற்காக! ஒரு பக்கம் தவறான கருத்துக்களை எதிர்த்து நின்று சமுதாய வளர்ச்சிக்குத் துணைநிற்க வேண்டிய கடமை நமக்கு மறுபக்கம்

வளர்ச்சி என்ற பெயரால் இயற்கை வளமும் சமுதாய நலமும் சுரண்டப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பும் நமக்குத்தான்!

தோல் பொருள்கள் நமக்குத் தேவைதான்! அதற்காகச் சுற்றியிருக்கும் மக்களின் நிலத்தையும், நீரையும் நச்சாக்கும் மட்டமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை நாம் அனுமதிக்கலாமா?.

வேலைவாய்ப்பைத் தரும் தொழிற்கூடங்கள் நகரங்களுக்குத் தேவைதான்! அதற்காக நகரத்தை நாசமாக்கும் தொழிற்சாலைகளையும் போக்குவரத்து வாகனங்களையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டாமா?.

நமக்கு மரப்பொருள்கள் தேவைதான். அதற்காகக் காடுகளையே அழித்துவிட முடியுமா? அழிய அனுமதிக்கலாமா?

இந்த வகை விழிப்புணர்ச்சியைத் தட்டியெழுப்பும் பணி யாருடையது? அறிவியல் துறை சார்ந்த அறிஞர்கள் முன்னின்று செய்ய வேண்டிய பணியல்லவா இது?

இளைய தலைமுறையை அறிவியல் துறைக்கு ஈர்க்க! பொறியியல் படிப்பும் மருத்துவப்படிப்பும் இளைஞர்களின் கனவுக்கோட்டையாக இருந்த நிலை மெல்ல மெல்ல மாறிக் கொண்டு வருகிறது. மேலாண்மையும் வணிகத்துறையும் அதிக ஊதியம் தரும் துறைகளாக இன்று இளைஞர்களை ஈர்க்கின்றன மிகக்குறைந்த படிப்போடு வணிகத்துறையில் பெரும் வெற்றி பெற்றவர்கள் நாம் இளைஞர்களின் கண்களில் படுகிறார்கள் குறுக்கு வழிகளில் பணம் பண்ணுபவர்கள் அவர்களைக் கவர்கிறார்கள் மேலை நாடுகளில்கூட ஏன் அதிகம் படித்து அவதிப்பட வேண்டும் என்கிற எண்ணம் வளர்ந்து வருகிறது.

இந்த நிலையில் அறிவியல் துறைக்கு இளம் உள்ளங்களைக் கவர்ந்திழுக்க வேண்டிய தேவை உருவாகிறது இளம் வயது முதலே அவர்களுக்கு அறிவியல் துறையில் ஆர்வத்தை ஊட்டி வளர்க்க வேண்டிய நிலை இதை அறிவியல் அறிஞர்களைத் தவிர யாரால் செய்ய முடியும்?

எப்படி? பொதுமக்கள் அறிவியல் ஏன் தேவை என்பதை நன்றாக உணர்ந்து கொண்டு விட்டால் அதை எப்படிச்செய்வது என்பதை முடிவு செய்வது எளிதாகிவிடும் இதற்குப் பல வழிகள் உள்ளன. இந்த முயற்சிகள் ஆங்காங்கே தொடங்கிச் செயல்

படுகின்றன. மேலும் வலுப்பெற வேண்டிய இந்த முயற்சிகளைக் கோடிட்டுக் காட்டுவதே போதுமானது.

தகவல் தொடர்பு வழி: கலைக்கதிர் தொடங்கி, துளிர், வளரும் வேளாண்மை, உங்கள் உடல் நலம், அறிக அறிவியல் போன்ற பல அறிவியல் போன்ற பல அறிவியல் இதழ்கள் இன்று வெளிவருகின்றன. இவை மேலும் ஆக்கம் பெறவேண்டும் பல நாளிதழ்களும் வார இதழ்களும் அறிவியல் கட்டுரைகளை எதிர்பார்க்கின்றன.

நமது வானொலி, தொலைக்காட்சிகள் பொதுமக்கள் அறிவியல் செய்திகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இன்னும் அதிக முக்கியத்துவம் தரலாம்.

அறிவியல் நூல்களை எழுதவும் வெளியிடவும் பலர் முன் வருகின்றனர். பொதுமக்களிடையே நூல் வாங்கும் பழக்கம் மேலும் பெருக வேண்டும்.

அறிவியல் துறையில் நகைச்சுவை கலந்த உரைகள் பட்டி மன்றங்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டு விற்க வாய்ப்பிருக்கிறது. புதிய முயற்சிகள் தொடங்க வேண்டும்.

பொதுமக்களிடையே இந்த ஆர்வம் வளரும் வரை அரசு நிறுவனங்களே பள்ளிகள், கல்லூரிகள், மாவட்ட நூலகங்கள் நகராட்சிகள் ஊராட்சிமன்றங்கள் வழியாகப் பொதுமக்கள் அறிவியல் சார்ந்த இதழ்களையும் நூல்களையும் ஒலி நாடாகக் களையும் வாங்கி உற்சாகப்படுத்த வேண்டும்.

நிறைவாக ... யார் செய்வது? நிறைவாக ஒரு வார்த்தை பொதுமக்கள் அறிவியல் தேவைதான்! அதைச்செய்ய வழியுமிருக் கிறது. ஆனால் இதை யார் செய்வது? அரசா? ஆசிரியர்களா? ஆய்வாளர்களா? கல்வி நிறுவனங்களா? தொழிற்சாலைகளா? தொண்டு நிறுவனங்களா? மாணவர்களா? இளைஞர்களா? முதியவர்களா? தகவல் தொடர்பு நிறுவனங்களா?

பெரிய கேள்விதான்! ஆனால் விடைமிகச் சிறியது. எல்லாரும் தான்! அறிவியல் சார்ந்த துறையைத் தங்கள் பிழைப் பாக ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் பொதுமக்கள் அறிவியலைப் பரப்ப வேண்டிய கடமை உண்டு! எந்தச் சிறிய அளவிலேனும் நாம் ஒவ்வொருவரும் பொதுமக்கள் அறிவியலைப் பரப்புவதற்கு நம்மாலான முயற்சிகளைச் செய்வோம்! அறிவியல் விழிப்புணர்வுடைய ஒரு சமுதாயத்தை உருவாக்குவோம்.

தமிழ், வங்காள, ஆங்கில மொழிகளில் பழமொழி ஒப்புமை

பஞ்சாமிர்தம் & சொ. முத்தையா
விசுவ-பாரதி நடுவண் பல்கலைக் கழகம்
சாந்தி நிகேதன் – 731 235

தமிழ் மொழியில் முதுசொல், முதுமொழி, பழஞ்சொல், சொலவடை, சொலவாந்தரம், உபகதை, ஒவகதை, வாய்மொழி இலக்கியம், எழுதாக்கிளவி, நீதி மொழி, பழமொழி போன்ற பல சொற்கள் பழமொழியைக் குறிக்க வழங்குகின்றன. எனினும் பழமொழி என்னும் சொல்லே பெருவழக்காக உள்ளது. வங்காள மொழியில் பிரபாத், பிரபாத் பாக்கொ, பிரபச்சந், சொலித் நீதி பாக்கொ, ஐந பிரபாத் போன்ற சொற்கள் பழமொழியைக் குறிக்க வழங்குகின்றன. எனினும் பிரபாத் என்னும் சொல்லே பெருவழக்காக வழங்கப்படுகிறது. பழமொழியை ஆங்கிலத்தில் Proverb என்று குறிப்பிட்டு வழங்குகின்றனர்.

நாடுகள் தோறும் மொழியும், பழக்க வழக்கங்களும், பண்பாடுகளும், சூழல்களும் வேறுபட்டிருந்தாலும் மக்களின் அடிப்படைச் சிந்தனைகள் பெரும்பாலும் ஒன்றாகத்தான் உள்ளன என்னும் அறிவைப் புகட்டுபவையாகப் பழமொழிகள் விளங்குகின்றன. தமிழ், வங்காளம், ஆங்கிலம் ஆகிய மொழிகளும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் அல்ல. எனினும் இம்மும்மொழிகளிலும் கருத்தொற்றுமைப் பழமொழிகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்னும் பழமொழிக்கேற்பக் கட்டுரை விரிவஞ்சி ஒரு சில கருத்தொற்றுமைப் பழமொழிகள் மட்டும் இங்கே சுட்டப்படுகின்றன.

1. சுயநலவாதி

சோழ நாட்டுப் பிராமணன் சோழியன். அவன் தன்னல மிக்கவன்; காரியவாதி, அவன் சுயநலத் தன்மையை ஒரு பழமொழி எடுத்துக் கூறுகிறது. சும்மா ஆடுமா சோழியன் குடுமி என்பது முதுமொழி. எது எப்படிப் போனாலும் தன் காரியம் தனக்கு என்ற பழமொழிக்கேற்பச்சிலர் சுயநலத்தன்மை யோடு செயல்படுவார்கள். பிறருக்கு எதையும் கிஞ்சித்தும் விட்டு கொடுக்க மாட்டார்கள் அப்படிப்பட்ட சுயநலவாதி களைப் பற்றியும் பழமொழிகள் எடுத்துக் கூறுகின்றன.

ஓணான் வேலிக்கு இழுக்கிறது, தவளை தண்ணீருக்கு
இழுக்கிறது.

கஞ்சி வரதப்பா என்றால், எங்கே வரதப்பா என்கிறான்.
சுய காரியப் புலி. தன் காரியத்தில் புலி.
தனக்கென்றால் பிள்ளையும் களை வெட்டும்
நல்ல நாச்சியார் கடைந்தமோர், நாழிமுத்துக்கு நாழிமோர்
அரைக்கிறவன் ஒன்று நினைத்துக் அரைக்கிறான்,
குடிக்கிறவன் ஒன்று நினைத்துக் குடிக்கின்றான்.
அவரவர் அக்கரைக்கு அவரவர் பாடுபடுவார்.
அள்ளுவது எல்லாம் நாய் தனக்கு என்று எண்ணுமாம்...
ஊரார் வீட்டு நெய்யே, என் பொண்சாதி கையே.
ஊரார் வீட்டுச் சோற்றைப்பார், ஒசு பாடி வயிற்றைப் பார்.
எங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்,
உங்கள் வீட்டுக்கு வந்தால் என்ன தருகிறாய்?
இடுகிறவள் தன்னவளானால், அடிப்பந்தியில் இருந்தால்
என்ன, கடைப்பந்தியில் இருந்தால் என்ன?
தனக்கென்று சொல்ல நாய் வெடுக்கென்று பாயும்.
தன் காரியம் என்றால் தன் சீலையும் பதைக்கும்.
தன் பானை சாயப் பிடிக்கிறதில்லை.

தன் காரியம் துரந்தான், சுவாமி காரியம் வழவழ.

என்பன தமிழ்ப் பழமொழிகள். இச்சுயநலவாதிகளைப் பற்றி இரண்டு வங்காளப் பழமொழிகள் குறிப்பிடுகின்றன.

ஆப்பந் கோலே ஜொல் டாநே.

கோலே .... மண்டியிட்டு உட்கார்ந்திருக்கும், ஆப்பந் — தனது (பக்கமே), ஜொல் — சாற்றை (உணவுத் தட்டை), டாநே — இழுத்துக்கொள்ளுதல்.

மண்டியிட்டு உட்கார்ந்திருக்கும் போது தன் கால் பக்கம் நோக்கி யிருக்கும் தட்டில் உள்ளதைப் பிறர் யாரும் வாரி வழித்துக் கொள்ளாதபடி தானே முழுவதையும் இழுத்துக் கொள்ளுதல். அதாவது பலனைப் பிறர் யாரும் அனுபவித்து விடாதபடி தானே முழுப்பயனையும் அனுபவிக்க நினைப்பது, சுயநலத் தன்மையைச் சுட்டிக் காட்டும் பழமொழி இது.

ஆப்நார் பேலா ஆட்டா—ஆட்டி, பொரேர் பேலா
தாந்த் கபாட்டி.

ஆப்நார் பேலா—தனக் கென்றால், ஆட்டா—ஆட்டி—(கொஞ்சம் கூடப் பிறருக்கு விட்டுக் கொடுக்காமல்) தாமே தன் இச்சைப்படி நிறை வேற்றிக் கொள்ளுதல், பொரேர் பேலா—மற்றவர்களுக் கென்றால், தாந்த் கபாட்டி — (ஒன்றுமே கொடுக்க மனம் வராது) பல்லை மட்டும் இளித்துக் காட்டுதல்.

தனக்கென்று வந்து விட்டால் மிகவும் கவனமாக இருந்து கொஞ்சம் கூடப் பிறருக்கு விட்டுக்கொடுக்காமல் எல்லாவற்றை யும் தானே அபகரித்துக் கொள்ள நினைத்தலும், பிறருக்கென்று வந்துவிட்டால் ஒன்றுமே கொடுக்க மனம் வராது தம்மிடம் ஏதும் இல்லாதது போல் நடித்து, நிலைமையைச் சமாளிக்கப் பல்லை இளித்துக் காட்டி வந்தவரை வெறுங்கையோடு அனுப்பி விடுதலுமாகிய சுயநலத்தன்மையாகும். சுயநலத் தன்மையைச் சுட்டிக்காட்டும் தமிழ், வங்காளப் பழமொழிகளுக்கு இணையான ஆங்கிலப் பழமொழிகள் வருமாறு:

All draw water to their own mill

In the world there be men, that will have the egg and the hen.

To cut large slices of another man's loaf.

No one calls his own buttermilk sour.

'Tis good feasting in other men's houses.

What's your's mine, what's mine, is my own,

Every man wishes the water to his own mill.

Every miller draws the water to his own mill.

Every men doth his own business best.

He is better with a rake than a fork.

2. அவரவர் இல்லத்தில் அவரவர் ராசா.

ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் நாய் சுற்றித்திரியும். அக்குறிப்பிட்ட இடத்தை விட்டு வேறிடம் சென்றால் மற்ற நாய்கள் அந்த நாயைச் சும்மா விடாது கடித்துக் குதறி விடும் வேறிடம் சென்று வாலாட்ட முடியாது இப்படி ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் ஒரு குறிப்பிட்ட நாய் தான் வலிமை பெற்றிருக்கும் அதனை எதிர்த்து நின்று வேறொரு நாய் போராடி வெற்றி பெற முடியாது.

அந்தந்த இடத்தில் இருக்கும் நாய் அந்தந்த இடத்தில் தான் வலிமை பெற்று ராசாவாக இருக்க முடியும் என்ற கருத்தில் அமைந்தது

நாயும் தன்னிலத்துக்கு ராசா

என்ற தமிழ்ப் பழமொழி ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும்; ஆனால் நீரிலிருந்து நீங்கி வந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்று விடும் என்னும் பொருளில் இடன் அறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் குறிப்பிடுவார்.

நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற (குறள் 495)

என்பது குறள் இக்குறட்கருத்தினை

முதலை தன்னிடத்து மலையொத்த ஆனையையும்
இழுத்துச் செல்லும்

என்ற பழமொழி சுட்டுகிறது. கவிஞர் கண்ணதாசனும் இக்கருத்தினை ஒரு பாடல் வழி எடுத்துக் காட்டுகிறார்.

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா?
எல்லாம் இருக்குமிடத்தில் இருந்துவிட்டால்
எல்லாம் சௌக்கியமே?
பாம்பு சொன்னது; இதில் அர்த்தமுள்ளது.

என்பது கவிஞரின் திரையிசைப் பாடல் இருக்க வேண்டிய இடத்தில் இருந்து கொண்டு விட்டால் வலிமை மிகுந்தவராக இருப்பர்; யாரும் அசைக்க முடியாது என்னும் பொருளில் மேலும் சில பழமொழிகள் காணப்படுகின்றன.

தன்னிடத்தில் குறுமுயல் தந்தியினும் வலிது.

தன் ஊருக்கு ஆனை, அசல் ஊருக்குப் பூனை.

தன் ஊருக்குக் காளை, அசல் ஊருக்குப் பூனை,

குடியில்லா ஊருக்குக் குள்ள நரியே அரசன்

தன் ஊருக்கு அன்னம், பிற ஊருக்குக் காகம்.

இதே கருத்தினை வங்கப் பழமொழிகளிலும் காணலாம்.

ஆப்பந் காயே குக்குர் ராஜா.

ஆப்பந் - தனது, காயே - கிராமத்தில், குக்குர் - நாய், ராஜா - ராசா.

அந்தந்த ஊரில் இருக்கும் நாய் அந்தந்த ஊருக்கு ராசாவாக இருக்கும்.

ஆப்நார் கரே ஸபாஇ ராஜா.

அப்நார் - தனது, கரே - வீட்டில், ஸபாஇ - எல்லோரும் ராஜா - மன்னர்.

அவரவர் இல்லத்தில் அவரவர் மாமன்னர்தான். இக்கருத்துடைய தமிழ், வங்காளப் பழமொழிகளுக்கு ஒப்பாக

Every dog is a lion at home.
Every dog is valiant at his own door.
My house is my castle.
Every one is a king in his own house.
A man's house is his castle.
Every cock is proud on his own dung-hill
An Argus at home, and a male abroad.

என்ற ஆங்கிலப் பழமொழிகளைக் கூறலாம்.

துணை நூல்கள்

அ) தமிழ் மொழி

***வங்காளப் பழமொழிகள்:** முனைவர். சொ. முத்தையா 1995, பஞ்சாமிர்தம் பதிப்பகம், D-59, தென்றல், பாலுசாமி தெரு, திருநகர், மதுரை-625006.

ஆ) வங்காள மொழி

பங்க்ளா பிரபாத்: பபதோஷ்தத்தா, துஷார் சட்டோ பாத்யாய், மூன்றாம் பதிப்பு, பொஇ மேலா 1392, வெளியீடு ஜராுப் நியோகி ஏ, முகர்ஜி அண்டு கம்பனி பிரைவேட் லிமிடெட், 2, பங்கிம் சட்டர்ஜி வீதி, கல்கத்தா-700073.

உருவில் இரண்டாகி

ப. பத்மநாபன் தம்பி
கேரளப் பல்கலைக்கழகம்
காரியவட்டம் - 695 581

கவிஞர் தம் மனத்துள் எழும் கற்பனைக்கு வடிவம் கொடுப்பது ஒரு நிலை. அதுவே, பெரும்பான்மை. தம் உள்ளத்தைத் தொட்ட கற்பனைகளுக்குத் தம்போக்கில் வடிவம் கொடுப்பது இன்னொரு நிலை. அதாவது வேறுமொழிக் கற்பனைகள் தம் உள்ளத்தைத் தொடுமாயின் தம்மொழி வாசகர்களுக்கு அதனைத் தம்மொழியில் வடிவமாக்கிக் கொடுப்பதுண்டு.

தமிழ்க் கவிதை மரபிலும் இவ்வகை மாற்றங்கள் அவ்வப்போது அமைவதுண்டு. தேவைக்காக எழுதுவதும் பெற்ற இன்பம் பயனெதிரச் சொல்வதும் இம்மொழி மாற்றச் செயலுக்கு அடிப்படையாக அமைவன. வங்க மொழியில் எழுதப்பட்ட வந்தே மாதரத்தைப் பாரதியார் தமிழ்ப் படுத்தியது தேவையை அடியொற்றியது. உமர்கய்யாம் பாடல்களைக் கவிமணி தமிழ்ப் படுத்தியதோ, பெற்ற இன்பம் பிறர்க்கு அறிவுறுத்தும் வகையில் அமைந்தது.

சமஸ்கிருதத்தில், குவலயானந்தம் எனும் அணிநூலொன்று உண்டு. அணிநலத்தை விளக்கக் கற்பனை நயம் மிகுந்த சுலோகங்கள் பல அந்நூலுள் சான்றாகக் காட்டப்பட்டுள்ளன. தாமரை மலருள் சிறைப்பட்ட வண்டின் எண்ணம் நிறைவேறாத நிலையில், வேழமொன்று அம்மலரைப் பறித்து அழித்ததனைப் பொருளாகக் கொண்ட சுலோகமொன்றுண்டு. அது வருமாறு.

ராத்ரிர் கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம்
பாஸ்வானுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஸ்ரீ;
இத்தம் விசிந்தயதி கோசகதே த்விரேபே
ஹா, ஹந்த! ஹந்த! நளினீம் கஜ உஜ்ஜஹார்.

இதன் பொருள்:

ராத்ரிர் - இரவு; கமிஷ்யதி ஒடுங்கும்;
ஸுப்ரபாதம் - காலை; பவிஷ்யதி - வரும்;
பாஸ்வான்உதேஷ்யதி - கதிரவன் உதிப்பான்;
பங்கஜஸ்ரீ - பங்கயமலர்; ஹஸிஷ்யதி - மலரும்;
கோசகதே - மலரினுள் தங்கிய; த்விரேபே வண்டு;
இத்தம் - இவ்வாறு; விசிந்தயதி - சிந்தனை செய்ய;
நளினீம் - தாமரையை; கஜ - யானை; உஜ்ஜஹார - பறித்தது;
ஹா, ஹந்த! ஹந்த; - அய்யகோ

தமிழில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்களும், மலையாளத்தில் ஏ. ஆர். ராஜ ராஜ வர்ம்ம அவர்களும் இந்தச் சமஸ்கிருதச் சுலோகத்திற்குத் தத்தம் மொழிகளில் வடிவம் கொடுத்துள்ளனர். அவை:

தமிழ்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் மூன்று வடிவங்களில் இதே சுலோகத்தை மொழி பெயர்த்துள்ளார். இங்கு 'சிதைந்த எண்ணமே' ஒப்பீட்டிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

'மூடிக்கவியு மிருட்பகை நீங்கும்; இம்மூலகைத்
தேடிக் கதிரு முதிக்கும்; கமலஞ் சிரிக்கும்' எனக்
கூடிக் குவியு மலருறை வண்டுளங் கொண்டமைய
ஆடிக் குடைந்து மதவேழம் ஒடை யழித்ததுவே.
('சிதைந்த எண்ணம்': மலரும் மாலையும் ப. 133)

மலையாளம்

ராவிப்போள் ஷணமங்ஙொடுங்ஙிடு முஷ்ஸ்ஸெங்ஙும் ப்ரகாசிச்சிடும்;
தேவன் ஸுர்யனுதிக்கு மிக்கமலவும் காவேவிடர்ந்நீடுமே.
ஏவம் மொட்டினகத்திருந்நளி மனோராஜ்யம் துடர்ந்நீடவே,
தெய்வத்தின் மனமாருகண்டு? பிழுதான் தந்தீந்ரனப்பத்மினீம்
(பாஷாபூஷணம்: சுலே. 277. ப. 121)

மூலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கீழ்க் குறிப்பிடும் மாற்றங்கள் அமையக் காணலாம்.

மூலம்	தமிழ்	மலையாளம்
இரவு	மூடிக்கவியுமிருட்பகை	ராவு
ஓடுங்கும்	நீங்கும்	இப்போள் ஷணமங்ஙொடுங்ஙிடும்
காலைவரும்	—	உஷஸ் எங்ஙும் ப்ரகாசிச்சிடும்
கதிரவன் உதிப்பான்	இம்மூதுலகைத்தேடி கதிருமுதிக்கும்	தேவன் ஸூர்யன் உதிக்கும்
பங்கயமலர் மலரும்	கமலஞ்சிரிக்கும்	இக்கமலவும் காலே விடந்நீடுமே
மலரினுள் தங்கிய	கூடிக்குவியுமலருறை	ஏவம் மொட்டினகத்திருந்து
வண்டு	வண்டு	அளி
இவ்வாறு	—	—
சிந்தனை செய்ய	உளங்கொண்டமைய	மனோராஜ்யம் துடர்ந்நீடவே
தாமரையை	—	அப் பத்மினீம்
யானை	மதவேழம்	தந்தீந்த்ரன்
பறித்தது	அழித்ததுவே	பிழுதான்
அய்யகோ	—	—

இரண்டும் விரிவான தழுவல் வடிவங்களே. பதிலீடு செய்து அமைத்தால், பெறுமொழியில் கொண்ட வடிவமைப்புக்குப் பொருந்தும் வகையில் அமையாது என்பதனால் இருமொழிக் கவிஞர்களும் மாற்றிணைச் சொல்லாட்சிகளையே பயன்படுத்தி உள்ளனர். அதனை வருமாறு அமைத்துக்காட்டலாம்.

அடி. 1 விரிவாக்கம் — இணை — | குறைத்தல் / விரிவாக்கம் |

அடி. 2 விரிவாக்கம் — | இணை / விரிவாக்கம் |

அடி. 3 விரிவாக்கம் — இணை — | ——— / மாற்றிணை |

விரித்தலும் விடுதலும் கூடுதல் சேர்த்தலும் அடிப்படை மாற்றங்களாக அமைகின்றன. அவற்றை ஆராய்ந்து பார்க்க, யாப்பமைதிக்காகச் சொற்களைத் தேடிக் கொணர்தலும் அப்படித் தேடிக் கொணர்ந்து பொருள் விரிய எழுதுதலும் இருமொழிக் கவிதைகளிலும் காணக்கிடைக்கின்றன.

''தேடிக் கதிரவன் உதிக்கும்'' என்ற தமிழ்ச் சொல்லாட்சியும்

''தேவன் ஸூர்யன் உதிக்கும்'' என்ற மலையாளச் சொல் லாட்சியும் இவ்வகையின. இத்தகைய மாற்றங்கள் மூலத்தை அடியொற்றி அமையாதது என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை.

''நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைக்கும்'' எனும் பொருளில் தெய்வத்தின் மனமாறு கண்டு?'' என மலையாளக்கவிஞர்அமைத்திருப்பது, மூலத்திலமையாத செய்தி. எனினும் மூலத்தைப் போலவே இன்பம் விளைவிக்கிறது. 'Book of Verse' என்பது கையில் கம்பன் கவியுண்டு என மாறியமைந்த கவிமணிக் கவிதைபோல.

''கற்பிதம்'' எனும் குற்றத்தைக் கூடப் பழுதற்றதாகச் செய்திடக் கவிவல்லார்க்கு ஆகும் என்று காட்ட, இந்த மலையாளக் கவிதையினை எடுத்துக்காட்டுவர்.

துணை நூல்கள்

தேசிகவிநாயகம் பிள்ளை, சி.	1975	**மலரும் மாலையும்** சென்னை. பாரிநிலையம்
ராஜராஜவர்ம்ம, ஏ. ஆர்.	1970	**பாஷாபூஷணம்** கோட்டயம், ஸாஹித்ய ப்ரவர்த்தக ஸஹகரண ஸங்கம்.

மின்னிடை எது?

த.கோ. பரமசிவம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

பழந்தமிழ் பாராட்டும் சங்க இலக்கியங்களும் பழைய இலக்கண நூல்களும் நிகழ்ச்சிகளை, காட்சிகளை உள்ளது உள்ளவாறே படம் பிடித்துக் காட்டின. ஆனால் அவற்றை அழகு பெறவும், சுவைபடவும் புனைந்து காட்டியுள்ளன. ஆயினும் உயர்வு நவிற்சி என்பது தவிர்க்கப்பெற்ற நிலையில் தான் பெரும்பாலான வருணனைகள் காணப்படுகின்றன. பொது வாகவே செம்மொழிகளில் தோன்றிய பேரிலக்கியங்களில் அதி அற்புதங்கள் பேசப்பட்டாலும் அவை உருவங்களில் அடங்கி விடுவதை நுண்ணிதின் ஆய்வார் உணர்வர். பூமியினின்று தோன்றியதாகப் பேசப் பெறும் சீதையின் பிறப்பைக் கூர்ந்து நோக்கின், பெண் - சீதையைப் பெற்ற தாயார் பூமியாகவும் அவள் கருப்பையில் சீதை தோன்றியமையை - பெட்டியுள் குழந்தை தோன்றியதாகவும் உருவகித்துக் கூறப்பெற்றமை புலனாகும். திருச்சொகினனூரில் ஆகாசராசனுக்குப் பத்மாவதி பிறந்த கதையும் (குளத்தில் செந்தாமரைப்பூவில் பத்மாவதி தோன்றினாள் - குளம் - தாயார், செந்தாமரைப்பூ - தாயாரின் கருப்பை) பிறவும் உருவகங்களே என்பதை நன்கு உணரலாம். முதலாம் இராசராசனைப் பெற்ற வானவன் மாதேவியைத் திருக்கோவிலூர் கல்வெட்டு, ''புலியைப் பயந்த பெண்மான்'' என உருவகித்து மகிழ்கிறது. இத்தகு உருவக ஒப்புமை நோக்கில் வருணனைகளை ஆய்வதும் தோய்வதும் இலக்கியத் திறனாய்வுக்கும் பண்பாட்டு ஆய்வுக்கும் துணை செய்வன என்றால் அது மிகையாகாது. இக்கட்டுரை மகளிர் இடைக்கு மின்னலை உவமையாக்குவது எவ்வகையில் பொருந்தும் என்னும் ஆய்வில் முனைகிறது.

மின்னிடை

மகளிரைப் பலபடப் பாராட்டி பல்வேறு வகையிலும் வருணித்து பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு வகைப்பட்ட இலக்கியங்கள் மலர்ந்துள்ளன. மகளிர் இடையை நூலைப் போன்றது, மின்னல் போன்றது, கொடியைப் போன்றது என்றெல்லாம் வருணித்துள்ளன. மகளிர் இடை சிறுத்திருத்தல் அழகுடைத்து. ஆயின் நூலைப்போன்று மெல்லிதாகவும் மின்னலைப் போன்று ஒல்லியாகவும் இருப்பதாகக் கூறுவது பொருத்தமா? உண்மையா? பழந்தமிழ் இலக்கியங்களும் இப்படித் தான் பொய்யாக வருணித்துள்ளனவா? மகளிர் இடைக்கு மின்னலை உவமையாக்கியுள்ளார்களே - உயர்வு நவிற்சி கூறாத பழந்தமிழர் அவர்கள் என்ன பொருளில் மின்னலை மாதர் இடைக்கு உவமையாக்கினர்?

வினை, பயன், மெய், உரு என்ற நான்கு வகையிலும் ஒரு பொருளை இன்னொரு பொருளுடன் ஒப்பிட்டு மகிழலாம் என்பது நம் இலக்கிய வழக்கு மின்னலை மகளிர் இடைக்கு உவமையாக்கியிருக்கிறார்களே நம்முன்னோர். மின்னலின் வடிவத்தை நினைத்து உவமையாக்கினார்களா? அல்லது அதன் பயன்பாட்டை நினைத்து உவமையாக்கினார்களா? அல்லது தொழிலை நினைத்து உவமையாக்கினார்களா? அல்லது அதன் நிறத்தை நினைத்து உவமையாக்கினார்களாகளா? பிற்கால இலக்கியங்களுள் பலவும் நூலையும் மின்னலையும் அதன் வடிவு நோக்கிலே இல்லது புனைதல் போல் மெல்லிய கம்பி போன்ற வடிவமே மகளிர் இடை என்று வருவித்துள்ளன.

மின்னுவது மின்னல்: பழந்தமிழர் இலக்கியங்களைக் கூர்ந்து காணும் போது இந்தப் பொருளில் மின்னல் வருகின்ற பெரும்பாலான இடங்களில் அதன் பேரொலித் தன்மைக்காகவே உவமையாக்கப்பட்ட சூழல் புரியும். அதன் மெல்லிய வடிவம் வேறெங்கும் பேசப்படவில்லை. ஒளி வீசும் தன்மையுள்ள அணி கலன்கள், முடிகள், ஆடைகள் மணிகள் போன்றவற்றுடன் தான் மின்னல் பேசப்படுகிறது. மின் இழை நறுநுதல் (பரி, 11-136) மின் ஒளிர் நெடுவேல் (அகம், 203-10) மின்அவிர் வயங் கிழை (ஐங், 234-1), மின் நேர் ஓதி (நற், 339-9) மின் உமிழ்ந் தென்ன சுடரிழை (பதிற் 81-26), மின் இழை மகளிர் (குறுந். 246-6), மின்னிற மார்பினன் (சிலப். 22-72) மின் அவிர் சுடர்மணி

(பரி. 13-27) என வருகின்ற இடங்களில் மின்னல் அதன் ஒளி வீச்சுக்காகவே ஒப்புமை காட்டப்பட்டுள்ளது. எனவே மின்னும் தன்மைக்காகவே பெரும்பாலான இடங்களிலும் மின்னல் உவமிக்கப் பெற்றமை புலனாம்.

அதே சங்க இலக்கியங்கள் மகளிர் இடைக்கும் கூந்தலுக்கும் கூட மின்னலை உவமையாக்கியுள்ளன எனில் ஏதோ பொருட் பொருத்தம் இருக்க வேண்டுமல்லவா? பொருட்செறிவில்லா உவமையைப் புனைந்து காட்டுவதில் சங்க இலக்கியங்கள் தலை நிற்கா. எனவே இதனை எப்படி நோக்குவது? பிற்கால இலக்கியங்கள் காட்டுவதுபோல் பொய்யாக, மகளிர் இடையைக் கற்பனைக்கும் எட்டாத நிலையில் மெல்லியதாக கை விரலிலும் ஒடுங்கிய வடிவில் காண முடியுமா? அப்படிக் கண்டால் சங்க இலக்கியப் போக்கிலும் நோக்கிலும் குறை வந்து விடாதா? இந்தக் குழப்பத்தில் தான் இருவேறு எண்ணங்கள் தோன்றின.

மின்னலுடன் ஒப்புமை காட்டப்பெற்ற மகளிர் உறுப்புகள் இரண்டு ஒன்று கூந்தல் மற்றொன்று இடை. மின்னலின் வடிவம் அதன் ஒளிவீச்சுடன் மட்டுமே தோன்றும். அதாவது நேர் கோடாக இது ஒளி விடுவதில்லை. மின்சாரத்தைக் குறிக்கப் பயன்படுத்தும் குறியீடு போல் வளைகோடாக நெளிவு சுளிவுடன் கொண்ட ஒளிவீச்சுடன் தோன்றுவதே அதன் இயல்பு. எனவே இந்த வடிவு ஒளிவீசும் தன்மை இவ்விரண்டையும் மனத்தில் படம் எழுதிக் கொண்டு இவ்வுவமையை நோக்கும் போது மகளிர் இடையும் கூந்தலும் பொருட்பொருத்தம் கொண்டன வாதல் தோன்றும். மின்னிடை (குறுந். 22-6, சிலப். 7-14.4) மின் நேர் மருங்குல் (அகம். 226-21) மின்செய் இடை (சிலப் 29-26.4) என்றெல்லாம் இடையுடன் மின்னல் பேசப்படுகிறது. இதுபோன்ற மின்நேர் ஓதி (நற். 339-9), மின்நேர் ஓதி (அகம். 356-20) என்று இம்மின்னல் மகளிர் கூந்தலுடன் இணைத்து ஒப்புமையாக்கப்பெற்றுள்ளது. ஒளிவீசும் நெளிவு சுளிவுடன் திகழும் மின்னல் இவ்வுறுப்புகளுடன் ஒப்புமையாக்கப்பட்டுள்ளது என்பது மேற்கண்ட எடுத்துக் காட்டுகளின் உரை விளக்க மாகும். அப்படியாயின் இவ்வுறுப்புகள் ஒளிவீசுகின்றன. நெளிவு சுளிவுடன் இலங்குகின்றன எனல்வேண்டும். கூந்தல் குழைத் திருப்பது ஆற்றுமணல் படிவு போல் நெளிந்து சுளிந்திருப்பது

தன்மேல் பூசப்படும் வாசனைப் பொருள்களாலும் சூட்டப் பெறும் நகைகளும் ஒளி செய்வது. எனவே இவ்விரு பண்பு களையும் உயிர்ப்பாகக் கொண்ட மின்னல் கூந்தலுக்கு உவமை யாதல் பொருந்துமன்றோ?

உத்தம குணங்கள் கொண்ட அழகு மகளிர் கூந்தலுக்கு இயற்கையிலேயே ஒரு குழைவும் ஒளிவீச்சும் அமைந்திருப்பதை சாமுத்திரிகா லட்சண நூல்களும் காமசூத்திர நூல்களும் ஏன்? யோக நூல்களும் கூட ஒப்புக் கொள்ளுகின்றன. அத்துடன் மகளிர் கூந்தலும் உவமையாக்கப் பெற்ற பிற பொருள்களும் இத்தன்மைகளையே சுட்டுகிறதை நோக்கலாம். மணி ஆற்று மணல் போன்றன மகளிர் கூந்தலுடன் இணைத்து ஒப்புமை காட்டப்பெற்றுள்ளன.

மணி மருள் ஐம்பால் (நற். 245. 3.) மணிமருள் கலாபம் (அகம் 242. 3) மணி கூந்தல் (நற். 374. 6) அறல்போல் கூந்தல் (பொருநர். 25), அறல்வாழ் கூந்தல் (மலைபடு. 304) இத்தகு இணை ஒப்புமைகளைக் காணும் போது மேற்கண்ட கருத்து வலுப் பெறுதல் காணலாம்.

ஒளிவீசுதல்

இந்த அடிப்படையை மனதிற்கொண்டு மகளிர் இடையை மின்னலுடன் இணைத்துப் பார்க்கும் போது மகளிர் இடையும் மின்னுவது நெளிவு சுளிவுடன் விளங்குவது என்று பொருள் கொள்ளலாமா?

மகளிர் இடை சிறுத்திருப்பதுடன் மிகச் சிறந்த உறுப்புகளுள் ஒன்றாக மதிக்கப் பெற்ற அணிகலன்களால் அழகு செய்யப் பெறும் சிறப்பினைக் கொண்டதாகும். இடையில் மேகலை, (ஒட்டியாணம்) காஞ்சி, திருச்சுற்று, தொங்கல் போன்ற நகை களால் வைரம் ரத்தினம் போன்ற ஒளிவீசும் கற்களால் புனையப்பெற்ற தங்க நகைகளால் அழகு செய்யப்படுவதாகும். எனவே மகளிர் இடை ஒளிவீசுதல் இயல்பாதல் காணலாம்.

மகளிர் இடை ஆண்கள் இடையினும் நெளிந்து சுளிந்து காணப்படுதல் இயற்கையாகும். திரிபங்க ரேகைகள் இயல்பி லேயே அவர்தம் இடைக்கு ஒரு நெளிவைத் தருகின்றன. உண்டி சுருங்குதல் பெண்டிற்கு அழகு என்பது போல் குறைந்த உணவே

(ஆண்களினும்) உட்கொள்ளும் நிலையில் அவர்தம் இயல்பான மென்மை உந்திச் சுழியை அடுத்து தெளிவு களிவுகளை உண்டாக்கிவிடுகிறது. இதற்கு மாறாக மீதூன் கொள்ளும் மகளிர் அரக்க நிலையில் ''வன் மருங்குல் வாளரக்கியர்'' எனக் கம்பன் காட்டும் நிலையில் காணப்படுவர். வன் மருங்குலுக்கு மாறானது மென் மருங்குல், வன்மை நேர்கொண்டது, கடினமாவது, மென்மை இதமானது கனிவானது. இவ்வுண்மையை உளங்கொண்டால், ஒளிவீசி நெளிந்து காணப்படும் இடைக்கு மின்னல் ஒப்புமை காட்டப்பட்டது பொருந்துவதே என்பது போதரும்.

இடையும் ஒளிவீசும்: யோக சாத்திரங்களிலும், காமசூத்திரங்களிலும் உத்தம குணங்கள் கொண்ட மகளிர்தம் அழகும் அவர்தம் அழகால் உறுப்புகள் பெறும் சிறப்பும் கூறப்பட்டுள்ளன. ஆம் உத்தம மகளிர் இடை உந்திச்சுழியை யொட்டி ஒளிவீசும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆறு ஆதாரத்தானங்களில் ஒன்றாக, கொப்பூழ் நிலை மணிபூரகம் எனப்படுகிறது. மணிபூரகம் என்பதும் ஒளிவீசும் பொருளையே தருதல் நோக்கலாம். மணிமருள்மேனி (அகம் 156. 17, 278. 13) மணிமிடையல்குல் (குறுந். 274. 7), மணிமேனி (பரி. 4. 57) மணிபுரை வயங்கிழை (ஐங் 210. 4) மணிபோன்றாள் (கலித் 132. 4) என வருகின்ற இடங்களையும் பொருட் செறிவுடன் நோக்க இவ்வுண்மை மேலும் வலுப்பெறுதல் காணலாம்.

நிகண்டுகளும் அகராதிகளும் கூட மின் என்ற சொல்லுக்கு மெலிவு என்ற பொருளை யாண்டும் கூறவில்லை. மாறாக ஒளி செய்தல் பொருளையே வலியுறுத்தியுள்ளன. இவற்றையெல்லாம் நீடு நினையும்போது மின்னிடை என்பது ஒளிவீசும் இடை என்னும் பொருளையே தருதல் காணலாம். இந்த ஒளி மின்னொளி போல் நெளிந்து சுளிந்து இருக்கும். சுவர் வைத்தது போல் நேராக நிமிர்ந்து இருக்காது என்பதும் தெளிவாகும்.

தொழிலடிப்படையில் பண்டிகைகள் ஓர் அறிமுகம்

இரா. பரமேஸ்வரி
கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி
கடலூர்

திருவிழாக்கள் விசேஷ தினங்கள் என்ற அடிப்படையில் வருடத்தில் பல நாட்கள் சிறப்பு அடைகின்றன. அத்தினங்களில் குறிப்பிடும் படியான தினங்களும் இருக்கின்றன. அந்தச் சில தினங்களைப் பற்றி இக்கட்டுரை அமைகிறது.

மேலும் ஒவ்வொரு மாதத்திலும் அமையும் சிறந்த நாட்களும் பெரும்பாலான மக்களால் கொண்டாடும் நாட்களையும் மட்டுமே இக்கட்டுரை கொண்டு அமைகிறது குறிப்பிடத்தக்கது.

ஜனவரி முதல் தேதியன்று அனைவரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்று விரும்புவர் அதன் பொருட்டு இனிப்பு களை உண்பர். கோவிலுக்குச் செல்வர். இதன்பொருட்டு இனிப்புப் பண்டங்கள் நிறைய விற்பனையாகும். பழவியாபாரி கடைகளில் பழங்களும் பூக்களும் விற்பனையாகும்.

போகிப்பண்டிகையன்று மக்கள் அனைவரும் வீட்டில் உள்ள பழைய பொருட்களைத் தீயிட்டு எரிப்பர். இதனால் தீய சிந்தனைகள் செயல்கள், கஷ்டங்கள் தீயில் எரிவதாக நினைக் கின்றனர். தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியில் இந்நாட்களில் கூழ் ஊற்றுவர். இதனால் கேழ்வரகு, கம்பு போன்ற பொருட்கள் விற்பனை ஆகும். தைப்பொங்கல் திருவிழாவன்று. அனைத்து மக்களும் குளித்து திருவிழாவினை. தொடங்குகின்றனர். இதற்கு முதலில் கரும்பு வாங்குகின்றனர், பின்னர் அனைவரும் புதுப்பானைகளையும் புது அடுப்புகளையும் வாங்குவர். இதனால் குயவர்களுக்கு வியாபாரம் பெருகும். இந்நாள் குயவர்களுக்குரிய நாள் என்றும் சொல்லலாம். மேலும் கரும்பு, மஞ்சள்

போன்றனவும் அதிக அளவில் விற்பனையாகும். இந்நாட்களில் பெண்கள் தங்களது வீட்டின் முன் பெரிய பெரிய கோலம் போடுவர். இதனால் கோலப்பொடி அதிக அளவில் விற்பனை யாகும்.

மாட்டுப்பொங்கலன்று மாடுகளுக்கான திருவிழா எனவும் இறந்தவர்களுக்கான நாளென்றும் கூறலாம். இந்நாளில் மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் அடிப்பர். மேலும் வீடு களுக்கும் வர்ணம் அடிப்பர். வியாபாரம் அமோகமாக நடை பெறும். மேலும் மாடுகளுக்கு ஆவாரம் பூ அகத்திக் கீரை போன்றவற்றை வாங்குவர். மாடுகளுக்கு மணிகள், சலங்கைகள் கட்டுவர். இதனால் இரும்பு கடைகளில் வியாபாரம் ஆகும். இம்மாதத்திலேயே 7 வது நாளன்று ஆற்றுத் திருவிழா என்று ஒன்று கொண்டாடுவர் இத்திருவிழாவில் அனைத்துத் தர இன மக்களும் கலந்து கொள்வர். சாதி அடிப்படையோ, இன அடிப்படையோ, நிற அடிப்படையோ இங்கு இருப்பதில்லை. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாடும் இங்கு கிடையாது. இங்கு பல விதமான கடைகள் இருக்கும். எல்லா பொருட்களின் கடைகளும் இங்கு இருக்கும் இங்கு இல்லாத பொருட்களே இல்லை . என்று சொல்லுமளவிற்கு பொருட்கள் இருக்கும் சந்தை என்று கூட சொல்லலாம் அனைத்து மக்களும் ஒன்று கூடும் இடமாகவும் இத்திருவிழா அமைகிறது. இதனால் அனைத்து வியாபாரிகளும் லாபம் அடைகின்றனர்.

விநாயகர் சதுர்த்தியன்று குயவர்களுக்கு வியாபாரம் நடக்கும் மளிகைக் கடைகளில் அரிசியும் கடலையும் அதிக அளவில் விற்பனை ஆகும் நவராத்திரி பண்டிகை 10 நாட்கள் நடைபெறும் இந்நாட்களில் வீடுகளில் நிறைய பொம்மைகளை அடுக்கி வைத்திருப்பர். தினமும் ஒவ்வொரு விதமான சுண்டல் என்ற முறையில் உணவினைத் தயாரிப்பர். இதன் பொருட்டு அலங்காரப் பொருட்களும் உணவுப் பொருட்களும் விற்பனை யாகும். இப்பண்டிகை ஒரு சில வீடுகளிலேயே நடைபெறும். இப்பண்டிகையின் இறுதி நாளன்று சரஸ்வதி பூஜை என்ற பண்டிகை ஒன்றினைக் கொண்டாடுவர் அப்பண்டிகை அன்று புத்தகங்களை வைத்து அனைத்து வீடுகளிலும் பூஜை செய்வர் இது புத்தகங்களுக்குரிய நாட்கள் என்றும் கூறலாம் இந்நாளில் கல்வி நிறுவனங்களில் தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பர்.

இந்நாள் மக்கள் கல்விக்கு சிறந்த நாளாகக் கொண்டாடப் படுகின்றது.

இதற்கடுத்து ஆயுதபூஜை என்ற ஒரு விசேஷ நாள் இருக்கிறது. இந்நாளன்று அனைத்து கடைகளும் வீடுகளும் சுத்தம் செய்யப்படும் ஒவ்வொரு பொருளினையும் கழுவி துடைத்துப் பொட்டு (திலகம்) வைப்பர். இது அனைத்து வியாபாரிகளும் கொண்டாடும் பண்டிகையாகும். இந்நாளன்று சுண்டல் செய்து வைப்பர். பொரி, கடலை, வெல்லம் போன்ற உணவுப் பொருட்களையும் வைப்பர். மேலும் பழவகைகளையும் வைத்து படைப்பர். இதனால் மளிகைக் கடையில் வியாபாரம் அதிகமாகும்.

தீபாவளி பண்டிகை அன்று அனைத்து மக்களும் புத்தாடை உடுத்துவர். இதனால் துணிக் கடைகளில் வியாபாரமாகும். மேலும் இனிப்பு, கார வகைகளைச் செய்வர் அதனால் எண்ணெய், மாவு போன்ற பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகும். சிலர் நகைகளும் வாங்குபவர் இந்நாட்களில். இதனால் தங்கம், வெள்ளி போன்ற கனிம பொருட்களும் விற்பனையாகும். இது ஒரு சாதி, மதம் கடந்த பண்டிகை யாகக் கொண்டாடப்படுகிறது.

இத்திருவிழாக்களன்றித் திருமணம், கடைத்திறப்பு, வீடு கட்டுதல் என்ற அடிப்படையிலும் பல வியாபாரங்கள் நடைபெறுகின்றன. திருமணம் என்றால் தங்க வியாபாரிகளுக்கு வியாபாரம் நடைபெறுகிறது. இதனால் தங்கம், வெள்ளி, பாத்திரங்கள் போன்றவை திருமண நாட்களிலும் மாதங்களிலும் அதிக அளவில் விற்பனையாகும். வீடு கட்டுதல் பணியில் மர வியாபாரிகளுக்கும் வர்ண வியாபாரிகளுக்கும் மண் தொடர்பான பொருட்களுக்கும் அதிகளவில் விற்பனையாகும். கடைத்திறப்பு தினத்தன்று பூக்களும் பழங்களும் அதிக அளவில் வியாபார மாகும்.

கார்த்திகை மாதம் தீபம் என்ற ஒரு பண்டிகை கொண் டாடுவர். இத்தினத்தில் அனைவரும் இரவில் தங்கள் வீட்டின் முன் விளக்கேற்றி வைப்பர். இதனால் குயவர்களுக்கும் எண்ணெய் வியாபாரிகளுக்கும் விற்பனையாகும்.

இது தவிர கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று 'கேக்' அதிக அளவில் செய்து விற்பனையாகும். இதனால் கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களும் இங்கு இந்த கேக்கினை வாங்கி உண்பர். அதுபோல 'ரம்ஜான்', 'மாட்டுப்பொங்கல்', 'தீபாவளி' போன்ற பண்டிகை நாட்களில் கறி, மீன், முட்டை போன்ற அசைவப் பொருட்கள் அதிக அளவில் விற்பனையாகும். இதுவன்றி ஆடி மாதம் மார்கழி மாதங்களில் தங்க விலையினைக் குறைத்து வியாபாரம் செய்வர். மேலும் ஒவ்வொரு திருவிழாவினையும் உணவு அடிப்படையிலும் தொழிலடிப்படையிலும் பல பண்டிகைகள் அடங்கியிருக்கின்றன.

ஒவ்வொரு பண்டிகையினையும் எடுத்துக் கொண்டால் அவை வியாபாரம் சார்ந்ததாகவே இருக்கின்றன. வியாபாரம் இன்றிப் பண்டிகை இல்லை என்ற அளவிற்கு வியாபாரமும் பண்டிகையும் பெருகிவிட்டன. இந்த இரண்டும் ஒன்றென கலந்து விட்டன வியாபாரத்தின் அடிப்படையில் பண்டிகைகளும் பண்டிகையின் அடிப்படையில் வியாபாரங்களும் பெருகிவிட்டன. அதற்கேற்றாற் போல உணவு முறைகளும் மாறிவிட்டன. மேலும் அடிப்படை உணவு கூட கிடைக்காத சிலர் இந்தப் பண்டிகை நாட்களிலாவது இவ்வகை உணவினை உண்ண வேண்டும் என்ற அடிப்படையில் திருவிழா கொண்டாடப்படுகிறது.

பகுத்தறிவு வாதிகளும் பிறந்தநாள் போன்றவற்றினைக் கொண்டாடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோல ஒவ்வொரு பண்டிகையும் ஒவ்வொரு தொழிலைச் சார்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வின் சுருக்கம் கருதி பண்டிகைகளும், வியாபாரங்களும் மேலோட்டமாகவே ஆராயப்பட்டன என்பதைக் குறிப்பிட வேண்டுகிறேன்:

ஆங்கிலேய - அமெரிக்கப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு - ஓர் அறிமுகம்

மு. பழனியப்பன்
புதுவைப்பல்கலைக்கழகம்
புதுச்சேரி 605 014

'பெண்ணிய இலக்கியத் திறனாய்வு' என்பது இலக்கியங்களைப் புதியவழியில் பார்ப்பதற்கும்/ஆராய்வதற்கும் உரிய திறனாய்வாகும். இத்திறனாய்வு, இலக்கியங்களை வழிவழி மரபாக ஒருபால்/ஆண் சார்புபட பார்க்கப்பட்டு வந்த நிலையினை மாற்றி, இலக்கியங்களின் மறுபக்கத்தை/மறுபாலின் (பெண்ணின்) இயல்புகளைத், தனித் தன்மைகளைப், பாலியலோடு இயைத்து வெளிக் கொணர உதவுகின்றது.

இப்பெண்ணிய இலக்கியத் திறனாய்வு, பிறந்த நிலங்களின் அடிப்படையில் இருவகைப் படுகின்றது. அவை! 1. இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் ஒருசேரத் தோற்றம் பெற்ற 'ஆங்கிலேய-அமெரிக்கப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு, 2. பிரெஞ்சில் தோற்றம் பெற்ற 'பிரெஞ்சு பெண்ணிய இலக்கியத் திறனாய்வு' என்பனவாகும். இவையிரண்டுமே 'பெண்ணியத்தின் இரண்டாம் அலை' எனக் குறிப்பிடப்படுகின்ற 1950-க்குப் பின் வந்த காலத்தில் தோற்றம் பெற்றனவாகும்.

இவ்விரண்டில் 'ஆங்கிலேய அமெரிக்கப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வை அதன் வகைகளுடன் இக்கட்டுரை அறிமுகம் செய்கின்றது.

இலக்கியங்களைப் பெண்ணிய வழியில் திறனாய்வு செய்வதற்கு, ஆங்கிலேய-அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வு இருகேள்விகளை முன் வைக்கின்றது.

அவ்விரு கேள்விகள் பின்வருமாறு.

முதல் கேள்வி: இலக்கியங்களில் பெண் எவ்வாறு சித்திரிக்கப் பட்டுள்ளாள்? என்பதாகும்.

இக்கேள்வி, இலக்கியங்கள் வழியாகப், பெண்ணுக்கு விதிக்கப்பட்டுள்ள மிதமிஞ்சிய கட்டுப்பாடுகளையும் உயர்பண்பு அடைவுகளையும், குறித்து எழுப்பப்பட்டதாகும். இதன் மூலம் ஆண்களால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒரே மாதிரியான பெண்பாத்திரங்கள், அதன் வழியாக உணர்த்தப்படும் பண்புகள், இவற்றைப் படிக்கும் பெண்களை அதே வழிக்குக் கொண்டு வருதல் என்ற 'வாசிப்பு நிலை' ஆராயப்படுகின்றது. எனவே இக்கேள்வி 'பெண்-வாசகர் வாசிப்பு நிலை' என்ற அடிப்படையில் அமைந்ததாகும்.

இரண்டாம் கேள்வி: இலக்கியங்களைப் பெண் எவ்வாறு படைத்துள்ளாள்? என்பதாகும்.

இக்கேள்வி. மிக நீண்ட கொள்கைகளையும் கோட்பாடு களையும் உடைய ஆணினத்தின் இலக்கிய ஆதிக்கத்திற்கு இடையில் 'பெண் எவ்வாறு இலக்கியம் படைத்தாள்?' அவள் படைத்த 'இருபால் பாத்திரங்களின் பண்புகள் என்ன?' என்பது குறித்து எழுப்பப்பட்டதாகும். இதன் மூலம் பெண்களால் படைக்கப்பட்டுள்ள இலக்கியங்களின் 'கருத்து மற்றும் பொருள்' குறித்துத் திறனாய்வு செய்யப்பெற்று! அதன் வழியாக உண்மை யான பக்கம் வெளியிடப்படுகின்றது. எனவே இக்கேள்வி 'பெண்- படைப்புநிலை-(படைப்பாளி)' என்ற அடிப்படையில் எழுந்ததாகும்.

இவ்விரு கேள்விகளில் தொடங்கி, இத்திறனாய்வு, இன்னும் ஆறுகிளைகளாக வளர்ச்சி பெற்றுள்ளது. அக்கிளைகள் பின் வருமாறு.

முதல்கிளை: ஆண்கள் படைத்த இலக்கியப் படைப்புகளில் பெண்களின் சித்தரிப்பினை ஆராய்தல் இக்கிளையாகும். இக்கிளையில் ஆண்கள் பெண்களை ஒரே மாதிரியாக (sterco types) சித்தரிக்கும் பாங்கு வெளிப்படுத்தப்படும். உதாரணமாக: அடங்கிப் போகும் குணமுடையவர்களாக, உருவமற்றவர்களாக, மனவுளைச்சலுக்கு ஆட்பட்டவர்களாக, கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக, கடமையுணர்வு உடைய

வர்களாக, பகுத்தறிவுக்கு மாறானவர்களாக, கவர்ச்சி (மற்றும்) சூன்யம் உள்ளவர்களாக, அடங்காப்பிடாரிகளாக, குறை கூறு பவர்களாக, என்று முரண்பட்ட குணமுடையவர்களாகப் படைக்கப்பட்டிருக்கும் தன்மையினைக் காட்டலாம்.

இரண்டாம் கிளை: பெண்கள் படைத்த இலக்கியங்களை ஆண்கள் திறனாய்கின்ற போது, அவர்கள் வெளிப்படுத்தும் முடிவுகள் குறித்து இக்கிளை அமைகின்றது அவ்வாறு ஆண்கள் திறனாய்கின்ற போது, கீழ்வரும் மூன்று முக்கிய குறைபாடுகள் ஏற்படலாம்.

1. அவர்கள் (ஆண்கள்) பெண் பாலரின் படைப்புகளை, பால் சிறப்பு தந்து பார்க்காது பொது நோக்காகத் திறனாயும் குறை.
2. அதிகமான (பெண்) படைப்பாளிகளைத் திறனாய்விற்கே உட்படுத்தாது மறைக்கும் குறை.
3. ஆண்பால் அனுபவங்களைக் கொண்டே உலகு தழுவிய முடிவுகளை– பெண்கள் குறித்த முடிவுகளைத் தரும் குறை.

என்ற மூன்றுமாகும்.

இவ்விரு கிளைகளும் 'பெண்-வாசிப்புநிலை-(வாசகர்)' குறித்துப் பிறந்தனவாகும்.

மூன்றாம் கிளை: பெண்ணிய வாதிகளாகக் கருதப்படும் பெண் படைப்பாளர்களின் சொந்த வாழ்க்கை, வாழ்வனுபவங்கள், வாழ்வின் முன்பின் தொடர்புகள், வரலாற்றுப் போக்கு ஆகிய வற்றை ஆராய்கின்ற கிளை இதுவாகும். இதன் மூலமாக, பெண்ணிய வாதிகள் சந்தித்த சமூக நிலைப்பாட்டையும், படைப்புகள் எழுந்த சூழல்களையும் அறிந்து கொள்ள இயலும்.

நான்காம் கிளை: பெண் படைப்பாளர்களின் படைப்புகளில் இடம்பெற்றுள்ள 'பாடுபொருள், வடிவம், பயன்படுத்தும் மொழி' போன்ற பலவற்றைக் குறித்த ஆய்வாக இக்கிளை அமைகின்றது. உதாரணத்திற்குப் 'பாடுபொருள்' என்பதை எடுத்துக் கொண்டால், பெண்கள் தங்கள் உரிமைக்காக, சுயவெளிப் பாட்டுக்காக முன்வைத்த போராட்டங்கள், பெண்விடுதலைக் கென அவர்கள் எழுப்பிய குரல்கள், இரட்டை வேடமிடும் சமுதாயத்தை எதிர்த்தல், பாலியல் வன்முறைக்கு ஆளாதல்

பிள்ளைப் பேறு இழப்பு, தனிமை போன்ற பாடுபொருள்கள் பெண்கள் படைத்த இலக்கியங்களில் இடம்பெற்றிருத்தலைக் குறித்ததாக இதனைக் கொள்ளலாம்.

ஐந்தாம் கிளை: இது பெண்கள் படைத்த இலக்கியங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு, அதன் வழியாக 'பெண் மரபு, பெண் இலக்கியமரபு' ஆகியவற்றைத் திறனாய்வு செய்யும் கிளையாகும். இதற்குக் காட்டாக 'எலைன் ஷோ வால்ட்டர்' (ஆங்கிலேய அமெரிக்கப் பெண்ணியவாதி) தனது நூலான 'அவர்களுக்கான இலக்கியம்' (A Lit of their own) என்பதில், பிரிட்டிஷ் நாவல் இலக்கியத்தில் 'ஜார்ஜ் எலியட் முதல் இன்று வரையிலான நாவல்களை எடுத்துக்கொண்டு அதன் வழியாகப் பெண்ணிய இலக்கிய மரபினை 1. பெண்மை நிலை இலக்கியம். (Feminine phase) 2. பெண்ணிய நிலை இலக்கியம் (Feminist phase) 3. பெண்நிலை இலக்கியம் (Female phase) என மூவகைகளாக வகுத்துக் காட்டியிருத்தலை இங்குக் காட்டலாம். அவற்றின் விரிவு கீழ்வருமாறு:

அ) பெண்மை நிலை இலக்கியம் (Feminine phase) இது பெண்களால் படைக்கப்பெற்ற இலக்கியத்தின் முதல்கட்டம் ஆகும். பெரும்பாலும் மேலாதிக்கம் செலுத்திய இனத்தின்/ஆண் இனத்தின் இலக்கியச் சாயலை; அவற்றின் தன்மைகளை அப்படியே எடுத்தாளுதல் அதாவது 'போலச் செய்தல்' என்ற நிலையிலேயே படைக்கப்பட்ட இலக்கியங்களாக இவை அமையும். அதிலும் குறிப்பாக ஆண்கள் உருவாக்கிய பெண்கள் குறித்த கருத்தாக்கங்களை அப்படியே சுமப்பனவாக இவை அமைந்திருக்கும்.

ஆ) பெண்ணிய நிலை இலக்கியம் (Feminist phase) பெண்களால் படைக்கப்பெற்ற இலக்கியத்தின் இரண்டாம் கட்டமான இது, தமக்கு எதிரான சட்டங்களை, சமூக அமைப்புகளை, ஆண் ஆதிக்க வெறியை எதிர்த்துக் குரல் கொடுக்கும் தன்மையதாக அமைந்திருக்கும். கல்வி, சொத்துரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை உரிமைகளைக் கேட்பதாகவும் படைக்கப்பட்டிருக்கும்.

இ) பெண்நிலை இலக்கியம் (Female phase) இவ்விறுதிக் கட்ட இலக்கியங்கள் தன்னைப் பற்றித் தானறிதல், தனது சொந்த அடையாளத்தை அடையாளங் காணல், என்ற நிலையினவாகும். இவற்றில் போலச் செய்தல், சார்ந்திருத்தல்

ஆகியவை முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, பெண்களுகெனத் தனித்த சுதந்திரமுடைய, கலை பண்பாடு, அமைப்பு பின்பற்றப் பட்டிருக்கும். இங்கு 'படைப்பாளி-வாசகர் உறவு' 'தாய் - மகள்' உறவாகக் கருதப்படும். மேலே கூறப்பட்ட மூன்று கிளைகளும், 'பெண் - படைப்பு நிலை (படைப்பாளி)' குறித்துப்பிறந்தன வாகும்.

ஆறாம் கிளை: இதனை முழுமைப்படுத்தப்பட்ட திறனாய்வு (Prespective critisism) என்று வருணிப்பர். இது பெண் இலக்கியத் திறனாய்வு வழியில்-நல்ல இலக்கியத்திற்கான தன்மை களை வரையறை செய்கின்றதாக அமையும். மேலும் பெண்ணிய வழியில் இலக்கியம் படைக்கவும், திறனாய்வுகள் செய்யவும், சில வரையறைகளை வகுப்பதாகவும், சில முன் மாதிரிகளை உருவாக்கத்துணை புரிவதாகவும், இதுஅமையும்.

1. பெண்களுக்கான உரிமை, உண்மை, உழைப்பு, மதிப்பு போன்ற பெண்ணிய மதிப்புகளை முன்வைத்தல்.

2. பெண்களுக்கென நிர்ணயிக்கப்படும் பண்பாட்டு இலக்கை அடையச் செய்தல்.

3. பெண்களுக்கென, சுயவிளக்கம் பெற சில முன் மாதிரி களை வழங்கல்.

4. சகோதரித்துவம், மற்றும் புதிய கட்டமைப்பு ஆகிய வற்றை உருவாக்குதல்.

5. தனிப்பட்டபாலியல், உள்சார் உறவுகள், பெண்களின் நலமுன்னேற்றம் குறித்தவற்றை முன்மொழிதல்.

ஆகிய ஐந்தும் இக்கிளையில் அடங்கும். எனினும் இது இன்னும் உருவாக வேண்டிய நிலையிலேயே உள்ளது. இவ்வாறு உண்மையான பெண் மரபினை, பெண்ணிலக்கிய பண்புகளை அறிய 'ஆங்கிலேய அமெரிக்கப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு' வகை செய்கின்றது. இத்திறனாய்வின் வழியே தமிழிலக்கியங் களும் ஆய்வு செய்யப் படுகின்றபோது அவற்றின் மறுபக்கம் பெண்பக்கம் வெளியிடப்படும் எனபது தெளிவு.

துணை நூல்கள்

1. Indian women Novelists, NewDelhi.
2. இரா. பிரேமா, பெண்ணியம். உ.த.ஆ.நி. சென்னை.

பதிப்பாசிரியர்
தமிழண்ணல்
க. ப. அறவாணன்
சிலம்பு நா. செல்வராசு

1997

ஆய்வுக் கோவை

1997

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
தமிழியல் துறை
புதுவைப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி